www.padippakam.com

# இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும்

அஸ்கர் அலி எஞ்ஜினியர்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

*Parthipan*
*Uhlandstr. 40*
*44147 Dortmund*
*Germany*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அஸ்கர் அலி எஞ்ஜினியர் 1940 இல் போரா முஸ்லிம் மதகுரு குடும்பம் ஒன்றில் பிறந்தார். பொறியியலில் (சிவில்) பட்டம் பெற்று, பம்பாய் மாநகராட்சியில் பொறியாளராக நீண்ட காலம் பணி புரிந்தார். இஸ்லாம் பற்றிய ஆய்விலும் சமய ஒப்பியல் ஆய்விலும் ஈடுபாடு கொண்டவர். இஸ்லாம் பற்றிய நூல்களை அரபி, பாரசீக மொழிகளில் மூலவடிவிலேயே ஆழ்ந்து கற்றவர். மேற்கத்திய தத்துவஞானம், குறிப் பாக இருத்தலியல்வாதம், மார்க்ஸியம் தொடர்பான சிறப்பு நூல்கள் இவருக்கு ஈடுபாடுள்ள மற்ற துறைகளில் அடங்கும். எஞ்ஜினியர் சிறந்த சமூகநல, பொதுநலப் பணியாளராகவும் விளங்குகிறார். தாவூதி போரா சமுதாயத்தில் சீர்திருத்தங்கள் செய்வதற்கான போராட்டத் துக்குத் தலைவராக நின்று நடத்தி வருகிறார்.

எஞ்ஜினியர் இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் நிறைய புத்தகங் களை எழுதியும் பதிப்பித்தும் இருக்கிறார். அவர் சமீபத்தில் பதிப்பித்த இரண்டு நூல்கள் — Communal Riots in Post - Independence India, The Shah Bano Controversy ஆகியவை — ஓரியன்ட் லாங்மன் வெளியீடுகளாக வந்துள்ளன. கூடிய விரைவில் Indian Muslims: Communalism and Communal Riots புத்தகமும் ஓரியன்ட் லாங்மன் வெளியீடாக வர இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும்

அதன் சமூக-பொருளாதார வளர்ச்சி பற்றிய ஓர் ஆய்வு

அஸ்கர் அலி எஞ்ஜினியர்

தமிழில்:
ஐ. இசக்கி

Parthipan
Uhlandstr. 40
44147 Dortmund
Germany

ஓரியன்ட் லாங்மன்

படிப்பகம்

www.padippakam.com

மேலட்டை வடிவம்:
டிராஸ்கி மருது

இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும்
[The Origin and Development of Islam
புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு]

© தமிழ்ப் பதிப்பு, ஓரியன்ட் லாங்மன் லிமிடெட் 1993.
முதற்பதிப்பு 1993

ISBN 0 86311 462 8

பதிவு அலுவலகம்
3-6-272 ஹிமாயத் நகர், ஹைதராபாத் 500 029 (ஆ.பி)

மற்ற அலுவலகங்கள்
காமனி மார்க், பல்லார்டு எஸ்டேட், பம்பாய் 400 038
17, சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா 700 072
160 அண்ணா சாலை, சென்னை 600 002
1/24 அசப் அலி சாலை, புது தில்லி 110 002

80/1 மஹாத்மா காந்தி சாலை, பெங்களூர் 560 001
பிளாட் நெ.205- ஏ, சஹீத் நகர், புவனேஷ்வர் 751 007
எஸ்.சி.கோஸ்வாமி சாலை, பான் பஜார், குவஹாத்தி 781 001
3-6-272 ஹிமாயத் நகர், ஹைதராபாத் 500 029
ஹவுஸ் நெ. 28/31,15 அஷோக் மார்க், லக்னௌ 226 001
முதல் தளம் சிட்டி சென்டர், அஷோக் கோவிந்த் மித்ரா சாலை,
பாட்னா 800 004

வெளியிட்டோர்
ஓரியன்ட் லாங்மன் லிட்
160 அண்ணா சாலை
சென்னை 600 002

160/95

ஒளியச்சுக் கோர்வை
விஜயா எண்டர்பிரைசஸ்
C9 ஜெமினி பார்சன் காம்ப்ளெக்ஸ்
கோடம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை 600 006

ஆப்செட்டில் அச்சிட்டோர்
தன்கேஷ் பிரிண்டர்ஸ் பி.லிட்.,
257 இரண்டாவது தளம் பைகிராப்ட்ஸ் சாலை
சென்னை 600 005

www.padippakam.com

To the memory
of my father,
who always encouraged me
in my search
for the truth
however unpalatable
it might be

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *முன்னுரை* | ix |
| *1.* | ஆய்வின் பரப்பும் நோக்கமும் | *1* |
| *2.* | இஸ்லாமுக்கு முன் அரேபியச் சமூகம் | *16* |
| *3.* | மக்காவில் இஸ்லாமின் தோற்றம் | *54* |
| *4.* | இஸ்லாமும் மதீனா நிகழ்ச்சிகளும் | *119* |
| *5.* | கலீஃபா ஆட்சி-புறமார்ந்த விரிவாக்கமும் உள்நாட்டுப் போரும் | *181* |
| *6.* | மதத்தில் மாற்றுக் கோட்பாடுகள் அரசியல்-பொருளாதார காரணங்களால் தோற்றம் | *231* |
| | பெயர்க் குறிப்பு அட்டவணை | *283* |


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

இந்நூல் பல ஆண்டுகள் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் தொகுப்பு. நான் இஸ்லாமின் பிறப்பைச் சமூக - பொருளாதார மற்றும் வர லாற்றுப் பின்னணியில் அறிந்துகொள்ள முயன்றுள்ளேன். மனித குலத்திற்கே மாற்றத்தையும் விடிவையும் அளித்த இஸ்லாம் சந் தேகத்திற்கிடமின்றி அழிக்க முடியாத ஓர் புதிய கோட்பாடு. இங்கு இக்கோட்பாட்டை விளக்கத் தேவையில்லை.

நான் இப்புத்தகத்தின் மூலம் இஸ்லாத்தின் தோற்றத்தைச் சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியில் விளக்க முயன்றுள்ளேன். எந்த ஒரு சமயக் கோட்பாடும் அது தோன்றிய சமூகத்தில் ஆழ வேரூன்றி இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. மார்க்ஸிய அணுகுமுறை சமூக - மதக் கோட்பாடுகளை விளக்குவதற்கு ஏற்ற கருவியாக உள்ளது. எனவேதான் நான் மார்க்ஸிய அணுகு முறையைப் பயன்படுத்தத் தீர்மானித்தேன். இவ்வாராய்ச்சியில் எனது நோக்கம் இஸ்லாம் எனும் தனித்துவமிக்க இயக்கத்தை அறிந்து கொள்வதுதான். இப்புத்தகம் இஸ்லாமிய உலகில் சமீபத்தில் உரு வாகியுள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு முன் எழுதப்பட்டது. எனினும் புதிய இஸ்லாமிய எழுச்சியை உணர்ந்து கொள்ள இப் புத்தகம் ஓர் பின்னணியாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 1

# ஆய்வின் பரப்பும் நோக்கமும்

இஸ்லாம் நமது சகாப்தத்தின் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. சித்தாந்தத்தின் அடிப்படையிலான ஒரு இயக்கமாக அது தோன்றியது என்றே நான் கூறுவேன். சித்தாந்தம் என்பது மிகுந்த பொருட்செறிவுகொண்ட ஒரு சொல் ஆகும். நம்பிக்கைகளின் முழுமையான ஒரு தொகுப்பே அதில் அடங்கியிருக்கிறது. சுருங்கக் கூறினால்,இது ஒரு சமூக இயக்கம், வர்க்கம் அல்லது இது போன்றதொரு குழுவின் கோட்பாடுகள், புராணக் கதைகள், குறியீடுகள் ஆகியவற்றின் தொகுதியாக மாற்றம் பெறுகின்றது. இயக்கத்தைச் செயல்பட வைக்கும் பொறியமைப்புகளும் அதில் அடங்கியிருக்கக்கூடும் (இஸ்லாமின் விஷயத்தில் அது நிச்சயமாக அடங்கியிருக்கிறது). பிரெஞ்சு சித்தாந்தவாதிகள், சித்தாந்தங்களில் உள்ள அடையாளக் குறியீடுகளுக்கு மனோதத்துவ அடிப்படையில் விளக்கம் கூறுவது மட்டுமே சித்தாந்தங்களின் செயல் என்று கூறுகிறார்கள். ஆனால், மார்க்ஸும் எங்கல்ஸும், இந்த ஆய்வுப் பொருள் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் அல்லது சமூகத்துக்குரிய தனித்துவமான குறியீடுகளின் மொத்தத் தொகுதியாக மாறியது என்று கருதுகிறார்கள். ஹென்றி லஃபேப்வர் கூறுகிறார்: "மார்க்ஸின் நோக்கம், பொதுவான, அதாவது, சமூக ரீதியான குறியீடு பற்றிய தத்துவம் ஒன்றை உருவாக்குவதாகும். "சித்தாந்தங்கள்" என்பவற்றின் தோற்ற வரலாற்றை விளக்குவதற்கான அடிப்படைக் கூறுகளை அவர் வரையறை செய்தார். சித்தாந்தங்களை அவற்றின் வரலாற்று, சமூகவியல் நிலைமைகளுடன் தொடர்பு படுத்திக் காட்டினார்."[1]

மீண்டும், சித்தாந்தம் என்பது நிஜத்தின் தலைகீழான, முனை சிதைந்த, உருமாறிய நிழலே என்ற ஒருண்மையையும் மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார். சித்தாந்தங்களில் மனிதர்களும் அவர்களுடைய நிலைமைகளும் கேமரா லென்ஸில் தெரியும் பிம்பத்தைப்

1. Henri Lefebvre, *The Sociology of Marx*, பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்ப்பு Norbert Guterman (லண்டன், 1972) பக்கம் 60.

www.padippakam.com



போலத் தலைகீழாகத் தோற்றமளிக்கிறார்கள். இந்தத் தலைகீழ் மாற்றத்துக்கு நிச்சயமாக உயிரியல் ரீதியான காரணங்கள் உள்ளன. கண்ணின் உள்விழித்திரையில் பிம்பங்கள் தலைகீழாக மாறிவிழச் செய்யும் உடலியல் காரணங்கள் போன்றவை இவை. கோட் பாட்டின் அடிப்படைக் கூறுகளான மனச் சித்திரங்களில் தனி நபர்கள் நிஜத்தை மார்க்ஸின் சொற்களில் “மேல்கீழாக”வே அறி கிறார்கள். மனிதர்கள் தாங்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே தங்களை அறிந்துகொள்வதில்லை. மாறாக, பலவகைப்பட்ட கருத்து களும்—மாயைகளும் பின்னிப்பிணைந்த ஒரு வலையின் ஊடாகவே உணர்ந்தறிகிறார்கள். இந்தக் கருத்துகளுக்கும்—மாயைகளுக்கும் நிஜம் அடிப்படையாக இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். எனவே ஒரு சிந்தாந்தத்தை அதற்குரிய இடத்திலிருந்து பிரித்துப் பார்த்தால் வரலாற்றின் தவறான சித்திரத்தையோ அல்லது வர லாற்றின் சாரத்தையோ அது தரக்கூடும். அப்படிப் பார்க்கும் போது சிந்தாந்தம் என்பது பிழைகள், மாயைகள், தெளிவின்மைகள் ஆகியவற்றின் தொகுப்பாக மாறிவிடலாம். அது உருத்திரித்தும் இடம்பெயர்த்தும் காட்டும். சரித்திர உண்மையை வைத்தே இவற்றை உணர்ந்துகொள்ள முடியும்.

ஒரு கோட்பாட்டை, அது தோன்றிய காலத்தின் பின்னணியில் வைத்துப் பார்த்தாலன்றி அதனை நேர்ப்படக் காணுதல் அரிது. சகாப்தம் படைத்த ‘இஸ்லாம்’ என்ற இயக்கத்தை அதனுடைய திட்டவட்டமான தனிப்பட்ட நிலைமையின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் முயற்சியே இந்தப் புத்தகம். இஸ்லாம் தோன்று வதற்கு முன்பாகச் செயல்பட்டுவந்த பலவகைப்பட்ட சக்திகளைப் புரிந்துகொள்ளும் நோக்கத்துடன், தொடர்புள்ள எல்லா அம்சங் களையும்—அரசியல், சமூக, வரலாற்று அம்சங்களை—இயன்ற அளவு பகுத்தாய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சமூகத்தின் கட்டமைப்பு, மனோபாவங்கள், பண்பு நெறிகள், கலாசார வழக்குகள் அல்லது அமைப்புகள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து முழுமை யாக உணர்ந்து கிரகித்துக்கொள்வது மிகக் கடினமானது. இதை நான் அறிவேன். அந்தச் சமூகம், ஒரு மதச் சமூகமாக, தனக்கென்று கொள்கைகள், பண்பு நெறிகள், மனோபாவங்கள் கொண்ட ஒரு சமூகமாக இருக்கும் போது இந்த முயற்சி மேலும் கடினமாகிறது. இஸ்லாம், தான் தோன்றிய சமூகத்தை முற்றிலுமாக மாற்றியமைத்த ஒரு மதக்கோட்பாடு ஆகும். அதே வேளையில், இஸ்லாமின் புதிய பண்பு நெறிகளுக்கு முரண்படாதவையாக அந்தச் சமூகத்தில் இருந்த சாரமான அம்சங்களை அது ஏற்று வைத்துக்கொண்டது.

ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட கோணம் அல்லது தனிப்பட்ட, எடுப்பான, ஒரு நோக்கு நிலையிலிருந்துதான்

படிப்பகம்

www.padippakam.com



விஷயங்களை நுணுகி ஆய்ந்து புரிந்துகொள்கிறான். அதனால் மற்ற நோக்கு நிலைகள் இல்லை என்று ஆகிவிடாது (என் விஷயத்தில் அப்படி ஆகிவிடவில்லை). மற்ற கண்ணோட்டங்களின் இணைப்பு களுக்கும் இடமில்லாமல் போய்விடாது. சமூக நிகழ்ச்சிகளை வர லாற்றுப் பொருள்முதல்வாத வெளிச்சத்தில் காண நான் முயன்றிருக் கிறேன். அந்த அணுகுமுறை சரியானது என்று நான் நம்புவதும், எனக்கு அது பிடித்திருப்பதும் இதற்குக் காரணங்கள்.[2] "வரலாற்றுப் பொருள்முதல்வாதம்" என்ற தொடரைச் சிறிது விளக்குவது அவசிய மாகிறது. முதலாவதாக, மேற்குறிப்பிடப்பட்டது போன்று அதை இங்கு வரட்டுத்தனமாகவோ யந்திரத் தன்மையுடனோ பின்பற்றவில்லை.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்துக்குத் தோற்றம் கொடுத்த மார்க்ஸ் தாமே இந்த அபாயத்தை உணர்ந்திருந்தார். ரஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய தமது பகுப்பாய்வில் வரட்டுவாதம் பின்பற்றப்படவில்லை என்று ஒரு மறுப்பை மிக வன்மையாக விடுத்திருக்கிறார். 1877இல் அவர் ரஷ்யப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> (எனது விமர்சகர்) மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவம் தோன்றியது பற்றிய வரலாற்றுக் குறிப்பை, எல்லா மக்கள் மீதும் விதியினால் சுமத்தப்படும் விதிவழிச் செல்லல் என்ற சரித்திர—தத்துவார்த்தக் கொள்கையாக மாற்ற முயலுகிறார். ஒரு மக்களின் சரித்திர ரீதியான சூழ்நிலை எப்படி இருந்த போதிலும், சமூக உழைப்பின் உற்பத்திச் சக்திகளை விரிவாக்கி, மனிதன் முழுமையாக அபிவிருத்தி அடையச்செய்யும் பொருளாதார அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் விதி இவ்வாறு செய்வதாக அவர் கூறுகிறார். அவர் கருத்தை நான் ஏற்கவில்லை. (அவர் என்னை மிகவும் கௌரவிக்கிறார்;

2. ஒரு மதத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்குவதற்கு வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் வழிமுறையைப் பயன்படுத்துவது, அந்த மதத்தை வைதீகமாகப் பின்பற்றுவோர் பலசமயங்களில் கருதுவது போல, மதநம்பிக் கையை விட்டுக்கொடுப்பதாகப் பொருள்படாது. மதவியலில் தேர்ந்த அறிஞர்கள் கூட வேதநூலின் பல வசனங்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளின் பின்னணியில் விளக்கம் கூறுகிறார்கள். அதே போல, மதத்தின் சில மரபு அமைப்புகளை விளக்குவதற்கும் சமூக-பொருளாதாரப் பின்னணி உதவு கிறது. சிந்தனைக்கு இடம் தராமல் அல்லது வைதீகமுறையில் மதத்தைப் பின்பற்றுவோர் நிராகரிக்கும் கருத்துக்களுக்கும் அறிவார்ந்த ஒரு மதத்தில் நிச்சயமாக இடம் இருக்கமுடியும். மதவழிக் கோட்பாட்டையோ விஞ்ஞான வழிக் கோட்பாட்டையோ அளவுமீறி வலியுறுத்துவது தேக்க நிலையில் தான் போய் முடியும்.

www.padippakam.com



அதே சமயம் மிகவும் அவமதிக்கிறார்). ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம்.

எனது "மூலதனம்" என்ற புத்தகத்தில் பல இடங்களில், புராதன ரோம் நகரின் பொதுமக்களுக்கு நேர்ந்த கதியைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆரம்பத்தில் அவர்கள் சுதந்திரமான விவசாயிகளாக, ஒவ்வொருவரும் தம்முடைய சொந்த நிலத்தில் தாமே விவசாயம் செய்பவர்களாக இருந்தார்கள். ஆனால் ரோமானிய வரலாற்றின் காலப்போக்கில் அவர்களின் நில உடைமைகள் பறிக்கப்பட்டன. அவர்களுக்கு உற்பத்திச் சாதன மாகவும் வாழ்க்கைச் சாதனமாகவும் இருந்த நிலத்தை அவர் களிடமிருந்து பறித்துக்கொண்ட அதே இயக்கம், பெரிய நில உடைமைகள் மட்டுமின்றி பெரிய பண மூலதனம் உருவாகவும் காரணமாக இருந்தது. இவ்வாறாக ஒரு காலகட்டத்தில், ஒரு புறம் தங்களுடைய உழைக்கும் சக்தியைத்தவிர மற்ற எல்லா வற்றையும் பறிகொடுத்துவிட்ட சுதந்திர மனிதர்களும், மறு புறம் இவர்களது உழைப்பைச் சுரண்டுவதற்காகப் பெற்ற செல்வங்களையெல்லாம் தங்களிடம் கொண்டவர்களுமாக மக்கள் இரு பிரிவுகளாக ஆனார்கள். ஆயின் ரோமானிய உழைப் பாளி மக்கள் ஊதியத்துக்கு உழைப்பவர்களாக அன்றி ஒரு வேலையும் இல்லாத ஒரு கூட்டமாக ஆனார்கள். அவர்களது நிலை அமெரிக்காவில் தென் மாநிலங்களில் இருந்த முன்னாள் "ஏழை வெள்ளையர்"களின் நிலையைவிடப் பரிதாபகரமான தாக இருந்தது. இவர்களுடன் கூடவே, முதலாளித்துவ முறை அல்லாத, ஆனால் வெவ்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில் வெவ்வேறு விளைவுகளை அளித்த ஒரு உற்பத்தி முறை உரு வாகியது. இந்தப் பரிணாம வடிவங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டுப் பார்த் தால் இந்த நிகழ்வை விளக்கும் துப்பு எளிதில் கிடைக்கும். ஆனால், உலகளாவிய சரித்திர—தத்துவார்த்தக் கொள்கை என்ற பொதுவான அனுமதிச் சீட்டை வைத்துக்கொண்டு அந்த இடத்தை அடைந்து விட முடியாது. இந்தக் கொள்கை சரித்திரத்தை மிஞ்சியது என்ற ஒன்றுதான் இதன் மிகப் பெரிய சிறப்பாகும்.[3]

இஸ்லாமை ஆராயும் போது ஏற்கெனவே மனத்தில் உருவாக் கிக்கொண்ட அல்லது "சரித்திரத்தை மிஞ்சிய" மாதிரி வடிவத்தைப்

3. Karl Marx and Friedrich Engels, *Correspondence* 1846–1895 (New York, 1934), பக்கம் 354—5. இந்தக் கடிதம் அனுப்பப்படாமலே இருந்துவிட்டது. மார்க்ஸின் எழுத்துக்களிலிருந்து பின்னர் கண்டெடுக்கப்பட்டது.

www.padippakam.com



பின்பற்றுவோர்—பெரும்பாலான மார்க்ஸியவாதிகள் இவ்வாறுதான் செய்கிறார்கள்—சரித்திர ரீதியான உண்மையை யந்திரத்தன்மையில் பார்த்து, ஏழாம் நூற்றாண்டின் அரேபிய சமுதாயத்தின்மேல் நிலப்பிரபுத்துவ சமூக-பொருளாதார அமைப்புக்களைச் சுமத்திவிடுகிறார்கள். இங்கு ஒரு உதாரணத்தைச் சுட்டலாம். 'உலக வரலாற்றுச் சுருக்கம்' என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர்கள் ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்த அரேபியாவைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்: "அரேபிய தீபகற்பத்திலும் அதையொட்டிய பிராந்தியங்களிலும் நிலப்பிரபுத்துவ உறவுநிலைகள் கிறிஸ்துவுக்குப்பின் முதல் ஆயிரம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் தோன்றத் தொடங்கின. தீபகற்பத்தின் தெற்கு, தென்மேற்குப் பகுதியில் அடிமை உடைமையாளர்களான சமூகங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததையும், மற்றப் பகுதிகளில் நாடோடி மக்களின் தொடக்ககால குலக்குழு முறை சிதறிப் போனதையும் தொடர்ந்து இந்த உறவுநிலை உருவாயிற்று."

ஆசிரியர்கள் மேலும் கூறுகிறார்கள்:

> இக்காலத்திற்குள்ளாகவே மந்தைகள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றின் பெரும் பகுதி குலக்குழுவின் பிரபுக்கள் கைக்குச் சென்றுவிட்டது. ஏழைமை நிலையில் இருந்த நாடோடி இனக்குழுக்களினிடையே நிலப்பசி நிலவியது. குறிப்பாக, ஆடு, மாடு வளர்த்து உயிர்வாழும் வாழ்க்கை முறை, வளர்ந்து வரும் மக்கள் தொகையைத் தாங்குவதற்குப் போதுமானதாக இல்லாதது இதற்குக் காரணமாயிருந்தது. நிலத்துக்காக இனக்குழுக்களிடையே போர்கள் தொடங்கின. போர்களில் ஈடுபட்ட குழுக்களினிடையே பல்வேறு கூட்டணிகள் உருவாயின. அண்டையில் வாழும் இனக்குழுக்களை வென்று தங்கள் வசமுள்ள நிலப்பரப்பை விரிவுபடுத்தும் ஆசை வலுப்பெற்று வளர்ந்தது. இவ்வாறு நிலப்பரப்பை ஒன்றுபடுத்தும் போக்குக்கு மற்றொரு தூண்டுதலாக அரேபியாவின் அபிவிருத்தியடைந்த பகுதிகளினிடையே பொருளாதார, அரசியல் இணைப்புகள் அதிகமாக ஏற்பட்டு வந்தன. இந்தப் பகுதிகளில் நிலப்பிரபுத்துவ முறைகள் ஏற்கெனவே உருவாகி வந்தன. இந்தப் பகுதிகளுக்கும் நாடோடி மக்களுக்குமிடையேயும் இணைப்புகள் பல ஏற்பட்டன.
>
> அரபு மக்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்தும் போக்கு ஒன்று தொடங்கியது. நாடோடி மக்களிடையேயும்—நிலைத்து வாழும் மக்களிடையேயும் நிலப்பிரபுத்துவமுறை உருவாகத்

www.padippakam.com



தொடங்கியது. இந்த இயக்கம் விரைவில் ஒரு மத இயக்கமாக வும் உருவெடுத்து புதிதாகத் தோன்றிய இஸ்லாம் மதத்தைப் பரப்பியது.[4]

இஸ்லாம் தோன்றிய போது இருந்த சமூக-பொருளாதார அமைப்புகள் பற்றிய இந்தப் பகுப்பாய்வு, சரித்திர உண்மைக்குக் கொஞ்சமும் பொருந்தாதது என்பது இஸ்லாம் பற்றிக் கற்பவர் எவருக்கும் புலப்படும். இஸ்லாம் மக்கா நகரின் வர்த்தகச் சூழ் நிலை மிகுந்த பின்னணியில் தோன்றியது என்பதைப் பின்னர் காணவிருக்கிறோம். சர்வதேச வர்த்தக மையமாகவும், பெருமள வில் நிதிகள் கொடுக்கல் வாங்கல் நடக்கும் இடமாகவும் அது இருந் தது. இந்த வரலாற்று உண்மைக்குக் குரானின் பல வசனங்கள் சான்று கூறுகின்றன. பூர்ஷ்வா சரித்திராசிரியர்கள் கூட இதைக் கவனித்திருக்கிறார்கள். உண்மையில் அரேபியப் பாலைவனத்தின் நாடோடி இனக்குழுக்களிலோ, வர்த்தக நகரமான மக்காவிலோ நிலப்பிரபுத்துவ முறையிலமைந்த உற்பத்தி முறையோ, நிலப்பிர புத்துவ உறவுகளோ சிறிதளவு கூடக் காணப்படவில்லை. நிலப் பரப்பை விரிவுபடுத்துவதற்காக நிலங்களைக் கைப்பற்றுவதற்கு இனக்குழுக்களிடையே போர்கள் நடந்தன என்று கூறுவதும் சரி யல்ல. அரேபியாவின் பதூயின் இனக்குழுக்களைப் பற்றி நிச்சய மாகத் தெரிந்த உண்மைகளை வைத்துப் பார்க்கும் போது இந்தக் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. இஸ்லாம் தோன்றிய பகுதியிலும் அதைச் சுற்றிலும் விவசாய உற்பத்தியே முற்றிலுமாகக் கிடையாது. மழை மிகக் குறைவு ஆதலால் மேய்ச்சல் நிலங்கள் கூட ஆண்டு முழுவதும் நீடிப்பனவாக இல்லை. இனக்குழுக்களிடையே நடந்த சண்டைகள் பெரும்பாலும் கொள்ளையிடும் தாக்குதல்களாகவே இருந்தன. மேலே மேற்கோள் காட்டிய ரஷ்ய சரித்திராசிரியர் கள் இஸ்லாமுக்கு முந்தைய அரேபியா பற்றிக் கிடைக்கும் விவரங் களைப் பகுப்பாய்வு செய்வதில் கவனமாகச் செயல்படவில்லை. அரேபியாவின் அப்போதைய சமூக-பொருளாதார அமைப்புகளை அவர்கள் யந்திரத்தனமாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். மார்க்ஸ் தமது தத்துவம் இதைப் போல யந்திர ரீதியில் பயன்படுத்தப்படுவது பற்றி மேலே எடுத்துக்காட்டிய பகுதியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அகமது எல் கோட்ஸி என்ற அரபு மார்க்ஸியவாதியும் அரேபி யாவில் நிலவிய உண்மை நிலைமையைத் தவறாகப் பொருள்படுத் திக்கொள்ளும் இத்தகைய அணுகுமுறையைக் குறைகூறியிருக்

4. A.Z. Manfred (ed.), *A Short History of the World*, தொகுதி 1 (மாஸ்கோ, 1974) பக்கம் 183-4.

www.padippakam.com



கிறார். அவர் கூறுகிறார்: "கிராமப்புறமான, நிலப்பிரபுத்துவ முறையைக் கொண்ட அரபு உலகம் என்ற சித்திரத்தைப் பல வெளி நாட்டினர் மட்டுமின்றி, அதிக எண்ணிக்கையில் அரபு மார்க்ஸிய வாதிகள் கூட ஏற்றுக்கொள்கிறார்கள். மிதமிஞ்சி எளிமைப்படுத் தப்பட்ட மார்க்ஸியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்தச் சித்திரம் விஞ்ஞான அடிப்படையற்ற பெருவழக்காக உள்ள கூற்றுக்களில் ஒன்று. உண்மையில், மத்திய கால ஐரோப்பா விலிருந்து அரபு உலகம் மிகவும் மாறுபட்டதாக இருந்தது. இந்த அரபு உலகத்துள் இன்று போலவே என்றும் மூன்று வெவ்வேறு மண்டலங்களைக் காணலாம். இவை சமூகக் கட்டமைப்பிலும், அரசியல், பொருளாதார அமைப்புகளிலும் ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபடுகின்றன. அரபு கிழக்கு (அரபி மொழியில் அல் மஷ்ராக் என்று அழைக்கப்படுவது) என்ற மண்டலம் அரேபியா, ஸிரியா (அதாவது, இன்றைய ஸிரியா, லெபனான், ஜார்டன், இஸ்ரேல் ஆகியவை), இராக் ஆகிய நாடுகள் அடங்கியது. இரண் டாவது மண்டலம் நைல் நதி நாடுகள் (எகிப்து, சூடான்). மூன்றாவது மண்டலமான அரபு மேற்கு (அரபி மொழியில் அல் மாக்ரேப்) லிபியாவிலிருந்து டுனீசியா, அல்ஜீரியா, மொராக்கோ, மோரிடானியா வரை பரவியிருப்பது. இந்தப் பிரிவுகளில், அரபு உலகை இரண்டாகப் பிரிக்கும் எகிப்து ஒன்றுதான் அன்றும் விவ சாய மக்களின் நாகரிகத்தைக் கொண்ட நாடாக இருந்தது. இன் றும் அவ்வாறே இருக்கிறது. (நிலப்பிரபுத்துவ நாகரிகம் என்று நான் கூறவில்லை). ஆனால் மஷ்ராக், மாக்ரேப் பகுதிகளின் சமூக அமைப்புகள் உழவர்களை அடிப்படையாகக் கொண்டவை அல்ல."[5]

இந்தப் புத்தகம் கூடியமட்டும் ஒரே மாதிரியைப் பின்பற்று வதையோ, எந்தவொரு கோட்பாட்டு விளக்கம், சித்தாந்தம் அல்லது மாதிரிவடிவை யந்திரத்தனமாகப் பின்பற்றுவதையோ தவிர்க்க முயலும். உண்மை என்பது சமூக ரீதியானது என்றாலும் அரசியல் அல்லது கோட்பாடு ரீதியானது என்றாலும் மேலெழுந்தவாரி யாக நினைப்பதைப் போலன்றி, மிகச் சிக்கலானது. அதைப் பகுத் தாய்ந்து அறிவதில் மிகவும் கவனம் தேவை. ஒரே தன்மையாகப் பின்பற்றவதையோ, கொள்கைகளை வரட்டுத்தனமாகப் பின்பற்று வதையோ தவிர்க்க வேண்டும். சமய சித்தாந்தங்களின் விஷயத்தில் மேலும் அதிக கவனம் தேவை. ஏனென்றால் அதில் சம்பந்தப் பட்ட பிரச்சினைகள் அதிகக் குழப்பமானவை; மற்ற சித்தாந் தங்களைவிட இதில் நம்பிக்கைகள் அதிக உறுதியுடனும் அதிகப்

5. Ahmed el Kodsy, *Nationalism and Class Struggles in the Arab World, Monthly Review* சிறப்பிதழ் (தொகுதி.22, ஜூலை-ஆகஸ்ட், 1970), பக்கம் 4.

www.padippakam.com



பிடிப்புடனும் கைக்கொள்ளப்படுகின்றன. எந்த ஒரு தனிப்பட்ட கோட்பாட்டு விளக்கம், மாதிரிவடிவம் அல்லது கருது கோள்—அது எவ்வளவுதான் விஞ்ஞான ரீதியாக உண்மை என நிரூபிக்கப்பட்டிருந்தாலும் ஒரு உண்மையின் பல்வேறு அம்சங் களையும் முழுக்கமுழுக்க விளக்கிவிட முடியாது என்பது இந்தப் புத்தக ஆசிரியரின் உறுதியான கருத்து. மார்க்ஸிய தத்துவம் மேலே குறிப்பிட்டது போல யந்திரத்தனமாகப் பயன்படுத்தப்பட்டால் சரித்திர உண்மைக்கு மிகவும் முரணான முடிவுகளைத் தந்துவிடக் கூடும். மார்க்ஸிய தத்துவத்தில் மிகவும் பாராட்டத்தக்கது அதனு டைய முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையே என்பது என் கருத்து. இதை வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறை என்று குறிப் பிடலாம். வரலாற்றுப் புதிர்களின் சிக்கல்களைப் புரிந்துகொள் வதற்கு மார்க்ஸிய முறைப்பாடு, மற்ற எந்த முறைப்பாடுகளையும் விட நன்றாக உதவுகிறது என்பதால் நான் அதைத் தெரிந்தெடுத் திருக்கிறேன். எனவே மார்க்ஸியத்தின் கொள்கைகள், நம்பிக்கை களைவிட—இவை யதார்த்தமான நிலைமைகளிலிருந்து இயல்பாக உருவாகவில்லை என்றால் நான் அவற்றை நிராகரிக் கிறேன்—அதன் முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையே எனக்கு முக்கியமானது.

நான் பின்பற்றும் முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையை விளக்குவதற்கு டபிள்யூ. மாண்ட்காமரி வாட் எழுதிய "சமூகவிய லாளரும் தீர்க்கதரிசியும்—இஸ்லாமின் தோற்றம் பற்றிய சிந்தனை கள்" என்ற கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:

> ஒரு மதம் என்பது அதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும், ஒரு சமூக நிகழ்வு ஆகும். தீர்க்கதரிசி ஒரு தனித்தன்மையான கட்ட மைப்புக்கொண்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குத் தமது போதனைகளை அளிக்கிறார். சமூகவியலாளர், தீர்க்கதரிசி தமது கருத்துக்களால் உடனடியாக கவரும் சமூகத்திலும், சில காலம் கழித்து கவரும் சமூகத்திலும் உள்ள வர்க்கங்களையும், அவரது கருத்துக்கள் ஏற்கப்பட்டதால் உண்டான வர்க்க மாற்றங் களையும் ஆராயலாம். ஞானத்தின் சமூகவியலில் அவருக்கு இருக்கும் சம்பந்தத்தினால், தீர்க்கதரிசி அறிவித்த கருத்துக்களுக் கும் ஒவ்வொரு வர்க்கத்தின் தனிப்பட்ட நலன்களுக்கும் இடை யிலான உறவு நிலையையும் ஆராய்கிறார். இந்த விஷயங்களி லும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வேறு விஷயங்களிலும், சமூக வியலாளர் தமது பணியைச் சரியாகச் செய்வாரானால், தீர்க்க தரிசியின் போதனைகள் பற்றி உண்மையான கூற்றுக்களைக் கூறுகிறார். உதாரணமாக—முழுக்கவும் சரித்திர உண்மை அல்லாத

www.padippakam.com



ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக் கொண்டால்—தீர்க்கதரிசி செல்வத்தைத் தாக்கிப் பேசுவதன் மூலம் பணக்காரர்களுக்கெதிராக ஏழை எளியோரின் நலன்களை முன்னேற்ற முயலுகிறார் என்று அவர் கூறலாம்.[6]

ஒரு சமூகவியலாளர் ஒரு இயக்கத்தின் வேர்களை முழுமையான சமூகக் கட்டமைப்பில் காண முயலுகிறார். இதற்கு நேர் மாறாக, இறையியலாளர் அதே உண்மையை வர்ணிப்பதற்கு வேறொரு விதமான முறையைக் கையாளுகிறார். அறிவுத்திறனும், கருத்துருவாக்கமும் கொண்ட நிலையைச் சார்ந்தது அது. மாண்ட்காமரி வாட் இதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> இறையியலாளர் நிஜத்தின் அம்சங்கள் பற்றிய மனிதர்களின் நம்பிக்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றில் முக்கியமாகக் கருத்துச் செலுத்துகிறார். ஆனால் சமூகவியலாளர், ஒரு சமூகத்தில் பதிந்து போயிருக்கும் வாழ்க்கை முறை, அதன் பண்பு நெறிகள், நீதிக் கருத்துகள், சமூகக் கட்டமைப்பு என்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள பல்வேறு விஷயங்கள் பின்னிப் பிணைந்த ஒரு தொகுதியில் கருத்துச் செலுத்துகிறார். இவ்வாறாக, சமூகவியலாளர் ஒரு "தொடர்பு இணக்கக் கொள்கை" என்பது போன்ற ஒன்றை வைத்துச் செயல்படுகிறார். கருத்துகள், நம்பிக்கைகள் என்பவற்றை மட்டும் கவனிக்காமல் பல்வேறு சமூக உண்மைகளிலும் கவனம் செலுத்துகிறார்.[7]

இதை மார்க்ஸியச் சொல்வழக்கில் கூற வேண்டுமானால், பொருளாதார அடிப்படையை வைத்துத்தான் மேல் கட்டமைப்பைப் புரிந்து விளக்க வேண்டும். ஆயினும் இந்தப் "பொருளாதார அடிப்படை"க்கும் சமூக முறையமைப்புகளுக்குமிடையே நேரடியான தொடர்பு இருப்பதாகக் கருதிவிடக் கூடாது. இரண்டுக்குமிடையே பல திருப்பங்கள் கொண்ட இடைவழி ஒன்று இருக்கிறது. ஏ. லாப்ரியோலா இதை நமது கவனத்துக்குக் கொண்டு வருகிறார்.

> அடிப்படையில் உள்ள பொருளாதார அமைப்பு—மற்ற எல்லாவற்றையும் தீர்மானிப்பது—ஒரு எளிமையான ஏற்பாடு அல்ல. அதிலிருந்து சமூக முறையமைப்புகள், சட்டங்கள், வழக்கங்கள், சிந்தனை, உணர்வுகள், கோட்பாடுகள் எல்லாம் தன்னியக்கமாக

6. W. Montgomery Watt, *The Sociologist and the Prophet—Reflections on the Origin of Islam* in Malik Ram and M.D. Ahmed (eds.), *Arshi Presentation Volume*, பக்கம் 31.
7. மேற்படி, பக்கம் 34.

www.padippakam.com



> யந்திர ரீதியில் உருவாகி வந்துவிடுவதில்லை. இந்த அடிக்கட்டமைப்புக்கும் மற்ற எல்லாவற்றுக்குமிடையே ஒரு சிக்கலான, பல சமயங்களில் அதிநுட்பமான, பல திருப்பங்கள் கொண்ட, மூலத்திலிருந்து பெறப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட செய்முறை ஒன்று உள்ளது. இது எப்போதும் கண்டறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதில்லை.[8]

பொருளாதார அடிப்படை சந்தேகமில்லாமல் மேல்கட்டமைப்பில் உள்ள முறையமைப்புகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் அது மட்டுமே முக்கிய காரணம் அல்ல. முந்தைய காலங்களின் உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவு நிலைகள் ஆகியவற்றிலிருந்து தோன்றிய மத-கலாசார முறையமைப்புகள் தாமே ஒரு சுயஇயக்கச்சக்தி பெற்று, பிற்காலங்களின் சமூக, பொருளாதார முறையமைப்புகளில் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்துகின்றன. பொருளாதார அடிப்படைக்கும் மேல்கட்டமைப்பின் முறையமைப்புகளுக்குமிடையே ஒன்றுக்கு நேராக இன்னொன்று என்ற விதத்தில் தொடர்பு இருப்பதாகக் காட்ட முயன்றால் அது இயலாத காரியமாகும் அல்லது தவறுகள் நிறைந்ததாகும். மார்க்ஸியத்தை யந்திரத்தனமாகப் பின்பற்றுவதில் உள்ள அபாயங்களை எங்கல்ஸ் உணர்ந்திருந்தார். தமது வாசகர்களை அதுபற்றி எச்சரித்தார்.

> எங்களைவிட இளையவர்கள் பொருளாதாரத்திற்கு உரியதைவிட அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள் என்றால் அதற்கு மார்க்ஸும் நானுமே ஓரளவுக்குப் பொறுப்பாகிறோம். எங்களுடைய எதிர்ப்பாளர்கள் அதன் முக்கியத்துவத்தை மறுத்துக் கூறியதனால் அவர்களுக்கெதிராக அதை நாங்கள் வலியுறுத்த வேண்டியதாயிற்று. செயல்—பிரதிசெயலில் சம்பந்தப்பட்ட மற்ற அம்சங்களுக்கு உரிய முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்கு எங்களுக்கு எப்போதும் நேரமோ, இடமோ, சந்தர்ப்பமோ கிடைக்கவில்லை.[9]

இந்தப் புத்தகத்தில் பொருளாதார அம்சம் வலியுறுத்திக் கூறப்பட்டால் அதற்குக் காரணம், வரலாற்றின் மிகச் சக்திவாய்ந்த

8. லூக்காக்ஸ் போன்ற பிற்கால மார்க்ஸிஸ்டுகள் இடைநிலைக் கொள்கை என ஒன்றை உருவாக்க முயன்றார்கள். மார்க்ஸியத்துக்குக் கண்டிப்பான முறையில் கூறப்படும் பொருளுக்கு முற்றிலும் மாறுபட்டது இந்தக் கொள்கை. அடிநிலை அமைப்புக்கும் மேல்நிலை அமைப்புக்கும் இடையே நேரடியான ஒரு உறவுத்தொடர்பு உள்ளது என்று இந்தக் கொள்கை கூறுகிறது.
9. Engels, "To C.S. Schmidt, 27 October, 1980" from Marx and Engels, *Selected Correspondence*, (மாஸ்கோ, 1975) பக்கம் 500.

www.padippakam.com



இயக்கங்களுள் ஒன்றின் தோற்றத்துக்கு வழிசெய்த சக்திகள் பற்றிய ஆய்வில் இந்த அம்சம், முழுமையாக இல்லாவிடினும் பெரும் அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டு வந்திருப்பதேயாகும். இறுதியாகப் பார்க்கும் போது பொருளாதார அம்சம்தான் எல்லாவற்றையும் நிர்ணயம் செய்யும் ஒரே அம்சம் என்று வலியுறுத்துவது என் நோக்கம் அல்ல. இந்தப் புத்தகத்தில் போகப்போக இது தெளிவாகும். என்னுடைய முழுத்திறனுக்கும் இயன்ற அளவில் மற்ற அம்சங்களையும் — மத, மனோதத்துவ இயல்புகொண்ட அம்சங்களையும் — எடுத்துக் கூற முயன்றிருக்கிறேன்.

இது போன்ற ஒரு விஷயத்தை விவாதிப்பதில் உள்ள அடிப்படைப் பிரச்சினை தத்துவம் சார்ந்தது; மனிதர்களின் சிந்தனைகளுக்கும் வெளியுலகத்துக்கும் அவர்களின் செயல்களுக்கும் உள்ள உறவுநிலை பற்றியது அது. இந்த உறவுநிலை பற்றி பொதுவான கண்ணோட்டத்தில் தரப்படும் விளக்கம் திருப்தியாயில்லை. பொதுவான கண்ணோட்டத்தின்படி,[10] நாம் உலகத்தை கவனமாக, நுணுக்கமாக நோக்கி, எல்லா உண்மைகளையும் சேகரித்து அளவிட்டுக்கொண்டு, பின்பு மிகவும் வெளிப்படையாகப் புலப்படும் தீர்வை உருவாக்கி அதைச் செயல்படுத்துகிறோம். உண்மைகள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் உள்ளன என்பது இதில் உட்குறிப்பாகக் காணப்படுகிறது. இவை ஐயந்திரிபுக்கு இடமில்லாதவையாகவும், ஓரளவுக்கு எளிதாகக் கண்டறியக் கூடியனவாகவும் உள்ளன என்பதும், நம்முடைய பூர்வாங்க வேலையைச் சரியாகச் செய்திருந்தால் தீர்வுகள் தாமாகக் கிடைத்துவிடும் என்பதும் இதில் அடங்கியுள்ளன. நியாய அறிவுள்ள எல்லா மனிதர்களும் இதில் சம்பந்தப்பட்ட காரண, காரியத் தொடர்புகளை ஆராய்வார்கள் என்பதும், காணப்படும் தீர்வு, கிடைத்துள்ள தகவல்களிலிருந்து "வெளிப்படை"யாகப் புலனாவது என்பதால் அதைத் தாமே மனமுவந்து ஏற்பார்கள் என்பதும் இதில் குறிப்பாக உள்ளன. அதாவது, உண்மைகள் தாங்களே தீர்வைத் தந்துவிடுகின்றன. நியாய அறிவுள்ள மனிதர்கள் அது வெளிப்பட உதவும் கிரியா ஊக்கிகளாக மட்டுமே இருக்கிறார்கள். பொதுவான அளவில் கூறினால், நியாய அறிவுள்ள மனிதர்கள் வரலாற்றை உருவாக்கினால் அது மாற்ற முடியாததாகவும் தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது. இதை வெளிப்படுத்துவதில் அறிவுள்ள மனிதர்கள் சுயசெயலற்றவர்களாக, உண்மைகளுக்கும் செயல்களுக்கும் இடையில் இணைப்புக்கண்ணிகளாக மட்டுமே இருக்கிறார்கள்.

10. இங்கே தரப்படுவது Nigel Harris, *Beliefs in Society—the Problem of Ideology* (லண்டன், 1971) என்ற புத்தகத்திலிருந்து (பக்கம் 10-11) எடுக்கப்பட்டது.

www.padippakam.com



இணைப்புக்கண்ணி கோணல்மாணலாக இருந்தால் அதற்குக் காரணம் அறிவற்ற மனிதர்களின் சிந்தனை "புகை சூழ்ந்ததாக" இருப்பதாலோ அல்லது அவர்கள் உண்மைகளைச் சரியாகப் பரிசீலிக்காமல் இருப்பதாலோ இருக்கலாம். உணர்ச்சிகள், முன்கூட்டிய கருத்துக்கள், சுயநலங்கள் ஆகியவை சிந்தனையில் சூழும் புகை மூட்டங்களாகக் கருதப்படுகின்றன. மேலும் நமக்குச் சில லட்சியங்கள் இருக்கின்றன; அவற்றை அடைய நாம் முயற்சி செய்கிறோம். "லட்சியங்கள்" என்பவை அவற்றின் பரிசுத்தமான வடிவில் அடைய முடியாத குறிக்கோள்கள் என்று கூறப்படுகிறது. ஆயினும் அவற்றை அடையும் முயற்சியில் இந்த உலகை அவற்றை நோக்கி அமையுமாறு மாற்றிவிடுகிறோம், ஓரளவுக்கேனும் அடைந்து விடுகிறோம். லட்சியங்கள் கொடுக்கப்படுபவை. அவை எங்கிருந்து வருகின்றன என்று கூற முடியாது. ஆனால் அவை கொடுக்கப்பட்ட விஷயங்களாகின்றன.

மேலே குறிப்பிட்ட அணுகுமுறை பற்றி நிகல் ஹாரிஸ் இவ்வாறு கூறுகிறார்:

> லட்சியங்களுக்கும் உலகத்துக்கும் செயலுக்கும் உள்ள உறவு நிலை பற்றிய இரண்டு வடிவ மாதிரிகளும் சிறிதும் பொருளற்றவை என்றே கருதுவேன். சில முடிவுகளை எடுத்து அவற்றின் படிச் செயல்படவைக்கும் நடைமுறை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் அந்த நடைமுறைக்கும் இவற்றுக்கும் ஒரு அம்சத்தில் கூடப் பொருத்தம் இல்லை. *நம்மில் பெரும்பாலானவர்களுக்கு ஒரு முடிவு எடுப்பது என்பது மிகவும் சிக்கலான விஷயம். இதில் தற்செயல் நிகழ்ச்சிகளும், தற்காலிக நோக்கங்களும், மற்றும் பல வகையான, சில சமயங்களில் குறிப்பால் மட்டும் உணர்த்தப்படும் நோக்கங்களும் பங்கு பெறுகின்றன.*[11] (சாய்வெழுத்து என்னுடையது)

மனிதர்கள் சம்பந்தப்பட்ட எந்த நிலைமையும், அது சரித்திர பூர்வமானதானாலும் வேறு வகையானாலும் மிகவும் சிக்கலானது. லட்சியங்களும் நம்பிக்கைகளும் சம்பந்தப்படும் போது அது மேலும் சிக்கலாகிறது. எனவே அதை ஏதேனும் ஒரேயொரு வாய்பாடு அல்லது சிந்தனை முறையின் மூலம் புரிந்துகொள்ள முடியாது. சில முக்கிய அம்சங்களும் போக்குகளும் மிக எடுப்பாகக் காணப்படுவதை நிறுவிக்காட்டுவதுதான் செய்யக்கூடியதாகும். சாதாரணமான ஒரு நிலைமையில் முடிவு எடுக்கும் செயல்முறை

11. மேற்படி.

www.padippakam.com



மிகவும் சிக்கலாகவும் தற்காலிகமான அல்லது வேறு வகையான பல்வேறு அம்சங்களால் பாதிக்கப்படுவதாகவும் இருந்தாலும், புரட்சி தோன்றும் ஒரு நேரத்தில் கோட்பாடு அம்சமே ஓங்கி நிற்கும்; குறைந்தபட்சம், கோட்பாட்டில் வலுவான ஈடுபாடு கொண்டவர்களுக்கேனும் இந்த அம்சமே பெரியதாயிருக்கும். ஆனாலும், அது அவர்களின் ஈடுபாட்டின் அளவைப் பொறுத்திருக்கும். ஒன்றுக்கொன்று முரணான கண்ணோட்டங்களும், நம்பிக்கைகளும், கருத்துகளும் நிரம்பிய இஸ்லாம் போன்ற ஒரு மதத்தைக் குறித்து வரலாற்று ரீதியாக ஆய்வு செய்யும் போது இத்தகைய மனோபாவம் மிக முக்கியமானது. ஏனென்றால் இது ஒரே தன்மையான அச்சுமாதிரிகளைப் பின்பற்றும் சிந்தனையால் நேரக்கூடிய தவறுகளைத் தவிர்க்கிறது. வரலாற்று நிகழ்ச்சிகளை மார்க்ஸியக் கண்ணோட்டத்தில் காண நாம் முயலும் போது, மிகப் பரந்த முறையில் மார்க்ஸிய அணுகுமுறையை, குறிப்பாக அதன் முறைப்பாட்டைத்தான் கருத்தில் கொள்கிறேனே தவிர, ஏற்கெனவே மனத்தில் உருவாக்கிக்கொண்ட எந்தவொரு கெடுபிடியான மாதிரி அமைப்பையும் கருத்தில் கொள்ளவில்லை.

ஸார்த்ரே கூறுகிறார்: "இந்தக் கருத்தமைவுகளின் உண்மையான உள்ளடக்கம் கடந்தகால அறிவே. ஆனால் இன்றைய மார்க்ஸியவாதி அதை என்றுமுள்ள அறிவாகக் கருதிக்கொள்கிறார். பகுத்தாய்வு செய்யும் போது அவருக்கு இருக்கும் ஒரே அக்கறை இவற்றையெல்லாம் அதனதன் "இடத்தில்" வைப்பதேயாகும். இவை முன்னதாகவே மனத்தில்கொண்ட உண்மைகளைக் குறிக்கின்றன என்ற நம்பிக்கை எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவர் நிரூபணத்தைப் பற்றிக் குறைவாகவே அக்கறைப்படுகிறார்."[12] மேலும் ஸார்த்ரே கூறுகிறார்:

> நாம் புரிந்துகொள்வதை செழுமைப்படுத்தவும் செயலைத் தெளிவுபடுத்தவும் உண்மைகளைப் பொதுவான மார்க்ஸியக் கண்ணோட்டத்தில் பார்க்கும் கேள்விக்கு இனி இடமில்லை. பகுப்பாய்வு என்பது விவரங்களைக் களைந்து ஒதுக்குவதும் சில நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை வெளிக்கொண்டு வருவதும் ஆகும். உண்மைகளின் இயல்புத்தன்மைகளை மாற்றுவது, அல்லது அவற்றுக்கென ஒரு இயல்பைக் கற்பனையாக உருவாக்கிப் பின்னர் அந்த இயல்பு அந்த உண்மைகளில் சாரமாக, மாற்ற முடியாத, கண்மூடித்தனமாகப் போற்றப்படுகின்ற,

12. Jean Paul Sartre, *Search for a Method*, translated by Hazel E. Barnes, Vintage Books, U.S.A. (1960), பக்கம் 27.

www.padippakam.com



உத்தேசமாக உருவாக்கப்பட்ட கருத்துகளாக இருப்பதைக் கண்டு பிடிப்பதும் பகுப்பாய்வாகும். மார்க்ஸியத்தின் திறந்த கருத் தமைவுகள் மூடிக்கொண்டுவிட்டன. இவை இப்போது திறவு கோல்களாக, பொருள் விளக்கம் காட்டும் குறிப்புக்களாக இல்லை. அவை ஏற்கெனவே முழுமையாக்கப்பட்ட ஞானமாகத் தம்மைக் கருதிக்கொள்கின்றன.[13]

இந்த ஆய்வு கூடிய மட்டும் மேலே குறிப்பிட்ட அபாயங் களைத் தவிர்க்க முயலுகிறது. அதாவது, மாற்ற முடியாத, கண் மூடித்தனமாகப் போற்றப்படுகின்ற, உத்தேசமாக உருவாக்கப் பட்ட கருத்துகளைப் பயன்படுத்தவில்லை. முழுமையாகப் பகுப் பாய்வு செய்வதில் நம்பிக்கை வைக்கிறது. கிடைக்கும் அனைத்து உண்மை விவரங்களைக்கொண்டும் நிரூபிக்க முடியாத விஷயங் களில் ஒட்டுமொத்தமாகப் பொதுமைப்படுத்திக் கூறிச்செல்ல முயலவில்லை. இன்னமும் ஆராய்ந்தறியப்படாத பல பகுதிகள் உள்ளன. இவற்றைப் பற்றிக் கருத்துக் கூறுவதில் நான் மிக எச்சரிக் கையாக இருக்க முயன்றிருக்கிறேன். ஸார்த்ரே மிகப் பொருத்த மாகக் கூறியதைப் போல, ஆய்வுகளை ஒன்றுசேர்த்து முழுமை யாகப் பயன்படுத்துவதைவிட்டு முழுமையை வைத்துக்கொண்டு நுணுக்கவாதங்கள் செய்வதில் இறங்கிவிடவில்லை. ஆராய்ந்து உண்மைகளைக் காண வேண்டும் என்ற விஞ்ஞான ரீதியான மனப் பாங்குதான், அதாவது, மனிதசக்திக்கு இயன்ற அளவில் தன்னிலைப் படாமல் பாரபட்சமில்லாமல் ஆய்வதுதான், எந்தவொரு ஆழ்ந்த ஆய்வுக்கும் ஜீவ சக்தியாயிருக்கிறது. (தத்துவ ரீதியான சில கருது கோள்கள் தவிர்க்கமுடியாதவை). ஆயினும் சில பகுதிகளில் பார பட்சமற்ற ஆய்வுக்காக வேண்டி, நம்முடைய தத்துவ ரீதியான முன்கருதுகோள்களைத் தற்காலிகமாக ஒதுக்கி வைப்பது அவசியம் என்று இல்லாவிட்டாலும் விரும்பத்தக்கதாகிறது. வெவ்வேறு விதமான தத்துவக் கண்ணோட்டம் கொண்ட ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறை இது.

கடைசியாக, இந்தப் புத்தகம் இஸ்லாமின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சமூக-பொருளாதாரக் காரணிகளின் அடிப் படையில் விளக்கிக் கூறுவதற்கான ஒரு பணிவான முயற்சி என் பதைத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். சமய நோக்குநிலை மிகவும் முக்கியமானது என்றாலும், அது மட்டுமே சரித்திர நிகழ்ச்சிகளை முழுமையாக விளக்கிவிட முடியாது என்பது என் கருத்து. நான் எடுத்துக்கொண்ட முறைப்பாட்டின்படி எனக்கு உண்மை என்று தோன்றியதை நான் எழுதியிருக்கிறேன். வேறு எந்தக்

13. மேற்படி, பக்கம் 27.

www.padippakam.com



கண்ணோட்டத்தையும், அதிலும் முக்கியமாக, இஸ்லாமை ஒரு மதமாகப் பின்பற்றுவோரின் கண்ணோட்டத்தைத் தவறு என்று நிரூபிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. நான் எடுத்துள்ள முயற்சி, இஸ்லாமை அதன் சமூகப் பின்னணியில் மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. எந்தவொரு மதத்தையும் அல்லது கோட்பாட்டையும் அதனுடைய உண்மையான சூழ்நிலையில் வைத்துப் பார்த்தாலன்றி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. இதன் பொருள், இப்படிப்பட்ட ஒரு ஆய்வு, இன்னமும் கோடிக் கணக்கான மக்களை இயக்கிக் கொண்டிருக்கும் இஸ்லாமை ஒரே மதமாகக் கொள்ளும் நிலைக்கு எதிரானது என்பதல்ல.

படிப்பகம்

www.padippakam.com

# 2

# இஸ்லாமுக்கு முன் அரேபியச் சமூகம்

இஸ்லாம் அரேபியாவில், குறிப்பாக, மக்காவில் தோன்றியது என்பது யாவரும் அறிந்ததே. எனவே அதன் சமூகவியல் பின்னணியையும், கூடவே அதன் புவியியல், வரலாற்றியல், அரசியல், பொருளாதாரக் காரணிகளையும் ஆராய்வது அவசியம். வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் வெளிச்சத்தில் அதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இது மேலும் அவசியமாகிறது. அரபி மொழியில் அல்-ரப் அல்-காலி (al-Rab 'Al-Khali) (வெறுமையான பகுதி) என்று அழைக்கப்படும் பரந்த அரேபியப் பாலைவனத்தில் மக்கா ஒரு முக்கியமான நகரியமாக இருந்தது. மக்கா, உண்மையில் இந்தப் பாலைவனத்துக்கு வடமேற்கே, மேற்குக் கடற்கரைக்கருகே அமைந்திருக்கிறது. அல்-ரப் அல்-காலி அநேகமாக உள்ளே செல்ல முடியாத, பெரிதும் அஞ்சப்பட்ட பாலைவனமாகும். திரு.பெர்ட்ராண்ட் தாமஸ் (Mr. Bertrand Thomas) என்ற இளம் ஆங்கிலேயக் கீழை நாட்டியல் அறிஞர் 1931 ஜனவரியில் முதன்முதலாக அதைக் கடந்து சென்று, உலக நிலப்படத்தின் மிகப் பெரிய வெற்றிடங்களில் ஒன்றான அதன் ரகசியங்களை வெளிக்கொணர்ந்தார்.[1] சமீப காலத்தில் வில்ஃப்ரெட் தெஸிகர் (Wilfred Thesigar) என்ற மற்றொரு ஆங்கிலேயர் அதைக் கடந்தார். தமது பயண அனுபவங்களை அவர் "அரேபிய மணல்கள்" (Arabian Sands) என்ற புத்தகத்தில் விவரித்திருக்கிறார்.

இஸ்லாம் தோன்றிய இடமான மக்காவைச் சுற்றிலும் உள்ள பாலைவனம் உயிர்வாழ்க்கையை மிகவும் கடினமாக்கும் தன்மை கொண்டது. அதற்கெனத் தனிப்பட்ட ஒரு வாழ்க்கைமுறை கட்டாயமாகிறது. கடினமானதும் பழைமையானதுமான வாழ்க்கை முறை அது. ஃபிலிப் கே.ஹிட்டி (Philip K. Hitti) "அரேபியர்களின் வரலாறு" (History of the Arabs) என்ற தம்முடைய புகழ்பெற்ற புத்தகத்தில் மிகப் பொருத்தமாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "அரேபியாவின் நிலப்பரப்பு பெரும்பகுதி பாலைவனம். அதன்

1. Philip K. Hitti, History of the Arabs, 8வது பதிப்பு. (இலண்டன், 1965), பக்கம் 71

படிப்பகம்

www.padippakam.com



சுற்று விளிம்பில் குறுகலான ஒரு பகுதி மட்டும் மனிதர் வாழத்தக்க தாக உள்ளது. இந்தச் சுற்று விளிம்பு கடலால் சூழப்பட்டுள்ளது. மக்கள்தொகை நிலத்தின் தாங்கும் சக்திக்கு மேல் பெருகும் போது மிகுதியாக உள்ள மக்கள் வாழ்வதற்குக் கூடுதலாக நிலம் தேவையாகும். ஆனால், இந்த மக்கள் அரேபிய நிலப்பரப்பில் உள்நோக்கிச் செல்ல முடியாமல் பாலைவனம் தடுக்கிறது. வெளிப் புறமாகச் செல்வதற்குக் கடல் தடையாக உள்ளது. கடல் அநேகமாகக் கடந்து செல்ல முடியாத தடையாகவே [இஸ்லாமுக்கு முந்திய] அந்தக் காலத்தில் இருந்தது. எனவே மிகுதியாக உள்ள மக்கள் வெளியே பரவு வதற்கு ஒரே வழிதான் இருந்தது. அதுதான் அரேபிய தீபகற்பத்தின் மேற்குக்கரையில் வடக்கு நோக்கிச் செல்லும் வழி. அது ஸைனேயிடிக் (Sinaitic) தீபகற்பத்தில் இரு பிரிவுகளாகப் பிரிந்து, அவற்றில் ஒன்று செழிப்பான நைல் நதிப் பள்ளத்தாக்குக்குச் செல்லுகிறது."[2]

இஸ்லாம் தோன்றிய காலத்துக்குள், பேராசிரியர் ஹிட்டி குறிப்பிட்ட கடல்மார்க்கம் "அநேகமாகக் கடக்க முடியாதது" என்ற நிலை மாறிவிட்டது. தொடக்கத்தில் முகமதியர்கள் சிலர் புகலிடம் தேடி அபிஸினியாவுக்கு ஓடிச் செல்ல நேரிட்ட போது அந்தக் கடல்மார்க்கத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. வர்த்த கம் வளரவளர, நீர்ப் போக்குவரத்தில் முன்னேற்றங்கள் காண்பது அவசியமாயிற்று. பின்னரும் கூட அரேபியர்கள் இந்த முக்கியத் துறையின் முன்னேற்றத்துக்குப் பெரும் பங்காற்றினார்கள். தாங் களே போர்க் கப்பல்களைக் கட்டினார்கள். குரானில் கப்பல் செலுத்துதல் பற்றிப் பல இடங்களில் குறிப்புகள் வருகின்றன. திரு. அலி மொகமத் ஃபாஹ்மி (Mr. Aly Mohomed Fahmy), "கிழக்கு மத்தியத் தரைக்கடலில் முஸ்லிம் கடல் ஆதிக்கம்" (Muslim Sea-Power in the Eastern Mediterranean) என்ற தமது புத்தகத்தில் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்: "குரானில் நாற்பது வசனங்கள், கடலை மனிதகுலத்துக்குப் பயன்படுமாறு வைத்த இறைவனின் அருள் பற்றிப் பேசுகின்றன. மனிதனின் கப்பல்கள் நீர் மேல் செல்லுமாறு அவனுக்கு நீர் (ஸகரா-Sakhara) மீது ஆதிக்க வல்லமை கொடுத்திருப் பது இதற்கு ஒரு சிறப்பான சான்றாக உள்ளது. கப்பல் இயக்கக்கலை ஆழ்ந்த சுவடு பதித்துள்ளதாகத் தோன்றுகிறது: 'உங்கள் இறைவன், அவன் அருளை நீங்கள் நாடச்செய்யும் பொருட்டு உங்களுக்காகக் கடலில் கப்பல்களை விரைந்து செல்லச் செய்பவன்; நிச்சயமாக அவன் உங்களிடம் எப்போதும் கருணை உள்ளவனாக இருக்கிறான்.'

"கடலில் கப்பல்கள் எதற்காகச் சென்று வந்தன என்பதும், அரேபியர்கள் என்ன மாதிரியான வேலைகளைச் செய்தார்கள் என்பதும் பின்வருமாறு வர்ணிக்கப்படுகின்றன: 'நீங்கள் உண்ப தற்குப் புதிய இறைச்சியைப் பெறுவதற்கும், நீங்கள் அணியும்

2. மேற்படி, பக்கம் 10.

www.padippakam.com



ஆபரணங்களை எடுத்து வருவதற்கும் கடலை உங்களுக்குக் கீழடங்கி இருக்கச் செய்தவன் அவனே; கப்பல்கள் கடலைக் கிழித்துக் கொண்டு செல்லச் செய்தவன் அவனே, அவனுடைய அருட் கொடையை நாடி அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.'

"இந்த வசனத்திலிருந்து அரேபியர்கள் கடலில் சென்றது முக்கியமாக மீன் பிடிப்பதற்கும், முத்தும், பவழமும் எடுப்பதற்கும், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு லாபம் தரும் வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்குமே என்பது தெளிவாகத் தோன்றுகிறது. கடலை உயர்வாகப் போற்றுவதும், அதற்குப் பலியானவர்களைச் சிறப்பாகப் புகழ்வதும், கடல் வாணிபத்துக்கு எல்லா வகையிலும் ஊக்கமளிப்பதும் மரபாக உள்ளது."[3] இவ்வாறாக, இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பான காலத்தில் கடலானது கடக்க முடியாதது என்ற நிலை மாறிவிட்டது மட்டுமின்றி, உணவைப் பெறுவதற்கும் வர்த்தகத்துக்கும் கடல் பெருமளவில் பயன்படுத்தப்பட்டதைக் காண்கிறோம். வர்த்தகத்தை வளர்ப்பதிலும், நாடுகளை வெற்றிகொள்வதிலும் கப்பல் இயக்கக்கலையில் அரேபியர்களின் தேர்ச்சி பெரும் துணை புரிந்தது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இஸ்லாமின் பிறப்பிடமான மக்கா பரந்த பாலைவனத்தின் சுற்றுவிளிம்பில் அமைந்திருக்கிறது. அந்தப் பாலைவனத்தில் "பதூயின்" என்று அழைக்கப்பட்ட மக்கள் பரவலாக வாழ்ந்து வந்தார்கள். ஸிமிடிக் வகை நாடோடி இனக்குழுக்களான இவர்கள் சில சமயங்களில் பாலைவனச்சோலைகளுக்கருகே குடியமர்ந்து ஓரிடத்தில் நிலைத்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்வதும் உண்டு. ஆயினும் பெரும்பான்மையான பதூயின்கள் நாடோடி வாழ்க்கையில் பேரார்வம் கொண்டிருந்தார்கள். தொழில் பெருக்கம் வாய்ந்த சமூகத்தில் மக்களுக்குச் சில வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும், சமூக நெறிகளும் உருவாவது போலவே, நாடோடிச் சமூகத்திலும் தனிப்பட்ட மரபு அமைப்புகளும்-பழக்கங்களும்-பண்பாடும் உருவாகின்றன. அரேபியப் பாலைவனத்தில் நாடோடி வாழ்க்கை முறையை மேற்கொள்வது என்பது டெட்ராய்ட்டில் அல்லது மான்செஸ்டரில் தொழில்மயமான வாழ்க்கை முறையைப் போல, அங்குள்ள கண்கூடான நிலைமைகளுக்கு ஏற்ற செயல்பாட்டில் "விஞ்ஞான ரீதியானதே" என்று பேராசிரியர் ஹிட்டி கூறுகிறார். இது ஒப்புக்கொள்ளத்தக்க கருத்து.

பதூயின்கள் கடினமாக உழைக்கும் மக்கள். விடாப்பிடியும் நீடித்த உழைப்பும் அவர்களது முக்கிய குணச் சிறப்புக்கள்.

3. Aly Mohomed Fahmy, *Muslim Sea Power in the Eastern Mediterranean* (லண்டன், 1950), பக்கம் 57.

www.padippakam.com



கட்டுப்பாடின்மையும் அதிகாரத்தை மதியாமையும் அவர்களது முக்கிய குணக் குறைபாடுகள். இக்குறைபாடுகள் புதிதாகத் தோன்றிய இஸ்லாமிய அரசுக்குப் பூதாகாரமான பிரச்சினைகளை உருவாக்கியதைப் பின்னர் காண்போம். கடினமான பாலைவன நிலைமைகளும், ஆதார வளங்களின்மையும் பதூயின்களை வரலாற்று ரீதியாகவே மிகவும் எளிய வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்தியிருந்தன. "தவூப்" (thaub) என்ற நீண்ட ஆடையும், இடுப்பில் அரைப்பட்டையும், மேலே நீண்டு தொங்கும் "அபா" (abā) என்ற மேலாடையும் அவர்கள் அணிகிறார்கள். தலையை "கூஃபிய்யா" (Kūfiyya) என்ற துண்டினால் மூடி, "இகால்" ('iqāl) என்றழைக்கப்படும் கயிற்றால் கட்டிக்கொள்வார்கள். கால்சராய்கள் அணியும் வழக்கம் இல்லை. காலணிகளையும் அரிதாகவே பயன்படுத்துகிறார்கள். அவர்களது உணவும் எளிமையானதே. பொதுவாக, பேரீச்சம் பழங்களையும், ஒருவித மாவுக்கலவை அல்லது வறுத்த தானியக்கதிரையும் தண்ணீருடன் உண்பார்கள். ஒட்டகத்தின் அல்லது வெள்ளாட்டின் பாலை அருந்துகிறார்கள். கூடாரங்களில் வசிக்கிறார்கள். தங்களுடைய ஒட்டகங்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் கொண்ட மந்தைகளை ஓட்டிக்கொண்டு மேய்ச்சல் நிலங்களைத் தேடிக்கொண்டு இடம் மாறிப் போய்க்கொண்டே இருப்பார்கள். மற்றொரு இனக்குழுவின் கொள்ளைத் தாக்குதலுக்கு உள்ளாகாமல் தவிர்ப்பதும் இவர்கள் இடம் விட்டு இடம்சென்று கொண்டிருப்பதற்கு ஒரு காரணமாகும். செல்லும் வழியில் காணும் ஒட்டகக் கால்சுவடுகளையும், சாணங்களையும் பார்த்தே தங்களுக்கு முன் அந்த வழியில் எந்த இனக்குழு சென்றுள்ளது என்பதை அனுபவத்தால் சொல்லிவிடுவார்கள்.

ஒட்டகங்களையும், வெள்ளாடு, செம்மறியாடுகளையும் வளர்ப்பதுடன் மற்ற இனக்குழுக்கள் மேல் கொள்ளைத் தாக்குதல் நடத்துவது இவர்களுக்குப் பொருளாதார அவசியமாக உள்ளது. இனக்குழுக்களிடையே நடக்கும் "கஜ்வா" (ghazwa) அல்லது "ரஸியா" (razzia) என்ற கொள்ளைத் தாக்குதலை தேசிய மரபாகக் கருதும் அளவுக்கு அவற்றுக்கு அவசியம் இருக்கிறது. காட்டில் ஓருயிரின் இறப்பின் மூலம் மற்றொரு உயிர் வாழ்வது போல அரேபியப் பாலைவனத்தில் ஒரு இனக்குழு மற்றொரு இனக்குழுவைக் கொள்ளையடித்து வாழ்கிறது. இஸ்லாமின் தீர்க்கதரிசி மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றவுடன், மக்காவில் உள்ள தமது எதிரிகளை அடக்குவதற்கு இந்த மரபுமுறையைப் பயன்படுத்திக்கொண்டார். துரதிர்ஷ்டவசமாக, மேற்கத்திய அறிஞர்கள் இந்த விஷயம் பற்றித் தெரிந்துகொள்ளாத காரணத்தால், இந்தச் செயலைத் தவறாகப் புரிந்துகொண்டு, தீர்க்கதரிசியை கொள்ளைக்காரர் என்றுகூடக் கண்டனமாகக் கூறியிருக்கிறார்கள்.

www.padippakam.com



பாலைவனச்சோலைகளில் அல்லது மற்ற நகரங்களில் நிலைத்து வாழ்ந்த மக்கள் இத்தகைய கொள்ளைத் தாக்குதல்கள் பற்றி இயல்பாக மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள். பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற்று மேதை இபின் கல்தூன் (Ibn Khaldūn) எழுதிய "முகதிமா" (Muqaddimah) என்ற வரலாற்று அறிமுக நூலில் பதூயின்களின் இந்தக் காட்டுமிராண்டித்தனமான கொள்ளைத் தாக்குதல் வழக்கத்தைக் கண்டனம் செய்திருக்கிறார். அவர் எழுதுகிறார்:

> ...பதூயின்கள் காட்டுமிராண்டி மக்கள். காட்டுமிராண்டித்தனமும் அதற்குக் காரணமான நடப்புகளும் அவர்களுக்கு முற்றிலும் பழகிப்போனவை. அது அவர்களுடைய குணமாகவும், இயல்பாகவும் ஆகிவிட்டது. அது அவர்களுக்கு அதிகாரத்துக்குக் கட்டுப்படாத சுதந்திரம் அளிப்பதனாலும், மற்றும் தலைமைக்குப் பணிய வேண்டிய தேவையும் இல்லாததாலும் அவர்கள் அதை மிகவும் விரும்புகிறார்கள். இத்தகைய இயல்பு நாகரிகத்துக்கு நேர்மாறானது, முரணானது. பதூயின்களின் வழக்கமான செயல்முறைகளெல்லாம் அலைந்து திரிவதையே அவசியமாக்குகின்றன. இது நாகரிகத்தின் தோற்றத்துக்கு அவசியமான நிலைத்த வாழ்வின் எதிர்மறையாகும். அவர்களுடைய வாழ்க்கையின் இயல்பே நாகரிகத்தின் அடிப்படையான கட்டிட அமைப்புக்கு எதிரானதாக அமைந்துள்ளது.
>
> மேலும் மக்களிடம் இருக்கும் எதையும் கொள்ளையிடுவது அவர்களின் இயல்பு. அவர்களது ஈட்டியின் நிழல் விழும் இடங்களில்தான் அவர்களுக்கு வாழ்க்கை உள்ளது. மற்றவர் உடைமைகளை எடுத்துக்கொள்வதில் வரம்பு எதையும் ஏற்பதில்லை. உடைமைகள், வீட்டுப்பொருள்கள், பாத்திரங்கள் மீது அவர்கள் கண்பட்டால் அவற்றை எடுத்துக் கொள்கிறார்கள்...[4]

இபின் கல்தூன் பதூயின்களின் வேறு சில குணங்களையும் குறிப்பிடுகிறார். நம் நோக்கில் இவை முக்கியமானவை என்பதுடன் நமது ஆய்வை நடத்தும் முறைக்கும் தொடர்பு உள்ளவை. அவர் கூறுகிறார்:

> மேலும், பதூயின்கள் சட்டங்களைப் பற்றியோ, மக்கள் தவறான செயல்களைச் செய்யாமல் தடுப்பது பற்றியோ,

4. Ibn Khaldūn, *The Muqaddimah,* அரேபியிலிருந்து மொழிபெயர்ப்பு F.Rosenthal; சுருக்கி அளித்தவர் N.J.Dawood (லண்டன், 1958) பக்கம் 83.

படிப்பகம்

www.padippakam.com



சிலரை மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பது பற்றியோ கவலைப்படுவதில்லை. கொள்ளையடித்தோ, ஏமாற்றியோ எடுத்துக்கொள்ளக் கூடிய உடைமைகளில்தான் அவர்களுக்கு நாட்டம்....

பதூயின்களின் ஆளுகையில் அவர்களது குடிமக்கள் சட்டங்கள் ஏதுமற்று அராஜக நிலையில் வாழ்வது போல் வாழ்கிறார்கள். அராஜகம் மனிதகுலத்தை அழித்து நாகரிகத்தை நாசம் செய்கிறது. ஏனென்றால், நாம் முன்னமே கூறியது போல், அரசனின் அதிகாரம் இருப்பது மனிதனுக்குரிய இயற்கையான தன்மையாகும். அதுதான் மனித வாழ்வுக்கும் சமூக அமைப்புக்கும் உத்தரவாதம் அளிக்கிறது.[5]

இபின் கல்தூனின் புத்தகத்திலிருந்து நான் விரிவாக மேற்கோள் கொடுத்திருப்பதன் காரணம், பதூயின்களைக் கட்டுப்பாடுகளை ஏற்கச்செய்வதிலும், பின்னர் தாம் அமைத்த மத்திய அரசு முறையின் ஆணைக்கு கீழ்ப்படிந்து நடக்கச்செய்வதிலும் முகமது எத்தகைய கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதைக் காட்டவே. மேலும், இவற்றை மனத்தில் கொண்டு பார்த்தால்தான் குற்றமும்-தண்டனையும் பற்றிய இஸ்லாமிய சட்டங்களை அவற்றின் வரலாற்றியல்-சமூகவியல் பின்னணியில் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். இந்தச் சட்டங்கள் பற்றிப் பின் வரும் அத்தியாயங்களில் விரிவாகப் பேசவிருக்கிறோம்.

பதூயின்கள் முக்கியமாக ஒட்டகத்தைச் சார்ந்து வாழ்கிறார்கள். ஒட்டகங்களுக்குத் தேவையான தீவனம் குன்றுப் பகுதிகளில் செடிகளும், புதர்களும் கொண்ட மேய்ச்சல் நிலத்தில் போதிய அளவில் கிடைக்காது என்பதால் அவர்கள் இடம் மாறிச் சென்று கொண்டே இருக்க வேண்டிய தேவை அதிகமாகிறது. மேய்ச்சல் நிலங்களைத் தேடி அவர்கள் பாலைவனத்துக்குள் அதிக தூரம் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. உண்மையில், பதூயின்களுக்கு ஒட்டகங்கள் மிகமிக இன்றியமையாதவையாக இருப்பதால், ஒட்டகத்தின் பல்வேறு இனங்கள், வளர்ச்சி நிலைகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கு அரபி மொழியில் சுமார் ஆயிரம் சொற்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. வாளைக் குறிக்கும் சொற்கள்தான் இதற்கு ஈடாக அதிக அளவில் உள்ளன. இவ்வாறாக ஒட்டகங்களுக்கு உணவு தேட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு பதூயின்கள் அச்சம் தரும் அரேபிய பாலைவனத்தினுள் புகுந்து செல்வதில் தேர்ச்சி பெற்றார்கள். மேற்கு அரேபியப் பாலைவனங்களின் வழியாகச் செல்லும் நெடுந்தூர வர்த்தகச் சாரைகளை

5. மேற்படி, பக்கம் 119.

www.padippakam.com



நடத்திச் செல்வதற்கு அவர்கள் மட்டுமே தகுந்தவர்களாக இருந்தார்கள்.

இந்த இனக்குழுக்களின் நிர்வாக அமைப்பைத் தெரிந்து கொள்வது அவசியம். பேராசிரியர் ஆர்.ஏ.நிக்கல்ஸனின் (Prof. R.A. Nicholson) கூற்றுப்படி "இனக்குழுக்களின் ஆட்சிமுறை அதன் முக்கிய பிரமுகர்களால் வழிநடத்தப்பட்ட ஜனநாயக அமைப் பாகும். அவர்களுடைய அதிகாரமானது, உயர்ந்த குடும்பவழி, உயர்ந்த ஒழுக்க நெறி, செல்வம், ஞானவிவேகம், அனுபவம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் இந்தப் பிரமு கர்கள் தங்கள் இனக்குழுவைச் சேர்ந்த மற்றவர்களுக்குக் கட்டளை இடவோ, தண்டனை விதிக்கவோ துணியமாட்டார்கள். ஒவ் வொரு மனிதரும் தாமே தம்மை ஆட்சி செய்தார்; மற்றவர்கள் தம் மீது ஆட்சி செலுத்த முனைந்தால் அதைக் கண்டிக்கும் சுதந்திரம் இருந்தது. 'நீர் எமது தலைவராயிருந்தால்' (அதாவது ஒரு ஸய்யித் நடந்துகொள்ள வேண்டியபடி விவேக உணர்வுடன் நடந்து கொண் டால்) 'நீர் எம்மை ஆளுவீர்; ஆனால், நீர் கர்வத்துக்கு இரையானால், போய்விடும், கர்வமாயிருந்து கொள்ளும்!' (அதாவது எங்களுக்கு நீர் வேண்டாம்)."[6]

விசுவாசம் என்று பழைய மதத்தைச் சேர்ந்த அரேபியர் கூறு வது மேல் நிலையில் உள்ளவர்களுக்கு விசுவாசமாயிருப்பதல்ல; சமமானவர்களுக்கு விசுவாசத்துடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதே; அது இரத்த உறவுடன் நெருங்கிய தொடர்புகொண்டது. குடும்பம், இனக்குழு —இவற்றை மொத்தமாகவும், இவற்றைச் சேர்ந்தவர் களைத் தனித்தனியாகவும் காப்பது புனிதக் கடமையாக இருந்தது. (இனக்குழு என்பதில், பாதுகாப்பு உடன்படிக்கை அடிப்படையில் அதில் இணைந்து வாழும் அந்நியர்களும் அடங்குவர்). ஒருவர் தமது சொந்தமான மக்களை வாழ்விலும் தாழ்விலும் ஆதரித்து நிற்பதே கௌரவத்தைக் காக்கும் செயலாகக் கருதப்பட்டது.[7] உறவினர் உதவி கோரினால், அது கொடுக்கத்தகுந்ததாக இருந் தாலும், இல்லாவிட்டாலும், உடனடியாகக் கொடுக்கப்பட்டது. தீங்கு செய்தாலும், விசுவாசத்தையும், கௌரவத்தையும் காப்பதற் காக அதை மௌனமாகத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

பதூயின்கள் முறையான மதம் எதையும் பின்பற்றவில்லை. ஏதோ ஒருவகை விதி என்பதை நம்பினாலும் எந்தத் தெய்வத்தை யும் வழிபடவோ, பிரார்த்தனை செய்யவோ இல்லை. அவர்களுக் கெனத் தனிப்பட்ட ஒழுக்க நெறியும் பண்புக் கோட்பாடுகளும்

6. *Hamasa*விலிருந்து R.A.Nicholson தமது A Literary History of the Arabs (Cambridge, 1907) என்ற புத்தகத்தில் (பக்கம் 83) தந்துள்ள மேற்கோள்.

7. மேற்படி, பக்கம் 83.

www.padippakam.com



இப்போதும் காணப்படுகிற, தாராளத்தன்மையை அது எடுத்துக் காட்டுகிறது. ஆயினும், இஸ்லாம் தோன்றுவதற்குச் சற்றுமுன் னால் மக்காவில் தயாள குணம் அரிதாகவே காணப்பட்டது. மக்கா, நாடுகளுக்கிடையிலான வர்த்தகமார்க்கத்தில் முக்கிய நகரப்பகுதி யாக அமைந்திருந்ததும், வர்த்தகச் சமூகமும் மந்தைமேய்த்து வாழும் நாடோடிச் சமூகமும் வெவ்வேறான மதிப்பீடுகளும், நெறி களும் கொண்டிருந்ததும் இதற்குக் காரணம். இந்த இருவகைச் சமூகங்களுக்குமிடையில் இருந்த இந்த முரண்பாட்டைப் புரிந்து கொள்வது, இஸ்லாமை அதனுடைய சரியான சமூகவியல் பின் னணியில் பார்ப்பதற்கு மிகவும் முக்கியமாகும்.

வடக்கு அரேபியாவும் மத்திய அரேபியாவும் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்டவையாகவும், நாகரிகம் இல்லாதவையாகவும் இருந்தன. மக்கா, தாயிஃப் அல்லது மதீனா போன்ற சில இடங்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தன. ஆனால், தெற்கு அரேபியா—இஸ்லாம் தோன்றிய சமயத்தில் சிதைவு பட்ட நிலையில் இருந்தாலும்—புராதன நாகரிகத்தின் முக்கிய மையமாக இருந்தது. அது தனக்கேயுரிய சிறப்பு அம்சங்களைப் பெற்றிருந்தது. உண்மையில் தெற்குக்கும் வடக்குக்கும் இடையில் மிக ஆழமான வேறுபாடு இருந்தது. ஜோயல் கார்மிக்கேல் (Joel Carmichael) "அரேபியர்களின் உருவாக்கம்" (The Shaping of the Arabs) என்ற தமது புத்தகத்தில் கூறுகிறார்: "வடக்கில் வாழ்ந்த மக்கள் நாடோடி வாழ்க்கை முறையையும், தெற்கில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக்கொண்டு நிலைத்து வாழும் வாழ்க்கை முறையையும் கொண்டிருந்தது இந்த வேறுபாட்டுக்கு அடிப் படைக் காரணமாயிருக்கலாம். இந்த இரண்டுக்குமிடையில் இருந்த வேறுபாடு மிக அழுத்தமாகக் காணப்பட்டதால், பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அரேபிய வரலாற்றாசிரியர் இபின் கல்தூன் (Ibn - Khaldūn), உலக வரலாற்றைப் பற்றிய தமது பார்வைக்கு அதையே ஒரு பின்னணியாக வைத்துக் கொண்டார். பதூயின்களுக்கும் நகர்வாழ் மக்களுக்குமிடையில் நிகழ்ந்த செயல்-மறுசெயல் தொடர் களின் விளைவுதான் வரலாறு என்பது அவரது கருத்தாயிற்று."[12] பதூயின்களுக்கும் நகர்வாழ் மக்களுக்குமிடையிலான அடிப் படை வேறுபாடுகளையும் அவர்களுக்கிடையிலான செயல்-மறு செயல் தொடர்களையும் தமது வரலாற்றுக்கு ஆதாரமாக இபின் கல்தூன் எடுத்துக்கொண்டதை ஜோயல் கார்மிக்கேல் குறிப்பிடு கிறார்.

அது மிகவும் சரியானதே. இபின் கல்தூன் இந்த வேறுபாட்டை

12. Joel Carmichael, *The Shaping of the Arabs—A Study in Ethnic Identity* (லண்டன், 1969), பக்கம் 10.

படிப்பகம்

www.padippakam.com



மிக முக்கியமானதாகக் கருதுகிறார். ஏனென்றால், இஸ்லாமின் தோற்றத்துக்கு முன்னும், இபின் கல்தூன் வாழ்ந்த காலத்திலும், உண்மையில் இன்றுவரைக்கும் கூட, அரேபியாவின் சில பகுதிகளில் நாடோடி மக்களுக்கும் நிலைத்துவாழும் மக்களுக்குமிடையிலான தொடர்புகள் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் எழுவதற்குக் காரணமாயிருந்துள்ளன. இஸ்லாமின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் இவை பெரும்பங்கு கொண்டுள்ளன. இந்த வேறுபாடுகளை வலியுறுத்தி இபின் கல்தூன் எழுதுகிறார்:

> பதூயின்கள் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதோடு நின்றுவிடுகிறார்கள் என்றும், அதற்கு மேல் செல்ல முடிவதில்லை என்றும், ஆனால், நிலைத்து வாழும் மக்கள் தங்கள் வாழ்க்கையில் வசதிகளையும் சுகபோகங்களையும் சேர்ப்பதில் அக்கறை கொள்கிறார்கள் என்றும் குறிப்பிட்டோம். அத்தியாவசியத் தேவைகள் வசதிகளுக்கும், சுகபோகங்களுக்கும், முற்பட்டவை என்பதில் சந்தேகமில்லை. அத்தியாவசியத் தேவைகள் ஒருவகையில் அடிப்படையானவை; சுகபோகங்கள் இரண்டாம்பட்சமானவை. எனவே பதூயின்கள், நகரங்களுக்கும் நிலைத்து வாழும் மக்களுக்கும் முந்தியவர்கள்—அடிப்படையானவர்கள். பாலைவன வாழ்வின் கடினம் நிலைத்த வாழ்வின் மென்மைக்கு முற்பட்டது. ஆதலால் நகர வாழ்க்கைக்கு மாறுவதே பதூயின்கள் நாடுகின்ற குறிக்கோளாகக் காணப்படுகிறது.[13]

முஸ்லிம்களின் புனிதநூலான குரானில் பதூயின்கள் பற்றியும் நகர்வாழ் மக்கள் பற்றியும் குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றன. குரான் கூறுகிறது: "பாலைவன அரேபியர்கள் நம்பாமையிலும் வெளிவேஷத்திலும் நகரத்தில் வசிப்பவர்களை மிஞ்சுகிறார்கள். அல்லாஹ் தனது தூதருக்கு வெளிப்படுத்திய சட்டங்களை அவர்கள் அறியாமலிருப்பதற்குக் காரணங்கள் அதிகம் உள்ளன. அல்லாஹ் முற்றும் அறிந்தவன், ஞானமுள்ளவன். பாலைவன அரேபியர் சிலர் அல்லாஹ்வுக்காகக் கொடுப்பதை அபராதமாகக் கருதுகிறார்கள். உங்களுக்குக் கேடு வருமென்று காத்திருக்கிறார்கள். கேடு அவர்களுக்கே. அல்லாஹ் எல்லாவற்றையும் செவியேற்கிறான்; முற்றும் அறிந்தவன்."[14] இந்த வசனங்களில் நகரவாசிகளின் வழக்கப்படி நாடோடி பதூயின்கள் பற்றி இளக்காரமான இகழ்ச்சியும், அவர்களை நம்ப முடியாது என்ற கருத்தும்

13. Khaldūn, மேலே குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 93.
14. குரான், 'பாவமீட்சி' என்ற அத்தியாயம், வசனம் 97,98.

www.padippakam.com



வெளிப்படுகின்றன. முகமது ஒரு நகரவாசி என்பதால் இயல்பாகவே பதூயின்கள் பற்றி ஐயப்பாடு கொண்டிருந்தார். அதேபோல பதூயின்கள் பாலைவன வாழ்க்கையின் சுதந்திரத்துக்குப் பழக்கப் பட்டிருந்ததால் அவர்கள் மீது முகமது ஏற்றவிரும்பிய கட்டுப் பாட்டை ஏற்க எளிதில் இணங்கவில்லை. அதனால்தான் அவர்கள் மீது இவ்வாறு விரோதம் உள்ளடங்கியிருக்கிறது. ஆயினும் முகமதுவுக்கு அவர்களை முற்றிலும் பிடிக்காமலில்லை; இஸ்லா மின் வரம்புக்குள் அவர்களைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். எனவே குரானின் பல வசனங்கள் அவர்களை விளித்துக் கூறுவனவாக, அறிவுரை கூறுவனவாக, அல்லாஹ் கொடுத்துள்ள கொடைகளை நினைவுப்படுத்துவனவாக உள்ளன. “அல்லாஹ் நீங்கள் வசிப்பதற்கு வீடுகள் கொடுத்திருக் கிறான். கூடாரங்கள் அமைக்க மிருகங்களின் தோலைக் கொடுத்திருக் கிறான். உங்களுடைய பயணங்களில் எடுத்துச் செல்ல இலேசாக வும் தங்குமிடத்தில் அடித்துக்கொள்ள எளிதாகவும் அவை உள்ளன. அவற்றின் கம்பளியும் உரோமத்தோலும் உரோமமும் உங்களுக்கு இதந்தருவனவாகவும் வீட்டுப்பொருள்கள் செய்ய உதவுவனவாகவும் உள்ளன” என்று குரான் பதூயின்களை விளித்துக் கூறுகிறது.[15] மற்றோரிடத்தில் அது கூறுகிறது: “கால்நடைகளிலும் உங்களுக்கு நல்ல படிப்பினை உள்ளது. அவற்றின் வயிற்றில் குட லுக்கும் இரத்த ஓட்டத்துக்கும் இடையிலிருந்து, அருந்துபவர் களுக்கு இனிமையானதாயிருக்கும் தூய்மையான பாலை நாம் கொடுத்திருக்கிறோம். பேரீச்சையின் பழங்களும் திராட்சை பழங் களும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அவற்றிலிருந்து உங் களுக்கு நல்ல உணவும் மதுவும் கிடைக்கின்றன. அறிவுடையோர் தெரிந்துகொள்வதற்கு இவற்றில் அத்தாட்சிகள் உள்ளன.”[16]

இதிலிருந்து குரான் நாடோடி மக்களையும், நகர்வாழ் மக்களை யும் வேறுபடுத்திப் பார்ப்பது தெளிவாகிறது. இந்த இரு பிரிவினரும் அல்லாஹ்வின் சட்டங்களைப் பின்பற்றச் செய்வதற்கு இருதரப்பினரை யும் நோக்கிப் பேசுகிறது. இதற்காக இயற்கையான வாதங்களை அது எடுத்துரைக்கிறது. இந்த வசனங்கள் பதூயின்களின் பொருளா தாரம் எப்படி இருந்தது என்பதையும் புலப்படுத்துகின்றன.

தெற்கு அரேபியா பற்றி நாம் பேச வந்த விஷயத்தை மீண்டும் பார்ப்போம். அந்தப் பகுதியில் மிக வளர்ச்சியடைந்த ஸபீயன் (Sabaean), மினீயன் (Minaean), கடபேனியன் (Qatabanian) நாகரிகங் கள் நிலவியிருந்தன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். விவ சாயத்தையும், இலவங்கப்பொருள்கள் வர்த்தகத்தையும் அடிப்படையாகக்

15. மேற்படி. ‘தேனீ’ என்ற அத்தியாயம், வசனம் 80.
16. மேற்படி. ‘தேனீ’ என்ற அத்தியாயம், வசனம் 66,67.

www.padippakam.com



கொண்டு அமைந்தவை இந்த நாகரிகங்கள். வெளியுலகுடன் வர்த்தகம் மூலம் கிறிஸ்தவ சகாப்தத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் செல்வச்செழிப்புடன் வாழ்ந்தனர். தென்பகுதியில் அமைந்த அரபு முடியரசுகள் ஆறுகளில் அணைகள் கட்டின; கோட்டைகளும், ஆலயங்களும் எழுப்பின; நாட்டின் விவசாயத்தை மிகச் சிறப்பான அளவுக்கு வளர்த்தன. இந்தத் தென்திசை நாகரிகங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்த போதிலும், ஐரோப்பிய மாதிரியிலான நிலப்பிரபுத்துவ முறையின் அடையாளங்கள் காணப்படவில்லை. அங்கு ஆண்ட மன்னர்கள், ஆன்மீகத்திலும் சமயச்சடங்கிலும் அதிகாரம் கொண்டிருந்த எகிப்திய மன்னர்களைப் போல் இருந்ததாகத் தோன்றுகிறது. பிரெஞ்சு இஸ்லாமியலாளர் மாக்ஸிம் ராடின்ஸன் (Maxime Rodinson) "முகமது" என்ற வாழ்க்கை வரலாற்று நூலில் தெற்கு அரேபியா பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> ஸாரஸன்களின் நாடுகளிலிருந்து மாறுபட்டதாக இருந்த மற்றொரு அம்சம், பரவலான ஒரு மதநம்பிக்கை இருந்ததாகும். செல்வம் மிகுந்த பல ஆலயங்கள் இருந்தன; அவற்றில் பணி புரியப் புரோகிதர்கள் இருந்தார்கள். இவர்களுக்குச் சமூகத்தில் முக்கிய பங்கு இருந்தது. ஆலய வழிபாட்டில் நறுமணப் பொருள்கள், நிவேதனங்கள், உயிர்ப்பலிகள், பிரார்த்தனைகள், தலயாத்திரைகள் (யாத்திரைக் காலத்தில் பாலுறவு தடை செய்யப்பட்டது) ஆகியவை இடம் பெற்றிருந்தன. தூய்மை, தூய்மையின்மை பற்றிப் பல விதிகள் இருந்தன. இவற்றை மீறுவோர் அபராதம் செலுத்துவதோடு தமது பிழையைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் வெண்கலப்பலகைகளில் பொறிக்கப்பட்டு ஆலயங்களில் வைக்கப் பட்டன. இறந்தவர்களின் உடல்களோடு பாத்திரங்களும் வீட்டுப் பொருள்களும் புதைக்கப்பட்டன. இறந்தவர்களைக் குறிக்கும் உருவச்சின்னங்களுடன் "ஸ்டெலீ" (Stelae) என்ற நினைவிடங்கள் அமைக்கப்பட்டன. அவர்களுக்கு நிவேதனங்களும் அளிக்கப்பட்டிருக்கலாம்.[17]

தென்பகுதியைச் சேர்ந்த அரேபியர்கள் பல தேவர்களையும் தேவதைகளையும் வழிபட்டனர். இவர்களில் மிக முக்கியமான "அத்டர்" ('Athtar) சுக்கிரனின் உருவகமாகக் கருதப்பட்டது. சந்திரதேவன் ஒருவரையும் அவர்கள் வழிபட்டார்கள். இந்த தேவன் ஸபா (Saba)வில் "அல்மக்கா" (Almaqah) என்றும், மாயினில் (Ma'in) "வாத்"

17. Maxime Rodinson, *Muhammad,* பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்ப்பு A. Carter (லண்டன், 1974) பக்கம் 22.

www.padippakam.com



இருந்தன. நாடோடிச் சமூகத்தில் கூட்டு வாழ்க்கை முறையும், அதன் எழுதப்படாத, ஆனால் கண்டிப்பாகப் பின்பற்றப்படுகிற நடத்தை நெறிகளும் தனிநபர்களுக்கிடையே போராட்டங்கள் எழுவதைத் தடுக்கின்றன. ஆயினும் இனக்குழுக்களிடையே தோன்றும் போராட்டங்களால் நீண்டகாலப் பகைமையும், போர்களும் உருவாகின்றன. இனக்குழுச் சமூகத்தில் தனிநபர்வாதத்துக்கு ஊக்கமளிக்கப்படாமல் கூட்டு வாழ்வுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் இனக்குழுவுக்கும், தனிநபருக்கும் இடையே தோன்றும் போராட்டங்கள் குறைக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சமூகத்தில் பெரும் நாடகங்களோ, காவியமோ தோன்றாது. இவை தோன்றுவதற்கு அடிப்படையான தனிநபர் போராட்டத்துக்கு இந்தச் சமூகத்தில் இடமில்லை. இஸ்லாமுக்கு முந்திய "ஜாஹில்லியன்" (jāhilliyyan) கவிதையில் கூடத் தனிநபர் போராட்ட நாடகப்பண்பு இல்லை. மாறாக, அது இனக்குழுக்களின் புகழைப் பாடுவதுடன், தீரம், தாராளம், கௌரவம், குடிவழிப்பெருமை ஆகிய பண்புகளைப் புகழ்கின்றது. புகழ்பெற்ற இஸ்லாமியல் அறிஞர் டபிள்யூ. மாண்ட்காமரி வாட் கூறுகிறார்:

> அரேபியர்கள் வாழ்க்கையில் பின்பற்றிய மதத்தை 'இனக்குழு மனிதநேயம்' என்று கூறலாம். இதன்படி மனிதனின் சிறப்புத் திறன்களை, அதாவது, ஆண்மை, மனவலிமை பற்றி அரேபியர்களின் லட்சிய உருவகத்தின் எல்லாப் பண்புகளையும் வெளிப்படுத்துவதே வாழ்க்கையின் பொருளாகக் கருதப்படுகிறது. இந்தச் சிறப்பு இனக்குழுவுக்குச் சொந்தமேயன்றி, எந்தத் தனிநபருக்கும் அல்ல. இந்தப் பண்புகள் யாரேனும் தனிநபரின் வாழ்வில் காணப்பட்டால், அந்தப் பண்புகளை உடைய இனக்குழுவின் உறுப்பினராக அவர் இருப்பதால் அவரிடம் அவை இருப்பதாகக் கருதப்படும். தனிநபரின் மனத்தில் இனக்குழுவின் கௌரவத்தைப் பற்றிய எண்ணமே மேலெழுந்து நிற்கும். அது கௌரவத்துடன் விளங்கினால்தான் வாழ்க்கைக்கே அர்த்தம் இருக்கிறது. அதற்குக் கௌரவக் குறைவையும், அவமானத்தையும் கொண்டுவரும் எதையும் எப்பாடுபட்டாகிலும் தவிர்க்க வேண்டும்.[8]

பதூயின்கள் வீரம், தீரம், கௌரவம் போன்ற சில பண்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைக் காட்ட, க்ளப் பாஷா (Glubb Pasha) தம்முடைய "முகமதுவின் வாழ்வும் காலநிலையும்" (The Life and Times of Muhammad) என்ற தமது புத்தகத்தில் குறிப்பிடும் ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறலாம்:

8. W.Montgomery Watt, *Muhammad, Prophet and Statesman* (லண்டன், 1961) பக்கம் 51.

படிப்பகம்

www.padippakam.com



புகழ்பெற்ற போர்வீரரும், கவிஞருமான துரயித் இபின் அல்-ஸிம்மா (Duraid ibn al-Simma) முதுமையடைந்து முஸ்லிம் காலம் தொடங்கியபின்வரை வாழ்ந்தவர். இளமைக் காலத்தில் ஒருநாள் அவர் பேனி கினனா (Beni Kinana)வுக்கு எதிராகக் கொள்ளைத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்று கொண் டிருந்தார். மொட்டையான ஹிஜாஸ் (Hijāz) மலைக் கணவாயின் முகட்டில் அவர் சென்றுகொண்டிருந்த போது கீழே திறந்த பள்ளத்தாக்கில் ஒரு குதிரைவீரன் கையில் ஈட்டியுடன் ஒட்டகத்தின் தலைக்கயிற்றைப் பிடித்து நடத்திச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தார். ஒட்டகத்தின் மேல் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். துரயித் தமது ஆட்களில் ஒருவரைக் கூப்பிட்டு அந்தக் குதிரை வீரனிடம் விரைந்து சென்று, தாக்குதல் கூட்டம் வருவதாகவும், பெண்ணையும் ஒட்டகத்தையும் விட்டுவிட்டு ஓடிப்போய் உயிர் பிழைக்குமாறும் உரக்கக் கூறுமாறு சொன்னார். அவ் வாறே அந்த ஆள் தமது குதிரையைச் செலுத்திக் கூவிக்கொண்டு சென்றான். குதிரைவீரன் அமைதியாக ஒட்டகக்கயிற்றைப் பெண்ணின் கையில் கொடுத்துவிட்டு, குதிரையைத் திருப்பி, குதிரையில் வருபவனை நோக்கித் தாவிச் சென்று, ஈட்டியை அவன் நெஞ்சில் பாய்ச்சிக் குதிரையிலிருந்து கீழே வீழ்த்தினான். பின் திரும்பிச்சென்று ஒட்டகக்கயிற்றைத் தன் கையில் வாங்கிக் கொள்ள, இருவரும் ஏதும் நடவாதது போல் தொடர்ந்து சென்றார்கள்.

துரயித் கணவாய் வழியே இறங்கித் தமது குதிரையைச் செலுத்திச் சென்ற போது அந்தப் பயணிகள் இருவரும் அவர் பார்வையில் படவில்லை. ஆனால் தாம் அனுப்பிய வீரன் திரும்பி வராததால் மற்றொரு வீரனை அனுப்பினார். அவனையும் அந்தக் குதிரைவீரன் முன் போலவே குத்தித் தள்ளினான். மூன்றாவதாக ஒரு வீரனுக்கும் இதேகதி நேர்ந்தது. ஆனால், இந்த முறை குதிரை வீரனின் ஈட்டி எதிரி வீரனின் உடலில் பாய்ந்த போது ஒடிந்து போயிற்று. கையில் ஆயுதம் ஏதும் இல்லாமல் குதிரைவீரன் மீண் டும் பெண் அமர்ந்துள்ள ஒட்டகக்கயிற்றைப் பிடித்துக்கொள்ள அவர்கள் பயணம் தொடர்ந்தது.

அருகருகே அவர்கள் சவாரி செய்த போது குதிரைவீரன் பின் வரும் கவிதையைப் பெண்ணிடம் கூறினான்:

அமைதியாகச் சவாரிசெய், என் அழகுப்பெண்ணே
பாதுகாப்பாய் பத்திரமாய் அமைதியாய்.

www.padippakam.com



நம்பிக்கை, மற்றும் மலர்ச்சிகொள்
அச்சம் எதுவும் வேண்டாம்.
எதிரியிடமிருந்து நான் ஓடமுடியாது
அவன் என் ஆயுதத்தைச் சுவைக்கும்வரை.
என் தாக்குதலின் வேகத்தைக் காண்பான்
யாரும் உனக்கு தீங்கிழைக்க வந்தால்.

மூன்று வீரர்களும் திரும்பி வராததைக்கண்டு வியப்படைந்த துரயித் தாமே குதிரையில் விரைந்தார். மூன்று வீரர்களின் உடல் களையும் வழியில் அடுத்தடுத்துக் கண்டார். தமக்கு முன்னே அந்தக் குதிரைவீரன் ஆயுதமற்றவனாய், நடைவேகத்தில் குதிரையைச் செலுத்திக்கொண்டு, பெண் அமர்ந்துள்ள ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்து நடத்திச் செல்வதைக் கண்டார்.

குதிரைவீரன் தமது எதிரியே என்றாலும் அவனது அஞ்சா நெஞ்சம் கண்டு வியப்பு நிறைந்து துரயித் அவனருகே குதிரையைச் செலுத்தினார். "வீரனே, உன்னைப்போன்ற ஒருவனுக்கு மரணத்தைத் தரக்கூடாது. ஆனால் என் ஆட்கள் பின்னே வந்து கொண்டிருக் கிறார்கள். நீயோ நிராயுதபாணியாக இருக்கிறாய். என் ஈட்டியைப் பெற்றுக்கொள், நண்பனே. என் ஆட்கள் உன்னைத் தொடராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்," என்று அவர் கூறினார்.[9]

இங்கு நாம் மேற்கொண்டிருக்கும் ஆய்வின் நோக்கத்துக்கு அரேபியர்களின் விருந்தோம்பல் மற்றும் தாராளகுணம் பற்றிச் சிறிது காண்பது அவசியம். இதற்கும் க்ளப் பாஷா (Glubb Pasha)வின் புத்தகத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் காட்டலாம். அவர் எழுதுகிறார்:

> இஸ்லாம் தோன்றுவதற்கு முந்தைய ஆண்டுகளில் பதூயின் பிரமுகர்களில் மிகவும் புகழ்பெற்று விளங்கியவர் தாயி (Tā'ī) இனக்குழுவைச் சேர்ந்த ஹாதிம் இபின் அப்துல்லா (Hātim ibn 'Abdullah). அநாதையான ஹாதிமை அவரது தாத்தா வளர்த் தார். அவருக்கு வயது வந்து தமது தந்தையின் மந்தைகளுக்கு உரிமையாளரானதும் விருந்தினர்களுக்காக நிறைய மிருகங் களை வெட்டிக்கொண்டே வந்ததனால் வெகுவிரைவில் அவர் ஏழையாகிவிட்டார். ஒருநாள் அவரிடம் வந்த மூன்று விருந்தினர்களுக்கு உணவு படைக்க மூன்று ஒட்டகங்களை வெட்டினார். அந்த மூவரும் புகழ்பெற்ற கவிஞர்கள். அவர்களில் ஒருவரான நபிகா அல்-தோபியானி (Nabigha al-Dhobiani) என்பவர் தமக்கு விருந்தளித்த இளைஞரையும்

9. கிளப் பாஷா, The Life and Times of Muhammad (லண்டன், 1970), பக்கம் 31-2

www.padippakam.com



அவரது இனக்குழுவையும் புகழ்ந்து கவிதை ஒன்றைப் புனைந்தார். 'உங்களிடம் கனிவு காட்டும் எண்ணத்தில் நான் இருந்தேன். ஆனால், நீங்கள் புனைந்த கவிதை என்னை கடன்பட்டவனாக்கி விட்டது,' என்று ஹாதிம் கூறி, அதற்காகத் தம்மிடம் உள்ள எல்லா ஒட்டகங்களையும் அந்தக் கவிஞர்கள் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கொடுத்துவிட்டார்.

சற்று நேரத்தில் அவரது தாத்தா அங்கு விரைந்து வந்து ஒட்டகங்கள் எங்கே என்று கோபத்துடன் கேட்டார். 'நான் அவற்றைக் கொடுத்துவிட்டேன்,' என்றார் ஹாதிம். 'நான் அவற்றை வைத்திருந்தால் இருபது வருடங்களில் எல்லாம் இறந்து விடும். ஆனால், அவற்றுக்கு மாற்றாக நமது குடும்பத்தைப் புகழ்ந்துகூறும் கவிதை ஒன்றைப் பெற்றிருக்கிறேன்; அது வாய் வழிச் செய்தியாகப் பரவி காலம் உள்ளளவும் நிலைத்திருக்கும்.'[10]

ஹாஃபிஸ் பின் கதீரும் (Hāfiz bin Kathīr) தமது புத்தகத்தில் ஹாதிம் தாயியைப் பற்றித் தனியாக ஒரு அத்தியாயம் எழுதியிருக்கிறார். அதில் அவர் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். அரேபியர்களில் அவரைவிட அதிகத் தாராள குணம் உள்ளவர் யாரேனும் இருக்கிறார்களா என்று ஹாதிம் தாயியிடம் கேட்கப்பட்ட போது அரேபிய மக்கள் அனைவருமே தாராள குணம் உள்ளவர்கள் என்று பதிலளித்து ஒரு கதையைக் கூறியதாக அவர் குறிப்பிடுகிறார். 'ஒரு முறை நான் ஒரு அநாதைச் சிறுவனுடன் தங்கியிருந்தேன். அவனிடம் 100 வெள்ளாடுகள் இருந்தன. அவன் எனக்காக ஒரு ஆட்டை வெட்டி விருந்தளித்தான். நான் உண்ணும் போது அதன் மூளை மிகவும் சுவையாக இருப்பதாகப் பாராட்டினேன். அந்தப் பையன் மேலும் மேலும் அதைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருந்தான். கடைசியில் நான், போதும் என்று கூறினேன். காலையில் நான் எழுந்த போது அவன் தன்னுடைய ஆடுகள் அனைத்தையும் வெட்டி விட்டான் என்றும் ஒன்றுகூட மிச்சமில்லை என்றும் அறிந்தேன். ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்ட போது, "ஒன்றுமே செய்யாமல் உங்களுடைய நன்றிக்கு நான் எப்படித் தகுதியாக முடியும்?" என்று பதிலுரைத்தான். அதன்பின் என்னிடமிருந்த நூறு ஒட்டகங்களில் மிகச் சிறந்ததை அவனுக்குக் கொடுத்தேன்.'[11]

ஹாதிம் தாயியின் தாராள குணம் எல்லோரிடமும் தவறாதிருந்தது எனக் கூற முடியாது என்றாலும், அது விதிவிலக்காக அவரிடம் காணப்பட்டதும் அல்ல. பொதுவாக பதூயின் மக்களிடம் காணப்பட்ட,

10. மேற்படி, பக்கம் 32—3
11. Hāfiz Ibn Kathīr, *Al-Bidāyah wa Al-Nihāyah* Vol.1, (Dar al-Fikr al-'Arabi, (Cairo, n.d.), பக்கம் 216.

www.padippakam.com



அதனுடன் இணைந்ததாகக் கருதப்பட்டதால் அவர் அதற்கெதிராக யூதமதத்தை ஆதரித்தார். கிறிஸ்தவர்களைக் கொடுமைப் படுத்தினார். கி.பி.523 அக்டோபரில் நஜ்ரானில் கிறிஸ்தவர்கள் பலரைப் படுகொலை செய்தார். எல்லா இடங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களின் பாதுகாவலராகக் கருதப்பட்ட ரோமச் சக்கரவர்த்தி முதலாவது ஜஸ்டினிடம் (Justin I) இது பற்றி முறையிடப்பட்ட போது அபிஸினியாவின் ஆட்சியாளர் "நீகஸ்" (Negus)-க்கு நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார். நீகஸ், 70,000 அபிஸினியர்கள் கொண்ட படையை செங்கடல் கடந்து அனுப்பிவைத்தார். இதில் பன்னாட்டு அரசியல் சதுரங்கத்தின் அனைத்து உத்திகளும் செயல்பட்டன. பைஸாண்டியம், அபிஸினியர்கள் மூலமாக அரேபிய இனக்குழுக்கள் மீது ஆதிக்கம் பெற்று அவர்களைப் பாரசீகப் பேரரசுக்கு எதிராகப் பயன்படுத்த முயன்றது. அபிஸினியர்கள் வெற்றி பெற்றார்கள். நீகஸின் துணை ஆட்சியாளர் அப்ரஹா, து-நுவாஸைத் துரத்தியடித்தார். துரத்தப்பட்டு ஓடியவர் தமது குதிரையுடன் செங்கடலில் குதித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.[23] இவ்வாறாக யேமனில் புகழ்பெற்ற ஹிம்யரைட் மன்னர்களின் ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்தது.

அப்ரஹா, ஆறாவது நூற்றாண்டின் இறுதிவரை யேமனில் ஆட்சி செலுத்தி, அதை ஒரு அபிஸினியக் குடியேற்ற நாடாக மாற்றியதாகச் சில வரலாறுகள் கூறுகின்றன. ஸனா (San'ā)வில் அவர் கட்டிய கிறிஸ்தவப் பேராலயம் அந்தக் காலத்தில் இருந்த எழில்மிக்க பேராலயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. அந்தப் பேராலயத்தை அவர் கட்டியதற்கு மதமும் பொருளாதாரமும் காரணங்களாகும். மதத்தை விடப் பொருளாதாரமே முக்கிய காரணமாக இருந்தது எனலாம். தீர்க்கதரிசியின் முதலாவது வாழ்க்கை வரலாற்றை எழுதிய இபின் இஸ்ஹாக் கூறுகிறார்: "பின்பு அப்ரஹா ஸனாவில் உள்ள பேராலயத்தைக் கட்டினார், அந்தக் காலத்தில் உலகில் வேறு எங்குமே அதுபோன்ற ஆலயத்தைக் காண முடியாது. அவர் "நீகஸி"க்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்: 'மன்னரே, நான் உங்களுக்காக ஓர் ஆலயம் கட்டியிருக்கிறேன். உங்களுக்கு முன் இருந்த எந்த மன்னருக்கும் இப்படிப்பட்ட ஆலயம் கட்டப்பட்டதில்லை. அரேபியர்களின் தலயாத்திரையை இந்த ஆலயத்துக்குத் திருப்பிவிடும் வரை நான் ஓயமாட்டேன்."[24] மக்கா நகரம் (இதைப் பற்றிப் பின்னர் விரிவாகக் காணவிருக்கிறோம்) பன்னாட்டு

23. மேற்படி, பக்கம் 124-5

24. *The Life of Muhammad* – A translation of Ibn Ishaq's *Sirat Rasul Allah* A. Guillaume (Oxford University Press, Karachi, 1978) பக்கம் 21.

www.padippakam.com



வர்த்தகத்துக்கு முக்கிய கேந்திரமாகவும் அரேபியர்களின் பழைய மதத்துக்கு ஒரு முக்கிய யாத்திரைத்தலமாகவும் இருந்தது. வர்த்தகத்துக்காகவும் தெய்வ வழிபாட்டுக்காகவும் ஏராளமான அரேபியர்கள் மக்காவுக்குச் செல்லுவது வழக்கமாயிருந்தது. அதனால் அங்கு வருமானம் மிகுதியாகக் கிடைத்தது. மக்காவில் அரேபியர்கள் வழிபட்ட காபா (Ka'ba)வை விஞ்சுவதாகத் தமது ஸனா ஆலயம் இருக்க வேண்டும் என்றும், வர்த்தகக்கேந்திரமாகவும் மதத்தலமாகவும் மக்காவுக்குப் போட்டியாக ஸனா இருக்க வேண்டும் என்றும் அப்ரஹா விரும்பினார். இதில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார். இந்த மத-பொருளாதாரப் போட்டியின் காரணமாக ஃபுகைம் (Fuqaym) இனக்குழுவைச் சேர்ந்த இரண்டு மக்கா அரேபியர்கள் ஸனா பேராலயத்தை ஒரு திருவிழாவின் போது அசுத்தப் படுத்தியதாக ஒரு கர்ணபரம்பரைச் செய்தி வழங்குகிறது. ஆலயத்தின் புனிதத்தைக் கெடுக்கும் இந்தச் செயலால் சினமடைந்த அப்ரஹா மக்காவில் உள்ள அரேபியர்களின் ஆலயத்தை அழித்து மக்களுக்குப் பாடம் கற்பிக்க மக்கா மீது படையெடுத்துச் சென்றார். அவரது படையில் யானைகள் இருந்ததால் மக்காவின் வரலாற்றில் அந்த ஆண்டு "அம் அல்-ஃபீல்" (யானை ஆண்டு) என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அப்ரஹாவின் படையினரிடையே அம்மை நோய் பரவியதால், சேதம் ஏதும் விளைவிக்காமல் பின் வாங்கிச் செல்லும்படி ஆயிற்று. (அம்மைநோயைக் குரான் சிறிய கூழாங்கற்கள் - "ஸிஜீல்" - ''Sijjil'' என்ற உருவகத்தால் குறிக்கிறது). குரானில் "யானை" என்ற தலைப்புள்ள அத்தியாயத்தில் இந்த நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. குரான் கூறுகிறது: "யானைகளுடன் வந்த படையை அல்லாஹ் என்ன செய்தான் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவில்லையா? அவர்களது சூழ்ச்சியை முறியடிக்க அவன் பறவைக்கூட்டத்தை அனுப்பிவைக்க, அந்தப் பறவைகள் அவர்கள் மீது களிமண் உருண்டைகளை வீசி எறிந்தன அல்லவா? அதனால் அவர்கள் மாடுமேய்ந்த செடிகளைப் போல ஆகிவிடவில்லையா?"[25] அப்ரஹாவின் படையெடுப்பு தோல்வியடைய வேண்டும் என்பது கடவுளின் சித்தம் என்பது குரானின் கருத்து. அவர் தமது இல்லத்தை, அதாவது "காபா"வைக் காப்பாற்றிக் கொண்டார். அதே ஆண்டில், அதாவது, கி.பி.570-71-இல் தீர்க்கதரிசி முகமது பிறந்தார்.

தெற்கு அரேபியாவின் செல்வச்செழிப்புக்கு யேமன் வழியாக நடைபெற்ற பன்னாட்டு வர்த்தகம் மட்டுமின்றி, பாசனத்துக்குத்

25. குரான், அத்தியாயம் 105.

படிப்பகம்

www.padippakam.com



தண்ணீர் வழங்கிய மாரிப் (Mā'rib) அணையும் பெரிதும் ஆதாரமாக இருந்தது. இஸ்லாம் தோன்றுவதற்கு முன் இந்த அணை பயன்படுத்தப்படாமல் பாழடைந்து, பல இடங்களில் உடைப்புகளும் ஏற்பட்டிருந்தன. யேமனின் செல்வச்செழிப்பு சீர் குலைந்து மக்கள் வாழ்க்கைக்கு வழிதேடி வடக்கு நோக்கி இடம் பெயர்ந்து செல்லத் தொடங்கியதற்கு இதுவும் ஒரு காரணம். வரலாற்றுக் காலங்களில், தெற்கு அரேபியாவிலிருந்தும் மத்திய அரேபியாவிலிருந்தும் அரேபியர்கள் வறுமையாலும் பசியாலும் உந்தப்பட்டு, மக்கள் குடியமர்ந்து வாழ்ந்த செழிப்பான பிறை வடிவப் பகுதிக்குள் அலையலையாகச் செல்லத் தொடங்கினார் கள். குடியமர்ந்த பகுதிகளும், பாலைவனச்சோலைகளும் குறைந்த அளவிலேயே மக்கள் வாழ்வுக்கு இடமளிக்க முடியும். சமவெளி களின் மேய்ச்சல் நிலங்களில் ஒரு வரம்புக்கு உட்பட்டே ஒட்டகங் களும் ஆட்டுமந்தைகளும் மேய்ந்து வாழ முடியும். இந்த அளவு களுக்கு மேலாகும் போது, போர் தொடுத்துப் பிறமக்களின் நாட்டைக் கைப்பற்றுவது, குடியமர்ந்த பகுதிகளை ஆண்டுதோறும் கொள்ளை யிடுவது போன்றவையே பட்டினியைத் தவிர்க்க மாற்று வழிகளா கின்றன.

இஸ்லாம் பாலைவன மக்களான பதூயின்களின் உதவியுடன் வடகிழக்கிலும் வடமேற்கிலும் பெரிய வெற்றிகள் பெற்று நாடு களைக் கைப்பற்றியதும் கூட, நிலத்தின் மீது அதிக நெருக்குதல் ஏற்பட்டு, வடக்கு நோக்கிப் பெருந்தொகையில் மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிகழ்ச்சிகளின் வெளிப்பாடே என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். அரேபியர்களின் வரலாற்றில் மீண்டும்மீண்டும் இவ்வாறு நடந்திருக்கிறது. தெற்கில் இத்தகைய அபாயம் ஏற்படும் போதெல்லாம் மக்கள் உணவு தேடி வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். "மாரிப்" அணை உடைந்தது இத்தகைய அபாயங்களில் ஒன்றாகும். இஸ்லாமிய இலக்கியத்தில் இந்த நிகழ்ச்சி அழியா இடம் பெற்றுவிட்டது. இந்த நிகழ்ச்சி இஸ்லா முக்கு 400 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக அல்-இஸ்ஃபஹானி (Al-Isfahani) தம்முடைய வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். கி.பி.961-இல் எழுதி முடிக்கப்பட்ட இந்த நூலின் எட்டாவது புத்த கத்தை அவர் ஹிம்யரைட் மன்னர்களின் ஆட்சியைப் பற்றிக் கூறுவதற்கு ஒதுக்கியிருக்கிறார். ஆனால், இது அபிஸினியர்களின் ஆட்சிக்காலத்தில் நடந்ததாக யகூட் (Yaqūt) கூறுவதே அதிக உண்மையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அதன்பின் உடைப்பு அடைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் இறுதி யாக நடந்த பேரழிவு குரானில் (அத்தியாயம் 34, வசனம் 15)

www.padippakam.com



பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

"ஆனால் அவர்கள் புறக்கணித்தார்கள். எனவே நாம் அவர்கள் மேல் அணையின் தண்ணீரைத் திறந்துவிட்டு, அவர்களு டைய தோட்டங்களுக்குப் பதிலாக கசப்பும் புளிப்பும் உடைய பழங்களைத்தரும் மரங்களையும் சில இலந்தைப் புதர்களையும் கொண்ட இரண்டு தோட்டங்களை வைத்தோம். அவர்களு டைய நன்றியறிவின்மைக்காக அவர்களைத் தண்டித்தோம். நன்றி மறப்பவரையன்றி நாம் தண்டிப்பதில்லை." இந்த நிகழ்ச்சி கி.பி.542-க்குப் பின், கி.பி.570-க்கு முன் நடந்திருக்கலாம் என்று ஹிட்டி கூறுகிறார். இந்த அணையுடைப்பு முன்னே குறிப்பிட்டது போல, தெற்கு அரேபியாவின் நிலைத்து வாழும் நாகரிகத்துக்குப் பெரிய அடியாக விழுந்தது. தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களில் புகழ்பெற்ற மற்றொருவரான ஹிஷாமும் (Hisham), மாரிப் அணை உடைந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். அவர் கூறுகிறார்: "உம்ரு பின் ஆமிர் ('Umru bin 'Āmir') யேமனிலிருந்து வெளியேறிச் சென்றதற்கான காரணத்தை அபு ஜைத் அன்ஸாரீ (Abu Zaid Ansārī) என்னிடம் பின்வருமாறு விளக்கினார்: தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த அணையில் ஒரு காட்டெலி வளை தோண்டிக் கொண்டிருப்பதை அவர் பார்த்தார். நிலங்களுக்குப் பாசனம் வேண்டும் போது அந்தத் தண்ணீரைத்தான் பாய்ச்சி வந்தார்கள். அந்த அணை இந்த நிலைமையில் (ஒரு எலி அதில் வளை தோண்டிக் கொண்டிருந்த நிலைமையில்) பத்திரமாக இருக்க முடியாது என்பதை உம்ரு புரிந்துகொண்டார். அதனால் அவர் யேமனை விட்டு வேறு எங்காவது சென்றுவிட முடிவுசெய்தார்... அந்தச் சமயத்தில் பனி ஆஜாதும் (Bani Āzad) உம்ரு பின் ஆமீர் போன பிறகு நாங்கள் இங்கே வாழமாட்டோம் என்று கூறினார். எனவே அவர்களும் தங்கள் உடைமைகளையெல்லாம் விற்றுவிட்டு அவருடன் புறப்பட்டுச் சென்றார்கள்."[26] பேராசிரியர் ஆர்.ஏ. நிக்கல்ஸன் (Prof. R.A. Nicholson) கூறுகிறார்: "மாரிப் அணைக்கட்டு உடைந்ததைப் பற்றி அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. யேமனைச் சேர்ந்த பல இனமக்கள் பெருமளவில் வடக்கு நோக்கிச் செல்வதற்கு அது காரணமாயிருந்தது. இவ்வாறு சென்றவர்கள் இடையில் ஹிஜாஸில் . (Hijāz) தங்கினார்கள். அங்கு "ஜுர்ஹுமைட்களை"க் (Jurhumites) கொன்றொழித்த பிறகு வடக்கு நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இவர்களில்

26. பார்க்க Ibn Hishām *Sirāt al-Nabi Kamil* (உருது மொழிபெயர்ப்பு மவுலானா அப்துல் ஜலீல் ஸித்தீகி, மற்றும் குலாம் ரஸூல் மெஹர்), (தில்லி, 1982), பக்கம் 37.

www.padippakam.com



('Wadd) என்றும், கடபானில் (Qatabān) "அம்" ('Amm) என்றும் ஹத்ரமாத்தில் (Hadramawt) "ஸீன்" (Sīn) என்றும் அழைக்கப்பட்டார். சூரியன் பெண்பாலாக "ஷம்ஸ்" (Shams) என்ற தேவதையாகவும் வணங்கப்பட்டார். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தேவர்களும் தேவதைகளும் வழிபடப்பட்டனர். ஒவ்வொரு தெய்வத்துக்கும் தனிப்பட்ட வழிபடும் மக்கள் இருந்தார்கள். ஆலயங்கள் கல்லால் கட்டப்பட்டுச் சிறந்த கட்டிடக்கலை அம்சங்களுடன் அமைந்திருந்தன. ஸபீயன் (Sabaean) நகரமான மாரிப்பில் (Mā'rib) அகழ்வாய்வு செய்த அமெரிக்கத் தொல்பொருள் ஆய்வாளர்கள், "அல்மக்கா" என்ற பெரிய ஸபீயன் தெய்வத்துக்கு அமைக்கப்பட்டிருந்த ஆலயம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். "அவ்வாம்" (Awwām) என்ற பெயர் கொண்ட அந்த ஆலயம் நீள்வட்ட வடிவில் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்தது. அது 30 அடி உயரமும், சுமார் 300 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்டதாக இருந்திருக்கக்கூடும். அலங்காரமான முகமண்டபமும், அதையொட்டி வரிசையாக எட்டுத் தூண்களைக் கொண்ட கட்டிடமும் இருந்ததாகக் கூறப்படுகிறது. செல்வம்மிக்க ஸபீயன் நாகரிகத்தின் அதிசயங்கள் பற்றிக் குரான் குறிப்பிடுகிறது. ஷீபா (Sheba) வின் அரசி பெரும் செல்வம் படைத்தவளாக, மிகுந்த ஆடம்பரத்துடனும் புகழுடனும் ஆட்சி செய்தாள் என்றும் குரான் கூறுகிறது. இஸ்ரவேல் மன்னன் ஸாலமன் அவளது நாட்டின் மீது படையெடுக்கவிருந்த போது அவள் அவருக்குப் பணிந்துவிட முடிவு செய்தாள். அன்பளிப்புகளுடன் தனது தூதனை அனுப்பி வைத்தாள். இதைக் குறிப்பிட்டுக் குரான் கூறுகிறது: "அவளது தூதன் தம்மிடம் வந்த போது ஸாலமன் கூறினார்: 'நீங்கள் எனக்குக் கொடுக்கத் தங்கமா கொண்டுவந்திருக்கிறீர்கள்? அல்லாஹ் எனக்கு அளித்திருப்பது அவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் எல்லாவற்றையும் விட மேலானது. என்றாலும் நீங்கள் உங்கள் பொருளைப் பற்றிப் பெருமைப்படுகிறீர்கள். நீங்கள் உங்கள் மக்களிடம் திரும்பிச் செல்லுங்கள்; அவர்கள் எதிர்க்க முடியாத படைகளுடன் வந்து, அவர்களைப் பணியவைத்து விரட்டியடிப்போம்."[18] இந்த வசனம் தெற்கிலும் வடக்குக் கோடியிலும் (செழிப்பான பிறைவடிவப் பகுதி) எழில்மிக்க கட்டிடங்களைக் கட்டும் திறன்கொண்ட கட்டிடக்கலையை வளர்க்கும் அளவுக்குச் செல்வச்செழிப்புமிக்க நாகரிகங்கள் இருந்ததைத் தெளிவாகக் காட்டுகிறது. மத்திய அரேபியாவிலிருந்த அரேபியர்கள் (அங்கு மன்னராட்சி முறையோ, அரசு என்ற அமைப்பைப் பற்றிய கருத்தோ இல்லாத காரணத்தால்) மன்னர் முறையை ஒப்புக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே அத்தியாயத்தில் உள்ள ஒரு வசனத்திலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

18. குரான், அத்தியாயம் 27, வசனம் 44.

www.padippakam.com



அந்த வசனம் கூறுகிறது: “(அவள்) கூறினாள்: ‘ஒரு மன்னன் ஒரு நகர் மீது படையெடுத்தால் அத்னைப் பாழாக்கி, அதிலுள்ள கண்ணிய மானவர்களைக் கேவலமானவர்களாக ஆக்கிவிடுகிறான்; இவர் களும் இவ்வாறே செய்வார்கள்.”[19] இந்த வார்த்தைகள் ஷீபா அரசி கூறியவை என்றாலும், மன்னர்களைப் பற்றி தீர்க்கதரிசி முகமது கொண்டிருந்த மனப்பான்மைதான் இங்கு முக்கியமானது. அது சாராம்சத்தில் அரேபியர்களின் மனப்பான்மையே.

தெற்கு அரேபியா, முக்கியமாக யேமன், பண்டைக்காலத்தி லிருந்தே அதனுடைய சுகமான தட்பவெப்பம், நிலவளம், செல்வம் ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றது. (Dionysius, Perieges. V. 927 பார்க்க). இவற்றால் கவரப்பட்டு மகா அலெக்ஸாண்டர், தமது இந்தியப் படையெடுப்பிலிருந்து திரும்பியபின், அதை வென்று கைப்பற்றத் திட்டமிட்டார். ஆனால் அதற்குப்பின் சிறிது காலத்திலேயே அவர் இறந்து போனதால் அது நடக்கவில்லை. மக்காவுக்கும், வடக்கு அரேபியாவின் வர்த்தகத் துறைமுகங்களுக்கும், இறுதி யாகக் கீழைப் பேரரசான பைஸாண்டியத்துக்கும் (Byzantium) செல்லும் வர்த்தக மார்க்கத்தில் யேமன் ஒரு முக்கிய வர்த்தக மைய மாக அமைந்திருந்தது. அரேபியர்களிடமிருந்து தாங்கள் பெற்ற பல பொருள்கள் அரேபியாவில் உற்பத்தியானவை என்று பலர் தவறாக நினைத்தார்கள். உண்மையில் அவை இந்தியா, சீனா, ஆப்பிரிக்கக் கடற்கரை ஆகியவற்றிலிருந்து வந்தவை என்பது சரித்திரம் கற்றோருக்குத் தெரியும். அரேபியப் பாலைவனங்கள் கடக்க முடியாதவையாக இருந்ததால் கிரேக்கர்களுக்கும் ரோமானியர் களுக்கும் அரேபியாவைப் பற்றி அதிகம் தெரியாது. உண்மையில், யேமனின் முக்கியத்துவம் காரணமாக அதைப் பணிய வைக்கப் போட்டி அரசுகள் பலமுறை முயற்சி செய்தன. பேராசிரியர் ஹிட்டி கூறுகிறார்: “ரோமானியர்கள் உலகை வென்று ஆண்டவர் களாக இருந்தபோதிலும் அரேபியர்கள் மீது தங்கள் நுகத்தடியைப் பூட்ட முடியவில்லை. ரோமானியர்கள் கி.மு. 24-இல் ஆகஸ்டஸ் ஸீஸரின் ஆட்சிக் காலத்தில் எகிப்திலிருந்து அதன் ரோமானிய பிரதிநிதி ஈலியஸ் காலஸ் (Aelius Gallus) தலைமையில், தங்கள் நபேடீயன் (Nabataean) கூட்டாளிகளின் ஆதரவுடன் 10,000 பேர் கொண்ட படையுடன் நடத்திய புகழ்பெற்ற படையெடுப்பு தோல்வி யாக முடிந்தது. தெற்கு அரேபியர்களின் ஏகபோக உடைமையாக இருந்த போக்குவரத்து மார்க்கங்களைக் கைப்பற்றி அல்-யேமனின் வளங்களை ரோமின் நலன்களுக்குப் பயன்படுத்துவது அதன் நோக்கம்”[20] ஆயினும் ரோமானியப்படை அரேபியாவின் பயங்கரப்

19. மேற்படி, அத்தியாயம் 27, வசனம் 34.
20. Hitti, மேலே குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 46.

www.padippakam.com



பாலைவனங்களை ஊடுருவிச் செல்ல முடியாமல் படையெடுப்பு பெருத்த அவமானமான தோல்வியாக முடிவடைந்தது. அதன் பிறகு ரோமானியர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால், பின்னாளில், ரோமானியக் கப்பல்கள் இந்துமாக்கடலில் செல்லத் தொடங்கியதன் மூலம் தெற்கு அரேபியாவின் செல்வச்செழிப்பு குலைந்து போயிற்று. இந்தப் பொருளாதாரச் சரிவைத் தொடர்ந்து அரசியல் அழிவும் ஏற்பட்டது.

அபிஸினியர்களும், பாரசீகத்தின் ஸஸானிடுகளும் யேமன் மீது கண்வைத்திருந்தார்கள். கி.பி. 340-78-இல் அபிஸினியா விலிருந்து ஒரு படையெடுப்பு நடந்தது. ஆனால், அதன் பிறகு யேமனின் "ஹிம்யரைட்" மன்னர்கள் மீண்டும் சுயாட்சி பெற் றார்கள். உண்மையில், பழங்கதை உண்மையாயிருக்குமானால் மிகவும் புகழ்பெற்ற "ஹிம்யரைட்" மன்னரான 'ஷம்மர் யரஷ் (Shammar Yar'ash), ஸாமர்க்கண்டை வென்றதாகத் தெரிகிறது. அவருடைய பெயரால் தான் அந்த நகருக்கு அந்தப் பெயர் வந்ததாகவும் அந்தப் பழங்கதை கூறுகிறது. ஆயினும், அபிஸினியா மேலே குறிப் பிட்ட முதல் படையெடுப்புக்குப் பிறகு தனது ஆசையை விட்டு விடாமல் மீண்டும் தாக்குதல்கள் நடத்தியது. யேமனில் யூதமதமும் கிறிஸ்தவமும் வந்த பிறகு அரசியல் நிலைமை மேலும் சிக்கலா யிற்று. தெற்கு அரேபியாவின் பூர்வீகமதம் முன்னே குறிப்பிட்டது போல, பேராசிரியர் ஹிட்டி "கிரக-நட்சத்திர" முறை என்று அழைக்கும் முறையை அடிப்படையாகக் கொண்டது. சந்திரனை வணங்கும் மதநெறி பரவலாக இருந்தது. (இஸ்லாமிய ஆண்டு மானமும் சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே). முன்னே குறிப்பிட்டது போல சந்திரன் ஹத்ரமாத்தில் "ஸீன்" என்றும், மினீயர்களால் "வாத்" என்றும், ஸபீயன்களால் "அல்மக்கா" என்றும், கடபேனியன்களால் "அம்" (தந்தையின் சகோதரர்) என்றும் அழைக்கப்பட்டது. உண்மையில், "அம்" தெய்வங்களில் முதலிடம் பெற்றதாகவும் ஆணாகவும் கருதப்பட்டது. சந்திரன், சூரியனைவிடப் பெரிய தெய்வமாகக் கருதப்பட்டது குறிப்பிடத் தக்கது. சூரியன், "ஷம்ஸ்" என்ற பெண் தேவதையாகவும், சந்திரனின் மனைவியாகவும் கருதப்பட்டது. அரபு மொழியில் சூரியன் பெண்பாலாக வழங்கப்படுகிறது. அரேபியாவின் பருவகாலங் களின் அமைப்பு, இதற்கு முழுமையாக இல்லாவிடினும், ஓரளவு விளக்கம் அளிக்க உதவுகிறது. மிகவும் வெப்பமான அந்த நாட்டில் தண்மையான நிலாக்கால இரவுகள் சூரியவெப்பத்தால் கொதிக்கும் பகல் நேரங்களை விட இனிமையாக இருந்ததால் சூரியனை விட சந்திரனுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கலாம். விவசாயத்தை அடிப்படையாகக் கொள்ளாத மத்திய அரேபியா போன்ற சமூகத்தில்

www.padippakam.com



பருவகாலங்களையொட்டி ஆண்டுதோறும் விதைப்பு, அறுவடை போன்ற வேலைகளைச் செய்யும் நிலை இல்லாததால், எந்தப் பருவம் எந்த மாதத்தில் வர வேண்டும் என்பது முக்கியமில்லை. அதனால்தான் மாதமும் பருவமும் ஒழுங்காக ஒன்றிவரும் சூரிய ஆண்டுமானம் அரேபியாவில் உருவாகவில்லை. சந்திரனின் இயக்கங்களைக் கண்ணால் காண்பதும் எளிதாக இருப்பதால் சந்திர ஆண்டுமானம் பின்பற்றப்பட்டது.

தெற்கு அரேபியாவில் கிறிஸ்தவமும் யூதமதமும் கொண்டு வரப்பட்டதில் ஏதேனும் ஒருவகையில் அரசியல் உள்நோக்கம் இருந்தது. ரோமப்பேரரசு, பாரசீகப்பேரரசு ஆகிய இரண்டுமே அந்தப் பகுதியில் தங்களுடைய செல்வாக்கை நிலை நிறுத்துவதில் அக்கறை கொண்டிருந்தன. தெற்கு அரேபியாவில் கிறிஸ்தவம் எப்போது வந்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், அங்கு வந்த முதலாவது கிறிஸ்தவ சமயத்தூதர்கள் கி.பி.356-இல் ரோம சக்கரவர்த்தி கான்ஸ்டாண்டியஸால் (Constantius) ‘ஏரியன்’ (Arian) என்ற கிறிஸ்தவ மதப்பிரிவைச் சேர்ந்த தியோஃபிலஸ் இண்டஸ் (Theophilus Indus) என்பவரின் தலைமையில் அனுப்பி வைக்கப் பட்டார்கள் என்று கருத இடமிருக்கிறது. ஆயினும் ஸிரியாவில் கொடுமைக்குட்படுத்தப்பட்ட மதப்பிரசாரகர்கள், எப்போது என்று கூற முடியாத ஒருகாலத்தில் தெற்கே ஓடி வந்திருக்கக்கூடும் என்ற சாத்தியக்கூறும் இருக்கிறது. ரோமிலிருந்து கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் வந்ததற்கு அரசியல் நோக்கமே காரணம். சில காலத்திற்குப் பிறகு தியோஃபிலஸ், ஆடனில் (‘Adan) (இப்போது ஏடன் - Aden) கிறிஸ்தவ ஆலயம் ஒன்றை நிறுவினார். இபின் ஹிஷாமும் (Ibn Hishām),[21]தபரியும் (Tabari) [22] கி.பி. 500-இல் “மனாஃபிஸைட்” பிரிவைச் சேர்ந்த துறவி ஒருவரை அரேபிய வர்த்தகச் சாரையைச் சேர்ந்தவர்கள் பிடித்து நஜ்ரானுக்கு (Najrān)- கொண்டு வந்ததைப் பற்றிய பழங்கதை ஒன்றைக் குறிப்பிடுகிறார்கள்.

யூதமதம் இரண்டாவது “ஹிம்யரைட்” மன்னரின் ஆட்சியில் அங்கு கால் ஊன்றியது. ஆறாவது நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் யூதமதம் யேமனில் மிகவும் வலுப்பெற்றது. கடைசி “ஹிம்யரைட்” மன்னர் து-நுவாஸ் (dhu-Nuwās) அந்த மதத்தின் ஆதரவாளரானார். ‘ஒரே கடவுள்’ என்ற கோட்பாட்டைக் கொண்ட இந்த இரண்டு மதங்களுக்கிடையே போட்டி கடுமையாகி அரசியல் வண்ணம் ஏறியது. தேசிய உணர்வைப் பிரதிபலித்த து-நுவாஸ் அபிஸினிய ஆட்சியைத் தீவிரமாக வெறுத்தார். கிறிஸ்தவ மதம்

21. Ibn-Hishām, *Sira*, ed. F. Wüstenfeld (1958–60). பக்கம் 20-22

22. Tabari, *Ta'rikh al-Rusul wa'l Muluk*, ed. M.J. de Goeje, Vol.1 (Leiden, 1897 onwards), பக்கம் 919-25.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு குழுவினர்—லுஹய் (Luhayy) தலைமையிலான பனு குஜா (Banu Khuza'a) குழுவினர் — மக்காவுக்கருகே குடியமர்ந்தார்கள்."[27] எங்கல்ஸ் மார்க்ஸுக்கு எழுதிய கடிதங்களில் இந்த விவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்:

> நிலம் இவ்வாறு செயற்கையாக வளம் பெறுவது பாசன அமைப்பு சீர்குலைந்தவுடனேயே நின்றுபோய்விட்டது. ஒரு காலத்தில் மிகச் சிறப்பான முறையில் சாகுபடி நடந்துவந்த பெரும் பரப்புகள் (பல்மைரா - (Palmyra), பெட்ரா - (Petra), யேமனின் பழங்கால சிதைவுச் சின்னங்கள், எகிப்து, பாரசீகம், ஹிந்துஸ்தான் ஆகியவற்றின் சில பகுதிகள்) இப்போது தரிசாகவும் தாவரங்கள் இல்லாமலும் இருப்பதற்கு இதுதான் காரணம். பெரும் நாசம் விளைக்கும் ஒரேயொரு போரின் காரணமாக ஒருநாடே பல நூற்றாண்டுகளுக்கு மக்களே இல்லாமல் வெறுமையடைந்து அதன் நாகரிகம் முழுவதுமே அழிந்து விடக்கூடும் என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது. தெற்கு அரேபியாவின் வர்த்தகம் முகமதுவுக்கு முன்னால் அழிவுற்ற சூழ்நிலையும் இதுதான் என நான் நினைக்கிறேன். இந்த அழிவு முகமதியப் புரட்சியின் முக்கிய காரணங்களில் ஒன்று என நீங்கள் கருதுவது மிகவும் சரியானதே.[28]

இவ்வாறு மக்கள் பெரும் அளவில் ஹிஜாஸ், மத்திய அரேபியா, வடதிசைப் பகுதிகள் ஆகியவற்றை நோக்கிச் சென்றதன் காரணமாகப் பொருளாதார நிலைமையிலும் பெரும் விளைவுகள் ஏற்பட்டன. இது தவிர வேறு சில காரணிகளும் அந்தப் பிராந்தியத்தின் வழக்கமான பொருளாதார அமைவைப் பெரிதும் சீர்குலைத்தது. பைஜாண்டிய, பாரசீகப் பேரரசுகளிடையே இடைவிடாது உரசல் இருந்து வந்ததனால் வர்த்தகமார்க்கங்கள் நிலையற்று மாறிக் கொண்டேயிருந்தன. இறுதியாகப் பார்க்கும் போது, வர்த்தக மார்க்கங்கள் உருவானதன் விதம்தான் அரேபியர்களின் வரலாற்றில் எதிர்பார்க்க முடியாத மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக, கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பாதியில் யூப்ரடீஸ் - பாரசீக வர்த்தகமார்க்கம், பைஜாண்டியப் பேரரசுக்கும் பாரசீகப் பேரரசுக்குமிடையே நிலவிய இடைவிடாத உரசல் காரணமாக இடையூறுகளும் அபாயங்களும் நிறைந்ததாக மாறிவிட்டது. மத்தியதரைக்கடல் பகுதிக்கும் கிழக்கேயுள்ள நாடுகளுக்குமிடையில் நடந்த வர்த்தகத்தால் இந்த மார்க்கம் அதுவரை மிகவும் பலனடைந்து வந்தது. இந்த உரசலால் தீர்வைகள் அதிகரித்தன. அரசியல் போட்டிகளும் பொதுவான குழப்ப

27. Nicholson, *A Literary History of the Arabs*, பக்கம் 63.
28. கார்ல் மார்க்ஸ், பெட்ரிக் எங்கல்ஸ், *On Religion* (நியூயார்க், 1964) பக்கம் 124-5.

www.padippakam.com



நிலைமையும் உருவாயின. எகிப்தும் அப்போது சீர்குலைந்த நிலையில் இருந்ததால் அதன் வழியாகவும் மாற்று மார்க்கம் அமைந்திருக்க முடியாது. எனவே வர்த்தகர்கள் அமைதியான, ஆனால் கடினமான மற்றொரு மார்க்கத்தைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஏற்கெனவே பார்த்தபடி யேமன், இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அந்நிய ஆட்சிக்கு உட்பட்டது. அந்தக் காலத் துக்குள் வடக்கே பல்மைரா (Palmyra) வும் நபாடியா (Nabatea) வும் முற்றிலும் மறைந்து போயின. மக்கா, ஒரு சமூக-பொருளாதார வெற்றிடத்தை நிரப்புவதற்கு இது சரியான தருணமாயிருந்தது.

### மக்கா நிறுவப்படுதலும் அதன் முக்கியத்துவமும்

மக்கா, தென் அரேபியாவிலிருந்து வட அரேபியாவுக்குச் செல்லும் லவங்கப்பொருள்கள் வர்த்தகப் பாதையில் அமைந்தி ருந்ததுதான் அதன் வளர்ச்சிக்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை. பல திசைகளில் செல்லும் மார்க்கங்களுக்கு மையமாக அமைந்தி ருந்ததால் இடையில் தங்கும் ஊராக அது பயன்படுத்தப்பட்டிருக்க லாம். மக்காவிலிருந்து மத்தியதரைக்கடல், பாரசீக வளைகுடா, ஜித்தா வழியாகக் கடல் கடந்து ஆப்பிரிக்கா ஆகியவற்றுக்கு வர்த்தக மார்க்கங்கள் சென்றன. அதை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (அ) நகர்ப்புறம், (ஆ) நாடோடிப்பகுதி. மக்கா, மிக முக்கிய மான நகரக் கேந்திரங்களில் ஒன்று. அங்கு மிகச் சிக்கலான வர்த்தக நட வடிக்கைகள் நடத்தப்பட்டன. இந்த நகர்ப்புறப்பகுதியில் வசித்த மக்கள் ஆரம்பத்தில் நாடோடியாய் வாழ்ந்தவர்களே. பதூயின் கள் நகரவாசிகளானதும் ஒரு நீண்ட வரலாறு. பொருளாதார நெருக்கடி அல்லது நீண்டகால வறட்சி ஏற்படும் போது அவர்கள் வடக்கே செழிப்பான பகுதிகள் மீது படையெடுப்பார்கள். எங்கல்ஸ் மார்க்ஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இதைக் குறிப்பிடுகிறார். "நாம் முன்பு பேசிய மாபெரும் அரேபியப் படையெடுப்பு சம்பந்த மாக: பதூயின்கள், மங்கோலியர்களைப் போலவே, அவ்வப் போது படையெடுப்புகள் நடத்தினார்கள். அஸிரியப் பேரரசை யும் பாபிலோனியப் பேரரசையும் பதூயின் இனக்குழுக்களே நிறுவின. பின்னாளில் பக்தாதின் கலீஃபா ஆட்சி அதே இடத்தில் தான் எழுந்தது. பாபிலோனியப் பேரரசை நிறுவிய சால்டியன் மக்கள் (Chaldeans) இன்னமும் அதே இடத்தில் அதே பெயரில், பெனிசாலித் (இப்போது பனி காலித்) என்று அழைக்கப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள்."[29]

மக்கா நகர் முக்கிய மதத்தலமாகவும் வர்த்தகக்கேந்திரமாகவும் இருந்தது. அங்கு நடைபெற்ற பன்னாட்டு வர்த்தகமே அதன்

29. மேற்படி, பக்கம் 124-5

படிப்பகம்

www.padippakam.com



முக்கியத்துவத்துக்கு முதன்மையான காரணம். அதனால் தெற்கு யேமனில் அபிஸினிய ஆட்சியாளராக இருந்த அப்ரஹா, ஸனா நகரை முக்கிய வர்த்தகக்கேந்திரமாக உருவாக்கி மக்காவை இரண்டாம் இடத்துக்குத் தள்ள விரும்பினார். ஆனால் அது நடக்கவில்லை. மக்கா மிக முக்கியமான வர்த்தகக்கேந்திரமாகவும் அரேபியரின் பழைய மதத்தின் முக்கியத் தலமாகவும் தொடர்ந்து இருந்துவந்தது. மக்கா நகரம், கடற்கரைக்கு இணைகோடு போல நீண்டு கிடக்கும் ஒரு மலைத்தொடரில் உள்ள இடைவெளியில் அமைந்துள்ளது. அந்தத் தொடரின் மலைகள் கருப்பு, மஞ்சள் நிறங்களில் தாவரங் களற்று பாறைகள் நிரம்பி, மண்ணின் சுவடே இல்லாது, கூர் முனைகள் கொண்டு உள்ளன. மலையை அறுத்துச் செல்லும் வாடி யின் (Wadi) செயலால், சிலசமயம் பெரும் வெள்ளப்பெருக்கை ஏற் படுத்தும் மிகப் பலமான மழைப்புயல்களால் அந்த இடைவெளிப் பள்ளத்தாக்கு உருவாகியுள்ளது.[30] ஆனால் இந்த மழைப்புயல்கள் காலமுறையிலன்றி வருகின்றன; குறுகிய காலத்துக்கே நீடிக்கின்றன. அரேபியாவில் பல இடங்களில் போலவே, இங்கும் விவசாயம் செய்வது இயலாது. மக்கா பள்ளத்தாக்கு வறண்டதாக, தாவரங்கள் அற்றதாக உள்ளது. கிறிஸ்தவ சகாப்தத்துக்கு நீண்டகாலம் முன்பே இரண்டு முக்கிய வர்த்தகக் கேந்திரங்கள் உருவாகியிருந்தன: ஒன்று, மகோரபா (Macoraba), அதாவது மக்கா, இன்னொன்று அதற்குச்சற்று வடக்கே யத்ரிப்பா (Yathrippa) என்ற யத்ரிப் (Yathrib). மக்கா ஏற் கெனவே குறிப்பிட்டபடி நீண்டகாலமாகவே புனிதத்தலமாக இருந்து வந்துள்ளது. அங்கு தண்ணீர் வழங்கும் ஊற்றாக அமைந்துள்ள புகழ்பெற்ற ஜம்ஜம் (Zamzam) கிணறு இதற்குக் காரணமாயிருக்கக் கூடும். வடக்கிலிருந்து தெற்கே, பாலஸ்தீனிலிருந்து யேமனுக்குச் செல்லும் சாலையும், கிழக்கிலிருந்து மேற்கே பாரசீக வளை குடாவை செங்கடல்கரையுடனும் எத்தியோப்பியாவுக்குச்செல் லும் மார்க்கத்துடனும் இணைக்கும் சாலைகளும் அங்கு சந்திப்ப தால், மக்கா வர்த்தகக்கேந்திரமாயிற்று. இந்த வர்த்தகக் கேந்திரம் பல்வேறு இனக்குழுக்களிடையே நடந்த நாசகரமான ரத்தப்பழிச் சண்டைகளிலிருந்து பாதுகாப்பளிக்கும் புகலிட மாக இருந்தது. மக்காவில் யாரையும் தொல்லைக்குட்படுத்துவதை மரபு வழக்கம் அனுமதிக்கவில்லை. அதனால் அங்கு வர்த்தகர்களுக்கு பதூயின்களின் கொள்ளையடிப்பிலிருந்து பாதுகாப்புக் கிடைத்தது.

30. இப்போதும் கூட ஸவூதி அரேபியாவில் தற்காலிகமாக பெரும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன. டைம்ஸ் ஆஃப் இண்டியா (25 டிஸம்பர் 1989) நாளிதழில் வெளியான ஒரு செய்தி: "ஸவூதி அரேபியாவின் வட மேற்கு மூலையில் ஏற்பட்ட வெள்ளத்தில் 32 பேர் உயிரிழந்தார்கள். சென்ற 50 ஆண்டு காலத்தில் இதுவே மிகவும் கடுமையான வெள்ளப் பெருக்காகும்.. சென்ற வாரம் ஐந்து நாட்களாகப் பெய்த மழையினால் பள்ளத்தாக்குகளில் பெருகி ஓடும் வெள்ளத்தில் 31 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்..."

www.padippakam.com



மக்கா (பக்கா--Becca-என்றும் அதற்குப் பெயர் உண்டு) நிச்சயமாக உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று. பைபிளில் மெஸா (Mesa) என்று குறிப்பிடப்படுவது இந்த நகர்தான் என்று சிலர் கருதுகிறார்கள்.[31] அதன் நீளம் தெற்கிலிருந்து வடக்காகச் சுமார் இரண்டு மைல்; அதன் அகலம் அஜ்யத் (Ajyad) மலையின் அடிவாரத்திலிருந்து கோயிக்கான் (Koaikaan) மலையின் உச்சிவரை சுமார் ஒரு மைல். இந்த இடப்பரப்பின் நடுவே அமைந்துள்ள நகரம் அருகேயுள்ள மலைகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டது. அதன் மண்ணில் அநேகமாக வளம் இல்லாததால் விவசாயம் சாத்தியமில்லை. அதனால் மக்கா மக்கள் உணவு தானியத்தை வேறு இடங்களிலிருந்துதான் வாங்க வேண்டியிருந்தது. முகமதுவின் முப்பாட்டனார் ஹாஷிம் (Hāshim) அவரது இனக்குழுவின் தலைவராயிருந்தார். அவர் மக்கா மக்களுக்கு உணவு தானியம் வாங்குவதற்கு ஆண்டுதோறும் இரண்டு ஒட்டகச்சாரைகள், ஒன்று கோடைகாலத்திலும், மற்றது குளிர் காலத்திலும் சென்றுவர ஏற்பாடு செய்திருந்தார். குரானில் இது (அத்தியாயம் 106) குறிப்பிடப்படுகிறது. (இந்த அத்தியாயம் பசித்தவர்களுக்கு உணவு அளிப்பது பற்றியும், பயத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பது பற்றியும் குறிப்பிடுகிறது). கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் "குஸய்" (Qusayy) என்பவர் மக்கா நகரையும் அதன் ஆலயத்தையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தார்.[32] அவர் குரைஷ் (Quraysh) இனக்குழுவைச் சேர்ந்தவர். பல்வேறு குலக் குழுக்களைக்கொண்ட இந்த இனக்குழு அவர் மூலம், மக்காவில் குஸா (Khuza'ā) இனக்குழு பெற்றிருந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது.

### மக்காவில் சமூக-குடும்ப கட்டமைப்பு

இங்கே, சமூகவியல் கோணத்தில், அரபு மக்களின் சமூகக்கட்டமைப்புப் பற்றியும், குடும்பமுறை பற்றியும் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமாகும். இங்கும் கூட நாடோடிகளுக்கும் நகரவாசிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். பதூயின்கள் கூடாரங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் பாலைவனத்தில் முகாமிட்டுத் தங்குகிறார்கள். பதூயின் சமூகத்தின் அடிப்படையாக இருப்பது குலக்குழு அமைப்பாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கூடாரத்தில் வசிக்கிறார்கள். ஒரு கூடாரத்தொகுதி (ஒரு முகாம்) "ஹய்" (hayy) என்று அழைக்கப்படுகிறது. ஒரு ஹய்யின் உறுப்பினர்கள் அரபு மொழியில் "கவும்" (qawm) என்று கூறப்படும் குலக்குழுவாக அமைகின்றனர். உறவுத் தொடர்புள்ள குலக்குழுக்கள் சேர்ந்து

31. பைபிள், The Book of Genesis, அத்தியாயம் 10, வசனம் 30.
32. Ibn Hishām, மேலே குறிப்பிட்ட புத்தகம் பக்கம் 150-52. குஸய் எவ்வாறு மக்காவைத் தமது அதிகாரத்தின்கீழ் கொண்டு வந்தார் என்பதை விவரிக்கிறது.

www.padippakam.com



"கபீலாஹ்" (qabilah) என்ற இனக்குழு ஆகின்றன. ஒரே குலக்குழுவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தங்களை ஒரே இரத்தத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதுகிறார்கள். தங்களுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். "ஷேய்க்" (Shaykh) என்று அழைக்கப்படும் இந்தத் தலைவர் சமமானவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். ஒரு குலக்குழுவினர் ஒரே போர் முழக்கத்தைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களின் பெயருக்கு முன்னால் "பனூ" (Banū) என்ற அடைமொழி சேர்த்து வழங்கப்படுகிறது. சில குலக்குழுப் பெயர்களின் வேர்ச்சொற்கள் பெண்பால் பெயர்களாக உள்ளன. இதை வைத்து இஸ்லாம் தோன்றுவதற்கு முன்புவரை கூட தாய்வழிச் சமூகமுறை நடப்பில் இருந்தது என்று சில அறிஞர்கள் முடிவு செய்கிறார்கள். ஆனால் இந்தக் கருத்தில் வலு இல்லை. மிகப் பழங்காலத்தில் தாய்வழிச் சமூக முறையின் சுவடுகள் இருந்ததையே இந்தப் பெயர்கள் காட்டுகின்றன. சிதறிக்கிடக்கும் இத்தகைய சில அடையாளங்களைக் கொண்டு, தாய்வழிச் சமூகமுறையைப் பின்பற்றிய அரபுச் சமூகம் தீர்க்க தரிசியின் காலத்தில் தந்தைவழிச் சமூகமுறைக்கு மாறிக்கொண்டிருந்தது என்றும், எனவே அது தனிநபர் உரிமையை நோக்கிய பொதுவான சமூகவளர்ச்சியில் ஒரு மாறுதல் கட்டத்தில் இருந்தது என்றும் மாண்ட்காமரி வாட் கூறுகிறார். இந்தக் கருத்தை மாக்ஸிம் ராடின்ஸன் மறுக்கிறார். அவர் கூறுகிறார்: "மதீனா போன்ற சிலபகுதிகளில் இந்த முறை, ஒரு பெண் பல கணவர்களை மணக்கும் சிலவகையான வழக்கங்களுடன் கூடவே நடப்பில் இருந்திருக்கிறது எனத் தோன்றுகிறது. அத்துடன் கூடவே பெண்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பங்கு அளிப்பதும் ஏற்கப்பட்டிருந்தது. (மிகப் பழங்காலத்தில் அரபு அரசிகள் இருந்தார்கள் எனப் பல ஆதாரங்கள் புலப்படுத்துகின்றன). சில சமயங்களில் கணவன் மனைவியின் வீட்டில் அவளுடன் வசிப்பது, பெண் வழியே சொத்துரிமை செல்லுவது ஆகிய வழக்கங்களும் இருந்தன."[33]

இந்த நாடோடி மக்கள் விரைவில் இடம் மாறிக்கொண்டே இருந்தார்கள். ஒரே இடத்தில் வசிக்கவில்லை. தண்ணீரும், மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலமும் தேடி ஒவ்வொரு இடமாக மாறிச் செல்வார்கள். மற்ற இனக்குழுக்கள் மீது கொள்ளைத் தாக்குதல் நடத்த அவர்கள் இடம் மாறினார்கள். இதனால் அவர்களிடம் நில உடைமை பற்றிய கருத்து உருவாகவில்லை. செழிப்பான பாலைவனச்சோலையான மதீனாவில் கூட தனிநபர் நில உடைமை உருவாகும் அளவுக்கு விவசாயம் வளரவில்லை. சாகுபடிக்குத் தகுந்த நிலங்கள் கூட்டு உடைமையாக இருந்தன. மக்காவிலும் கூட நிலச்சொத்து என்று கூறும் அளவுக்கு எதுவும் இருக்கவில்லை. ஆனால் குடும்பங்களின் உடைமையான வீடுகள் இருந்தன. சொத்துரிமை பற்றி முழுமையான வடிவில் சட்டங்கள் எதுவும்

33. Rodinson, மேலே குறிப்பிடப்பட்ட புத்தகம்.

www.padippakam.com



இருக்கவில்லை. மரபுவழியான சில வழக்கங்கள் மட்டுமே இருந்தன. மக்காவைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலருக்கு அருகிலுள்ள தாயிஃப் (Tā'if) பாலைவனச்சோலையில் சொந்தமாக நிலம் இருந்தது. ஆனால் இது அவர்களுக்கு ஒரு கோடை வாசத்தலமாகவே இருந்தது. மக்காவைவிட அங்கு தட்பவெப்பநிலை நன்றாக இருந்தது இதற்குக் காரணம். மக்கா நகர வர்த்தகர்கள் கோடைகாலத்தில் தங்குவதற்கு அங்கு மாளிகைகள் கட்டினார்கள். பனூ தக்கீஃப் (Banū Thaqīf) குலக்குழுவினர் தாயிஃபில் வசித்தார்கள். அவர்கள் தானியங்களை உணவாகக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற அரேபியர்களுக்குப் பேரீச்சம்பழமும் பாலுமே உணவாக இருந்தன. நிலச்சொத்துக்களும் விவசாயத்துக்கெனத் தனிநபர் நில உடைமையும் இல்லை என்பதைப் பார்க்கும் போது, இஸ்லாமின் ஆரம்பகாலம் நிலப்பிரபுத்துவ முறையின் பின்னணியில் இருந்ததாகப் பலர் தெரிவித்திருக்கும் கருத்து தவறானது. இஸ்லாம் உருவான காலத்தில் சில ரஷ்ய அறிஞர்கள் கருதுவது போல அங்கு நிலப்பிரபுத்துவமுறை உருவாகிக் கொண்டிருக்கவில்லை.[34] அந்த முறையின் அடிப்படையில் அரபு இனக்குழுக்களை ஒன்றிணைக்கும் செயல்பாடும் நடக்கவில்லை. இது பற்றி இந்தப் புத்தகத்தில் பின்னர் விரிவாகப் பரிசீலிக்கவிருக்கிறோம்.

இனி, நகர்ப் பகுதிகளில் குடும்ப அமைப்பு எவ்வாறு இருந்தது எனப் பார்ப்போம். நகர்ப்பகுதிகளில் முக்கியமானது மக்கா. அங்கு இனக்குழுக் கட்டமைப்பு உடைந்துபோய் தனிநபர் வாழ்க்கை முறை உருவாகத் தொடங்கியிருந்தது என்பதைப் பின்னர்க் காணவிருக்கிறோம். இனக்குழு ஒற்றுமைக்கு முக்கியத்துவம் குறைந்து விட்டது. புதிய சொத்துரிமை நிலைகள் உருவாகிக்கொண்டிருந்ததால் குலக்குழுக்கள் உடைந்து குடும்பங்கள் தனி அமைப்புகளாக மாறிவிட்டன அல்லது மாறிக்கொண்டிருந்தன. அதே சமயம் குலக்குழு அல்லது இனக்குழுவிடம் விசுவாசம் கொண்டிருப்பது சமூகத்துக்கு இன்னமும் தேவையாயிருந்தது. அரசுமுறை போன்ற அமைப்புகள் இல்லாத நிலையில் ஒழுங்கைப் பாதுகாக்கவும் இனக்குழுச் சட்டத்தை அமல்செய்யவும் இந்த விசுவாசம் அவசியமாயிருந்தது. இவ்வாறாகச் சமூகத்தில் ஒன்றுக்கொன்று எதிரான முரண்பாடுகள் உருவாகிக்கொண்டிருந்தன; ஒருபுறம் சட்டத்தை அமல்செய்யும் அதிகார அமைப்பு எதுவும் இல்லாததால் இனக்குழு விசுவாசம் தேவையாயிருந்தது; மற்றொருபுறம் இனக்குழுக் கட்டமைப்பு உடைந்து சிதறிக்கொண்டிருந்தது. நமக்குக் கிடைக்கும் வரலாற்று ஆதாரங்களைக் கவனமாக ஆராய்ந்தால், கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மக்கா மக்கள், தனித்தனிக் குடும்பங்களாக இல்லாவிட்டாலும், அளவில் சிறிய குடும்பமாக வாழ்ந்தார்கள்

34. A.Z. Manfred, *A short History of the World* (மாஸ்கோ, 1974), பக்கம் 12.

www.padippakam.com



என்று தோன்றுகிறது. குரானில் உள்ள ஒரு வசனம் இதைத்தான் காட்டுகிறது. அது கூறுகிறது: "பார்வையற்றவர்கள், முடமான வர்கள், நோயுற்றவர்கள் ஆகியோர் உங்களுடன் உண்பதனால் அவர் களுக்குக் குற்றம் இல்லை. நீங்களும் உங்களுடைய குழந்தைகள், தந்தையர், அன்னையர், சகோதரர்கள், சகோதரிகள், தந்தையின் சகோதரர் கள், தந்தையின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள், தாயின் சகோதரிகள், அல்லது, உங்கள் நண்பர்கள் ஆகியோரின் இல்லங் களில் உண்பது குற்றமல்ல. உங்களிடம் சாவி ஒப்படைக்கப்பட்டி ருக்கும் வீட்டில் உண்பதும் குற்றமல்ல. நீங்கள் தனித்தனியாக உண்டாலும் சேர்ந்து உண்டாலும் சட்டத்துக்குப் பொருந்தியதே."[35]

வெவ்வேறு உறவினர்களின் வீடுகள் தனித்தனியாக் குறிப்பிடப்படு கின்றன. இதிலிருந்து இஸ்லாமின் தீர்க்கதரிசி தோன்றிய காலத் திற்குள் மக்காநகரவாசிகள் சிறிய குடும்ப அலகுகளாக வாழத் தொடங்கிவிட்டார்கள் என்று தெரிகிறது. இதே வசனத்திலி ருந்து குழந்தைகள் வயது வந்தபிறகு தனியாக வாழ்ந்தார்கள் அல்லது தனிக்குடும்பங்கள் அமைத்துக்கொண்டார்கள் என்றும், மகள்கள் திருமணமான பிறகு கணவர்களுடன் சேர்ந்து வாழச் சென்று விட்டார்கள் என்றும் தெரிகிறது. முகமதுவை முதலில் பின்பற்றத் தொடங்கியவர்களில் மக்காவின் செல்வாக்குமிக்க குலக்குழுக் களின் முக்கிய பிரமுகர்களின் நெருங்கிய உறவினர்கள் இருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் செல்வம் மிக்க ஏக போக உரிமையாளர்களின் நெருங்கிய உறவினர்களாக இருந்த போதிலும் மிகவும் லாபந்தரும் பொருளாக்க முயற்சிகளில் சேர்க் கப்படவில்லை. எனவே இவர்கள் மக்காவின் முக்கிய குலக்குழுக்கள் பின்பற்றிய ஏகபோக உரிமைக் கொள்கையை முகமது தாக்கியத னால் அவரிடம் கவரப்பட்டார்கள் என்று கருதுவது முற்றிலும் தவறாகாது. அல்லது இந்த ஏகபோக உரிமைவாதிகளின் கீழ் அமைந்த வாழ்க்கைமுறை இவர்களுக்குத் திருப்தி அளிக்காமல் இருந்திருக்கலாம்.[36] இவர்களுடைய அதிருப்தியிலிருந்து, ஒருவருடைய குழந்தைகளைத் தவிர மற்ற நெருங்கிய உறவினர்களுக்கு, சொத்துக்கள் பொது உடைமை யாகக் கொள்ளப்படும் இனக்குழுச் சமூகத்தில் இருப்பது போல, சொத்தில் பங்கு இல்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவைகளிலிருந்து பெற்றோரும் அவர்களது குழந்தைகளும், சமயங் களில், சில அடிமைகளும் வேலைக்காரர்களும் சேர்ந்து ஒரு குடும்ப அலகாக அமைந்திருந்தார்கள் என்பது தெரிகிறது.

### மக்காநகர மக்களின் மதம்

மக்காநகர மக்களின் குடும்ப அமைப்புமுறையை விவரித்தோம்.

35. குரான், அத்தியாயம் 24, வசனம் 61.
36. W. Montgomery Watt, *Islam and the Interpretation of Society* (லண்டன், 1961), பக்கம் 12.

www.padippakam.com



இப்போது அவர்களுடைய மதம் பற்றிக் கவனிக்கலாம். முன்னமே நாம் கண்டபடி, பாலைவன நாடோடி மக்களுக்கு முறையான கோட்பாடு அடிப்படையிலான மதம் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் பின்பற்றியது "இனக்குழு சார்ந்த மனிதநேயம்" என்று கூறலாம். மனிதர்களின் சிறப்புத் திறன்களும் இனக்குழுவின் பெருமையுமே இதில் முழுமையான முக்கியத்துவம் பெற்றன. ஆனால் மக்காவில் வாழ்ந்த நகரவாசிகளின் விஷயம் வேறு. ஒரு நகரத்தில் நிலையாகக் குடியமர்ந்து, பல்வேறு தொழில்களில், முக்கியமாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வாழ்ந்த இந்த மக்களுக்கு முறையான மதம் ஒன்று தேவைப்பட்டது. மேலும், மக்காநகர மக்களிடையே செல்வ வினியோகத்தில் இருந்த கடுமையான ஏற்றத்தாழ்வு காரணமாக மிகவும் கீழ்த்தளத்தில் இருந்த மக்களின் வாழ்க்கை பொருளில்லாமையின் இன்னல்கள் நிறைந்ததாக இருந்தது. எனவே அவர்களுக்கு ஏதேனும் ஆன்மீக ஆறுதல் தேவையாயிருந்தது. கிரீஸ் நகர அரசுகளில் இருந்தது போல மதம் இங்கும் அருள் வாக்குக் கூறும் பணியையும் நிறைவேற்றியது.*

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகம் பயிர் விளைச்சலுடன் தொடர்புடைய வழிபாடுகளையும் சடங்குகளையும் உருவாக்கிக்கொள்கிறது என்பது நன்கு தெரிந்ததே. இந்த வழிபாடுகள் தெளிவற்ற வடிவங்களில் தொடங்கி மெதுவாக வளர்ந்து நிர்ணயமான வடிவங்களைப் பெறுகின்றன. ஆனால் மக்கா வளமற்ற பாலை நிலப்பகுதியில் அமைந்திருந்ததால் அங்கு விவசாயம் நடக்கவில்லை என்பது நாம் அறிந்ததே. எனவே அங்கே வழிபாடுகள் எதுவும் தோன்ற வாய்ப்பில்லை. ஆயினும் மக்காவில் உள்ள புனிதத்தலத்திலும் அதைச் சுற்றிலும் இஸ்லாமின் தீர்க்கதரிசி தமது போதனைகளைத் தொடங்கிய காலத்தில் பற்பல தெய்வங்கள் வணங்கப்பட்டு வந்தன; அவர் அதை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அந்தத் தெய்வங்கள் எங்கிருந்து வந்தன? அவை அங்கேயே தோன்றியவை அல்ல என்பது நமக்குக் கிடைக்கும் எல்லாச் சான்றுகளிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது. மக்காவில் உருவ வழிபாடு, அதாவது மனிதர்களைப் போன்ற வடிவத்தில் செதுக்கப்பட்ட கல்லுருவங்களை வணங்கும் வழக்கம் ஸிரியாவிலிருந்து

* ஒரு மதம் அல்லது ஆன்மீக இயக்கம் தோன்றுவதற்கு இது ஒன்றுதான் காரணமாயிருக்க முடியும் என்று நான் கூற வரவில்லை. ஆன்மீகம், மனிதனின் சில உயர்ந்த உணர்ச்சிபூர்வமான, அறிவுபூர்வமான தேவைகளை நிறைவு செய்கிறது என்பது உண்மையே. எந்த ஒரு தனிப்பட்ட விளக்கமும், அது எவ்வளவு ஆழமாக இருந்தாலும், போதியதாகாது. நான் இங்கே கூற முயல்வது, ஒரு மத அல்லது ஆன்மீக இயக்கம், அது தோன்றும் இடத்தில் உள்ள பொருளியல் சூழ்நிலையுடன் ஒரு தெளிவான — ஆனால் சிக்கலான — தொடர்புள்ள வடிவத்தைப் பெறுகிறது என்பதேயாகும்.

www.padippakam.com



முகமதுவின் காலத்தில்தான் புதிதாகக் கொண்டுவரப்பட்டது என்று இஸ்லாமின் ஆரம்பகால வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான இபின் ஹிஷாம் (Ibn Hishām) கூறுகிறார்.[37] இஸ்லாமை ஏற்காத அரேபியர்களை முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் "உருவவழிபாட்டுக்காரர்கள்" என்று குறிப்பிடாமல் "இணைத்துரைப்போர்", அதாவது ஓரிடத்தில் உள்ள ஆவிசக்திகளைக் கடவுளுடன் இணைத்துப் பேசுபவர்கள் என்றுதான் குறிப்பிடுகிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஸிரியா, வடக்கில் உள்ள வளமான பகுதியில் அமைந்திருந்தது; அங்கே விவசாயம் நடைபெற்றது. "காபா" வில் 360 சிலைகள் இருந்தன என்றும் இவற்றில் முக்கியமானது "ஹோபல்" (Hobal) என்றும் அதை ஸிரியாவில் உள்ள "பெல்கா" (Belka) விலிருந்து அம்ரு இபின் லோஹயி ('Amru Ibn Lohai) என்பவர், அது வேண்டிய போது மழைபெய்யச் செய்யும் என்று சொல்லி அரேபியாவுக்குக் கொண்டுவந்தார் என்றும் பிரபல முஸ்லிம் வரலாற்றாசிரியர் அல்ஷஹ்ரேஸ்தானி (Al-Shahrestani) கூறுகிறார். ஹோபல் மழைபெய்யச் செய்யும் என்று கூறப்பட்டது குறிப்பிடத் தக்கது. இது விவசாயத்தொழில் நடக்கும் பகுதியைச் சேர்ந்த தெய்வத்துக்குக் கூறப்படும் சக்தியாகும்.

ஹோபல், காபாவின் மையமான இடத்தில் ஒரு கிணற்றின் மீது வைக்கப்பட்டிருந்ததாகப் புகழ்பெற்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் தபரி (Tabari) தெரிவிக்கிறார். மக்களின் மிக முக்கியமான தெய்வமாக அது கருதப்பட்டது. அதற்கு அர்ப்பணிக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் கிணற்றினுள் போடப்பட்டன. ஹோபல் அருள் வாக்குக்கூறும் தெய்வமாகவும் இருந்தது. அதன் அருகே ஏழு பகடைக் காய்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. ஒரு பகடைக்காயின்மேல் "தேயத்" (deyat) (இரத்தப்பணம்) என்று பொறிக்கப்பட்டிருந்தது. குரைஷ் இனக்

37. முன்பு குறிப்பிடப்பட்ட இபின் ஹிஷாம் புத்தகம் பக்கம் 108 பார்க்க. விஷயம் அறிந்த சிலர் தம்மிடம் கூறியதாகப் பின்வரும் செய்தியை அவர் தெரிவிக்கிறார்: உம்ரு பின் லாஹி தமது வேலை தொடர்பாக மக்காவிலிருந்து ஸிரியாவுக்குச் சென்றார். அந்தப் பகுதியில் அமாலீக் (Amāliq) என்ற மக்கள் வசித்தார்கள். அவர்கள் விக்கிரகங்களை வணங்குவதைப் பார்த்து அவை என்ன என்று அவர் வினவினார். அதற்கு அவர்கள் "இந்த விக்ரகங்களிடம் நாங்கள் மழை வேண்டும் என்று கேட்டுக் கொண்டால் அவை மழை பெய்யச் செய்கின்றன, உதவி கோரும் போது உதவி அளிக்கின்றன; அதனால்தான் நாங்கள் இவற்றை வணங்குகிறோம்," என்று கூறினார்கள். உம்ரு பின் லாஹி அந்த விக்கிரகங்களில் ஒன்றை அரேபியர்களின் நாட்டுக்குக் கொண்டு சென்று அவர்கள் அதை வணங்கச் செய்ய விரும்புவதாகக் கூறி தமக்கு ஒரு விக்கிரகத்தைத் தருமாறு கேட்டார். அவர்கள் ஹுப்பல் (Hubal) என்ற விக்கிரகத்தை அவருக்குக் கொடுத்தார்கள். அவர் அதை மக்காவுக்குக் கொண்டு வந்து ஓரிடத்தில் அமைத்தார். அதை வணங்குமாறு மக்களுக்கு உத்தரவிட்டார்.

www.padippakam.com



குழு மக்களிடையே ஏற்பட்ட வழக்குகளில் யார் இரத்தப்பணம் செலுத்த வேண்டும் என்பதில் பிரச்சினை எழுந்தால் இந்தப் பகடைக் காயைப் போட்டுப் பார்ப்பார்கள். யார் அதைக் கொடுக்க வேண் டும் என்று வருகிறதோ அவர் அதைச் செலுத்தியாக வேண்டும். ஒரு பகடைக்காயில் "ஆம்" என்றும், மற்றொன்றில் "இல்லை" என்றும் பொறிக்கப்பட்டிருக்கும். ஏதேனும் காரியம் செய்யலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்தப் பகடைக்காய்களைக் போட்டுப்பார்த்து "ஆம்" என்று வந்தால் செய்வதும், "இல்லை" என்று வந்தால் செய்யாமலிருப்பதும் முடிவு செய்யப்பட்டது. ஒரு பகடைக்காயின் மேல் "தண்ணீர்" என்று பொறிக்கப்பட்டிருந் தது. கிணறு தோண்டத் தொடங்குவதற்கு முன் இந்தப் பகடைக் காயைப் போட்டுப்பார்த்து, "தண்ணீர்" என்று வந்தால் கிணறு தோண்டுவார்கள்.[38] இவ்வாறாக, விவசாயப்பகுதியைச் சேர்ந்த ஒரு தெய்வம் மக்காவில் கொண்டுவந்து வைக்கப்பட்ட பிறகு அது இயற்றும் தொழிலே மாறிப்போவதைக் காண்கிறோம்.

மக்காவின் வேறு மூன்று முக்கிய தெய்வங்கள் மனாத் (Manāt), அல்-லாட் (al-Lāt), அல்-உஜ்ஜா (al-'Uzzā) ஆகியவை. தோர் அந்த்ரே (Tor Andrae) கூறுகிறார்: "இந்தத் தெய்வங்களை வணங்கும் வழக்கம் மிகப் பழங்காலத்திலேயே தோன்றியது. "மனாத்" மக்காவுக்குத் தெற்கே வசித்த, போர்க்குணமும் கவிதையில் ஈடுபாடும் கொண்ட ஹுதைல் (Hudhail) இனக்குழு மக்களால் மிகவும் போற்றப்பட்டது. இந்தத் தெய்வத்தின் பெயரை வைத்துப் பார்க்கும்போது விதி, நற்பாக்கியம் ஆகியவற்றின் தெய்வமாக இது இருந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. கிரேக்க தெய்வங்களிடையே விதி தேவதை களில் ஒன்றான "டைகி ஸோடேரியா" (Tyche Soteria) என்ற தேவதையை ஒத்ததாக இந்தத் தெய்வம் காணப்படுகிறது. அந்த கிரேக்க தேவதை ஜியுஸ் (Zeus) என்ற தெய்வத்தின் மகளாகவும், கடலிலும், போரிலும், பொதுச் சபைகளிலும் மனிதனுக்கு விடுதலை அளிப்பதையும் உதவிசெய்வதையும் தொழிலாகக் கொண்ட தாகவும் கருதப்பட்டது."[39] இரண்டாவதான அல்-லாட், ஹெரோடோடஸ் (Herodotus) வாழ்ந்த காலத்திலேயே இருந்தது. அவர் அதை "அலிலாட்" (Alilat) என்று குறிப்பிடுகிறார். "அல்-லாட்" என்ற சொல்லே பெண்தெய்வம் என்று பொருள் தருவதாகும். நபாடியன் சாசனங்களிலும் "தெய்வங்களின் தாய்" அல்-லாட் என்றே குறிப்பிடப்படுகிறது. இவ்வாறாக அரேபிய வட்டாரங் களில் அல்-லாட் தேவதை, ஸிமிடிக் மக்களின் தாய்மை, வளமை,

38. al-Tabari, *Tārikh al-Rasul*, *உருதுவில் மொழிபெயர்ப்புச் செய்தவர் ஸையத் முகமது இப்ராஹிம் (கராச்சி, 1967) பக்கம் 27.*

39. *Tor Andrae, Mohammad, the Man and His Faith (லண்டன், 1956), பக்கம் 17.*

www.padippakam.com



சுவர்க்கம் ஆகியவற்றின் பெருமை மிக்க தேவதையைப் போன்ற தாக இருந்தது எனக் கருதலாம். மேற்கத்திய ஸிமிடிக் பகுதிகளில் அந்தத் தேவதைக்கு இருந்த வடிவமே இதற்கும் இருந்தது எனக் கொள்ளலாம். எனவே இந்தத் தெய்வமும் மக்காவிலேயே தோன்றியது அல்ல என்பதும், வடக்கேயிருந்து இறக்குமதியானது என்பதும் தெளிவாகிறது. மூன்றாவதான அல்-உஜ்ஜாதான் தீர்க்கதரிசியின் காலத்தில் மூன்று தெய்வங்களிலும் மிக அதிகமாக வழிபடப்பட்டது. அதன் பெயர் "சக்தி வாய்ந்த" அல்லது "கௌரவிக்கப்படுகிற" என்ற பொருளைத் தருகிறது. அல்-உஜ்ஜாவின் புனிதத்தலம் மக்காவுக்கு வடக்கே சில மைல் தூரத்தில் இருந்த நக்லா (Nakhla)வில் அமைந்திருந்தது. "ஹிஜ்ரா"வுக்குப்பின் எட்டாவது ஆண்டில் அந்தப் புனிதத் தலத்தை அழிப்பதற்கு தீரரான காலிதை (Khalid) 30 குதிரைவீரர்களுடன் முகமது அனுப்பி வைத்ததாக வாகிதீ (Waqidi) தெரிவிக்கிறார். காலித் அந்தத் தேவதையின் வேலமரங்களை வெட்டிச்சாய்த்துக் கடைசிமரத்தை வெட்டிக்கொண்டிருந்த போது நீண்டகூந்தல் கொண்ட நிர்வாணக் கருப்புநிறப் பெண் ஒருத்தி அவரை அணுகினாள். அங்கே இருந்த அந்தத் தேவதையின் பூசாரி "தைரியமாயிரு, அல்-உஜ்ஜா, உன்னைக் காத்துக்கொள்," என்று கூவினார். முதலில் காலித் பயத்தால் நடுங்கினார்; ஆயினும் பின்பு தைரியம்பெற்றுத் தமது வாளின் ஒரேவீச்சால் அவளது தலையைப் பிளந்தார்.[40]

மேலே கண்ட விவரங்களிலிருந்து, மூன்று முக்கிய தெய்வங்களும் பெண்பாலாகவும், வடதிசை நாடுகள் அல்லது மத்திய தரைக்கடல் நாடுகளின் பயிர்விளைச்சல் விருத்தி சடங்குகள் அல்லது தாய் வழிபாட்டுடன் தொடர்பு உள்ளவையாகவும் இருப்பது தெரிகிறது; மக்காவில் தந்தைவழிச் சமூகமே முக்கியமாகப் பின்பற்றப்பட்டதால் அங்கே தாய்வழிபாடுகள் சமூக அமைப்புடன் ஒருங்கு சேரவில்லை. குரான் தந்தைவழிச் சமூகத்தை சட்டப்படியாக ஏற்று, பெண்தெய்வங்களைப் பல இடங்களில் விமர்சிக்கிறது: "என்ன? நீங்கள் ஆண் சந்ததிகளை விரும்புவீர்கள், ஆனால் அல்லாஹ்வை பெண் என்பீர்களா? இது நியாயமற்றது." நாம் ஏற்கெனவே கண்டபடி, மக்காவில் மட்டுமாவது தந்தைவழிச் சமூகம் மிகப் பழங்காலம் முதல் முக்கியமாயிருந்து வந்தது. ஆண்மகனை உயர்வாகக் கருதிய அத்தகைய சமூகத்தில் பெண்பால் தெய்வங்களும் அவற்றின் விளைச்சல் விருத்திச் சடங்குகளும் உருவாகியிருக்க முடியாது. எனவே இந்தத் தெய்வங்கள் விவசாயம் முக்கிய தொழிலாக இருந்த ஒரு பகுதியிலிருந்தே, அதாவது, வடக்கேயுள்ள செழிப்பான பிறைவடிவப் பகுதியிலிருந்தே

40. மேற்படி, பக்கம் 17-18.

www.padippakam.com



இறக்குமதி செய்யப்பட்டன என்பதுதான் நாம் காணக்கூடிய ஒரே முடிவாகும்.

"மனாத்" என்ற தாய் தெய்வமும் வணங்கப்பட்டது. அதிர்ஷ்ட தேவதையாகவும் பதூயின் மக்களின் இல்லுறை தெய்வமாகவும் அது இருந்தது. பாலைவன நாடோடிமக்கள், காலத்தை மிகப் பெரிய அழிக்கும் சக்தியாகக் கருதினார்கள். அவர்களுடைய வாழ்வில் இயல்பான இந்தக் கருத்து அரேபியர்களின் இலக்கியத் தில் ஆழ்ந்து ஊடுருவிக் காணப்படுகிறது. காலம் தான் மனிதனின் விதியைத் தீர்மானிக்கிறதென்றும், மனிதன் எப்படித்தான் முயன் றாலும் பயனில்லை என்றும் அரேபியர்கள் கருதினார்கள். அத னால் அதிர்ஷ்டம் தரும் தெய்வமான மனாத்துக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. இந்தத் தெய்வத்துக்குக் குறிப்பிட்ட வடிவம் எதுவும் கிடையாது. சில சமயங்களில் கரடுமுரடான பெரிய கற்கள்—இவை முன்னொரு காலத்தில் நிலவிய பெருங்கல் அமைப்புகளைச் சேர்ந்தவை என்பது சில அறிஞர்களின் கருத்து—நிறுவப்பட்டு வணங்கப்பட்டன. ஆல்ஃப்ரெட் கியோம் (Alfred Guillaume) கூறுகிறார்: "அரேபியர்கள் தங்கள் பூர்வீக வழிபாடுகளை, பெரிய கற்கள், பாறைகள், மரங்கள், கிணறுகள் ஆகியவற்றில் உறைவனவாகக் கருதப்பட்ட தெய்வம் அல்லது ஆவிக்கு அர்ப் பணித்தார்கள். இந்தக் கற்கள் பலிபீடங்களாகப் பயன்பட்டன. பலியிடப்பட்ட உயிரின் இரத்தம் இவற்றின் மீது பூசப்பட்டது அல்லது ஊற்றப்பட்டது; இனக்குழு மக்கள் இவற்றைச்சுற்றி நடன மாடினார்கள். இந்த முறையில் இரத்த சகோதரத்துவம் உருவாக்கப் பட்டது என்று ஹெரோடோடஸ் கூறுவது மிகவும் நம்பக்கூடிய தாக உள்ளது. வழிபாட்டை நடத்தியவர்கள் அந்த இரத்தத்தை நாவால் நக்குவதன் மூலம் அல்லது கைகளை அதில் நனைப்பதன் மூலம் தங்களுக்கிடையேயும், தங்களுக்கும் அக்கல்லுக்குரிய தெய்வத்துக்கும் இடையேயும் பிணைப்பை உருவாக்கிக்கொண் டார்கள். அல்-உஜ்ஜா தேவதைக்கு நடத்தப்பட்ட இத்தகைய பலி குறித்து கிறிஸ்தவ இயல் ஆய்வாளர் நிலஸ் (Nilus) விவரமாகக் குறிப்பிடுகிறார். குரானில் மனிதப்பலி பற்றிய குறிப்பு எதுவும் இல்லை என்றாலும், மேலே குறிப்பிட்ட எழுத்தாளரின் எழுத்துக் களிலிருந்தும், ஆரம்பகால அரபி மூலங்களிலிருந்தும், இந்தத் தெய்வங்களுக்கு தூமா (Dūma), ஹீரா (Hira) ஆகிய இடங்களில் நரபலி கொடுக்கப்பட்டதென்பது தெரிகிறது."[41] தீர்க்கதரிசியின் பாட்டனார் அப்த் அல்-முத்தலிப் ('Abd al-Muttalib) தமது மகனை பலிகொடுக்க விரதம் எடுத்திருந்தார் என்று இபின்

41. Alfred Guillaume, *Islam* (லண்டன், 1969) பக்கம் 8-9.

www.padippakam.com



இஸ்ஹாக் (Ibn Ishaq) தமது "ஸீரத்" (Sirat) நூலில் தெரிவிக்கிறார். அவர் கூறுகிறார்: "அப்த் அல்-முத்தலிப், ஜம்ஜம் கிணற்றை வெட்டிக்கொண்டிருந்த போது குரைஷிகளின் எதிர்ப்பு எழுந்த சமயத்தில் இவ்வாறு விரதம் எடுத்ததாகக் கூறப்படுகிறது; கடவுளுக்குத்தான் உண்மை தெரியும். தமக்குப் பத்துப் புதல்வர்கள் பிறந்து வளர்ந்து தம்மைப் பாதுகாக்கக் கிடைப்பார்களானால் அவர்களில் ஒருவரைக் காபாவில் கடவுளுக்குப் பலிகொடுப்ப தாக அவர் விரதம் எடுத்தார்."[42] இபின் இஸ்ஹாக் மேலும் தொடர்ந்து எந்த மகனைப் பலி கொடுப்பதென்று "ஹோபல்" தேவதையின் முன் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்க்கப்பட்டதை யும், அதில் தீர்க்கதரிசியின் தந்தையான அப்தல்லாவின் பெயர் வந்ததையும் விவரிக்கிறார். அப்தல்லாவைப் பலிகொடுப்பதென்று அப்த் அல்-முத்தலிப் தீர்மானித்தார். ஆனால் குரைஷ் மக்கள் அதைத் தடுத்து, கழுவாயாக வேறு பலிகொடுக்குமாறு கூறி அப்தல்லாவின் உயிரைக் காப்பாற்றினார்கள்.[43]

இதே காரணத்தினால்தான் ஆரம்பகால அரபுசமூகத்தில், கிரேக்க, எகிப்திய, இந்திய சமூகங்களில் இருந்தது போல மனங் கவரும் கற்பனைகளோ புராணக்கதைகளோ காணப்படவில்லை. குரானில் வரும் புராணக்கதைகள் கூட அரபுமக்களுக்குச் சொந்த மானவை அல்ல; வளம்மிக்க வடபகுதியில் தோன்றிய யூதமதம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. 'புதிய லாரூஸ் புராணக் கலைக்களஞ்சியத்'தில் (New Larousse Encyclopaedia of Mythology) அரபு அல்லது இஸ்லாமியப் புராணக்கதைகள் பற்றித் தனியான பகுதிகள் இல்லை. "புராதன பாரசீகத்தின் புராணக் கதைகள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு உட்பிரிவாக இது இடம் பெறுகிறது. இதுவும் ஒருபக்கத்துக்கு மேல் இல்லை. இதில் பெரும் பகுதியும் பாரசீகமயமான இஸ்லாமைப் பற்றிக் கூறுகிறது. இந்தக் கலைக்களஞ்சியம் கூறுகிறது, "புராணக் கதைகள் உருவாவதற்கு வாய்ப்பான சூழ்நிலை இல்லாத மதம் இஸ்லாமைப் போல வேறு எதுவும் இல்லை எனலாம். சட்டத்தைப் பற்றிய அதன் வறண்ட, முறையான கருத்துக் காரணமாக, தனிநபர்கள் கற்பனையில் ஈடு படுவதற்கு மட்டுமின்றி, மக்களின் கற்பனைகள் சிறகடிப்பதற்குக்

42. Ibn Ishaq, *Sirat Rasul Allah*, பக்கம் 66, பார்க்க.

43. மேற்படி, பக்கம் 67. ஆயினும் மனிதர்களைப் பலியிடும் வழக்கம் மிகச் சாதாரணமாக இருந்ததாகத் தெரியவில்லை. மக்கா சமூகம் விவசாயச் சமூகம் அல்ல என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் இத்தகைய பலிகள் பொதுவாக விவசாய சமூகத்துடன் தொடர்புள்ள பயிர் விளைச்சல் வேண்டும் பலிகளாகும். மேலும், புரோகிதர் வர்க்கம் என்று எந்தவித உற்பத்தி வே லையும் செய்யாமல் சமயச் சடங்குகளில் மட்டும் ஈடுபட்டிருக்க வேண்டு மானால், அதற்கு தேவையான அளவு பொருளாதார உபரி இருக்க வேண்டும்.

www.padippakam.com



கூட இடமில்லாமற் போகின்றது."[44] கலைக்களஞ்சியம் மேலும் கூறுகிறது: "அரேபியர்கள் இயற்கை வழிப்பட்ட, இயற்கைப் பொருள்களில் எல்லாம் உயிர் உறைகிறது என்று கருதும் மதத் தைப் பின்பற்றி, கற்களையும் மரங்களையும் வணங்கினார்கள். அவர்களுடைய கருத்துப்படி பிரபஞ்சம் முழுவதிலும் நல்லவை யும் தீயவையும் ஆன ஆவிகளும், ஜின் (jinn), ஜீனீ (geniē) என்ற சக்திகளும், மனிதர்களுக்குத் தீங்கு செய்வதற்கென்றே பல்வேறு வடிவங்களை எடுத்துத் தோன்றும் எஃப்ரிட் (Efrit) களும் நிரம்பியிருந்தன. இவர்களின் வழிபாட்டுமுறையில் கரடு முர டான பாறைக்கற்கள் சிலைகளாக வைத்து வணங்கப்பட்டன. "மனாத்" தேவதையின் சிலை அப்படிப்பட்டதே..." குரானிலும் ஜின்கள் ஒரு தனி வகையான படைப்புகளாகவும், மனிதர்களின் மனத்தில் தீய எண்ணங்களை இடுவனவாகவும் குறிப்பிடப்படு கின்றன. குரான் கூறுகிறது: "சொல்லுவீராக, மனிதர்களின் நாய கனிடம், மனிதர்களின் இறைவனிடம் புகழ்நாடி ஓடுகிறேன் என்று. மனிதர்களின் உள்ளங்களில் கெட்ட எண்ணங்களைத் தூவிவிட்டு மறைந்துவிடும் ஜீனீகளிடமிருந்தும் மனிதர்களிடமிருந்தும் எனக்கு விடுதலையளிக்குமாறு நாடுகிறேன், என்று."[45]

குரானில் பல இடங்களில் குறிப்பிடப்படும் ஆத் (Ad), தமூத் (Thamūd) ஆகியோரின் கதை அரேபியாவில் தோன்றிய ஒன்று. ஆதின் கதை வளம்மிக்க தென்பகுதியைச் சேர்ந்தது. ஆத் இனக் குழு பைபிளில் வரும் நோவாவின் வம்சத்தினர் என்று கருதப்படு கிறது. பேபல் கோபுரம் கட்டப்பட்ட போது பல்வேறு மொழி களின் குழப்பம் ஏற்பட்டபின் நோவா, ஹத்ரமாத் (Hadramawt) பகுதியில் அல்-அஹ்காஃப் (al-Ahqāf) என்ற இடத்தில் போய்த், தங்கியதாகக் கூறப்படுகிறது. அங்கு அவரது சந்ததியினர் பல்கிப் பெருகினார்கள். அவர்களின் முதல் மன்னர் "ஷத்தத்" (Shaddad) குரானில் குறிப்பிடப்படுகிறார். அவர் ஆதின் புதல்வர். அவர் எழில்மிக்க நகரம் ஒன்றை அமைத்ததாகப் பரம்பரைக்கதை குறிப் பிடுகிறது. அந்த நகரில் அழகான அரண்மனை ஒன்றை எழுப்பி, அதில் பெரும் பொருளும் உழைப்பும் செலவிட்டு அழகுமிக்க பூங்காவனம் ஒன்றை அமைத்தார். அவருடைய மனத்தில் அகந்தை வளர்ந்து, தாம் நிரந்தரமானவர் என்றும் அழிக்கப்பட முடியாதவர் என்றும் நினைத்தார் என்று குரானில் வரும் கதை குறிப்பிடுகிறது. இதன் விளைவாக அவர் தண்டிக்கப்பட்டார்; அவருடைய நகரம் அழிக்கப்பட்டது. "அல்லாஹ், ஆத் மக்களை எப்படித் தண்டித்

44. Guirand (ed.), *New Larousse Encyclopaedia of Mythology,* மொழிபெயர்ப்பு R.Aldington and D. Ames (*லண்டன், 1969*), பக்கம் 323.

45. குரான், அத்தியாயம் 114.

www.padippakam.com



தான் என்பதை நீங்கள் கேட்டதில்லையா? நாட்டிலேயே அது போன்ற ஒன்று கட்டப்படாத, தூண்கள் கொண்ட, இராம் (Iram) நகரின் மக்களை?" என்று குரான் கூறுகிறது.[46] இந்தக் கதை, வளம் மிக்க விவசாய அடிப்படைக்கொண்ட தென்பகுதியின் செழிப் பான காலம் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

அரேபியாவைச் சேர்ந்த "தமூத்" என்ற மற்றொரு இனக்குழு குரானில் குறிப்பிடப்படுகிறது. பரம்பரைக் கதைகளில் வரும் இந்த மக்கள் வடக்கு அரேபியாவில் ஹிஜாஸுக்கும் ஸிரியாவுக் கும் இடையில் வாழ்ந்தார்கள். அவர்கள் பாறைகளில் குடைந்து உருவாக்கப்பட்ட உறைவிடங்களில் வசித்ததாகத் தோன்றுகிறது. இந்தப் பாறைக்குடைவுகள் சமாதிகளாக இருந்திருக்கக்கூடும் என் றும், வசிக்குமிடங்கள் என்று தவறாகக் கருதப்பட்டதாகவும் நபேடியன் (Nabataean) கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. அவர்கள் "ஆத்" மக்களைப் போலவே பாவம் செய்தார்கள் என்றும் "ஸாலிஹ்" (Salih) என்ற தங்கள் தீர்க்கதரிசியை எதிர்த்தார்கள் என்றும், அதனால் ஒரு பூகம்பத்தில் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் குரான் குறிப்பிடுகிறது.

"அதன்பின் இடிபோன்ற முழக்கத்துடன் ஒரு பூகம்பத்துக்கு அவர்கள் உள்ளானார்கள். காலையில் அவர்கள் தங்கள் வீடுகளில் குப்புற விழுந்து இறந்துகிடந்தார்கள்", என்று குரான் கூறுகிறது.[47] இந்தப் பாறைக்குடைவு உறைவிடங்கள் பெருங்கல் அமைப்பு களாகவும் (பெரிய கல் சமாதிகளாக) இருக்கக்கூடும். இவற்றை இப்போதும் கூடக் காணலாம். இஸ்லாமியப் புராணக்கதைகள் இல்லாமலிருப்பது, அந்த மதம் தோன்றிய மத்திய அரேபியாவில் பொருளை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாகரிகம் போதிய அளவுக்கு உயர்ந்து வளர்ந்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

46. மேற்படி, அத்தியாயம் 89.
47. மேற்படி, அத்தியாயம் 7, வசனம் 76.

# 3

# மக்காவில் இஸ்லாமின் தோற்றம்

இஸ்லாமின் தீர்க்கதரிசி முகமது தமது புதியமதத்தை மக்கா நகரில் போதிக்கத் தொடங்கினார். எனவே போதனையைத் தொடங்கிய சமயத்தில் மக்காவில் இருந்த நிலைமையைப் புரிந்து கொள்வது அவசியம். முன்னமே குறிப்பிட்டபடி மக்கா பன்னாட்டு வர்த்தக மார்க்கத்தில் அமைந்திருந்தது மட்டுமின்றி அந்த நகரமே முக்கிய வர்த்தக மையமாகவும் விளங்கியது. தெற்கு அரேபியா விலிருந்து வடக்கு அரேபியாவுக்குச் செல்லும் லவங்கப்பொருள்கள் வர்த்தக மார்க்கத்தில் அமைந்திருந்த காரணத்தால் மக்கா செல்வச் செழிப்புப் பெற்றது என்பதில் ஐயமில்லை. பல்வேறு திசைகளில் செல்லும் வர்த்தகர்கள் வழியில் தங்கிச்செல்ல வசதியான இடமாக மக்கா பயன்பட்டிருக்கக்கூடும். மத்தியதரைக்கடல், பாரசீக வளைகுடா, ஜித்தா வழியாக செங்கடல் ஆகியவற்றுக்கும், கடல்கடந்து ஆப்பிரிக்கா வுக்கும் செல்லும் மார்க்கங்கள் பிரியும் இடமாக அது அமைந்திருந்தது.[1] பலதிறப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்ற மிக முக்கிய நகரங்களில் ஒன்றாக மக்கா விளங்கியது. இந்த நகர மக்கள் முன்னா ளில் நாடோடி வம்சாவளியினரே. நாடோடி பதூயின்கள், வாழ நெருக்கடியான பிரச்சினைகள் ஏற்பட்ட போது மக்கா போன்ற வளரும் நகரங்களில் குடியேறினர், அல்லது செழிப்பான நிலங் களைத்தேடி வடக்கே சென்றார்கள் என்பதை சென்ற அத்தியாயத் தில் பார்த்தோம். பல்வேறு பகுதிகளில் இஸ்லாமியப் பேரரசுகள் உருவான பின்பும் நெடுங்காலத்துக்கு மக்கள் இவ்வாறு இடம் பெயர்வது நீடித்தது. உண்மையில் இது, இபின் கல்தூன் (Ibn Khaldūn) கூறுவது போல இந்தப் பேரரசுகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் தீர்மானித்த ஒரு முக்கிய காரணியாக இருந்தது. நாடோடி இனத் தைச் சேர்ந்த இந்த மக்கள் ஒரு நகரில் சென்று குடியேறும் போது தங்களுடைய பழைய வாழ்க்கையின் விருப்புவெறுப்புக்களையும் இனக்குழு விசுவாசத்தையும் (இதை இபின் கல்தூன் 'அஸபீயா'- asabiyah-என்று குறிப்பிடுகிறார்) கூடவே கொண்டு சென்றார்கள். இந்தக்

1. Joel Carmichael, *The Shaping of the Arabs* (லண்டன், 1969) பக்கம் 21.

www.padippakam.com



குழு விசுவாசமே இவர்கள் ஒன்றுபட்ட அரசியல்குழுவாக அமைய முக்கிய பலமாக இருந்தது. இந்தக் குழுவுணர்வு பற்றி இபின் கல்தூன் கூறுகிறார்:

> ஒரு குழுவைச் சேர்ந்த மக்களிடையே குழுவுணர்வு உறுதியாக உருவாகிவிட்டால், அதனுடன் தொடர்பில்லாத வேறு குழுவுணர்வுகளைக்கொண்ட மக்கள் மீது தனது ஆதிக்கத்தை நாட்ட முயல்வது அதன் இயல்பாகும். இதில் ஒன்று, மற்றதனுடன் சமபலம் கொண்டதாக இருந்துவிட்டால், அல்லது அதன் ஆதிக்க முயற்சியை முறியடித்துவிட்டால், இந்தப் போட்டியில் சம்பந்தப்பட்ட இரண்டு குழு மக்களும் ஒருவருக்கொருவர் சமமாகிவிடுகிறார்கள். ஒவ்வொரு குழுவுணர்வும், உலகம் முழுவதிலும் இனக்குழுக்களும் நாடுகளும் செய்வதைப் போலவே, தன்னுடைய நிலப்பகுதியிலும், தன் மக்கள் மீதும், தனது அதிகாரத்தைக் காத்துக்கொள்கிறது.[2]

இத்தகைய பல்வேறு குழுவுணர்வுகளும் மக்காவில் செயல்பட்டன. இதன் விளைவாக, ஹில்ஃப் அல்-ஃபுதூல் (Hilfal-Fudūl) — இதைப் பற்றி இந்த அத்தியாயத்தில் பின்னர் கூறப்படும் — என்ற "வீரக்குழாம்" போன்ற பல்வேறு கூட்டமைப்புகள் தோன்றலாயின. இந்தக் குழுக்களிடையே ஆதிக்கப் போட்டிகள் வளர்ந்தன. இதனால் சமூகத்தில் பதற்றநிலை தோன்றியது. இந்தப் போட்டிகள் அரசியல் ஆதிக்கத்துக்காகவன்றி, வர்த்தக ஆதிக்கத்துக்காகவே நடந்தன. மக்காநகரம், இஸ்லாம் தோன்றி வளர்ந்த காலகட்டத்தில் மிக முக்கியமான வர்த்தகமையமாக விரைவாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. தவிரவும், அது மேற்கு அரேபியாவின் அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் நகரமாகவும் பெருமை பெற்றது. எச்.ஏ.ஆர். கிப் (H.A.R. Gibb) எழுதுகிறார்: "சுறுசுறுப்பான, செல்வம் மிக்க நகரம் அது; இந்துமாக்கடலுக்கும் மத்தியதரைக்கடலுக்கும் இடைப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் முழுவதும் அநேகமாக அதன் ஏகபோகமாக இருந்தது; பண்டைய பல்மைரா (Palmyra) நகரத்தை நினைவூட்டுவதாக, ஆனால், அதனுடைய பளபளப்பான கிரேக்க மேற்பூச்சு இல்லாததாக இருந்தது. அந்த நகர மக்களின் பழக்க வழக்கங்களிலும் சமூக அமைப்புகளிலும் அரபுமக்களுக்குரிய எளிமைப்பண்பு ஓரளவு மாறாமல் இருந்த போதிலும், அரபு இனக்குழு மக்களுடனும், ரோமானிய அதிகாரிகளுடனும் அவர்கள் கொண்டிருந்த வர்த்தக, ராஜீயத் தொடர்புகள் மூலம் மனிதர்களைப் பற்றியும் நகரங்களைப் பற்றியும் விரிவான அறிவைப் பெற்றிருந்தார்கள்.[3] நாடோடி இனக்குழுக் கட்டமைப்பு, புதிய வர்த்தக வாழ்க்கைமுறையின் நெருக்குதலுக்கு உட்பட்டுச் சிதைந்துகொண்டிருந்தது. இனக்குழு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட

2. Ibn Khaldūn, *The Muqaddimah* (லண்டன், 1970) பக்கம் 83.
3. H.A.R. Gibb, *Muhammadanism* (லண்டன், 1969) பக்கம் 17.

www.padippakam.com



புதிய உறவுமுறை ஒன்று உருவாகிக்கொண்டிருந்தது. இந்தப் பின்னணியைப் புரிந்துகொண்டால்தான் இஸ்லாம் என்ற மதமாக உருவெடுத்த இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

மக்காவில் அந்தக் காலகட்டத்தில் குரைஷ் (Quraysh) என்ற இனக்குழு ஆதிக்கம் பெற்றிருந்தது. சாதாரணமாக எந்த ஒரு இனக்குழுவும் இருந்தது போல இதுவும் பல்வேறு குலக்குழுக்களைக் கொண்ட தொகுப்பாக இருந்தது. குரைஷ் இனக்குழுவைச் சேர்ந்த குஸைய் (Qusayy) யின் புதல்வர்களில் ஒருவரான அப்த் மனாஃபின் ('Abd Manãf) நான்கு புதல்வர்கள் வர்த்தகத்தைப் பெருக்க வாய்ப்புள்ள பகுதிகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள் என்பது பாரம்பரியக் கதை. இவர்களில் ஒருவர் பாரசீகத்துக்கும், மற்றொருவர் எதியோப்பியாவுக்கும், மூன்றாமவர் யேமனுக்கும், நான்காமவர் பைஜாண்டிய ஸிரியாவுக்கும் சென்றார்கள். குரைஷ் இனக்குழுவினர் மக்காவின் வர்த்தகம் பெருகி வளர்வதற்கு வேண்டிய அனைத்தையும் செய்தார்கள். காலப்போக்கில் இந்த இனக்குழுவே மக்காவில் மிகவும் செல்வாக்குக் கொண்டதாக ஆயிற்று. தீர்க்கதரிசியின் மறைவுக்குப் பிறகு ஆட்சி நடத்தும் உரிமை தங்களுக்குத்தான் இருக்கிறது என்று கருதும் அளவுக்கு அந்த இனக்குழுவின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. அதனால் கலீஃபாவாக வருபவர் அந்தக் குழுவைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும் என்ற மரபை அவர்கள் தொடங்கி வைத்தார்கள். எல்லா முஸ்லிம்களும், அவர்கள் எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சமமான உரிமைகள் உடையவர்கள் என்ற கருத்துக்கு இது முரண்பட்டதாக இருந்தது. பின் ஒரு அத்தியாயத்தில் நாம் காணப்போகும் கரிஜைட் (Kharijite) இயக்கம் தோன்றுவதற்கு மற்றும் பல காரணங்களுடன் பதூயின் மக்களின் சமத்துவக்கொள்கையும் முக்கிய காரணமாக இருந்தது. பொதுவாக நகரவாசிகளும், குறிப்பாக குரைஷ் இனத்தவரும் அதிகாரத்தைத் தங்கள் ஏகபோகமாக வைத்திருப்பதை எதிர்த்து எழுந்த கிளர்ச்சி அது. இவ்வாறாக, ஆறாம் நூற்றாண்டுக்குள் குரைஷ் இனக்குழுவினர் வர்த்தகத்தில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களின் வர்த்தக அணிகள் நான்கு திசைகளிலும் பலநாடுகளிலும் சென்று வர்த்தகம் நடத்தின.

மக்காவின் முன்னணி வர்த்தகர்கள் பெரும் செல்வங்களுக்கு அதிபதிகளாகி, அந்நகரின் வர்த்தகப் பொருளாதாரத்தின் கேந்திர முனைகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்கள். பல்வேறு நாடுகளிலிருந்தும் வர்த்தகர்கள் புதிய முயற்சிகளைத் தொடங்க மக்காவுக்கு வரலானார்கள். பல்வேறு தொழில்களைச் செய்யும் கைவினைஞர்களும் பெரும் எண்ணிக்கையில் அந்த

www.padippakam.com



நகரில் வந்து வசிக்கத் தொடங்கினார்கள். மக்காவின் செல்வம் மிக்க வணிகர்களை நம்பி அவர்களது வாழ்க்கை நடைபெற்றது. அந்தக் காலத்தில் மக்காவில் நடைபெற்ற பல்வேறு தொழில்களை ஜாஹிஸ் (Jāhiz) குறிப்பிடுகிறார். தச்சர்கள், கொல்லர்கள், வாள்கள் செய்வோர், மது வியாபாரிகள், தையல்தொழில் செய்வோர், நெசவாளர்கள், அம்புகள் செய்வோர், எழுதுபொருள்கள் விற்போர், லேவாதேவிக்காரர்கள், எண்ணெய் வியாபாரிகள், தோல் பதனிடுவோர், தோல் வியாபாரிகள் முதலானவர்கள் மக்காவில் தொழில் நடத்தினார்கள்.[4] நகரின் மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது வர்த்தகமே. ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் கிடைத்த லாபங்கள், மற்ற வழிகளில் கிடைத்த வருவாயைவிட மிக அதிகமாக இருந்தன. நகரில் பெருகிக்கொண்டே வந்த மக்கள் தங்கள் உணவுக்கு வர்த்தகத்தையே நம்பியிருந்தார்கள். (உணவுக்கு வேண்டிய தானியம் வடகிழக்கில் உள்ள யமாமா என்ற இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டது). மக்காவைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர விரும்புகிறவர் அந்நகரின் வர்த்தக அணிகள் செல்ல முடியாமல் தடுத்துவிட்டால் போதும். (பின்னாளில் மக்காவின் வர்த்தகத்தை மூச்சுத்திணறச் செய்வதற்கு முகமது இந்த வழியைத்தான் பின்பற்றினார்.)[5] இதே காரணத்தினால்தான் குரானில் வர்த்தகர்களின் பேச்சில் வழங்கும் உவமைகளும் உருவகங்களும் காணப்படுகின்றன. “கடவுள் கணக்கு வைப்பதில் வல்லவர்,” என்று குரானில் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. இதே போல “நம்பிக்கை வைப்போர் லாபத்திலும், நம்பாதவர்கள் நஷ்டத்திலும் வியாபாரம் நடத்துகிறார்கள். தவறை வழிகாட்டியாகக் கொள்வோர் நஷ்ட பேரம் நடத்துகிறார்கள்,” என்றும் வசனம் வருகிறது. தீர்க்கதரிசி மதீனாவில் அரசின் தலைவராக இருந்த சமயத்திலும் கூட, பொருள்களை மொத்தமாக வாங்கிச் சில்லரையில் லாபத்துக்கு விற்பதில் விருப்பமற்றவராக இருக்கவில்லை என்று இமாம் ஹன்பல் (Imām Hanbal), “முஸ்னத்” (Musnad) என்ற தமது புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.[6] மாண்ட்காமரி வாட்டும் பின்வருமாறு கூறுகிறார்: “மக்கா ஒரு வர்த்தக மையமாக மட்டுமின்றி நிதி கொடுக்கல், வாங்கல் மையமாகவும் இருந்தது... மக்காவில் பல்வேறு விதமான நிதி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. முகமது காலத்தில் மக்காநகரின் முக்கிய பிரமுகர்கள் வேறெதையும் விட நிதிகள் கொடுப்பதை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொடுக்கல் வாங்கலில் சாமர்த்தியமும், ஊகங்களில் மதிநுட்பமும், ஏடன் முதல் காஸா (Gaza) அல்லது டமாஸ்கஸ் (Damascus) வரை நல்ல லாபந்தரும் முதலீடுகள் செய்வதில் ஆர்வமும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் பின்னிய நிதிவலையில் மக்காநகரின்

4. Jāhiz, *Mahasin*, பக்கம் 165 பார்க்க.
5. D.S. Margoliouth, *Muhammad and the Rise of Islam*, 3வது பதிப்பு (1905), பக்கம் 14.
6. Imām Hanbal, *Musnad*, i, பக்கம் 255.

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் அனைவரும் மட்டுமின்றி சுற்றிலும் உள்ள பகுதிகளின் பிரமுகர்களும் கூட அகப்பட்டிருந்தார்கள். குரான் பாலைவனச் சூழலிலன்றி மதிப்புயர்ந்த நிதிப் பரிமாற்றச் சூழலில் தோன்றியது."[7]

மக்காவின் நிலைமையைப் புரிந்துகொள்வதற்கு, வர்த்தகம், குறிப்பாக அதிக லாபம்தரும் வர்த்தகத் துறைகள் பெருமளவில் விரிவடைந்தது கி.பி. 610-க்கு முந்திய பதினாண்டுகளில்தான் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். எனவே முகமதுவின் சமகாலத்தினர், ஓரளவுக்காவது மேய்ச்சல் நிலங்களைச் சார்ந்த வாழ்க்கை நடத்திய மக்களிலிருந்து ஒரு தலைமுறைக்கு மேல் பிந்தியவர்களாக இருக்க முடியாது. முகமதுவின் பாட்டனார் அப்ரஹாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டின் நிபந்தனைகளிலிருந்து அவரிடம் மிகப்பெரும் அளவில் ஒட்டக மந்தைகள் இருந்தன என்பதை அறிகிறோம். அதே சமயம் முகமதுவின் காலத்தில் மக்கா நகரில் வாழ்ந்த மக்களில் பலர் வர்த்தக நடவடிக்கைகள் மூலமே வாழ்க்கை நடத்தினார்கள் என்பதும் அநேகமாக நிச்சயமாகத் தெரிகிறது. இவ்வாறாக ஒன்று அல்லது இரண்டு தலைமுறையில், மேய்ச்சல் நிலங்களைச் சார்ந்த நாடோடி மக்கள், வர்த்தகத்தை நம்பி வாழும் நிலைக்கு மாறிவிட்டார்கள். பொருளாதாரக் கீழ்க் கட்டமைப்பில் ஏற்பட்ட இந்த மாற்றம், மக்காநகர சமூகத்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது என்பதைப் பின்னர் காண விருக்கிறோம். புதிய சமூக-பொருளாதார அணியமைப்புகள் உருவாகிக்கொண்டிருந்ததே இதற்குக் காரணம். உடைமைகள் சம்பந்தமாகப் புதிய உறவுநிலைகள் உருவாகியிருந்தன. பதூயின் மக்களின் நாடோடிச் சமூகத்தில் உடைமைகள் எல்லோருக்கும் சொந்தமாயிருந்தன; ஆனால் மக்காவில் வர்த்தகச் சமூகம் ஒன்று உருவானதைத் தொடர்ந்து கூட்டு உடைமைமுறை மாறி தனிநபர் சொத்துரிமை முறை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அதற்குத் தகுந்த முறையில் சட்டங்கள் ஏற்படவில்லை. இந்தத் தேவையை இஸ்லாம் நிறைவு செய்தது; இதை பின்னர் காணவிருக்கிறோம். இவ்வாறாக டி.எஸ். மர்கோலியூத் (D.S. Margoliouth) கூறுகிறார்: "மக்காவில் தனிநபர் சொத்துரிமை முறை இருந்தது; உண்மையில் ஓரளவு வளர்ச்சி பெற்றதாகவே இருந்தது என்றே தோன்றுகிறது. இரத்தப்பகைக் கொள்கைக்கு அந்த முறை முரணானதாகக் காணப்பட்ட போதிலும் அது அங்கு உருவாகியிருந்தது. மக்காவின் குடும்பத் தலைவர்கள் வெளி வர்த்தகத்தில் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனத்தின் உறுப்பினர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு முறையும் கிடைக்கும் லாபம் முதலீட்டாளர்களிடையே விகிதக் கணக்குப்படி பகிர்ந்துகொள்ளப்பட்டது. அதை அவர்கள் தங்கள் விருப்பப்படிச்

7. W. Montgomery Watt, *Muhammad at Mecca* (லண்டன்), பக்கம் 3.

www.padippakam.com



செலவு செய்தார்கள், அல்லது சேர்த்து வைத்தார்கள் அல்லது புதிய முயற்சிகளில் முதலீடு செய்தார்கள்."[8] மக்காவில் தனியார் சொத்துரிமை இருந்ததாக தபரி (Tabari) யும் குறிப்பிடுகிறார். தீர்க்கதரிசியின் பாட்டனாரான அப்தல் முத்தலிபுக்கும் அவரது தந்தையின் சகோதரருக்கும் இடையே ஒரு கிணறு உள்ளிட்ட சில சொத்துக்கள் பற்றி எழுந்த தாவாவைப்பற்றி அவர் கூறுகிறார்.[9] தபரியும் கூட, குஸய் (Qusayy) மக்காவின் மீது தமது அதிகாரத்தை நிலைப்படுத்திக்கொண்டிருந்த சமயத்தில் நடந்த சொத்து வாங்கல்-விற்றல் பற்றி விவரங்கள் தருகிறார்.[10]

இனி, மக்காநகர சமூகத்தின் மற்றொரு அம்சத்தைக் கவனிப் போம். பல திறப்பட்ட சிக்கலான வர்த்தக நடவடிக்கைகள் அந்த நகரில் நடைபெற்று வந்தபோதிலும், முறைப்படி அமைந்த அரசோ, அதிகாரிகள் அமைப்போ, நிலையான ராணுவமோ இல்லை. மக்காவில் விவசாயம் நடத்த வாய்ப்பு இல்லாததால் அங்கு நிலப் பிரபுத்துவ முறையோ அரசுரிமை முறையோ உருவாக வழியில்லை. உண்மையில் மக்காநகர மக்களோ, நாடோடி மக்களோ பேசிய அரபுமொழியில் மன்னர் என்பதைக் குறிக்கும் சொல் எதுவும் இல்லை. "மாலிக்" (மன்னர்) என்ற சொல் வெளிநாடுகளில் ஆண்ட அரசர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இபின் குர்தத்பேஹ் (Ibn Khurdadbeh) என்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் "உல கின் ஆட்சியாளர்களின் பெயர் அடைமொழிகள்" என்ற தமது புத்தகத்தில் பாரசீகம், ரோம், துருக்கி, திபேத், சீனா, இந்தியா, அபிஸீனியா முதலான பல்வேறு உலகநாடுகளின் மன்னர்களுக்கு வழங்கிய பட்டப்பெயர்களைத் தொகுத்திருக்கிறார். இந்த நாடு களின் பட்டியலில் அரேபியா இடம் பெறவில்லை. அங்கு அரசர் யாரும் இல்லை என்பதே இதற்குக் காரணம்.[11] (அரேபியா என்பதில் தெற்கு அரேபியாவையும், பைஸாண்டியம், பாரசீகம் ஆகியவற் றின் எல்லையில் உள்ள இடைப்பகுதி நாடுகளையும் நாம் சேர்க்க வில்லை.) மக்காவில் அரசாங்க அமைப்பு என்று குறிப்பிடும்படி யாக இருந்தது மலா (mala'ā) என்ற சபை மட்டுமே. இந்தச் சபை பெரிதும் பல்வேறு குலக்குழுக்களின் தலைவர்களையே உறுப் பினர்களாகக் கொண்டிருந்தது. மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், இந்தச் சபை ஒரு ஆலோசனைக்குழுவே என்பதும் இதனுடன் இணைந்ததாக நிர்வாக அதிகார அமைப்பு எதுவும் இல்லை என் பதும் ஆகும். மேலும், ஒவ்வொரு குலக்குழுவும் கொள்கையளவில் சுதந்திரமானது; எனவே சபையின் தீர்மானம் எதுவும் அதைக் கட்டுப்படுத்தாது. சபையில் ஒருமனதாகச் செய்யப்பட்ட முடிவு களைத்தான் செயல்படுத்த முடியும். அரசின் அரசியல், நிர்வாகக்

8. Margoliouth, முன்பு குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 30-31.
9. Tabari, Tārikh-e-Tabari, உருதுவில் மொழி பெயர்த்தவர் Syed Mohammad Ibrahim, Nafis Academy, Karachi, தொகுதி 1, பக்கம் 134.
10. மேற்படி, பக்கம் 40-45.
11. Ibn Khuradadbeh, *Al-Masalik wal Mumalik* பக்கம் 16-17.

www.padippakam.com



காரியங்களுக்கென வரிகள் எவையும் விதிக்கப்படவோ, வசூலிக் கப்படவோ இல்லை. ஆயினும் காபாவின் மேல் போர்வை சார்த்துவ தற்கும் யாத்திரிகர்களுக்கு விருந்தோம்பல் செய்வதற்கும் சில சம யங்களில் குலக்குழுக்களுக்கு நன்கொடைப்பங்கு விதிக்கப்பட்ட தாகக் கூறப்படுகிறது. தீர்க்கதரிசி செய்த முக்கிய பணிகளில் ஒன்று அரசு யந்திரத்தை உருவாக்கியது. ஆயினும் அவரது வாழ் நாளில் அது தொடக்கநிலை வடிவத்திலேயே இருந்தது. மக்கா நகரக் காலத்தில் ஜகாத் (zakāt) என்பதன் கருத்து, குரானிலிருந்து நாம் அறிகின்றபடி, அரசு விதிக்கும் வரியாக இல்லாமல் (அந்தச் சமயத்தில் அரசு என்பது உருவாகியிருக்கவில்லை), ஒருவர் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்பட்ட நன்கொடை யாகவே இருந்தது என்பதும் முக்கியமானது.

மேலே குறிப்பிட்டபடி, வர்த்தகத்தை முதன்மையாகக் கொண்ட மக்காநகரிலும் கூட அரேபியர்கள், குறைந்த அள விலேனும் சில இனக்குழு அமைப்புகளைப் பின்பற்றி வந்தார் கள். வர்த்தகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த சிறுகுழுவினர் மலா போன்ற அமைப்புகளைச் சகித்துக் கொள்ளுதல் என்ற அளவி லேயே இருந்தனர். எந்த ஒரு வர்த்தக சமூகத்தையும் போலவே இந்தச் சிறுகுழுவும் மன்னராட்சி முறையை விரும்பவில்லை. எந்த வலிமைமிக்க தனிநபரும் தங்கள் மீது ஆட்சி செலுத்துவதை மக்காவின் அரபு வர்த்தகர்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டு வதற்கு மற்றுமொரு உதாரணத்தைக் குறிப்பிடலாம். உத்மான் பின் ஹுவைரித் ('Uthmān b. Huwayrith) சம்பந்தப்பட்ட இந்த நிகழ்ச் சியை லாமென்ஸ் குறிப்பிடுகிறார். வர்த்தகரான உத்மான் ஒரு அந்நிய அரசின் (இங்கு குறிப்பிடப்படுவது பைஸாண்டியம்) உதவியுடன் தமக்கு ஒரு சிறப்பான அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்ள ஆசைப்பட்டார். அவர் கிறிஸ்தவமதத்தைத் தழுவி அதன் மூலம் ஓரளவு ஆதரவைப் பெற்றார். பாரசீகம், தென்பகுதியை வென்று தனதாக்கிக் கொண்டதன் காரணமாக பைஸாண்டியத்தில் ஏற்பட்ட எதிர்விளைவின் ஒரு அம்சமாக இது இருந்திருக்கக்கூடும். ஆனால் மக்காநகர வர்த்தகர்களிடையே இந்த நிகழ்ச்சிகள் சந் தேகத்தை ஏற்படுத்தின. உத்மானின் திட்டத்தைக் கவிழ்ப்பதற்கு வெளிப்படையான காரணமாக இருந்தது அவர் மன்னராவதற்கு முயற்சி செய்கிறார் என்று அவரது சொந்த அஸத் (Asad) குலக்குழுவையே சேர்ந்த அல்-அஸ்வத் பின் அல்-முத்தலிப் (al-Aswad b. al-Muttalib) குற்றம் சாட்டியதாகும். உத்மானின் திட்டம் இறுதியில் தோல்வியடைந்தது.

அரேபியர்கள், பைஸாண்டியத்தில் மிகவும் விரும்பி வாங்கப் படும் பொருள்களை வழங்குவோர் என்ற வலுவான நிலையில் இருப்பதை மிக நன்றாக உணர்வில் கொண்டிருந்தார்கள் என்பதும்

www.padippakam.com



முக்கியமானது. இப்படிப்பட்ட அரசியல் களத்தின் சூழ்நிலையில் வளர்ந்த முகமது தமது எதிரிகளை அவர்களது ஆட்டத்திலேயே தோற்கடிப்பதற்கு மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியிருந்தது. அவரது அரசியல் நுண்மாண் நுழைபுலம் அவருக்கு வெற்றியைத் தேடித்தந்தது; அவரது எதிரிகள் தோல்வி கண்டார்கள். சாதாரணமாக மதவிஷயத்தில் அலட்சிய மனோபாவம் கொண்ட மக்காநகர வர்த்தகர்கள் முகமது மீது கடும்பகை கொண்டதற்கு இது ஒரு காரணமாயிருந்தது.

மக்காவிலும் அதைச் சுற்றிய இடங்களிலும் வணங்கப்பட்ட புறமதத்தினரின் விக்கிரகங்கள் மக்கா சமூகத்தில் ஒன்றிணைந்தவை அல்ல என்பதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். ஸிரியாவின் விவசாய சமூகத்திலிருந்து சமீபத்தில்தான் அவை இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. மக்காவின் வர்த்தகர்களுக்கு விவசாய சமூகத்தின் பூமி நன்கு விளைய வேண்டி நடத்தும் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு இல்லை; புறத்தோற்ற அளவில் அவர்கள் வணங்கிய தெய்வங்களிடம் அவர்களுக்கு உண்மையில் பற்றுதல் இல்லை; அவற்றை அவர்கள் ஆழ்ந்த ஆன்மீக அனுபவம் அளிப்பனவாகக் கருதவில்லை. நாடோடி அரபுமக்களும் இனக்குழு மனிதநேயத்தில்தான் ஈடுபாடு கொண்டிருந்தார்களேயன்றி தெய்வவழிபாட்டு முறைகளில் அதிகமாக அக்கறை காட்டவில்லை. அப்படியானால் முகமது தம்முடைய புதிய மதத்தைப் போதிக்கத் தொடங்கிய போது அவருக்கு அவ்வளவு எதிர்ப்பு வந்ததற்குக் காரணம் என்ன? பிரபல எகிப்திய அறிஞர் டாக்டர் தாஹா ஹுஸைன் (Dr. Tāha Husayn) தம்முடைய "அல்-ஃபித்னத் அல்-குப்ரா" (Al-Fitnat al-Kubra) ("மகத்தான எதிர்ப்பு எழுச்சி") என்ற நூலில் இதை விளக்கும் வகையில் பின்வருமாறு எழுதுகிறார்: "நான் ஒன்றை உறுதியாகக் கூற முடியும்: அவர் (தீர்க்கதரிசி), கடவுள் ஒருவரே என்பதை மட்டும் போதித்து, சமூக, பொருளாதார முறைகளைத் தாக்கிப் பேசாமல், எளியவருக்கும், வலியவருக்கும், ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும், அடிமைக்கும், எஜமானனுக்கும் இடையில் இருந்த ஏற்றத்தாழ்வுகளை அப்படியே இருக்கவிட்டிருந்தால், கடும்வட்டி வாங்குவதைத் தடை செய்யாமலிருந்திருந்தால் [இது சற்று சந்தேகத்துக்கிடமானதே; ஏனென்றால் தீர்க்கதரிசி மதீனாவுக்குச் சென்ற பிறகுதான் இதைத் தடைசெய்தார் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள்], பணக்காரர்கள் தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியைத் தேவையுள்ளவர்களுக்கும் வறியவர்களுக்கும் வினியோகிக்க வேண்டும் என்று கூறாமலிருந்திருந்தால், குரைஷ் இனக்குழு மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் அவரது மதத்தை ஏற்றுக்கொண்டிருப்பார்கள்; ஏனென்றால் பெரும்பாலான

www.padippakam.com



குரைஷ் மக்களுக்குத் தாங்கள் வணங்கிய விக்கிரகங்களிடம் உண்மையான மதிப்போ, உணர்ச்சிபூர்வமான பற்றுதலோ கிடையாது. அவற்றிடம் அவர்கள் நம்பிக்கையற்ற மனப்பான்மையே கொண்டிருந்தார்கள்; அவற்றை வணங்குவதை ஒரு விளையாட்டாகவே செய்தார்கள். உண்மையில் அவர்கள் சாதாரண அரபுமக்கள் மீது தங்கள் பிடி தளராமலிருக்கவும்,அவர்களைச் சுரண்டி வாழ்வதற்கும் ஒரு சாதனமாகவே அந்த விக்கிரகங்களைப் பயன்படுத்தினார்கள்."[12] பிரபல இஸ்லாமியல் அறிஞர் எச்.ஏ.ஆர். கிப் (H.A.R.Gibb) பும் இந்தக் கருத்துக்கு உடன்பாடாகப் பின்வருமாறு கூறுகிறார்: "மக்காவாசிகளின் எதிர்ப்புக்கு அவர்களுடைய பழமை பேணும் கொள்கையோ, புதிய மதக் கொள்கையில் நம்பிக்கையின்மையோ தூண்டுதலாக இருந்ததைவிட (முகமதுவின் உயிர்த்தெழும் கொள்கையை அவர்கள் பரிகசித்தார்கள் என்றாலும் கூட), அரசியல், பொருளாதாரக் காரணங்களே முக்கிய தூண்டுதலாக இருந்தன. அவருடைய போதனைகளால் தங்களுடைய பொருளாதாரச் செழிப்புக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் பற்றியும், குறிப்பாக, அவருடைய ஏகதெய்வக் கொள்கையால் தங்களுடைய புனிதத்தலங்களின் பொருளாதார உடைமைகளுக்கு ஏற்படக்கூடிய அபாயம் பற்றியும் அவர்களுக்கு அச்சம் உண்டாயிற்று. மேலும், அவருடைய போதனையை ஏற்றுக்கொண்டால் சிறுகுழுவின் ஆதிக்கம் அமைந்துள்ள தங்கள் சமுதாயத்தில் ஒரு புதிய, சக்திமிக்க அரசியல் அதிகாரம் உருவாக வழி ஏற்படும் என்பதை அவர்கள் முகமதுவை விடவும் மிக விரைவாக உணர்ந்து கொண்டார்கள்."[13]

எந்த வர்த்தக சமூகமும் தனிநபரின் தலைமையை ஏற்கவோ, அவருக்குக் கட்டுப்பாடற்ற அதிகாரம் அளிப்பதையோ பொதுவாக விரும்புவதில்லை. அரேபியாவில் ஆட்சி அதிகாரம் பெறுவதற்கு உத்மான் ('Uthmān) செய்த முயற்சியின் தோல்வி இதை எடுத்துக்காட்டுகிறது. முகமது தம்மை தீர்க்கதரிசி என்றும் தேர்ந்த மதியும் தெளிந்த ஞானமும் பெற்றவர் என்றும் கூறிக்கொண்டதை மக்காவின் சக்திவாய்ந்த வர்த்தகர்கள் ஏற்றுக்கொண்டால் அவருக்கு வரம்பற்ற அதிகாரம் அளிப்பது போன்ற ஒரு நிலையை ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அவர் தீர்க்கதரிசி என்ற உயர்ந்த நிலையில் இருப்பதாக ஏற்றுக்கொண்டுவிட்டால் அவருடைய ஆணைகளுக்கு உட்பட்டு நடக்கமுடியாதென எப்படி மறுக்க முடியும்? அதிகாரத்தை நியாயமான முறையில் பகிர்ந்து கொடுப்பதற்கு வர்த்தகர்களுக்கு இருந்த சிறந்த சாதனம் 'மலா' என்ற சபையே. எப்படியானாலும் மக்காவின் வர்த்தக ஆதிக்கச் சிறுகுழுவினர் முகமதுவுக்கு அத்தகைய உயர்ந்த இடம் கொடுக்க இணங்க

12. Tāha Husayn, Al - Fitnat al-Kubrā, உருதுவில் மொழிபெயர்த்தவர் 'Abdāl Hamid N'omānī, Vol.1 பக்கம் 11.
13. Gibb, முன்பு குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 18.

www.padippakam.com



மாட்டார்கள். புதிய மதத்தில் சேர்ந்தவர்களைக் கொடுமைப்படுத்தும் செயல்கள் மிகவும் தீவிரமாகியிருந்த ஒரு சமயத்தில் முகமது மக்காவின் தலைமைப் பிரமுகர்களுடன் ஒரு சமரச உடன்பாடு செய்துகொள்ள எண்ணியதாக தபரி (Tabari) கூறுகிறார்.[14] அல்-லாட் (al-Lāt), அல் உஜ்ஜா (al-'Uzzā) ஆகிய தெய்வங்களை அல்லாஹ்விடம் மனிதர்களுக்காகப் பரிந்து பேசும் தெய்வங்கள் என்று ஏற்றுக்கொள்ள அவர் தயாராயிருந்தார். ஆனால் இப்படிச் சமரசம் செய்துகொண்டால் தம்முடைய புதிய மதத்தின் அடிப்படையே தகர்ந்துபோகும் என்பதையும், தமது எண்ணங்களை நிறைவேற்ற முடியாமல் போகும் என்பதையும் உணர்ந்து அந்த யோசனையைக் கைவிட்டார். குரானிலும் இந்த நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. அருளப்பட்ட வசனம் பின்வருமாறு உள்ளது.

> நீர், அல்-லாட், அல்-உஜ்ஜா, மூன்றாவதான மனாத், என்றவற்றை எண்ணிப்பார்த்தீரா? (குரான் liii,19-20)

இதனுடன் பின்வருமாறு ஒரு வசனத்தைச் சேர்க்க முகமது எண்ணினார்:

> அவர்கள் உயர்ந்த நிலைபெற்ற பறவைகள்
> அவர்கள் இடையில் நின்று பரிந்துரைப்பது உண்மையில்
> விரும்பப்படுகிறது.

இந்த இரண்டாவது வசனம், புதிய மதத்தை அழிப்பதற்காக சைத்தானால் மனத்தில் புகுத்தப்பட்டது என்று பின்பு கூறப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு வேறு பின்னணிகள் இருந்திருக்கக்கூடும் என்றாலும், முகமது தமது மக்கள் ஒன்றுபட்டிருப்பதை முக்கியமாகக் கருதினார் என்பதும், அதற்குத் தேவையானால் அவர்களின் தெய்வங்களுக்குத் தமது மதத்தில் இடமளிக்கக் கூட எண்ணினார் என்பதையும் இது தெளிவாகக் காட்டுகிறது. அரபு மக்களை ஒன்றுபடுத்தி, உலகின் மற்ற மக்களுக்கு, அதாவது ரோமானியர்களுக்கும் பாரசீகர்களுக்கும் நிகராக நிற்கச்செய்ய வேண்டும் என்பது அவரது நோக்கம். இந்த இரண்டு பேரரசுகளில் எதனுடனும் சாராமல் விலகிநின்று கூடியவரை அமைதியாகத் தங்கள் வர்த்தகத்தை நடத்திச் செல்வது அரபு வர்த்தகப் பிரமுகர்களின் கொள்கையாயிருந்தது. ஆயினும் பன்னாட்டு உறவு நிலைகளும் ரோமானிய, பாரசீகப் பேரரசுகளிடையே இடைவிடாது நடந்து வந்த போர்களும் அவர்கள் இந்த நடுநிலையில் நீடிப்பதைக் கடினமாக்கிக் கொண்டிருந்தன. இந்த நிலையில், தனது சுயபலத்தில் நின்று மக்காவின் பெரிய வர்த்தகர்களின் நலன்களைப் பாதுகாக்கும்

14. *Tārikh-e-Tabari*, தொகுதி 1, பக்கம் 103.

www.padippakam.com



சக்தியுள்ள அரபு வல்லரசு ஒன்று உருவாக வேண்டியது அவசிய மாயிருந்தது.

இந்த விஷயம் தொடர்பாக, அரேபியர்கள் தூ கர் (Dhū Qar) என்ற இடத்தில் நடந்த சண்டையில் பாரசீகர்கள் மீது பெற்ற வெற்றியை எவ்வளவு முக்கியத்துவம் கொண்டதாகக் கருதினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் புகழ்பெற்ற அந்தச் சண்டை நடந்த இடம் கூஃபா (Kūfa)வுக்கு அருகே வாஸித் (Wāsit)[15] செல்லும் திசையில் அமைந்திருந்தது. அரேபிய இனக்குழுக்களிடையே நடந்த பெரும்பாலான சண்டைகளைப் போலன்றி இதற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருந்தது. இந்தச் சண்டையில் சம்பந்தப்பட்ட பக்ர் பின் வாயில் (Bakr b. Wā'il) என்ற அரேபிய இனக்குழுவினருடன் பாரசீக ராணுவத்தின் துருப்புக்களும் இருந்தார்கள். இந்தச் சண்டை சிறிய கைகலப்பு என்று கூறும் அளவிலேயே இருந்தது (ஆனால் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் கலந்துகொண்டதாக சில ஆதாரங்கள் கூறுகின்றன) என்றாலும், பாரசீகர்களை வெல்ல முடியாது என்று கருதியிருந்த அரேபியர்கள் உண்மையில் அவர்கள் அப்படி இல்லை என்பதை இந்தச் சண்டையில் தெரிந்துகொண்டார்கள். பல ஆண்டுகளுக்குப்பின் இதே பக்ர் பின் வாயில் இனக்குழு அல்-முத்தனா பின் ஹாரிதா (al-Muthannā b. Harithā) வின் தலைமையில் இராக்கினுள் முதல் படையெடுப்பை நடத்துவதற்கு முன்னின்று முயற்சி எடுத்தது தற்செயலானதல்ல என்று ஸீடனி (Caetani) சுட்டிக் காட்டுகிறார். அரேபிய இனக்குழுக் கூட்டணியை எதிர்த்துப் போரிடுவதில் பாரசீகர்களின் பலவீனத்தை அந்த இனக்குழு அறிந்திருந்தது. இந்தச் சண்டைக்குக் காரணமாக இருந்தது கடைசி லக்மிட் (Lakhmid) தலைவரான அல்-நுமான் பின் அல்-முன்திர் (al-Nu' mān b. al-Mundhir), பாரசீக மன்னர் குஸ்ரவ் பர்விஸால் (Khusraw Parvez) சிறையிடப்பட்ட நிகழ்ச்சி என்று கூறலாம். அதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் பின்வருமாறு நடந்திருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம்: லக்மிட் மன்னராட்சியை மாற்றி நேரடியான அரசுமுறை ஒன்றை பாரசீக ஸஸானிட் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தினார்கள். இது அவர்கள் செய்த தவறு. அல்-நுமான் சிறைவைக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து அவர் மரணமடைந்ததும் பக்ர் பின் வாலி இனக்குழுவினரைச் சண்டைக்குத் தூண்டியிருக்கலாம். அல்லது எல்லையில் காவலாக இருந்த அந்தத் தலைவர் இறந்து போனதால் அவரால் ஏற்பட்டிருந்த பயத்திலிருந்து விடுபட்டவர்களாக கொள்ளையடிக்கும் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். ஸஸானிட்கள் இவர்களைத் தண்டிக்கத் தீர்மானித்தார்கள். ஆனால், பாரசீகத் துருப்புகள் தோற்கடிக்கப்பட்டு ஸவத் என்ற இடம்வரை துரத்திச்

15. பார்க்க Yāqūt, iv, 10. *Mu'jam al-Budān, ed.* F. Wustenfeld (Leipzig, 1866, 73).

www.padippakam.com



செல்லப்பட்டார்கள். பல்வேறு காரணங்களால் இந்தத் தோல்விக்குப் பழிவாங்கும் எதிர்த்தாக்குதல் நடக்கவில்லை. இந்தச் சண்டை கி.பி. 604-க்கும் 611-க்கும் இடையில் நடந்திருக்கக்கூடும். இந்த வெற்றிச்செய்தி கேட்டு முகமது மிகவும் மகிழ்ச்சியடைந்தார். "முதல் முறையாக அரேபியர்கள் பாரசீகர்களை வென்றிருக்கிறார்கள். என் மூலமாகவே கடவுள் அவர்களுக்கு உதவினார்" என்று அவர் கூறியதாகப் பதிவுச் சான்று உள்ளது.[16]

அரேபியர்கள் பாரசீகர்களை வெல்ல வேண்டும் என்பதில் தீர்க்கதரிசி அக்கறை கொண்டிருந்ததை இபின் இஸ்ஹாக் (Ibn Ishaq) குறிப்பிடும் மற்றொரு நிகழ்ச்சியும் எடுத்துக்காட்டுகிறது. தீர்க்கதரிசி தமது புதிய மதத்தைப் போதிப்பதைக் கைவிட வேண்டும் என்று அவரிடம் கூறும்படி குரைஷ் தலைவர்கள் சிலர் அவரது தந்தையின் சகோதரர் அபூ தாலிபைக் (Abū Tālib) கேட்டுக் கொண்டார்கள். அவர் தீர்க்கதரிசியைக் கூப்பிட்டார். இபின் இஸ்ஹாக் கூறுகிறார்: "அவர் வந்தபோது அபூ தாலிப் கூறினார்: 'இந்தப் பிரமுகர்கள் உம்மிடம் ஒன்றைக்கொடுத்து ஒன்றைப் பெற வந்திருக்கிறார்கள்.' அதற்கு அவர் 'நீங்கள் அரேபியர்களை ஆளவும், பாரசீகர்களை உங்களுக்குக் கீழ்ப்படுத்தவும் கூடிய ஒரு வார்த்தையை எனக்குத் தாருங்கள்' என்று பதிலுரைத்தார்."[17]

இந்த நிகழ்ச்சியும், ஸஸானிட்களை அரேபியர்கள் வென்ற போது அவர் கூறிய வார்த்தைகளும் அரேபியர்கள் ஒன்றுபட்ட சக்தியாக உருவாக வேண்டும் என்ற அவரது எண்ணத்தைக் காட்டுகின்றன. அரேபியர்கள் பன்னாட்டு வர்த்தகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதனால் ஒன்றுபட்டு நின்று தங்கள் பாதுகாப்பைத் தாங்களே பார்த்துக்கொள்ளும் சக்தியாக உருவாக வேண்டும் என்று அவர் விரும்பினார். அரேபியர்கள் தங்கள் வாணிபத்தை நடத்திச் செல்ல உதவியாக பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்க விரும்பினார். பேராசிரியர் முகமது ஹபீபும் (Prof. Mohammad Habib) இந்தக் கருத்துக்கு உடன்பாடாக எழுதுகிறார்:

> நம் நாட்டில் தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களில் மிகப் பெரியவரான மவுலானா ஷிப்லீ (Maulana Shibli), அவரைப் பிரதானமாக 'உலக விவகார மனிதர்' என மதிப்பிடவில்லை; அவர் சாராம்சத்தில் ஒரு ஆன்மீக, அறநெறி போதனையாளராகவே இருந்தார் என்பது இதற்கு அவர் கூறும் காரணம். இது சரியானதே; தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாறு எதுவும், எவ்வளவுதான் சுருக்கமாக இருந்தாலும் அவரது மத போதனைகளைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. ஆயினும்,அரசியல் நிறுவனங்களின் வளர்ச்சி பற்றிய நோக்கில்

16. B.Lewis, Ch. Pellat and J.Schacht, தொகுத்த *Encyclopaedia of Islam*. L. Veccia Vagliceri's Dhūr Qar பற்றி எழுதிய கட்டுரையை பார்க்க, பக்கம் 241.
17. Ibn Ishaq, *Sirat Rasul Allah*, பக்கம் 191.

படிப்பகம்

www.padippakam.com



பார்த்தால் தீர்க்கதரிசியின் முதன்மையான பணி, அரேபியா முழுவதற்கும் — பைஸாண்டிய, பாரசீக பேரரசுகளுக்குக் கீழடங்கிய பகுதிகள் நீங்கலாக — ஒரு பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தியதே ஆகும். அந்த அடிப்படையின் மேல்தான் பின்வந்தவர்கள் கட்டிடம் எழுப்பினார்கள்.[18] (சாய்வெழுத்து என்னுடையது)

முகமது தமது திட்டத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தமது இயக்கத்தின் ஆரம்ப நிலையில், ஒற்றுமையை உருவாக்குவதற்காக புறமத அரேபியர்களுடன் சமரச ஏற்பாடு செய்துகொள்ளவும் தயாராயிருந்திருக்கக் கூடும். ஆனால் இந்தச் சமரசம் தமது இயக்கத்தின் அடிப்படைக் கருத்துக்கே விரோதமாயிருக்கும் என்பதை உணர்ந்ததும் அந்த எண்ணத்தைக் கைவிட்டு, அதைப் பற்றிய வசனம் சைத்தானால் வந்தது என்று கூறிவிட்டார். முகமது அரேபியர்களை ஒற்றுமைப் படுத்துவதில் வெற்றி பெற்றார்; ஆனால், அதற்காக அவர் மக்காவின் வர்த்தக ஆதிக்கச் சிறுகுழுவினருடன் சமரசப்பட்டுப் போகாமல் தமது சொந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேயே அதை அடைந்தார். இதற்காக அவர் மக்காவைவிட்டு (வடக்கே 300 மைல் தூரத்தில் உள்ள) மதீனாவுக்குச் சென்று குடியேற வேண்டியதாயிற்று. மக்கா பொருளாதாரத்தின் மென்னியைப் பிடிப்பது போலச் சில நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியிருந்தது. வேறு சில ராஜீய நடவடிக்கைகளும் ஆயுதமேந்திப் படையெடுப்பு நடத்தப்படும் என்ற அச்சுறுத்தலும் இதற்குத் துணை செய்தன. இறுதியாக மக்கா சரணடைந்தது.

இங்கே சொல்ல வந்த விஷயத்துக்கு இப்போது மீண்டும் வருவோம். நமக்குக் கிடைக்கும் எல்லா ஆதாரங்களிலுமிருந்து, மக்காவில் ஒரு அரசுக்குரிய நிர்வாக அமைப்பு, நீதிமன்ற அமைப்பு, சட்டமன்றம் போன்ற எதுவும் இருக்கவில்லை என்று தெரிகிறது. ('மலா' என்ற சபை ஒரு ஆலோசனை மன்றமாக இருந்ததேயன்றி சட்டமியற்றும் அதிகாரமோ நிர்வாக அதிகாரமோ பெற்றிருக்கவில்லை). எனவே, நிர்வாகம் நடத்தும் அதிகாரவர்க்கமோ, நிலையான ராணுவமோ இருக்கும் பேச்சே இல்லை. நாடுவிட்டு நாடுசென்று நடத்தும் வர்த்தகத்தில் பல்வேறு அபாயங்களும் பொருள்களைக் கொண்டு செல்வதில் பெரும் கஷ்டங்களும் இருந்தன. இவற்றையெல்லாம் எதிர்கொள்ளத் துணிந்து அது நடத்தப்பட்டதால் அதில் கிடைத்த லாபம் மிகவும் நிறைவாக இருந்தது என்று கருதலாம். ஆயினும் அரசு யந்திரம் எதுவும் இல்லாத நிலையில் வரிவிதிப்புமுறை எதுவும் இல்லை என்ற காரணத்தால் வரிவருவாய் ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மக்காநகர

18. Mohammed Habib and Khaliq Ahmed Nizāmi, *A Comprehensive History of India*, Vol. V, (*The Delhi Sultanate*). (People's publishing House, 1970).

www.padippakam.com



சமூகத்துக்கு இந்த வாத்தகத்தின் மூலம் வருவாய் கிடைத்த போதிலும் கூட அங்கு அரசு அமைப்பின் உறுப்புக்களோ, அடக்கி ஒடுக்கப் பயன்படும் படை அமைப்பு எதுவுமோ உருவாகவில்லை. ஆனால், அரசு அமைப்புகளை அந்தச் சமூகம் விரும்பவில்லை என்று கூற முடியாது. அந்த விருப்பம் மிகுதியாகவே இருந்தது; சக்திவாய்ந்த இனக்குழு நிறுவனங்களையும் மீறி, அரசு அமைப்பு களை உருவாக்குவதற்கான மனப்போக்கு உருவாகி வந்தது. ஆனால், அந்தச் சமூகம் முன்னேறிச் செல்வதற்கு தேவையான வற்றை உருவாக்கித் தருவதற்கு தீர்க்கதரிசி முகமதுவைப் போன்ற சிந்தனையாளரும், அமைப்பாளரும், செயல் வீரருமான ஒருவர் தேவையாயிருந்தது. அந்தச் சமூகத்தில் உருவாகிக் கொண்டிருந்த புதியசக்திகளுக்கு உத்வேகம் கொடுப்பதற்கு அவற்றை நிறுவனங் களாக உருவாக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு இனக்குழுவின் உள்ளேயும், பல்வேறு இனக்குழுக்களுக்கிடையிலும் ஒற்றுமை ஏற்படாமல், கட்டாய அடிப்படையில் ஆள் சேர்த்து அமைக்கப் பட்ட ராணுவம் ஒன்று இல்லாமல், சமூகத்தை நெறிப்படுத்தி வழிநடத்த அரசு இயந்திரம் எதுவும் இல்லாமல், ஓரளவு பின்தங்கிய, வளர்ச்சி பெறாத பகுதியைச் சேர்ந்த அரேபியர்கள் எப்படி வடக்கே உள்ள பெரும்பகுதிகளை வென்று கைப்பற்றி, உலகின் இரண்டு வலிமைமிக்க பேரரசுகளை உலுக்கியிருக்க முடியும்?

இவ்வாறாக, வரலாற்றில் தனிமனிதனின் பங்கை—தனிமனிதன், குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலையில், சில பொருளியல், ஆன் மீக சக்திகளின் தூண்டுதலுக்கும் வழிகாட்டலுக்கும் உட்பட்டே செயல்படுகிறான் என்றாலும் — குறைத்துக்கூற முடியாது. அப் போதைய அரேபிய சமூகத்தில் அதற்கு மிகவும் அவசியமாயிருந்த தேவையைப் பூர்த்திசெய்ததன் மூலம் முகமது தீர்மானமான பணியைச் செய்தார் என்று நிச்சயமாகக் கூறலாம். மாண்ட் காமரி வாட் தமது "முகமது" புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்: "கருத்துக்கள், குறிப்பாக, மதக்கருத்துக்கள், ஒரு சமூக அமைப்பு, அதன் பொருளியல் சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களை ஏற்று இணங்கிச் செயல்படச் செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன. பொருளியல் மாறுதலின் முதல் விளைவாக சமூக இணக்கத்தில் பிறழ்வு ஏற்படுகிறது. சமூகத்தின் உறுப்பினர்களிடையே அதிருப்தி யும் அமைதியின்மையும் ஏற்படுகின்றன. இவை ஏதேனும் ஒன்றி லிருந்து விலகிச் செல்வதான எதிர்மறைத் தன்மைகளாகும். உடன் பாட்டுத் தன்மையாக ஒரு குறிக்கோள் கிடைத்தாலன்றி இவை பலனுள்ள இயக்கங்கள் ஆக முடியாது. இந்தக் குறிக்கோள் சமூகத்தில் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் கருத்துக்கள் வடிவில் வெளியிடப்பட வேண்டும்."[19] முகமது இந்தக் கருத்துக்களை

19. Watt, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 45-6.

www.padippakam.com



வன்மையாகவும் பலனுள்ள முறையிலும் மதத்தின் மூலமும் ஆன்மீகத்தின் மூலமும் வெளிப்படுத்தினார் என்பதில் இஸ்லாமைப் பற்றிக் கற்கும் ஒருவருக்குச் சந்தேகம் இருக்க முடியாது.

இஸ்லாமின் தோற்றத்துக்கான மூலகாரணத்தைப் புரிந்து கொள்வதற்கு மக்காநகர சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அரசு இயந்திரம் இல்லாத நிலையில் சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க ஒரே வழி "மலா" சபையின் ஒருமனதான முடிவுகளைச் செயல்படுத்துவதற்கு இனக்குழுக்களின் ஒத்துழைப்பை பெறுவதேயாகும். ஆனால், மேய்ச்சல் நிலத்தைச் சார்ந்த நாடோடிப் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாறியிருந்ததனால் இனக்குழு முறையே உடைந்து கொண்டிருந்தது. வர்த்தக நடவடிக்கைகளில் இனக்குழு எல்லைகள் மறக்கப்பட்டன. வெவ்வேறு இனக்குழுவினரையும் கொண்ட வர்த்தகக் குழு அமைப்புகள் உருவாகியிருந்தன. வர்த்தகத்தில் கிடைத்த லாபங்கள் இந்த இனக்குழுக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மாறாக லாபத்தை நோக்கமாகக் கொண்டு பல்வேறு அபாயங்களையும் ஏற்கத்துணிந்து வர்த்தகத்தை நடத்திய தனிநபர்கள் பகிர்ந்து கொண்டார்கள். இவ்வாறாக சில தனிநபர்கள் செல்வத்தில் உயர்ந்து வந்தார்கள்; அதே சமயம் அவர்களின் இனக்குழுவில் உள்ள மற்றவர்கள் பொருளாதாரச் சிரமங்களுக்கும் வறுமைக்கும் உள்ளானார்கள். இந்த நபர்கள் இனக்குழுவின் அறநெறி மரபுப்படி தங்களுடைய செல்வங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராயில்லை. இதனால் இனக்குழுக்களின் பலவீனப் பிரிவுகளிடையேயும், லாபமிக்க வர்த்தக நடவடிக்கைகளில் இடம்பெற முடியாத அல்லது அதன் வெளிவரம்பில் மட்டுமே இடம்பெற முடிந்த இனக்குழுக்களிடையேயும் மிகுந்த அதிருப்தி ஏற்பட்டது. இவ்வாறாக, ஒரு சிறிய அளவிலேனும் இனக்குழு ஒற்றுமைக்கு பதிலாக வர்க்க ஒற்றுமை ஏற்பட்டு வந்தது. வெவ்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த சக்திமிக்க வர்த்தகர்கள் குழுக்களாக அமைந்துகொண்ட போது அவற்றில் வாய்ப்பு மறுக்கப்பட்ட நபர்களும் இனக்குழு எல்லைகளை மறந்து தங்களுக்குள் குழு அமைப்புகளை உருவாக்கிக்கொள்ள முயன்றார்கள். இப்படிப்பட்ட குழுக்களில் ஒன்று ஹில்ஃப் அல்-ஃபுதூல் (Hilf al-Fudūl) எனப்பட்டது. இது அமைக்கப்பட்ட விதம் பற்றி முகமது ஹமீதுல்லா (Muhammad Hamidullah) பின்வருமாறு கூறுகிறார்: "தீர்க்கதரிசியின் மூத்த பெரிய தந்தையும் குடும்பத்தின் தலைவருமான அஸ்-ஸுபைர் (Az-Zubair), பெருமதிப்புக்குரிய முதியவரும் பணக்காரருமான அப்துல்லா இபின் ஜுதானின் ('Abdulla ibn Jud 'ān) இல்லத்தில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில்

www.padippakam.com



புகழ்பெற்ற ஹில்ஃப் அல்-ஃபுதூல் என்ற வீரர் குழாமை அமைக்க முடிவு செய்யப்பட்டது. நகரத்தில் ஒடுக்கப்படும் கொடுமைக்கு உள்ளாகும் ஒவ்வொருவருக்கும் விரைந்துசென்று உதவி அளிக்க இந்தக் குழாமின் உறுப்பினர்கள் உறுதியெடுத்துக்கொண்டார் கள். இளைஞரான முகமது உறுதியெடுக்கும் நிகழ்ச்சியில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றார். பின்னாளில் அவர் இறைத்தூதராக ஏற்கப்பட்ட பின்பும் கூட இவ்வாறு கூறுவது வழக்கம்: 'ஹில்ஃப் அல்-ஃபுதூல் தொடங்கப்பட்ட கூட்டத்தில் நான் கலந்து கொண் டேன். இந்தப் பெருமையை விட்டுக்கொடுப்பதற்கு ஈடாக செந் நிற ஒட்டகங்களின் மந்தை ஒன்றைக் கொடுத்தால் கூட நான் இணங்கமாட்டேன். இன்றும் கூட யாரேனும் அந்தக் குழாமின் பெயரால் என்னை உதவிக்கு அழைத்தால் நான் ஓடோடிச் சென்று உதவுவேன். ஹாஷிம் (Hāshim), முத்தலிப் (Muttalib), ஜுஹ்ரா (Zuhra), தலிம் (Talim) ஆகிய இனக்குழுக்கள் இந்த அறப்பணிக் கூட்டமைப் பில் பங்குபெற்றன."[20] இந்தக் குழுவின் நோக்கம் பற்றி மாண்ட் காமரி வாட் சிறிது மாறுபட்ட தகவல் தருகிறார்:

> குலக்குழுக்களின் கூட்டமைப்பாக இது அமைந்தது. "சான் றோர் குழாம்" என்று இதை அழைக்கலாம்; ஆயினும் அதன் பெயருக்கு வேறு விளக்கங்களும் தரப்படுகின்றன. இந்தக் குழாம் அமைக்கப்பட்ட கூட்டத்தில் முகமது கலந்துகொண் டார். தமது பின்னாளில் கூட அவர் இதை அங்கீகரித்தார். வர்த்த கத்தில் நேர்மையைப் பாதுகாப்பது அதன் நோக்கம். அதற்கு மேலும் ஒரு நோக்கம் இருந்திருக்கலாம். யேமனைச் சேர்ந்த வர்த்தகர்களை மக்காவின் சந்தையிலிருந்து விலக்கிவைப்ப தைத் தடுப்பதில் அது அக்கறை கொண்டிருக்கக்கூடும். இந்தக் குழாமில் சேர்ந்திருந்த குலக்குழுக்கள் தாங்களே சொந்தமாக யேமனுக்கு வர்த்தக அணிகளை அனுப்ப இயலாதவையாக, அல்லது மக்காவுக்கும் ஸிரியாவுக்குமிடையிலான வர்த்தகத்தில் தனி ஈடுபாடு கொண்டவையாக இருந்தன. [21]

இந்தக் குழாமை அமைத்த நோக்கம் பற்றிய கருத்துக்களில் இவ்வாறு சிறு வேறுபாடு இருந்தபோதிலும் ஒன்று தெளிவாகத் தெரிகிறது: பலவீனமான, ஒடுக்கப்பட்ட நபர்களுக்கோ அல்லது சமூகத்தில் உயர்ந்தநிலையைப் பெற்ற பலசாலிகளுக்கெதிராக நிற்க முடியாத இனக்குழுக்கள் அல்லது தனிநபர்களுக்கோ நியாயம் கிடைக்கச் செய்வதற்காக அது அமைக்கப்பட்டது. மாண்ட் காமரி வாட் கூறுவது உண்மையாக இருந்தாலும் பெரிய அளவில் வர்த்தக முயற்சியில் ஈடுபட முடியாத இனக்குழுக்களும் தனிநபர்களும்

20. Muhammad Hamidullah, *Muhammad Rasulullah* (பாரீஸ், 1974), பக்கம் 7.
21. W.Montgomery Watt, *Muhammad-Prophet and Statesman* (லண்டன், 1961), பக்கம் 7.

படிப்பகம்

www.padippakam.com



தங்களுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இத்தகைய கூட்டமைப்பு தேவைப்பட்டது. இவர்கள் மத்தியதர வர்த்தகர் களாக இருந்திருக்கலாம். இந்தக் குழாமை அமைப்பதன் மூலம் சமூகத்தில் உள்ள ஏகபோக வர்த்தகர்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் முயன்றார்கள். அல்லது ஹமீதுல்லா கூறுவது உண்மையாயிருந்தால், மக்காவின் சமூகத்தில் மிகவும் அதிருப்தியடைந்த நபர்கள் பலர் இருந்தார்கள் என்பதையும், தங்களுடைய பொருளியல் நலன்களைப் பாது காக்க அவர்களுக்கு கூட்டமைப்பு தேவையாயிருந்தது என்பதையும் அது காட்டுகிறது. தீர்க்கதரிசி, தமது இளம் வயதிலேயே மக்கா நகர சமூகத்தில் மண்டியிருந்த கேடுகளைப் போக்க ஏதாவது செய்ய விரும்பினார் என்பதையும் அது காட்டுகிறது. இந்தக் குழாம் அமைப்பில் மிகத் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்ட பனூ ஹாஷிம் (Banū Hāshim) குலக்குழு, தனது இனக்குழுவில் உயர்ந்த இடம் பெற்றதாக இருந்தாலும், பொருளாதாரரீதியில் பிற்பட்டதாக இருந்தது. அதனால் அதற்கு முன்பிருந்த முக்கியத் துவம் குறைந்து வந்தது. இந்த மாற்றம் அதற்குக் கோபமூட்டி இருக்க வேண்டும். இந்தக் குழாம் அமைப்பு இயல்பான இனக்குழு உறவுநிலைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது; இனக்குழு அமைப்புடன் தொடர்புள்ள சில கடமைகளை, அதற்கு அந்நிய மாயிருந்த சில குழுக்களுக்கும் நீட்டியது. குழாம் அமைப்பின் நிறைவு நிகழ்ச்சியில் புனித உணர்வுடன் மரபுவழியான சடங்கு களும் உறுதி ஏற்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றதாக இபின் ஹிஷாம் கூறுகிறார். புனிதச் சூழ்நிலைகொண்ட இந்த நிகழ்ச்சிகளின் நினைவு, குழாமின் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பு களைத் தவறாமல் நிறைவேற்ற உதவ வேண்டும் என்பது இதன் நோக்கம். இவ்விவரங்கள் இவர்களைப் போன்ற வேறு சில குலத்தவ ருக்கும் பொருந்தி வந்திருக்கின்றன. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் பற்றி எழுதப்பட்டிருக்கும் விவரங்கள், உறுதிமொழிகள் எடுக்கும் போது வழக்கமாக இடம்பெறும் சம்பிரதாயங்களை நினைவு படுத்துவனவாக உள்ளன. குழாமின் உறுப்பினர்கள் ஒற்றுமை யாக இருந்து, அஹ்லாஃப் (Ahlāf) என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்ட மக்காநகர ஏகபோக வர்த்தகர்களின் சவால்களை எதிர்த்து நிற்கச் செய்ய வேண்டும் என்பதுதான் இதற்கெல்லாம் அடிப்படையாக இருந்த நோக்கம்.

மக்காவில் வர்த்தகம் வளர்ச்சியடைந்ததன் விளைவாக இனக் குழுவின் கூட்டு வாழ்க்கை முறைக்கு முரணான தனிநபர் சுயேச்சை வாழ்க்கை முறை ஏற்படத் தொடங்கியது. ஒவ்வொருவரும் தன் னுடைய இனக்குழுவின் நலன்களைக் கருதாமல் தனது சொந்த

www.padippakam.com



நலனையே கருதி செயல்படலானார்கள். பொது ஒழுங்கைப் பாது காப்பது குலக்குழு முறையைச் சார்ந்திருந்த போதிலும், ஒரு தனிக் குடும்பமோ, அல்லது ஒரு தனிநபரும் அவரைச் சார்ந்தவர்களுமோ, ஒரு தனி அமைப்பாக இருக்க முடிந்தது. ('மலா' சபையின் முடிவு களை ஏற்றுச் செயல்படுத்த சம்பந்தப்பட்ட குலக்குழுக்களோ இனக்குழுக்களோ சம்மதித்தால்தான் அவற்றை அமல்செய்ய முடியும்). இந்த நிலை காரணமாக தனிநபர்கள் தங்கள் குலக்குழுக் களுக்கு எதிரான முறையில் செயல்படும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்திருப்பதைக் காண்கிறோம். ஹாஷிம் இனக்குழுவைச் சேர்ந்த அபூ லஹப் (Abū Lahab) மற்ற அனைவரிடமிருந்தும் மாறுபட்டு முகமது பற்றிய கருத்தில் வேறுபட்டு நின்றார். முகமதுவை ஆரம்ப காலத்தில் பின்பற்றியவர்கள் தங்களுடைய குலக்குழுவினரும், பெற்றோரும் கூட தெரிவித்த எதிர்ப்பைப் புறக்கணித்தே முஸ்லிம் கள் ஆனார்கள். வர்த்தகப் பங்காளிகளும் கூட சில சமயங்களில் குலக்குழு உறவுகளை மீறி கூட்டுச் சேர்ந்திருந்தார்கள். இரண்டு, மூன்று பேர் சேர்ந்த பங்காளிக்கூட்டுகளும் இருந்தன; பலர் சேர்ந்த குழுக்களும் இருந்தன. பெண்களுக்கும் கூட சொத்தில் தனிப்பட்ட உரிமை இருந்தது. தீர்க்கதரிசி திருமணம் செய்துகொண்ட கதீஜா (Khadija) அதற்கு முன் செல்வம் மிகுந்த வர்த்தகராக இருந்தார் என்பதும், வர்த்தக அணிகளுக்கு நிதி அளிப்பதன் மூலம் நல்ல லாபம் பெற்றார் என்பதும் நன்கு தெரிந்ததே. முகமது ஒரு நேர்மை யான மனிதர் என்று அவர் அறிந்துகொண்டு தமது வர்த்தகப் பணிகளை அவரிடம் ஒப்படைத்தார். குரானும் தனிநபர் சுயேச்சை முறையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. ஒரு தனிநபரின் செயலுக்கு அவரேதான் பொறுப்பு என்றும் அவரது குலக்குழுவோ இனக்குழுவோ பொறுப்பாக மாட்டா என்றும் அது கூறுகிறது. இஸ்லாம் தோன்றியதற்கு முன் இனக்குழுச் சமூகத்தில் ஒரு நபரின் செயலுக்கோ, செய்யாமைக்கோ அவரது இனக்குழுவே பொறுப் பாளியாகக் கருதப்பட்டது. ஒருவர் கொலை செய்துவிட்டால் அவரது குலக்குழு அல்லது இனக்குழுவே அதற்குப் பழியேற்க வேண்டும். குரான் தெளிவாகக் கூறுகிறது: "எந்த ஒருவனும் மற் றொருவனின் சுமையைச் சுமக்க முடியாது. சுமையேற்றப்பட்ட ஒருவன் உதவிக்காக அழைத்தால் மிக நெருங்கிய உறவினர் கூட அவனுடைய சுமையைப் பகிர்ந்துகொள்ள முடியாது."[22] இவ் வாறாக, முகமது தமது புதிய மதத்தைப் போதிக்கத் தொடங்கிய சமயத்தில் மக்காவில் இனக்குழுக் கூட்டுமுறைக்கு மாறான தனி நபர் சுயேச்சைமுறை உருவாகி, அதன் காரணமாக சமூகத்தில் போராட்டம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. குரானில் மக்கா காலத் திய ஆரம்பகால ஸுராக்கள், ஒவ்வொரு நபரும் தனது செயல் களுக்கு முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் வேறு

22. குரான், அத்தியாயம் 35, வசனம் 18.

www.padippakam.com



யாரும் எவ்வளவு நெருங்கிய உறவினர்களும் கூட அதில் பங்கு கொள்ள முடியாது என்றும் தெளிவாகக் கூறுகின்றன. இம்மாதிரி யான தனிநபர் பொறுப்பு இனக்குழுவின் கூட்டுப் பொறுப்புக் கருத்துக்கு முற்றிலும் எதிரானது. இனக்குழுவின் அறநெறிப் பண்பை உடைக்கும் நோக்கத்துடன் குரான் இவ்வாறு கூறவில்லை; ஏற்கெனவே உருவாகியிருந்த சமூகநிலைமையையே அது வலியுறுத்திக் கூறுகிறது. அந்த நிலைமையிலிருந்து மீண்டும் பழைய நிலைமைக்குத் திரும் பிச்செல்ல முடியாது; அது சரித்திரச் சக்கரத்தைப் பின்நோக்கிச் சுழற்ற முயலுவதாகும். இந்த வகையில் இஸ்லாம் அப்போதிருந்த மக்கா சமூகத்தின் முற்போக்கான மாற்றங்களை உறுதிப்படுத்த முயன்றது.

ஆயினும் இனக்குழு முறையின் அறநெறிப் பாங்குகள் உடைந்த தால் சமூகத்தில் ஏற்பட்டிருந்த பதற்றநிலைகளைப் புதிய மதம் சமாளிக்க வேண்டியிருந்தது. இதை எப்படிச் செய்வது? பழைய இனக்குழுக் கூட்டுமுறையைத் திரும்பக் கொண்டுவர முடியாது. அப்படிச் செய்தால் வர்த்தகக் கட்டமைப்பு சிதறிப்போவதோடு, சமாளிக்க முடியாத புதிய பதற்றநிலைகள் உருவாகும். இதே போன்ற ஒரு நிலைமையில் கி.மு. ஆறாம் நூற்றாண்டு இந்தியாவில் புத்தர் செய்தது போல,[23] ஒரு பொருளாதார நிலைமாறி வேறொரு பொருளாதார நிலை உருவாவதனால் சமூகம் போராட்டக் களமாகும் போது அதிலிருந்து தப்பித்துக்கொள்ள உலகைத்துறந்து செல்லும் துறவு வழியை முகமது கருதவில்லை. இதற்கு மாறாக முகமது என்ன செய்தார் என்பதில்தான் புதிய மதத்தின் புரட்சி கரமான தன்மை பொதிந்துள்ளது. சமூகத்தின் முற்போக்கான மாற் றங்களை அவர் ஆதரித்து நின்று, அதே சமயம் இந்த மாற்றங் களால் சமூகத்தில் ஏற்பட்ட பதற்றநிலைகளைப் போக்குவதற்கு இனக்குழு சமூகத்தில் உள்ள சில பண்புகளைப் பின்பற்றுவதற்குத் தெரிந்தெடுத்தார். வரலாற்றின் வழியில் ஏற்பட்ட மாற்றங்களு டன் மோதி முரண்படாமல் தனிநபர் சுயேச்சைமுறைக்கும் கூட்டு வாழ்க்கை முறைக்கும் இடையே சமச்சீர் நிலையை ஏற்படுத்த உதவும் பண்புகள் அவை. இவ்வாறாக, மக்கா கால ஸூராக்களின் — மிகைச் சொற்கள் இல்லாமலும் வன்மையாகவும் அமைந்தவை இவை — மக்காவின் பணக்காரர்களுக்கு ஏழைகளையும் வறுமை யில் வாடுவோரையும், அநாதைகளையும், விதவைகளையும் கவனித்துக்கொள்ளும்படி அறிவுரை கூறுகிறார்.

பணக்கார வர்த்தகர்களுக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கொடுக்க பல்வேறு தொழில்களைச் செய்யும் கைவினைஞர்கள் இருந் தார்கள். இனக்குழுக்களில் ஏழைகளாக உள்ள மக்களும் அடிமைகளும் (இவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள்)

23. பார்க்க *Buddism – The Marxist Approach* (People's publishing House, Bombay, 1970), குறிப்பாக, தேபி ப்ரஸாத் சட்டோபாத்யாய, மற்றும் ராகுல் சாங்க்ருத்யாயன் எழுதிய கட்டுரைகள்.

www.padippakam.com



சொல்ல முடியாத பொருளாதாரக் கஷ்டங்களுக்கு உட்படுத்தப் பட்டார்கள். ஆதிக்க நிலையில் இருந்த இனக்குழுக்கள் மீது இவர் களிடம் மனவருத்தம் வளர்ந்திருந்தது. எச்.ஏ.ஆர்.கிப் கூறுகிறார்: “மக்காவின் செல்வச்செழிப்பில் இருண்ட பக்கம் ஒன்று இருந்தது. செல்வம் மிகுந்த வர்த்தக சமூகத்தில் வழக்கமாகக் காணப்படும் தீமைகளான மிக உயர்ந்த செல்வம், மிகத் தாழ்ந்த வறுமை, அடிமை களையும், கையாள்களையும் கொண்ட கீழ்உலகம், சமூக வாழ்க் கையில் வர்க்க அடிப்படையிலான தடைகள் ஆகிய தீமைகள் வளர்ந்திருந்தன. முகமது, சமூக அநீதியையும் மோசடியையும் மனங்கொதித்துக் கண்டனம் செய்வதைப் பார்க்கும் போது அவ ருடைய மனவேதனைக்கு ஆழ்ந்த, உள்ளார்ந்த காரணங்களாக இருந்தவற்றில் இதுவும் ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அவரது உள்ளக்குமுறல் சமூகப்புரட்சிப் பிரசாரமாக வெளிப்படவில்லை. அது மதத்தின் வடிவம் பெற்று வெளிப்பட் டது. ஸிமிடிக் தீர்க்கதரிசிகள் ‘மன்னிப்புக் கோருங்கள்; கடவுளின் நீதிநாள் கையருகே உள்ளது’ என்று அளித்த எச்சரிக்கையைத் தமது சக குடிமக்களுக்கு அறிவிக்குமாறு கடவுள் தம்மை அழைத் திருக்கிறார் என்ற ஆழ்ந்த, அசைக்க முடியாத நம்பிக்கையாக அது வெளியிடப்பட்டது.”[24] குரானில் பெரும் எண்ணிக்கையி லான வசனங்கள் செல்வத்தின் தீமைகளைக் கண்டனம் செய்கின்றன.

“அல்லாஹ்வின் கருணையினால் கிடைத்த பொருள்களைக் கொண்டு கஞ்சத்தனம் செய்கிறவர்கள், அது தங்களுக்கு நல்லது என்று எண்ண வேண்டாம். அது அவர்களுக்குத் தீமையேயன்றி வேறல்ல. அவர்கள் கஞ்சத்தனம் செய்து குவித்த பொருள்கள் மறுமைநாளில் அவர்களுக்குத் தளையாகிவிடும். வானத்திலும் பூமியிலும் அல்லாஹ்வுக்கே பாத்தியதை இருக்கிறது. அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாயிருக்கிறான்.”[25] மற்றும் ஒரு வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு எச்சரிக்கிறான்: “நம்பாத வர்களை, அவர்களுடைய செல்வங்களோ, மக்களோ அல்லாஹ் வின் தண்டனையிலிருந்து தடுத்துவிட முடியாது. அவர்கள் நரகத் துக்கு உரியவர்கள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். இந்த உலகில் அவர்கள் செலவிடும் செல்வங்கள், தங்களுக்குத் தாங் களே தீங்கிழைத்துக் கொண்டவர்களின் தானிய வயல்களைத் தாக்கி அழித்துவிடும் கடும் குளிர்காற்றைப் போன்றவை. அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்யவில்லை. அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்து கொள்கிறார்கள்.”[26]

மேலே எடுத்துக்காட்டப்பட்ட வசனம் மற்றொரு விஷயத்தை யும் சுட்டிக்காட்டுகிறது. மக்காநகர வர்த்தகர்கள் மிகுந்த அகம் பாவம் கொண்டவர்களாகிவிட்டார்கள். மேலும் அவர்கள் செல்வங்களை

24. Gibb, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 17.
25. குரான், N.J.Dawood மொழிபெயர்ப்பு, (லண்டன் 1970), 'The Imrans', பக்கம் 412.
26. மேற்படி, பக்கம் 406.

www.padippakam.com



யும், பொருள்களால் பெறும் சுகங்களையும் தங்கள் குழந்தைகளையும் வாழ்க்கையின் இறுதியான குறிக்கோள்களாகக் கருதினார்கள். சுகபோகங்களை அனுபவிப்பதே வாழ்க்கை என்ற மனோபாவம் கொண்ட இத்தகைய வாழ்க்கை முறையில் சமூகத்தில் உள்ள பொருளில்லாத மக்களைப் பற்றியோ, வாழ்க்கையின் ஆக்கபூர்வ மான ஆன்மீக அம்சம் பற்றியோ எண்ணிப்பார்க்கவே இடம் கிடையாது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர்களுக்குத் தங்க ளுடைய முன்னோர்களின் பழைய மதத்திலும் அதிக ஈடுபாடு இல்லை. எனவே அவர்கள் பெற்ற பெருஞ்செல்வம் அவர்களை அகந்தையில் மிதக்கச் செய்தது. எனவே முகமது அவர்களது வாழ்க்கையில் சமச்சீர்நிலையை மீண்டும் ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி, அந்த நோக்கத்துடன் வாழ்க்கையின் ஆன்மீகப் பக் கத்தை வலியுறுத்தினார். ஆனால் அவர் புதிய நிலைமையின் தேவைகளைப் புறக்கணிக்காமல் அவற்றை ஏற்றுக்கொண்டு இதைச் செய்தார். ஒருபுறம் முகமது தம்மைப் பின்பற்றுவோரை வர்த்தகத்தில் ஈடுபடுமாறு குரானில் கூறுகிறார்: "நம்பிக்கை யாளர்களே, உங்கள் செல்வத்தை உங்களுக்குள்ளேயே ஆடம்பரத் தில் கரைத்துவிடாதீர்கள். அதை வைத்து ஒருவருக்கொருவர் இணக்கமாக வர்த்தகம் செய்யுங்கள்." மறுபுறம் வர்த்தகத்திலும் லாபம் தேடுவதிலும் மூழ்கிப்போய் கடவுளை மறந்துவிடாமலி ருப்பவர்களைப் போற்றிக் கூறுகிறார்: "வர்த்தகமோ, லாபமோ அல்லாஹ்வை மனத்தில் நினைப்பதை மாற்றிவிடாத மனிதன் காலையிலும் மாலையிலும் அவனைத் துதிக்கிறான்." [27] செல்வத்தை வீண்பெருமையில் கரைத்துவிடாமல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தக் கூறும் வசனத்திலிருந்து அப்போதைய சமூகத்தில் இனக்குழு வாழ்க்கையின் மிச்சசொச்சங்கள் சில இன்னமும் ஒட்டிக் கொண்டிருந்தது தெரிகிறது. முதல் அத்தியாயத்தில் நாம் பார்த் தது போல பதூயின் சமூகத்தில் தாராளகுணம் ஒரு முக்கிய நற் பண்பாகக் கருதப்பட்டது. சில சமயங்களில் தாராள குணத்தைக் காட்டும் செயல்கள் வரம்பு மீறிப் போவதும் உண்டு. ஹாதிம் தாய் (Hātim Tai) தம்மிடம் விருந்தினராக வந்த கவிஞர்கள் சிலரிடமிருந்து தமது இனக்குழுவைப் புகழ்ந்துரைக்கும் கவிதை களைப் பெறுவதற்காக தம்மிடமிருந்த ஒட்டகங்களையெல்லாம் கொடுத்துவிட்டார் என்ற கதை (அத்தியாயம் 2 பார்க்க) இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இம்மாதிரியான செயல்கள் முதலீட் டுக்கு மூலதனம் தேவைப்படும் வர்த்தக சமூகத்துக்கு ஒத்துவராதவை. பிராடஸ்டண்ட் கிறிஸ்தவ மதம் ஐரோப்பாவில் தொழில்புரட்சி யின் தொடக்க காலத்தில் தோன்றியதால் கடின உழைப்பையும் சிக்கனத்தையும் போதித்தது. இந்த நற்பண்புகளை ஜெர்மன் சமூகவியல் அறிஞர் மாக்ஸ் வெபர் (Max Weber) வலியுறுத்துகிறார். வெவ்வேறு சமூகங்களில் மனிதன் நடந்துகொள்ளும் முறையை,

27. குரான், அத்தியாயம் 24, வசனம் 37.

www.padippakam.com



உயிர்வாழ்தல் பற்றி அவை கொண்டுள்ள பொதுவான கருத்துடன் தொடர்புபடுத்திப் பார்த்தால்தான் புரிந்துகொள்ள முடியும் என்ற தத்துவத்தை அவர் நிறுவ முயன்றார். மனிதர்களும், குழுக்களும் கொண்டுள்ள உலக நோக்குகள்தான், பொருளாதாரம் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அவர்கள் நடந்துகொள்ளும் முறையைப் புரிந்துகொள்வதற்கு விளக்கமாக உள்ளன என்றால், மதக் கொள்கைகளும் அவற்றுக்குக் கூறப்படும் பொருள்களும் அந்த உலக நோக்குகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாக உள்ளன. அதே சமயம் அவர், மதக்கருத்துக்கள் உண்மையில் பொருளாதார நடத்தையை நிர்ணயிக்கின்றன என்றும், எனவே, அவை பொருளாதார மாற்றத்துக்கு ஒரு காரணமாகின்றன என்றும் வாதிக்கிறார். இது முதலில் கூறப்பட்ட தத்துவத்துக்கு ஓரளவு முரண்படுகிறது.[28]

மாக்ஸ் வெபர், மக்காவின் இஸ்லாமிய சமூகம் பற்றிச் செய்த பகுப்பாய்வு அநேகமாக மிகச் சரியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்: "வீரக்குணம் கொண்ட போர் வீரர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், இலக்கியம் கற்ற அறிவுஜீவிகள் ஆகிய வர்க்கத்தினர் வெவ்வேறு விதமான நடைமுறைகளைப் பின்பற்றி வந்தனர்......போர்வீரர் வர்க்கத்துக்கும், விவசாயி வர்க்கத்துக்கும், அறிவாளர் வர்க்கத்துக்கும், வர்த்தகர் வர்க்கத்துக்கும் இடையே காணப்பட்ட வேறுபாடுகள் தனிப்பட்ட முக்கியத்துவம் உள்ளவை. அறிவாளர் வர்க்கத்தினர் எப்போதுமே பகுத்தறிவு வாதத்தைப் பேசி வந்தனர். அவர்களைப் பொறுத்தமட்டில் அது ஓரளவுக்குத் தத்துவ ரீதியில் மட்டுமே நின்றது. வர்த்தகர்களையும் கைவினைஞர்களையும் கொண்ட வர்க்கத்தினர் ஓரளவுக்குச் செயல் ரீதியாகவும் பகுத்தறிவுவாதத்தைக் கடைப்பிடிப்போராக இருந்திருக்க முடியும். இந்த இரண்டு வகையான பகுத்தறிவுவாதங்களும் வெவ்வேறு தன்மை கொண்டவையாக இருந்தாலும் மத ரீதியான மனோபாவங்களைத் தீர்மானிப்பதில் இவற்றுக்குப் பெரும் பங்கு இருந்தது."[29] குரானை கவனமாக ஆய்ந்து பார்த்தால், செயல் ரீதியான பகுத்தறிவுவாதத்தையே அது முற்றிலுமாக வலியுறுத்துவது தெளிவாகப் புலனாகிறது. மனிதகுலத்தின் நன்மைக்காக இயற்கையை அடக்கியாளுவதைப் பற்றி அது மீண்டும் மீண்டும் பேசுகிறது. "வானிலும் பூமியிலும் இருப்பவை எல்லாம் உங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளன" என்று குரான் கூறுகிறது. இயற்கையிலிருந்து உதாரணங்களை எடுத்துக்கூறி, குரான் திரும்பத் திரும்ப வினவுகிறது: இவற்றைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்ப்பதில்லையா? இவற்றை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? குரான் கூறுகிறது: "அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கிவைத்து, பூமியில் ஊறச்செய்து கீழே ஊற்றுக்களாகச் சேரச்செய்கிறான்

28. Raymond Aron, *Main currents in Sociological Thought*, தொகுதி 2, பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்ப்பு R. Howard மற்றும் H. Weaver (லண்டன் 1970) பக்கம் 217-18.

29. Roland Robertson (ed.) *Sociology of Religion* (லண்டன், 1969), பக்கம் 33.

www.padippakam.com



என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? எல்லாவகையான செடிகளை யும் அவன் முளைக்கச் செய்கிறான். அது உலர்ந்து, மஞ்சள் நிற மாகிறது. அவற்றை அவன் கூளமாக ஆக்குகிறான். நிச்சயமாக இதில் நற்புத்தி உடையவர்களுக்குப் படிப்பினை இருக்கிறது."[30] மீண்டும் அது "உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு அத்தாட்சி கள் உள்ளன,"[31] என்கிறது. பிரத்தியட்ச பகுத்தறிவுவாதத்துடன் அது இவ்வாறு கூறுகிறது: "நாம் மனிதர்களுக்காக உண்மையைக் கொண்டுள்ள வேதத்தை உம்மீது இறக்கி வைத்தோம்.அதைக் கொண்டு நேர்வழியில் செல்பவன் நன்மை அடைகிறான்; வழி தவறுபவன் தானே தீமை அடைகிறான், நீர் அவர்களுக்குப் பொறுப்பேற்பவர் அல்ல." [32]

இவ்வாறாக, மாக்ஸ் வெபர் சுட்டிக்காட்டியபடி, குரான் தத்துவ ரீதியான பகுத்தறிவுவாதத்தைவிட செயல் ரீதியான பகுத்தறிவையே காட்டுகிறது. காரணம், அது வர்த்தக சமூகத்தில் தோன்றியது. மாக்ஸ் வெபர் மேலும் கூறுகிறார்: "செயல் ரீதியான பகுத்தறிவுவாதத் தைக் கடைப்பிடிப்பது நகரவாழ்வில் எல்லா மட்டங்களிலும் உள்ள பல்வேறு பிரிவுகளிலும் பொதுவாகக் காணப்படும் போக் காகும். இயற்கையுடன் பொருளாதாரப் பிணைப்புகள் நீங்கிப் போன வாழ்க்கை முறையின் பழக்கவழக்கங்களால் அது அமைகிறது. இவையெல்லாம் இயற்கையையும், மனிதனையும், மிகவும் பண் படாத சாதனங்களை வைத்தேனும், கட்டுப்படுத்தி ஆட்சி செய் வதை அடிப்படையாகக் கொண்டுள்ளன."[33] மக்காவிலும் மதீனா விலும் இஸ்லாமின் ஆரம்ப காலத்தைப் பொறுத்தமட்டில் இது மிகவும் உண்மையாகும். மேலும் இஸ்லாம், நகரத்தைச் சார்ந்த மதம் ஆதலால் அத்தகைய மதத்தின் அடையாளங்களாக இ.கெல்லன் (E. Gellen) கொடுத்துள்ள வர்ணனை இதற்குப் பொருத்தமாக இருப்ப தாகத் தோன்றுகிறது. கண்டிப்பான ஏகதெய்வக் கொள்கை, மதநெறியைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தல், மதநூல் கடவுளின் அருளால் வெளிப் படுத்தப்படுதலுக்கும், அதனுடன் தொடர்புள்ளதாக எழுத்தறிவுக்கும் முக்கியத்துவம் தருதல், மதத்தை ஏற்பவர்களிடையே சமத்துவம், இதன் விளைவாக மனிதனுக்கும் கடவுளுக்குமிடையே நடுவில் ஒருவர் இல்லாமை (இது இருந்தால் உலக நடைமுறையில் ஒரு அதிகாரப்படிக் கட்டு அமைப்பு உருவாகும்), மிகக் குறைவான சமயச்சடங்குகள், அதற்கேற்றபடி நிதானம், உணர்ச்சிப்பெருக்கை விட விதிகளைப் பின்பற்றுவதற்கு முக்கியத்துவம் ஆகியவை இந்த அடையாளங்களாகும். இவையெல்லாம் இஸ்லாமின் விஷயத்தில் உண்மையாக உள்ளன. இஸ்லா மில் சடங்குகளுக்கும் உணர்ச்சிப் பெருக்குக்கும் முக்கியத்துவம் இல்லை.

30. குரான், அத்தியாயம் 39, வசனம் 21.
31. மேற்படி, அத்தியாயம் 39, வசனம் 42.
32. மேற்படி, அத்தியாயம் 39, N.J. Dawood, "The Hordes"லிருந்து மொழி பெயர்த்தார். (Penguin, 1966), பக்கம் 277.
33. Robertson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 38.

www.padippakam.com



எனவே மதகுருக்கள் வர்க்கம் ஒன்று தேவைப்படவில்லை. அரேபியாவில் இஸ்லாமின் தொடக்ககாலத்தில் மிகைப்படுத்தப்பட்ட ஆன்மீக அல்லது மூடுமந்திரமான நடைமுறைகள் எதுவும் இருக்கவில்லை. (ஆயினும், பிற்காலத்தில் அரேபியரல்லாத விவசாய சமூகங்களில் பாரசீகம், மத்திய ஆசியா, இந்தியா முதலான நாடுகளில் இத்தகைய மிகையான நடைமுறைகள் வளர்ந்தன). மேலும், இஸ்லாமின் ஆரம்ப காலத்திலாவது, சமத்துவம் மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்டதோடு மதகுரு வர்க்கம் எதுவும் இருக்கவில்லை. அரேபிய சமூகத்தில் மதகுரு வர்க்கம் உருவாகும் போக்கையும், சடங்குகளும் மூடுமந்திரமான நடைமுறைகளும் பெருகி வருதலையும், நிதானமான, அடக்கமான நடைமுறைகள் கைவிடப்படுவதையும் எதிர்த்து அவ்வப்போது கிளர்ச்சிகள் நடந்து வந்துள்ளன. இவற்றில் கடைசியாக நடந்தது சவுதி அரபியாவில் இஸ்லாம் தோன்றிய நகரத்திலேயே அப்தல் வஹாப் ('Abdal Wahhāb) நடத்திய கிளர்ச்சியாகும்.

இவ்வாறாக, மக்காவில் இஸ்லாம் தோன்றிய மூலகாரணத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஒரு வர்த்தகச் சமூகத்தின் இயல்பான பண்புகளை மனத்தில் கொள்ள வேண்டும். குரான் உயர்வாக எடுத்துரைக்கும் சிறந்த பண்புகள், பொருள்களைச் செலவிடுவதில் விரயத்தைத் தவிர்த்தல், குடியிலும் சூதாட்டத்திலும் ஈடுபடாமை, மணவாழ்வுக்குப் புறம்பான பால் உறவுகளைத் தவிர்த்தல், அதன் மூலம் குடும்பத்தின் புனிதத்தன்மையைக் காத்தல், எழுத்து மூலம் வர்த்தக ஒப்பந்தங்களைப் பதிவுசெய்தல், ஏழைக்கு தர்மம் செய்தல் ஆகியவையாகும். இந்தப் பண்புகள் வழக்கமாக வர்த்தக சமுதாயங்களில் காணப்படுகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒன்றும் வேண்டாம் என்று துறந்து விடுதலுக்கும், பொருள்களை விரயம் செய்யும் ஆடம்பரத்துக்கும் இடையே ஒரு நடுவழியாக இவை அமைந்துள்ளன. மக்காநகர சமூகத்தில் வர்த்தக முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமும் உதவியும் அளிப்பதற்கு இத்தகைய வழி, வரலாற்றின் தேவையாக இருந்தது. செல்வத்தை ஆடம்பரமாகச் செலவிடுவது மதிப்புமிக்க பொருளாதார வளங்களை வீணாக்கும் செயலாகும். மாறாக, முற்றிலுமாக எல்லாவற்றையும் துறந்து ஒதுக்கிவிடுவது வர்த்தகம் நடத்திப் பொருள் ஈட்டுவதையே அர்த்தமற்றதாக்கிவிடும். இந்த இரண்டுக்குமிடையே சமநிலையான வழியைப் பின்பற்றுவதுதான் வர்த்தகம் நல்லமுறையில் வளர்ச்சி பெறுவதை உறுதிசெய்யும். இத்தகைய சமநிலையை வலியுறுத்தியதுதான் முகமதுவின் சிறப்பாகும். இத்தகைய ஒரு அறநெறிக் கோட்பாடு சமூகத்தின் தேவைகளுக்குப் பொருத்தமாக இருந்ததால் மக்களுக்குப்

www.padippakam.com



பொதுவாக ஏற்கத்தக்கதாக இருந்தது. மேலும் சமூகத்தில் இருந்த பதற்ற நிலைகளைக் குறைப்பதற்கும் அது உதவியாயிருந்தது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி மக்காவின் மக்களில் ஒரு பெரும்பகுதியினர் ஏழைகளாக, அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள்; அவர்களிடையே அதிருப்தி கொந்தளித்துக் கொண்டிருந்தது. முகமது இந்த நிலைமை கண்டு பெரிதும் கோபமடைந்து, சமூகத்தில் இருந்த கெடுபிடி நிலையை நீக்க எண்ணினார். சமூகத்தில் ஏழைகளாக உள்ள மக்களிடம் அவர் கொண்டிருந்த பரிவுக்கு மதத்தின் மூலம் ஒரு வடிகால் கிடைத்தது. அதனால்தான் குரானில் மக்கா காலத்திய ஸுராக்கள் மிகைச் சொற்கள் இன்றி வன்மையயாகவும் பொருளைச் சேர்த்து வைப்போருக்கு அச்சந்தரும் எச்சரிக்கைகள் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. ஆனால், மதீனா கால ஸுராக்கள், மாறிவிட்ட சூழ்நிலை காரணமாக, நிதானமும் சாந்தமும் கொண்டவையாகவும் வாழ்க்கை விதிகளை வகுப்பனவாகவும் அமைந்துள்ளன. (மதீனாவில் தீர்க்கதரிசி ஒரு அரசு அமைப்பின் செயல்முறைகளில் சம்பந்தப்பட்டவராக இருந்தார் என்பது இதற்குக் காரணம்).

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் சமூகக்கட்டுக்கோப்பு சிதறிப்போகாமல் காப்பதற்காகவும் தீர்க்கதரிசி தர்மம் செய்தலையும், ஏழை எளியோரைக் காப்பாற்றுவதையும், விதவைகள், அநாதைகள் ஆகியோரைப் பராமரிப்பதையும் அவர்களின் உரிமைகளை அநியாயமாகக் கைப்பற்றலாகாது என்பதையும் முக்கியமாக அறிவுறுத்தினார். அடிமைகளின் நலத்தில் நாட்டம் கொண்டு நடக்குமாறும், முடிந்தவரையில் அவர்களுக்கு விடுதலை அளிக்குமாறும் கூறினார். பொதுவாகவே சமூகத்தில் நலிவுற்ற பிரிவினரின் நல்வாழ்வில் அக்கறைகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலே குறிப்பிடப்பட்ட மக்களுக்கெல்லாம் இனக்குழுச் சமூகத்தில் கேட்காமலே ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டது; ஏனென்றால் அதில் தனிநபர் சொத்துரிமை முறை கிடையாது. ஆனால், மக்காநகர சமூகத்தில் மரபுவழியான இனக்குழுமுறை தகர்ந்துபோய், தனிநபர்கள் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கிய பின் இந்த நிலை மாறிவிட்டது. மேலும் ஒருவருடைய வர்த்தகத்தில் கிடைக்கும் லாபத்தில் அவருடைய சகோதரர்கள், அவரது தந்தையின் சகோதரர்கள் போன்ற நெருங்கிய உறவினர்களுக்குக் கூடப் பங்கு இல்லாததால் அவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். இவ்வாறாக தீர்க்கதரிசியின் பாட்டனாரான அப்தல் முத்தலிபுக்கும் அவருடைய தந்தையின் சகோதரரான நவ்ஃபலுக்கும் இடையே ஒரு கிணறு உள்ளிட்ட முன்னோர் சொத்து சம்பந்தமாக தாவா ஏற்பட்டதை தபரி (Tabari)

www.padippakam.com



குறிப்படுகிறார். நவ்ஃபல் ஓரளவுக்கு நல்ல நிலைமையில் இருந்த போதிலும் கூட கிணற்றின் மீது தமக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.[34] தீர்க்கதரிசி தந்தையின் சகோதரர் களில் ஒருவரான அபூ ஜஹேல் (Abū Jahel), மக்காவின் பணக்கார வர்த்தகர்களுடன் வர்த்தகத்தில் பங்காளியாகச் சேர்ந்திருந்ததால் நல்ல வசதி பெற்றவராயிருந்தார். ஆனால் தீர்க்கதரிசியின் தந்தை இறந்த பிறகு அவரைப் பராமரித்து வந்தவரான அவரது தந்தை யின் மற்றொரு சகோதரர் அபூ தாலிப் ('Abū Tālib) பொருளா தாரத்தில் அவரைவிடக் குறைந்த நிலையில் இருந்தார். முகமது மக்காவின் பணக்கார விதவையான கதீஜாவைத் திருமணம் செய்து கொண்டபின் அபூ தாலிபின் பொருளாதார சுமையைக் குறைப் பதற்காக அவருடைய புதல்வர்களில் ஒருவரான அலீ (Ali)யைப் பராமரிக்கும் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொண்டார். தம் முடைய தந்தையின் சகோதரர்களில் மிகவும் இளையவரான அல்-அப்பாஸை (al-'Abbās) மற்றொரு புதல்வரைத் தத்து எடுத்துக் கொள்ளச் செய்தார். ஒருவருடைய உறவினர்கள் சிரமதசையில் இருந்தால் அவர் அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குரான் வலியுறுத்துகிறது.

தீர்க்கதரிசி தம்மைச் சுற்றிலும் நிலவிய அமைதியின்மையை யும் பதற்றநிலைமையையும் கண்டு ஆழ்ந்த மனவேதனை அடைந் தார். இவையெல்லாம் பெரும் சமூகக் கொந்தளிப்பு ஏற்படப் போவதைக் காட்டும் அறிகுறிகள் என்பதை அவர் உணர்ந்திருக்கக் கூடும். எனவே, அவர் மக்காகாலத்தைச் சேர்ந்த தொண்ணூறு ஸூராக்களில் பெரும்பாலானவற்றில் அந்நகரின் பணக்காரர்களை இடித்துரைக்கிறார். குரான் கூறுகிறது:

> புறங்கூறிப் பேசுகின்ற ஒவ்வொருவருக்கும் கேடுதான். அவர்கள் பொருளைத் தேடிச் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள். தங்க ளுடைய செல்வங்கள் தங்களை உலகில் நிரந்தரமாக்கி வைக்கும் என்று எண்ணிக்கொள்கிறார்கள். அவ்வாறல்ல. அவர்கள் "ஹுதமா" என்ற எரியும் நெருப்பில் தூக்கிப் போடப்படு வார்கள். அந்த நெருப்பு என்னவென்று உமக்குத் தெரியுமா? அது அல்லாஹ் மூட்டிவைத்த நெருப்பாகும். மனிதர்களின் இதயங்கள்வரை அது எழுந்து எரியும். கொழுந்துவிடும் உயர்ந்த தூண்கள் போல அது எல்லாப் பக்கங்களிலுமிருந்து அவர் களைச் சூழ்ந்து கொள்ளும்.[35]

இதே போல மற்றொரு அத்தியாயத்தில் இவ்வாறு கூறுகிறது:

34. *Tairkh-e-Tabari பக்கம் 34.*
35. *குரான், அத்தியாயம் 104, 'புறங்கூறுவான்.'*

www.padippakam.com



*நியாயத் தீர்ப்பை மறுப்பவனை நீர் எண்ணினீரா? அவன் அநாதையை விரட்டுகிறவன்; ஏழைக்கு உணவளிக்க மற்றவர்களைத் தூண்ட மாட்டான்; தொழுகையில் கவனமில்லாமல் பிறர் காண்பதற்காகத் தொழுகிறவன்; ஆதரவற்றவர்களுக்கு தர்மம் செய்யாதவன்.*[36]

இதே போல மற்ற பெரும்பாலான மக்கா ஸுராக்களும் மக்கா நகரப் பணக்காரர்களின் பேராசையையும் செல்வத்தைக் குவித்துவைக் கும் போக்கையும் மிகுந்த உணர்ச்சியுடன் கண்டனம் செய்கின்றன. மேலே எடுத்துக்காட்டப்பட்ட குரானின் 104-வது அத்தியா யத்தில், செல்வங்களைத் தேடித் தேடிச் சேர்த்து வைப்பவர்கள், தங்களுடைய செல்வத்தால் தாங்கள் மரணமற்றவர்கள் ஆகி விட முடியும் என நினைக்கிறார்கள் என்று தெளிவாகக் கூறுப் பட்டுள்ளது. ஆனால் அவர்கள் நினைப்பது மாபெரும் தவறு. அவர்கள் அல்லாஹ் மூட்டிய நரக நெருப்பில் வீசியெறியப்படு வார்கள். நரகத்தீ என்பதைக் குறிப்பதற்குக் குரானில் "ஹுதமா" (hotama) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. தன்னுள் போடப்படும் எதனையும் சிதறடிக்கும் கடுமையான நெருப்பு என்பது இந்தச் சொல்லின் பொருள் என்று அல்-முன்ஜித் (al - Munjid) கூறுகிறது. "நொறுக்கிட, துண்டுதுண்டாக உடைத்திட, மோதிச் சிதறடிக்க" என்று அந்தச் சொல் பொருள் தருவதாக அல்-காமூஸ் அல்-அஸரீ (al-qāmūs al-'Asri) கூறுகிறது.[37]

பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் இருப்பதும், அந்த இடைவெளி விரிவடைந்து வருவ தும் காரணமாக, இந்த அபாயத்தைக் கட்டுப்படுத்த ஏதேனும் செய்யவில்லை என்றால், மக்களின் கோபம் பொங்கியெழுந்து நெருப்பாகப் பரவி சமூகம் விரைவில் உடைந்து சிதறிப் போகும் என்பதை முகமது உணர்ந்தார் என்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆனால், அவர் ஆழ்ந்த மத உணர்வு உடையவராத லால் இந்த எச்சரிக்கையைத் தெரிவிப்பதற்கு மதத்தின் சொல் லாட்சியைப் பயன்படுத்தினார். கடவுளின் தண்டனை வரும் என் பதில் அவருக்கு நிச்சயமான நம்பிக்கை இருந்தது என்பது பல காரணங்களால் உறுதியாகிறது. உரியகாலத்தில் நிலைமையைச் சீர்ப்படுத்தவில்லையென்றால் வரவிருக்கும் அபாயத்தை அவர் உள்ளுணர்வால் அறிந்திருந்தார் என்று நிச்சயமாகக் கூறலாம். அவரே நல்ல அனுபவம் பெற்ற வர்த்தகர் ஆதலால், சில தனி நபர்கள் பொருள்களைத் துறந்துவிடுவதால் மட்டும் பலன் கிடைக் காது என்பதையும் அறிந்திருந்தார். ஹனீஃப் (Hanīf) என்று அழைக்கப்படும் சில பேர் ஏற்கெனவே அந்த வழியைப் பின்பற்றி

36. மேற்படி, அத்தியாயம் 107, 'தர்மம் செய்தல்.'
37. பார்க்க: *al-Munjid* (Matba'a al-Kathulika, Beirut, 1956), under the word 'A 'hatama' and *Qamus al-'Asri* by Elias Antim (Elias Modern Press, Cairo, 1925).

www.padippakam.com



யிருந்தார்கள். ஆனால் தனிப்பட்டமுறையில் அவர்கள் "விமோசனம்" பெற்றதனால் சமூகத்தில் இருந்த தீமைகள் நீங்கிவிடவில்லை. பொருள் ரீதியாகவும், மற்ற வகைகளிலும் இனக்குழுவின் உள்ளே எல்லோருக்கும் சமத்துவநிலையை உறுதிசெய்யும் நாடோடி வாழ்க்கை முறைக்கு மீண்டும் செல்லவும் அவர் விரும்பவில்லை. அவ்வாறு மீண்டும் செல்வது, வர்த்தகத்தின் மூலம் கிடைத்த வளமான வாழ்வை அழித்துவிடுவதுடன் மேலும் அதிகக் கொந்தளிப்பையும் ஏற்படுத்திவிடும். எனவே சமுகத்தில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்குச் சிறந்த வழி பணக்காரர்கள், வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் எளியோருக்கு தாராள மனத்துடன் உதவி செய்ய வேண்டும் என்பதை அவர்கள் உணரச் செய்வதேயாகும்.

இதைச் செய்வதற்கு அவர் ஜகாத் (zakāt) என்ற ஒரு கருத்தை அவர்களுக்குத் தந்தார். ஆரம்பத்தில் இது ஒரு அரசு வரிவிதிப்பாக இருக்கவில்லை; ஏனென்றால் அப்போது அரசு என்ற அமைப்பு உருவாகியிருக்கவில்லை. (அரசு இருந்திருந்தால் அது பணக்காரர்களான மக்காவாசிகள் மீது வரிவிதித்து அதைக்கொண்டு குறைந்த அளவிலேனும் உதவி நடவடிக்கைகள் எடுத்திருக்கும்). மக்காவில் ஜகாத் என்பது, ஒருவர் தமது செல்வத்தைத் தூய்மையாக்குவதற்காக அதில் ஒரு பகுதியைத் தர்மமாக வழங்குவதைக் குறித்தது, மக்கா காலத்தில் ஜகாத் கட்டாயமாயிருக்கவில்லை. பிரதானமாக அது தர்மச்செயலாகவே இருந்தது. சமுகப்பதற்ற நிலையைத் தணிப்பதற்கு இது அவசியம் என்று தீர்க்கதரிசி கருதினார். அவரைப் பற்றிய மரபுச் செய்திகள் சில இதைத் தெளிவாக்குகின்றன. அவர் இவ்வாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது: "உங்கள் சொத்திலிருந்து ஜகாத் வழங்குங்கள்; அது உங்களைத் தூய்மைப்படுத்துவதோடு உங்களுக்கு உறவானவர்களிடம் உங்கள் கடமையைச் செய்வதற்கும் உதவும். பிச்சையேற்போர், அண்டை அயலார், வறியோர் ஆகியவர்களின் உரிமைகளைக் கவனித்துச் செயல்படுங்கள்; ஆடம்பரச் செலவு செய்யாதீர்கள்." மேலும் "ஜகாத் கொடுக்காத நாடு தட்டுப்பாட்டையும் வறுமையையும் வரவழைக்கிறது," என்றும், "ஜகாத் கொடுக்காதவர்களின் நம்பிக்கையையோ தொழுகையையோ அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை" என்றும் அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது.[38] இதற்கு மிகவும் பிற்பட்ட காலத்தில்தான் மதீனாவில் ஜகாத் ஒரு அரசுவரியாகக் கட்டாயமாக்கப்பட்டது; ஏனென்றால் அந்தக் காலத்திற்குள் அங்கே ஒரு அரசு, முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதோர் ஆகிய இனக்குழுக்களின் கூட்டமைப்பாக உருவாகியிருந்தது. தீர்க்கதரிசி மக்காவைவிட்டு மதீனாவுக்குச் சென்றபின் எட்டாவது ஆண்டில் ஜகாத் கட்டாயமாக்கப்பட்டது என்றும், ஒன்பதாவது

38. Khalifa, 'Abdul Hakim, *Islamic Ideology*, Institute of Islamic Culture (Lahore, 1961), பக்கம் 273.

www.padippakam.com



ஆண்டில் அதை வசூலித்து வருவதற்கு அரேபியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சில அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தபரி (Tabari) தெரிவிக்கிறார்.[39] இந்தக் காலத்துக்குள் மக்காவும் வென்று பிடிக்கப்பட்டுவிட்டது. புதிதாக நிறுவப்பட்ட அரசு முழுமையாக வடிவம் பெறவில்லை என்றாலும் ஒழுங்காகச் செயல்படத் தொடங்கிவிட்டது. இவ்வாறாக ஹிஜிரி எட்டாவது ஆண்டில்தான் ஜகாத்தின் பல்வேறு உபயோகங்களையும் பற்றிய குரான் வசனம் தெரிவிக்கிறது. அது கூறுகிறது: "தர்மம் செய்வதை அல்லாஹ்வின் காரியங்களுக்கே பயன்படுத்த வேண்டும். சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும் கடன்பட்டவர்களையும் மீட்பதற்கும், ஏழைகள், ஆதரவற்றவர்கள், வழிப்போக்கர்கள், தர்மப்பொருள்களைத் திரட்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளவர்கள், இஸ்லாமில் சேர்க்கப்படுவோர் ஆகியோருக்கு வழங்குவதற்கும் அதைப் பயன்படுத்த வேண்டும்."[40] "இது அல்லாஹ் விதித்துள்ள கடமை. அவன் அறிவுடையவன், எல்லாம் அறிந்தவன்."[41] மக்காவில் வெறும் தர்மச்செயலாக இருந்த ஜகாத் கட்டாயமான வரியாக, அல்லது குரானின் வார்த்தைகளில் "அல்லாஹ் விதித்துள்ள கடமை"யாக மாறிவிட்டது. தீர்க்கதரிசி மதீனாவுக்குள் பிரவேசித்தபின் சில ஆண்டுகளில் இஸ்லாம் மக்காவில் இருந்தது போல சில தனிநபர்களின் கூட்டமாக இல்லாமல் மதமாக மாறி, புதிதாகத் தோன்றிய அரசு அமைப்புக்கு சித்தாந்தத்தையும், செயல்படுவதற்கான வழிகாட்டி நெறிகளையும் தருவதாகிவிட்டது.

ஜகாத்தை என்னென்ன காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று குரானில் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலைக் கவனிப்பது முக்கியம். முதலாவதாக ஜகாத் பணம் அல்லாஹ்வின் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அது கூறுகிறது. இது சற்று தெளிவற்றதாகவும், அரசின் தலைவரான தீர்க்கதரிசி தீர்மானிக்கின்றபடி அவ்வப்போது எந்தப் பொதுச்செலவுக்கும் பொருந்தும் என்று பொருள் கொள்ளும்படியாகவும் உள்ளது. அடுத்தபடியாக, சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும் கடன்பட்டவர்களையும் மீட்பது கூறப்படுகிறது. எதிரிகளுடன் நடந்த சண்டைகளிலும், மக்காவாசிகளுடன் நடந்த பல சண்டைகளிலும் பலர்

39. Tārikh-e-Tabari, Vol.iv, பக்கம் 1722.

40. என்.ஜே. தாவூத், 'Mo' allafatul qulūb, என்ற தொடரை 'மதத்துக்கு மாற்றப்பட்டவர்கள்' என்று மொழிபெயர்த்திருப்பது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. 'இதயத்தை சமரசப்படுத்திக் கொண்டவர்கள்' என்ற மொழிபெயர்ப்பு அதைவிடப் பொருத்தமாயிருக்கும். அந்தத் தொடர், சமீப காலம் வரை விசுவாசிகளின் எதிரிகளாயிருந்து, பின்னர் இஸ்லாமைத் தழுவியவர்கள் அல்லது முஸ்லிம்களுடன் சுமுகமான உடன்பாடு செய்துகொண்டவர்களைக் குறித்துக் கூறப்பட்டது. தீர்க்கதரிசி அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கும், அவர்கள் தொடர்ந்து தமது கூட்டத்தில் இருக்க ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்குப் பெரும் அளவில் அன்பளிப்புகள் கொடுத்தார். ஹுனைனில் கிடைத்த கொள்ளைப் பொருள்களிலிருந்து குரைஷ் மக்களின் தலைவருக்கு முகமது தாராளமாக வழங்கினார் என்று அப்துல் ஃபிதா கூறுகிறார்.

41. குரான், அத்தியாயம் 9, வசனம் 60.

www.padippakam.com



சிறைப்பிடிக்கப்பட்டார்கள். இது முன் எப்போதும் இல்லாத ஒரு நிகழ்ச்சி ஆதலால் அவர்களை என்ன செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை. அரசு இயந்திரம் அப்போதுதான் மெதுவாக உருவாகிக்கொண்டிருந்ததால் அடக்குமுறை அமைப்பு எதுவும் இல்லை. அவர்களை அடைத்து வைப்பதற்கு சிறைச்சாலைகள் கிடையாது. அவர்களை என்ன செய்வது என்று தீர்க்கதரிசி தமது தோழர்களைக் கலந்தாலோசித்ததாக இந்தியாவின் பிரபல இஸ்லாமியல் அறிஞர் ஷிப்லி நோமானி (Shibli N 'omānī) கூறுகிறார்.[42] சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் பலர் மக்காவின் முக்கியமான மனிதர்கள் என்பது மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களாகவும் இருந்தார்கள். இஸ்லாம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் உறவினர்கள் என்று பார்க்கக்கூடாது என்றும், சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் அனைவரையும் கொன்றுவிட வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் தங்களுடைய உறவினர்களைத் தாங்களே கொல்ல வேண்டும் என்றும் உமர் ('Umar) யோசனை கூறினார். ஆனால், தீர்க்கதரிசி இந்த யோசனையை நிராகரித்துவிட்டு, மீட்புப் பணம் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவிக்கலாம் என்று அபூபக்கர் (Abū Bakr) கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டார். பணம் செலுத்தி மீட்பதற்கு உறவினர்களோ இனக்குழுவோ இல்லாதவர்களுக்குரிய மீட்புப்பணத்தை அரசுக் கருவூலத்திலிருந்து, அதாவது ஜகாத்தாக வசூலிக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து செலுத்தலாம். மேலும், மக்காவை விட்டு வந்துவிட்ட முஸ்லிம்களில் சிலர், வாழ்வதற்கு வேறு வழி ஏதும் இல்லாத காரணத்தால் கடன்பட்டிருந்தார்கள். எனவே, ஜகாத் தொகையிலிருந்து ஒருபகுதியை இவர்களின் கடன்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று குரான் விதித்தது. மதீனாவிற்கு வந்து குடியமர்ந்த முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற்ற இடமளித்து சமூகத்தில் பதற்றநிலையைக் குறைப்பது அவசியமாயிருந்தது. அதனால்தான் ஜகாத்தில் ஒரு பகுதியைக் கடன் பட்டவர்களுக்காகப் பயன்படுத்துமாறு குரானில் கூறப்பட்டது.

இதே போல சமூகத்தில் ஆதரவற்றவர்களாகவும் ஏழைகளாகவும் உள்ள மக்களைப் பராமரிப்பதும் அவசியமாயிருந்தது. இவர்களைப் புறக்கணித்ததால் மக்காவில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. மக்காவின் பணக்காரர்கள் தங்கள் செல்வங்களின் ஒரு பகுதியை இவர்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று முகமது மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியிருந்தது. எனவே, மதீனாவிலும் இவர்களை கவனித்துக்கொள்ள வழிசெய்யப்பட்டது. அங்கும் பல ஏழைகளும் ஆதரவற்றவர்களும் இருந்தனர். மேலும், சிலரது கைகளில் செல்வங்கள் குவிவதனால் சமூகத்தில் கொந்தளிப்பு வெடித்தெழக்கூடிய நிலை ஏற்படும் என்பதை

42. பார்க்க: Shibli N'omānī's *Al-Fārouq* (தில்லி, 1968) பக்கம் 68-9. அவர், இபின் ஹிஷாம், தபரி ஆகியோரின் புத்தகங்களிலிருந்து மேற்கோள்கள் கொடுத்திருக்கிறார்.

www.padippakam.com



முகமது மக்காவில் தமது அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தார். எனவே, சமூகத்தில் ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக செல்வத்தை வினியோகிப்பதற்கு, தர்மம் செய்வதன் மூலமாக வழிசெய்வது அவசியமாகிறது. தனிநபர் சொத்துரிமையின் ஆணிவேரை வெட்டுவதன் மூலம் இதைச் செய்ய முயன்றால் அப்போதைய நிலையில் பொருள் வளங்கள் மேலும் வளரமுடியாமல் போகும். சமூகத்தை முழுமையாக எடுத்துக்கொண்டால் இது ஏற்கத்தக்கதாக இராது. எனவே, ஜகாத்தின் ஒருபகுதியை ஆதரவற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும் வழங்குவதை குரான் கட்டாயமாக்குகிறது. ஜகாத்தில் ஒருபகுதியை வழிப்போக்கர்களுக்குச் செலவிட வேண்டும் என்று குரான் விதிக்கிறது. நாம் ஏற்கெனவே பலமுறை குறிப்பிட்டபடி மக்காவின் பொருளாதாரம் முழுவதும், மதீனாவின் பொருளாதாரம் ஓரளவுக்கும், பன்னாட்டு வர்த்தகத்தைச் சார்ந்து நின்றன. இது வர்த்தக அணிகள் மூலம் நடத்தப்பட்டது. எனவே வழிப்போக்கர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்க நிதி ஒதுக்குவது அவசியமாயிற்று. இவர்களது பயணத்தில், வழியில் பல கஷ்டங்கள் இருந்தன. ஆயினும் முகமது பொதுப்பணிகள் நடத்துவதைக் கருத்தில் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், தாம் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த காலத்தின் அனுபவத்தினால் போலும் அவர் வழிப்போக்கர்களின் நலனுக்காகச் செலவிடுவதற்கு அரசின் வரவு செலவுத் திட்டத்திலேயே வழி செய்வது அவசியம் என்று கருதினார்.

மேலும், ஜகாத் நிதியின் ஒருபகுதி அதை வசூலிக்கும் பணியில் அமர்த்தப்படுவோருக்கென ஒதுக்கப்பட்டது. இதை ஒரு வகையில் அரசின் அதிகாரிகள் அமைப்புக்கு ஆரம்பம் என்று கருதலாம். ஆனாலும் முறையான அரசுப்பணி அமைப்பு ஒன்று ஏற்பட்டு விட்டதாகக் கூற முடியாது. என்றாலும், இந்தத் திசையில் ஒரு ஆரம்பம் ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. அரசு அதிகாரிகள் வர்க்க அமைப்பு முழுமையாக உருவாவதற்கு முகமது காலமான பிறகு பல்லாண்டுகள் ஆயின. முகமதுவின் காலத்தில், இஸ்லாமிய சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டவர்களே முன் வந்து அரசுப்பணியை சேவையாகச் செய்தார்கள். ஆகையால் முகமதுவின் காலத்தில் இஸ்லாமிய அரசு, அதற்குப் பிந்திய காலத்தை விட அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் குறைந்ததாக இருந்தது. தீர்க்கதரிசியின் காலத்தில் காவல்துறையோ, ராணுவமோ இருக்கவில்லை. மக்காவின் குரைஷிகளுடனும், மற்றப் பாலைவன நாடோடி மக்களுடனும் நடந்த சண்டைகளில் அவரிடம் ஈடுபாடுகொண்டு அவரைப் பின்பற்றியவர்கள்தான் போரிட்டார்களேயன்றி தொழில் முறையான ராணுவவீரர்கள் அல்ல. வெகுகாலத்துக்குப் பின்புதான் ராணுவம் தொழில் முறையில் அமைக்கப்பட்டது. இதற்கு ஒரு ஆரம்பம் இரண்டாவது கலீஃபா உமரின் ('Umar) காலத்தில் ஏற்பட்டது. அவர் தம்முடைய போர் நடவடிக்கைகளில் வழக்கமாகக் கலந்து கொண்டவர்களின் பதிவேடு ஒன்றை வைக்கத் தொடங்கியதே இந்த ஆரம்பமாக அமைந்தது எனலாம்.

www.padippakam.com



அரசின் அடக்குமுறைத் தன்மையின் வளர்ச்சியில் மற்றொரு படியான காவல்துறை அமைப்பு இதற்கும் பிற்பட்ட காலத்தில், அநேகமாக உமய்யத் காலத்தில் உருவாக்கப்பட்டது. தபரி, தமது வரலாற்று நூலின் 4ஆம் தொகுதியில் பின்வருமாறு சில விவரங்களைத் தெரிவிக்கிறார்: "உம்ரு பின் ஸயீத் ('Umru bin Sa'eed) மதீனாவுக்கு வந்தபோது, உம்ரு பின் ஜுபைரை ('Umru bin Zubayr) காவல்துறையின் தலைவராக நியமித்தார். அப்த் அல்லா பின் ஜுபைருக்கும் (Abd Allah bin Zubayr) உம்ரு பின் ஜுபைருக்கும் இடையே (இருவரும் சகோதரர்கள்) விரோதம் இருப்பதைத் தெரிந்து அவர் இவ்வாறு நியமித்தார். இதைக் கருத்தில்கொண்டு அஷ்டாக் (Ashdaq) அவரை (அதாவது உம்ரு பின் ஜுபைரை) மதீனாவில் உள்ள சிலரிடம் அனுப்பிவைத்தார். அவர் அவர்களை அடித்து நொறுக்கினார். அப்த் அல்லா பின் ஜுபைரின் ஆதரவாளர்கள் என்று தெரிந்த எல்லோரையும் இரக்கமின்றி அடித்து நொறுக்கினார். சிலபேரை நாற்பது முறையும், சிலரை ஐம்பது அல்லது அறுபது முறையும் சவுக்கால் அடித்தார். உம்ரு பின் ஸயீத் (மதீனாவின் ஆளுநர்) அவரிடம் உமது சகோதரருக்கு ஆறுதல் சொல்ல யார் செல்வார்கள் என்று கேட்டதற்கு தம்மால்தான் அதைச் செய்ய முடியும் என்று பதிலளித்தார்."[43]

இந்த நிகழ்ச்சி, நான்காவது கலீஃபா அலீயின் புதல்வர் ஹஸனிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட முஆவியாவின் (Mu'āwiya) மரணத்துக்குப்பின் நடந்தது. முஆவியாதான் உண்மையில் இஸ்லாமில் மன்னர் ஆட்சியையும் வம்சாவாளி ஆட்சிமுறையையும் தொடங்கி வைத்தவர். அவர் தமது ஆட்சியை நிரந்தரமாக்குவதற்காக அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர்தான் காவல்துறையை உருவாக்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனென்றால் நமது வரலாற்று ஆதாரங்களில் அவர் காலத்துக்குமுன் இதைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. இரண்டாவது கலீஃபா உமரும், நான்காவது கலீஃபா அலீயும் தாங்களே கையில் சவுக்கை எடுத்துக்கொண்டு சென்று சட்டத்தை, அதாவது, இஸ்லாமிய ஷரீயாவை (Sharī'a) அமல் செய்தார்கள் என்று ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். சட்டத்தை மீறுபவர்களுக்கு அவர்கள் பகிரங்கமாக சாட்டையடி கொடுத்தார்கள். இதேபோல மாகாணங்களில் வாலி (Wāli) என்று அழைக்கப்பட்ட ஆளுநர் தாமே நேரில் சென்று சட்டத்தை அமல் செய்தார். ஷுர்த்தா (Shurta) என்று அழைக்கப்பட்ட காவல் துறையின் பணிகளை இந்தக் கால கட்டத்தில், தலைநகரில் முக்கியமாக கலீஃபாவும் அவரது தோழர்களும், மாகாணத் தலைமையிடங்களில் ஆளுநரும் அவரது தோழர்களும் தாமாகவே சேவைமுறையில் நடத்தினார்கள்.

43. *Tārikh-e-Tabari*, தொகுதி iv, பக்கம் 182.

www.padippakam.com



இதைப்பற்றிப் பின்னர், இஸ்லாமின் ஆரம்பகாலத்தில் அரசு அதிகாரிகள் அமைப்பு உருவானது பற்றி விவரிக்கும் போது மேலும் கூறுவோம். கலீஃபாக்கள் ஆட்சியின் முதல் முப்பது ஆண்டுகளில், நமக்குக் கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்கள் பலவற்றில் நிர்வாக, அரசு அதிகார அமைப்புகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் காவல்துறை பற்றிய விவரம் எதுவும் இல்லை. மாறாக, கலீஃபாவோ, மாகாண ஆளுநர்களோ தாங்களே சவுக்கடி போன்ற தண்டனைகளை நிறைவேற்றினார்கள் என்று காண்கிறோம்.

ஜகாத் நிதியை என்னென்ன காரியங்களுக்குச் செலவிடலாம் என்று குரான் கூறும் போது கடைசியாக, மதத்துக்கு மாற்றப்பட்டவர்களுக்குச் செலவிடலாம் என்று குறிப்பிடுகிறது. இஸ்லாமியச் சொல் வழக்கில் இது 'மோ அல்லா-ஃபதுல் குலூப்', அதாவது உள்ளத்தைச் சமரசப்படுத்திக் கொண்டவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. எந்தவொரு சித்தாந்த இயக்கத்திலும் நடப்பது போல, ஒரு பயனைக்கருதி இஸ்லாமில் சேர இணங்கக்கூடியவர்கள் மக்காவிலும் மதீனாவிலும் இருந்தார்கள். அவர்களுடைய பகைமையை நீக்கவும், ஆதரவைப் பெறவும் அவர்களை இஸ்லாமில் சேரும்படித் தூண்டுவது அவசியமாயிருந்தது. இவ்வாறாக இஸ்லாமின் தொடக்கநிலையில் தர்ம காரியமாகவும், தூய்மைப் படுத்தும் சாதனமாகவும் மட்டுமே இருந்த ஜகாத் மதீனாகாலத்தில் இஸ்லாம் ஒரு முறையான அமைப்பாக உருவான பிறகு, கட்டாயமான வரியாக, குறிப்பிட்ட அரசு காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய நிதியாக மாறிவிட்டது.

முன்னமே நாம் குறிப்பிட்டபடி இஸ்லாமிய இயக்கம், ஆரம்பத்தில், சமூகத்தில் பலவீனப்பிரிவினர், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விருப்பங்களின் பிரதிபலிப்பாக இருந்தது. எனவே ஆரம்பகாலத்தில் அதற்கு ஆதரவு தந்தவர்கள் யார் என்பதைப் பார்ப்பது சுவாரஸ்யமாயிருக்கும். எகிப்தைச் சேர்ந்த அப்த் அல்-முத்தால் அஸ்-ஸயீதி ('Abd al-Muta'al as-Sa'īdī) என்பவர் இதைப் பற்றி ஒரு ஆய்வு நடத்தி புதிதாகத் தோன்றிய இஸ்லாம் முக்கியமாக இளைஞர்களின் இயக்கமாக இருந்தது என்று கூறுகிறார்.[44] வரலாற்று ஆவணங்களில் வயது விவரம் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் மிகப் பெரும்பாலோர் முகமது மக்காவைவிட்டு மதீனாவுக்குச் சென்ற (ஹிஜ்ரா) சமயத்தில் நாற்பது வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் அதற்கு எட்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன் இஸ்லாமில் சேர்ந்தார்கள். பணத்தைச் சேர்த்து வைக்காதீர்கள், செல்வத்தால் அகம்பாவம் கொள்ளாதீர்கள்

44. Abd al-Muta'al as-Saidī, *Shabāb al-Quraysh* (கெய்ரோ, 1947)

www.padippakam.com



என்று பணக்காரர்களுக்கு முகமது அறிவுரை கூறியது ஒடுக்கப்பட்ட மக்கள், அடிமைகள், அநாதைகள் போன்றவர்களின் மனத்தைத் தொட்டது என்றாலும், இத்தகைய மக்கள் மட்டுமே அவரது ஆதரவாளர்களானார்கள் என்று கூற முடியாது. அவரது ஆதர வாளர்கள் அனைவரும் ஏதுமற்ற ஏழைகள் என்றோ, இனக்குழுத் தொடர்புகள் இல்லாத சமூகத்தின் அடித்தள மக்கள் என்றோ கூற முடியாது. உண்மையில் அவர்களில் பலர் முன்னணியில் இருந்த இனக்குழுக்களைச் சேர்ந்தவர்கள். நமது காலத்தில் சமூக, அரசியல் நடைமுறைகள் பற்றிய பிரக்ஞைகொண்ட மத்தியதர வகுப்பைச் சேர்ந்த படித்த மக்கள் தங்களுக்கு வசதி வாய்ப்புகள் மறுக்கப்படு வது பற்றி அதிருப்தி கொண்டவர்களாக, சமூகமாற்றங்களில் முக் கிய பங்கு கொள்வது போலவே முகமதுவின் ஆதரவாளர்களும் இருந்தார்கள். அவர்களும் மக்காநகர சமூகத்தின் மத்திய தரப் பிரிவைச் சேர்ந்தவர்களே. அந்தச் சமூகத்திலும் ஒன்றுக்கொன்று பகையான வர்க்க உறவுகள் உருவாகியிருந்தன.

முகமதுவை ஆதரிக்க முன்வந்த பல்வேறு குழுக்களும் என்ன காரணத்துக்காக அவரை ஆதரித்தார்கள் என்பது பற்றி மாண்ட் காமரி வாட்டும் ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறார். முதலாவதாக மிக வும் செல்வாக்குள்ள குலக்குழுக்களின் முக்கிய தலைவர்களின் நெருங்கிய உறவினர்கள் பலர், பெரும்பாலும் இளைஞர்கள், முக மதுவைப் பின்பற்றினார்கள். இவர்கள் பணக்காரர்களான ஏக போக வர்த்தகர்களுக்கு நெருங்கிய உறவினர்களாக இருந்த போதிலும் லாபம்மிகுந்த வர்த்தக முயற்சிகளில் சேர்க்காமல் ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தால், முகமதுவும், ஏகபோக வர்த்த கத்துக்கு எதிரான அவரது கொள்கையும் இவர்களைக் கவர்ந்திருக்கக் கூடும். அல்லது ஏகபோக வர்த்தகர்களின் கீழ் இருந்த வாழ்க்கை முறை பற்றி இவர்கள் அதிருப்தி அடைந்திருக்கலாம். செல்வங்களை மேலும் மேலும் சேர்த்துக் குவிப்பது இவர்களுக்கு அர்த்தமற்ற தாகியிருக்கக்கூடும்.

இரண்டாவதாக, மக்காவின் மற்ற குலக்குழுக்களையும் குடும் பங்களையும், உதாரணமாக, ஃபுதூல் (Fudūl) கூட்டமைப்பில் உள்ள குலக்குழுவைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். இவர்களும் இளைஞர்களே என்றாலும், மிகப் பலவீனமான பிரிவைச் சேர்ந்த வயதானவர்கள் சிலரும் இருந்தார்கள். இவர்கள் முகமதுவை ஆதரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது இவர்களிடம் அதிக மாகவோ, குறைவாகவோ காணப்பட்ட வறுமை. (சுமார் நூறு பேர், அல்லது அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று மதிப்பிடப்படுகிறது).

மூன்றாவதாக, முகமதுவைப் பின்பற்றியவர்களில் ஒரு சிறு தொகையினர், பலவீனமானவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள்.

www.padippakam.com



இதன் பொருள், இவர்கள் ஏழைகள் என்பதைவிட (சிலர் சுமாரான அளவில் பணவசதி படைத்தவர்களாக இருந்திருக்கக்கூடும்), இவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்பதாகும். இவர்கள் மக்காவில் அந்நியர்களாக இருந்தவர்கள், குரைஷ் இனக்குழுவைச் சேராதவர்கள்.[45] அரேபியரல்லாத மக்கள் பற்றிய பிரச்சினையால் ஆரம்பகால முஸ்லிம் சமூகத்தில், குறிப்பாக, கூஃபா (Kūfa) வில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டதையும், அதன் காரணமாகவே உமய்யத் வம்சம் வீழ்ச்சியடைந்தது என்பதையும் பின்னர் காணவிருக்கிறோம். இஸ்லாமிய இயக்கம் தொடங்கப்பட்ட சமயத்தில் அரேபியரல்லாத மக்களின் எண்ணிக்கை பற்றி இப்போது கிடைக்கும் ஆதாரங்களை வைத்து மதிப்பிடுவது கடினம் என்றாலும், அவர்களின் தொகை மிகக்குறைவு அல்ல என்று ஓரளவு நிச்சயமாகவே கூற முடியும். தீர்க்கதரிசி அவர்களது ஆதரவைப்பெற விரும்பினார்; அவர்களுக்கு அரேபியர்களுடன் சமநிலை அளிக்க விரும்பினார். எனவே குரான், "உங்களில் கடவுளால் மிகவும் கௌரவிக்கப்படத்தக்கவர், கடவுளிடம் மிகவும் அச்சம் கொண்டு நடப்பவரே" என்று கூறுகிறது. அரேபியருக்கும் அரேபியரல்லாதவருக்குமிடையே உள்ள பாகுபாடு இவ்வாறு ஒதுக்கித் தள்ளப்படுகிறது. சமூகத்தில் பதற்றநிலையைத் தணிப்பதற்கு இது மிகவும் அவசியமாயிருந்தது. மனிதர்கள் அனைவரும், அவர்கள் எந்த நாடு அல்லது இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரிநிகர் சமமானவரே என்று இஸ்லாம் வலியுறுத்தியபோதிலும், அரேபியருக்கும் அரேபியரல்லாதவருக்குமிடையே இருந்த பாகுபாடு அவ்வளவு எளிதில் மாறிவிடக்கூடியதாக இல்லை; அதன் காரணமாகப் பல பிரச்சினைகள் தோன்றிக்கொண்டுதான் இருந்தன. இதன் ஒரு வெளிப்பாடாக எழுந்ததுதான் ஷுபிய்யா (Shu'ūbiyya) இயக்கம் என்பது நன்கு தெரிந்ததே. இந்த இயக்கம் சமூகத்தில் எளிதில் மாற்ற முடியாத சில சமச்சீரற்ற நிலைகளை ஏற்படுத்தியது.

மாண்ட்காமரி வாட் தமது புத்தகத்தில் மற்றோர் இடத்தில் இபின் ஹிஷாமை மேற்கோள்காட்டி[46] ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். நான்கு பேர் மக்காவில் பழைய புறமத வழக்கப்படி பலிகொடுப்பதை நிறுத்திவிட்டு, ஆபிரஹாமின் தூய்மையான மதத்தை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார்கள் என்பது அந்த நிகழ்ச்சி. இதைக் குறிப்பிட்டுவிட்டு அவர் ஒரு வினாவை எழுப்புகிறார். அரேபியா ஏன் கிறிஸ்தவ அல்லது யூதமதத்தைப் பின்பற்றாமல் முஸ்லிம் நாடாக மாறியது என்பது அந்த வினா. தொடர்ந்து அவர் கூறுகிறார்: "இதற்கு விடை, கிறிஸ்தவ அல்லது யூதமதத்தைப் பின்பற்றியிருந்தால் செல்வாக்குமிக்க அரேபியர் பலருக்குப் பிடிக்காத அரசியல் ஈடுபாடுகள் ஏற்பட்டிருக்கும் என்பதே.

45. W.Montgomery Watt, *Islam and the Integration of Society* (லண்டன், 1966), பக்கம் 12.

46 IbnHishāmed.F.Wüstenfeld (Gottingen, 1859-60), பக்கம் 143 முதல்

www.padippakam.com



அரேபியர்கள் நோக்கில் கிறிஸ்தவம், பைஜாண்டியப் பேரரசு, அபிஸீனியா ஆகியவற்றின் மதம்; யூத மதம் பாரசீகப் பேரரசுடன் நெருங்கிய தொடர்புடையது."[47] வாட் கூறுவது உண்மைதான் என்றாலும், வெளிநாடுகளுடன் தொடர்புள்ள ஸிமிடிக் மதங்களிடம் அரேபியர்களுக்கு ஏன் அவ்வளவு வெறுப்பு என்பதை அவர் விளக்காமல் விடுகிறார். அந்தப் பேரரசுகளின் அரசியலுடன் ஈடுபாடு ஏற்படும் என்று கூறி நின்றுவிடுகிறார். இதைப் பற்றி மேலும் ஆழ்ந்து ஆராய்வது சுவாரஸ்யமாயிருக்கும்; இஸ்லாமின் தோற்றம் சம்பந்தமாகவும், அதில் சில விளக்கங்கள் கிடைக்கும்.

இதற்கு நாம் அப்போதிருந்த பன்னாட்டு நிலைமை பற்றியும் கிறிஸ்தவ மதத்தின் தன்மை பற்றியும் சிறிது பார்க்க வேண்டும். முதலில் கிறிஸ்தவமதத்தை எடுத்துக்கொள்வோம். அது பைஜாண்டியப் பேரரசின் அதிகாரபூர்வமான மதம். இஸ்லாம் சமாளிக்க வேண்டியிருந்த மிக முக்கியமான அரசுகளில் அது ஒன்றாக இருந்தது. பிற்காலத்தில் ரோமானியப் பேரரசின் மதமாக ஏற்கப்பட்ட கிறிஸ்தவம், முதலில் ரோமானியப் பேரரசர்களின் கொடுங்கோல் ஆட்சியால் கடுமையாக ஒடுக்கப்பட்டு, இரக்கமின்றிச் சுரண்டப்பட்ட மக்களின் மதமாக இருந்தது. எங்கல்ஸ்[48] மிகச் சரியாகக் கூறுவதைப் போல, "மதங்கள், தங்களுக்கு மதம் தேவை என்று உணருவதோடு, மக்களின் மதத்தேவைகளையும் உணருகின்றவர்களால் நிறுவப்படுகின்றன." (இது இஸ்லாமிய இயக்கத்துக்கும் பொருந்தும் என்பதைப் பின்பு காண்போம்). ரோமானிய மாகாணங்களில் உள்ள மக்கள் அனைவரிலும் ஏழைகளான சுதந்திரமனிதர்கள், முன்பு சுதந்திர மனிதர்களாக, அல்லது அவர்களின் பிள்ளைகளாக இருந்து பின்பு அடிமைகளாகிவிட்டவர்கள் ஆகியோரின் நிலைதான் மிகவும் மோசமாக இருந்தது. அவர்கள் நம்பிக்கைக்கு இடமில்லாத நிலையில் இருந்தார்கள். ரோமானிய கொடுங்கோல் ஆட்சியாளர்களின் இரும்புப்பிடியிலிருந்து விடுபடக்கூடிய வாய்ப்பு எதுவும் அவர்களுக்குக் காணப்படவில்லை. அவர்களுக்கு மனத்தைக் குலைய வைக்கும் இந்த வெளி உலகிலிருந்து அக உலகுக்குத் தப்பிச்செல்வது தவிர்க்க முடியாததாயிற்று. தங்களுடைய வாழ்க்கை நிலை பற்றி அவர்கள் அளவற்ற வெறுப்புக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பொருளாதாரம், அரசியல், அறிவுத்துறை, அறநெறி ஆகிய அனைத்திலும் நிலைமை சீர்கெட்டு தாழ்வுற்றிருந்த சூழலில் கிறிஸ்தவம் அவர்கள்முன் தோன்றியது. ரோமானியப் பேரரசின் ஆணைக்குக் கீழடங்கியிருந்த மாகாணங்களில், பூசல்களுக்கும் மனச்சோர்வளிக்கும் நிலைமைகளுக்குமிடையே அல்லற்பட்டு உயிர் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு அது ஆறுதல் அளித்தது. கிறிஸ்தவம் ரோமானிய கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கு

47. Watt, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 13-14.
48. *On Religion*, Marx and Engels, 'Bruno Bauer and Early Christianity', பக்கம் 197 என்ற அத்தியாயம்.

www.padippakam.com



எதிராகப் புரட்சியைத் தூண்டிவிடவில்லை. மாறாக, அது தாங்க முடியாத வெளி உலக நிலைமைகளிலிருந்து மன ஆறுதல் அளிக்க — காயப்பட்ட ஆத்மாக்களுக்கு மருந்து தடவ — முயன்றது. பிற் காலத்தில் அது, கிழக்கத்திய மதக் கருத்துக்களையும், கிரேக்கப் பகுத்தறிவுவாதத்தையும், இன்ப துன்பங்களைப் பொருட்படுத் தாத 'ஸ்டோயிக்' கொள்கைகளையும் இணக்கப்படுத்தி தனது கோட்பாடுகளை உருவாக்கியது.

இங்கு மீண்டும் எங்கல்ஸ் கூறுவதைக் குறிப்பிடுவது பொருத்த மாயிருக்கும், "புருனோ பாயரும் ஆரம்பகால கிறிஸ்தவமும்" என்ற புத்தகத்தில் அவர் கூறுகிறார்: "கிறிஸ்தவம் அதன் தொடக்க காலத் தில் எப்படி இருந்தது என்பதை யோவானின் சுவிசேஷத்தைப் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. கட்டுப்பாடற்ற, குழப்பமான வெறித்தனம், கிறிஸ்தவ அறிநெறி என்று கூறப்படுவதன் அடிப் படையில் குறிப்பிடுவதை உடம்பைத் துன்புறுத்துவது, கோட்பாடு களின் தொடக்கநிலைகள். பற்பல தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றைத் தான் அதில் காணலாம். கோட்பாடுகளும் அறநெறிக் கருத்துக் களும் வளர்ச்சிபெற்றது பிற்காலத்தில் சுவிசேஷங்களும், அப் பாஸ்தலர்களின் நிருபங்கள் என்று கூறப்படும் புத்தகங்களும் எழுதப்பட்டபோதுதான். இதில் — குறைந்தபட்சம் அறநெறி களில் மட்டுமாவது — ஸ்டோயிக் தத்துவம், குறிப்பாக ஸெனிகா வின் கொள்கை தாராளமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. நிருபங் கள் ஸெனிகாவை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்துக் கொண்டிருப்பதை பாயர் (Bauer) நிரூபித்தார். உண்மையில், கிறிஸ் தவ நம்பிக்கையாளர்களும் இதைக் கவனித்தார்கள்; ஆயினும் அவர்கள் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலிருந்து ஸெனிகாதான் அவற்றை எடுத்துக்கொண்டார் என்று வாதித்தார்கள். ஆனால் அவர் காலத்தில் புதிய ஏற்பாடு எழுதப்படவேயில்லை.[49]

இணக்கப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுடன் புதிய வடிவம் பெற்ற கிறிஸ்தவம், முதலில் ரோமானியர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே உருவாகியிருந்த போதிலும், அந்த ரோமானி யர்களே விரும்பக்கூடியதாகிவிட்டது. சக்கரவர்த்தி கான்ஸ் டாண்டைன் தாம் இந்தப் புதிய மதத்தை ஏற்றுக்கொள்வது ரோமா னிய உலகின் ஏதேச்சாதிகாரி என்ற நிலைக்குத் தம்மை உயர்த்திக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழி என்று கண்டார். இவ்வாறாக ரோமானிய சக்கரவர்த்தி மதத்தின் வடிவில் வந்த ஒரு சவாலைத் தமது பேரரசின் ஆட்சிமுறையில் உள்ளேற்று அமைத்துக் கொள் வதன் மூலம் அதைக் கூர்மழுங்கச் செய்துவிட்டார். கிழக்குப் பகுதி யில் கிரேக்க மேலாதிக்கத்துக்கு எதிரான சவால் என்ற முறையிலும் அது தோல்வியுற்றது. ஆனால் இஸ்லாம் மக்காவில் ஆதிக்கம்

49. மேற்படி, பக்கம் 198.

www.padippakam.com



பெற்றிருந்த சக்திவாய்ந்த வர்த்தக பூர்ஷ்வா வர்க்கத்தின் மதமாக இருந்தது.* மக்கா நகர வர்த்தகர்கள் தங்களுக்கென சில பெரிய நோக்கங்களை வைத்திருந்ததனால் பைஜாண்டிய, பாரசீகப் பேரரசுகளிடமிருந்தும் விலகி நிற்க விரும்பினார்கள். தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொண்டு வர்த்தகத்தை நடத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய நோக்கம். தங்களுடைய சுதந்திரநிலையைக் காப்பாற்றிக்கொள்வதில் அவர்கள் பெருமளவுக்கு வெற்றிபெற்றார்கள். இதற்கு அவர்கள் நாட்டின் கடந்துவர முடியாத பாலைவனம் பெரிய துணையாக இருந்தது. மேலும் பைஸாண்டியம் தனக்குத் தேவையான சுகபோக ஆடம்பரப் பொருள்களுக்கு மக்காநகர வர்த்தகர்களையே நம்பியிருந்தது. கிழக்கிலிருந்து மேற்குத் திசைக்குச் சென்ற வர்த்தகத்தில் இந்தியாவிலும் சீனாவிலும் கிடைக்கும் பொருள்கள், இராக்கிலும் இரானிலும் உற்பத்தியான பொருள்கள், யேமன், ஹத்ரமாவ்த் ஆகியவற்றில் தயாரான பொருள்கள், ஆகியவை இடம் பெற்றிருந்தன. முதல்வகையில் உயிருள்ள மிருகங்கள், பறவைகள் (அதிசயப் பொருள்களாக வைத்திருப்பதற்கு) உரோமத் தோல்கள், தோல்கள், காஷ்மீர் கம்பளி, கஸ்தூரி, யானைத் தந்தம் (பெரும்பாலும் அபிஸீனியாவிலிருந்து), முத்துக்கள், வைரக்கற்கள், ரத்தினக்கற்கள், செஞ்சாந்து அரக்கு, எல்லாவற்றையும்விட முக்கியமாக, பட்டு முதலான பொருள்கள் அடங்கும். தாவரப் பொருள்களில், மிளகு (மிக முக்கியமானது), இஞ்சி, ஏலம், லவங்கம், கிராம்பு, வாசனைத் தைலம், ஜாதிக்காய், அவுரி, சிறிது பருத்தி, உயர்ரக மரக்கட்டைகள் (கருங்காலி, ரோஸ்வுட், சந்தனம்). இவையெல்லாம் மிகுந்த மதிப்புள்ள சுகபோக ஆடம்பரப் பொருள்கள்; இவற்றைக் கொண்டு செல்வதற்குப் போக்குவரத்துக்கும் சுங்கத்தீர்வைகளுக்கும் நிறையச் செலவு பிடிக்கும்.[50]

மக்காநகரின் வர்த்தகர்கள் தங்களுடைய பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார்கள். மேலும் அவர்களின் விருப்பம் நிறைவேறும் வகையில், வர்த்தகத்துக்குப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கக்கூடிய சித்தாந்தம் பற்றிய உணர்வும் இருந்தது. எனவே கிறிஸ்தவத்தைப் போலன்றி, அவர்களது சித்தாந்தம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் துயரங்களிலிருந்து ஆறுதல் அளிக்கும் சித்தாந்தமாக இருந்திருக்க முடியாது. ஆதலால், கிரேக்கப் பண்பாட்டு ஆதிக்கத்துக்கெதிரான இயக்கமாக கிறிஸ்தவம் தோல்வியடைந்தது, ஆனால் இஸ்லாம் வெற்றிபெற்றது. பிரபல வரலாற்றாசிரியர் பேராசிரியர் டாயின்பீ (Toynbee) மிகப் பொருத்தமாக இவ்வாறு கூறுகிறார்: "மகா அலெக்ஸாண்டரின் வெற்றிகளைத் தொடர்ந்து ஸிரியாவின் பண்பாடு

* புத்தகத்தின் இறுதியில் உள்ள குறிப்பைப் பார்க்கவும். பக்கம் 281
50. D.S. Richards, *Islam and the Trade of Asia* (லண்டன், 1970), பக்கம் 4.

www.padippakam.com



நிலவிய நாடுகளில் கிரேக்கப் பண்பாட்டு ஆதிக்கம் ஊடுருவியது ஒரு சவாலாக இருந்தது. இந்த ஊடுருவலை எதிர்த்துப் போராடி வெளியேற்ற வேண்டுமா, வேண்டாமா? இந்தச் சவாலுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் ஸிரியா சமூகம் பலமுறை முயற்சி செய்தது. ஒவ்வொரு முறையும் இந்த கிரேக்க எதிர்ப்பு, மதத்தின் வடிவில் வெளிப்பட்டது. இந்த முயற்சிகளில் முதல் நான்கான *ஜொராஸ்ட்ரிய மதம், யூதமதம், நெஸ்டோரிய கிறிஸ்தவம், மானாஃபிஸைட் கிறிஸ்தவம் ஆகியவை தோல்வியடைந்தன; ஐந்தாவது இஸ்லாம் வெற்றிபெற்றது.*"[51] (சாய்வெழுத்து என்னுடையது). அவர் மேலும் கூறுகிறார்: "சக்கரவர்த்தி ஹெராக்ளிட்டஸ், தமது வாழ்நாளிலேயே தீர்க்கதரிசி முகமதுவின் வாரிசான உமர் தமது நாட்டிற்குள் வந்து, ஸிரியா பண்பாட்டு நாடுகளில் கிரேக்கப் பண்பாட்டைப் புகுத்துவதற்கு அலெக்ஸாண்டர் முதல் அத்தனை பேரும் செய்த முயற்சிகளையெல்லாம் முற்றிலுமாக, நிரந்தரமாக அழித்ததைப் பார்த்த பிறகுதான், அவருக்கு மரணம் வந்தது. முந்தைய முயற்சிகள் தோல்வி பெற்ற இடத்தில் இஸ்லாம் வெற்றி பெற்றது. ஸிரியாவின் உலகத்திலிருந்து கிரேக்கப் பண்பாட்டை வெளியேற்றும் முயற்சியை அது நிறைவு செய்தது. 'ஒரே ஸிரியா அரசின் கீழ் எல்லா மக்களும்' என்ற குறிக்கோள் நிறைவேற முடியாமல் பாரசீக மன்னர் அக்கீமினிடீயை அலெக்ஸாண்டர் தோற்கடித்தபின் அந்த நாடுகளையெல்லாம் இஸ்லாம் மீண்டும் கலீஃபா அரசின் கீழ் ஒன்று சேர்த்தது. இறுதியாக இஸ்லாம், ஸிரியாப் பண்பாட்டுச் சமூகத்துக்கு, அங்கேயே தோன்றிய மதம் ஒன்றை அளித்தது. பல நூற்றாண்டுகாலம் இறவாமலே இறந்த நிலையில் இருந்த அந்தப் பண்பாடு தனக்கு ஒரு வாரிசு உருவாவதற்கும் இஸ்லாம் வழிசெய்த பின்பே உயிரைவிட்டது. இஸ்லாமிய மத அமைப்பு என்ற புழுக்கூட்டினுள் இருந்துதான் காலப் போக்கில் அரேபிய, இரானிய நாகரிகங்கள் முழுவடிவம் பெற்ற வண்ணத்துப் பூச்சிகளாக வெளிப்பட்டன."[52]

பேராசிரியர் டாயின்பீ மிக ஆழ்ந்த நுண்ணறிவுடன் இவ்வாறு கூறும் அதே சமயத்தில், முன்னெப்போதும் இல்லாத வகையில் தோன்றிய இந்தப் புரட்சிக்குக் காரணங்கள் என்ன என்பதைக் கூறத் தவறிவிடுகிறார், அல்லது கூற வேண்டாமென்று விட்டுவிடுகிறார். என்ன நடந்தது என்பதை அவர் எடுத்துச் சொல்லிவிட்டு அது ஏன் நடந்தது என்பதை விளக்காமல் விடுகிறார். மாண்ட்காமரி வாட்டும் கூட சமூக, பொருளாதார காரணிகளைக் கண்டறியப் போவதாகத் தொடங்கிய போதிலும் அவரைவிட அதிகமாக ஆழ்ந்து பார்த்துவிடவில்லை. எனவே இந்தப் புரட்சியை உருவாக்கிய இந்தக் காரணிகள் என்ன என்பதை நாம் காண முயலுவோம்.

51. Arnold Toynbee, *A Study of History*, தொகுதி 1, D.C. Somerwell சுருக்கியது, (லண்டன், 1946), பக்கம் 174.
52. மேற்படி, பக்கம் 175.

www.padippakam.com



ஏற்கெனவே கூறியபடி, கிறிஸ்தவம் — ரோமானியப் பேரரசின் கிழக்கு மாகாணத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பாக வெளிப் பட்ட மதம் என்றாலும் — காலப்போக்கில் அது கிரேக்க பகுத் தறிவுவாதம், ஸ்டோயிக் தத்துவம், கிழக்கே உள்ள நாடோடி, மேய்ச்சல்நில மக்களின் தெய்வக்கொள்கைகள் போன்ற பல்வேறு அம்சங்கள் கலந்து கிரேக்கப் பண்பைப் பெற்றது. இப்படிப் புதிய வடிவம் பெற்ற அந்த மதத்தை ரோமானிய சக்கரவர்த்தி கான்ஸ் டாண்டைன் தழுவிக்கொண்டார். பெரும் எண்ணிக்கையில் இருந்த அடிமைகளிடையே பரவியிருந்த அதிருப்திக் கொந்தளிப்பைத் தணிக்கும் நோக்கத்துடன் அவர், அடிமைகளின் மனத்தைக் கவர்ந் திருந்த அந்த மதத்தை ஏற்றார். அதிலிருந்து கிறிஸ்தவம் அடக்கு முறை ஆட்சியாளர்களின் மதம் என்ற முத்திரையைப் பெற்று, சுரண்டலுக்கெதிரான இயக்கம் என்ற முனை ஒடிந்துபோயிற்று. வருங்காலத்தில் எப்போதோ உதயமாகப் போகும் "பரலோக ராச்சியத்தை"ப் பற்றி மட்டுமே அது பேச முடிந்தது. இங்கே, இப்போது, நம்பிக்கையாளர்களுக்குக் கிடைக்கக்கூடியது, பாவ மான வாழ்க்கையிலிருந்து தங்களை ரட்சித்துக்கொள்வதற்காகத் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதே. ஆனால் இஸ்லாம் புதிதாக வளர்ந்துவரும் சக்திமிக்க, சாதனை ஆர்வம் கொண்ட வர்த்தகர்கள், போர்வீரர்கள் ஆகியோர் அடங்கிய வகுப்பின் சித்தாந்தம். தங்க ளுடைய முயற்சியின் பலன்களை, சரித்திரரீதியான வழக்கங்களின் வரம்புக்குள், இப்போதே அடைய வேண்டும் என்று விரும்பும் மக்கள் அவர்கள்.†

மேலும் இஸ்லாம் இனக்குழு எல்லைகளைக் கடந்து எல்லோரை யும் ஏற்றதால் அரபு மக்கள் அனைவருக்கும் — நாடோடிகளுக்கும் நகரவாசிகளுக்கும் — பொதுவான ஒரு கூடும்முனையாக அமைந்தது. "அரேபியர்களின் உருவாக்கம்" என்ற தமது புத்தகத்தில் கார்மிக் கேல் மிகவும் கூர்ந்த நோக்குடன் பின்வருமாறு எழுதுகிறார்: "அரபு மக்கள் இஸ்லாமின் கீழ் ஒன்றுபடுவதற்கு முன் பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். அதற்கு இஸ்லாம் காரணமல்ல. முஸ்லிம் அரேபியர்கள் விரிந்து பரவியது நீண்ட காலமாக நடந்துவந்த நிகழ்வுகளின் இறுதிக் கட்டமாகும். இஸ்லாமால் ஏற்பட்ட மாறுதல் அவர்களின் பொதுவான போராட்டத் தின் கோஷத்தில் ஏற்பட்ட மாறுதலே; அல்லது மாபெரும் பேரரசு களுக்கெதிராக எல்லா அரேபியர்களையும் ஈர்க்கவல்ல எளிமை யான கோஷம் ஒன்றை இஸ்லாம் அளித்தது என்று கூறலாம். அந்தப் பேரரசுகள் கஸ்ஸனிடுகள் (Ghassanids), லக்மிடுகள் (Lakhmids) ஆகி யோரின் சிறிய இடைப்பகுதி அரசுகளிடம் அவநம்பிக்கை கொண்ட பின், அவர்களைவிடப் பெரும் எண்ணிக்கையில், தொடக்ககால

† புத்தகத்தின் இறுதியில் உள்ள குறிப்பை பார்க்கவும். பக்கம் 281

www.padippakam.com



இஸ்லாமின் எளிமையான கொள்கைகளால் தற்காலிகமாக ஒன்று பட்டு நின்ற அரபு இனக்குழுக்களின் கூட்டமைப்பை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியிருந்தது."[53]

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த இரண்டு பேரரசுகளின் நலன்களைப் பாதுகாப்பதில் கஸ்ஸான் (Ghassān), லக்ம் (Lakhm) ஆகிய இடைப்பகுதி அரசுகள் ஆற்றிய பணியைக் குறிப்பிடுவது முக்கியம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரேபியாவின் வடக்கேயும் வடகிழக்கேயும் ஒன்றுக்கொன்று போட்டியான ரோமானியப் பேரரசும் பாரசீகப் பேரரசும் அமைந்திருந்தன. தீபகற்பம் முழுவதிலும் பரந்துகிடந்த ஸிரியா பாலைவனம் இந்தப் பேரரசுகளுக்கு இயற்கையாக அமைந்த எல்லையாக இருந்தது. பாலைவனத்தில் வாழ்ந்த பதூயின் மக்கள் இந்த இரண்டு பேரரசுகளின் எல்லைப்புறங்களில் அமைந்த மாகாணங்களில் திடீரென்று புகுந்து கையில் அகப்பட்ட பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு வந்தது போலவே விரைவாகத் திரும்பிச் சென்றுவிடுவது வழக்கமாக இருந்தது. இவர்களிடமிருந்து பாதுகாப்புப் பெற இரு பேரரசுகளும் தங்கள் எல்லையில் வரிசையாக கோட்டைகளை அமைத்து போர்வீரர்களை நிறுத்திவைத்தன. பாலைவனக் கொள்ளைக்காரர்களைத் தடுப்பதற்கு இது மட்டும் போதுமானதாக இல்லாததாலும், செலவும் மிகுதியாக ஆனதாலும் பிரித்தாளும் உத்தியைப் பின்பற்றி கொள்ளையடிக்கும் இனக்குழுவிலிருந்தே பலரைப் பேரரசின் சேவையில் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தன. ஒழுங்காக ஊதியமும், இரு பேரரசுகளுக்குமிடையே அநேகமாக இடைவிடாது போர் நடந்து வந்ததால் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்பும் அளிக்கும் இந்தச் சேவையை உண்மையான பதூயின் யாரும் வேண்டாமென்று சொல்லமாட்டார். வறண்ட பாலைவனத்தில் உயிர்வாழ்வதற்கு ஆதார வளங்கள் இல்லை. வர்த்தகம் நடத்தச் செல்லும் ஒட்டக அணிகளையும், நகரங்களில் வாழும் மக்களையும் கொள்ளையடிப்பதுதான் ஒரே வழியாக இருந்தது. இது ஒரு பொருளாதார அவசியம் ஆகிவிட்டதால் "கஜ்வா" (ghazwa) என்று கூறப்படும் கொள்ளையடித்தல் தொழில் மரபாக இடம்பெற்றுவிட்டது. முகமதுவும் கூட தம்மை ஏற்க மறுத்த எதிரிகளைப் பணிய வைப்பதற்கு இந்த வழியைப் பின்பற்றினார் என்பது நன்கு தெரிந்ததே.

யேமனிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த மக்காநகர வர்த்தகர்களின் ஒட்டக அணியொன்றின் மீது அவர் நடத்திய கொள்ளைத் தாக்குதல் கி.பி. 624 ஜனவரி மாதம் நடந்தது. இந்தத் தாக்குதலையும் இதன் பிறகு அவர் நடத்திய சில கொள்ளைத் தாக்குதல்களையும் முகமதுவின் எதிர்ப்பாளர்கள் மிகவும் இழித்தும் பழித்தும்

53. Joel Carmichael, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 64-5.

www.padippakam.com



கூறியிருக்கிறார்கள். மேற்கத்திய எழுத்தாளர்கள் சிலர் கூட, தீர்க்க தரிசியாகப் போலிவேடம் தரித்த கொள்ளைக்காரர் அவர் என்று எழுதினார்கள். இயேசு கிறிஸ்து ரோமானிய கொடுங் கோலர்களிடம் தம்மை ஒப்படைத்து, சிலுவையில் உயிரைத் தியாகம் செய்த தன்மைக்கும் முகமதுவின் செய்கைக்கும் உள்ள மாறுபாட்டை வைத்து அவர்கள் அவரைப் புரிந்துகொள்ள முயலு கிறார்கள். இங்கே ஒன்றை கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்: முகமது ஒரு தீர்க்கதரிசி மட்டும் அல்ல. அரேபியாவில் தனித்தனிக் கூட்டங்களாகப் பரவிக்கிடந்த இனக்குழுக்களைக்கொண்டு அரசு அமைப்பை உருவாக்கப் பாடுபட்ட ராஜீய நிபுணர் அவர். வர்த்தக அணியைத் தாக்கிக் கொள்ளையிடும் உத்தியை (மேலே விளக்கி யது போல இது அந்தக் காலத்தின் வழக்கத்தை ஒட்டியதே) அவர் பின்பற்றியதன் நோக்கம் மக்காநகர வர்த்தகர்களுக்கு பல மான அடிகொடுப்பதும், கொள்ளையடித்த பொருள்களைக் கொண்டு, மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு உதவி செய்வதும், மதீனாவின் சமூகத்தில் தமது நிலையை உறுதி செய்துகொள்வதும் ஆகும். அந்தக் கொள்ளையின் மூலம் இந்த மூன்று குறிக்கோள்களும் மிகச் சிறப்பாக நிறைவேறின. போர்த் தந்திரத்தைத் திட்டமிடுவதில் முகமதுவின் திறமையும் இதன் மூலம் புலப்பட்டது.

இபின் இஸ்ஹாக் எழுதிய தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாற்றில் இந்தக் கொள்ளைத் தாக்குதல்களில் ஒன்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அவர் எழுதுகிறார்: "இறைத்தூதர் அப்துல்லா பின் ஜஹஷ் பின் ரியாப் அல்-அஸாதியை ரஜப் மாதத்தில் அவர் முதலாவது பதர் போரிலிருந்து (Badr) இருந்து திரும்பிவந்ததும் அனுப்பினார். அவருடன் இடம் பெயர்ந்து வந்த எட்டுப்பேரை, அன்ஸார் (Ansār) யாரும் இல்லாமல் அனுப்பினார். அவரிடம் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து, இரண்டு நாட்கள் பயணம் செய்வதற்கு முன் அதைப் பார்க்கக்கூடாது என்று உத்தரவிட்டார். தாம் கட்டளையிட்டதைச் செய்யும்படி யும் ஆனால் அவருடைய தோழர்கள் யாரையும் அவர் நிர்ப்பந்தம் செய்யக்கூடாது என்றும் கூறினார். அப்துல்லா இரண்டு நாட்கள் பயணம் செய்த பிறகு கடிதத்தைத் திறந்து பார்த்தார்..... அதில் இவ்வாறு எழுதியிருந்தது: 'இந்தக் கடிதத்தைப் படித்ததும் நக்லா (Nakhla) வரை தொடர்ந்து பயணம் செய்யவும்..... அங்கே குரைஷ் (Quraysh) வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கண்டறியவும்.' அவர் ஹிஜாஸ் (Hijāz) வழி யாகப் பயணம் செய்து, நக்லாவுக்குச் சென்றார். குரைஷ் வர்த்த கர்களின் ஒட்டக அணி ஒன்று உலர்ந்த திராட்சைப்பழங்களையும் தோலையும் மற்றும் பல பொருள்களையும் ஏற்றிக்கொண்டு

www.padippakam.com



அந்த வழியே சென்றது. கொள்ளையடிக்கச் சென்றவர்கள் தங்களுக்குள் ஆலோசனை நடத்தினார்கள். அது ரஜப் மாதத்தின் கடைசி நாள்..... அவர்கள் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டிக் கொண்டு, எத்தனைபேரைக் கொல்ல முடியுமோ, கொன்றுவிட்டு, அவர்கள் வைத்திருப்பவற்றை எடுத்துக்கொள்ள முடிவுசெய்தார்கள். அப்துல்லாவும் அவரது தோழர்களும் ஒட்டக அணியையும் இரண்டு கைதிகளையும் கைப்பற்றிக்கொண்டு மதீனாவுக்கு வந்தார்கள்..... இறைத்தூதர் அவர்களிடம் 'புனிதமான மாதத்தில் சண்டை நடத்தும்படி நான் உங்களுக்கு உத்தரவிடவில்லை', என்று கூறினார். அவர்கள் கொண்டு வந்த பொருள்களில் எதையும் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்..... இதைப் பற்றி அதிகமான பேச்சுக்கள் எழுந்த போது கடவுள் தமது தூதருக்கு பின்வருமாறு கட்டளை அருளினார்: 'அவர்கள் புனித மாதத்தைப் பற்றியும், அந்த மாதத்தில் சண்டை நடத்துவது பற்றியும் கேட்டார்கள். அந்த மாதத்தில் போர் நடத்துவது கடுமையான விஷயம் என்று சொல்லுவீராக. ஆனால் மக்களைக் கடவுளின் மார்க்கத்தில் வராமல் வைப்பதும், அவனிடத்திலும் புனித மசூதியிலும் நம்பிக்கை கொள்ளாமலிருப்பதும், அவனது மக்களை அங்கிருந்து விரட்டியடிப்பதும் கடவுளுக்கு அதைவிட அதிகக் கடுமையானது என்று சொல்லுவீராக."[54] இதுதான் இஸ்லாமிய அரசு ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பமாயிற்று. இறுதியாக முகமது எதிர்ப்பற்ற அதிகாரம் பெற்ற ஆட்சியாளர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவருடைய காலத்தில் அரேபியாவில் இது போன்ற ஒரு நிலையை யாரும் கேள்விப்பட்டதில்லை.

பன்னாட்டு நிலைமையைப் பற்றி இப்போது பார்ப்போம். அப்போது இருந்த இரண்டு பேரரசுகளும் தங்களுடைய எல்லைப் பகுதிகளை கொள்ளைக்காரர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கு, பதூயின் நாடோடிமக்கள் சிலரைத் தங்கள் சேவையில் சேர்க்க முயன்றதை முன்பு குறிப்பிட்டோம். பாலைவனத்துக்குள் படைகளை அனுப்பி அரேபியர்களைப் பணிய வைப்பது கனவு கூடக் காண முடியாத விஷயம். எனவே இரண்டு பேரரசுகளும் பாலைவனத்துக்கும் விவசாயப்பகுதிக்கும் இடையில் உள்ள எல்லையில் ஒரு அரசருக்கு ஆதரவளித்து, நாடோடிகள் கொள்ளையடிக்க வராமல் தடுக்குமளவு அவர் பலம் பொருந்தியவராக இருக்குமாறு பார்த்துக்கொள்ளும் உத்தியைப் பின்பற்றின. பைஜாண்டிய எல்லையில் ஆட்சிசெய்த கஸ்ஸான் (Ghassān) வம்சத்துக்கு அந்தப் பேரரசு ஆதரவளித்தது. அந்த வம்சத்தினர் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவர்கள் பைஜாண்டியப் பேரரசர்கள் பின்பற்றிய 'ஆர்த்தடாக்ஸ்' கிறிஸ்தவ

54. பார்க்க: Ibn Ishaq, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 288.

www.padippakam.com



மதத்தைப் பின்பற்றாமல் தங்கள் பகுதியைச் சேர்ந்த 'மனாஃபிஸைட்' (Monophysite) என்ற கிறிஸ்தவ மதப்பிரிவைப் பின்பற்றினார்கள். 'ஆர்த்தடாக்ஸ்' பிரிவினர் மனாஃபிஸைட்களைச் சிலசமயம் சமரசமாக ஏற்றுக்கொண்டும், சிலசமயம் கொடுமைப்படுத்தியும் இரட்டை நிலையில் நடந்து கொண்டார்கள். ஆளும் அரசர் பேரரசரிடம் கொண்டுள்ள விசுவாசம் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டால் கொடுமைகள் தீவிரமாக்கப்பட்டன. இவ்வாறாக மதம் அரசியலுடன் பிரிக்க முடியாமல் பிணைந்திருந்தது. மக்காவின் நுண்மதிகொண்ட அரேபிய வர்த்தகர்கள் இதைப் புரிந்துகொண்டார்கள். அவர்கள் பைஜாண்டிய ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்திலிருந்து விலகி இருந்துகொள்ளவே விரும்பினார்கள். லக்மிட் மன்னர்கள் பைஜாண்டியத்தின் பரம விரோதிகள். எனவே அவர்கள் ஆர்த்தடாக்ஸ் பிரிவுக்கு முற்றிலும் பிடிக்காத ஒரு பிரிவையே (நெஸ்டோரியன் அல்லது கிழக்கு ஸிரியன் பிரிவுகளை) ஏற்றார்கள். தங்களுடைய அரசியல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக பைஜாண்டிய ஆட்சியாளர்களும், பாரசீக ஸஸானிட் ஆட்சியாளர்களும் இடைப்பகுதி நாடுகளில் ஆட்சி செய்த அரேபியர்களை கொடுமைப்படுத்தினார்கள். இதன் மூலம் அவர்கள் தங்களுக்கு விரோதிகளை உருவாக்கிக்கொண்டார்கள். ஆல்ஃப்ரெட் கியோம் (Alfred Guillaume) எழுதுகிறார்: "ஆறாம் நூற்றாண்டு முதல் அரபுமேற்கின் வரலாறு, தூய்மையான மதம் என்ற பெயரில் நடத்தப்பட்ட கொடுமைகளின் நீண்ட பட்டியலாகவே உள்ளது. இதன் இறுதி விளைவாக அரேபியர்கள் அந்நியப்படுத்தப்பட்டதுடன் ஸிரியாவில் கிரேக்கப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. மனாஃபிஸைட் கொள்கையைப் பின்பற்றிய அரேபியர்கள் கிறிஸ்துவின் இருவகைக் கொள்கையை ஏற்க உறுதியாக மறுத்தார்கள். இவர்கள் நடத்தப்பட்ட விதம், பிற்காலத்தில் முஸ்லிம்களிடம் அவர்கள் பட்ட கொடுமையைவிட மோசமாக இருந்தது."[55] கி.பி.563-இல் புகழ்பெற்ற ஒரு அரபு தலைவர் பைஜாண்டிய சக்கரவர்த்தியைப் பார்க்கச் சென்ற போது தம்முடைய மத நம்பிக்கையை அறிவிக்கும் கடிதம் ஒன்றைக் கொண்டு சென்றார். அதில் ஒரு வாக்கியம் அரேபியரின் எதிர்ப்பு உணர்வைக் காட்டுவதோடு, இஸ்லாமின் தொடக்கத்தையும் சூசகமாகக் குறிப்பிடுகிறது. அந்த வாக்கியம்: "மூன்று தத்துவங்களாகக் கூறப்படுவது ஒரே தெய்வமே, ஒரே தன்மையே, ஒரே சாரமே; இந்தக் கோட்பாட்டை ஏற்காதவர்கள் சபிக்கப்பட வேண்டும்."

அவர் கொண்டுவந்த மதநம்பிக்கை அறிவிப்பில் இரண்டு பிஷப்புகள் கையெழுத்திட மறுத்த போது ஹாரித் (Hārith) கூறினார்: "நீங்கள் மத விரோதிகள் என்பதை நான் இப்போது தெரிந்து

55. Alfred Guillaume, *Islam* (லண்டன், 1969), பக்கம் 16.

www.padippakam.com



கொண்டேன். நாங்களும் எங்கள் சேனைகளும் இந்தக் கோட்பாட்டை ஏற்கிறோம்; அதே போல கிழக்குப் பகுதியினரும் ஏற்கிறார்கள்." இதைப் பற்றி கியோம் தமது கருத்தை இவ்வாறு தெரிவிக்கிறார்: "கிறிஸ்தவத்தில் கிரேக்க மதவியலாளர்கள் சேர்த்த நுணுக்கத்தத்துவங்கள் இல்லாத அரபு கிறிஸ்தவ மதத்தை ஆதரிக்கும் வெளிப்படையான அறிவிப்பு இது. அந்த மதத்தை வாளின் வலிமையால் பாதுகாக்க உரிமை உண்டு என்பதையும் அது அறிவிக்கிறது."[56] இவ்வாறாக கிறிஸ்தவம் அரபு மக்களுக்கு ஏற்புடையதாக இல்லை, அல்லது பைஜாண்டிய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ மதத்திலிருந்து மாறுபட்ட வடிவில்தான் ஏற்கத்தக்கதாக இருந்தது என்பதைக் காண்கிறோம். அரசியலில் மோதல் நிலைகள் ஏற்பட்டதும், அரபு மக்கள் பைஜாண்டிய ஆட்சியாளர்களுக்குக் கீழடங்கியவர்களாக இருந்தாலும் தாங்கள் அரேபியர்கள் என்பதில் கொண்டிருந்த கர்வமும் இதற்குக் காரணங்களாகும். மேலும் கிறிஸ்தவ மதத்தில் அந்தப் பகுதியிலேயே தோன்றிய மனாஃபிஸைட், நெஸ்டோரியன் பிரிவுகளும் கூட, இரண்டு பேரரசுகளின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதிகளில் தவிர வேறு இடங்களில் அதிகமாக முன்னேற முடியவில்லை. விரிவான சடங்கு நடைமுறைகள் கொண்டதும், அடிமைகளை வைத்திருக்கும் விவசாய சமூகத்தில் தோன்றியதுமான கிறிஸ்தவ மதத்தில், சுதந்திரத்தை மிக முக்கியமாகக் கருதிய அரேபியர்களுக்கு ஈடுபாடு ஏற்படவில்லை.

மேலே நாம் பார்த்த விவரங்களிலிருந்து கிறிஸ்தவ மதம் அரபு மக்களிடையே ஏன் வேரூன்ற முடியவில்லை என்பது தெளிவாகிறது. முக்கியமான காரணங்கள் வருமாறு: (1) மக்காநகர அரேபியர்களைப் பொறுத்த அளவில் கிறிஸ்தவம் ரோமானிய ஆட்சியாளர்களுடன் தொடர்புடைய மதம்; அவர்கள் நல்ல வியாபாரிகளைப் போல அவர்களுடன் எந்தவகையிலும் ஈடுபாடு கொள்ளாமல், தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே அக்கறை கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் கிறிஸ்தவத்தையும் சற்று தூரத்திலேயே வைத்திருந்தார்கள். (2) நாடோடிகளான அரேபியர்கள் அராஜகப் போக்குக் கொண்டவர்களாதலால், விரிவான சடங்கு நடைமுறைகளும், கொள்கை, கோட்பாடுகளும் கொண்ட கிறிஸ்தவம் போன்ற எந்த மதமும் ஏற்புடையதாக இராது. வடக்கே உள்ள, நிலையாக வாழும் விவசாய மக்களுக்குத்தான் இத்தகைய மதம் பொருத்தமாக இருக்கும். (3) கஸ்ஸனிடுகளும் லக்மிடுகளும்'முறையே ரோமானியப் பேரரசு, ஸஸானிட் பேரரசு ஆகியவற்றின் எல்லைகளில் இடைப்பகுதி அரசுகளை அமைத்திருந்தார்கள்; அரசியல் காரணங்களுக்காக அவர்கள் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால்

56. மேற்படி, பக்கம் 17.

www.padippakam.com



அவர்களுடைய கிறிஸ்தவம் அவர்களின் மேலாதிக்க அரசுகளின் கிறிஸ்தவத்திலிருந்து மாறுபட்ட வடிவில் இருந்தது. தங்களுடைய தேசீய கர்வத்தைக் காட்டவும் பேரரசு ஆதிக்கத்தில் தங்களுக்கு இருந்த வெறுப்பைக் காட்டவும் அவர்களுக்கு இருந்த ஒரே வழி இதுதான். (4) அரேபியர்கள் பொதுவாக தங்கள் இனத்தைப் பற்றி மிகுந்த கர்வம் கொண்டிருந்ததால் எந்த ஒரு அந்நிய சித்தாந் தத்துக்கும், அது எவ்வளவுதான் நிலைபெற்றதாக இருந்தாலும் சரணடைந்துவிட மாட்டார்கள். தங்களிடையிலேயே தோன்றிய ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராயிருந்தார்கள். இஸ்லாம் அப்படிப்பட்ட ஒரு மதமாக அமைந்தது. கஸ்ஸானிட், லக்மிட் ஆட்சியாளர்களும் ஆரம்பத்தில் சிறிது எதிர்ப்புக் காட்டி னாலும் பின்பு இஸ்லாமை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தங் களுடைய மற்ற அரபு சகோதரர்களுடன் சேர்ந்துகொண்டு தங்களுடைய முன்னாள் ஆட்சியாளர்கள் மீது தாக்குதல் தொடுப்பதில் ஈடுபட்டார்கள் என்பதிலிருந்து இது நிரூபணமா கிறது. இதே காரணங்கள் சற்றுக் கூடுதலாக அல்லது குறைவாக யூதமதத்துக்கும் பொருந்தும். அரபு வர்த்தக பூர்ஷ்வா வர்க்கம் தன்னுடைய சொந்த சித்தாந்தத்தை உருவாக்கவும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தனது வர்த்தகத்தின் வளர்ச்சியை உறுதிசெய்யத் தனது சொந்த அரசு அமைப்பை உருவாக்கவும் விரும்பியது. வேறு எந்த அரசுக்கும் கீழ்ப்பட்டு இருக்க அது விரும்பவில்லை. ஏனென்றால் அது சுங்கவரித் தடைகள் மூலமும் வேறு வழிகளிலும் வர்த்தகம் வளருவதற்கு இடையூறாயிருக்கும். மேலும், கிறிஸ்தவம் பொருள்களைத் துறப்பதை வலியுறுத்துகிறது. ஆனால் அரேபியர், வாழ்க்கை பற்றி எதிர்மறையான அணுகுமுறையை ஏற்கமாட் டார்கள். ஏனென்றால் அவர்களுடைய வர்த்தகம் விரிவடைந்து கொண்டிருந்தது; தங்கள் வர்த்தக மண்டலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, வடதிசையில் மேலும் பல பகுதிகளை வென்று கைப்பற்ற வேண்டும் என்று அவர்கள் ஆவல் கொண்டிருந்தார்கள்.

மக்காவில் மேய்ச்சல்நிலப் பொருளாதாரம் வர்த்தகப் பொருளா தாரமாக மாறி, அதைத் தொடர்ந்து இனக்குழு முறையும் சிதை வடைந்து வந்ததால், சமூகத்தின் மேற்கட்டமைப்பிலும் அதற்குத் தகுந்தவாறு மாறுதல்கள் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. தகுந்தவாறு மாறுதல் என்றால் யந்திரத்தனமான ஒரு பொருத்தத்தைக் கூறவில்லை; மனித மனம் அபாரமான ஆக்கத் திறனும், சேர்த்து உருவாக்கும் திறனும்கொண்டது. புதிய சித்தாந்தம் ஒன்றை வெளியிடுபவர் எவரும் தம்மை அடுத்து உள்ள சூழ்நிலையால் மட்டுமின்றி, தமது பரம்பரை மரபு போன்ற வேறு பல காரணி களாலும் உந்துதல் பெறுகிறார். மக்காவிலிருந்த சில தனிநபர்கள்,

www.padippakam.com



அங்கிருந்த நிலைமை பற்றி மிகவும் அதிருப்தியடைந்திருந்தார்கள் என்று இஸ்லாம் பற்றிய ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் கூறு கிறார்கள். அவர்கள் "புதிய உண்மை"யைக் காண்பதற்குத் தமது தேடுதலைத் தொடங்கியிருந்தார்கள். அவர்கள் 'ஹனீஃப்' என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களும் 'ஒரே கடவுள்' என்ற கருத் தால் கவரப்பட்டார்கள். சமூகத்தில் இருந்த இனக்குழுப் பிரிவினை களால், புதிய நிலைமையில் பிரச்சினைகள் தோன்றியிருக்கக்கூடும். எனவே சமூகத்தில் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற உணர்வும், அதனுடன் தொடர்பு கொண்டதாக கடவுள் ஒருவரே என்ற கருத் தும் ஏற்பட்டிருக்கலாம்.** புதிய உண்மையைத் தேடும் இந்த முயற்சி இறுதியில் இஸ்லாமாக வடிவம் பெற்று நிறைவுபெற்றது. இஸ்லாமின் அடிப்படையான கொள்கை 'கடவுள் ஒருவரே' என்பது. இதுவே அப்போது சமூகத்தின் அடிப்படைத் தேவையாகவும் இருந்தது. சரித்திர ரீதியாகப் பார்த்தால், மத்தியகால ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்த தொழிற்சாலைச் சமூகத்துக்கு தேசிய அடிப்படையில் ஒவ்வொரு நாடும் ஒரு அரசாக உருவாவது எப்படி அவசியமாயிருந்ததோ, அதே போல மக்காநகர சமூகத்துக்கு 'ஒரே கடவுள்' என்ற கொள்கை அவசியமாயிருந்தது. முகமது அதற்கு மிகவும் இணக்கமான, வன்மை யான வடிவம் கொடுத்தார். பொருளாதார மாற்றங்களுடன் கூடவே கலாசார மாறுதல்களும் எற்படுவது தவிர்க்க முடியாதது. இனக் குழுச் சமூகத்தில் பொருளாதாரத்தைப் போலவே கலாசாரமும் வளர்ச்சி பெறாத ஆதிநிலையிலேயே இருக்கும். அடிப்படை யான பொருளாதார அமைப்பு, இனக்குழு முறையிலிருந்து வர்த்தகப் பொருளாதார முறைக்கு மாறியதைத் தொடர்ந்து கலாசார, சித்தாந்த மேற்கட்டமைப்பிலும் மாற்றம் அவசியமாயிற்று.

இஸ்லாம் தோன்றிய காலம்வரை வளர்ச்சிபெறாத நிலையில் இருந்த இனக்குழுச் சட்டங்களே பொருளாதார, சமூக, அறநெறித் துறைகளில் பின்பற்றப்பட்டு வந்தன. எழுதப்பட்ட சட்டங்கள் இல்லாததால் இனக்குழுவின் மரபு வழக்கங்களே மக்களுக்கு வழி காட்டியாக இருந்தன. மக்காவில் பொருளாதார மாற்றம் ஏற்பட்ட பின் தோன்றிய இஸ்லாம் அந்தச் சமூகத்துக்கு சமூக, பொருளா தாரத் துறைகளில் எழுத்துவடிவில் கோவைப்படுத்தப்பட்ட சட் டங்களை அளித்தது. குற்றச்சட்டம் ஒன்றையும் அது அளித்தது. அந்தச் சட்டம் பலவகைகளில் இனக்குழுச் சட்டத்தைப் போலவே இருந்தது. ஆனால் — இது முக்கியமாக கவனிக்கத்தக்கது — முன்பு இருந்தது போல ஒரு பழிவாங்கும் வழக்கமாக இல்லாமல், குற்றம் செய்யப்பட்டது என்பது சந்தர்ப்ப சூழ்நிலைச் சான்று களால், அல்லது கண்ணால் கண்ட சாட்சிகளால் நிரூபிக்கப்பட

www.padippakam.com



வேண்டும் என்று விதிக்கும் குற்றச்சட்டமாக அது அமைந்திருந்தது. வர்த்தக ஒப்பந்தங்களை எழுத்துமூலம் செய்துகொள்ள வேண்டும் என்று குரான் வலியுறுத்துகிறது. சொத்துக்கு வாரிசுரிமை, விவாகரத்து, திருமணம் போன்றவை பற்றியும் விரிவான விதிகள் குரானில் கூறப்பட்டுள்ளன. ஒரு வீட்டினுள் எப்போது, எப்படி பிரவேசிக்க வேண்டும் என்பதை அரபு மக்களுக்குக் குரான் எடுத்துச்சொல்ல வேண்டியிருப்பதைப் பார்க்கும் போது அவர்கள் அதுவரையில் பண்பாட்டில் எவ்வளவு பிற்பட்ட நிலையில் இருந்தார்கள் என்பது தெரிகிறது. குரான் கூறுகிறது: "நம்பிக்கையாளர்களே, நீங்கள் மற்றவர்களின் வீட்டில் நுழைவதானால் அவ்வீட்டாரின் அனுமதி பெற்று, அவர்களுக்கு ஸலாம் கூறுவதற்கு முன் நுழைய வேண்டாம். அதுவே உங்களுக்கு நன்மையாகும். இதைக் கருத்தில் கொள்ளுவீர். அதில் யாரையும் நீங்கள் காணவில்லை என்றால் உங்களுக்கு அனுமதி அளிக்கப்படும்வரை நீங்கள் அதில் நுழைய வேண்டாம். உங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் நீங்கள் திரும்பிச்சென்று விடுவதே சரியானது. அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றை முற்றும் அறிந்தவன். எவரும் குடியிராத வீட்டில் நீங்கள் புகலிடம் நாடுவது குற்றமல்ல. அல்லாஹ் நீங்கள் மறைப்பவற்றையும், வெளிக்காட்டுபவற்றையும் அறிவான்."[57]

மேலே எடுத்துக்காட்டிய வசனத்திலிருந்து குரான் மனிதர்களின் நடத்தை பற்றிய சிறுசிறு விஷயங்களில்கூட விதிகள் செய்ய வேண்டியிருந்ததைக் காணலாம். வேறுவிதமாகச் சொன்னால், இஸ்லாம் அரேபியர்களுக்கு ஒரு சித்தாந்தத்தையும், உலக தத்துவ நோக்கையும் அளித்ததுடன் நாகரிகத்தைக் கற்பிக்கும் பணியையும் செய்தது; இது சரித்திர ரீதியாக முக்கியமானதாக இருந்தது. இனக்குழுப் பண்பாட்டின் வழக்கத்தைத் தொடர்ந்து பாலுறவில் கட்டுப்பாடு தளர்ந்தநிலையை மாற்றிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வரவும் விதிகள் செய்யப்பட்டன. பெண்கள் தங்களுடைய ஒழுக்கத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எப்படி உடை அணிய வேண்டும் என்பதும் வரையறை செய்யப்பட்டது. இந்த அம்சங்களில் சிலவற்றை நாம் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். இவை சம்பந்தமான விரிவான சட்டங்கள் மதீனா காலத்திய ஸூராக்களில் அறிவிக்கப்பட்டன. இங்கே, மக்கா காலத்தில் கவனிக்கப்பட்ட விஷயங்களை மட்டும் பார்க்கிறோம். மக்காவின் சமூகக் கேடுகளுக்குக் காரணமாயிருந்த அம்சங்களில் ஒன்று அடிமை முறை. இந்த அடிமைகள் பெரும்பாலும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். சிலர் மட்டும் ஏற்கனவே சிறியதாக உள்ள அல்லது வெற்றி கொள்ளப்பட்ட இனக்குழுக்களைச் சேர்ந்த அரேபியர்களாக இருந்தனர். இந்த அடிமைகள் நல்லமுறையில் நடத்தப்படவில்லை, குறிப்பாக

57. குரான், அத்தியாயம் 24, வசனம் 27-29.

www.padippakam.com



அவர்கள் வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் என்பது நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களிலிருந்து தெரிகிறது. இதனால் அடிமைகளிடையே ஏற்பட்டிருந்த அதிருப்தி சமூகத்தில் அமைதியைக் குலைத்து வந்தது. எனவே அப்போதுள்ள நிலைமையில் இயன்ற அளவுக்கு அவர்களின் நிலையை மேம்படுத்துவது அவசியமாயிருந்தது. இஸ்லாமின் ஆரம்பகாலத்திலேயே அதில் சேர்ந்தவர்களில் வெளிநாட்டினரான அடிமைகள் சிலரும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களில் ஒருவர் பிலால் (Bilal). இவர் முகமதுவின் சொந்தப்பணியாளராக இருந்தார். 'பாங்கு' வசனத்தை ஓதி மக்களைத் தொழுகைக்கு அழைக்கும் பெருமை அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இங்கே எழுகின்ற முக்கியமான வினா இது: தீர்க்கதரிசியின் காலத்தில் அரேபிய சமூகத்துக்கு அடிமைமுறை எவ்வளவுதூரம் அவசியமாயிருந்தது? மக்காவின் பொருளாதாரத்தில் அது எந்த அளவுக்கு முக்கியமாயிருந்தது? மக்காவின் பொருளாதாரம் பன்னாட்டு வர்த்தகத்தைச் சார்ந்திருந்தது; விவசாயம் அநேகமாக இல்லை. முகமதுவின் தோழர்களில் சிலர் மதீனாவுக்குச் சென்ற பிறகுதான் விவசாயத்தொழிலை முதல் முறையாகப் பார்த்தார்கள். அம்மார் பின் யாஸிரை ('Ammār b. Yāsir) மேற்கோள்காட்டி தபரி (Tabari) கூறுகிறார்: "தாத் அல்-அஷீரா (Dhāt al-'ashīra) மீது நடந்த இந்தத் தாக்குதலின் போது நானும் அலீ(Ali) யும் இறைத்தூதருடன் (ஸல்) சென்றிருந்தோம். ஒரு இடத்தில் நாங்கள் முகாமிட்டோம். அங்கே பனி மத்ஸஜ் (Bani Madsaj) மக்கள் சிலர் ஒரு பாலைவனச் சோலையில் விவசாயவேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டோம். அப்போது நான் சொன்னேன், 'அலீ, வாரும், அவர்கள் விவசாய வேலைகளை எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்."[58]

வர்த்தகப் பொருளாதாரத்துக்கு அடிமைகள் தேவையில்லை, அந்தப் பொருளாதாரம், இனக்குழு வாழ்க்கைமுறையிலிருந்து மாறிவரும் விவசாய சமூகத்திலிருந்து தோன்றுகிறது. மக்காவின் விஷயத்தில் அது இனக்குழு சமூகத்திலிருந்து நேரடியாக வர்த்தக சமூகமாக மாறியது; இடையில் விவசாய சமூகம் அல்லது நிலப் பிரபுத்துவம் என்ற நிலைகள் ஏற்படவில்லை. விவசாயம் நடத்த வாய்ப்புள்ள மதீனாவில் கூட, சாகுபடி நிலங்கள் பெரும்பாலும் கூட்டு உடைமையாக இருந்தன. எனவே அடிமைமுறை மக்கா அல்லது மதீனா சமூகங்களில் தோன்றவில்லை. அது அநேகமாக வேறு ஒரு இடத்திலிருந்து இரவல் பெறப்பட்ட முறையாகத் தோன்றுகிறது. மக்காவின் வர்த்தகர்கள்,.வடகிழக்கு, வடமேற்கு அரேபியாவின், அதாவது, ஸஸானிட் மற்றும் ரோமானியப்

58.Tārikh-e-Tabari, தொகுதி 1 பக்கம் 154.

www.padippakam.com



பேரரசுகளின் மக்களுடன் இடைவிடாது தொடர்புகொள்வது அவசியமாக நேர்ந்தது. ரோமானியப் பேரரசில் அடிமைமுறை மிகப் பழங்காலம் முதல் வழக்கத்தில் இருந்து வந்தது. ரோமானிய மாகாணங்களில் அடிமைகளின் நிலைமை மனிதத்தன்மை யற்ற முறையில் இருந்தது பற்றி மேலே குறிப்பிட்டோம். அடிமை முறை அநேகமாக இந்த மாகாணங்களில் இருந்துதான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஃபிலிப் ஹிட்டியும் இவ்வாறு கூறுகிறார்: “இஸ்லாம் புராதன ஸிமிடிக் வழக்கமான அடிமை முறையை இருக்கவைத்துக்கொண்டது. விவிலியத்தின் பழைய ஏற்பாடு இதைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொண்டது. ஆனால் இஸ்லாம் அடிமைகளின் நிலையை பெருமளவுக்கு மேம்படுத்தியது. ஒரு முஸ்லிம் தமது மதத்தைச் சேர்ந்த மற்றொருவரை அடிமை யாக்கக்கூடாது என்று மதச்சட்டம் தடை செய்கிறது. ஆனால் அந்நிய அடிமை ஒருவர் இஸ்லாமை ஏற்றால் அவருக்கு விடுதலை உண்டு என்று உறுதியளிக்கப்படவில்லை. ஆரம்பகால இஸ்லாமில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட போர்க் கைதிகள் மீட்புப் பணத்தின் மூலம் விடுவிக்கப்படாவிட்டால் அடிமைகளாக்கப் பட்டார்கள். விலைக்கு வாங்கப்பட்டவர்களும் கொள்ளைத் தாக்குதல்களில் பிடிக்கப்பட்டவர்களும் அடிமைகளாக்கப்பட்டனர். விரைவில் அடிமை வியாபாரம் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் விறுவிறுப்பாகவும் லாபகரமாகவும் நடக்கலாயிற்று.”[59]

எனவே அடிமைமுறை மக்காநகர சமூகத்தின் பொருளாதாரத்தில் இணைந்து அமைந்த அம்சம் அல்ல என்றும், அநேகமாக, புராதன ரோமிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும் காண்கிறோம். ஆனால் இஸ்லாம் தோன்றுவதற்கு முன் மக்காவில் வெளிநாடுகளைச் சேர்ந்த பல அடிமைகள் இருந்தார்கள் என்பதும், அவர்கள் சமூகத்தின் கடைசிப் படியில் இருந்தார்கள் என்பதும், அவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருந்தது என்பதும் நிச்சயம் எனத் தோன்றுகிறது. இஸ்லாம் அடிமைமுறையை ஒழிக்க வில்லை என்றாலும் அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக அவர்களின் நிலைமையை மேம்படுத்த முயற்சி செய்தது. அவர்களுக்கு விடுதலை அளிப்பதை ஒரு மதக்கடமையாகச் செய்யும் படியும் தீர்க்கதரிசி ஊக்குவித்தார். அவர் இவ்வாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது: சுதந்திர மனிதர் ஒருவரைப் பிடித்து விற்பவருக்கெதிராக “நியாயத்தீர்ப்பு நாளில், நான் சாட்சியாயிருப்பேன்.” (புகாரி: கிதாப் அல்-புயூ) அடிமைகளை விடுவிப்பது பல்வேறு பாவங்களுக்குக் கழுவாய் ஆகும் என்று குரான் கூறுகிறது. தற்செயலாகச் செய்துவிட்ட கொலை (90:11), காப்பாற்ற விரும்பாத பிரமாணத்தை மீறுதல் (5:89), விவாகத்தின் போது

59. Philip K. Hitti, *History of the Arabs* (லண்டன், 1970), பக்கம் 235.

படிப்பகம்

www.padippakam.com



மனைவியைத் தன் தாய்க்கு ஒப்பிட்டுப்பேசிப் பின் விவாகரத்தை விலக்கிக்கொள்ளல் (58:3) போன்ற பாவங்களுக்கு அது கழுவாயாகும் என்று கூறப்படுகிறது. மேலும், ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஜக்காத்தில் ஒரு பகுதியை அடிமைகளை விடுவிப்பதற்குக் குரான் ஒதுக்கிவைக்கிறது (9:60). அடிமைகளைப் பெறுவதற்கு பழங்காலத்திலிருந்தே இருந்துவரும் ஒரு வழி, போர் ஆகும். ஆனால் குரான் இந்த வழியில் அடிமைகளைக் கொண்டுவர ஊக்கமளிக்கவில்லை. குரான் கூறுகிறது: "விசுவாசிகளல்லாதவர்களை நீங்கள் போர்க்களத்தில் சந்தித்தால் அவர்களது தலைகளை வெட்டிவிடுங்கள். அவர்களைப் பணியவைத்துவிட்டால், கைதிகளை பலமாகக் கட்டிவிடுங்கள். பின்பு அவர்களுக்கு விடுதலை அளிக்கலாம் அல்லது மீட்புப்பணம் பெற்றுக்கொள்ளலாம். போர் தனது கவசங்களைக் கீழே வைக்கும் வரை இவ்வாறு செய்யுங்கள்."[60] ஆனால் மற்றொரு வசனத்தில் (33:50) போரில் அடிமைப்பெண்களைக் கைப்பற்றிக்கொள்ள குரான் அனுமதிக்கிறது. இந்த வசனம் இவ்வாறு கூறுகிறது: "நபியே, நீர் மஹர் கொடுத்துள்ள உம்முடைய மனைவியரையும் அல்லாஹ் போரின் மூலம் உமக்குக் கொடுத்த அடிமைப்பெண்களையும் உமக்கு சட்டப்படி உரிமையாக்கியிருக்கிறோம்." மேலே எடுத்துக்காட்டப்பட்ட இரண்டு வசனங்களிலும் உள்ள முரண்பாட்டுக்குச் சமாதானம் காண்பதற்கு முதல் வசனம் கூறுவது மாற்று வழியேயன்றி ஒரேவழி அல்ல என்று கருதலாம். மேலும் தீர்க்கதரிசியின் தோழர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் அடிமையாக்குவது பற்றி கருத்து ஒற்றுமை மூலம் செயல்பட்டதை இபின் ருஷ்த் (Ibn Rushd)[61] குறிப்பிடுகிறார். ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டில் பனூல்-முஸ்தலிக் (Banūl-Mustaliq),[62] ஹிஜ்ரி 8-இல் ஹவாஜின் (Hawāzin)[63] ஹிஜ்ரி 9-இல் பனு அன்பர் (Banū 'Anbar)[64] ஆகியோர் பற்றி இவ்வாறு முடிவுகள் எடுக்கப்பட்டன; ஆயினும் இவர்கள் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குரானில் இவ்வாறெல்லாம் கூறப்பட்டிருந்தாலும் கூட முஸ்லிம் நாடுகளில் அடிமைமுறை பெரும் அளவில் நீடித்தது; கடைசியாக நமது காலத்தில்தான் அது ஒழிக்கப்பட்டது. முஸ்லிம் வரலாற்று ஆதாரங்களிலிருந்து முஸ்லிம் பேரரசில் வெள்ளமாகப் பெருகிய அடிமைகளின் எண்ணிக்கை பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். மூஸா பின் நூஸைர் (Mūsā b.Nusayr) சுமார் 300,000 பேரை ஆப்பிரிக்காவிலிருந்து பிடித்து வந்தார்.

60. குரான், அத்தியாயம் 47, வசனம் 4.
61. Ibn Rushd, Bidāyat-at mujtahid I 351 ed. Mustafa al. Babi (Cairo).
62. Ibn Hishām, மேலே குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 729.
63. மேற்படி, பக்கம் 877-8.
64. மேற்படி, பக்கம் 983.

www.padippakam.com



இவர்களில் ஐந்தில் ஒரு பங்கினரை அல்-வலீது (al-Walīd) க்கு[65] அனுப்பிவைத்தார். ஸ்பெயினில் காதிக் (Gothic) பிரபுக்கள் குடும்பங்களிலிருந்து 30,000 கன்னிப் பெண்களைக் கைப் பற்றினார்.[66] குதைபா (Qutayba), ஸாக்டியானா (Sogdiana)விலிருந்து மட்டும் 100,000 பேரைப் பிடித்துவந்தார். அல்-ஜுபைர் பின் அல்-அவ்வாம் (al-Zubayr b. al-'Awwām) தமது வாரிசுகளுக்கு விட்டுச் சென்ற சொத்துக்களில் ஆண்களும் பெண்களுமாக ஆயிரம் அடிமைகளும் இருந்தார்கள்.[67] மக்காவின் புகழ்பெற்ற காதல் கவிஞர் உமர் பின் அபீ-ரபீயா ('Umar b. Abī-Rabia) விடம் எழுபதுக்கும் அதிகமான அடிமைகள் இருந்தார்கள். ஹிட்டி கூறுகிறார்: "உமய்யத் (Umayyad) இளவரசர் ஒருவர் சுமார் ஆயிரம் அடிமைகளைத் தமது பரிவாரத்தில் வைத்திருப்பது அசாதாரணமானதல்ல. ஸிரியா ராணுவத்தில் உள்ள ஒரு போர்வீரர் கூட போர்க்களத்தில் தமக்குப் பணிசெய்ய ஒன்று முதல் பத்து பணியாட்கள்வரை வைத்திருந்தார்."[68] இவ்வாறாக, அடிமைமுறையின் கடுமையைத் தணிப்பதை மதக்கடமையாக விதிப்பதால் மட்டும் அதிகப் பலன் ஏற்படவில்லை. ஏனென்றால் அவ்வாறு தணிப்பதற்கு அல்லது அந்த முறையை ஒழிப்பதற்கு வேண்டிய நிலைமைகள் இருக்கவில்லை. இஸ்லாம், கடும் வட்டியைத் தடைசெய்தது போல இதையும் தடை செய்திருந்தாலும், கடும்வட்டி மறைந்துவிடாமல் நீடித்தது போல இதுவும் நீடித்திருக்கும். சில அடிமைகள், வசதி, வாய்ப்புக் குறைந்த இனக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் அல்லது வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தீர்க்கதரிசியின் மரணத்துக்குப் பிறகு அதிகார அமைப்பினருக்குப் பெரும் தொல்லை கொடுத்தார்கள். இரண்டாவது கலீஃபா உமர், பாரசீகத்தைச் சேர்ந்த ஃபிரோஸ் (Firoz) என்ற அடிமையால் கொலை செய்யப்பட்டார். அதற்குக் காரணம் வருமாறு: ஃபிரோஸ், தம்முடைய எஜமான் முகிரா பின் ஷுஃபா (Mughira b. Shu'ba) தம்மிடம் கடுமையாக வரி வாங்குகிறார் என்றும், அதைக் குறைக்க வேண்டும் என்றும் கலீஃபா உமரிடம் புகார் செய்தார். அவர் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று கலீஃபா கேட்க, ஒருநாளுக்கு இரண்டு திர்ஹாம் கொடுப்பதாக அடிமை பதிலுரைத்தார். அவர் என்ன வேலை செய்கிறார் என்று கலீஃபா கேட்க, தச்சு வேலை, கொல்லு வேலை, செதுக்கு வேலை செய்வதாக அடிமை பதிலளித்தார். அப்படியானால் அவர் செலுத்தும் பணம் அதிகமல்ல என்று கலீஃபா தீர்ப்பளித்தார்.[69]

65. Ibn al-Athīr, தொகுதி IV, பக்கம் 448.
66. மேற்படி, பக்கம் 454.
67. Mas'ūdi, *Muruj al-Dhahab* தொகுப்பும், மொழிபெயர்ப்பும் Meyad and Courteille, (பாரீஸ் 1864).
68. Hitti, முன்பு குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 235. அடிக்குறிப்புகள் 62 முதல் 66 வரை, ஹிட்டியின் புத்தகத்தில் மேற்கோள்களாக உள்ளவை.
69. Shibli N'omāni, Al-Farouq, முன்பு குறிப்பிடப்பட்டது, பக்கம் 241.

www.padippakam.com



ஃபிரோஸ் அதைக் கேட்டு மிகவும் மனவருத்தமடைந்தார். மறு நாள் காலைத் தொழுகைக்குப் பின் அவர் கலீஃபா உமரைக் கத்தி யால் குத்தி விட்டார்.†† அதில் ஏற்பட்ட காயத்தால் உமர் பின்பு இறந்துபோனார். அந்த அடிமை தமது சக்திக்கு மேல் சுரண்டப் பட்டதால் அதிருப்தியடைந்திருந்தார் என்பது முக்கியமாகக் கவனிக் கத்தக்கது. இது ஒரு தனிப்பட்ட உதாரணம் என்று கருத முடியாது.

வேறு சில நிகழ்ச்சிகளும் உள்ளன. அம்மார் பின்யாசிர் ('Ammār b. Yāsir) என்பவர் ஒரு அடிமைப்பெண்ணின் மகன். அவர் நிதானமான குணம் உள்ளவர் என்றாலும் மூன்றாவது கலீஃபா உத்மானுக்கு ('Uthmān) எதிராக நடந்த கிளர்ச்சியில் முன்னணியில் நின்றார். அவர் ஒருமுறை கலீஃபா அரசுக் கருவூலத்திலிருந்து தமக்கு உரிய பங்குக்கு மேல் அதிகமாக எடுத்துக்கொள்வதாக அவரைக் குறைகூறினார். கலீஃபா கோபமடைந்து, "அடிமைப் பெண்ணின் மகனே, நீ எப்படி என்னை எதிர்த்துப் பேசத்துணிந் தாய்?" என்று கேட்டார். உத்மான் அம்மாரைப் பிடிக்கச் சொல்லி அடித்த அடியில் அவர் நினைவிழந்துவிட்டார்.[70] கூஃபா ஒரு கிளர்ச்சிக் கேந்திரமாயிற்று என்பதைப் பின்னர்க் காணவிருக் கிறோம். அங்கு வசித்தவர்கள் அடிமைகளும், வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுமாவர். அப்பாஸிட் ('Abbāsid) காலத்தில் நடந்த புகழ்பெற்ற ஸஞ்ஜ் (Zanj) கிளர்ச்சியை ஆப்பிரிக்க அடிமைகள் முன்நின்று நடத்தினார்கள். பேரரசின் அஸ்திவாரமே இந்தக் கிளர்ச்சியினால் ஆடிப்போயிற்று. இவையெல்லாம், அடிமைகளை நல்லவிதமாக நடத்தும்படி மதம் போதனை செய்தபோதிலும், பெரிதாக மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதையும், அடிமைகளும் சுரண்டப்பட்ட மக்களும் தாங்களே போராட வேண்டியிருந்தது என்பதையும் காட்டுகின்றன.

அரபு சமூகம், தனது பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த மாற் றத்துக்கு ஏற்ப, தனது புதிய தேவைகளுக்குத் தகுந்தபடி தனக் கென ஒரு சட்டமுறை உள்ளிட்ட சித்தாந்த மேற்கட்டமைப்பை உருவாக்க முயன்று வந்தது. அரேபியர்களின் தேசியகர்வமும், தாங்கள் கீழடக்கி வைக்கப்பட்டிருப்பதான உணர்வும் காரண மாக கிறிஸ்தவத்தையோ, யூத மதத்தையோ அவர்கள் ஏற்க விரும்ப வில்லை. மேலும் இந்த மதங்கள், நாம் முன்னமே பார்த்ததுபோல, முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளில் தோன்றியவையாதலால், அரேபியர்களின் சூழ்நிலைக்கு அவை பொருந்தியிருக்கமாட்டா. இது தவிர, குரானின் மக்கா காலத்திய வசனங்கள் சிலவற்றிலிருந்து, மக்காநகர வர்த்தகர்கள் "பாலும் தேனும் பாய்ந்தோடும்" என்று கூறப்படும் சமூகம் ஒன்றைக்காண ஆவல் கொண்டிருந்தார்கள்

70. Balādhuri, Ansab al-Ashrāf, பக்கம் 48.
†† புத்தகத்தின் இறுதியில் உள்ள குறிப்பைப்பார்க்கவும். பக்கம் 281

படிப்பகம்

www.padippakam.com



எனத் தெரிகிறது. பின்வரும் வசனங்கள் ஒரு உதாரணம்: "அவர்கள் மாறாத மனவுறுதி கொண்டிருந்ததற்காகப் பட்டாடைகளையும் சொர்க்க போகங்களையும் பிரதிபலனாக வழங்குவான். அதில் மென்மையான ஆசனங்கள் மீது அவர்கள் சாய்ந்தவர்களாக இருப்பார்கள். பொசுக்கும் வெப்பத்தையோ கடுங்குளிரையோ அவர்கள் காணமாட்டார்கள். மரங்களின் நிழல்கள் அவர்கள் மீது கவிந்திருக்கும். பழங்கள் குலைகுலையாகத் தாழ்வாகத் தொங்கும். வெள்ளிப் பாத்திரங்களிலும் கிண்ணங்களிலும் அவர்களுக்கு உண்பொருள்கள் கொடுக்கப்படும். அவற்றைத் தக்க அளவாக அவர்களே அளவிட்டு வைப்பார்கள். ஸல்ஸபீல் என்ற ஊற்றிலிருந்து இஞ்சியின் மணம் கொண்ட பானம் அவர்களுக்குக் குவளைகளில் அருந்தக் கொடுக்கப்படும். என்றென்றும் இளமை மாறாமலிருக்கும் சிறுவர்கள் அவர்களுக்குப் பணிசெய்வார்கள். பார்ப்பவர்களுக்குச் சிதறிய முத்துக்களைப் போல அவர்கள் தோற்றமளிப்பார்கள். அங்கு காணும் காட்சி மகிழ்வும் மாண்பும் நிறைந்த ராஜ்யமாக இருக்கும். அவர்கள் பட்டாடைகளும் பச்சைப் பொன்னாடைகளும் அணிந்திருப்பார்கள். வெள்ளியினாலான காப்புகளும் அணிவிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய இறைவன் அவர்களுக்குத் தூய பானங்கள் அளிப்பான். உங்களுக்குரிய பிரதிபலன் இது. உங்களுடைய முயற்சி அல்லாஹ்வுக்கு உகந்ததாகிவிட்டது."[71]

இந்த வசனங்களில் உள்ள வர்ணனைகளிலிருந்து மக்காமக்களில் சிலரேனும் எல்லாவிதமான சுகபோகங்களையும் அடையக் கனவுகண்டு கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. மக்கா நகர வர்த்தகர்கள் அடைய ஆசைப்பட்ட சுகபோகங்களை தீர்க்க தரிசியின் கற்பனை அவர்கள் முன் சித்தரித்துக் காட்டியது என்று கருதலாமா? இத்தகைய வர்ணனைகள் மக்காகாலத்திய ஸூராக்களில் திரும்பத் திரும்ப வருகின்றன. மற்றொரு ஸூராவில் பின்வருமாறு கூறப்படுகிறது:

> நிச்சயமாக நல்லோர்கள் பாக்கியமிக்க சொர்க்கத்தில் உறைவார்கள். மெல்லிய ஆசனங்களில் சாய்ந்து கொண்டு அவர்கள் சுற்றிலும் பார்ப்பார்கள். அவர்களுடைய முகங்களில் சொர்க்கத்தின் ஒளி திகழும். முத்திரையிடப்பட்ட தூய மதுவிலிருந்து அவர்கள் பருகுவார்கள். அதனுடைய முத்திரை கஸ்தூரியாகும். ஆனந்தபாக்கியத்தில் ஆர்வம் கொள்பவர்கள் அதற்கு ஆர்வம் கொள்ளட்டும். அதனுடன் கலவையாவது தஸ்னீம் என்னும் ஊற்றின் நீராகும். அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள் பருகும் நீருற்று அது. *(83:22-28)*

71. குரான், அத்தியாயம் 76, வசனம் 11-22.

www.padippakam.com



மற்றும் ஒரு மக்கா வசனம் கூறுவது:

> அவர்கள் விரிப்புகளின் மீது சாய்ந்தவர்களாயிருப்பார்கள். பொன் இழைத்த பட்டுத்துணி பொருந்தியவை அவை. இரு சொர்க்கச்சோலைகளின் பழங்களும் பறிப்பதற்குக் கையருகே இருக்கும். எனவே, உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதை நீங்கள் நன்றியில்லாமல் இல்லையென்பீர்கள்? தங்கள் துணைவரைத் தவிர வேறுயாரையும் பார்க்காத, பார்வை கீழ் நோக்கிய பெண்கள் அவர்களை வரவேற்பார்கள். அந்தப் பெண்களை எந்த மனிதனும் எந்த ஜின்னும் தீண்டிச் சேர்ந்ததில்லை. (உங்கள் இறைவனின் எந்தக் கொடையை நீங்கள் நன்றியின்றி இல்லையென்பீர்கள்?) அந்தப் பெண்கள் சிவந்த மாணிக்கத்தைப்போன்றும் முத்தைப்போன்றும் மேனி படைத்தவர்கள். (எனவே, உங்கள் இறைவனின் எந்த அருட்கொடையை நீங்கள் நன்றியின்றி இல்லையென்பீர்கள்?)... (55: 54-59)

இவற்றைப்போன்ற மற்றும் பல வசனங்களைக் குரானிலிருந்து எடுத்துக்காட்ட முடியும். இத்தகைய சுகபோகங்களைப் பற்றிய வர்ணனைகள் மக்கா வசனங்களில் மிகவும் வன்மையாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. மதீனா வசனங்களில், சொர்க்கம் பற்றியும் அதன் சுகங்கள் பற்றியும் பேசப்பட்டாலும், அவற்றின் வகைகளையும் சிறப்புக்களையும் அதிகமாக வலியுறுத்தவில்லை. இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன? மக்காவிலும் மதீனாவிலும் இருந்த வேறுபட்ட நிலைமைகளை நாம் மனத்தில் கொண்டால், மக்காவில் பணக்கார வர்த்தகர்களை நோக்கிப் பேசியது போல மதீனாவில் பேசவில்லை என்பதைக் காணலாம். அங்கே அவர் முக்கியமாக, தம்மை உறுதியுடன் பின்பற்றி வந்தவர்களைப் பற்றியும் யூதர்களைப் பற்றியுமே நினைத்தார். மதீனாவில் இருந்த அவரது மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்க்கைக்குப் போதிய பொருள்கள் இல்லாமல் எளிமையான வாழ்க்கை வாழ வேண்டியிருந்தது. ஆனால் மக்கா வர்த்தகர்கள் சுகபோகப் பொருள்களில் வியாபாரம் நடத்தியவர்கள். அவர்கள் வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய எல்லாச் சுகங்களையும் அடைய ஆவல் கொண்டிருந்தார்கள். ரோமானிய, ஸஸானிட் பேரரசுகளின் ஆட்சியாளர்களுடனும், அவற்றின் எல்லையில் இருந்த இடைப்பகுதி அரசுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். அந்த அரசுகளுக்கு பட்டு, கஸ்தூரி, சாம்பிராணி போன்ற சுகபோகப் பொருள்களை வழங்கி வந்தார்கள். அவர்கள் இந்தச் சுகபோகங்களை ஸூராக்களில் அடிக்கடி கூறப்படும் துணைகளுடனும் பணியாளர்களுடனும் அனுபவித்து வந்திருக்க வேண்டும். முகமதுவே வர்த்தகராக இருந்திருக்கிறார்; வர்த்தகத்துக்காக வடதிசை நாடுகளுக்குச்

www.padippakam.com



சென்று வந்திருக்கிறார். அவர் அந்த சுகபோகங்களைத் தாமே பார்த்திருப்பதோடு, மற்ற மக்கா வர்த்தகர்களின் ஆசைகளையும் அறிந்திருக்க வேண்டும். மேலே எடுத்துக்காட்டிய வசனங்கள் நல்லவர்களுக்கு சொர்க்கத்தில் கிடைக்கவிருக்கும் வாழ்வைக் காட்டுவன போல இருக்கின்றன. ஆனால், உண்மையில் மக்காநகர வர்த்தகர்களை நோக்கிக் கூறப்பட்ட இந்த வசனங்கள், எல்லாவித இன்ப அனுபவங்களுடனும் அவர்கள் வாழ விரும்பிய வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. இவற்றில் கற்பனை செய்யப்படும் எழில் தவழும் காட்சிகள், செல்வச்செழிப்புமிக்க சமூகத்தைப் பார்த்திருக்கும் ஒருவருக்குத்தான் தோன்றமுடியும். வறண்ட பாலைவனத்தில் இத்தகைய காட்சிகள் தோன்றமாட்டா. ஏற்கெனவே நாம் குறிப்பிட்டபடி மக்காநகரம் தீர்க்கதரிசியின் காலத்தில்- மிக உயர்ந்த செல்வச்செழிப்புக்கும், மிகத் தாழ்ந்த வறுமைக்கும் இருப்பிடமாக இருந்தது. இந்தக் குரான் வசனங்கள் மக்காவில் வாழ்ந்த ஏழைமக்களுக்கு இவ்வுலகத்தில் கிடைக்காத நன்மைகள் மறு உலகில் கிடைக்கும் என்ற வாக்குறுதியை அளிப்பதன் மூலம் அவர்களுடைய உள்ளத்தின் அவல உணர்வுகளுக்கும் ஆறுதல் அளித்திருக்கும்.

முகமது ஹீரா (Hīra) குகையில் பல ஆண்டுக்காலம் தியானத்தில் இருந்த பிறகு (பணக்கார விதவையான கதீஜாவைத் திருமணம் செய்து கொண்டபின் அவருக்குப் போதிய அளவு வாழ்க்கைவசதிகள் இருந்ததுடன், தியானத்தில் இருப்பதற்கும் ஓய்வுநேரம் கிடைத்தது) அவரது மனத்தில் சில முடிவுகள் தோன்றின. செயலில் கொண்டுவந்தால் மக்காவின் சமூகத்தையே முற்றிலுமாக மாற்றியமைத்துவிடக்கூடிய முடிவுகள் அவை. அவையெல்லாம் சர்வசக்தி வாய்ந்த இறைவனால் தலைமைத் தேவதூதர் கேப்ரியல் (Archangel Gabriel) மூலமாக தமக்கு தரப்பட்டன என்று அவர் உறுதியாக நம்பினார் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. (இது 'ஹலூஸினேஷன்' என்று கூறப்படும் பொய்த்தோற்றமாக இருக்கக்கூடுமோ?) முகமதுவுக்கு இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட வசனங்கள் அவரது இயல்புக்குத் தக்கபடி பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகின்றன: "உம்முடைய இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் அனைத்தையும் படைத்தவன். மனிதனை அவன் இரத்தக்கட்டியிலிருந்து படைத்தான். பெரும் தயாளனான இறைவனின் பெயரால் ஓதுவீராக! பேனாவைப் பயன்படுத்தக் கற்பித்தவன் அவன். மனிதன் அறியாதவற்றை அவனுக்குக் கற்றுக்கொடுப்பவன்." *(96:1-5)* இந்த வசனங்களின் முக்கியத்துவத்தை உணருவதற்கு, அப்போது மக்கா பன்னாட்டு வர்த்தகக் கேந்திரமாக வளர்ந்திருந்தபோதிலும் அங்கு எழுத்தறிவு மிகக் குறைவு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாமின் ஆரம்ப

www.padippakam.com



நாட்களில் குரைஷ் இனக்குழு மக்களில் பதினேழுபேர்தான் எழுதப் படிக்கக் கற்றிருந்தார்கள்.[72] (தீர்க்கதரிசியே ஒரு "உம்மீ" (Ummi) தான், அதாவது எழுதப் படிக்கத் தெரியாதவர்தான் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை). எனவே வெளிப்படுத்தப்பட்ட முதல் வசனமே மிகச் சரியாக, எழுத்தறிவின் முக்கியத்துவத்தை வலி யுறுத்துகிறது. அருளாளனான இறைவன் பேனாவைப் பயன்படுத்தக் கற்றுத்தருகிறான்! அப்படியானால் மக்காநகர சமூகத்தில் பேனா வைப் பயன்படுத்தத் தெரிவதை விட நன்மையானது வேறு என்ன இருக்க முடியும்?

முகமது வடதிசை நாடுகளின் முற்போக்கான சமூகங்களைப் பார்த்திருக்கிறார். அவருக்கு மக்காவில் இருந்த நிலைமை மிகவும் மனக்கலக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். வர்த்தகத்தின் மூலம் செல்வச்செழிப்பைப் பெற்றிருந்தாலும் மக்கா மக்கள் இனக்குழு வாழ்க்கை முறையிலேயே ஆழ்ந்திருந்தார்கள். பல்வேறு இனக் குழுக்களும் சேர்ந்த வர்த்தகக் கூட்டுமுயற்சிகள் உருவாகியிருந்த போதிலும் மக்கா மக்களின் மனப்போக்கு இனக்குழு முறையை விட்டு மாறவில்லை. அரேபியர்கள், கிறிஸ்தவ, யூதமத மக்களைப் போலன்றி, தங்களுக்கென சொந்தமான ஒரு மதமோ, மத நூலோ, எழுதப்பட்ட சட்டங்களோ, சட்டத்தை அமல்செய்யும் அமைப்புகளோ இல்லாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு இருந்ததெல்லாம் பல்வேறு இனக்குழு தெய்வ வழிபாட்டு முறை களின் கலவையும், காலத்துக்கு ஒவ்வாதவையாகி, புதிய நிலைமை யில் தடைக்கற்களாக நின்ற பழங்கால இனக்குழு மரபுகளுமே. முகமது மாபெரும் ஞானிகள், தீர்க்கதரிசிகளின் வழக்கப்படி ஹீரா குகையில் தியானத்தை மேற்கொண்டார். அதில் அவர் செய்த முக்கியமான முடிவு மக்கா மக்களை அவர்களுடைய சீரழிவி லிருந்து மீட்டு முன்னேற்றப்பாதையில் செலுத்த வேண்டும் என்பதே. இதற்கு அவர்களுக்கு முறையாகத் தொகுக்கப்பட்ட சட்டங் களையும், அவர்களது தேவைகளுக்குப் பயன்படக்கூடிய முறை யான அமைப்பு ஒன்றையும் அளிக்க வேண்டும். பழைய இனக் குழுப் பழக்கவழக்கங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாற்றங்களைச் செய்வது அவருடைய எண்ணம் அல்ல. முழுமை யான மாற்றத்தைக் கொண்டுவரவே அவர் விரும்பினார். 'ஒரே கடவுளைத் தவிர வேறு கடவுள்கள் இல்லை' என்ற எளிமையான கொள்கையின் மூலம், நம்பிக்கையாளர்கள் அனைவரையும், இனக்குழுப் பிணைப்புகளைக் கருதாமல், முற்றிலுமாக ஒன்று படுத்தும் முயற்சியை அவர் மேற்கொண்டார்.

72. Al-Wāqidi, cited Al-Baladhuri, Futu-h al-Bulda-n, ed.D. Goeje, பக்கம் 471-2.

www.padippakam.com



இவ்வாறாக, அவர் இறைவனின் செய்தியை அறிவித்த பின், நம்பிக்கையாளர்களின் புதிய சமுதாயம் ஒன்று உருவாயிற்று. இந்தப் புதிய சமுதாயத்தில் சேர்ந்தவர்கள் எந்த இனக்குழுவின் நலன்களுக்கும் பிரதிநிதிகளாக இல்லாமல், தனிநபர்களாகவே இருந்தார்கள். பலர் தங்கள் குடும்பங்களின் பெரியவர்கள் சொல்லை மீறி இந்த இயக்கத்தில் சேர்ந்தார்கள். இனக்குழுச் சமூகத்தில் நினைத்துக் கூட பார்க்க முடியாத செயல் இது. குரான் குறிப்பாகக் கூறுகிறது, "நீங்கள் வேறு யாருடைய சுமையையும் சுமக்க முடியாது," என்று. நியாயத்தீர்ப்பு நாளில் உங்களுக்கு யாரும், மிக நெருங்கிய உறவினர்கள் கூட, உதவிசெய்ய முடியாது என்றும் குரான் வலியுறுத்திக் கூறுகிறது. சமூகத்தில் ஏற்பட்டுவந்த பொருளாதார மாற்றத்தின் விளைவாக உருவாகிக்கொண்டிருந்த தனிநபர் வாழ்க்கை முறைக்கு இது மிகவும் பொருத்தமாயிருந்தது. இந்த இயக்கம், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய காரணங்களுக்காக, கொஞ்சகாலம் தலைமறைவாகவே இருந்தது. அதைப் பின்பற்றியவர்கள், முகமது உட்பட, கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இனக்குழுவின் பாதுகாப்பைப் பெறக்கூடியவர்கள் பட்ட கொடுமைகள் ஓரளவு குறைவாயிருந்தன. ஆனால், அடிமைகள் அல்லது மவாலி (mawālīs)களுக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லாததால் அவர்கள் இரக்கமின்றிச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். முகமது ஹமீதுல்லா பின்வருமாறு எழுதுகிறார்:

> குடும்பத்தின் இளைய உறுப்பினர்களும் அடிமைகளும் மட்டுமின்றி, தொழில்முறையில் தொடர்புள்ளவர்களும் தத்து எடுத்த சகோதரர்களும் கூட பழைய மதத்தைச் சேர்ந்த தங்கள் புரவலர்களால் துன்பத்துக்குள்ளானார்கள். யேமனைச் சேர்ந்த அம்மார் இபின் யாசிர், மக்ஜூம் (Makhzūm) இனக்குழுவுடன் இணைந்தவர் (அபூ ஜஹேல் இந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்). அவர் அளவற்ற சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார். அதனால் அவர் அறிவெல்லாம் இழந்து, அதிலிருந்து தப்பினால் போதும் என்று என்ன சொல்லச் சொன்னாலும் அதைச் சொல்லிவிடுவார். ஒருமுறை அவர் அழுதுகொண்டு தீர்க்கதரிசியிடம் வந்து கடவுள் நிந்தனையான சொற்களைச் சொல்லும்படித் தம்மைக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்று கூறினார். தீர்க்கதரிசி, 'உமது உள் மனத்தில் நம்பிக்கை மாறாதவரை அதனால் குற்றமில்லை' என்று பதில் கூறினார். அம்மாரின் வயதான தாயார் பாமீக் (Pamīkh) என்ற ஸுமையா (Sumaiya) தமது மகனுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு பொறுக்க முடியாமல் ஒருமுறை அபூ ஜஹேலை அவமதிப்பாகப் பேசினார்

www.padippakam.com



அவர் கோபமடைந்து ஈட்டியால் அந்தப் பெண்ணின் வயிற்றில் குத்திக் கொன்றுவிட்டார்.[73]

இவ்வாறாக, வேறு எந்தச் சமூகத்திலும் போலவே, அடிமைகள் போன்ற சாதாரண மக்களும், பாதுகாப்பற்ற வெளிநாட்டினரும் அதிகத் துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்தத் துன்பங்களையெல்லாம் அவர்கள் மனஉறுதியுடனும் தைரியத்துடனும் தாங்கிக்கொண்டு முகமதுவின் வழியை விட்டுவிடாமலிருந்தது அவர்களது நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டுகிறது. புதிய மதம், துன்பப்படும் மக்கள் பரலோகத்தில் சுகம் பெறுவார்கள் என்று கூறிய கிறிஸ்தவம் போன்ற மதங்களைப் போலன்றி, உடனடியாகவே சமூக நீதியை நிலைநிறுத்தவும், சமூக முரண்பாடுகளுக்கான ஆழ்ந்த காரணங்களை அகற்றவும் விரும்பியது என்பதில் சந்தேகமில்லை. இஸ்லாம் சரித்திர ரீதியான வழக்க முறைகளை வலியுறுத்தியதேயன்றி செயலற்றுச் சரணடைவதைக் கூறவில்லை. இதற்கும், ஏற்கெனவே நாம் விளக்கியுள்ளபடி அரேபியாவில் அப்போதிருந்த சரித்திர ரீதியான, பொருளியல் சூழ்நிலைகளே காரணமாகும். இதே இஸ்லாம், மற்ற நாடுகளில் சிதைந்து தேய்ந்து வந்த நிலப்பிரபுத்துவ சூழ்நிலைகளில் புகுத்தப்பட்ட போது, அதில் ஏற்பட்ட மாறுதல்கள் நாம் எடுத்துள்ள நிலையை நிரூபிக்கின்றன. அந்த நாடுகளில் அது, விதி, சாத்வீக சரணாகதி, மறு உலகில் பலன்களை எதிர்பார்த்தல் போன்ற கருத்துக்களை வலியுறுத்துவதாக மாற்றம் கொண்டது. அரேபிய சமூகத்தை மாற்றியமைக்கும் வரலாற்றுப் பணியைச் செய்தது போல, அந்த நிலப்பிரபுத்துவச் சமூகங்களில் செய்ய முடியாமல் போனதால் அதனுடைய வேகமும் சக்தியும் மறைந்துபோயின. முஸ்லிம் தத்துவ அறிஞர்களும், இன்றைய அறிவாளிகள் சிலரும் வரலாற்றுக்குப் பொருந்தாத வேறொரு காரணத்தைக் கூறுகிறார்கள். இஸ்லாமின் போதனைகளைப் பின்பற்றாமல் போனதால்தான் முஸ்லிம்கள் தங்களுடைய சக்தியையும் செயல்வேகத்தையும் இழந்துவிட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். இஸ்லாமின் போதனைகள் மாறுபட்ட சரித்திரச் சூழ்நிலைக்குக் கொண்டு செல்லப்படும் போது, புதிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி ஆக்கரீதியாக அவற்றுக்குப் புதிய அர்த்தங்கள் கொடுக்கப்பட்டாலன்றி, அவைகளுக்கு முன்பு போல சக்தியும் செயல்வேகமும் ஊட்ட முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். சில முஸ்லிம் அறிவாளிகள் இஸ்லாமில் ஜனநாயகமும் இருக்கிறது சோஷலிசமும் இருக்கிறது என்று சொல்லித் தங்கள் மனச்சாட்சியைத் திருப்தி செய்து கொள்கிறார்கள்.

73. Hamidullah, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 43.

www.padippakam.com



இப்போது, மக்காவில் சேர்ந்திருந்த சீர்கேடுகளை நீக்கி நீதியான சமூகம் ஒன்றை உருவாக்க தீர்க்கதரிசி எவ்வாறு செயல்பட்டார் என்பதைப் பார்ப்போம். முதலில் அவர் ஒற்றுமையை, அதாவது, இனக்குழுப் பிணைப்புகளை அகற்றிவிடுவதை, வலியுறுத்தினார். சமூகம் மேலும் முன்னேற்றமடைவதற்கு இது இன்றியமையாதது. நமது காலத்தில் பல்வேறு மொழிகள், பண்பாடுகள், மதங்கள் கொண்ட மக்கள் ஒரே நாட்டு மக்கள் என்ற கருத்தை வலியுறுத்துவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆனால் அவருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்ததனால் மக்காவில் இத்தகைய சமூகத்தை உருவாக்க முடியவில்லை. இரண்டாவதாக, முகமது, மக்கா காலத்தில், தம்மைப் பின்பற்றுவோர் அனைவரும், அவர்கள் சமூகத்தில் எந்த நிலையில் இருந்தாலும், எங்கு பிறந்தவர்களாக இருந்தாலும், சரிநிகர் சமம் என்பதை முழுக்க முழுக்க வலியுறுத்தினார். அடிமைகளுக்கும் கூட கிட்டத்தட்ட சம அந்தஸ்து அளிக்கப்பட்டது. ஆனால், மதீனாவில், அரசு அமைப்பு ஒன்றை தீர்க்கதரிசி உருவாக்கிய பிறகு, சிறிது மாறுதல்கள் ஏற்பட்டன. இதைப் பின்பு பார்ப்போம். இந்தச் சமத்துவக் கருத்து, மக்காவின் சமூக அமைப்புமுறையினால் ஏதேனும் ஒருவகையில் தங்களுக்கு அவமதிப்பு ஏற்பட்டது என்று எண்ணியவர்கள் அனைவரையும் காந்தம்போலக் கவர்ந்தது. ஒரே இனக்குழு அல்லது குலக்குழுவைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் தாங்கள் அந்தக் குழுவிலுள்ள மற்றவர்களால் புறக்கணிக்கப்படுவதாக நினைத்த மக்களுக்கும் முகமது ஆதரவாக நின்றார். வர்த்தக பேரங்கள் எல்லாம் நியாயமாகவும் ஏமாற்று இல்லாமலும் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். எடைபோடுவதிலும் விற்பதிலும் கூட ஒருவர் மனச்சாட்சிப்படி நடக்க வேண்டும். குரான் கூறுகிறது:

> "எடையிலும் அளவிலும் குறைவு செய்கிறவர்களுக்கு கேடு உண்டாவதாக! அவர்கள் மற்றவர்களிடமிருந்து அளந்து வாங்கும்போது நிறைவாக வாங்குகிறார்கள். ஆனால் தாங்கள் மற்றவர்களுக்கு அளந்து கொடுத்தாலும் நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்துக் கொடுத்து மோசடி செய்கிறார்கள். மனிதர்கள் அனைவரும், படைத்தவனான இறைவன் முன் எழுந்து நிற்கும் மகத்தான நாளில் தாங்கள் உயிருடன் எழுப்பப்படுவார்கள் என்று அவர்கள் எண்ணவில்லையா?" *(83: 1—6)*

நேர்மையற்ற வர்த்தக பேரங்களும், எடைகுறைவாக நிறுப்பதும் போன்ற செயல்கள் நடைபெற்றதை இந்த வசனம் காட்டுகிறது. இத்தகைய மோசடிச் செயல்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அமைப்பு இல்லாததால் முகமது அவை அறநெறிக்கு

www.padippakam.com



முரணானவை என்று கண்டித்து, அவற்றைச் செய்வோரின் உள்ளத்தில் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றிய அச்சத்தை உண்டாக்க வேண்டியிருந்தது.

முகமதுவின் புதிய மதம் தங்கள் நலனுக்குத் தீங்கற்றதல்ல என்பதை சக்திமிக்க வர்த்தகர்கள் உணர்ந்துகொண்ட பின்னும் அவர்கள் அவரை வன்மையாக எதிர்த்தார்கள். அவரது போதனைகள் சமூகத்தில் தங்களுக்கு இருந்த உயர்ந்த அந்தஸ்தைத் தாக்குகின்றன என்பதையும், (அடிமைமுறையை முற்றிலுமாக ஒழிக்கவில்லை என்றாலும்) அடிமைகளுக்கும், தங்கள் இனக்குழுவைச் சேர்ந்தவர்களானாலும் தங்களைவிட திறமையிலும் செல்வத்திலும் குறைந்தவர்களுக்கும், தங்களுடன் சம அந்தஸ்து கொடுக்கின்றன என்பதையும் அவர்கள் புரிந்துகொண்டார்கள். மேலும், முகமதுவின் புதிய மதத்தை ஏற்றுக்கொண்டால், இறைத்தூதர் என்று அவருக்கு அனைவரையும்விட உயர்ந்த ஸ்தானம் ஏற்பட்டுவிடும். மக்காவின் சக்திமிக்க வர்த்தகர்களுக்கு இந்தக் கருத்து கசப்பாயிருந்தது. இங்கே ஒரு கேள்வி எழுகிறது: மக்காவின் வளர்ந்துவரும் வர்த்தகப் பொருளாதாரத்துக்கு, பழைய இனக்குழு தெய்வவழிபாட்டு முறைகளைவிட இஸ்லாம் அதிகப் பொருத்தமானதாக இருந்தும் கூட மக்காவின் பணக்கார வர்த்தகர்கள் அதை நிராகரித்தது ஏன்? இதற்குக் காரணம் காண்பது கடினமல்ல. மாற்றங்களை ஏற்பதற்குச் சாதாரணமாக ஏற்படும் எதிர்ப்புணர்வும், என்னவென்றும் எப்படிப்பட்டது என்றும் தெரியாத ஒன்றைப் பற்றிய பயமும் ஒரு காரணம். மேலும் முகமது மக்காவின் பணக்கார வர்த்தகர்களின் அடங்காத பேராசையைக் கடுமையாகத் தாக்கினார். சாதாரண ஏழை மக்களுடன் தங்களையும் சமமாகக் கருதும் கருத்து, அந்த வர்க்கத்தின் மக்கள் மீது அவர்களுக்கு இருந்த துவேஷம் காரணமாக, அவர்களுக்கு வெறுப்பேற்றியது. (பொருள் அளவில் உண்மையான சமத்துவத்தை எந்த இஸ்லாமிய சமூகத்திலும் ஏற்படுத்த முடியவில்லை என்பது நன்கு தெரிந்ததே). எனவே சமத்துவக்கருத்து மதத்திலும் ஆன்மீகத்திலும் மட்டுமே செயல்பட்டது. உதாரணமாக தொழுகைக் கூட்டங்களில், சமூக அந்தஸ்து வேறுபாடுகளைக் கருதாமல், மன்னரும் அடிமையும், பணக்காரரும் ஏழையும் ஒரே வரிசையில் நிற்கிறார்கள். ஆனால் உண்மையான வாழ்க்கையில் இஸ்லாமிய சமூகத்தில் வர்க்க ஏற்றத்தாழ்வுகள் வேறு எந்தச் சமூகத்திலும் இருப்பது போலவே வலுவாக இருந்தன. உற்பத்திச்சாதனங்கள் சமூக உடைமை ஆகாமல் உண்மையான சமத்துவம் ஏற்பட முடியாது. இஸ்லாமில் சமத்துவக் கருத்துக்கு இது ஒரு இயற்கையான வரம்பு கட்டிவிட்டது. சமூகத்தின் மேற்பரப்புக்குக் கீழே உருவாகி வந்த அதிருப்தியையும்,அது விரைவில்

www.padippakam.com



வெடித்து வெளிப்படக்கூடிய அபாயத்தையும் முகமது உணர்ந்திருந்தார். நீதியான சமூகம் ஒன்றை உருவாக்கி, ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சாதகமாக அடிப்படையான மாற்றங்களைச் செய்வதன் மூலம் அத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க முகமது முயன்றார். இதற்கு மக்காவின் பணக்கார வர்த்தகர்கள் சிறிது தியாகம் செய்ய வேண்டியதாகும் என்பதுடன் அவர்கள் தங்களுடைய கொடுமையான சுரண்டலை நடத்த முடியாது என்பதால் அவர்களுடைய பொருளாதார நலன்களும் பாதிக்கப்படும். இதன் மூலம் நீண்டகால அளவில் ஏற்படக்கூடிய நன்மைகளைத் தொலை நோக்கு உள்ள ஒரு சிலரே புரிந்துகொள்ள முடிந்தது. மக்கா நகர வியாபாரிகள் தங்களுடைய நீண்டகால நலன்களை உணரவில்லை. உலகில் எங்குமே கொள்ளை லாபக்காரர்கள் நினைப்பதைப் போலவே அவர்களும் எல்லையற்ற சுரண்டலில் தாங்கள் ஈடுபடுவதற்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்று நினைத்தார்கள். ஆனால் சமூகத்துக்குச் சட்டங்களை அளிப்பவர் — முகமது அத்தகையவர் என்பதில் ஐயமில்லை — தமது சட்டங்கள் மிகப் பொரும்பான்மையான மக்களுக்கு ஏற்புடையதாக இருப்பதற்காக, சமூகத்தின் பொது நன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். அரசுமுறை ஒன்று உருவாகிவிட்டால், அதில் அவர்கள் வர்க்கம் எளிதில் ஆதிக்கம் பெற முடியும் என்பதையும், தொடர்ந்து மேலும் அதிகவேகத்துடன் முன்னேற முடியும் என்பதையும் மக்கா வர்த்தகர்கள் உணரவில்லை. (பின்னால் இவ்வாறே நடந்து, அவர்கள் கனவிலும் காணாத செல்வச்செழிப்பை அடைந்தார்கள்). இனக்குழுத் தெய்வ நெறியைப் பொருத்தவரை, அவர்களுக்கு அதில் உண்மையான அக்கறை இல்லை; வெறும் உதட்டளவிலேயே தெய்வங்களுக்கு மதிப்பளித்தார்கள். சட்டத்தை அமல் செய்யும் அமைப்பு எதுவும் இல்லாததால், அறநெறிச் சட்டங்களையெல்லாம் மீறி நடப்பதற்கு அவர்களுக்கு பலம் இருந்தது. அதனால் தான் குரானின் மக்கா வசனங்களும் மதீனா வசனங்களும் பணக்காரர்களின் செல்வம் அவர்களுக்கு இறுதியில் உதவ முடியாது என்றும், நல்ல செயல்கள்தான் (ஏழைகளுக்கு உதவுதல், நியாயத்திலிருந்து சற்றும் வழுவாது நடத்தல் என்பவை இதில் சேர்ந்தவை) உதவ முடியும் என்றும் மீண்டும் மீண்டும் எச்சரிக்கின்றன.

இவ்வாறாக குரான் கூறுகிறது: “விசுவாசிகளே, அல்லாஹ்வுக்கு உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள். உண்மையான சாட்சியம் கூறுங்கள். மற்றவர்களிடம் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பினால் நீதியைப் புறக்கணிக்காதீர்கள். நீதியாகச் செய்யுங்கள். அது உண்மையான பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள். அவன் உங்களுடைய செய்கைகளையெல்லாம்

www.padippakam.com



நன்கறிந்தவனாயிருக்கிறான். விசுவாசம் கொண்டு நற்செயல்கள் செய்வோருக்கு அல்லாஹ் மன்னிப்பும் நற்கூலியும் வாக்களித்துள்ளான்." *(5:8,9)* மக்கா மக்களில் ஒரு பகுதியினர், தங்களுடைய முன்னோரின் மதத்தைப் புனிதமாகக் கருதி அதைக் கைவிட விரும்பாமல் முகமதுவையும் அவரது புதிய மதத்தையும் எதிர்த்தார்கள் என்பதும் உண்மையே. ஒரு மதம் அல்லது சித்தாந்தம் வரலாற்றில் தனக்குரிய பணியைச் செய்து முடித்த பின்பும் மக்கள் அதை உண்மையாகவும் தீவிரப்பற்றுடனும் பின்பற்றுகிறார்கள் என்பதும் உண்மை. இந்தக் காரணங்களுக்காக மக்கா மக்கள், குறிப்பாக, வர்த்தகர்கள், முகமது போதித்த புதிய மதத்தை எதிர்த்தார்கள். அதைப் பின்பற்றியவர்களுக்கெதிரான கொடுமைகள் படிப்படியாக அதிகரித்தன. சமூக, பொருளாதார புறக்கணிப்பு, பகிரங்க ஏளனம், வசை மொழிகள், கல்வீச்சு போன்ற எல்லா வழிகளும் பின்பற்றப்பட்டன. ஆயினும் முகமது உடல் சித்திர வதைக்கு ஆளாகவில்லை. அவரது தந்தையின் சகோதரர் அபூ தாலிப் (Abū Tālib) அவருடைய மதத்தை ஏற்கவில்லை என்றாலும் அவருக்குத் தமது பாதுகாப்பை விலக்கிக் கொள்ளவில்லை என்பதே இதற்குக் காரணம். குலக்குழுத் தலைவரின் பாதுகாப்பு இருக்கும் வரை இனக்குழு சட்டத்தின்படி அவருக்கு யாரும் தீங்கு செய்ய முடியாது. அவரைப் பின்பற்றியவர்களில் சிலருக்கு இத்தகைய பாதுகாப்பு இல்லாததால், முன்பு குறிப்பிட்டது போல, அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். முகமது இதையெல்லாம் ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கவும் பிரார்த்தனை செய்யவுமே முடிந்தது. அபூ தாலிப்*** இறந்த பிறகு அவரது பரம விரோதியான அபூ லஹப் (Abū Lahab) புதிய தலைவராக வந்ததால் முகமதுவுக்கு இருந்த பாதுகாப்பு நீங்கிவிட்டது. எனவே, முகமது தாயிஃப் (Tā'if)-க்குச் செல்லத் தீர்மானித்தார்.

முகமது, தமது விசுவாசமான பணியாளர் ஜைத் பின் ஹாரிதா (Zaid b. Hāritha)வை உடனழைத்துக் கொண்டு, தமது மனைவியையும், குழந்தைகளையும் விட்டுவிட்டு தாயிஃபுக்குச் சென்றார். மலையோரத்தில் அமைந்திருந்த பசுமையும், குளிர்ச்சியும் கொண்ட அந்த ஊரின் மக்கள் அன்பாக நடந்து கொள்வார்கள் என்றும், அவர்களில் சிலராவது தமது மதத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றும் தீர்க்கதரிசி நினைத்திருக்கக்கூடும். அங்கே அவர் பத்து நாட்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் முகமது எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. மக்காநகரின் பணக்கார வர்த்தகர்களுக்கு தாயிஃபில் சொந்த நிலம் இருந்தது. தக்கீஃப் (Thaqīf)

*** புத்தகத்தின் இறுதியில் உள்ள குறிப்பைப் பார்க்கவும். பக்கம் 281

படிப்பகம்

www.padippakam.com



இனக்குழுவினர் அந்த நிலங்களைப் பார்த்துக் கொண்டார்கள். எனவே இவ்விரு தரப்பாரின் நலன்களும் பொதுவாயிருந்தன. முகமது அங்கேயும் ஏளனத்தையும் இளக்காரத்தையும் சந்திக்க வேண்டியிருந்தது. தெருவில் திரிந்த சில சிறுவர்கள் அவர் மீது கல் வீசியதில் அவர் காயமடைந்தார். கிறிஸ்தவ அடிமை ஒருவர், அப்த் ஷம்ஸ் ('Abd Shams) குலக்குழுவைச் சேர்ந்த இரண்டு குரைஷிகளுக்குச் சொந்தமான ஒரு தோட்டத்தில் அவருக்குப் புகலிடம் கொடுத்தார். ஊர் மக்களின் கோபம் குறைந்த பிறகு அவர் அந்த ஊரிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவர் மக்காவுக்குத் திரும்பிச் சென்றார். ஆனால், தமது முதல் மனைவி கதீஜாவின் உறவினர் ஒருவரிடம் பாதுகாப்புக் கோரிய பிறகே நகருக்குள் நுழைய முடிந்தது. அவ்வாறு பாதுகாப்புப் பெறாமல் சென்றிருந்தால் யார் வேண்டுமானாலும் அவரைக் கொல்ல முயன்றிருக்கக் கூடும். இந்தக் கசப்பான அனுபவத்துக்குப் பின் முகமது தமது சொந்த ஊரில் தொடர்ந்து வசிப்பது இயலாது என்று உணர்ந்தார். தமது மக்கள் தம்முடைய மதத்தை ஏற்றுக்கொள்வதனால் வரக்கூடிய நன்மைகளை உணரவில்லையே என்பதில் அவருக்கு மிகவும் வருத்தம். தமது மதத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அரபு மக்கள் ஒரு அமைப்பாக உருவாக முடியும் என்றும் மற்றவர்கள் மீதும் ஆட்சி செலுத்த முடியும் என்றும் முகமது நன்றாகப் புரிந்துகொண்டிருந்தார் என்பது இபின் ஹிஷாம் கூறுவதிலிருந்து தெரிகிறது. அபூ தாலிப் மரணப்படுக்கையில் இருந்த போது முகமதுவுக்கும் மக்கா மக்களுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த கடைசி முயற்சி செய்தார். அவர் முகமதுவைப் பார்த்து "உமது மக்களின் தலைவர்கள் உமது காரணமாக இங்கே கூடியிருக்கிறார்கள்; அவர்களுக்கு நீர் சிறிது விட்டுக்கொடுத்தால் அவர்களும் உமக்குச் சிறிது விட்டுக்கொடுப்பார்கள்," என்று கூறினார். அதற்கு அவர், "ஐயா, அவர்கள் எனக்கு ஒரே ஒரு வாக்கு தரட்டும். அதை வைத்து நீங்கள் அரேபியரை ஆள முடியும், அந்நியர்களும் உங்களுக்குக் கீழ்ப்படிவார்கள்," என்று பதிலுரைத்தார். அப்போது அபூ ஜஹேல் (Abūa Jahel), அந்த வாக்கு என்ன என்று கூறுமாறு கேட்டார். அதற்கு முகமது கூறினார்: "அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று மட்டும் சொல்லுங்கள்; அவனைத்தவிர நீங்கள் வழிபடும் மற்றவற்றை விட்டுவிடுங்கள்." இதைக் கேட்டு, அங்கு வந்திருந்தவர்கள் கையைத் தட்டிக்கொண்டு, "எல்லாக் கடவுள்களையும் நீர் ஒன்றாக ஆக்கிவிடுவீரா, முகமது? என்ன ஒரு கருத்து!" என்றுகூறி ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.[74]

74. Ibn Hishām, *Sīra*, ed.F. Wüstenfeld *(1959-60)* பக்கம் 178.

www.padippakam.com



மக்காவாசிகள் முகமதுவின் புதிய மதத்தின் முக்கியத்துவத்தை உணரவில்லை. தங்களுடைய இனக்குழுப் பிணைப்புகளைத் தகர்த்து, எதிர்த்து நிற்க முடியாத ஒரு சக்தியாகத் தங்களை அது உருவாக்க வல்லது என்பதை அவர்கள் அறியவில்லை. அவர்கள் தொடர்ந்து அவரை எதிர்த்து வந்ததோடு அவரைப் பின்பற்றியவர்கள் மீதும் கொடுமைகளைத் தொடர்ந்து நடத்தினார்கள். இறுதியாக அவர் மக்காவைவிட்டு வெளியேறி வேறோரிடத்தில் புகலிடம் தேட எண்ணினார். தாயிஃபில் அவருக்கு வரவேற்பு இல்லை என்று ஆனபிறகு இனி அவர் புகலிடம் தேடுவதற்கு இருந்த ஒரே இடம் மதீனா.

படிப்பகம்

# 4

# இஸ்லாமும் மதீனா நிகழ்ச்சிகளும்

சென்ற அத்தியாயத்தில் நாம் பார்த்தது போல முகமது, மக்கா வில் கொடுமைகள் தாங்க முடியாமல் போன போது, அங்கிருந்து வெளியேறி, தாம் பத்திரமாகச் செயல்படக்கூடிய ஏதேனும் ஓரிடத்துக்குச் சென்றுவிட எண்ணினார். இதற்கு அவர் தெரிந் தெடுத்த இடம் மதீனா. அது முன்பு யத்ரிப் (Yathrib) என்று அழைக்கப்பட்டது. மதீனாவை இறுதியாகத் தெரிந்தெடுப் பதற்கு முன் அவர் தமது சீடர்களின் குழு ஒன்றை அபிஸீனியா வுக்கு அனுப்பிவைத்தார். அந்தக்குழுவில் பதினொரு ஆண்களும் நான்கு பெண்களும் இருந்ததாகத் தபரி (Tabari) தெரிவிக்கிறார்.[1] நல்ல பொருள் வசதிபடைத்த வர்த்தகர் உத்மான் பின் அஃப்ஃபான் ('Uthman b. 'Affān), அவரது மனைவியும் தீர்க்கதரிசியின் மகளுமான ருகையா (Ruqayya) ஆகியோர் அந்தக் குழுவில் இருந்தார்கள். அபி ஸீனியா ஒரு கிறிஸ்தவ நாடு (அங்கு பின்பற்றப்பட்டது மனாஃபிஸைட் 'Monophysite' கிறிஸ்தவம்). அது ரோமப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் இருந்தது. முகமது தமது சீடர்கள் சிலரை அங்கு அனுப்பி வைத்ததற்குப் பல காரணங்கள் இருந்திருக்கக்கூடும். மக்காவின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் ரோமானியர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள அவர் முயன் றிருக்கலாம். ஆனால் அது, அவரது நோக்கத்துக்கே பாதகமான விளைவை ஏற்படுத்தக் கூடியது. ரோமானியர்கள் அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி அரேபியர்களைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கக்கூடும். இதை உணர்ந்து முகமது அந்த எண்ணத்தைக் கைவிட்டிருக்கலாம். அல்லது ரோமானியர்களிட மிருந்து சாதகமான பதில் கிடைக்காமலிருந்திருக்கலாம். ஏனென் றால், அவர்களுக்கும் அரேபியர்களான கஸ்ஸனிட் (Ghassanid) அரசவம்சத்துக்கும் இடையே உறவுகள் சீர்கெட்டிருந்தன. எப்படியானாலும் முகமதுவின் சீடர்கள் சிலர் அபிஸீனியா விற்கு இடம்பெயர்ந்து சென்றதன் மூலம் பயனேதும் ஏற்பட வில்லை. வேறு காரணங்களும் இருந்திருக்கலாம். மக்காவின்

1. Tārikh-e-Tabari தொகுதி 1, பக்கம் 96-7.

www.padippakam.com



வர்த்தகத்தை, பின்னர் மதீனாவிலிருந்து அழித்தது போல, அங்கிருந்து அழிப்பதற்கு அவர் திட்டமிட்டிருக்கக்கூடுமோ? அல்லது மக்கா நகர வர்த்தகர்களின் ஏகபோக உரிமையை உடைக்கும் நோக்கத்துடன், தெற்கேயிருந்து பைஜாண்டியப் பேரரசுக்கு மாற்று வர்த்தக மார்க்கம் ஒன்றை, மக்கா வர்த்தகர்களின் கைக்கு எட்டாத தூரத்தில் உருவாக்க அவர் முயன்றிருக்கக்கூடுமோ? (அவரே அனுபவம் மிக்க வர்த்தகராயிருந்தார் என்பதை நாம் அறிவோம்). அல்லது, உத்மான் பின் மஜூன் ('Utamān b Mazūn) போன்ற விரும்பத்தகாத சீடர்கள் சிலரைக் சரிக்கட்டுவது அவரது நோக்கமோ? இந்தச் சீடர் மிகவும் தீவிரமான கருத்துக்களைக் கொண்டவராக, எப்போதும் முகமதுவுடன் ஒத்துப் போகாதவராக இருந்தார். தபரி இந்த நிகழ்ச்சி பற்றி எழுதுவது:

"இது நடந்த போது (அதாவது மக்காவாசிகளின் கொடுமைகள் காரணமாக முஸ்லிம்கள் சிலர் விலகிக்கொண்ட போது) இறைத்தூதர் முஸ்லிம்களை அபிஸீனியாவுக்குச் செல்லும்படிக் கட்டளையிட்டார். அங்கே நஜாஷி (Najāshi) என்று அழைக்கப்பட்ட நல்ல மன்னர் இருந்தார். மேலும் அபிஸீனியா குரைஷியருக்கு நல்ல விற்பனைச் சந்தையாக விளங்கியது. அங்கே அவர்களுக்கு நிறைய உணவும், பாதுகாப்பும், வியாபாரமும் கிடைத்தன. இறைத்தூதர் இதைச் செய்யுமாறு அவர்களுக்கு ஆணையிட்டார். மக்காவில் கொடுமைப்படுத்தப்பட்ட போது பெரும்பாலும் அவர்கள் அங்கே சென்றார்கள். அவர்கள் பாதை தவறிப் போய் விடக்கூடும் என்று அவர் அஞ்சினார். ஆனால் அவர் அங்கேயே (அதாவது மக்காவிலேயே) இருந்தார்."[2] முஸ்லிம்கள் அபிஸீனியாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற இந்த நிகழ்ச்சிக்கு இஸ்லாமின் வரலாற்றில் அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மதீனாவுக்குச் சென்றவர்களுக்குப் பின்பு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அபிஸீனியாவுக்குச் சென்றவர்களுக்குத் தரப்படவில்லை. ஏன்? அபிஸீனியா அரேபியரல்லாத மக்களின் நாடு, கிறிஸ்தவத்தை அரசு மதமாகக் கொண்ட நாடு என்பது காரணமாயிருக்கலாம். முகமது தமது புதியமதத்தின் மூலம் அங்கு பெரும் செல்வாக்கு அடைய முடியாது. அவர் இறைத்தூதர் என்ற உயர்ந்தநிலைக்குத் தகுந்தபடி முழுமையான அல்லது பெரும்பாலும் முழுமையான செல்வாக்குக்குக் குறைந்து எதையும் ஏற்க விரும்பவில்லை. மேலும் அரேபியர்கள் ஒன்றுபட்டு, ஒரே சக்தியாக உருவாக வேண்டும் என்று முகமது விரும்பினார். அபிஸீனியாவுக்குச் சென்றுவிடுவதன் மூலம் இந்தக் குறிக்கோள்களை அடைய முடியாது. எனவே அபிஸீனியாவுக்குச் சில முஸ்லிம்கள்

2. Tabari, தொகுதி 1, 3, பக்கம் 1180 முதல், Quoted by Maxime Rodinson in *Mohammad*, (லண்டன்) பக்கம் 114.

படிப்பகம்

www.padippakam.com



சென்றது, வாய்ப்புகளைக் கண்டறிவதற்கான முயற்சியேயாகும். அந்த நாட்டில் தம்மீது நல்லெண்ணத்தை ஏற்படுத்தி, ரோமானிய கிறிஸ்தவப் பேரரசு அபாயத்தில் இருந்த அந்தச் சமயத்தில் இஸ்லாமை, கிறிஸ்தவத்தின் சகோதர மதமாக எடுத்துக்காட்டுவது அதன் நோக்கமாயிருக்கலாம் (உண்மையில் நஜாஷியிடம் இதை நிரூபிப்ப தற்காகக் குரானிலிருந்து சில வசனங்களை ஓதிக்காட்டினார்கள்) அல்லது மக்கா நகர வியாபாரிகளைப் பணியச்செய்வதற்காக மாற்று வர்த்தகமார்க்கம் ஒன்றை ஏற்படுத்தும் வாய்ப்பை ஆராய்வது அதன் நோக்கமாயிருந்திருக்கலாம்.

ஆனால் மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றது முற்றிலும் வேறுபட்ட விஷயம். மக்காவாசிகளைத் தமது வழிக்குக் கொண்டு வர முடியாமல் போன பிறகு முகமது அரேபியாவில் வேறு ஏதேனும் ஓரிடத்தைத் தமக்குத் தளமாககொண்டு மதத்தைப் பரப்புவது பற்றியும் மக்காவாசிகளைத் தமது வழிக்கு மாற்றுவதற்கு வழி காண்பது பற்றியும் சிந்தித்தார். அரேபியா முழுவதிலுமிருந்து மக்கள் மக்கா நகருக்கு வரும் யாத்திரைக் காலத்தின் போது, அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு இதற்கான வாய்ப்புகளை ஆராயத் தொடங்கினார். இவ்வாறாக எம்.ஹமீதுல்லா (M. Hamidullah) கூறுகிறார்: "யாத்திரைக் காலத்தின்போது தீர்க்கதரிசி மினா (Minā) வில் ஒவ்வொரு இனக்குழுவினர் தங்கியிருக்கும் இடங்களுக்கும் சென்று பேசுவதாகக் காண்கிறோம். தாம் இறைத்தூதர் என்பதை நம்பும்படியும், அவர்களுடைய பாதுகாப்பின் கீழ் இஸ்லாமைப் பரப்ப உதவும் படியும் அவர் ஒவ்வொரு குழுவினரையும்கேட்டுக் கொண்டார். அப்போது இருந்த இரண்டு பேரரசுகளான பைஜாண்டியம், ஸஸானிட் பேரரசு ஆகிய இரண்டின் நாடுகளையும் மிக விரைவில் அவர்கள் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவர முடியும் என்று அவர்கள் நம்பவே முடியாத வாக்குறுதியையும் கூறினார். அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் அவருக்குப் பின்னாலேயே அவரது பரம விரோதியான அவரது தந்தையின் சகோதரர் அபூ லஹப் (Abū-Lahab) சென்று, அவரது பேச்சைக்கேட்டு நடந்தால் ஏற்படக் கூடிய அபாயங்கள் குறித்து அந்த மக்களை எச்சரித்து வந்தார். தீர்க்கதரிசியின் மீதும் வசைமொழிகளை வீசினார்.[3] முகமது இவ்வாறு சுமார் பதினைந்து இனக்குழு மக்களைச் சந்தித்ததாக இபின் ஹிஷாம் (Ibn Hishām) கூறுகிறார். எங்கேயும் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆயினும் மதீனாவிலிருந்து வந்திருந்த குழுவினரைச் சந்தித்த போது பலன் கிடைத்தது. கஸ்ரஜ் (Khazraj) இனக்குழுவைச் சேர்ந்த ஆறு பேரை அவர் சந்தித்தார். அவர்களில் இரண்டு பேர் மிகுந்த ஆர்வம் காட்டினர். தீர்க்கதரிசி இந்த ஆறு பேரைச் சந்தித்தது பற்றி இபின் ஹிஷாம் பின்வருமாறு எழுதுகிறார்:

3. Muhammad Hamidullah, *Muthammad Rasulullah* (பாரீஸ், 1974) பக்கம் 54.

www.padippakam.com



அவர் அவர்களிடம் கூறினார்: 'நீங்கள் உட்கார்ந்து நான் பேசுவதைக் கேட்பீர்களா?' அவர்கள் சரியென்று சொல்லி அவருடன் அமர்ந்து கொண்டார்கள். அவர் அவர்களை அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்வதை ஏற்குமாறு கேட்டுக்கொண்டார். அவர்களிடம் இஸ்லாமைப் பற்றிக் கூறிக் குரான் வசனங்களை ஓதினார். அல்லாஹ் அவர்களை இஸ்லாமை அடையும் பாதையில் செலுத்தி விட்டார். அவர்களுடைய நாட்டிலேயே அவர்களுடன் யூதர் களும் இருந்தார்கள். யூதர்களுக்கு மதப்புத்தகங்கள் இருந்தன; அவர்கள் அறிவைப் பெற்றிருந்தார்கள்: ஆனால் அந்த அரபு மக்கள் பல தெய்வங்களை நம்புவோராகவும் விக்கிரகங்களை வணங்குவோராகவும் இருந்தார்கள். அவர்களுடைய நாட்டிலேயே அவர்களைவிட யூதர்களின் கையே மேலோங்கியிருந்தது. யூதர்களுக்கும், அரேபியர்களுக்குமிடையே தாவாக்கள் ஏற்பட்ட போதெல்லாம் யூதர்கள் சொல்லுவார்கள்: 'இப்போது ஒரு தீர்க்கதரிசி அனுப்பப்படுவார்; அவர் வரவேண்டிய சமயம் அநேகமாக வந்துவிட்டது. நாங்கள் அவரைப் பின்பற்றி அவருடைய உதவியுடன் உங்களை அழித்து விடுவோம்—ஆதும் ('Ād) இராமும் (Iram) அழிக்கப்பட்டது போல." இறைத்தூதர் அல்லாஹ்விடம் நம்பிக்கை வைக்கும்படிப் பேசியதைக் கேட்டவர்கள் ஒருவருக்கொருவர் இவ்வாறு கூறினார்கள்: 'மக்களே! புரிந்து கொள்ளுங்கள்! யூதர்கள் ஒரு தீர்க்கதரிசி வருவார் என்று பயமுறுத்தினார்களே, அவர் இவர்தான்! அவர்கள் இவரைப் பின்பற்றுவதில் நம்மை முந்திக்கொள்ளவிடக் கூடாது.' அவர் கேட்டவற்றுக்கு அவர்கள் பதில் அளித்தார்கள். அவர் மீது நம்பிக்கை வைத்து, அவர் எடுத்துக்கூறிய முஸ்லிம் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அவரிடம் கூறினார்கள்: ' நாங்கள் எங்கள் மக்களைத் துறந்து விடுகிறோம். வெறுப்பும் போட்டிப் பூசல்களும் இந்த மக்களைப் போல வேறு யாரையும் பிரித்து வைக்கவில்லை. உமது உதவியுடன் இவர்களை ஒன்றுசேர்க்க முடிந்தாலும் முடியலாம். நாங்கள் அவர்களிடம் சென்று உம்முடன் சேர்ந்து கொள்ளுமாறு அழைக்கிறோம். உமது மதத்தைப் பற்றி நீர் சொன்னதையெல்லாம் அவர்களிடம் சொல்லுகிறோம். அல்லாஹ் அவர்களை இந்த மதத்தில் ஒன்று சேர்த்தால், வேறு யாரும் உம்மைவிட அதிக சக்திவாய்ந்தவராக இருக்க முடியாது.'[4]

மேலே கூறிய வர்ணனையில் சில விவரங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, கஸ்ரஜ் இனக்குழுவைச் சேர்ந்த இந்த மதீனா மக்களை அல்லாஹ் சரியான பாதையில் செலுத்தினான்

4. Ibn Hishām, பக்கம் 286 முதல்.

www.padippakam.com



என்று இபின் ஹிஷாம் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார். இல்லை யென்றால், தங்களுக்கென்று மதப் புத்தகம் உள்ள யூதர்கள் இவர்களைத் தங்கள்பக்கம் கவர்ந்துவிடுவார்கள் என்று அவர் நினைக்கிறார். அரேபியர் தங்களுக்கென்று ஒரு மதப் புத்தகம் வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார்கள் என்பதையும், அந்நிய நாட்டில் தோன்றிய எந்த மதமும் அவர்களுக்கு ஏற்புடையது அல்ல என்பதையும் இது காட்டுகிறது. மதீனா அரேபியர், பல தெய்வ நம்பிக்கையும் விக்கிரக வழிபாடும் கொண்டவர்களாக இருந்ததால் யூதர்கள் அவர்களைவிட அனுகூலமான நிலையில் இருந்தார்கள். அரேபியர் தங்கள் நாட்டிலேயே தோன்றியதும், தங்கள் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதுமான மேலான மதம் ஒன்று வேண்டும் என்று விரும் பிக்கொண்டிருந்தார்கள்; மதப் புத்தகம் கொண்டதாக, தங்களுக்கு மேலான பண்பாட்டை அளிப்பதான மதம் ஒன்றை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாவதாக, மதீனா அரேபியர்கள் யூதர்களின் மேலாதிக்கத்தை வெறுத்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் யூதர்களின் ஆதிக்கத்தை அவர்களால் அகற்ற முடியவில்லை. இந்த ஆதிக்கம் ஓரளவுக்குப் பொருளாதாரம் சார்ந்தது. வர்த்தகமும், பேரீச்சைத் தோட்டங்களும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. மேலும் யூதர்கள், தங்களுக்கு ஒரு தீர்க்கதரிசி வருவார் என்றும் அவரது உதவியுடன், முற்காலத்தில் ஆதும் — இராமும் அழிக்கப்பட்டது போல இவர்களையும் அழித்துவிடப்போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். இவ்வாறாக, மதீனாவில் நிலையாக வாழ்ந்த அரேபியர்கள், மக்காவின் சக்திவாய்ந்த வர்த்தகர்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாகவும் உட்பூசல்களால் பிளவுபட்டவர்களாகவும் இருந்தனர். அவர்களுக்கு, சுயநலத்துக்காக முகமதுவை எதிர்ப்ப தற்குக் காரணம் எதுவும் இருக்கவில்லை. மாறாக, அவரை அவர்கள் கடவுளின் தூதர் என்று கூறிக் கொள்ளும் ஒரு அரபு தலைவராகக் கருதினார்கள். இப்படிப்பட்ட ஒருவர் தங்களை ஒற்றுமைப்படுத்தி, யூதர்களின் ஆதிக்கத்தை ஒழிக்க உதவக்கூடும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.

இதே நிகழ்ச்சியைத் தபரியும் சில மாற்றங்களுடன் வர்ணிக்கிறார். அதில் யூதர்களிடம் அரேபியர்கள் கொண்டிருந்த பயம் மேலும் தெளிவாகப் புலப்படுகிறது. அவர் கூறுகிறார்:

> இறைத்தூதர் கஸ்ரஜ் மக்களிடம் இஸ்லாமை போதித்த போது அவர்கள், (நாம் முகமதுவின் சொற்படி இஸ்லாமை ஏற்கா விட்டால்) யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று நினைத்தார்கள். யூதர்கள் நமது நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, ஏதேனும் தாவா வரும் போதெல்லாம், எங்களுக்கு

www.padippakam.com



ஒரு தீர்க்கதரிசி வருவார். அவரது உதவியுடன் ஆத் — இராம் மக்கள் முற்காலத்தில் அழிக்கப்பட்டது போல உங்களை அழித்து விடுவோம் என்று பயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு இந்தத் தீர்க்கதரிசியைப் பற்றித் தெரிந்தால் இவரிடம் வந்து விடுவார்கள் என்று கஸ்ரஜ் மக்கள் நினைத்தார்கள். அவர்கள் இறைத்தூதரிடம் அரேபியராகிய நமக்குள் பகையும், பூசலும் மிகுந்து நம்மை முற்றிலுமாக அழித்துவிட்டன; கடவுள் உம் மூலமாக நம்மை ஒற்றுமைப்படுத்தக்கூடும்; அப்படி அல்லாஹ் நம்மையெல்லாம் ஒற்றுமைப்படுத்திவிட்டால், எங்களுக்கு உம்மைவிட அதிக மரியாதைக்குரியவர் வேறு யாரும் இருக்க மாட்டார் என்று கூறினார்கள்.[5]

தபரி, அரேபியருக்குச் சொந்தமான நிலங்களை யூதர்கள் ஆக்கிரமித்திருந்ததாகக் கூறுகிறார்; எனவே அரேபியரின் கோபத்துக்கு ஒரு பொருளாதாரக் காரணமும் இருந்தது. மதீனாவின் வளமான நிலங்களில் பெரும் பகுதியும் யூதர்களின் வசம் இருந்ததால் இது முற்றிலும் சாத்தியமாகவே தோன்றுகிறது. எனவே மதீனா அரேபியர் முகமதுவின் தலைமையில் தாங்கள் ஒற்றுமைப்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கருதினார்கள். மதீனா யூதர்களுக்கு மக்கா வர்த்தகர்களுடன் பொருளாதாரத் தொடர்பு இருந்ததாக வும் தோன்றுகிறது. பின்னரும் அவர்கள் புதிதாக உருவாகியிருந்த முஸ்லிம் அரசை அழிப்பதற்கு மக்கா வர்த்தகர்களுடன் உடன்பாடு செய்துகொண்டார்கள். முகமதுவைச் சந்தித்த மதீனா குழுவினர் ஆறுபேரும் அடுத்த யாத்திரைக்காலத்தில் மீண்டும் அவரைச் சந் திப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிச் சென்றபின் முகமதுவைச் சந்தித்ததைப் பற்றி அங்குள்ள மக்களிடம் கூறி மேலும் சில பேரைத் தங்கள்பக்கம் சேர்த்துக் கொண்டார்கள். பேச்சுவார்த்தைகளும் ரகசியக்கூட்டங்களும் குறைந்தது இரண்டாண்டுக் காலத்துக்கு நடைபெற்றன. மதீனாவின் மற்றொரு முக்கியமான இனக்குழுவானஅவ்ஸ் (Aws) மக்களிலும் சிலர் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். கி.பி.621-இல் அவர்கள், அவ்ஸ் இனக்குழுவைச் சேர்ந்த மூன்றுபேர் உட்பட, மேலும் பலரை முகமதுவிடம் அழைத்து வந்தார்கள். இப்போது அவர்களின் எண்ணிக்கை பதின்மூன்று ஆகிவிட்டது. அவர்கள் முகமதுவின் அதிகாரத்தை ஏற்கவும், அவர் விதிக்கும் அறநெறி களைப் பின்பற்றவும், பல தெய்வநம்பிக்கையை விட்டுவிடவும் ஏதேனும் ஒரு வகையில் உறுதிமொழி கொடுத்ததாகத் தெரி கிறது. முகமது, தமது உதவியாளர்களில் ஒருவரான முஸப் பின்

5 . Tabari, Vol.1, (உருது மொழிபெயர்ப்பு), முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 115.

படிப்பகம்

www.padippakam.com



உமைரை (Mus 'ab b. 'Umayr) அவர்களுடன் அனுப்பிவைத்து மதீனா மக்களுக்குக் குரானை ஓதிக்காட்டும்படியும் புதிய மதத்தைக் கற்பிக்கும்படியும் பணித்தார். மேலும் பலர் முகமதுவை ஏற்றார்கள். கி.பி. 622-இல் மக்காவுக்கருகே அக்கபா ('Aqaba) விலும் ரகசியக் கூட்டமொன்று நடைபெற்றது. மதீனாவைச் சேர்ந்த எழுபத்தைந்து பேர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். இவர்களில் மூன்று பேர் பெண்கள். இந்தக் கூட்டத்தில், "நாங்கள் உம்மவர்; நீர் எம்மவர். உமது தோழர்கள் சிலர் எங்களிடம் வந்தால், அல்லது நீரே வந்தால், நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொள்வதைப் போலவே உங்களையும் எல்லாவற்றுக்கும் எதிராகப் பாதுகாப்போம்" என்று உறுதிமொழி கூறப்பட்டது. இவ்வாறாக முகமது மதீனாவுக்குச் சென்றுவிடுவதற்கு வழி அமைக்கப்பட்டது.

இப்போது மதீனாவில் மேலும் என்ன நடந்தது என்பதைப் பார்ப்பதற்கு முன், மக்காவில் ஏற்பட்டிருந்த சீர்குலைவைப் பரிசீலனை செய்து அங்குள்ள சமூகப்பின்னணியை மேலும் நன்றாகப் புரிந்து கொள்வோம். அந்நகரின் சமூக, பொருளாதாரப் பின்னணி பற்றி இங்கு தரப்படும் விவரங்கள் மாண்ட்காமரி வாட் எழுதிய "முகமது — தீர்க்கதரிசியும் ராஜீய நிபுணரும்" (Muhammad - Prophet and Statesman) என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. மதீனாவில் நிலைமை மக்காவில் இருந்ததற்கு முற்றிலும் வேறாக இருந்தது. மக்காவிலும் அதைச்சுற்றிய இடங்களிலும் விவசாயம் நடத்த முடியாது; ஒட்டகம் மேய்ப்பதுதான் முடியும். எனவே, அந்த நகரின் வாழ்வு வர்த்தகத்தையே நம்பியிருந்தது. ஆனால் மக்காவிலிருந்து 250 மைல் வடக்கே அமைந்திருந்த மதீனா, இருபது சதுரமைலுக்கு மேல் பரப்புள்ள ஒரு பாலைவனச்சோலையாகும். பேரீச்சை வளர்ப்பதும், தானியங்கள் பயிர் செய்வதும் அங்குள்ள மக்களின் வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரங்களாக இருந்தன. அங்கேயும் ஓரளவுக்கு வர்த்தகம் இருந்தது. அந்தப் பகுதியில் சந்தை ஒன்று இருந்தது. அந்தப் பகுதியில் கைனுகா (Qaynuqa') என்ற குலக்குழுவைச் சேர்ந்த யூதர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் வர்த்தகம் மட்டுமின்றி தங்க வேலையும், ஆயுதங்களும், கவசங்களும் செய்யும் வேலையும் செய்து வந்தார்கள். ஸிரியாவுடன் சிறிதளவு வர்த்தகம் நடந்திருக்கலாம்; ஆனால் மக்கா நகரவாசிகள் நடத்திய அளவுக்கு இல்லை. குலக்குழுக்கள் என்ற முறையில் பதினொரு குழுக்களும், பல சிறிய குழுக்களும் இருந்தன. முக்கிய குழுக்களில் மூன்று, யூதமதத்தைப் பின்பற்றின. இவர்கள் அகதிகளாக வந்த யூதர்களின் பரம்பரையில் வந்தவர்களா அல்லது அங்கேயே உள்ளவர்களா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும் யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையே திருமண உறவுகள் இருந்ததாகத் தெரிகிறது. பொதுவான வாழ்க்கை முறையில் யூதர்களுக்கும் அரேபியருக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை.

www.padippakam.com



ஒரு காலத்தில் யூதர்கள் மதீனாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந் தார்கள். பழைய அரபு மக்கள் இவர்களைச் சார்ந்து இருந்தார்கள். மதீனாவில் விவசாயத்தை வளர்த்தவர்கள் யூதர்களாகவே இருக்கலாம்; அரேபியாவின் பகுதிகளிலும் அவர்கள் விவசாயத்தை வளர்த்தார்கள்.

மதீனாவின் எட்டு முக்கிய அரபு குலக்குழுக்கள், அங்கு யூதர்களின் ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு குடியமர்ந்த குடும்பங்களின் பரம்பரையில் வந்தவை. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவர்கள் யூதர் களிடமிருந்து சுதந்திரம் பெற்று அதிகபலம் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். ஆயினும், அல்-நதீர் (al - Nadir), குரைஜாவின் (Qurayza) குலக்குழுக்களைச் சேர்ந்த யூதர்கள், பாலைவனச்சோலையின் தென் திசையில் மேடான இடங்களில் இருந்த வளமான நிலங்களில் சில வற்றைத் தங்கள் வசமே வைத்திருந்தார்கள். சிறிய அரபு குழுக்களை விட உயர்ந்த நிலையில் அவர்கள் இருந்தார்கள். இந்த அரபு குழுக்கள் முக்கியமாக அவ்ஸ் மனாத்(Aws - Manāt) குலக்குழுவைச் சேர்ந்தவை. இந்த மக்கள் யூதர் குடியிருப்புகளின் இடையே கலந்து, அல்லது அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகே வசித்தார்கள். யூதக்குழுக்கள் அரபுக் குழுக்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு, சிறிய பங்காளிகள் என்ற அளவிலேயே இருக்க வேண்டியிருந்தது. மதீனா நெருக்கமாக அமைந்த நகராக இல்லாமல், பேரீச்சைத் தோட்டங் களுக்கும் தானியவயல்களுக்கும் இடையே பல்வேறு குடியிருப்பு களாக அமைந்திருந்தது. மதீனாவில் நிறைய கோட்டை அமைப்புகள் இருந்தன. தாக்குதல் நடந்தால் இந்தச் சிறிய கோட்டைகளுக்குள் சென்று பாதுகாப்புத் தேடிக் கொள்வார்கள்.[6] மதீனாவில் ஏன் இத்தனை கோட்டைகள் இருந்தன?

இரத்தப்பழிப்பகை முறையினால் பரந்த பாலைவனத்தில் அதிக அழிவுக்கு இடம் ஏற்படுவதில்லை. பகைவர்களுக்கிடையே தொடர்பு ஏற்படுவதற்கு அங்கு வாய்ப்புகள் குறைவு. ஆனால் மதீனா போன்ற ஒரு பாலைவனச்சோலையில் பகைகொண்ட குழுக்களினிடையே அடிக்கடி தொடர்புகள் ஏற்பட்டதால் நாச விளைவுகள் அதிகமாயிருந்தன. அதனால்தான் மதீனாவில் பாதுகாப்புக் கோட்டைகள் அமைக்கப்பட்டன. மதீனாவுக்கு முகமது வருவதற்கு முன்னால் அங்கு பல்வேறு குழுக்களிடையேயும் அடிக்கடி சண்டை களும், தேவையற்ற ரத்த இழப்பும் நடந்து வந்தன. பெரும் பாலான வன்முறைகளுக்குக் காரணம் வரம்புக்குட்பட்ட ஆதார வளங் களைச் சார்ந்து வாழும் மக்கள்தொகை பெருகி வந்ததேயாகும். வேறு காரணங்களும் இருந்தன. பலவீனமான அண்டை அயலாரின்

6. W.Montgomery, Watt, *Muhammad-Prophet and Statesman*, (லண்டன், 1961) பக்கம் 84-5.

www.padippakam.com



நிலங்களைத் தங்கள் குலக்குழுவுக்குக் கைப்பற்றிக்கொள்வது சில சண்டைகளின் நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் தனித்தனிக் குலக்குழுக்களிடையே நடந்துவந்த சண்டைகள் நாளடைவில் விரிவடைந்து பெரும்பாலான குழுக்கள் சண்டைகளில் கலந்து கொண்டன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக 618ஆம் ஆண்டில் நடந்த புஆத் (Bu āth) சண்டையில் மதீனாவில் உள்ள குலக்குழுக் களில் அநேகமாக எல்லாக் குழுக்களும் கலந்துகொண்டன. யூதர் இனக்குழுக்களும் அரபுகுழுக்களில் ஏதாவது ஒன்றின் நேசக்குழுவாக இந்தச் சண்டையில் ஈடுபட்டன. இதில் மிகுந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இருதரப்பினரும் சண்டையினால் பலமிழந்து போகவே சண்டை நின்றது; ஆனால் சமாதான உடன் பாடு ஏற்படவில்லை. மதீனா நகரமே பதற்ற நிலையில் இருந்தது. மனிதர்கள் இறந்தது மட்டுமின்றி, பொருள்களும் தீர்ந்துபோயின. நிலத்தில் சாகுபடி செய்து உயிர்வாழ்வதற்கு வேண்டிய விளை பொருள்களை எடுப்பதற்கு, சமாதானம் இன்றியமையாததாயிற்று. மக்காவில் வெளிநாட்டு வர்த்தகம், வளர வளர, பல்வேறு இனக் குழுக்களும் தங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக்கொள்வ தற்குக் கூட்டணி உடன்பாடுகள் செய்து கொண்டன. (அஹ்லாஃப் - Ahlāf - இனக்குழுவும் முத்தையபூன் Mutayya būn - இனக்குழுவும் மக்கா வில் சமாதானம் செய்து கொண்டன). ஆனால் மதீனாவில் இரண்டு முக்கிய இனக்குழுக்களும் ஒன்றையொன்று கடுமையாக எதிர்த்துச் சண்டையிட்டு வந்தன. மக்காவில் இருந்ததது போல மதீனாவில் வர்த்தகம் பெரும் அளவில் இல்லாததனால், இனக்குழுப் பிணைப்புகள் அதிக வலுவாக இருந்தன. இரத்த உறவுக்கு மக்காவில் இருந்ததை விட அதிகமதிப்பு அளிக்கப்பட்டது. வீரம், வலிமை, இனக்குழு வின் கௌரவம் போன்ற எண்ணங்களால் நீண்டகாலம் சண்டைகள் தொடர்ந்து நடந்து இருதரப்பினரும் வலுவிழந்து சோர்ந்து போனார்கள். அந்த நிலையில் அவர்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவைப் பெற்ற நடுவர் ஒருவர் தேவைப்பட்டார்.

மதீனாவில் தனிநபர் உரிமைமுறை முக்கியமாக இல்லாவிடினும் ஒரே இடத்தில் நிலைத்து வாழும் வாழ்க்கை முறை, இனக்குழு வாழ்க்கை முறைக்கு அதிகமாகப் பொருந்தி வரவில்லை. ஏற்கெனவே குறிப்பிட்டபடி சிறியபகுதியில் வாழும் மக்களிடையே இரத்தப் பகைச் சண்டைகளால் மிகுந்த சேதம் ஏற்பட்டது. மேலும், பாது காப்புக்காக அமைக்கப்பட்ட கோட்டைகளுக்குச் செலவு அதிகம் பிடித்ததால், உயிர் வாழ்வதற்குப் போதுமானது என்ற அளவிலேயே இருந்த பொருளாதாரத்துக்கு அது கூடுதல் சுமையாயிற்று. தவிரவும், வளமான நிலங்களில் பெரும்பகுதியும் யூதர்கள் வசம் இருந்தது; அங்கு நடைபெற்ற சிறிதளவு வர்த்தகமும் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இந்த நிலைமையில் அரேபியர்,

www.padippakam.com



தாங்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்றால் தங்களுக்குள் ஒற்றுமை அவசியம் என்பதை உணர்ந்தனர். மக்காவின் அரபு வர்த்தகர்கள் பெருவாழ்வு வாழ்வதைப் பார்த்து இந்த உணர்வு மேலும் உறுதியாகியிருக்கக்கூடும். எனவே தங்களிடையே சமரசத் தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு எல்லாத் தரப்பினரின் மரியாதையையும் விசுவாசத்தையும் பெற்ற தலைவர் ஒருவர் கிடைப்பாரா என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மதீனாவில் உள்ள அரேபியரிடையே இத்தகைய தலைவர் யாரும் இல்லை. கஸ்ரஜ் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அப்த் அல்லா பின் உபய் ('Abd Allāh b. Ubayy), புஆத் சண்டையில் நடுநிலைமை வகித்திருந்தார். அவர் அத்தகைய தலைவராக வர வாய்ப்பு இருந்தது. முகமது வராமலிருந்திருந்தால் ஒருவேளை அவர் மன்னராகியிருக்கக்கூடும். ஆயினும் இது சந்தேகத்துக்கிட மானதே. இரண்டு போட்டி இனக்குழுக்களில் ஒன்றைச் சேர்ந்தவர் அவர். எனவே அவர் தமது குழுவுக்குப் பாரபட்சமாக இருக்கிறார் என்ற சந்தேகம் எப்போதும் எழக்கூடும். ஆனால் அவர் தலைவ ராக வர விரும்பினார். முகமதுவின் வருகையினால் தமது எண்ணம் நிறைவேறாமல் போனதால் அவர் முகமதுவிடம் வெறுப்பே கொண்டிருந்தார். தமது ஆசையை இவர் ஒரு போதும் மறக்கவில்லை. முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்குமிடையில் நடுநிலைமையைப் பின்பற்ற முயன்றார். அதனால் அவர் போலி வேடதாரி என்ற பெயரைப் பெற்றார்.

அக்கபாவில் ('Aqaba) நடந்த ரகசியக்கூட்டத்தில் (ஜூலை, கி.பி. 622) பாதுகாப்பு உறுதிமொழி அளிக்கப்பட்ட பிறகு முகமது தமது சீடர்களை மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட ஊக்கு வித்தார். அவர்கள் சிறுசிறு குழுக்களாக ஓசைப்படாமல் மக்காவை விட்டுச் சென்றனர். இறுதியாக சுமார் எழுபதுபேர் வெளியேறி மதீனாவில் புகலடைந்தார்கள். மக்காவில் மிஞ்சியிருந்த முஸ்லிம்கள் முகமது, அபூபக்கர், அலீ ஆகியோரும் அவர்களது குடும்பத்தினர் சிலருமே என்று தோன்றுகிறது. இவர்களைத் தவிர, மதீனாவுக்குப் பயணம் மேற்கொள்ள முடியாதவர்களாக அல்லது விரும்பாத வர்களாக மற்றும் சிலரும் இருந்தார்கள். தமது சீடர்களைத் தமக்கு முன்பே அனுப்பி வைப்பதன் மூலம், தாயிஃபில் ஏற்பட்டது போன்ற தோல்வி மீண்டும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முகமது விரும்பினார். ஆயினும் மதீனாவில் இருந்த நிலைமையில் நடுநிலையான தலைவர் ஒருவர் தேவையாக இருந்ததால், அதற்குத் தகுதியான முகமதுவும் அவரது சீடர்களும் மதீனாவுக்கு வருவது வரவேற்கப்பட்டது. அந்த ஆண்டு செப்டம்பர் மத்தியில் முகமது புறப்படுவதற்குத் தயாராயிருந்தார். மக்காவாசிகளுக்கு இது எப்படியோ தெரிந்து போய் அவரைக் கொன்றுவிடச் சதி செய்ததாகக் கூறப்படுகிறது.

www.padippakam.com



ஒவ்வொரு இனக்குழுவிலிருந்தும் ஒரு இளைஞர் தெரிந்தெடுக்கப் பட்டு அவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் அவரது உடலில் வாளால் குத்திக் கொன்றுவிட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. அவரது இரத்தத்தைச் சிந்திய பழி தனிப்பட்ட முறையில் யாருக்கும் ஏற் பட்டு அதன் விளைவுகளுக்கு ஆளாகாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு. இபின் இஸ்ஹாக் (Ibn Ishaq) தமது புத்தகத்தில் இதைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். எனவே, மக்காவுக்கும் மதீனா வுக்கும் இடையே முகமதுவின் உயிருக்கு அபாயம் நிச்சயமாக இருந்தது. தமது நம்பிக்கைக்குரிய தோழர் அபூபக்கருடன் அவர் மூன்று நாட்கள் மக்காவுக்கருகே ஒரு குகையில் ஒளிந்திருந்துவிட்டு மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஒரு வழிகாட்டியின் உதவி யுடன் வழக்கமான பாதைகளை விட்டு, பழக்கமில்லாத பாதைகளில் பயணம் செய்தார்கள். கடைசியாக கி.பி.622 செப்டம்பர் 24ஆம் தேதி அவர்கள் மதீனா பாலைவனச்சோலையின் விளிம்பில் அமைந் திருந்த குபா (Qubā) குடியிருப்புக்குப் போய்ச்சேர்ந்தார்கள். பயணம் பத்திரமாக நிறைவேறியது.

அரேபியர்கள் அதுவரையில் தங்களுக்கென ஒரு ஆண்டுக் கணக்கீடுமுறையை உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தபரி, ஜாஹிலிய்யா (Jāhiliya) கவிஞர்கள் சிலரை உதாரணமாக எடுத்துக்காட்டி, தேதிகளைக் கணக்கிடுவதில் பொதுவானமுறை எதுவும் இருக்கவில்லை என்று கூறுகிறார். இனக்குழு மக்கள் ஏதா வது முக்கிய நிகழ்ச்சியை தொடக்கமாக வைத்து ஆண்டுகளைக் கணக்கிடுவது வழக்கம். ஆனால் இந்த தொடக்க நிகழ்ச்சி ஒவ் வொரு இனக்குழுவிலும் வெவ்வேறாக இருக்கும். மக்காவின் குரைஷ் மக்கள் அம் அல்-ஃபீல் (யானை ஆண்டு) என்ற ஆண்டி லிருந்து, அதாவது அப்ரஹா, மக்கா மீது தாக்குதல் நடத்திய ஆண்டிலிருந்து தேதி கணக்கீடுத் தொடங்கியிருந்ததாகத் தபரி கூறுகிறார்.[7] ஒரு பொதுவான தேதிக் கணக்குமுறை இல்லை என்றால் மக்காவின் வர்த்தக நடைமுறைகளில் குழப்பம்தான் ஏற்படும். முஸ்லிம்கள் தங்களுக்கென பொதுவான ஆண்டுக் கணக்குமுறை தேவை என்று கருதிய போது, கி.பி. 622 ஜூலை 16ஆம் தேதியை ஆண்டுத் தொடக்க நாளாக வைத்துக்கொண்டார்கள். அந்த நாளில்தான் முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புறப் பட்டுச் செல்லத் தொடங்கினார்கள். இந்த ஆண்டுமுறையில் தேதிகள் சந்திரமான அடிப்படையில் கணக்கிடப்பட்டன.

முகமது மதீனாவில் மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டார். தாம் பாரபட்சமாக இருப்பதாகத் தோன்றக்கூடிய எதையும் செய்ய

7. Tabari, Vol. 1 (உருது மொழிபெயர்ப்பு) முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 142-3.

www.padippakam.com



மாட்டார். மேலும், மதீனாவில் உள்ள அரேபியர்கள் கூட அவரை இறைத்தூதராகவோ தலைவராகவோ முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளவில்லை. முகமது இரண்டு, மூன்று நாட்கள் குபாவிலேயே தங்கியிருந்தார். மதீனாவில் உள்ள நிலைமையை மதிப்பிடுவதற் காக இவ்வாறு செய்திருக்கலாம். ஆனால் அங்கேயே தொடர்ந்து தங்கியிருக்க அவர் விரும்பவில்லை. ஏனென்றால் அருகில் பலம் வாய்ந்த இரண்டு யூதர் குலக்குழுக்களும் அவர்களின் கூட்டாளி களான அரேபியர்களும் வசித்து வந்தார்கள். இந்த அரேபியர்கள் முகமதுவுக்கு அழைப்பு விடுப்பதிலோ, அவருக்குப் பாதுகாப்புத் தருவதாக உறுதிமொழி அளிப்பதிலோ கலந்துகொள்ளவில்லை. அவர்களுக்கருகே வசிப்பது தம்மை எப்போதும் ஒரு பலவீனமான நிலையில் வைக்கும் என்று அவர் நினைத்திருக்கலாம். இறுதி யாக அவர் நஜ்ஜர் (Najjar) குலக்குழுவுக்குச் சொந்தமான ஒரு நிலத் தைத் தெரிந்தெடுத்தார். நிறைய மக்களைக்கொண்ட குலக்குழு அது. அந்த நிலம் குலக்குழு முழுவதற்கும் பொதுவில் சொந்த மானதா அல்லது சில வரலாற்று ஆதாரங்களில் காணப்படுவது போல, குலக்குழுவைச் சேர்ந்த இரண்டு அநாதைகளுக்குச் சொந்த மானதா என்பது தபரியின் புத்தகத்திலிருந்து தெளிவாகத் தெரிய வில்லை. மதீனாவில் பொதுச் சொத்துரிமை, தனியார் சொத்துரிமை ஆகிய இரண்டுமே வழக்கத்தில் இருந்தன. ஆனால் முன்னது மறைந்து கொண்டிருந்தது. நிலத்துக்கு விலை கொடுக்க முன்வந்த தாகவும், ஆனால் நஜ்ஜர் குலக்குழுமக்கள் அதை ஏற்க மறுத்து விட்டதாகவும் தபரி கூறுகிறார். [8] அது தரிசுநிலம். ஒரு வேளை ஒரு பகுதியில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருக்கலாம். சில மரக் கூட்டங்களும் பேரீச்சை மரங்களும் இருந்தன. இவையெல்லாம் அகற்றப்பட்டு கட்டிடவேலை தொடங்கியது. வெயிலில் காய வைக்கப்பட்ட செங்கற்கள், சிலகற்கள், களிமண், பேரீச்சை மரக் கட்டைகள் ஆகியவை கட்டிடத்தில் பயன்படுத்தப்பட்டன. தீர்க்க தரிசியின் தோழர்கள் அனைவரும் கட்டிடவேலையில் பங்கு கொண்டார்கள். தீர்க்கதரிசியும் வேலை செய்தார். அந்தக் கட்டிடம் தான் முதல் மசூதி என்று முஸ்லிம் மரபில் கருதப்படுகிறது. இதைக் குறிக்கும் சொல் நபாட்டியன் (Nabataean) மற்றும் ஸிரியன் (Syrian) வடிவில் 'மஸ்ஜிதா' (masgeda) என்று வழங்கப்படுகிறது. மக்கள் கீழே விழுந்து வணங்குகிற இடம் அதாவது வழிபாடுசெய்யும் இடம் என்பது இதன் பொருள். அந்தக் கட்டிடத்தில் நீண்ட சதுர வடிவில் பெரியமுற்றம் ஒன்று இருந்தது. கிழக்குச் சுவர்களை யொட்டினாற்போல், தீர்க்கதரிசியின் இரண்டு மனைவியருக்கு மாக இரண்டு அறைகள் கட்டப்பட்டன. (தீர்க்கதரிசி, மதீனாவில்

8. பார்க்க: Tabari, தொகுதி 1 பக்கம் 146; மேலும் பார்க்க: M. Watt, *Muhammad* பக்கம் 92.

www.padippakam.com



அபூபக்கரின் இளம் புதல்வி ஆயிஷாவைத் (Ā'isha) திருமணம் செய்து கொண்டார்). அந்த மசூதியின் முற்றம் எல்லா நடவடிக்கைகளுக்கும் மையமாயிற்று; முகமது தமது நேரத்தில் பெரும்பகுதியை அங்கேயே செலவிட்டார். அங்குதான் அவர் தூதர்களையும் தூதுக்குழுக்களையும் சந்தித்தார். சமுதாய விவகாரங்களைக் கவனிப்பதற்கும் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கும் அதுவே இடமாயிருந்தது. போர்க் கைதிகளை அடைத்து வைப்பதற்கும், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் கூட அந்த இடம் பயன்படுத்தப் பட்டது. முகமதுவின் ஏழைத்தோழர்கள் இரவில் அங்கே உறங்கினார்கள். தொழுகைக்கூட்டங்களும் அங்கே நடைபெற்றன. சுருக்கமாகச் சொன்னால் மதீனாவில் புதிதாக உருவாகி வந்த அரசின் முதலாவது பொதுக்கட்டிடமாக அது விளங்கியது. அங்கே கட்டுமானத்துக்கு வேண்டிய ஆதாரப்பொருள்கள் குறைவாகவே இருந்ததனால் அந்தக் கட்டிடம் மிகவும் சாதாரணமுறையிலேயே அமைந்திருந்தது. (முஸ்லிம்கள் வெளிநாடுகளை வென்று பெருஞ் செல்வம் திரட்டிய பிறகு அரண்மனைபோன்ற வீடுகளைக் கட்டினார்கள். இதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்).

முகமது பெரும் எண்ணிக்கையில் தமது தோழர்களுடன் மதீனாவுக்கு வந்த பிறகு அவர்களின் உணவுக்கும் வசிக்க இடத்துக்கும் ஏதாவது செய்ய வேண்டியதாயிற்று. ஏனென்றால் அவர்களில் அனைவருமே வசதிபடைத்தவர்களல்ல. முகமது தம்மளவில் மிகவும் எளிமையாக வாழ்ந்தார்; பலசமயம் உணவு இல்லாமலே இருந்துவிடுவார். பலநாட்களில் அவரும் அவரது குடும்பத்தினரும் உண்பதற்குப் பேரீச்சம் பழங்களும் தண்ணீரும் மட்டுமே கிடைத்தன. குளிர்காலத்தில் கதகதப்பாயிருக்க நெருப்புக்கு விறகு கூடப் பல நாட்களில் கிடைக்கவில்லை. முகமதுவின் சீடர்களும் இவ்வாறே கடினவாழ்க்கை வாழ வேண்டியிருந்தது. மதீனாவில் உள்ள தமது சீடர்கள் (இவர்கள் அன்ஸார்கள் (Ansārs - உதவுவோர்) என்று அழைக்கப்பட்டார்கள்) ஒவ்வொருவரும் மக்காவிலிருந்து வந்த ஒரு முஸ்லிமைத் தமது சகோதரராக ஏற்றுத் தம்முடன் வைத்துக் கொண்டு உணவளிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இதன்படி யாரை, யார் தம்முடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை, அவரவர்களின் அந்தஸ்தைக் கருத்தில்கொண்டு, தீர்க்கதரிசியே முடிவு செய்தார். கொள்கையளவில் விசுவாசிகள் ஒவ்வொருவரும் கடவுளின் முன் சமமானவர்களே என்கிறது குரான். "உங்களில் மிகவும் பயபக்தியுடையவர் யாரோ, அவரே இறைவனுக்கு மிகவும் மரியாதைக்குரியவராவார்." [9] என்றாலும், செயல்முறையில் சமத்துவம் சாத்தியமாகவில்லை. மக்கள் அந்தஸ்து உணர்வு உள்ளவர்களாக இருந்தனர்; காலம் போகப்போக இந்த மனப்பான்மை

9. குரான், 13:49

www.padippakam.com



வளர்ந்துகொண்டே சென்றது. எனவே இஸ்லாத்தில் சமத்துவம் என்று பெரிதும் பேசப்படுவது நடைமுறையில் ஒரு போதும் செயலுக்கு வரவில்லை. (தொழுகைக்கூட்டங்களில் மட்டுமே அந்தஸ்தைக் கருதாமல் எல்லோரும் ஒரே வரிசையில் நின்றார்கள். சமூகத்தில் குறைவான அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு இது பெரிய ஆறுதல் அல்ல). அப்போதைய சமூகத்தில் உற்பத்திச் சக்திகளின் சமன் பாட்டைப் பார்க்கும் போது அப்படிப்பட்ட சமத்துவம் சாத்தியமா யிருந்திராது. பல்வேறு சோஷலிச நாடுகளின் சமீபகால அனுபவங்கள், கொள்கைகளும் சித்தாந்தங்களும் எப்படியிருந்தபோதிலும்; பற்றாக் குறை அதிகமாக உள்ள ஒரு சமூகத்தில் கண்டிப்பான சமத்துவம் சாத்தியமில்லை என்பதையே நிரூபிக்கின்றன.

சகோதர உறவுடன் பழகியது மக்காவிலிருந்து வந்தவர்களுக்கு நன்மை அளித்தது. ஆயினும் அவர்கள் பெரும்பாலும் அன்ஸார் களுக்குப் பாரமாக இல்லாமல், அவர்களுடன் வயல்களில் வேலை செய்தார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள்:

> உமர் தமது மதீனா சகோதரரிடம் சொன்னார்: 'உமது தோட் டத்துக்கு தண்ணீர் பாய்ச்ச நான் ஒருநாள் வேலை செய்கிறேன்; நீர் தீர்க்கதரிசியுடன் கூட இருந்து அன்று நடந்ததையெல்லாம் மாலையில் எனக்குக் கூறுவீர்: புதிதாக இறக்கப்பட்ட குரான் வசனங்கள், அரசியல், சமூக தீர்மானங்கள், இன்னும் இவை போன்றவை. மறுநாள் நான் அவரிடம் போகிறேன்; நீர் வயலில் வேலை செய்வீர்.' அப்த் அர்-ரஹ்மான் இபின் அவுஃபிடம் ('Abd ar-Rahman ibn 'Auf) அவரை ஆதரித்தவர் கூறினார்: 'இது என் னுடைய சொத்து, இதில் பாதி உமக்கு உரியது; எனக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள், உமக்குப் பிடித்த ஒருத்தியை நீர் தேர்ந்தெடுப்பீர்; அவளை நான் விவாகரத்து செய்துவிடுகிறேன், நீர் அவளை மணந்து கொள்ளும்.' ஆனால் அவர் இவ்வாறு பதிலுரைத்தார்: 'கடவுள் உமது சொத்தும் உமது குடும்பமும் உமக்கே இருக்க ஆசீர்வதிக்கட்டும். எனக்கு சந்தைக்குப் போகும் வழியை மட்டும் காட்டுவீர்.' அவர் சந்தையில் கடனுக்கு ஏதோ பொருளை வாங்கி உடனே விற்றார்; இவ்வாறு பலமுறை செய்தார். மாலையில் தாம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்த பின் அவரது உணவுக்கு வேண்டிய பணம் மிச்சமிருந்தது. சில நாட்கள் கழித்து அவர் தீர்க்கதரிசியைச் சென்று பார்த்தார். அப்போது அவர் அணிந்திருந்த புதிய, விலையுயர்ந்த ஆடை, அவர் அப்போதுதான் திருமணம் செய்துகொண்டிருப்பதைக் காட்டியது. விரைவில் அவர் ஊரிலேயே மிகப் பெரிய பணக்கார வர்த்தகர்களில் ஒருவர் ஆகிவிட்டார்...[10]

10. Hamidullah, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 62

www.padippakam.com



மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பகுதியிலிருந்து மதீனாவின் சமூக-பொருளாதார அமைப்புகள் பற்றிப் பல விஷயங்கள் தெரிய வருகின்றன. பொதுவான சொத்துமுறை (இனக்குழு அல்லது குலக்குழு முழுவதற்கும் நிலம் சொந்தமாயிருக்கும்முறை) அநேகமாக மறைந்துபோய் தனிநபர் அல்லது குடும்பத்தின் சொத்துரிமை முறை ஏற்பட்டுவிட்டதைக் காண்கிறோம். மதீனாவில் தமக்கு இருந்த கடினமான நிலைமையைச் சமாளிப்பதற்கு தீர்க்கதரிசி கம்யூன்கள் என்ற பொதுவுடைமைச் சமுதாயங்களை அமைத்திருக்கலாம். அதற்குப் பதிலாக அவர் இடம்பெயர்ந்து வந்த ஒவ்வொரு குடும்பத்தையும், மதீனாவில் உள்ள ஒரு குடும்பத்துடன் இணைத்து வைத்தார். இதுவும் கூட சொத்துரிமை உறவுகளில் ஏற்பட்டிருந்த மாறுதல்கள், கம்யூன்கள் ஏற்படுத்த முடியாத அளவுக்குச் சென்றுவிட்டன என்பதையே காட்டுகிறது. மதீனாவில் பலதார மணமும் தந்தையின் தலைமையிலான குடும்ப முறையும் நடைமுறையில் இருந்தன என்பதும் தெரிகிறது. (மதீனாவில் நீண்டகாலத்துக்கு முன்னால் தாய் குடும்பமுறை நிலவியது என்று மாண்ட்காமரி வாட் கூறி அதற்கு ஆதாரமாகச் சுற்றி வளைத்துச் சில சான்றுகளையும் குறிப்பிடுகிறார்). பொருளாதாரச் சுதந்திரம் சிறப்பாகக் கருதப்பட்டது என்பதும், உடலுழைப்பு இழிவாகக் கருதப்படவில்லை என்பதும் தெரிகிறது. தீர்க்கதரிசியின் முக்கியமான தோழர்களான அலீ, உமர் போன்றவர்களும், சில சமயங்களில் தீர்க்கதரிசியுமே கூட உடல் உழைப்புச் செய்தார்கள். திருமணம் செய்துகொள்வதும் மணவிலக்குச் செய்வதும் மிக எளிதாக இருந்தன என்பதும், சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு அடங்கிய நிலையிலேயே இருந்தார்கள் என்பதும் தெரிகின்றன. இவையெல்லாம், நாம் பின்னர் காணவிருப்பதைப் போல, குரானில் அறிவிக்கப்பட்ட சட்டங்களைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகித்துள்ளன.

மதீனாவுக்கு வந்துசேர்ந்த சில நாட்களுக்குள்ளேயே முகமது வேறு சில பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டியிருந்தது. மக்காவைப் போலவே மதீனாவிலும் ஒரு ஆட்சியாளரோ, அரசு அமைப்போ, ராணுவம், காவல்துறை, அதிகாரிகளைக் கொண்ட நிர்வாக யந்திரம் ஆகியவையோ இல்லை. மக்காவில் இருந்த மலா (Mala'ā) என்ற ஆலோசனை சபை போன்ற அமைப்பு கூடக் கிடையாது. அங்கே ஒவ்வொரு இனக்குழுவும் தனக்குத்தானே ஒரு சட்டமாக இருந்தது. அதனால் இனக்குழுக்களிடையே சண்டைகளும் ரத்தம் சிந்தலும் நடந்துகொண்டிருந்தன. உண்மையில் அது இனக்குழு மனப்பான்மைக்கும், நிலைத்துவாழும் நகரவாழ்க்கையின் தேவைகளுக்குமிடையே நடந்த மோதல். இதனால் மதீனாவில்

www.padippakam.com



நிலைமை சீர்கெட்டு, அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்க முறையான அதிகார அமைப்பின் தேவையை மக்கள் உணரத் தொடங்கினார்கள். மேலும், நிலையாக ஓரிடத்தில் வாழும் மக்களிடையே நாடோடி இனக்குழுச் சட்டங்கள் செயல்படுவதனால் பிரச்சினைகள் உருவாகின்றன; இவற்றில் சிலவற்றை மேலே கண்டோம். எனவே மாறுபட்ட நிலைமைக்குத் தகுந்த புதிய சட்டங்களும் தேவைப்பட்டன. முகமது ஒரு தீர்க்கதரிசி என்ற முறையிலும் தலைவர் என்ற முறையிலும் இந்தத் தேவைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டிருந்தது. சவால்மிக்க இந்தப் பணிகளை அவர் நிறைவேற்றத் தொடங்கினார். முதலாவதாக, மதீனாவில் இருந்த பல்வேறு இனக்குழுக்களையும் குழுக்களையும் ஒன்றுசேர்த்து ஒரே சமுதாயமாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது சுலபமான காரியமாக இல்லை. பல்வேறு குழுக்களுக்கும் அவற்றின் நலன்களுக்கும் இடமளிப்பதற்கு பற்பல ஷரத்துகள் கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டியிருந்தது. தீர்க்கதரிசி உருவாக்கிய சமுதாயம் பல்வேறு இனக்குழுக்களையும் வேறு குழுக்களையும் கொண்ட கூட்டமைப்பாக இருந்தது. அதில் தனிநபர்கள் உறுப்பினர்களாக இருக்க இடமில்லை.

இவ்வாறு உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் பற்றி இபின் ஹிஷாம் கூறுகிறார்: "இறைத்தூதர், இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கும், உதவுவோருக்கும் இடையே ஒரு ஒப்பந்தத்தை வரைந்தார். அதில் யூதர்களும் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் (அதாவது யூதர்கள்) தங்கள் மதத்தைப் பின்பற்றவும், தங்கள் சொத்துக்களை வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களுக்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அவர்களுடைய நிபந்தனைகள் சில அனுமதிக்கப்பட்டன. ('அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான இறைவனின் பெயரால்' என்று ஒப்பந்தம் தொடங்குகிறது). இது தீர்க்கதரிசி முகமது எழுதியது. விசுவாசிகள், குரைஷ் மற்றும் யத்ரிப் (அதாவது, மதீனா) முஸ்லிம்கள் ஆகியோருக்கும் அவர்களைப் பின்பற்றுவோர், அவர்களுடன் இணைக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கும் இடையிலானது இது. யூதர்கள், முஸ்லிம்களுடன் செலவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள் - அவர்கள் சண்டையில் ஈடுபட்டிருக்கும் வரை. பனூ அவ்ஃப் (Banū 'Auf) யூதர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து ஒரே 'உம்மா' ('umma)வாக இருப்பார்கள். யூதர்களுக்கு அவர்களுடைய மதம், முஸ்லிம்களுக்கு அவர்களுடையது. (இதில் அந்தந்த நபர்களுடன் அவர்களது அடிமைகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்)....[11] ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்த ஒப்பந்தத்தில் பல ஷரத்துகள்

11. Ibn Hishām, *Sira*, தொகுதி 1, பக்கம் 2780.

www.padippakam.com



உள்ளன. மதீனாவில் உள்ள எல்லா மக்களுக்கும் அதில் வகை செய்யப்பட்டு, ஐக்கிய முன்னணி போல அமைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் சில ஷரத்துகள்: எங்களைப் பின்பற்றும் யூதர்கள், எங்களுக்குத் தீங்கிழைக்காமல், எங்களுக்கெதிராக (எந்த எதிரி களுக்கும்) உதவி அளிக்காமல் இருக்கும்வரை நாங்கள் அவர்களுக்கு உதவியும் ஆதரவும் அளிக்கவேண்டியது (பத்தி 16). யூதர்களும் முஸ்லிம்களும் இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள மக்கள் மீது தாக்குதல் எதுவும் நடந்தால் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டியது. அவர்களிடையே உண்மையான நட்பும், நல்ல ஆலோசனைகள் பரிவர்த்தனையும், நியாயமான நடத்தையும் இருக்க வேண்டும்; துரோகம் இருக்கக்கூடாது (பத்தி 37). யூதர்கள், முஸ்லிம்கள் அல்லாத 'பேகன்கள்' என்ற புறமதக்காரர்களையும் முகமது இந்த ஒப்பந்தத்தில் சேர்த்திருக்கிறார். "புறமதக்காரர் எவரும் குரைஷியர் எவருக்கும், அவரது பொருளுக்கோ உயிருக்கோ, பாதுகாப்பு அளிப்பதோ, விசுவாசிகளுக்கெதிராக அவருடன் சேருவதோ கூடாது." (பத்தி20).

இந்த ஒப்பந்தம் விசுவாசிகள் அனைவரையும் (யூதர்களும் புறமதக்காரர்களும் தவிர) கட்டுப்படுத்தும் பல பொறுப்புகளை யும் குறிப்பிடுகிறது. தங்களில் யாரேனும் கடன் பளுவால் நசுக்கப் படும் போது அவர்கள் உதவி செய்ய வேண்டும் (பத்தி 11). ஒரு விசுவாசிக்கெதிராக, விசுவாசியல்லாத ஒருவரின் தரப்பை அவர்கள் ஆதரிக்கக்கூடாது. விசுவாசியல்லாதவர்களுடன் தொடர்பு கொண்ட தற்காக விசுவாசி எவரையும் அவர்கள் கொல்லக்கூடாது. (பத்தி 14). விசுவாசிகள் அனைவரும், மிகவும் கீழ்நிலையில் உள்ளவர் உட்பட, அல்லாஹ்வின் "பாதுகாப்புக்கு" உரியவர்கள், எனவே அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் (பத்தி 15). போர் ஏற்பட்டால், விசுவாசிகள் தனிப்பட்ட முறை யில் எதிரியுடன் சமாதானம் செய்துகொள்ளக் கூடாது (பத்தி 17). அவர்களில் ஒருவர் கொல்லப்பட்டால், கொலை செய்தவருக்கும் அவருக்கு உதவி செய்தவர்களுக்கும் எதிராக ஒன்றுபட்டு சண்டை யிட வேண்டும் அல்லது ஒன்றுபட்டு அபராதத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் (பத்தி 19, 21). கேடு செய்வோர் யாருக்கும் உதவியோ, புகலிடமோ அளிக்கக்கூடாது. இவர்கள் முஹ்தித் - 'muhdith' - புதுமை செய்வோர் அதாவது பொதுவான அறநெறிக் கோட்பாடுகளை மீறுவோர் என்று குறிப்பிடப்படு கிறார்கள் (பத்தி 22). அவர்கள் தங்களுக்குள் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; தம்மிடையே உள்ள தவறிழைப் போரை அவர்கள் தண்டிக்க வேண்டும் (பத்தி 13).[12]

12. Rodinson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 153-4.

www.padippakam.com



இவ்வாறாக இந்த ஒப்பந்தம் புதிய சமுதாயத்தை உருவாக்கியது மட்டுமின்றி, அரசு அமைப்புக்கும் அஸ்திவாரம் போட்டது என்பதைக் காண்கிறோம். மக்காவிலும் மதீனாவிலும் தனிநபர் சொத்துரிமை ஏற்கெனவே உருவாகியிருந்தது. மக்காவில் சொத்துரிமை உடையவர்களின் நலன்களைப் பாதுகாக்க ஒரு சபை அமைப்பு இருந்தது, ஆனால் அது போதுமானதாயில்லை. மதீனாவில் எந்தவிதமான அதிகார அமைப்பும் இல்லை. எனவே சொத்துரிமை உடையவர்கள், மற்ற தனிநபர்கள் ஆகியோருக்கெதிராகக் குற்றங்கள் நடந்தால் அவர்களின் நலன்களைப் பாதுகாக்க எந்த அமைப்பும் இருக்கவில்லை. இந்த ஒப்பந்தம் அத்தகைய அமைப்பு ஒன்றை உருவாக்க அடிப்படை அமைக்கிறது. பலவகைகளில் இந்த ஒப்பந்தம் அரபு சமூகத்துக்குப் புரட்சிகரமான முக்கியத்துவம் உடையது. நிக்கல்ஸன் கூறுகிறார்: "....அதைப் படிப்பவர் யாரும் அதை வரைந்தவரின் அரசியல்மேதைமைபற்றி வியப்படையாமலிருக்க முடியாது. வெளித்தோற்றத்தில் எச்சரிக்கையாகச் செய்யப்படும் சீர்திருத்தம் போலக் காணப்பட்டாலும் உண்மையில் அது ஒரு புரட்சியேயாகும். முகமது, இனக்குழுக்களின் சுதந்திரத்தை வெளிப்படையாக எதிர்க்க முடியவில்லை; ஆனால் அதிகார மையத்தை இனக்குழுவிலிருந்து சமுதாயத்துக்கு மாற்றுவதன் மூலம் அவர் அதைச் செயலளவில் அழித்துவிட்டார். சமுதாயம் என்பதில் முஸ்லிம்களுடன் யூதர்களும் புறமதத்தினரும் இருந்தபோதிலும், அவரது எதிரிகள் காணத் தவறிய ஒன்றை அவர் முற்றிலுமாக உணர்ந்திருந்தார். புதிதாக அமைக்கப்படுகின்ற அரசு அமைப்பில் முஸ்லிம்கள்தான் செயல்படும் பங்காளிகளாக இருக்கிறார்கள், விரைவில் முதன்மையான பங்காளிகளாக ஆவார்கள் என்பதே அது."[13] இங்கே மாண்ட்காமரி வாட்டின் கருத்துக்களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்:

> முகமது, சமுதாயத்தின் ஆட்சியாளராக இருக்கவில்லை. இடம் பெயர்ந்து வந்தவர்கள் ஒரு குலக்குழு போலவும், முகமது அதன் தலைவராகவும் கருதப்பட்டார்கள். ஆனால் மேலும் எட்டு இனக்குழுக்களும் அவற்றின் தலைவர்களும் இருந்தார்கள். அரசியலமைப்புச் சட்டத்தை இங்கு தகுந்த ஆதாரமாக எடுத்துக் கொண்டால் அவருக்கு, மற்ற குழுத்தலைவர்களுக்கு இல்லாத இரண்டு சிறப்புகள் தரப்பட்டுள்ளன. முதலாவதாக, நாம் அரசியலமைப்புச் சட்டம் என்று குறிப்பிடும் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட மக்கள் 'விசுவாசிகள்' எனப்படுகிறார்கள். இதன் பொருள் அவர்கள் அவரை தீர்க்கதரிசியாக ஏற்கிறார்கள் என்பதாகும். எனவே அவர் மூலம் இறைவனால் வெளிப்படுத்

13. R.A. Nicholson, *A Literary History of the Arabs* (Cambridge, 1907) பக்கம் 173.

www.padippakam.com



தப்பட்டதாக அறிவிக்கப்படும் எதையும் அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தும் விதியாக ஏற்கிறார்கள் என்று ஆகிறது. அவர் மூலம் வெளிப்படுத்தப்படுவதனால் அவருக்கு ஒரு கௌரவமும், குறைந்தபட்சம் மத விஷயங்களிலாவது, சாதாரண மனிதர்களுக்கு இல்லாத ஞானம் இருப்பதாகவும் ஏற்கப்படுகிறது. வெளிப்பாடுகளில் வராத விஷயங்களில் அவரது கருத்தை ஏற்பதாக இதற்குப் பொருளாகாது. இரண்டாவதாக, ஏதாவது கருத்துவேற்றுமை ஏற்பட்டால் அதைத் தீர்ப்பதற்குக் கடவுளிடம் முகமதுவிடமும் விட்டுவிட வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.... இந்த ஆரம்ப மாதங்களில் முகமது மதீனா சமுதாயத்தில் மதத்தலைவர் என்ற அளவிலேயே இருந்திருக்க முடியும். அரசியல் விஷயங்களில் அவர் தமது குழுவின் தலைவர் மட்டுமே; வேறு பல குழுத் தலைவர்களைவிட அவர் அதிகாரம் குறைந்தவராகக் கூட இருந்திருக்கலாம்.[14]

இதிலிருந்து முகமது, தமது ஒவ்வொரு சொல்லும் கீழ்ப்படிந்து நிறைவேற்றப்பட்ட, எதிர்ப்பேச்சுக்கே இடமில்லாத, உயர்ந்த தலைவர் ஆவது மிக எளிதாயிருக்கவில்லை என்று தெரிகிறது. அவர் தமது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு, மிகப் பெரும் அளவுக்கு அதிகாரம் பெற்ற பின்பும்கூட, அவரது கருத்துக்கள் பரிசீலனை இன்றி அப்படியே ஏற்கப்படவில்லை. மத விஷயங்களில் அவர் மூலம் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டவை மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருந்தன. இனக்குழு ஜனநாயகம், அரசு இல்லாத சமூகம், என்ற மரபு மிக வலுவாக இருந்ததால் அதை உடனடியாக மாற்றிவிட முடியவில்லை. சமூகத்தில் உற்பத்திச் சக்திகளின் செயல்பாட்டின் மூலம் தனியார் சொத்துடைமை ஏற்பட்ட பிறகு அரசுயந்திரம் ஒன்று தேவை என்ற உணர்வு ஏற்பட்டு வந்தது. ஆனால் தனது வரலாற்றிலேயே அடக்குமுறை அதிகாரம் கொண்ட அரசு அமைப்பு எதையும் கண்டிராத சமூகத்தில் பேனாவின் ஒரு கோட்டின் மூலம் அதை ஏற்படுத்திவிட முடியாது. பெரும் அளவுக்குப் பொறுமையும் மக்களைப் புரிந்துகொண்டு அவர்களைத் தன்வழிக்குக் கொண்டு வந்து செயல்படும் திறனும் அதற்குத் தேவை. மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தை முகமது வரைந்திருப்பது, அவரிடம் இந்தப் பண்புகள் இருந்தன என்பதைச் சந்தேகமின்றிக் காட்டுகிறது. அவர் கடவுளின் தூதர் மட்டுமின்றி ராஜீய நிபுணராகவும் மக்களின் இயல்பறிந்து செயல்படக் கூடிய அரசியல் தலைவராகவும் இருந்தார். மதீனாவில் நிலைமையை உணர்ந்துகொண்ட பின், தமது தலைமையை வலியுறுத்த அவர் அவசரப்படவில்லை. இனக்குழுக்களுக்கும்

14. Watt, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 95-96.

www.padippakam.com



பல்வேறு மற்ற குழுக்களுக்கும் அவர் சுயாட்சி அதிகாரம் கொடுத்தார். அதே சமயம் அவை எல்லாம் ஒரு பெரிய சமுதாயமாக அமைந்து, அதில் ஒவ்வொரு உறுப்பு அமைப்பின் உரிமைகளும் கடமைகளும் வரையறை செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின்படி செயல்படுவதற்கு இணங்கச் செய்தார். மக்காவிலிருந்து வந்த தமது சீடர்களின் தலைவர் என்ற அளவில் மட்டுமே இருந்து கொண்டார். அவர் வரைந்த ஒப்பந்தம் மதீனாவில் உள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டிருந்ததால் மக்கள் அதைத் தயங்காமல் ஏற்றுக் கொண்டனர். ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக்கொண்டிருந்த பல்வேறு குழுக்களிடையே தீர்ப்புக் கூறுவதற்கு ஒரு அமைப்புத் தேவை என்ற உணர்வு ஏற்பட்டிருந்ததும் ஒப்பந்தம் ஏற்கப்படுவதற்கு ஒரு காரணமாயிருந்தது.

முகமது மதீனாவில் உடனடியாக கவனிக்க வேண்டியிருந்த பிரச்சினை, "யூதர் பிரச்சினை." யூதர்களும் அரேபியர்களைப் போலப் புதிய சமுதாயத்தில் உறுப்பினர்களாயிருந்தார்கள். எனவே முகமது அவர்களது ஆதரவையும் பெற்று, தாம் இறைத்தூதர் என்று அவர்களையும் ஏற்கச் செய்ய விரும்பினார். யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் திருப்திப்படுத்தும் பொருட்டு, முதலில் அவர் தமது சீடர்களை ஜெருசலேமின் திசையை நோக்கித் தொழுகை நடத்துமாறு உத்தரவிட்டார். யூதர்களின் பாவப்பரிகாரப் பண்டிகையான அஷூரா ('Ashūrā) நோன்பைக் கூட மதீனாவில் உள்ள முஸ்லிம்கள் அனுசரித்ததாகத் தெரிகிறது. ஆயினும், யூதர்கள் ஒரு போதும் தீர்க்கதரிசியிடம் அன்புடன் நடந்துகொள்ளவில்லை. அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர் செய்த முயற்சிகள் இறுதியில் தோல்வியே அடைந்தன. ராடின்ஸனும் இதே கருத்தைத் தெரிவிக்கிறார். அவர் கூறுகிறார்: "முகமதுவின் முயற்சிகளுக்கு யூதர்களின் பதில் மொத்தத்தில் அவர் எதிர்ப்பார்த்தது போல இல்லை." அவர் மேலும் கூறுகிறார்: "ஆனால் முகமதுவின் சீடர்கள் — யூதமதத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் நோவாவின் கட்டளைகளையும் பின்பற்றி நடந்தார்கள் என்பது மட்டுமின்றி — யூதர்களின் சடங்கு முறைகள் பலவற்றையும் கூடப் பின்பற்றத் தயாராயிருந்தார்கள். எனவே, கொள்கையளவில் இந்த இரண்டு சமுதாயங்களும் ஏன் ஒன்றாக அமைதியாக வாழ்ந்திருக்க முடியாது என்பதற்குக் காரணம் எதுவும் இல்லை. ஆனால் மதீனாவின் யூதர் இனக்குழுக்கள் அந்தப் பாலைவனச்சோலையை மொத்தமாகத் தங்களுடைய அரசியல் செல்வாக்கின் கீழ் கொண்டுவரும் எண்ணத்தை விட்டுவிடவில்லை என்று தோன்றுகிறது. எனவே முகமது செயல்பட்ட விதமும், அவருக்கு ஏற்பட்டு வந்த முக்கியத்துவமும் தங்கள் நோக்கம் நிறைவேறத் தடையாயிருக்கும் என்பதை அவர்கள் விரைவிலேயே புரிந்துகொண்டார்கள்."[15]

15. Rodinson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 160.

www.padippakam.com



மதீனாவில் யூதர்களுக்கு, குறிப்பாகப் பொருளாதாரத்தில், இருந்த ஆதிக்கம் அங்கிருந்த அரேபியர்களுக்குப் பிடிக்கவில்லையென்று வேறு சில சான்றுகளிலிருந்தும் தெரிய வருகிறது. பனூ கைனுக்கா (Banū Qaynuqū) நிகழ்ச்சி ஒரு உதாரணமாகும். அந்த யூத இனக் குழுவுக்குச் சொந்தமான சந்தைக்குள் ஒரு அரேபியப் பெண் சென்றாள். ஒரு கடைக்காரர் அவளது ஆடையைப் பிடித்து இழுத்து அவளைச் சீண்டினார்; மற்றவர்களும் அவளைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினார்கள். அவள் உதவிக்காகக் கூச்சலிட்டதைக் கேட்டு அந்த வழியே சென்ற அரேபியர் ஒருவர் கடைக்காரரைக் கொன்று விட்டார். மற்ற அரேபியரும் யூதர்களும் அங்கே கூடிவிட்டார்கள். இரு தரப்பினரும் சண்டையிடத் தொடங்கினார்கள். தீர்க்கதரிசி அங்கே வந்து அந்த நிகழ்ச்சியைக் கண்டனம் செய்தார். அதைக் கேட்டு பனூ கைனுக்கா யூதர்கள் கோபமடைந்து பேசினார்கள்: “பத்ரில் கிடைத்த வெற்றியை வைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளாதீர்கள். அவர்கள் (மக்காவாசிகள்) உங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சண்டையிடத் தெரியாதவர்கள். எங்களுடன் மோதினால் உண்மையான சண்டை எப்படியிருக்கும் என்பது தெரியும்,” என்று கூறினார்கள். அவர்கள் ஒப்பந்தத்தை மீறி நடந்தார்கள். இடம்பெயர்ந்து வந்த பின் இருபதாவது மாதத்தில் தீர்க்கதரிசியும் அவரது சீடர்களும் அவர்களைத் தாக்கினார்கள்.[16] குரானில் பல வசனங்கள், யூதர்கள், முஸ்லிம்களுடனும் அவர்களது இறைத்தூதருடனும் ஒரு போதும் ஒத்துழைக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. குரான் கூறுகிறது: “அவர்கள் (யூதர்கள்) பொய்யைச் செவிமடுப்பவர்கள். சட்டத்தில் தடை செய்யப்பட்டவற்றை உண்பவர்கள். உம்மிடம் தீர்ப்புப் பெற அவர்கள் வந்தால் அவர்களுக்கிடையே நீர் தீர்ப்பு வழங்குவீராக! அல்லது அவர்களைப் புறக்கணிப்பீராக! நீர் அவ்வாறு புறக்கணித்துவிட்டால் அவர்கள் உமக்குத் தீங்கு செய்ய முடியாது. மேலும் அவர்களிடையே நீர் தீர்ப்பளித்தால் நீதியைக் கொண்டு தீர்ப்பளிப்பீராக! அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்.”[17] மற்றுமோரிடத்தில் குரான் கூறுவது: “விசுவாசிகளே, யூதர்களையோ கிறிஸ்தவர்களையோ நீங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களாயிருப்பவர்கள். உங்களில் யாரும் அவர்களுடைய நட்பை நாடினால் அவரும் அவர்களில் ஒருவராகி விடுகிறார். அல்லாஹ் அநியாயக்காரரை நேர்வழியில் செலுத்த மாட்டான்.”[18] யூதர்கள் தம்மை ஒரு தீர்க்கதரிசியாக ஏற்கமாட்டார்கள்

16. Maulana Hakīm Abul Barakāt, *Asah al-Siyar*, பக்கம் 115.
17. குரான், அதிகாரம் 5, வசனம் 41,42.
18. மேற்படி, அதிகாரம் 5, வசனம் 51.

www.padippakam.com



என்றும் முஸ்லிம்களுடன் ஒத்துழைக்கமாட்டார்கள் என்றும் முகமதுவுக்கு நிச்சயமாகத் தெரிந்ததும் அவர் மாறிவிட்டார்.

தொழுகையின் திசை மக்காவை நோக்கியிருக்க வேண்டும் என்று முகமது மாற்றியது மிக முக்கியமான ஒரு முடிவாகும். இவ்வாறு செய்ய உறுதிகொண்டு அவர் யூதர்களிடமிருந்தும் கிறிஸ்தவர்களிடமிருந்தும் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டார். (அவர் அவர்களது மதங்களை மறுக்கவில்லை; ஆனால் தங்களுடைய மதப் புத்தகங்களில் கூறப்பட்டவற்றைத் திரித்துக் கூறியும் மீறி நடந்தும் வருகிறார்கள் என்று குற்றம் சாட்டினார். கலாசார ரீதியாகப் பார்த்தால், அரேபியர்களின் மரபுச் செல்வத்தில் அவர்கள் பெருமைப்படும்படியாக இருந்தது இஸ்ரேலிய தீர்க்கதரிசிகளின் மதம் ஒன்று மட்டுமே). மக்காவை நோக்கித் தொழுகை செய்வதன் மூலம் முகமது, பொதுவாக அரேபியாவையும், குறிப்பாக, மக்காவையும் இஸ்லாமின் கேந்திரங்களாக்க முடிவு செய்தார். இப்போது அரேபியருக்கும் அவர்களுக்கென்று ஒரு மதப் புத்தகமும், கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு மதமும் கிடைத்துவிட்டதால் அவர்கள் தலைநிமிர்ந்து நிற்க முடியும். மக்காவில் சக்தி வாய்ந்த சிலர் முகமதுவை எதிர்ப்பதனால் குற்றமில்லை. விரைவில் அவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து புதிய மதத்தைத் தழுவுவார்கள்.

முகமது தமது தீர்மானத்தைப் பின்பற்றி யூதர்களுடன் தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டு அவர்களை எதிர்த்துப் போரிட்டார். இனக்குழுக்களாகவும் குலக்குழுக்களாகவும் பிரிந்திருந்த யூதர்கள், அந்தப் பிரிவினைகளைக் கடந்து ஒன்றுபட்டிருந்த அரேபியர்களிடம் தோல்வியடைந்தார்கள். முஸ்லிம்கள், யூதர்கள் மட்டுமின்றி, மக்காவாசிகளையும், மற்ற அரபு எதிரிகளையும் தோற்கடிக்க வாய்ப்புகள் இருந்தன. ஏனென்றால், அப்போதைய காலகட்டத்தில், புதிதாக உருவாகிவந்த பொருளாதார உறவு நிலைகளுக்குத் தகுந்தபடி சமூகத்தை மாற்றியமைப்பதற்கான செயல்திட்டமாக இஸ்லாம் இருந்தது. அரபு சமூகத்தில் அரசு பற்றியோ, சட்டம் பற்றியோ கருத்து ஏதும் இல்லாத நிலையில் இஸ்லாம் அவர்களுக்கு அந்தக் கருத்துக்களை அளித்தது. முகமது சிறிது சிறிதாகத் தமது பிடியை உறுதிப்படுத்திக்கொண்டு, மதீனா மக்களின் எதிர்ப்பில்லாத தலைவர் ஆகிவிட்டார். முகமது, விவிலிய தீர்க்கதரிசிகளைப் போல, ஒரு தீர்க்கதரிசியாக இருந்ததுடன், மதீனாவில் அரசை உருவாக்க அஸ்திவாரம் அமைத்தவரும் ஆவார். இதைக் கருத்தில் கொள்வது முக்கியம், ஏனென்றால் இது சம்பந்தமாகத் தவறான கருத்துக்களுக்கு இடமேற்பட்டுள்ளது. அரசியல் தலைவராக அவர் செயல்பட்டவிதம், மதத்தலைவராக அவர் செயல்பட்ட

www.padippakam.com



விதத்துடன் முரண்படுவதாக இருந்தது. மதத்தலைவர் என்ற முறையில் அவர் சட்டத்தை விதிப்பவராக, லட்சியங்களையும் சித்தாந்தங்களையும் கண்டு தருபவராக இருந்தார். ஆனால் அரசின் தலைவர் என்ற முறையில் அவர் விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்ளவும், கூட்டணிகள் அமைத்துக் கொள்ளவும் (அவரது திருமணங்கள் சில இதைக் கருத்தில் கொண்டவை) எதிரிகளை இணங்கவைக்கச் சலுகைகள் தருவதும், அவர்களைப் பணியவைக்க உத்திகளை உருவாக்குவதும் அவசியமாயின. மக்காவிலிருந்து தமது எதிரிகளைப் பணிய வைப்பதற்காக அவர் அவர்களது வர்த்தக அணிகளைத் தாக்கினார்.

மேற்கு நாடுகளைச் சேர்ந்த பல அறிஞர்களும் எச்.ஜி. வெல்ஸ் (H.G. Wells) உள்ளிட்ட வரலாற்றாசிரியர்களும் முகமதுவின் செயல்களை மனக்கலக்கத்துடன் பார்க்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை மாதிரியாக வைத்துக்கொண்டு பார்ப்பதே இதற்குக் காரணம். கொடுமைப்படுத்தப்படும் தீர்க்கதரிசி எதிர்த்து நிற்காமல் சரணடைவதும், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டுவதும் அவர்களுக்கு முன்மாதிரியாக இருந்தன. இவையெல்லாம் அந்தந்த நிலைமைகளைப் பொறுத்த விஷயங்கள் என்பது என் கருத்து. கிறிஸ்து, நன்றாக அமைக்கப்பட்ட, பலம் வாய்ந்த ரோமப் பேரரசை எதிர்க்க வேண்டியிருந்தது. அவர் கொடுமைக்குள்ளான, சுரண்டப்பட்ட மக்களிடையே பிறந்தார். அன்பையும், தன்னைச் சரண் கொடுப்பதையும், ஆசைகளை அடக்குவதையும் போதித்தார். எனவே கருணையின் வடிவமாகக் கருதப்பட்டார்.* கிறிஸ்து, ரோமானி

* தற்காலத்தில் 'லிபரேஷன் தியாலஜி' என்ற கொள்கையைப் பின்பற்றுவோர், கிறிஸ்துவை அன்பு, சமாதானம், அஹிம்ஸை ஆகியவற்றின் உருவமாக ஒப்புக் கொள்ளவில்லை. இவர்களில் ஒருவர் கூறுகிறார்: "ஹிம்ஸை பற்றி இயேசு கொண்டிருந்த மனப்பான்மை குறித்து என்னுடைய கருத்தாக ஒரு குறிப்பைக் கூற விரும்புகிறேன். மஹாவீரர், புத்தர், காந்தி ஆகியோரைப் போலன்றி இயேசு அஹிம்ஸையைப் போதிக்கவில்லை. ஸ்நானகன் யோவானைப் போல இயேசு ஒரு தவவிரதியாக இருக்கவில்லை; மாறாக, 'பெருந்தீனிக்காரராகவும் குடியராகவும்' இருந்தார். (மார்க் 11:39) — நிச்சயமாக அவர் புலால் உண்பவராகவும் இருந்தார். அவருடைய சீடர்களிலும் சுவிசேஷகர்களிலும் ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்த தீவிரவாதிகள் இருந்தார்கள். அவர்கள் இயேசுவுடன் சேருவதற்கு முன்போ, சேர்ந்த பின்போ அஹிம்ஸையையோ, சமாதானக் கொள்கையையோ ஏற்றுக் கொண்டார்கள் என்று கூற இடமில்லை — இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பீட்டரும் மற்ற மீனவர்களும் தங்கள் மீன்பிடி தொழிலை விடாதது போலத்தான் இதுவும். (பார்க்க: யோவான் 21:1 முதல்). தீவிரவாதியல்லாத பீட்டர் கூட, தமது குருவான இயேசு கைதாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் வாளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. ஏன், இயேசுவே கூட விதிவிளைந்த அந்த இரவில் தமது சுவிசேஷர்களிடம் "யாரிடமாவது வாள் இல்லை என்றால், அவர் தமது அங்கியை விற்றாவது வாள் வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று கூறியதாக லூக் தெரிவிக்கிறார். (லூக் 22:36) (பார்க்க: "Liberation Theology and Maxism" by Kottukapally, S.J. in *Vidyajyoti – Journal of Theological Reflections, Delhi*, August 1985, பக்கம் 361)

படிப்பகம்

www.padippakam.com



யர்களுக்கெதிராக எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கத் தீர்மானித் திருக்க முடியும். இங்கே, வரலாற்றில் ஒருவரது பங்குப்பணி எவ் வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை ஆராய வேண்டியதாகும்; அதை நாம் இங்கே எடுத்துக்கொள்ள முடியாது. மேலும், நவீன ஆராய்ச்சிகள் பல நடந்துள்ள போதிலும், கிறிஸ்துவைப் பற்றி நிச்சயமான வரலாற்று உண்மைகள் அதிகமாகத் தெரியவில்லை. அவரைப் பற்றி நமக்கு தெரிந்தவற்றில் பெரும்பாலானவை மரபுச் செய்திகளே. முகமது மக்காவில் எதிர்ப்பைச் சந்தித்தார்; ஏற் கெனவே நாம் கூறியபடி அவர் ஒடுக்கலுக்கும் கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். முகமதுவும் கொடுமைக்கும், துன்பத்துக்கும் உள்ளாக்கப்பட்ட சமயங்களில் கிறிஸ்துவைப் போலவே, தமது எதிரிகளுக்காகப் பிரார்த்தனை செய்ததாகப் பல நிகழ்ச்சிகள் உள்ளன. ஆனால் கிறிஸ்துவைப் போலன்றி, அவர் சரணடைய மறுத்தார். மக்காவில் எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்க முடியாமல் போனபின், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றார்.

அங்கே ஆரம்பகாலப் பிரச்சினைகளைத் தீர்த்த பிறகு மக்கா வின் பக்கம் அவர் கவனத்தைத் திருப்பினார். மக்காவின் பொருளா தாரத்தில் நெருக்கடியை ஏற்படுத்தி, சீடர்களுக்கு வாழ்க்கைப் பொருள்கள் கிடைக்கச் செய்யும் வழி ஒன்றை அவர் தேடினார். ஸிரியாவுக்குச் செல்லுகிற அல்லது அங்கிருந்து திரும்பி வருகின்ற வர்த்தக அணிகளைத் தாக்குவதைவிட இதற்குச் சிறந்த வழி ஏது? இதைச் செய்வதும் எளிதாயிருந்தது. ஏனென்றால் மக்காவிலிருந்து 300 மைல் தூரத்தில் உள்ள மதீனாவிலிருந்து 60 மைல் தூரத்துக் குள் வர்த்தக அணிகள் செல்லும் பாதை இருந்தது. இம்மாதிரி தாக்குதல் நடத்திக் கொள்ளையடிப்பது அரேபியப் பாலைவனத்தில் அறநெறிக்கு முரணானதாகக் கருதப்படவில்லை. இத்தகைய கொள்ளைத் தாக்குதல்கள் அடிக்கடி நடந்து வந்தன. இவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் முகமது, தாமும் தமது சீடர்களும் ‘தெய்வீகப் பணி’ என்று கருதிய ஒரு இயக்கத்தின் நலன்களைப் பாதுகாக்க முடியும். புதிய அறநெறிகளுடன் புதிய சமுதாயம் ஒன்றை அமைக்க முயலும் ஒரு இயக்கம், ஏற்கெனவே உள்ள அற நெறியை மீறும்வகையில் நடப்பது அறநெறியற்ற செயலாகக் கருதப்பட்டது. ஆனால் முகமது அவ்வாறு அறநெறியற்ற வகை யில் செயல்படவில்லை; ஏனென்றால் இத்தகைய தாக்குதல்கள் அந்த இடத்தில், அந்தக் காலகட்டத்தில் முற்றிலும் இயல்பானவை யாகக் கருதப்பட்டன.

இதற்கு ஒரு ஆரம்பமாக முகமது நிலைமையைக் கண்டு வரு வதற்குச் சில குழுக்களை அனுப்பி வைத்தார். ஹிஜ்ராவுக்குப் பின்

www.padippakam.com



பதினேழாவது மாதத்தில் ஒரு குழு அனுப்பப்பட்டதாக வாக்கிதீ (Wāqidi)யை மேற்கோள் காட்டி தபரி கூறுகிறார். இறைத்தூதர், ஹம்ஜா பின் அப்த் அல் முத்தலிபை (Hamza Abd al-Muttalib) ஒரு வெள்ளைக்கொடியுடன் 30 ஆட்களுடனும், குரைஷ் இனக்குழு வினருக்குச் சொந்தமான வர்த்தக அணியை இடைமறிக்குமாறு அனுப்பி வைத்தார் என்று அவர் குறிப்பிடுகிறார்.[19] மேலும் தபரி கூறுகிறார்: "அந்த தி கதா (Dhi Qa'da) மாதத்தில் இறைத்தூதர் ஸத் பின் அபி-வக்காஸை (Sa'd binAbi-Waqās) வெள்ளைக்கொடியுடன் கர்ராருக்கு (Kharrār) அனுப்பி வைத்தார். மிக்தாத் பின் உம்ரு (Miqdād bin 'Umru) கொடியை ஏந்திச் செல்ல நியமிக்கப்பட்டார். ஸத் இவ் வாறு கூறுகிறார்: "நான் இருபது பேர்களுடன் கால்நடையாகக் கர்ராருக்குப் புறப்பட்டேன். நாங்கள் பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் பயணம் செய்தோம். ஐந்தாம் நாள் காலை அங்கே போய்ச் சேர்ந்தோம். அதற்கு மேல் போக வேண்டாம் என்று இறைத்தூதர் எனக்குக் கட்டளையிட்டிருந்தார். எதிரியின் வர்த்தக அணி ஒரு நாள் முன்னதாக அந்த வழியே சென்றிருந்தது. அவர்களின் எண் ணிக்கை அறுபது. என்னுடன் இருந்தவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்தவர்கள்." [20]

இவையெல்லாம் நிலைமையைக் கண்டறியும் முயற்சிகளே; முக்கியமாக வேறெதுவும் நடக்கவில்லை. ஆனால், இடம்பெயர்ந்து வந்ததற்குப் பின் பதினேழாவது மாதத்தில், ரஜப் மாதத்தில், முதல் முறையாக ரத்தம் சிந்தப்பட்டது. தீர்க்கதரிசி, அப்த் அல்லா பின் ஹஜஷை ('Abd Allah b. Hajash) பன்னிரண்டு பேருடன் ரகசியமான ஒரு பணியில் அனுப்பி வைத்தார். அவரிடம் முத்திரையிடப் பட்ட கடிதம் ஒன்று கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்கள் பயணம் செய்த பின் (ஒருநாள் பயணத்துக்குப் பின் என்று வேறு சிலர் கூறு கிறார்கள்) கடிதத்தைத் திறந்து பார்க்கும்படி அவரிடம் கூறப் பட்டது. கடிதத்தைத் திறந்து பார்த்த போது தாயிஃபுக்கும் மக்கா வுக்கும் இடையே உள்ள நக்லா (Nakhla) என்ற இடத்துக்குச் செல் லும்படி அதில் எழுதியிருந்தது. சிறிது தயங்கிய பின் ரஜப் மாதத் தின் கடைசி நாட்களில் அவர்கள் நக்லா போய்ச் சேர்ந்தார்கள். மாலையில் குரைஷியருக்குச் சொந்தமான வர்த்தக அணி அந்த வழியாக வந்த போது முஸ்லிம்கள் அதைத் தாக்கினார்கள். வர்த்தக அணியைச் சேர்ந்த உம்ரு பின் அல்-ஹத்ரமீ என்பவர் கொல்லப் பட்டார். முஸ்லிம்கள் பெரும் அளவில் கொள்ளையடித்த பொருள் களுடனும், சிறைப்பிடிக்கப்பட்ட இரண்டு ஆட்களுடனும் மதீனா திரும்பினார்கள்[21] ஆனால் ரஜப் மாதத்தில் அரேபியர் சண்டை

19. Tārikh-e-Tabari,முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 149.
20. மேற்படி, பக்கம் 150.
21. பார்க்க: Asah al-Siyar, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 126-7.

www.padippakam.com



நடத்தக்கூடாது என்பது வழக்கம். இதை மீறி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது பற்றிச் சில ஆட்சேபங்கள் எழுந்தன. முகமது மிகவும் சாமர்த்தியத்துடன் செயல்பட வேண்டியிருந்தது. சில காலத்துக்கு அவர் அந்தக் கொள்ளைப் பொருள்கள் எதையும் தொடவில்லை. பின்னர் ஒரு குரான் வசனம் வெளிப்படுத்தப்பட்டது: "புனித மாதத்தைப் பற்றி, அந்த மாதத்தில் போர்புரியலாமா என்பது பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். அதில் போர் புரிவது பெரும் பாவம் என்று கூறுவீராக! ஆனால் கடவுளின் பாதையில் மக்களைத் தடுப்பதும், அவனை நிராகரிப்பதும், புனித மசூதிக்கு வர முடியாமல் மனிதர்களைத் தடுப்பதும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்வின் பார்வையில் அதைவிடப் பெரிய பாவங்களாகும். சிலைகளை வணங்குவது (புனித மாதங்களில்) கொல்வதைவிட மிகக் கடுமையானது."[22]

இவ்வாறாகத் தெளிவான தீர்ப்பு அளிக்கப்பட்டது. மக்காவாசிகள் புதிய மதத்துக்கும் புதிய இயக்கத்துக்கும் இடையூறு செய்தால் அவர்கள் தண்டனைக்கு உள்ளாக வேண்டியதே. மரபு வழக்கங்கள் இதில் குறுக்கிட முடியாது. உண்மையில், தன்னை ஒரு சக்தியாக நிலைநிறுத்திக்கொள்ள விரும்பும் எந்த இயக்கமும், பழைய மரபுகளை உடைக்காமல், புதிய நிலைமைக்குகந்த உத்திகளைப் பின்பற்றாமல் வெற்றிபெற முடியாது. முகமது அதைத்தான் செய்தார். கொள்ளைப் பொருள்களில் ஐந்தில் ஒரு பங்கை முகமது எடுத்துக்கொண்டார். மீதியை அவரது தோழர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது முதல் முகமதுஅரசின் தலைவர் என்ற முறையில் போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்களில் ஐந்தில் ஒரு பங்கை எடுத்துக்கொள்வது வழக்கமாயிற்று. இதில் பெரும்பகுதியும் அவரைச் சந்திக்க வந்த தூதுக்குழுக்களுக்கான உபசரணைகளுக்கும், புதிதாக அமைக்கப்பட்ட அரசின் தலைவர் என்ற முறையில் அவர் செய்ய வேண்டியிருந்த செலவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

முஸ்லிம்களுக்கும் மக்காவின் குரைஷிகளுக்கும் இடையே நடந்த இந்தச் சண்டைக்கு எதிர்நடவடிக்கை இல்லாமற் போகவில்லை. மக்காவாசிகள் மிகவும் சினம் கொண்டார்கள். சரியான நடவடிக்கை எடுக்காவிடில் முகமது தங்களுடைய வர்த்தகத்துக்கு இடைவிடாத அபாயமாயிருப்பார் என்பதை குரைஷ் வர்த்தகர்கள் உணர்ந்துகொண்டார்கள். மக்ஜூம் (Makhzūm) இனக்குழுவின் சக்தி மிக்க தலைவரான அபூ ஜஹேல் (Abū Jahel) இவ்வாறு கருத்துக் கொண்டிருந்தார். விரைவிலேயே இதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஹிஜ்ரி இரண்டாவது ஆண்டின் ரமதான் (Ramadān) மாதத்தில்

22. குரான், அத்தியாயம் 2, வசனம் 217.

www.padippakam.com



(கி.பி.624, மார்ச்) பெருமளவில் வர்த்தகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வர்த்தக அணி ஒன்று அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் (Abū sufyan b. Harb தலைமையில் காஸா (Gaza) விலிருந்து மக்காவுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தது. அதனுடன் 30 அல்லது 40 பேர் சென்றார்கள். அந்த வர்த்தக அணியில் கொண்டு செல்லப் பட்ட வர்த்தகப் பொருள்களில் குரைஷின் பெரும்பாலான குலக் குழுக்களுக்குப் பங்கு இருந்தது. முகமதுவுக்கு விரைவில் தகவல் தெரிந்தது. அவர் தமது தோழர்களிடம் கூறினார்: "மிகவும் மதிப் புள்ள பொருள்களை ஏற்றிக்கொண்டு குரைஷ் வர்த்தக அணி ஒன்று இந்தப் பக்கமாக வருகிறது. அவர்கள் உங்களை வீட்டை விட்டுத் துரத்தியடித்து உங்கள் பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டவர்கள்." அவர்களுக்கு இது மிக அற்புதமான வாய்ப்பு. வர்த்தக அணியில் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் 50,000 தினார் மதிப்பு உடையவை என்று கருதப்பட்டது. பலர் இதில் ஆர்வம் காட்டினார்கள். உர்வா ('Urwa) வெளிப்படையாகக் கூறு கிறார்: "அபூஸஃப்யானையும், அவருடன் சவாரி செய்தவர் களையும் தாக்குவதும், குரைஷியரிடமிருந்து கைப்பற்றப் போகும் பொருள்களும் தவிர வேறு எதையும்பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. இந்தத் தாக்குதலில் பெரிதாகச் சண்டை நடக்கும் என்று அவர்கள் நினைக்கவில்லை. கடவுள் அவ்வாறு வெளிப்படுத்தியிருந்தார்: "ஆயுதங்கள் அற்ற கூட்டம் கிடைக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள்."[23] அபூஸஃப்யானுக்கு இவர்களது திட்டம் தெரிந்துபோயிற்று; அவர் தமது பயண மார்க்கத்தை மாற்றினார். ஆயினும், முகமது தங்களைப் பின்தொடருவதால், சண்டைக்குத் தயாராக ஆட்களும் ஆயுதங்களும் அனுப்பிவைக்கும்படி அவர் மக்காவுக்குச் செய்தி அனுப்பினார்.

மக்காவாசிகள் சுமார் 950 ஆட்களையும் நிறைய ஆயுதங்களை யும் அனுப்பி வைத்ததாகத் தெரிகிறது. ரமதான் மாதம் 17-ஆம் நாள் பத்ர் (Badr) என்ற இடத்துக்கருகே சண்டை நடந்தது. முஸ்லிம் களின் எண்ணிக்கை 300-க்குமேல் இல்லை (அதிகபட்சமாக 313 பேர்). இங்கே சில விஷயங்களைக் குறிப்பிடவேண்டும். மக்காவில் முறையான அரசாங்கம் எதுவும் இல்லாததால் ராணுவமும் கிடையாது. மக்காவில் இருந்த, சண்டையில் கலந்து கொள்ளும் உடல் வலிமை கொண்டவர்கள் அனைவரும் சேர்ந்துகொள்ளு மாறு தூண்டப்பட்டனர். இந்த நிலைமை காரணமாக ஒரே ஒருவரின் தலைமையோ, அல்லது ஒழுங்கான அணி அமைப்புகளோ இருக்க வில்லை. வெவ்வேறு குலக்குழுக்கள் ஒவ்வொன்றும் ஒரு அணியாக

23. al-Tabari, *Annales*, Vol.1,3, p.1285, and Hakim Abdul Barakat, Asah al-Siyar, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 128.

www.padippakam.com



இருந்தன. அவர்கள் விரும்பினால் விலகிக்கொள்ள முடியும். உண்மையில், சண்டை தொடங்குவதற்கு முன் ஒரு குலக்குழு விலகிக் கொண்டது. இதனால் மக்காவின் தரப்பில் ஆட்கள் எண்ணிக்கை குறைந்தது. இவ்வாறாக, கட்டுப்பாடு இன்மை அவர்களுக்குப் பெரிய பலவீனமாக இருந்தது. மேலும் சண்டை செய்யலாமா கூடாதா என்பது பற்றியும் அவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. இந்த மாதிரியான சண்டை இதுவரை நடந்ததில்லை; ஏனென்றால் அவர்களுக்கு எதிரிகளாக இருப்பவர்களும் அவர் களது குலக்குழுவையே சேர்ந்தவர்கள். (அரேபியாவில் ஒரே இனக்குழுவை அல்லது குலக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஒருவருக் கொருவர் எதிரிகளாகச் சண்டையிடுவதில்லை). இதனால் அவர் களுக்குக் குழப்பமாயிருந்தது. சண்டையில் வெற்றி பெற்றாலும் சொந்த உறவினர்களைக் கொன்றே அதைப் பெற வேண்டியிருக்கும் என்று சிலர் வாதம் செய்தார்கள். ஆயினும் அபூ ஜஹேல் பிடிவாத மாக இருந்து அவர்களைச் சண்டைக்குச் செல்லும்படிக் கட்டாயப் படுத்தினார். (இதனிடையே, முஸ்லிம்கள் தாக்கிக் கொள்ளை யிடுவதற்குத் திட்டமிட்டிருந்த வர்த்தக அணி அவர்களுக்குத் தெரியாமல் கடந்து சென்றுவிட்டது).

முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குச் சில அனுகூலங்கள் இருந்தன. அவர்களிடம் கட்டுப் பாடும் உறுதியான நோக்கமும் இருந்தன. முகமதுவுக்கு இது நன்றாகத் தெரியும். சண்டை நடப்பதற்கு முன் தமது தோழர்களிடம் பேசுகை யில் அவர் இவ்வாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது: “வெற்றி பெறுவது ஆடம்பரமாக, பகட்டாக காட்சியளிப்பதையோ, நிறைய ஆயுதங்களைக் கொண்டிருப்பதையோ பொறுத்ததல்ல. பொறுமையும் உறுதியுமே வெற்றிக்கு முக்கியம்.”[24] முஸ்லிம்களுக் குப் புதிய மதத்தின் மூலம் கிடைத்த மன உற்சாகம் இருந்தது. தங்கள் தரப்பில் நியாயம் இருப்பதாக அவர்கள் உறுதியாக நம்பினார்கள். ஆயினும் அவர்களில் சிலர் சந்தேகம் கொண்டவர்களாகவோ, போலியாக நியாயவான் வேடம் காட்டுபவர்களாகவோ, பொருள் ஆதாயங்களில் நாட்டம் கொண்டவர்களாகவோ இருந்தார்கள். (குரான் இப்படிப்பட்டவர்களை மீண்டும் மீண்டும் கண்டிக்கிறது). தங்கள் நோக்கம் சரியானதே என்பதில் உறுதி நம்பிக்கை கொண்ட வர்கள், அதற்காக முழுபலத்துடன் போராடுவார்கள்; விளைவைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். சண்டை நடக்கும் இடத்தைத் தெரிந்தெடுப்பதிலும் முகமது சிறந்த ராணுவ தந்திரத்துடன் செயல் பட்டார். அவரது எதிரிகள் கண்கூசும் எதிர்வெயிலில் நின்று போரிடும்படியாக அந்த இடம் அமைந்திருந்தது. முஸ்லிம்கள்

24. Asah al-Siyar, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 133.

www.padippakam.com



ஒரே தலைவரின் கீழ் இருந்தார்கள். யாரைக் கொல்லப்போகிறோம் என்ற கவலையும் அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய புதிய மதத்தில் இனக்குழுப் பிணைப்புகளுக்கு இடம் இல்லை. ஒருவருடைய தந்தையே எதிர்ப்பக்கத்தில் நின்றாலும், அவரைக் கொல்வது அவர்களுக்கு முற்றிலும் சட்டப்படியானதே. (உண்மையில், மதீனா வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அப்த் அல்லா பின் உபய் என்பவரின் மகன் தமது தந்தை இறைத்தூதருக்கு துரோகம் செய்து விட்டார் என்று அவரைத் தாமே கொன்றுவிடுவதற்குத் தீர்க்க தரிசியிடம் அனுமதி கேட்டார். தாமே கொல்ல வேண்டும் என்று கேட்டதற்குக் காரணம், வேறு யாரும் கொன்றால் தமக்குக் கோபம் ஏற்பட்டுப் பழி வாங்கக்கூடும் என்பதாகும்). இவ்வாறு ஒரே எண்ணம் கொண்டு செயல்படுவது புதுமையானதல்ல. ஏற் கெனவே உள்ள முறைமையைத் தூக்கியெறிந்துவிடப் போராடும் புரட்சி இயக்கங்கள் எல்லாவற்றிலுமே இந்தக் குணம் காணப்படும். முஸ்லிம்கள், “விசுவாசமற்றவர்கள்” மீது பாய்ந்து தாக்கினார்கள். வெகு விரைவிலேயே அவர்கள் நிலைகுலைந்துபோய் திரும்பி ஓடத் தொடங்கினார்கள். ஒரு குடிசையிலிருந்து சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த முகமது ஒரே பதட்டமாக இருந்தார். அவரது புதிய இயக்கத்தின் வருங்கால வாழ்வு அந்தச் சண்டையின் முடிவைப் பொறுத்திருந்தது. குறைந்த எண்ணிக்கையில் இருந்த முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்த மக்காவாசிகளைத் தோற்கடித்ததன் மூலம் முகமதுவின் செல்வாக்கு பெரிதும் உயர்ந்தது. முகமதுவுக்கும் அவரது மதத்துக்கும் புதிய மரியாதை ஏற்பட்டது. அதற்கு முன் இருதரப்பிலும் சாராமல் இருந்தவர்கள் பலர் இப் போது அவர் பக்கம் சேர்ந்தார்கள். அண்டைப் பகுதிகளில் இருந்த பல பதூயின் இனக்குழுக்கள் அவருடன் சேர்ந்துகொண்டன. மதீனா வில் அவருடைய நிலை மேலும் பலமடைந்து, அவர் தலைவர் ஆனார்.

பத்ர் சண்டைக்குப் பிறகு முஸ்லிம்கள் வர்த்தக அணி ஒன்றைத் தாக்குவதற்கு மற்றுமொரு வாய்ப்புக் கிடைத்தது. மக்காவாசிகள் மெஸபொடோமியாவுக்கு வர்த்தக அணி ஒன்றை அனுப்பினார்கள். நகரின் பணக்கார வர்த்தகர்கள் அதில் மிகுந்த முதலீடு செய்திருந் தார்கள். இந்த அணியின் பயணத்தை ரகசியமாக வைத்திருக்க அவர்கள் முயன்றார்கள். ஆனால் ஒரு யூத உணவு-மது விடுதியில் கேட்ட உரையாடல் மூலம் முகமது அதைத் தெரிந்துகொண்டார். நூறு பேர் கொண்ட குழு ஒன்றை அவர் ஜைத் பின் ஹாரிதா (Zaid bin Hāritha) வின் தலைமையில் அனுப்பி வைத்தார். அந்தக் குழுவினர் வர்த்தக அணியைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். அதில் 100,000 திர்ஹாம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்ட தாகக் கூறப்படுகிறது. பாதி யூதரான கவிஞர் கப்பின் அல்-அஷ்ரஃபை (Ka'b b. al-Ashraf) சில முஸ்லிம்கள் முகமதுவின் சொற்படி கொன்று

www.padippakam.com



விட்டார்கள். அவர் முகமதுவுக்கெதிராக மக்காவாசிகளை மிகவும் தூண்டிவிட்டதுடன், முகமதுவை இழித்துக்கூறும் கவிதைகளையும் எழுதியிருந்தார். மதத்தின் எதிரியான அவரை ஒழித்துக் கட்டுவதற்கு அவசியமானால் நம்பிக்கை துரோகம் செய்யலாம் என்று முகமது அதிகாரமளித்திருந்தார்.[25] அந்தக் கவிஞர் கொல்லப் பட்டது, மதீனாவின் யூத மக்களிடையே பெரும் அச்சத்தை உண் டாக்கியது. முகமதுவின் பல செயல்களைப் புரிந்துகொள்வதற்கு அவர் புதிய அரசு ஒன்றின் தலைவராகவும் மத இயக்கத்தின் தலைவராகவும் இரட்டை நிலையில் செயல்பட்டார் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். புதிதாக உருவாகியுள்ள அரசின் தலைவர் என்ற முறையில் அதன் நலனைக்கருதிச் செயல்படும் போது யாரேனும் எதிரியைக் கொலை செய்வதோ, அல்லது யூத இனக்குழுவின் ஆண்களையெல்லாம் கொல்லுவதோ அவசிய மானால், அவர் அதைச் செய்தார். இரக்கம் காட்டுவது அரசியல் ரீதியாகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றால், அதை அவர் செய்யவில்லை. ஒருவேளை, யூதர்களை விட்டுவைத்தால் தமது நிலையை அது பலவீனப்படுத்தும் என்றும், அவர்கள் மக்கா வாசிகளுடன் சேர்ந்து தமது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய் வார்கள் என்றும் அவர் நினைத்திருக்கலாம். மக்கா நகரின் பொருளாதாரத்தை வர்த்தக அணியைத் தாக்குவது, மக்காவின் பொருளாதாரத்தை முடக்குவதற்கு அவர் பின்பற்றிய உத்தியின் அம்சமே. மக்காவின் ஆதிக்கத்தை உடைப்பதற்கு அந்த ஒரு வழிதான் இருந்தது. முகமதுவின் இந்தச் செயல் பற்றி முஸ்லிம்கள் குற்ற உணர்வுடன் விளக்கியிருக்கிறார்கள். மேற்கு நாட்டவர்களுக்கு அவரது செயல் புரியாத புதிராக உள்ளது. வெளிப்படையான உண்மை என்னவென்றால், முகமது நுண்ணறிவும் திறமையும் வாய்ந்த ராஜீய நிபுணராகவும் அதே சமயம் மதத்தில் லட்சியங்களையும் சட்டங் களையும் நிர்ணயித்துக்கொடுப்பவராகவும் இருந்தார். அவர் எதார்த்தத்துடன் தொடர்பற்ற லட்சியவாதி அல்ல. கடினமான நிலைமைகளை நுட்பமான திறமையுடனும், அனுபவம் மிக்க அரசியல்வாதியின் சாமர்த்தியத்துடனும் சமாளித்திருக்கிறார். தேவையானால் ஒரு கொள்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வும், ஒரு குறிக்கோளை விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்ளவும் தயங்கவில்லை. புகழ்பெற்ற ஹுதைபியா (Hudaybiya) ஒப்பந்தத்தில் தமது பெயருக்கு நேரே “இறைத்தூதர்” என்று குறிக்குமாறு அதை எழுதிய அலீயிடம் கூறினார். மக்காவாசிகள் அதை ஆட்சேபித்தார்கள். அவர்கள் அதை ஏற்பதற்குத் தயாராக இல்லை. முகமதுவின் முக்கிய தோழர்களில் ஒருவரும் கலகலப்பான

25. மேற்படி, பக்கம் 144.

www.padippakam.com



சுபாவம் கொண்டவருமான உமர் பின் கத்தப் ('Umar b.Khattāb) தமது உணர்ச்சிகளை மறைக்க முடியாதவராக, "நீர் உண்மை யிலேயே இறைத்தூதரா?" என்று கேட்டார். முகமது, "ஆம், நான் இறைத்தூதரே," என்று பதிலுரைத்தார்.[26] நுட்ப மதி கொண்ட ராஜீய நிபுணர் என்ற முறையில் அவர் இந்த வார்த்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் இல்லை என்று அறிவார். அவருக்கு அப் போது தேவையாயிருந்தது, தமது நிலையை உறுதிசெய்து கொள்வதற்குச் சிறிது கால அவகாசம். அதற்கு பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு காண்பது அவசியமாயிருந்தது. அதை அடை வதற்கு அவர் தமக்குப் பாதகமான சில நிபந்தனைகளைக் கூட ஏற்றுக்கொண்டார். முஸ்லிம்களின் சக்தி மேலும் உயர்ந்துதான் செல்லும். சாதகமற்ற சூழ்நிலையில் இத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தவறல்ல. தகுந்த சமயம் வரும்போது அதைச் சரிசெய்துகொள்ளலாம். முகமதுவிடமிருந்த இந்த நுண்மதிதான் எந்த நிலைமையையும் சமாளிக்க உதவியது. முஸ்லிம் வரலாற் றாசிரியர்கள் கூட முகமது ராஜீய நிபுணர் என்ற முறையில் செய்த செயல்களையும் தீர்க்கதரிசி என்ற முறையில் செய்த செயல்களை யும் வேறுபடுத்திப் பார்க்க முயன்றிருக்கிறார்கள்.

முகமது யூத இனக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் கவனம் செலுத்தி னார். இறுதியில் அவற்றின் ஆதிக்க பலத்தை உடைத்து அவர் களைக் கீழடங்கிய நிலைக்குக் கொண்டு வந்தார். கைபரிலும் (Khaybar) ஃபதக்கிலும் (Fadak) இருந்த யூதர்களுடன் அவர் செய்து கொண்ட உடன்பாடு, இஸ்லாமில் நிலவுடைமை பற்றிய கருத்துடன் சம்பந்தப்பட்டது.

அரேபிய பாலைவனத்தில் சில இடங்களைத் தவிர பிறவற்றில் விவசாயம் செய்வது இயலாததால், நிலப்பிரபுத்துவ முறையும் வேறு பல நடைமுறைகளும் அங்கு உருவாகவில்லை. ஆனால், முஸ்லிம்கள், விவசாய வளம் மிக்க பெரும் பரப்புகளை வென்று கைப்பற்றிய போது நிலவுடைமை பற்றிய கருத்துக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. கைபரும் ஃபதக்கும் யூதர்கள் வசம் இருந்த வளம் மிகுந்த பகுதிகள். அங்கே அவர்களுக்குப் பல குகைகளும் — குடி யிருப்புகளும் இருந்தன. புராதன கைபர் பேரீச்சை மரங்களும் தானிய வயல்களும் கொண்ட வளமான பகுதியில் அமைந்திருந் தது என்று அரபு புவியியலாளர்கள் கூறுகிறார்கள். அதில் ஏழு கோட்டைகள் இருந்தன.[27] மதீனாவிலிருந்து சுமார் நூறுமைல் வடக்கே அது இருந்தது.

26. மேற்படி, பக்கம் 218-20.
27. M.T.Houtsma and others (eds.) *Encyclopaedia of Islam* (லண்டன், 1913-36), Vol.II, பக்கம் 869.

www.padippakam.com



"இறைத்தூதர் ஹிஜ்ரி 7-ஆம் ஆண்டில் கைபரைத் தாக்கினார்" என்று பலாதுரீ (Balādhurī) கூறுகிறார். "கைபர் மக்கள் பல நாட்கள் எதிர்த்துப் போராடி (முகமதுவின் முன்னேற்றத்தை) தடுத்து நின்றார்கள். முஸ்லிம்களை எதிர்த்துத் தொடர்ந்து போரிட்டார்கள். இறைத்தூதர் சுமார் ஒரு மாதகாலம் முற்றுகை நடத்தினார். அதன் பின் அவர்கள் (யூதர்கள்) சமாதானம் செய்துகொள்ள முன்வந் தார்கள். தங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றும், தங் களது பெண்களையும் குழந்தைகளையும் கைது செய்யக்கூடாது என்றும், தங்கள் நிலங்களையும், உடம்பில் உள்ளபொருள்களைத் தவிர வெள்ளி, தங்கம் உள்ளிட்ட உடைமைகளையும் ஒப்படைத்து விட்டு வெளியேறிவிடுவதாகவும் அவர்கள் நிபந்தனை தெரிவித் தார்கள்.... பின்பு அவர்கள் தங்களுக்கு விவசாயத் தொழில் நன் றாகத் தெரியும் என்றும் அதனால் அங்கேயே தங்கியிருக்க அனு மதிக்கும்படியும் இறைத்தூதரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர் அதற்கு இணங்கி ஈச்ச மரங்களின் விளைச்சலிலும், தானிய விளைச்சலிலும் பாதியைத் தந்துவிடும்படி உடன்பாடு செய்து கொண்டார். 'அல்லாஹ் உங்களை இங்கே வைத்திருக்கும்வரை நான் உங்களை இங்கே வைத்திருக்கிறேன்,' என்று அவர் கூறினார்."[28] இதற்கு, நிலம் முஸ்லிம்களிடம் இருக்கும் என்றும், யூதர்கள் வாரச் சாகுபடிக்காரர்களாக இருப்பார்கள் என்றும் பொருள் கூறப்பட் டது. பலாதுரீ மேலும் கூறுகிறார்: "அங்கே உள்ள நிலத்தில் வேலை செய்வதற்கு இறைத்தூதரிடமும் அவரது தோழர்களிடம் போதிய அடிமைகள் இல்லாததாலும், அவர்களே வேலை செய்வதற்கு நேரம் இல்லாததாலும், அவர்களுடைய நிலங்களையும், பழத் தோட்டங்களையும் அவர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு நிபந்தனையுடன் சம்மதம் தெரிவித் தார். விளைச்சலில் பாதியை அவர்கள் (யூதர்கள்) வைத்துக்கொண்டு, அல்லா பின் ரவாஹா ('Abd Allah b. Rawāha) அங்கு சென்று பாதிப் பங்கின் அளவைத் தீர்மானித்தார் என்று பலாதுரீ தெரிவிக்கிறார்.[29]

பலாதுரீ கூறுவதிலிருந்து யூதர்களின் நிலங்கள் அவர்களிட மிருந்து பறிக்கப்பட்டு அவர்கள் வாரச் சாகுபடிக்காரர்களாக மாற்றப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அரசியல் ரீதி யாக, கைபர் யூதர்களுக்கு பொருளாதார பாதிப்பை ஏற்படுத்து வது அவசியம் என்று முகமது கருதியிருக்கலாம். தமக்கு எதிரான சதித் திட்டங்களுக்கு கைபர் மையமாக இருந்ததனால் அதை அழிப் பது அவரது நோக்கம். ஆனால் அவர் தம்மையறியாமலே, இஸ்லாமிய

28. Balādhuri, Futuh al-Buldan, Vol. 1, உருது மொழிபெயர்ப்பு: ஸையது அப்துல் கைர் மவுதூதி (ஹைதராபாத் n.d.) பக்கம் 35.
29. மேற்படி, பக்கம் 37.

www.padippakam.com



அரசில் நிலப்பிரபுத்துவமுறை பிற்காலத்தில் வளர்வதற்கு நியாய அடிப்படையை ஏற்படுத்திவிட்டார். ஜாகீர் (jagir) முறையில், பெரும் நிலப்பரப்புகள் ஒருவரின் உடைமையாக இருப்பதன் காரணமாக, மிகுந்த நெருக்குதல்கள் ஏற்பட்டு இஸ்லாமிய அரசின் தன்மையே மாறிப்போவதைப் பின்னர்க் காணவிருக்கிறோம். கைபருக்கு அருகே இருந்த மற்றொரு யூதக் குடியிருப்பு ஃபதக். அதுவும் நல்ல செழிப்பான இடம். அங்கேயும் யூதர்களுடன் அநேகமாக இதே போன்ற உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. அங்கிருந்த யூதர்கள் எதிர்த்துப் போரிடாமல் தாங்களே சரணடைந்து விட்டதால், பாதி நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. கைபரின் விளைபொருட்களை முஸ்லிம்கள் சமமாகப் பகிர்ந்துகொண்டது போலன்றி, ஃபதக், முகமதுவுக்கு ஒதுக்கப்பட்டது. அவர் அதிலிருந்து கிடைத்த வருமானங்களை உதவி தேவைப்படும் பயணிகளுக்கும், பனூ ஹாஷிம் மக்களில் செல்வம் குறைந்தவர்களின் பராமரிப்புக்கும் செலவிட்டார். இவ்வாறு செய்யப்பட்டதற்குக் காரணம், ஃபதக், ஒப்பந்தத்தின் மூலம் (சண்டையில்லாமல்) பெறப்பட்டது என்று கூறப்பட்டது. ஆயினும் இரண்டாவது கலீஃபா உமரின் ஆட்சிக்காலத்தில் வடக்கு ஹிஜாஸில் (Hijāz) வசித்த யூதர்களுக்குக் கடுமையான அடி விழுந்தது. கலீஃபா அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிடத் தீர்மானித்தார். அந்த இடைக்காலத்தில் போரில் பிடிபட்ட அடிமைகள் பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்களிடம் இருந்ததால், அரேபியாவின் வளமான பகுதிகளில் அவர்களைப் வேலையில் ஈடுபடுத்த முடிந்தது. முஸ்லிம்களிடம் போதிய எண்ணிக்கையில் அடிமைகள் இல்லாத காரணத்தால்தான் கைபரில் யூதர்கள் நிலங்களில் இருந்துகொண்டு விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். கைபரில் இருந்த யூதர்கள் நஷ்டஈடு ஏதும் இல்லாமல் பாலைவனச்சோலையிலிருந்து வெளியேறி ஸிரியாவுக்கு செல்ல வேண்டியிருந்தது என்பதையும், ஆனால், ஃபதக் யூதர்களுக்கு அவர்களுடைய சொத்து மதிப்பின் அடிப்படையில் நஷ்டஈடு கொடுக்கப்பட்டது என்பதையும்; கவனிக்கவேண்டும். கைபர் யூதர்கள் அனுபவ உரிமை மட்டும் உடையவர்களாகக் கருதப்பட்டார்கள் என்பதையும், அதனால் அவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட வாரச்சாகுபடி ஒப்பந்தத்தை நஷ்டஈடு இல்லாமல் முறித்துக் கொள்ளலாம் என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. ஆனால் ஃபதக் யூதர்கள் பாலைவனச்சோலையின் நிலங்களில் ஒரு பாதிக்குச் சொந்தக்காரர்கள் என்ற உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

யூதர்களை வெளியேற்றிய பின்பும் கூட கலீஃபா உமர் கைபருக்கும் ஃபதக்குக்கும் வெவ்வேறு வழிகளைப் பின்பற்றினார். கைபரின் விளைபொருள்களில் முகமதுவிடமிருந்து பங்கு பெற்றுவந்த முஸ்லிம்களுக்கு (அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு) அந்த விகிதத்தின்படி நிலங்களைச் சொந்தமாகக் கொடுத்தார். ஃபதக் சம்பந்தமாக முன்பிருந்த ஏற்பாட்டை அவர் மாற்றவில்லை.

www.padippakam.com



ஃபதக்கின் ஆண்டு உற்பத்தியின் மதிப்பு சுமார் 10,000 தினார்கள் (இபின் ஸத், v.286). சட்ட நோக்கில் பார்க்கும் போது ஃபதக் விஷயம் ஒரு முக்கியமான உண்மையை எடுத்துக்காட்டுகிறது. இஸ்லாமின் ஆரம்ப காலத்திலிருந்தே தனியார் சொத்துரிமைக்கும், கூட்டுச் சொத்துரிமைக்கும் உள்ள வேறுபாடு பற்றித் தெளிவான கருத்தும்; அந்த இரண்டிலும் உள்ள கடமைகள், பொறுப்புகள் பற்றிய உணர்வும் இருந்தன என்பதை அது நிரூபிக்கிறது. மேலும், ஷரீயா (Sharī'a) சட்டங்களை மதித்து நடக்க விரும்பிய ஆட்சியாளர்கள், முகமதுவும், அவருக்குப் பின் அதிகாரத்துக்கு வந்தவர்களும் செய்து வைத்த ஏற்பாடுகளை அரசியல் காரணங்களுக்காக மாற்றியமைக்க விரும்பிய போது சந்தித்த சிரமங்களையும் இது எடுத்துக்காட்டு கிறது.[30] விவசாய வேலைகளைச் செய்வதற்குப் போதிய எண்ணிக்கை யில் அடிமைகள் கிடைத்த பின் ஃபதக்கிலிருந்தும் கைபரிலிருந்தும் யூதர்கள் அனைவரையும் உமர் வெளியேற்றிய செயல் (யூதர்கள் தொடர்ந்து பகைமை உணர்வுடன் இருந்ததும், அவர்களது நில உரிமை பறிக்கப்பட்ட பின் பகைமை தீவிரமடைந்ததும் முக்கிய காரணங்கள் என்பதில் சந்தேகமில்லை) பொருளாதாரக் காரணங்கள் இருந்தவரைக்கும், மத ரீதியான உத்தரவு மூலம் அடிமை முறையை ஒழித்துவிட முடியாது என்பதைக் காட்டுகிறது. உண்மையில், மேலும் பல வெளிநாடுகள் வெற்றிகொள்ளப்பட்டு, பெரும் அள வில் நிலங்கள் சொந்தமான பின் இந்தப் பிரச்சினை மேலும் கடுமை யாயிற்று. இஸ்லாமிய கலீஃபா ஆட்சி, முதலில் உமய்யத் (Umayyad) ஆட்சியாளர்களாலும், பின்பு அப்பாஸிட் (Abbasid) ஆட்சியாளர் களாலும், இஸ்லாமியப் பேரரசு ஆட்சியாக மாற்றப்பட்ட பின், பேரரசரின் அந்தப்புரத்தில் அடிமைப் பெண்களுக்குத் தனி முக்கியத் துவம் ஏற்பட்டது. கலீஃபாக்களின் சொந்த மெய்காவலர்களாகப் பணிபுரிய தனி அடிமைக் குழுக்களும் அமைக்கப்பட்டன. மக்கா வின் வர்த்தகச் சூழ்நிலையில் அடிமை முறையைத் தவிர்க்குமாறு கூறுவதும், பெருமளவில் விவசாய நிலங்களும், தோட்டங்களும் பொருளாதார அடிப்படையாக உள்ள பேரரசில் அடிமை முறையை ஒழிப்பதும் முற்றிலும் வேறுபட்ட விஷயங்களாகும்.

மக்காவில் அடிமை முறைக்குப் பொருளாதார வேர்கள் இல்லை. அங்கே அடிமைகள் சொந்தப் பணியாளர்களாகவும், சரக்குகளை ஏற்றி, இறக்கும் வேலைகளைச் செய்வதற்குமே பயன்படுத்தப்பட் டார்கள். ஆனால் பிற்காலத்திய இஸ்லாமியப் பேரரசுகளில் அடிமை முறைக்குப் பொருளாதார முக்கியத்துவம் ஏற்பட்டது. அதனால்தான் இஸ்லாமில் சமீப காலம்வரை அடிமை முறை நீடித்திருந்தது.

30. B.Lewis, Ch. Pellat and J. Schacht (eds.) *Encyclopaedia of Islam* (London, 1913-1936), Vol.II, Fasciculus 33, pp. 725-6 by L. Veccia Vaglieri.

www.padippakam.com



இஸ்லாமில் நிலவுடைமைப் பிரச்சினை மிகுந்த விவாதத்துக் கிடமாகியிருக்கும் விஷயம். இஸ்லாம் கூட்டு உடைமைக் கருத்தையே போதிக்கிறது என்றும், அதில் நிலப்பிரபுத்துவ முறைச் சுரண்டலுக்கு இடமில்லை என்றும் சில முஸ்லிம்கள் கூறுகிறார்கள். பாகிஸ்தானிய தத்துவஅறிஞர் நஸீர் அஹமத் ஷேக், முகமதுவும் — குரானும் தனியார் நிலவுடைமையைக், குறைந்தபட்சம், நிலச் சொந்தக்காரர் தாமே சாகுபடி செய்யக்கூடிய அளவைவிட அதிகமான நிலவுடைமைகளை, எதிர்ப்பதாகக் கூறுகிறார்.[31] ஆனால் ஜமாத்-ஏ-இஸ்லாமியின் முக்கிய தத்துவ அறிஞரான மவுலானா மவுதீதி, இஸ்லாமில் தனியார் நிலவுடைமை அனுமதிக்கப்படுவதாகக் கூறுகிறார். அவர் கூறுவது சரி என்றே தோன்றுகிறது. நில உடைமை உரிமையைக் குரான் மறுக்கவில்லை. ஆனால், தீர்க்கதரிசி குறித்து வழங்கும் சில மரபுச் செய்திகள் இந்த உரிமைக்குச் சில நிபந்தனைகளைக் குறிப்பிடுகின்றன. உதாரணமாக, தீர்க்கதரிசி பற்றிய மரபுச் செய்திகளைக் கூறும் ஆதாரபூர்வமான புத்தகங்களில் ஒன்றான ஸஹீஹ் முஸ்லிம் (Sahih Muslim) பின்வரும் ஹதீத்தை (மரபுச் செய்தியை)க் குறிப்பிடுகிறது: ".... நிலம் வைத்திருப்பவர் யாரும் அதில் சாகுபடி செய்ய வேண்டும் என்று இறைத்தூதர் கூறினார். அவ்வாறு சாகுபடி செய்ய முடியவில்லை அல்லது வேண்டிய திறமை இல்லை என்றால், அவர் அந்த நிலத்தை (அல்லது அதன் ஒரு பகுதியை) ஒரு சகோதர முஸ்லிமுக்கு அளிக்க வேண்டும் என்றும், எந்த நிலைமையிலும் அவர் அதைக் குத்தகைக்கு விடக்கூடாது (அல்லது வாரச் சாகுபடிக்கு விடக்கூடாது) என்றும் கூறினார்."[32] சுனன்-ஏ-அபிதாவூதில் (Sunan-e-Abi Dāūd) குறிக்கப்படும் மற்றொரு ஹதீத் மேலும் தெளிவாகக் கூறுகிறது: இறைத்தூதர் கூறியதாக ஜாபீர் (Jābir) தெரிவிக்கிறார். வாரச் சாகுபடியை இவ்வாறு கடுமையாகக் கண்டித்திருப்பதிலிருந்து இஸ்லாமில் தனியார் நிலவுடைமை முறை முற்றிலுமாக ஒழிக்கப்படாவிட்டாலும் நிலப்பிரபுத்துவ முறைக்கு இடம் கிடையாது என்பது தெரிகிறது.

பிரபல பாகிஸ்தானிய அறிஞர் ஃபஜ்லுர் ரெஹ்மான், 'இஸ்லாமில் வாரச் சாகுபடி முறை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகவும், எனவே அதை மிகவும் திரிபு செய்கின்ற நிலப்பிரபுத்துவ முறைக்கு இஸ்லாமில் இடம் கிடையாது' என்றும் கூறுகிறார். ஹதீத்துகளை எழுதியவர்களில் மிகப் பலரும் வாரச் சாகுபடி,

31. Nasīr Ahmad Shaikh, *Some Aspects of the Constitution and Economics of Islam* (Woking, 1961), pp. 139-229, quoted by Maxime Rodinson in *Islam and Capitalism* translated by Brian Pearce (Allen Lane, 1974), பக்கம் 19.

32. *Sahih Muslim Kitāb al-Buyū, Bāb Kirā, alārd, பார்க்க: டாக்டர் ஃபஸ்லுர் ரஹ்மான் 'ரிபா' பற்றி எழுதிய கட்டுரை:* Fikro-Nazar, Vol.1, Issue V *(கராச்சி, நவம்பர் 1963), பக்கம் 72.*

www.padippakam.com



நிலத்தைக் குத்தகைக்கு விடுதல் போன்றவற்றை தீர்க்கதரிசி சந்தேகத்துக் கிடமின்றிக் கண்டித்தார் என்பதில் அநேகமாக ஒரே கருத்தைக் கொண்டிருப்பதாக அவர் கூறுகிறார்.[33] அப்படியானால் தீர்க்கதரிசி தாமே கைபரிலும், ஃபதக்கிலும் இருந்த யூதர்களுடன் வாரச்சாகுபடி ஒப்பந்தங்களை ஏன் செய்துகொண்டார் என்ற கேள்வி எழுகிறது. நிலத்தைக் குத்தகைக்கு விடுதல் போன்ற முறைகளைப் பின்பற்றிய வர்கள் இதை முன்னுதாரணமாய் எடுத்துக்காட்டினார்கள்.

தீர்க்கதரிசியின் மரபுச் செய்திகளைத் தொகுத்தவர்களுக்கு இது நன்றாகத் தெரிந்திருந்தது. உதாரணமாக, இமாம் அபூ ஹனீஃபா (Imām Abū Hanīfa), கைபர் யூதர்களுடன் செய்துகொள்ளப் பட்ட ஒப்பந்தம் கராஜ் (Kharāj), அதாவது நிலவரி அல்லது கப்பம் பற்றியது என்று கூறுகிறார். அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதன் மூலம் யூதர்களுக்கு உதவி செய்திருக்கிறார் என்று அவர் கூறு கிறார். ஏனென்றால், அவர்களின் நிலத்தை அவர் வெற்றியின் மூலம் பிடித்துக்கொண்டதனால், அவர்களை அவர் வெளியே விரட்டியிருக்க முடியும். அவர்களை அங்கேயே இருக்க அனுமதித்து, விளைச்சலில் பாதியைக் கொடுத்துவிடும் நிபந்தனையின் பேரில் விவசாயம் செய்யவும் அனுமதித்தது அவரது கருணையைக் காட்டு கிறது என்கிறார் அவர்.[34] இந்த வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை. நடந்துவிட்ட செயலுக்குச் சுற்றிவளைத்து நியாயம் கூறும் முயற்சி யாகவே காணப்படுகிறது. ஆயினும் முஸ்லிம் மதத் தத்துவ அறிஞர்கள், வாரச் சாகுபடியை அனுமதித்து, சமூகத்தில் நிலக்குத்தகை மூலம் சுரண்டிவாழும் வர்க்கம் ஒன்றை உருவாக்குவதன் தீமைகளை உணர்ந்திருந்தார்கள். ஆனால் மதக்கொள்கையின் அடிப்படையில் மதத் தத்துவ அறிஞர்களின் கருத்து எப்படியிருந்தபோதிலும் சமூக-பொருளாதார உறவுகளின் காரண-காரியச் செயல்பாடு தனக்கென தனி வழியைப் பின்பற்றுகிறது. எனவே இஸ்லாமியப் பேரரசின் விவசாயப் பகுதிகளிலெல்லாம் நிலப்பிரபுத்துவமுறை ஆழ்ந்து வேரூன்றிற்று. சமூக அமைப்பில் வேர்படியாத லட்சியம் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சமூக-பொருளாதார அமைப்பு களை அடிப்படையாகக் கொண்ட எதார்த்தங்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. சமூக அமைப்பு முறையில் மாற்றம் செய்யாமல் சமூக மாற்றங்களைக் கொண்டுவர முடியாது என்பதை இது தெளி வாக்குகிறது. லட்சிய அறிவிப்புகள் தேவைதான் என்றாலும், அவை மட்டும் போதுமானவை அல்ல.

இஸ்லாமில் மற்றொரு முக்கிய பிரச்சினை கடன்கள் மீது வட்டி வாங்குவது பற்றியது. இது மிகவும் வாதத்துக்குரிய பிரச் சினையாகியுள்ளது, குறிப்பாக சமீப காலங்களில் கடும் வட்டிதான்

33. டாக்டர் ஃபஸ்லூர் ரஹ்மான், மேற்படி, பக்கம் 72.
34. மேற்படி, பக்கம் 74.

www.padippakam.com



தடை செய்யப்பட்டுள்ளதே தவிர, வர்த்தக வட்டி அல்ல என்று சிலர் கூறுகிறார்கள். இந்தக் கருத்து எல்லோருக்கும் உடன்பாடாக இல்லையென்றாலும், இதில் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. நமது நோக்கிலிருந்து இது ஒரு முக்கியமான விஷயமாதலால் இதைச் சற்று விரிவாக ஆராய்வோம். குரானில் இதற்குப் பயன் படுத்தப்படும் சொல் ரிபா (ribā) என்பது. இந்தச் சொல் பல்வேறு பொருள்களில் பயன்படுத்தப்படுவதனால் மிகுந்த குழப்பத்துக்கு இடம் ஏற்பட்டுள்ளது. டாக்டர் ஃபஜ்லுர் ரெஹ்மான் இந்தப் பிரச் சினை பற்றி மிகுந்த புலமைத்திறனுடன் ஆராய்ந்திருக்கிறார்.[35] கீழே தரப்படும் விவரங்கள் பெரும்பாலும் 'ரிபா' பற்றி அவர் எழுதிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டவையே (ஆயினும் மற்ற நூலாதாரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன). இந்தச் சொல் குரானில் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பொருள்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. சில உதாரணங்கள்: வளர்தல், வீங்குதல். குரான் கூறுகிறது: "பூமியைப் பயிர்பச்சை இல்லாமல் வறண்ட தாகக் காண்கிறீர்கள். அப்பொழுது அதன் மீது மழைநீரை நாம் இறக்கிவைத்தால் அது கிளர்ந்து வளர்க்கிறது." (22:5) (ரபத் என்ற சொல் வடிவம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது). மேலும் மக்கா காலத்தைச் சேர்ந்த "கிரேக்கர்கள்" என்ற அத்தியாத்தில் குரான் கூறுகிறது: "நீங்கள் வட்டியின் மூலம் அதிகரிக்க விரும்பும் பொருளை அல்லாஹ் ஆசீர்வதிக்க மாட்டான். ஆனால், அல்லாஹ் வுக்காக நீங்கள் கொடுக்கும் தர்மம் பலமடங்காக உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்" (குரான் 30:39), குரானில் 'ரிபா' பற்றி இங்குதான் முதல் முதலாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கே 'அதிகரித்தல்' என்ற பொருளில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட் டுள்ளது. இந்தச் சொல்லின் மற்றொரு வடிவம் "ரப்வாஹ்" (rabwah) என்பது. உயர்ந்த நிலம் அல்லது மேடு என்பது இதன் பொருள். குரான் கூறுகிறது: மர்யமுடைய மகனையும் அவருடைய தாயாரையும் மனிதர்களுக்கு நாம் ஓர் அத்தாட்சியாக ஆக்கினோம். அமைதியான, நீரூற்றுக் கொண்ட உயரமான இடத்தில் அவர்கள் தங்கச் செய்தோம்." (குரான்: 23:50) இந்தச் சொல்லின் மற் றொரு பொருள், (குழந்தையை) வளர்த்தல் என்பதாகும். குரான் கூறுகிறது: "பெற்றோரிடம் பணிவுடனும் கனிவுடனும் நடந்து கொள்ளுங்கள். 'இறைவனே, நான் சிறுகுழந்தையாக இருந்த போது என்னை அவர்கள் பரிவுடன் வளர்த்தார்கள். (ரப்பியானி) அவர்களுக்கு நீ அருள் புரிவாயாக' என்று பிரார்த்தித்துக் கூறுங்கள்." (குரான் 17:24) "ரிபா" என்ற சொல்லின் சிறப்புத் துறைப் பொருள்கள், அதன் இயல்பான சொற்பொருளிலிருந்து வருவித்துப் பெறப்பட்டுள்ளன. இஸ்லாமிய இலக்கியத்தில் "ரிபா" என்ற சொல், சாதாரணமாக வட்டி என்று கூறப்படும் பொருளில் மட்டும்

35. மேற்படி

www.padippakam.com



ஆளப்படவில்லை. சொற்பொருள்படிப் பார்த்தால் "ரிபா" என்பதற்கு வட்டி என்று பொருள் கொள்வது மிகவும் சரியானதல்ல. வர்த்தகத்தில் ஊக பேரம், ஒரே மாதிரியான பொருள்களை அளவு முதலியவற்றை அதிகமாக்கிப் பரிவர்த்தனை செய்து கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிக்கவும் அந்தச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்தச் செயல்கள் எல்லாமே தடை செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் மதத் தத்துவ அறிஞர்கள் கருதுகிறார்கள். மேலே "கிரேக்கர்கள்" என்ற அத்தியாயத்திலிருந்து எடுத்துக்காட்டப் பட்ட குரான் வசனத்தின் மூலம் மக்காவிலேயே "ரிபா" தடை செய்யப்பட்டதாக டாக்டர் ஃபஜ்லுர் ரெஹ்மான் கூறுகிறார். (அது கண்டனம் செய்வதாக உள்ளதேயன்றி, தடை செய்வதாக இல்லை). பொருளாதார நீதி பற்றி தீர்க்கதரிசி கொண்டிருந்த கருத்துக்கு, கடும் வட்டியைக் கண்டனம் செய்வது பொருத்தமாகவே உள்ளது என்று அவர் கூறுவது சரியென்றே நான் நினைக்கிறேன். முகமது மக்கா சமூகத்தில் காணப்பட்ட பதுக்கல், கொள்ளை லாபம் அடித்தல், அநாதைகளின் உரிமைகளைக் கைப்பற்றிக் கொள்ளுதல் போன்ற பல்வேறு பொருளாதாரக் கேடுகளைக் கண்டனம் செய்து வந்தார் என்பதை நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். எனவே, மக்காவின் பணக்கார வர்த்தகர்கள் பலர் பின்பற்றி வந்த கடும் வட்டி முறையினால் நலிந்த பிரிவு மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி வந்ததால் அதை அவர் கண்டனம் செய்தது வியப்பல்ல. "ரிபா" பற்றிய வசனத்தை விளக்கும் போது இபின் ஜாரீர் (Ibn Jarīr) கூறுவது போல, தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரர் அப்பாஸ் ('Abbās) பெரும் அளவில் இந்தத் தொழிலை நடத்தி வந்தார். மக்கா காலத்தைச் சேர்ந்த பெரும்பாலான வசனங்களைப் போல "ரிபா" பற்றிய வசனமும் கண்டனம் செய்வதாக உள்ளதேயன்றி, தடை செய்யும் கட்டளையாக இல்லை. காரணம், தெளிவாகத் தெரிகிறது. மக்காவில் முகமது, லட்சியக் கனவுகளை மக்களுக்கு எடுத்துக்கூறும் ஞானியாக இருந்தாரேயன்றி ஒரு அரசின் தலைவராக இருக்கவில்லை. ஆனால் மதீனாவில் அவர் லட்சியங்களை எடுத்துக் கூறும் ஞானியாகவும் அதே சமயம் சட்டம் இயற்றும் அரசுத் தலைவராகவும் இருந்ததனால், வெறும் கண்டனங்கள் மட்டுமின்றித் தெளிவான கட்டளைகளை வெளியிட்டார்.

மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற பின் கடும் வட்டியை உறுதியாகத் தடை செய்து குரான் இவ்வாறு கூறுகிறது: "விசுவாசிகளே, உங்கள் செல்வத்தை பலமுறை இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ள வட்டியின் மூலம் நீங்கள் உண்டு உயிர் வாழாதீர்கள். அல்லாஹ்விடம் அச்சம் கொள்ளுங்கள்; நீங்கள் செழிப்பீர்கள். நரக நெருப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். (குரான் 3:130). மதீனா காலத்தில் இதன்பின் வெளிப்படுத்தப்பட்ட வேறு வசனங்களும் 'ரிபா'வைத் தடை செய்தன. "வட்டியைத்

www.padippakam.com



தின்று வாழ்பவர்கள் இறுதித் தீர்ப்பு நாளில் சைத்தான் அறைந்து பைத்தியம் கொண்டவர்கள் போலத்தான் எழுந்திருப்பார்கள். அது வட்டியும் வியாபாரம் போன்றதுதான் என்று அவர்கள் கூறிய காரணத்தினால்தான். ஆனால், அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து, வட்டியைத் தடை செய்துள்ளான். தமது இறைவனிடமிருந்து உபதேசம் வந்து தன் செயலைத் திருத்திக் கொள்பவர் ஏற்கெனவே சம்பாதித்ததை வைத்துக்கொள்ளலாம். அவருடைய விதி அல்லாஹ்வின் கையில் இருக்கிறது. அல்லாஹ் வட்டியைச் சபித்து தர்மங்களை ஆசீர்வதித்து வளரச் செய்கிறான். தன்னிடம் பயபக்தி இல்லாதவர்களையும் பாவிகளையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான். யார் விசுவாசங்கொண்டு நற்செயல்கள் செய்து, தொழுகையைக் கடைப்பிடித்து, ஜக்காத்தைக் கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு இறைவனிடத்தில் நற்கூலி இருக்கிறது. அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். விசுவாசிகளே, நீங்கள் அல்லாஹ்விடம் அச்சம் கொண்டு, உங்கள் விசுவாசம் உண்மையானதாயிருந்தால் வட்டியில் மீதியுள்ளதை வாங்காமல் விட்டுவிடுங்கள். நீங்கள் இவ்வாறு செய்யவில்லையென்றால் அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்கள் மேல் போர் தொடுப்பார்கள். ஆனால் நீங்கள் தவறுக்கு வருந்தித் திருந்திவிட்டால் உங்களுடைய அசல் தொகைகள் உங்களுக்கு உண்டு. பிறருக்கு இழப்பு ஏற்படுத்தாத நிலையில் உங்களுக்கும் இழப்பு இல்லை. உங்களிடம் கடன்பட்டவர் கஷ்ட நிலையில் இரு'தால் அவர் அதைத் திருப்பிக் கொடுக்க வசதியான நேரம் வரும் வரை அவகாசம் கொடுங்கள். ஆனால், அதை அவருக்கு நீங்கள் தருமமாக விட்டுவிடுவது, அதன் நன்மையை நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்." (குரான் 2: 272—280)

மேலே எடுத்துக்காட்டப்பட்ட வசனங்கள் 'ரிபா' பற்றிக் கடைசியாகக் கூறப்பட்டவை. அதைத் தடை செய்யும் தெளிவான கட்டளைகளை இவை தெரிவிக்கின்றன. கடும் வட்டி வாங்குவோருக்கும் கடுமையான தண்டனையாக அவர்கள் மீது போர் தொடுக்கப்படும் என்று கூறியிருப்பதும், கஷ்ட நிலையில் உள்ளவர்களிடமிருந்து கடன்களைத் திரும்பப் பெறுவதைத் தள்ளிப் போடும்படியும், கடன் முதல்களையே ரத்து செய்துவிடும்படியும் கட்டளைகள் கூறியிருப்பதும், முழுமையான சீர்திருத்தம் செய்வது இந்த வசனங்களின் நோக்கம் என்பதைக் காட்டுகின்றன. மக்காவிலும் மதீனாவிலும் நிலவிய கடும் வட்டிமுறை காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட தீமைகளைப் புரிந்து கொள்வது அவசியம்.

படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமுக்கு முந்திய காலமான ஜாஹில்லியா(Jāhiliyya) காலத்தில் கடும் வட்டி முறை பரவலாக வழக்கத்தில் இருந்தது என்பது சில ஆதாரங்களிலிருந்து தெரிகிறது. இமாம் மலிக் எழுதிய "முவத்தா"வில் இதைப் பற்றிய மரபுச் செய்தி குறிப்பிடப் படுகிறது: "ஜாஹிலிய்யா காலத்தில் "ரிபா" இவ்வாறு இருந்தது: ஒருவர் இன்னொருவரிடமிருந்து குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தொகையைப் பெற்றிருந்தால், அந்தக் கால அளவு முடிந்தவுடன் கடன் கொடுத்தவர் அதை வாங்கியவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறீரா அல்லது கால அளவை நீட்டிக்க வேண்டுமா என்று கேட்பார். அவர் திருப்பிக் கொடுத்தால் பெற்றுக் கொள் வார். இல்லையென்றால் அவர் கடன் தொகையை அதிகமாக்கி விட்டுக் காலத்தையும் நீட்டித்துக் கொடுப்பார்."[36] தபரியும் "ரிபா" பற்றிய வசனத்தை (விசுவாசிகளே, உங்கள் செல்வத்தைப் பலமுறை இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ள வட்டியின் மூலம் நீங்கள் உண்டு உயிர் வாழாதீர்கள்) விவரிக்கையில் இஸ்லாமுக்கு முந்திய காலத் தில், கடன் வாங்கியவர் உரிய காலத்தில் அதைத் திருப்பிக் கொடுக்காமல் போனால் கடன் கொடுத்தவர், கடன் தொகையை இரண்டு மடங்காக உயர்த்திய வழக்கத்தை இந்த வசனம் குறிப் பிடுவதாகக் கூறுகிறார். இவ்வாறாக 100 என்ற தொகை அடுத்த ஆண்டில் 200 ஆகவும், அந்த 200 அதற்கு அடுத்த ஆண்டில் 400 ஆகவும், இப்படியே உயர்ந்து கொண்டுப்போகும்.[37]

டாக்டர் ஃபஜ்லுர் ரெஹ்மான் இமாம் கையிமை மேற்கோள் காட்டி "ரிபா" பற்றிய கருத்தை விளக்குகிறார். அதன் சுருக்கம் வருமாறு: ரிபா இரண்டு வகைப்படும்: (1) தெளிவான நேரடி யான வடிவம் (2) மறைமுகமான வடிவம். முதல் வடிவம் நிச்சயமான முறையில் தடை செய்யப்படுகிறது; ஏனென்றால் அதில் பெரும் தீமை இருக்கிறது. இரண்டாவது வடிவமும் தடை செய்யப்படு கிறது, ஏனென்றால் அது முதல் வடிவத்துக்கு வழி செய்து கொடுக்கிறது. முதல் வடிவம் கடும் வட்டி முறையாகும். ஜாஹிலிய்யா காலத்தில், கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாததற்காகக் கடன் தொகையை அதிகரிக்கும் வழக்கம் இது. இதன் மூலம் சில சமயங் களில் கடன் வாங்கியவருக்கு எந்த நன்மையும் இல்லாமல் கடன் தொகை ஆயிரம் மடங்கு அதிகரித்ததால் கடன் வாங்கியவர் ஒரேயடியாக மூழ்கிப் போவார். கடன் வாங்கியவர்களின் துன்பத் தின் மூலம் கடன் கொடுத்தவர் பணக்காரராகிவிடுவார். அதனால் தான் கடவுள் தனது பேரறிவின் மூலம் அதைத் தடை செய்தார்.

36. Imam Mālik, *Muwatta*, Kitab al-Buyū, no.38.

37. Tafsir al-Tabari, Vol.vii, பக்கம் 204-205.

www.padippakam.com



கடவுள் கடும் வட்டிக்கு எதிராகத் தர்மத்தை வைத்தார்.[38] "ரிபா" வின் மற்றொரு வடிவம் என்று இமாம் கையிம் கூறுவது முதன்மை யாக லாபத்தை நோக்கமாகக் கொண்ட வர்த்தகம். இது மறைமுகமான கடும் வட்டி என்றும் அதனால் அது தடை செய்யப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். குரானுக்கு விளக்கவுரை எழுதிய மற்றும் அறிஞரமான அல்லாமா ஹஜர் அஸ்கலானி ('Allāma Hajar 'Asqatāni) யும், "ரிபா" என்ற கருத்து தடைசெய்யப்பட்ட எந்த வர்த்தக முறைக்கும் பொருந்தும் என்று கூறுகிறார்.[39]

சில பாகிஸ்தானியப் பொருளாதார நிபுணர்களும்,[40] பண வீக்கப் போக்குக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வங்கிச் சேமிப்புகளின் வட்டியை ஒழிப்பது சிறு சேமிப்பாளர் களை பெரிய முதலாளிகள் மேலும் சுரண்டுவதற்கு வழி செய்யும் என்று சமீபகாலத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பெரிய முத லாளிகள் இந்தச் சேமிப்புகளிலிருந்து வட்டியில்லாத கடன் பெற்று மிகப் பெரும் அளவில் லாபமடைவார்கள். இந்தக் கடன் தொகை களை உயர்ந்த லாபம் அளிக்கும் முதலீடுகளில் குறிப்பாகச் சுக போகப் பொருள்கள் உற்பத்தி, நவீனக் கட்டிடங்கள் போன்றவற் றில் செலவழித்து மிகுந்த லாபம் பெறுவார்கள். ஆனால், சிறு சேமிப்பாளர்களுக்கு வட்டி கிடைக்காமல் போவதால் பணவீக்கம் காரணமாக அவர்களது சேமிப்புக்களின் மதிப்பு குறைந்து கொண்டே போகும். வட்டி இல்லாத வங்கிகளை அமைத்துவிட்டு, கொள்ளை லாபத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், ஊதியப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்காவிட் டால், பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. இந்தப் பொருளாதார நிபுணர்கள், "ரிபா" என்பது வட்டியை மட்டும் குறிக்காமல் கொள்ளை லாபத்தையும் குறிப்பதாகப் பொருள் கொள்ள வேண் டும் என்று கூறுகிறார்கள். மத்திய காலச் சிந்தனையாளர்களும், குரான் விளக்கவுரையாளர்கள் இபின் கையிமும் "ரிபா" பற்றிக் கூறியதை இது ஆதரிப்பதாயிருக்கும். உண்மையில், சில இஸ்லாமிய நாடுகளில் வட்டியில்லாத வங்கி முறை பற்றிய பேச்சுக்களெல்லாம் வட்டியை ஒழித்து "லாபத் தத்துவத்தைக்" காப்பாற்றிக் கொள்ளும் முயற்சிகளேயாகும். ஏனென்றால் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சுரண்டலுக்குப் பிரதான கருவியாயிருப்பது லாபமே; வட்டி அல்ல.

இவ்வாறாக, தீர்க்கதரிசி கடும் வட்டியையும் அதன் பல்வேறு வடிவங்களையும் தடை செய்ததன் மூலம் சமூகத்தில் மிகவும்

38. A'lām al-Mūg'in, Vol.1, (Delhi 1313 A.H.) பக்கம் 200-201.
39. 'Allama Hajar 'Asqalani, Fath al-Barı, Vol.iv (Cairo 1319 A.H.) பக்கம் 250.
40. பார்க்க: *"An Agenda for Islamic Economic Reform,"* Pakistan Institute of Development Economics, 1980, mimeograph, பக்கம் 7.

www.padippakam.com



தீவிரமாகியிருந்த பொருளாதார சமநிலைச் சீர்கேடுகளைத் திருத்த முயன்றார். மதீனாவிலும் யூதர்களின் கடும் வட்டி முறைகள், பொருளாதாரத்தில் நலிந்தவரான முஸ்லிம்களுக்குக் கவலையளித்து வந்தன. எனவே முகமது அவற்றை முற்றிலுமாகத் தடை செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், ஜெர்மனியில் பதினைந்தாம் நூற்றாண்டில் இதே போன்ற நிலைமை இருந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது கிறிஸ்தவ மதத்தலைமை தலையிட்டு உறுதியாக அதைக் கண்டனம் செய்ய வேண்டியிருந்தது. ஆர்.எச்.டானே (R.H. Tawney) எழுதுகிறார்: "நீண்ட காலமாக கைவினைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும் மனக்குறைக்குக் காரணமாயிருந்த கடும் வட்டி முறையை எதிர்த்து இப்போது அவர்கள் போர்க்குரல் எழுப்பினார்கள். ஒவ்வொரு நகரிலும் நகர சபை நிர்வாகிகள், கடும் வட்டிக்காரர்களை ஒடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் குரல் எழுப்பியதைக் கண்டு பயந்து, பல்கலைக் கழகங்களையும், மதகுருமார்களையும் அணுகி, வட்டி வாங்குவது சட்டபூர்வமானதுதானா என்பது பற்றி விளக்கம் கோரினார்கள். இவர்களும் தங்கள் வழக்கம் போல அழுத்தமாக, ஆனால் மிகக் குழப்பமாக பதில் அளித்தார்கள். மெலாங்க்தான் (Melanchthon) என்பவர் கடன் கொடுத்தல் பற்றியும் விலைகள் பற்றியும் கடவுளின் தத்துவத்தை விரிவாக விளக்கினார். கால்வின் (Calvin) கடும் வட்டி பற்றி புகழ்பெற்ற கடிதம் ஒன்றை எழுதியதோடு, அதைப் பற்றித் தேவாலயங்களில் பிரார்த்தனை சமயங்களில் அறவுரைகளும் நிகழ்த்தினார்."[41] இவ்வாறாக, சுரண்டப்பட்ட மக்கள் கடும் வட்டியை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வன்மையாக எழுப்பி நெருக்கினார்கள். முகமது அதை ஒழித்தார். அக்காலத்தைப் பற்றிய புள்ளிவிவரங்கள் இல்லை என்றாலும், கடும் வட்டியின் சுமையினால் நசுக்கப்பட்டு வந்த பலருக்கு அதன் மூலம் நிச்சயமாகப் பெரும் நிம்மதி கிடைத்திருக்கும். ஆனால், இஸ்லாமிய சமூகத்தில், எந்தவொரு மதக் கோட்பாட்டுக்கும் ஏற்படுவது போல, "ரிபா"வின் பொருளும், கண்டனம் செய்யப்பட்ட மற்ற வர்த்தக நடைமுறைகளை மட்டுமின்றி, எந்த வடிவிலான வட்டி முறையையும் உள்ளடக்கியதாகக் கொள்ளப்பட்டது. எனவே, கடும் வட்டி மட்டுமின்றி நியாயமான அளவிலுள்ள வர்த்தக வட்டி கூடத் தடை செய்யப்பட்டது. டாக்டர் ஃபஜ்லுர் ரெஹ்மான் ரிபா பற்றிய பல்வேறு மரபுகளும் உருவாகி வளர்ந்த வரலாற்றை எடுத்துக்கூறி, ரிபா என்பதற்கு பிற்காலத்தில் கூறப்பட்ட பொருள்கள் தீர்க்கதரிசியின் காலத்தில் இல்லை என்று நிரூபித்திருக்கிறார். அவர் ஸுனன்-ஏ-அபி தாவூதில், அஹமத் பின் ஹன்பல் தெரிவித்ததாகக் கூறப்படும் ஒரு

41. R.H. Tawney, *Religion and the Rise of Capitalism* (லண்டன், 1969) பக்கம் 91.

www.padippakam.com



மரபுச் செய்தியை மேற்கோள் காட்டுகிறார். ஜாபிர் பின் அப்த் அல்லா தீர்க்கதரிசிக்கு ஒரு தொகை கடன் கொடுத்திருந்ததாகவும், அவர் அதைத் திருப்பிக் கொடுக்கும் போது முதலில் வாங்கியிருந்த தொகையைவிடச் சற்று அதிகமாகக் கொடுத்ததாகவும் இந்த மரபுச் செய்தி கூறுகிறது. ஆயினும், பிற்காலத்தில் இஸ்லாமில் வட்டி தடை செய்யப்பட்ட பிரச்சினை பற்றி மதத் தத்துவ அறிஞர்கள் அனைவரும் ஒருமனதான கருத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்தத் தடை சமூகத்தின் எதார்த்த நிலைமைகளுக்குப் பொருந்தாமலிருந்ததால், அதைப் பின்பற்றுவதைவிட அதிகமாக மீறுவதே வழக்கமாயிற்று. இஸ்லாமிய சமூகத்தின் ஆரம்பநாட்களிலிருந்தே வட்டி கொடுப்பதும் வாங்குவதும் நடைமுறையில் இருந்தன. பின்னாளில், 'மனச்சாட்சியுள்ள' முஸ்லிம்கள் வட்டி வாங்கவில்லை என்று பாவனை செய்துகொண்டு வட்டி வாங்கிக்கொள்வது எப்படி என்று கூறும் கித்தாப்-அல்-ஹியல் (Kitab-al-Hiyal) என்ற புத்தகம் எழுதப்பட்டது. இந்தப் புத்தகத்தில் இதற்குக் கூறப்பட்டுள்ள ஒரு தந்திரத்தைப் பார்ப்போம். நான் ஒரு படகை ஒருவருக்கு ரூ.125-க்கு விற்கிறேன். அவர் ஒரு வருடம் கழித்துத்தான் எனக்கு அந்தப் பணத்தைத் தர வேண்டும் என்பது ஏற்பாடு. உடனேயே அந்தப் படகை ரூ.100-க்கு, கைமேல் பணம் கொடுத்து மீண்டும் வாங்கிச் கொள்கிறேன். இவ்வாறாக அவருக்குத் தேவையான ரூ.100 கிடைக்கிறது. எனக்கு ஒரு வருடத்துக்குப் பின் ரூ.125 கிடைக்கும். இஸ்லாமிய உலகில், வட்டி வாங்குவதால் ஏற்படும் பழிச் சொல்லைத் தவிர்ப்பதற்காக இம்மாதிரியான தந்திரம் பரவலாகப் பின்பற்றப்பட்டது. சித்தாந்தத்தின் மூலமாக மட்டும் மாறுதல்களை ஏற்படுத்திவிட முடியாது என்பதையும், அடிப்படையான பொருளாதாரக் கட்டமைப்பு (உற்பத்தி உறவு நிலைகள்) சித்தாந்தத்துக்கு முரணாக இருந்தால் அவற்றை மாற்றினால்தான் பலன் உண்டு என்பதையும் இது மீண்டும் எடுத்துக்காட்டுகிறது. ஆனால், எதார்த்தத்தை எந்தவொரு சித்தாந்தக் கோப்புச் சட்டத்திலும் பொருந்தி அமையுமாறு வார்ப்படம் செய்துவிட முடியும் என்று கூறுவதாக இதை எடுத்துக் கொள்ளக்கூடாது. கம்யூனிச நாடுகளின் சமீபகால அனுபவங்களும் இதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. சித்தாந்தம் எவ்வளவுதான் 'விஞ்ஞான ரீதியாக' இருந்தாலும் அது பண்பு மதிப்பீடுகளை நோக்கியதாகவே அமைகிறது. (உண்மையில் அதன் பண்பு மதிப்பீடு அம்சம், விஞ்ஞான அம்சத்தைவிட முக்கியமானது. "விசுவாசிகளின்" கருத்து வேறு விதமாக இருக்கலாம்). எதார்த்தம் என்பது பல்வேறு சிக்கலான காரணிகளால் உருவாக்கப்படுகிறது. இந்தக் காரணிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகக் கூட இருக்கலாம். வட்ட வடிவத்தை உருவாக்க வேண்டும் என்பது நோக்கமாயிருந்தால் சித்தாந்தத்தின்

www.padippakam.com



பல்வேறு முரண்பட்ட சக்திகளின் செயல்பாட்டின் காரணமாகக் கிடைக்கும் வடிவம் நீள்வட்டமாக அமையலாம்.

மதீனாவில் முகமது தமது நிலையைப் படிப்படியாக உறுதிப் படுத்திக் கொண்டார். குறிப்பாக, "யூதர் பிரச்சினை"யைத் தீர்த்த பிறகு அவர் எல்லோரையும் விடச் சக்திமிக்கவரானார். அவரது ஒவ்வொரு சொல்லும் மதித்து நடக்கப்பட்டது. எந்தவொரு முக் கியமான விஷயத்தைக் குறித்தும் அவர் என்ன சொன்னாலும் அது சட்டம் ஆயிற்று. அவரது செயல்கள் அவரது தோழர்களும், உலகம் முழுவதிலும் தலைமுறை தலைமுறையாக முஸ்லிம் மக்கள் அனைவரும் பின்பற்றி நடக்கத்தக்க முன் உதாரணங்கள் ஆயின. பிற்காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்படும் போதெல்லாம், அதைப் போன்ற ஒரு நிலைமையில் முகமது என்ன சொன்னார் அல்லது செய்தார் என்று ஆய்ந்தார்கள். எனவே, சில பிரச்சினைகளில் முகமது என்ன சொன்னார் என்பதையும், அவற்றின் சரியான சரித்திர, சமூகப் பின்னணிகளையும் பார்ப் பது பொருத்தமாகும். இவ்வாறு அவர் கூறியவை இஸ்லாமிய அரசுக்குச் சட்ட அடிப்படையாக அமைந்தன. அடிமை முறை, கடும் வட்டி ஆகிய பிரச்சினைகளை இந்த முறையில் நாம் ஏற் கெனவே பார்த்தோம். இப்போது பெண்களின் அந்தஸ்தை இஸ்லாமின் தீர்க்கதரிசி எவ்வாறு தீர்மானித்தார் என்பதைக் காண்போம்.

அரேபிய சமூகம் சாராம்சத்தில் இனக்குழுச் சமூகம் என்பது நமக்குத் தெரியும். அத்தகைய சமூகத்தில் பெண்களுக்கு மேம்பட்ட அந்தஸ்து அளிக்கப்படுகிறது. நிலப்பிரபுத்துவ முறையில் பெண் கள் முற்றிலுமாகக் கீழடங்கியவர்களாகவும், ஆண்கள் மறுக்க முடியாத மேல்நிலையைப் பெற்றவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். இனக்குழுச் சமூகத்திலும் கூட தந்தைவழிச் சமூகம் இருந்தால் பெண்களுக்குச் சம அந்தஸ்து இருக்கும் என்று கூற முடியாது. நிச்சயமாகச் சம அந்தஸ்து கிடையாது. மற்றச் சமூகங்களுடன் ஒப் பிடும் போது இந்தச் சமூகங்களில் அவர்களின் அந்தஸ்து மேம்பட்ட தாக இருக்கும். அரபு இனக்குழுக்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே தந்தைவழிச் சமூக முறையைக் கொண்டவை. மதீனாவில் மிகப் பழங்காலத்தில் தாய்வழிச் சமூகம் இருந்திருக்கலாம் என்றும், முகமதுவின் காலத்தில் அது மாறுதல் கட்டத்தில் இருந்தது என்றும் மாண்ட்காமரி வாட் கூறுகிறார் என்றாலும், இந்தக் கருத்துக்குச் சரித்திர ரீதியான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. அண்டை நாடுகளில் வடகிழக்கே பாபிலோனிலும், வடக்கே பாலஸ்தீன், ஸிரியா ஆகிய நாடுகளிலும் வரலாறு தெரிந்த காலம் முதல் தந்தை வழிச் சமூகமே நடைமுறையில் இருந்து வந்தது. மேலும் அரேபிய பாலைவனத்தின் கடினமான வாழ்க்கை நிலைமைகளில் ஆணின்

www.padippakam.com



நிலைமை உயர்வாயிருப்பது பெரும் அளவுக்குத் தவிர்க்க முடியாததாகிறது. குரானும் இந்த ஆண் உயர்வு நிலையையே ஏற்றுக் கொண்டு தெளிவாகக் கூறுகிறது: "பெண்கள் மீது உள்ள உரிமைகளைப் போலவே, பெண்களுக்கும் உரிமைகள் உண்டு. ஆயினும் ஆண்களுக்கு அவர்களைவிட உயர்வான தகுதி இருக்கிறது. அல்லாஹ் வல்லமை உள்ளவனாகவும் யாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கிறான்." (குரான் 2:228) குரானின் இந்த வசனம், முகமதுவின் காலத்தில் அரேபியச் சமூகத்தில் பெண்ணுக்கு இருந்த உண்மையான நிலையைக் காட்டுகிறது. ஆணுக்குச் சற்றே அனுகூலம் இருந்தபோதிலும் பெண்ணின் நிலை ஆணைவிடத் தாழ்ந்ததாக இல்லை. பெண்ணுக்குச் சொத்துரிமையும் இருந்தது என்பதைப் பின்பு காணவிருக்கிறோம். முகமதுவின் முதல் மனைவி, திருமணத்திற்கு முன் தாமே தனியாக வர்த்தகம் நடத்தி வந்தார். அவர் தாமே முதலீடு செய்து நடத்திய வர்த்தகத்தில்தான் முகமது பின்பு சேர்ந்துகொண்டார். தகுதியுள்ள அநாதைகள், விதவைகள் முதலானவர்களை முகமது தமது மனைவி கதீஜாவிடம் உதவிக்குப் பரிந்துரை செய்ததாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கிறார்கள். இதிலிருந்து, கணவன் தனது மனைவிக்குச் சொந்தமான பொருளை அவளுடைய சம்மதமில்லாமல் செலவிட முடியாது என்று தெரிகிறது. அப்த் அல்-முத்தலிபின் தாயாரான ஸல்மா அந்-நாஜ்ஜரியா தமது திருமண சமயத்தில், தமது விருப்பப்படி கணவரை விவகாரத்து செய்துவிடும் உரிமை தமக்கு இருக்க வேண்டும் என நிபந்தனை விதிப்பது வழக்கம் என்று இபின் ஹிஷாம் கூறுகிறார்.[42]

ஆர்.ஏ.நிக்கல்ஸன் "அரேபியரின் இலக்கிய வரலாறு" (A Literary History of the Arabs) புத்தகத்தில் கூறுகிறார்: மொத்தத்தில் அவர்களின் (அதாவது, பெண்களின்) நிலைமை உயர்வாகவும், செல்வாக்கு மிகுதியாகவும் இருந்தது. அவர்கள் தங்களுக்கு விருப்பமான கணவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் இருந்தது; கணவர் வீட்டில் மோசமாக நடத்தப்பட்டாலோ, அல்லது விருப்பம் இல்லாவிட்டாலோ அவர்கள் தங்கள் மக்களிடம் திரும்பிச் சென்றுவிட முடியும். சில சந்தர்ப்பங்களில் அவர்களே முன்வந்து திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்; விவகாரத்து உரிமையும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் அடிமைகளாகவோ, உடைமைப் பொருள்களாகவோ நடத்தப்படவில்லை. சம உரிமை பெற்றவர்களாகவும் தோழியராகவும் நடத்தப்பட்டனர். கவிஞர்கள் கவிதை எழுதவும், போர்

42. பார்க்க ஹமீதுல்லா, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம். ஹிஷாமின் புத்தகத்திலிருந்து அவர் மேற்கோள்காட்டி இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார். (பக்கம் 8).

www.padippakam.com



வீரர்கள் போர் செய்யவும் அவர்கள் ஊக்கமளிக்கும் சக்தியாக இருந்தார்கள். மத்திய காலத்தின் "ஷிவல்ரி" (Chivalry), என்ற வீர முறைமை ஒருவேளை வேதப் புத்தகங்களைச் சாராத மதத்தைக் கொண்ட அரேபியாவில் தோன்றியதாக இருக்கக்கூடும்.[43]

பால் உறவு விதிகளும் கடுமையாக இல்லை. பெண்களே இந்த விஷயத்தில் முந்திச் செயல்பட்டு ஆண்களின் கவனத்துக்கு அழைப்பு விடுப்பதும் உண்டு. தபரி, தீர்க்கதரிசியின் தந்தையின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்: "பலி கொடுத்து முடிந்த பின் அவர் (அப்த் அல்-முத்தலிப்) காபாவிலிருந்து தமது புதல்வர் அப்தல்லாவின் கையைப் பிடித்துக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். பனி- அஸத் குழுவைச் சேர்ந்த உம்-ஏ-கித்தல் பின்ட் நவுஃபல் ('Umm - e - Qital bint Naufal) என்ற பெண்ணை (அவளும் காபாவுக்குச் சென்றிருந்தாள்) அவர்கள் கடந்து செல்ல நேர்ந்தது. அவள் அப்தல்லாவின் முகத்தைப் பார்த்து நீர் எங்கே போகிறீர்? என்று கேட்டாள். 'நான் என் தந்தையுடன் போகிறேன்' என்று அவர் பதில் கூறினார். அதற்கு அவள், 'பிரார்த்தனை நிறைவேற்று வதற்காக வெட்டப்பட்ட ஒட்டகத்தையெல்லாம் நீர் எடுத்துக் கொள்ளும். இப்போதே என்னுடன் படுக்க வாரும்' என்றாள். அதற்கு அப்தல்லா, 'என் தந்தை என்னுடன் இருக்கிறார். அவருடைய எண்ணத்துக்கு எதிராக நான் செயல்பட விரும்பவில்லை; அவரிட மிருந்து பிரிந்து செல்லவும் விரும்பவில்லை,' என்று பதில் கூறி னார்." [44] அந்தப்பெண், நேரடியாக, ஒரு பொது இடத்தில் பால் உறவுக்கு அழைப்பு விடுத்தாள் என்பது தெரிகிறது. இதிலிருந்து இனக்குழு அரேபியாவில் பெண்களுக்குக் கணிசமாகச் சுதந்திரம் இருந்ததென்பது தெரிகிறது. பலதார முறை பரவலாக வழக்கத்தில் இருந்தாலும், ஆளும் வர்க்கம் என ஒன்றும் இல்லை; பெண்கள் உடைமைப் பொருள்களைப் போல் நடத்தப்படும் பெரிய அந்தப் புரங்களும் இல்லை. இதற்கு மாறாக, அரசு அமைப்பும், ஆளும் வர்க்கமும் வளர்ச்சி பெற்றிருந்த வடக்கிலும் வடகிழக்கிலும் பெண்கள் இவ்வளவு சுதந்திரமாக இல்லை என்பதையும், அந்தப் புரங்கள் ஏற்கெனவே உருவாகி இருந்தன என்பதையும் கவனிக்க வேண்டும். (முஸ்லிம்கள் பரந்த பேரரசின் எஜமானர்களாக ஆன பிறகு இதே நிலை பெரிய அளவில் உருவாயிற்று). கஸ்ஸனிட் பேரரசர்களின் அரசவையில் பாடும் பெண்களும், நடனப் பெண்களும், குறிப்பாக வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந் ததைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். முகமது மதீனாவில் இருந்த போது பெண்கள் சம்பந்தமான பல பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அவர்கள் மற்றவர்களிடம் எப்படி நடந்து

43. Nicholson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 87-8
44. Tārikh-e-Tabari, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 27.

www.padippakam.com



கொள்ள வேண்டும்? மற்றவர்கள் அவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? திருமணம், மணவிலக்கு சம்பந்தமாக பல பிரச்சினைகள் வந்தன. பெண்களுக்கு சொத்து வாரிசுரிமை, சமூகத்தில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களுக்கு என்ன அந்தஸ்து இருக்க வேண்டும் என்பது போன்ற பிரச்சினைகளும் எழுந்தன.

சில மரபு வழக்கங்கள் இருந்தபோதிலும் முறையான விதிகள் எதுவும் இருக்கவில்லை. மேலும், இனக்குழுச் சமூகத்தில் நீண்ட காலப் போக்கில் உருவான இந்த மரபு வழக்கங்கள், புதிய நிலைமைகளில் முரண்பாடுகளை ஏற்படுத்தின. எனவே நிலையாக வாழும் நாகரிகத்துக்குத் தகுந்தபடி புதிய சட்டங்கள் தேவைப்பட்டன. சண்டைகள் பல நடந்து, பலர் கொல்லப்பட்டு, ஆண்களும், பெண்களும் பலர் சிறைப்பிடிக்கப்பட்ட நிலைமையில் பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. அந்த நாட்களில் மக்காவிலும் மதீனாவிலும் நிலைமை விரைவாக மாறிக்கொண்டிருந்தது. உடனடியான சில பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. குரான் வசனங்கள் பல, இம்மாதிரி உடனடிப் பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், குரானியச் சட்டங்களின் மிக முக்கியமான அம்சம், அவை குறிப்பிட்ட நிலைமைகள் சம்பந்தப்பட்டவை என்பதாகும். எனவே அவற்றை அந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். இந்த விதிகளை உருவாக்கும் போது அந்த இடத்தின் மரபு வழக்கங்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பிற்காலத்தில் இஸ்லாமிய ஷரீயா (Sharī'a) சட்டங்களாகத் தொகுக்கப்பட்ட சட்டங்களில் இந்த உள்ளூர் அம்சங்களும் சேர்ந்தே உள்ளன; இவற்றை மாற்ற முடியாதவையாகக் கருதுவது தவறாகும். உதாரணமாக, பலதார மணம் அரேபியாவில் இஸ்லாம் தோன்றுவதற்கு மிகவும் முந்திய காலத்திலிருந்தே இருந்து வந்தது. முகமது, அதில் சில கட்டுப்பாடுகளைச் சேர்த்து அந்த முறையை ஏற்றுகொண்டார். அடிமைகளுக்கு விடுதலை அளிக்க ஊக்கமளித்து, அதே சமயம் அந்த முறை தொடருவதற்கும் அனுமதியளித்ததைப் போன்றதே இதுவும். சட்டத்தைத் தருபவரும் சீர்திருத்தவாதியும் கண்ணெதிரேயுள்ள சரித்திர ரீதியான நிலைமையைக் கருத்தில் கொண்டேயாக வேண்டும். மிக உயர்ந்த லட்சியப் பார்வை கொண்டவராக இருந்தாலும் வெற்றிகரமான சீர்திருத்தவாதி நிகழ்காலத்தைப் புறக்கணித்துவிட முடியாது. மேலும் முகமது, எப்படி இருக்கிறது என்பதற்கும், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் இடையே சமச்சீர் நிலை வைத்துக்கொண்டார். அவருடைய சட்டங்களில் சில, குறிப்பிட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டவை. எனவே அவருடைய சட்டங்கள் எல்லாமே மாற்றக்கூடாதவை என்று கருதுவது தவறாகும். பழமைக்குச் சப்பைக்கட்டுக் கட்ட முயலும்

www.padippakam.com



சிலர் இன்றும் கூட பலதார மணத்தை நியாயப்படுத்திப் பேசுகிறார்கள்.

இந்தச் சட்டங்களை ஆராய்வோம். ஏற்கெனவே குறிப்பிட்ட படி, அரபுப் பெண்களுக்குப் பால் உறவில் பெரும் அளவு சுதந்திரம் இருந்தது. இது இனக்குழு சமுதாயத்துக்குப் பொருத்தமாக இருந்தது. ஆனால், மக்காவிலும் மதீனாவிலும் இருந்தது போலக் குறிப்பிட்ட வடிவில் அமைந்த சொத்துரிமை முறையும் உற்பத்தி உறவு முறைகளும் கொண்ட சமூகத்தில் பால் உறவு நடத்தைகளும் அதற்குத் தகுந்தபடி இருக்க வேண்டும். இஸ்லாமின் தீர்க்கதரிசி இதில் கட்டுப்பாடுகள் கொண்டுவரத் தொடங்கினார். குரான் இவ்வாறு விதி செய்கிறது: "விசுவாசிகளான ஆண்கள் தங்கள் பார்வையைச் சபலத்திலிருந்து திருப்பிக் கொண்டு சரீர இச்சைகளைக் கட்டுப்படுத்துமாறு கூறுவீராக! இது அவர்கள் வாழ்வைப் பரிசுத்தமாக்கும். அல்லாஹ் அவர்களின் செய்கைகளை நன்கறிந்தவன். விசுவாசிகளான பெண்கள் தம் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்றும் தமது தூய்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவீராக! அவர்கள் தம் அலங்காரத்தை, (சாதாரணமாக வெளியில் தெரிவதைத் தவிர) வெளிக்காட்டக் கூடாது. தமது மறைப்புத்துணியை மார்பகத்தின் மேல் போட்டுக் கொள்ள வேண்டும். தம் அலங்காரத்தைக் கணவர்கள்,-தந்தையர், கணவர்களின் தந்தையர், தங்கள் புதல்வர்கள், தத்துப் புதல்வர்கள், தங்கள் பணிப்பெண்கள், அடிமைப் பெண்கள், இயல்பான உடல் சக்தி இல்லாத ஆண் பணியாளர்கள், பெண்களைப் பற்றிய உடல் அறிவு இல்லாத சிறுவர்கள் ஆகியோரைத் தவிர மற்றவர்களிடம் வெளிப்படுத்தக் கூடாது. தம் அலங்காரத்தில் மறைந்துள்ள அணிகலன்களை வெளிப்படுத்தும் பொருட்டு அவர்கள் தம் கால்களைப் பூமியில் அடித்து நடக்க வேண்டாம்." (குரான் 24: 30-31)

மேலே எடுத்துக்காட்டிய வசனத்திலிருந்து, நாடோடி சமூக நிலையிலிருந்து, வர்த்தக, விவசாய சமூக நிலைக்கு மாறியதைத் தொடர்ந்து, அதற்கேற்றபடி முன்னேறிய நாகரிக நிலையை அடைய விரும்பிய சமூகத்துக்குத் தகுந்த புதிய பால் உறவு விதிகளை உருவாக்க தீர்க்கதரிசி விரும்பினார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இனக்குழுச் சமூகத்தில், நாம் ஏற்கெனவே பார்த்தது போல, பால் உணர்ச்சிக்குச் சில கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் அது முற்றிலுமாக அடக்கி வைக்கப்பட வில்லை. ஆனால், நாகரிகமடைந்த சமூகத்துக்குப் பாலுணர்வை அடக்கி வைப்பது முற்றிலும் அவசியமானது என்று கருதப்பட்டது. நாகரிகச் சமூகத்துக்குத் தேவையான ஆக்க முயற்சிகளில் செலவிடுவதற்கு, பாலியல் சக்தியில் ஒரு பகுதியை உயர்ந்த வடிவங்களாக மாற்றுவது அவசியம் என்று ஸிக்மண்ட் ஃப்ராய்டும் (Sigmund Freud) கருதினார். பால்

www.padippakam.com



உணர்வு அடக்கம், மாறிவரும் உற்பத்தி உறவு நிலைகளின் விளைவு என்பதை நினைவில் வைக்க வேண்டும். ஆனால் ஃப்ராய்ட் சரித்திர ரீதியான, பொருளியல் ரீதியான மாற்றங்களைக் கவனிக் காமல் மனத்தத்துவத்தை மட்டுமே வைத்து இதற்கு விளக்கம் தரு கிறார். ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் (ஆணுக்கும் — ஆணுக்கும் இடையிலும் கூட) சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட பொருளியல் முன்னேற்றம் ஏற்படும் போது, ஆரம்ப கால சமூகத்தின் பாலியல் பொருளாதாரத்தில் எப்போதும் மாற்றம் உண்டாகிறது. வில்ஹெல்ம் ரைக் (Wilhelm Reich) கூறுகிறார்: "எதேச் சாதிகாரமான, தந்தை வழிச் சமூகத்தில் பாலியல் அவலங்களுக் குக் காரணமாயிருப்பது அதில் உள்ளார்ந்து அமைந்துள்ள பாலியல் மறுப்பும் அடக்கமுமாகும். இதனால் பாலியல் உடல் திரவச் சுழற்சி தடைப்பட்டு அதன் விளைவாக நரம்புத் தளர்ச்சி, பாலியல் வக் கிரங்கள், குற்றங்கள் ஆகியவை ஏற்படுகின்றன. எனவே, பாலியல் அடக்கலில் அக்கரையில்லாத சமூகத்தில் பாலியல் அவலங்கள் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு சமூகத்தின் மக்கள் பாலியல் பொருளாதார முறையில் வாழ்கிறார்கள் எனலாம்; அதாவது அவர் களின் பொருளாதாரத்தில் இயல்பாகவே சக்தி ஒழுங்குபடுத்தப் படுகிறது.[45] மேலும் ரைக் எழுதுகிறார்: "மனித குலத்தில் பொருளாதார ஆதாயத்தில் அக்கறை ஏற்படும்போதுதான் நீதி நெறி என்று வழிப்படுத்தும் பாலியல் கல்வி, வரலாற்றில் இடம் பெறத் தொடங்குகிறது. அந்த அக்கறையின் வளர்ச்சியுடன் அது வும் வளருகிறது. எனவே தந்தை வழிச் சமூகங்களில் நரம்புத் தளர்ச்சி நோய்களும் ஒரு அம்சமாகின்றன. மலிநவ்ஸ்கியின் ஆய்வு கள் இந்தத் தொடர்பை உறுதியாக நிரூபிக்கின்றன. பாலுறுப்புச் சுகத்தின் மூலம் பாலியல் வாழ்க்கையை தனக்குத்தானே ஒழுங்கு படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அவை நிரூபிக்கின்றன." [46]

பதூயின் இனக்குழுக்களில், பாலுறவு, டோபிரியண்டர் (Trobrianders) களிடையே உள்ளது போல அவ்வளவு தாராளமாக இல்லை என்றாலும், கட்டுப்பாடுகள் குறைவாகவே இருந்தன. ரைக் குறிப்பிட்டது போன்ற ஒரு வகையான பாலியல் பொருளாதாரம் நிலவியதாகவே தோன்றுகிறது. உற்பத்தி உறவு நிலைகளில் மாற்றம் ஏற்பட்ட பிறகு இந்தப் பாலியல் பொருளாதாரம் மக்கா, மதீனா போன்ற இடங்களில் தடுமாற்றமடைந்தது. இறுதியாக, புதிய நாகரிகமடைந்த சமூகத்துக்கு விதிகள் வகுத்துத் தந்து கொண்டிருந்த இஸ்லாமின் தீர்க்கதரிசி பாலுறவு சம்பந்தமாகச் சில கட்டுப்பாடுகளை விதித்தார். ஆயினும், பதூயின் சமூகத்துக்கும் நகரச் சமூகத்துக்கும்

45. Wilhelm Reich, *The Invasion of Compulsory Sex Morality* (லண்டன், 1975), பக்கம் 31.
46. மேற்படி, பக்கம் 52.

www.padippakam.com



இடையே பாலுறவில் இருந்த வேறுபாடுகள் சமீபகாலம் வரை நீடித்தன என்பது குறிப்பிடத்தக்கது. பதூயின் மக்களிடையே பலகாலம் வாழ்ந்துள்ள வில்ஃப்ரெட் தெஸிகர் (Wilfred Thesiger) கூறு கிறார்: அரேபியரிடையே குறிப்பாக, நகர மக்களிடையே ஓரினச் சேர்க்கை சாதாரணமாகக் காணப்படுகிறது. ஆனால் அரேபிய மக்களிலேயே இந்த வழக்கத்தைப் பின்பற்றுவதற்கு மிக அதிக மான தூண்டுதலுக்கு உள்ளாகும் பதூ மக்களிடையே இது காணப் படவில்லை. இவர்கள் தங்கள் பெண்களைப் பிரிந்து பல மாதங்கள் வாழ்கிறார்கள். லாரன்ஸ் தம்முடைய "ஞானத்தின் ஏழு தூண்கள்" (Seven Pillars of Wisdom) புத்தகத்தில், தம்முடன் துணையாக வந்த அரேபியர்கள் தங்கள் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள ஒருவரை யொருவர் பயன்படுத்திக் கொண்டதாகக் கூறுகிறார். ஆனால் அந்த ஆட்கள் பாலைவனச்சோலையைச் சேர்ந்த கிராமவாசிகள், பதூ மக்கள் அல்ல. ஐரோப்பியர்களிலேயே பதூ மக்களைப் பற்றி மிக அதிகமான விபரங்கள் தெரிந்தவரான க்ளப் (Glubb), அவர்களிடையே ஓரினச்சேர்க்கை அநேகமாக இல்லவே இல்லை என்று ஒருமுறை என்னிடம் கூறினார். நான் அவர்களுடன் வாழ்ந்த வாழ்க்கையில், இந்த வழக்கம் அவர்களிடம் இருந்திருந்தால், நான் அதை அறியாமல் இருந்திருக்க முடியாது. நாங்கள் மிக நெருக்க மாக வாழ்ந்தோம் என்றாலும் நான் அவர்களுடன் வாழ்ந்த காலம் முழுவதிலும் அதன் அடையாளமே காணப்படவில்லை. அவர்கள் அதைப் பற்றிப் பேசுவதும் கிடையாது."[47] இதேபோல, பாலியல் அடக்குதல் அறவே இல்லாத டோபிரியாண்டர்களிடையேயும் இத்தகைய வக்கிரங்கள் கிடையாது.

மேலே எடுத்துக்காட்டிய குரான் வசனம் அரேபியச் சமூகத்தில் பாலியல் அடக்குதலுக்கு முறையான ஒரு விதியை அமைத்தது. ஒரு பெண் தனது பாலியல் கவர்ச்சிகளை யாரிடம் காட்டலாம் என்று கண்டிப்பாக விதி செய்யப்பட்டது. பாலுறவு அனுமதிக் கப்படாதவர்களிடமும், பெண்களிடம் பாலுறவு ஆசையை அனுபவித்திராத குழந்தைகள் போன்றவர்களிடமுமே அவற்றைக் காட்டலாம். குறிப்பிட்ட உறவு வரம்புக்கு அப்பாற்பட்ட யாருடைய முன்னிலையிலும் ஒரு பெண் தனது பாதங்களால் தரையில் ஓங்கி மிதிப்பது கூடத் தடை செய்யப்பட்டது. அவள் மறைவாக அணிந் திருக்கும் ஆபரணங்கள், அதன் மூலம் புலப்படும் அவளது பாலியல் கவர்ச்சிகளும் வெளிப்படலாம் என்பதனால் இந்தத் தடை. எனி னும் ஆண்களுக்குப் பாலியல் விஷயங்களில் கணிசமாக தாராள உரிமை அளிக்கப்பட்டது. ஒரு ஆண் நான்கு பெண்களை மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன், தனது அடிமைப் பெண்களுடன்

47. Wilfred Thesiger, *Arabian Sands* (லண்டன், 1976) பக்கம் 125.

www.padippakam.com



எண்ணிக்கை வரம்பு இல்லாமல், பாலுறவு கொள்வதும் அனுமதிக்கப் பட்டது. குரான் கூறுகிறது: "உங்களுக்கு நல்லவர்களாகத் தோன்றும் பெண்களிலிருந்து நீங்கள் மணந்து கொள்ளுங்கள். இரண்டோ, மூன்றோ, நான்கோ மணந்து கொள்ளலாம். அத்தனை பேரிடமும் நீங்கள் நியாயமாக நடந்துகொள்ள முடியாது என்றால் ஒரு பெண்ணை மட்டும் அல்லது உங்கள் வலதுகை எடுத்துக்கொண்ட சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களை மணந்து கொள்ளுங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் அநியாயம் செய்யாமலிருக்கலாம்" (குரான், 17:4) மேலே எடுத்துக்காட்டப்பட்ட வசனம் இரண்டு விஷயங்களைக் கூறுகிறது: நான்கு மனைவிகள் வரை மணந்து கொள்ள அனுமதி; அடிமைப் பெண்களுடன் (உங்கள் வலதுகையில் உள்ளவர்களுடன்) பாலுறவு கொள்ள அனுமதி. இதற்கு மரபு வழியில் விளக்கவுரை கூறுவோர் ஒரு ஆண், தனது எல்லா மனைவியருக்கும் நியாய மாக நடந்து கொள்ள முடிந்தால் நான்கு மனைவியர்வரை மணக்கலாம் என்றும், அதற்கும் மேலே, அவன் தனது அடிமைப் பெண்களுடன் அல்லது போரில் பிடிபட்ட பெண்களுடன் பாலுறவு கொள்ளலாம் என்றும் பொருள் கூறுகிறார்கள்.

ஆயினும் குரானுக்கு நவீன காலத்தில் உரை கூறுவோர் சிலர் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. குரானில் பலதார மணம் பற்றிய இரண்டு வசனங்களும் அநாதைச் சிறுமியர், விதவைப் பெண்கள் ஆகியோரின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அருளப்பட்டவை என்று இவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்த அநாதைச் சிறுமியரின் காப்பாளர்கள் அவர்களுடைய சொத்துக் களை அபகரித்துக்கொள்வது அல்லது அவர்களுடைய நல்ல சொத்துக்களை எடுத்துக்கொண்டு அதற்கு மாற்றாகத் தங்க ளுடைய மோசமான சொத்துக்களைக் கொடுப்பது என்பது வழக்க மாயிருந்தது. இவ்வாறு அவர்களுடைய சொத்துக்களில் முறைகேடு செய்வதைவிட அந்த அநாதைச் சிறுமியரில் நான்கு பேர் வரை காப் பாளர்கள் மணந்து கொள்ளலாம் என்று குரான் அனுமதித்தது. ஒரே கணவனின் மனைவியராயிருப்பதைவிட சொத்து முக்கியம் என்ப தால், குரான் இவ்வாறு அனுமதியளித்து அநாதைச் சிறுமியருக்கும் விதவைப் பெண்களுக்கும் சொத்துக்களை உறுதி செய்தது. எனவே நான்கு மனைவியர்வரை மணந்து கொள்ளும் அனுமதி பொதுவான தல்ல என்றும், அநாதைச் சிறுமிகளின் விஷயத்தில் நிபந்தனையுடன் அளிக்கப்பட்ட அனுமதி என்றும் நவீன விளக்கவுரையாளர்கள் கூறுகிறார்கள். பிற்காலத்தில் விளக்கவுரை எழுதியவர்கள், இதைப் பொதுவான அனுமதியாக்கினார்கள்; இதுமட்டுமின்றி அவர்கள் தங்களுடைய கருத்துக்குத் தகுந்தாற்போல் பல மரபுச் செய்திகளையும் புதிதாக உருவாக்கினார்கள். அநாதைச் சிறுமியரின் விஷயத்திலும் கூட அவர்களை மணந்து கொள்ள விரும்பும் காப்பாளர்கள் அவர்கள்

www.padippakam.com



அனைவருக்கும் நியாயமாக நடந்துகொண்டு சமமாக நடத்த வேண்டும் என்றும் கண்டிப்பாக நிபந்தனை விதிக்கப்பட்டது.

அடிமைப் பெண்களுடனும் போரில் பிடிக்கப்பட்ட பெண்களுடனும் பாலுறவு கொள்வதைப் பொறுத்தமட்டில், திருமணம் செய்து கொள்ளாமல் பாலுறவு கொள்வதைக் குரான் வசனம் அனுமதிக்கவில்லை என்று இந்த விளக்கவுரையாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் இந்த வசனத்தை இவ்வாறு மொழி பெயர்க்கிறார்கள்: "அநாதைகளுக்கு அவர்களின் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்; (அவர்களுடைய) நல்ல சொத்துக்களை உங்களுடைய (மோசமான) சொத்துக்களைக் கொடுத்து மாற்றிக் கொள்ளாதீர்கள்; அது உண்மையிலேயே பெரிய பாவமாகும். ஆனால், அநாதைகளுக்கு நீங்கள் நியாயம் செய்ய முடியாது என்றால் (அநாதைப்) பெண்களிலிருந்து உங்களுக்கு விருப்பமானவர்களை — இரண்டு, மூன்று அல்லது நான்கு பேரை மணந்து கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் (சகமனைவியரிடையே) நியாயமாக நடந்துகொள்ள முடியாது என்று அஞ்சினால், ஒருத்தியை மட்டும் மணந்து கொள்ளுங்கள் அல்லது உங்கள் அடிமைப் பெண்களை (மணந்து கொள்ளுங்கள்); இதுதான் அநீதியைத் தவிர்ப்பதற்கு மிகவும் சமீபமான வழியாகும்." [48]

இவ்வாறாக, இஸ்லாமில் பாலியல் மறுப்பு மனோபாவம் இல்லை என்பதையும், பெண்ணைவிட ஆணுக்குச் சற்று அனுகூலம் அதிகம் என்பதையும் காண்கிறோம். ஆனால் இது சமூக-சரித்திரச் சூழ்நிலையில் தவிர்க்க முடியாதது. குரான் வெளிப்படுத்தப்பட்ட சமூகத்தில் வேரூன்றிய சொத்துரிமை உறவுகளையும் சமூக-சரித்திரச் சூழ்நிலையையும் அது தள்ளிவைத்திருக்க முடியாது. இல்லையென்றால் எந்த மக்களைப் பார்த்து அது கூறப்பட்டதோ அவர்களுக்கு அது ஏற்புடையதாக இருந்திராது. அவர்களுடைய சமூக வழக்கங்களுக்கு அது ஓரளவு விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும்; குரான் அவ்வாறே விட்டுக்கொடுத்துள்ளது. அதே சமயம், இவ்வாறு சில வழக்கங்கள் சகித்துக் கொள்ளப்பட்டாலும் போற்ற வேண்டிய நெறிகள் வேறு என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

சொத்து வாரிசுரிமை பற்றி குரானில் விரிவான சட்டங்கள் கூறப்பட்டுள்ளன. மக்காவிலும், மதீனாவிலும் தனியார் சொத்துரிமை முறை நன்றாக வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இதற்குக் குழந்தையின் தந்தை யார் என்பது முடிவாகத் தீர்மானிக்கப்படுவது அவசியம். ஒரு பெண்ணின்

48. பார்க்க: "The Status of Women in Islam: A Modernist Interpretation" by Fazlur Rehmān in Hanna Papanek & Gail Minualted (eds.) *Separatic Worlds – Studies of Purdah in South Asia (Delhi, 1982)*

www.padippakam.com



கணவன் இறந்தால் அல்லது அவள் விவாகரத்து செய்யப்பட்டால், அவள் மீண்டும் மணம் செய்துகொள்வதற்கு முன் ஒரு குறிப்பிட்ட காலம் (மூன்று முதல் நான்கு மாதம் வரை) காத்திருக்க வேண்டும் என்று குரான் விதிக்கிறது. குரான் கூறுகிறது: "விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள், ஆண்களிடமிருந்து விலகி இருந்து மூன்று மாதவிடாய் காலம் காத்திருக்க வேண்டும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் அவர்கள் நம்புவோராக இருந்தால் தங்களுடைய கருப்பையில் அவன் படைத்திருப்பதை மறைப்பது சட்டத்துக்கு ஏற்றதல்ல. அவர்களுடைய கணவர்கள் இணக்கத்தை நாடினால் அவர்களை மனைவியராகத் திருப்பிக் கொள்வது நல்லது." (குரான் 2:228)

விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள் இவ்வாறு மூன்று மாத காலம் காத்திருக்க வேண்டும் என்ற விதியினால் இரண்டு நோக்கங்கள் நிறைவேறுகின்றன. முதலாவது, அந்தப் பெண்கள் கருவுற்றிருக்கிறார்களா என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியும். சில சமயங்களில் கர்ப்பம் இல்லாமலே வேறு காரணங்களால் மாதவிடாய் நின்றிருப்பது உண்டு. மூன்று மாதவிடாய் காலத்தில் அவள் கருவுற்றவளா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரிந்துவிடும். இரண்டாவதாக, குரான் வசனத்திலேயே கூறப்பட்டிருப்பது போல, விவாகரத்து செய்து கொண்டவர்கள் சமரசமாகி விடுவதற்குப் போதிய அவகாசம் கிடைக்கிறது. பெண் கருவுற்றிருப்பதாகத் தெரியவந்தால் விவாகரத்து செய்த கணவன் தனது மனத்தை மாற்றிக் கொண்டு சமரசம் செய்துகொள்ளக்கூடும். இந்த வசனத்திலிருந்து ஒரே சமயத்தில் மூன்று முறை விவாகரத்துக் கூறுவது (ஹனஃபி முஸ்லிம்களிடையே இந்த வழக்கம் இருக்கிறது) அனுமதிக்கப் படவில்லை என்பது தெளிவாகிறது. இவ்வாறு ஒரே சமயத்தில் மூன்று முறை விவாகரத்துக் கூறிவிடுவதன் மூலம் அது மாற்ற முடியாததாகவும் சமரசத்துக்கு இடமில்லாததாகவும் ஆகிவிடுகிறது. குரானின் உள்ளக்கிடக்கைக்கு இது நிச்சயமாக விரோதமானது.

இது போலவே கணவன் இறந்துபோனால் குரானின் விதி இவ்வாறு கூறுகிறது: "கணவன் இறந்து போனால் மனைவியர் ஆண்களிடமிருந்து விலகியிருந்து நான்கு மாதங்கள் பத்து நாட்கள் காத்திருக்க வேண்டும். இந்தத் தவணை முடிந்த பின் அவர்கள் தங்கள் விஷயத்தில் நியாயமான முறைப்படி செய்துகொள்வதில் உங்கள் மீது எவ்விதக் குற்றமும் இல்லை. அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றை நன்கு அறிகிறவன்" (குரான், 2:234) இஸ்லாமுக்கு முன், விதவைகள் காத்திருக்க வேண்டிய காலம் மிக நீண்டதாக இருந்தது. இந்தக் கால அளவை நான்கு மாதம், பத்துநாள் என்று குரான் விதிப்பதன் மூலமும் இரண்டு நோக்கங்கள் நிறைவேறுகின்றன. முதலாவதாக, அந்தப் பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதைத்

www.padippakam.com



தெரிந்துகொள்ள முடியும். இரண்டாவதாக, இறந்தவருக்கு மரியாதை காட்டுவதாகவும் இருக்கிறது. காத்திருக்க விதித்த காலத்துக்குப் பிறகு அவள் திருணம் செய்துகொள்ளவோ, செய்துகொள்ளா மலிருக்கவோ குரான் முழுச் சுதந்திரம் அளிக்கிறது. எந்த வழியிலும் செல்லுமாறு அவளை நிர்ப்பந்தம் செய்ய முடியாது. நிச்சயமாக இது ஒரு முக்கியமான ஏற்பாடாகும்.

ஒருவருடைய மனைவி இறந்துபோனால், அவருக்கு இந்த மாதிரி காத்திருக்கும் காலம் எதையும் குரான் விதிக்கவில்லை என்பதும் உண்மை. ஆனால் மனைவியை இழந்தவர் உடனடி யாக மீண்டும் மணம் செய்து கொள்வதைக் குரான் அங்கீகரிக்கிறது என்று கொள்ள முடியாது. (குரானில் இதற்கு ஆதரவாகவோ, எதிராகவோ எதுவும் இல்லை). ஆயினும் ஆண், பெண்ணுக்கு மரியாதை அளிக்க வேண்டும், குறிப்பாக தனது மனைவிக்கு மரி யாதை அளிக்க வேண்டும் என்று குரான் கூறுவதனால், மனைவியை இழந்தவர் உடனேயே மறுமணம் செய்வது தடை செய்யப்படா விட்டாலும் அது பாராட்டத்தக்கதாகக் கருதப்படமாட்டாது. மேலும் தந்தைவழிச் சமூகத்தில் சொத்துரிமை உறவுகள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில், மிக நவீனமான சமூகங்களில் கூட, குழந்தையின் தந்தை யார் என்பது முக்கிய விஷயமாகிறது. இத் தகைய சமூகத்தில், லட்சியங்கள் எப்படியிருந்தபோதிலும் பெண் களுக்குச் சில பாதகநிலைகள் உள்ளன. குரானின் தடைக் கட் டளைகளை, முன்பே குறிப்பிட்டபடி, அவற்றின் சமூக-சரித்திரப் பின்னணியிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

திருமண உறவுக்கு வெளியே பாலியல் தொடர்பை குரான் கண்டிப்பாகத் தடை செய்கிறது. இது ஆண், பெண் இருவருக்குமே தண்டனைக்குரியதாக்கப்பட்டுள்ளது. "விபச்சாரி, விபச்சாரகன் இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள். நீங்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புவோராக இருந் தால், அவர்கள் மீது இரக்கம் கொண்டு அல்லாஹ்வின் கட்டளையை மீறிவிடாதீர்கள். அவ்விருவரின் தண்டனையை விசுவாசிகள் பலர் நேரில் பார்க்கவும்." (குரான், 24:2)

திருமணத்துக்குப் புறம்பாகப் பாலுறவில் ஈடுபட்ட ஆண், அதேபோன்ற செயலில் ஈடுபட்ட ஒரு பெண்ணை, அல்லது விக்கிரக வணக்கம் செய்யும் பெண்ணைத்தான் மணக்க வேண்டும் என்றும் குரான் விதிக்கிறது. "விபச்சாரகன், விபச்சாரி யையோ உருவ வணக்கம் செய்பவளையோதான் மணக்கலாம். விபச்சாரியும், விபச்சாரகனையோ உருவ வணக்கக்காரனையோ தான் மணக்கலாம். இத்தகையவர்களை விசுவாசிகள் மணப்பது தடை செய்யப்படுகிறது." (குரான், 24:3).

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறாக, திருமணத்துக்குப் புறம்பான பாலுறவு, விக்கிரக வணக்கத்தைப் போன்ற கடுமையான பாவமாகக் கருதப்படுகிறது. பாலுறவுச் சுதந்திரம், புறமத நெறிக்கும், இஸ்லாமுக்கு முற்பட்ட ஜாஹிலிய்யா காலத்துக்குமே பொருந்துவதாகவும், சொத்துரிமை உறவுகள் வளர்ச்சி பெற்ற நாகரிக சமூகத்துக்குப் பொருந்தாதது என்றும் கருதப்பட்டது. பிற்காலத்தில், தவறான பாலுறவுக்குத் தண்டனை குற்றம் செய்தவரைக் கல்லெறிந்து கொல்லுவதாக மாறிவிட்டது. ஆயிஷா ('Ā'isha) தெரிவித்ததாக ஒரு மரபுச் செய்தி வழங்குகிறது. இதன்படி குரானில் இப்போது 73 வசனங்கள் மட்டுமே உள்ள ஒரு அத்தியாயத்தில் 200 வசனங்கள் இருந்ததாகவும் உத்மான் ('Uthmān) குரானைத் தொகுத்தபோது மீதியுள்ள வசனங்களைக் காணமுடியவில்லை என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு காணாமல் போன வசனங்களில் ஒன்று தவறான பாலுறவில் ஈடுபட்ட ஆண் அல்லது பெண்ணைக் கல் எறிந்து கொல்லக் கட்டளையிடுவதாகவும் கூறப்படுகிறது. இந்தச் செய்தி உண்மையா என்று கூறுவது கடினம். முதல் நான்கு கலீஃபாக்களும் இவ்வாறு கல் எறிந்து கொல்லும் தண்டனைகள் விதித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், முஸ்லிம்கள், நிலப்பிரபுத்துவ முறை மிகவும் தீவிர மடைந்த, பாலியல் சட்டங்கள் மிகவும் கடுமையாகவும், பெண்களின் நிலைமை மிகவும் கீழடங்கியதாகவும் உள்ள நாகரிகங்களுடன் பழகிய போது, சாட்டையடிக்கு பதிலாக, கல்லெறிந்து கொல்லும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. அரேபியச் சமூகத்தின் இயல்பைக் கருத்தில்கொண்டு பார்க்கும் போது தீர்க்கதரிசி இவ்வளவு கடுமையான தண்டனையை விதித்திருக்க மாட்டார். சாட்டையடி தண்டனைகூட மிகவும் கடுமையானது என்றே கூற வேண்டும். தவறான பாலுறவுக்குப் பைபிளில் காணப்படும் தண்டனையும் கல்லால் அடித்துக் கொல்வதே. பிற்காலத்தில் விளக்கவுரை எழுதியவர்கள், இஸ்ரேலியர்கள், பைபிள் மரபுகள் ஆகிய செல்வாக்குகளுக்கு உட்பட்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் பைபிளின் கருத்தை அப்படியே எடுத்துக் கொண்டு, பின்பு அதை நியாயப்படுத்தும் வகையிலேயே தீர்க்கதரிசியைப் பற்றிய மரபுச் செய்தியை உருவாக்கியிருக்கக்கூடும். ஆயினும் எதையும் நிச்சயமாகக் கூற முடியாது. இங்கே முக்கிய விஷயம், மாறிவந்த சொத்துரிமை உறவுகள் காரணமாக பாலியல் உறவுகளை ஒழுங்குப்படுத்த வேண்டியிருந்தது என்பதும், இஸ்லாம் அவற்றை ஒழுங்குபடுத்திற்று என்பதுமே ஆகும். ஒரு வகையில் இது சரித்திர அவசியம் ஆயிற்று.

இஸ்லாமின் தீர்க்கதரிசி சொத்துக்கு வாரிசுரிமை பற்றியும் விதிகள் செய்தார். இந்த விதிகளும் சமூகத்தில் சொத்துரிமை உறவுகள் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்ததைக் காட்டுகின்றன.

www.padippakam.com



சொத்து வாரிசுரிமை பற்றி குரான் கூறுகிறது: "இறந்துவிட்ட பெற்றோரோ, உறவினரோ விட்டுச் சென்றதில் ஆண்களுக்குப் பாகம் இருக்கிறது. அது குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் சட்டப்படி அவர்களுக்குப் பாகம் இருக்கிறது. பாகப்பிரிவினை செய்யும் போது உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்தால் அதிலிருந்து அவர்களுக்கும் கொடுங்கள்; அவர்களிடம் கனிவான சொற்களைப் பேசுங்கள்.... பாகப்பிரிவினையில் ஒரு ஆண் ஒரு பெண்ணைப்போல் இரண்டு மடங்கு பெறுவான். பெண்கள் இரண்டும் அதற்கு மேலும் இருந்தால், சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு பாகம் அவர்களுக்கு உண்டு. ஒரு பெண்ணாக இருந்தால் அவளுக்குப் பாதிப்பாகம் உண்டு. இறந்து போனவருக்குக் குழந்தை இருந்தால் அவரது பெற்றோரில் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பங்கு உண்டு. இறந்தவருக்குக் குழந்தை இல்லையென்றால், அவருடைய பெற்றோர் அவருக்கு வாரிசுக்காரர்களானால், தாய்க்கு மூன்றில் ஒன்று உண்டு. இறந்தவருக்குச் சகோதரர்கள் இருந்தால் தாய்க்கு ஆறில் ஒன்று கொடுக்கப்படும். இறந்தவரின் கடன்களையும் உயில் கடப்பாடுகளையும் கொடுத்த பிறகுதான் இது கிடைக்கும்." (குரான், 4: 7—11). மேலும் அது கூறுகிறது: "உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில், அவர்களுக்குக் குழந்தை இல்லையானால், உங்களுக்குப் பாதிப்பாகம் உண்டு; குழந்தை இருந்தால் அவர்களுடைய கடன்களுக்கும் உயில் கடப்பாடுகளுக்கும் கொடுத்த பிறகு நான்கிலொன்று உங்களுக்கு உண்டு. நீங்கள் குழந்தை இல்லாமல் இறநதால் உங்கள் சொத்தில் நான்கில் ஒன்று உங்கள் மனைவியருக்குக் கிடைக்கும். உங்களுக்குக் குழந்தை இருந்தால் உங்கள் சொத்திலிருந்து உங்கள் கடன்களுக்கும் உயில் கடப்பாடுகளுக்கும் கொடுத்த பிறகு மனைவியருக்கு எட்டில் ஒன்று உண்டு. ஒரு ஆண் அல்லது பெண், குழந்தையோ, பெற்றோரோ இல்லாமல் இறந்து போனால் — அவருக்கு ஒரு சகோதரர் அல்லது ஒரு சகோதரி இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒன்று உண்டு. அதற்குமேல் சகோதர சகோதரிகள் இருந்தால், இறந்தவரின் கடன்களுக்கும் உயில் கடப்பாடுகளுக்கும் கொடுத்த பிறகு, வாரிசுகளின் உரிமைகளுக்கு இடையூறு இல்லாமல், சொத்தில் மூன்றில் ஒன்றை அவர்கள் சமமாகப் பகிர்ந்துகொள்வார்கள். இது அல்லாஹ்வின் கட்டளை. அவன் கருணை உள்ளவன், எல்லாம் அறிந்தவன்" (குரான், 4:12). சொத்துரிமை உறுதியாக நிலைபெற்றிருந்தது என்பதையும் சொத்து வைத்திருப்பதற்குத் தனிநபருக்கு உள்ள உரிமை மீற முடியாதது என்பதையும் இந்த வாரிசுரிமைச் சட்டங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. கணவன் கூட மனைவியின் சொத்தை சில விதிகளின்படியன்றித் தொட முடியாது. பெற்றோர்களும் கூட, இறந்துபோன குழந்தைகளின் சொத்தில் ஒரு பகுதியைத்தான்

www.padippakam.com



பெற முடியும். ஆயினும், பெற்றோரின் சொத்திலிருந்து மகனுக்குக் கிடைப்பதில் பாதியளவு மகளுக்குக் கிடைத்தது. மனைவியின் பங்கு, அவளுக்குக் குழந்தை இருக்கிறதா, இல்லையா என்பதைப் பொறுத்து நான்கில் ஒன்று முதல் எட்டில் ஒன்றுவரை இருந்தது. ஆக, முகமது பெண்ணுக்குச் சொத்துரிமையை (பல சமூகங்களில் மறுக்கப்பட்டது போல) முற்றிலும் மறுக்கவில்லை; ஆனால் ஆணைவிடக் குறைந்த பங்கு கொடுக்கப்பட்டது. கடவுள் சிலருக்கு மற்றவர்களைவிட மேலான நிலை கொடுத்திருப்பது பற்றி யாரும் பொறாமைப்படக்கூடாது என்று குரான் தெளிவாகக் கூறுகிறது. "உங்களில் சிலரை மற்றவர்களைவிட எதைக் கொண்டு அல்லாஹ் மேன்மையாக்கி வைத்துள்ளானோ அதன் மீது நீங்கள் ஆசை வைக்காதீர்கள். ஆண்களும் — பெண்களும் தங்களுடைய உழைப்புக்குக் கூலி பெறுவார்கள்" என்பது குரான் வசனம் (குரான், 4.32). தனது நோக்கத்தைத் தெளிவுபடுத்திக் குரான் மேலும் குறிப்பிடுகிறது: "ஆண்களுக்குப் பெண்கள் மேல் அதிகாரம் இருக்கிறது. ஏனென்றால் அல்லாஹ் ஆண்களை, பெண்களைவிட மேன்மையாக்கி வைத்திருக்கிறான். மேலும் ஆண்கள் தங்களுடைய பொருள்களிலிருந்து பெண்களுக்காகச் செலவு செய்கிறார்கள். எனவே, நல்ல பெண்கள் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மறைவான உறுப்புக்களை, அல்லாஹ் பாதுகாக்கின்ற காரணத்தால், பாதுகாப்பார்கள். பணிந்து நடக்கமாட்டார்கள் என்று நீங்கள் நினைப்பவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள்; படுக்கைகளிலிருந்து அவர்களை நீக்கி வையுங்கள்; அடியுங்கள். உங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டுவிட்டால் அவர்களுக்கெதிராக வேறு எதுவும் செய்யாதீர்கள். அல்லாஹ் உயர்ந்தவனாகவும் எல்லாவற்றிலும் மேலானவனாகவும் இருக்கிறான்." (குரான், 4:34)

இந்த வசனங்களில் பெண் ஒரு குறைவான நிலையிலேயே காட்டப்படுகிறாள். ஆண்களுக்குப் பெண்களின் மேல் அதிகாரம் உண்டு என்றும், இதற்குக் காரணம் அல்லாஹ் அவர்களை மேலானவர்களாகச் செய்ததுமட்டுமின்றி ஆண்கள் தங்கள் செல்வத்தை அவர்களுக்காகச் செலவிடுவதும் ஆகும் என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, காசு கொடுப்பவன் கட்டளையிடுகிறான். கொள்ளைத் தாக்குதல் ஆனாலும், நீண்ட தூர வர்த்தகமானாலும் ஆண்கள்தான் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு செல்வத்தைச் சம்பாதிக்கிறார்கள். எனவே பெண்கள் அவர்களுக்குக் கீழடங்கியவர்களாக இருக்க வேண்டும். மேலும் இஸ்லாம் தோற்றம் கொண்ட காலத்தில், ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாலுறவில் அதிகச் சுதந்திரம் அளித்த இனக்குழு வாழ்க்கை முறையின் நினைவு பசுமையாயிருந்தது. எனவே, புதிய சமூக நடத்தை முறைகளைச் செயல்படுத்துவதற்கு அடக்குமுறை தேவைப்பட்டது. எனவே, பெண்

www.padippakam.com



கீழ்ப்படிந்து நடக்கமாட்டாள் என்று நினைத்தால், அவளைக் கண்டித்து தனியாகப் படுக்கைக்கு அனுப்புமாறும், அவசிய மானால் அடிக்கும்படியும் கூறப்படுகிறது. ஆயினும், மேலே விவரித்தபடி சரித்திர ரீதியான, சமூக ரீதியான காரணங்களால், குரானின் சட்டங்கள் பெண்களுக்கு நியாயமாகவே இருந்தன. ஆனால் இங்கே கவனிக்க வேண்டியது, இஸ்லாம், நிலப்பிரபுத் துவ முறை மிகவும் தீவிரமாக இருந்த பாரசீகம் முதலான நாடு களுக்குப் பரவிய போது, இந்தச் சட்டங்களுக்கு அங்கேயுள்ள மக்களின் சமூக மனப்பான்மைக்குத் தகுந்தபடி பொருள் கூறப் பட்டது என்பதே. இதை விளக்குவதற்கு முஸ்லிம் எழுத்தாளர் ஒருவரை மேற்கோள் காட்டலாம். லட்சியப் பெண் எப்படி இருப் பாள் என்று அவர் கூறுவது: "அவள் பேசுவதும் சிரிப்பதும் மிக அரிதாகவே இருக்கும்; அது ஒருபோதும் காரணம் இல்லாமல் இராது. அவள் அண்டை அயலாரையோ, தெரிந்தவர்களையோ பார்ப்பதற்குக் கூட, தன் வீட்டை விட்டுப் போகமாட்டாள். அவ ளுக்குத் தோழியர் என்று யாரும் கிடையாது; யாரிடமும் அந்தரங் கம் தெரிவிப்பதில்லை; கணவனை மட்டுமே நம்பி நடக்கிறாள். தனது கணவன் அல்லது பெற்றோர் தவிர வேறு யாரிடமிருந்தும் எதையும் பெற்றுக்கொள்ளமாட்டாள். உறவினர்களை அவள் பார்த்தால் அவர்களது விவகாரங்களில் தலையிடமாட்டாள். அவள் நம்பிக்கைத் துரோகமாக நடக்கமாட்டாள்; அவளிடம் மறைப்பதற்கு எதுவும் இராது; போலிக் காரணங்களைச் சொல்ல மாட்டாள். யாரையும் வலைபோட்டு இழுக்க அவள் முயல்வ தில்லை. கணவன் தாம்பத்திய உறவில் நாட்டம் காட்டினால் அவள் அவனது ஆசைகளுக்கு இணக்கமாக நடந்து கொள் கிறாள்; சில சமயங்களில் அவற்றைத் தூண்டிவிடுகிறாள். அவள் அவன் காரியங்களில் எப்போதும் உதவி செய்கிறாள்; அவள் குறை கூறுவதும் கண்ணீர் விடுவதும் அரிது. கணவன் மனம்குன்றி யும் வருத்தமாகவும் இருக்கும் சமயங்களில் அவள் சிரிப்பதோ மகிழ்ச்சியடைவதோ கிடையாது; அவனுடைய துயரத்தில் பங்கு கொண்டு, வருத்தத்தை மாற்றி உற்சாகமூட்டி மீண்டும் அவனை நல்ல மனநிலைக்குக் கொண்டு வருகிறாள். பாலுறவு இன்மை யால் உயிர் போகும் துன்பத்தை அனுபவித்தாலும் கணவனைத் தவிர யாருக்கும் தன்னை ஒப்படைக்கமாட்டாள். இப்படிப் பட்ட பெண்ணை எல்லோரும் போற்றிக் கொள்வார்கள்." [49]

இவ்வாறாக, ஒரு சமூகத்தில் செய்யப்பட்ட சட்டங்கள் எவ்வளவு

49. Shaykh Nefzāwi, *The Perfumed Garden*, translated by Sir Richard F. Burton (New York, 1964), p.97. Quoted by Vernal L. Bullough in *The Subordinate Sex-A History of Attitudes Towards Women (chicago, 1974).*

www.padippakam.com



முற்போக்காக இருந்தாலும், அவற்றை வேறொரு சமூகத்தில் செயல் படுத்தும் போது, அங்குள்ள சமூக மனப்பான்மைக்குத் தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். இஸ்லாமில் திருமணம், முற்கால அரேபியாவின் இனக் குழு வழக்கங்கள் காரணமாக, ஒரு ஒப்பந்த உறவாகவே இருக்கிறது. (கிறிஸ்தவத்திலும், ஹிந்து மதத்திலும் உள்ளது போலப் புனித மானதாகக் கருதப்படவில்லை). இதற்கு ஒப்பந்தத்தின் ஒரு பங்காளியாக உள்ள பெண்ணின் சம்மதம் அவசியமாகிறது. ஒப் பந்தத்தில் ஒரு பங்காளி என்ற முறையில் நிபந்தனைகள் விதிப்ப தற்கும் பெண்ணுக்கு உரிமை உண்டு. எனவே அரேபியப் பெண் மேலே வர்ணிக்கப்பட்ட கடமையுணர்வும் விசுவாச அர்ப்பணிப் பும் கொண்ட மனைவியைப் போல இருக்கவில்லை. மத்திய காலத் தில் நிலப்பிரபுத்துவச் சூழ்நிலையில்தான் சட்டங்கள் இவ்வாறு பழமைவாத வடிவம் பெற்றன. இஸ்லாமியச் சட்டத்தின்படி பெண் ணுக்குக் கணவனை விவகாரத்து செய்யும் உரிமை இருந்தபோதிலும் நடைமுறையில் அந்த உரிமையை அவள் அநேகமாக இழந்துவிட்டாள்.

சில இஸ்லாமிய வழக்கங்களையும் மரபுமுறைகளையும் சரியாகப் புரிந்துகொள்வதற்கு, இஸ்லாம் நகர வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட மதம் என்பதையும், முகமதுவின் காலத்தில் நாடோடி வாழ்க்கையின் பழக்க வழக்கங்களுக்கும் நகரவாசியின் வாழ்க்கைக்கு மிடையே முரண்பாடுகள் இருந்தன என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். ஜி.இ. வான் க்ருனெபாம் (G.E. Von Grunebaum) இதைப் பற்றி எழுதுகையில் இவ்வாறு கூறுகிறார்: “பதூயின் களிடையே ஒரு ‘தேசிய’ உணர்வு அவ்வப்போது காணப்பட்டது. மெஸபொடேமியாவின் செழிப்பான பகுதிகளில் மேலாதிக்கம் பெற்றிருந்த பாரசீக ஆட்சியாளர்களுக்கெதிரான சண்டைகளில் இந்த உணர்வு முனைப்பாக வெளிப்பட்டது. (இவ்வாறு ‘தேசிய’ உணர்வு முனைப்பாகக் காணப்பட்டதை நாம் 3-ஆம் அத்தியாயத் தில் தூகர் - (‘Dhū Qar’) சண்டை பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டிருக் கிறோம்). நகர மக்கள் தங்கள் வாழ்க்கையில் நாடோடிச் சமூகத்தின் பழக்கவழக்கங்கள் மாறாமல் இருப்பதனால் ஏற்பட்ட சீர்குலைவுகளை எதிர்த்து நீண்ட போராட்டம், மக்காவில் பெரும் வெற்றியுடனும், மதீனாவில் குறைந்த வெற்றியுடனும் நடத்தினார்கள். இஸ்லாம், நகரத்தையே நாட்டின் அரசியல் மையமாக ஏற்று ஊக்குவித்தது. மேலான மதம் என்ற முறையில் அது விரிவடைந்து நாட்டை ஒற்றுமைப் படுத்தியது. இஸ்லாமை ஏற்றுக்கொண்டதன் மூலம் அரபு ஒற்றுமை என்ற தெளிவற்ற உணர்வுக்குப் புதிய வலுவும் ஆன்மீகப் பண்பும் ஏற்பட்டது. இந்த ஒற்றுமை உணர்வு அதுவரை அரேபியத் தீபகற்பத் தில் (தெற்கு அரேபியா மட்டும் ஒரு வேளை இதில் சேராததா யிருக்கலாம்) வாழும் அரபி மொழி பேசும் மக்கள் அனைவரும்

www.padippakam.com



பொதுவான வம்சத்தில் வந்தவர்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, மற்ற மக்களிலிருந்து தாங்கள் வேறானவர்கள் என்ற உணர்வையும் உள்ளடக்கி இருந்தது.[50]

இவ்வாறு நகரத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை ஏற்பட்டதனால் இஸ்லாமியச் சட்டங்களை உருவாக்குவதிலும், இஸ்லாமியத் தொழுகை முறையிலும் அதன் விளைவுகள் காணப்பட்டன. ஒரு முஸ்லிம் சமுதாயத்துக்கு ஜாமீ (Jāmī) என்றழைக்கப்படும் வெள்ளிக்கிழமைத் தொழுகை பள்ளிவாசல் கட்டாயம் இருக்க வேண்டும். இந்த ஜாமீ பள்ளிவாசலுக்கு நிலையான குடியிருப்பும், நிலைத்து வாழும் மக்களும் தேவை. இவர்களில் சட்டப்படி பொறுப்புள்ளவர்களாகக் கருதப்படும் நாற்பது பேராவது கூடியிருந்தால்தான் தொழுகை நிகழ்ச்சி செல்லுபடியாகும். "இவையெல்லாம் ஏழாம் நூற்றாண்டு அரேபியாவுக்கு நகரவாச நிபந்தனைகளேயன்றி வேறல்ல" என்று ரியாஜ் ஹஸன் (Riaz Hasan) கூறுகிறார். "வெள்ளிக்கிழமைத் தொழுகை நடைபெறும் பள்ளிவாசல் எல்லா முஸ்லிம் சமுதாயங்களிலும் மிக முக்கியமான அம்சமாக பின்பு இடம் பெற்றது," என்று அவர் குறிப்பிடுகிறார்.[51] வரலாற்று மேதையான இபின் கல்தூன் (Ibn Khaldūn) நாகரிகங்களைப் பற்றிச் செய்த பகுப்பாய்வில் ஆரம்ப கால நாடோடிக் கலாசாரத்துக்கும், வளர்ச்சியடைந்த நகரக் கலாசாரத்துக்கும் இடையில் காணப்பட்ட வேறுபாடுகளையும் இவற்றின் காரணமாக, மத சம்பந்தமான, உலகியல் சம்பந்தமான அமைப்புகளில் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் குறிப்பிடுகிறார். முஹ்ஸின் மஹ்தீ (Muhsin Mahdī) இதன் சாராம்சத்தைச் சுருக்கமாகத் தந்திருக்கிறார். அவரது கூற்றின்படி ஆரம்பகால சமூகத்தின் கலாசாரத்தில் எளிமையும், அவசியமான தேவைகளை மட்டும் நிறைவேற்றிக்கொள்ளும் இயல்பும் முக்கியமாகக் காணப்படுகின்றன. சமுதாயங்கள் சிறியவையாகவும் தன்னிறைவு பெற்றவையாகவும் உள்ளன. உணவுப் பொருள்கள் எளிமையாகவும், கிடைக்கின்ற வடிவிலேயே உண்ணப்படுவனவாகவும் உள்ளன. மிருகங்களின் தோல் ஆடையாகப் பயன்படுகிறது. தற்காலிகக் கூடாரங்கள் வசிக்குமிடங்களாக உள்ளன. முறைப்படுத்தப்பட்ட, காரணகாரிய ரீதியான அறிவுத் தொகுப்பு கிடையாது. நகரங்கள், பொதுப் பணி அமைப்புகள், சந்தைப் பொருளாதாரம், வரிவிதிப்பு என்பவை இல்லை. சமூக ஒற்றுமை, பொதுவான வம்ச பரம்பரையையும்,

50. G.E. Von Grunebaum, *Islam – Essays in the Nature and Growth of a Cultural Tradition* (லண்டன், 1961), பக்கம் 32.

51. Riaz Hasan, 'The Nature of Islamic Urbanization – a Historical perspective', article in *Islamic Culture*, Vol.XLIII No. 3, July 1969. பக்கம் 234.

www.padippakam.com



நலன்களையும், வாழ்வையும், மரணத்தையும் பற்றிய அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாடோடிக் கலாசாரத்தில் தனிநபர் பகைமைப் பூசல்களில் ஆர்வமும் அதிகாரத்தை மதிக்காத மனப்பான்மையும் காணப்படுகின்றன. இடையறாது இடம் மாறிக்கொண்டேயிருக்கும் வழக்கமும், எந்தவொரு பகுதியிலும் தனிப்பட்ட பற்றுதல் இல்லாமையும், கண்ணில்படும் எந்தப் பொருளையும் மற்றவர்களின் உரிமைகள் பற்றிய கவலை இல்லாமல் தனக்கென எடுத்துக்கொள்ளும் வழக்கமும் இந்தக் கலாசாரத்தின் அம்சங்கள்.

இதற்கு மாறாக நாகரிகக் கலாசாரம், அதிகாரத்துக்கு மதிப்பளிக்காமல், குறிப்பிட்ட இடத்தில் பற்றுதல் இல்லாமல் மற்றவர்களின் உரிமைகளைக் கருதாமல் வாழவே முடியாது. ஆரம்ப காலக் கலாசாரத்தின் குறைபாடுகளை நீக்கி, சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதன் மூலம் அந்தக் கலாசாரம் நாகரிகக் கலாசாரமாக மாறுகிறது என்று இபின் கல்தூன் கூறுகிறார். இதை அடைவதற்குக் கூடுதலாகச் சக்தி தேவையாகிறது. மதம் தான் இந்தச் சக்தி என்று அவர் கூறுகிறார். ஆரம்பகாலப் பண்பாட்டைக் கொண்ட ஒரு சமூகம் ஒரு மதத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக நிற்கும் போது, அது மிகவும் பலனுள்ள சக்தியாகிறது. மதத்தின் மூலம் புதிய விசுவாசம் உருவாவதுடன், சட்டத்துக்கும் அதிகாரத்துக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதில் பூரண நம்பிக்கையும் ஏற்படுகிறது. இது இயற்கையான வழிபாட்டையும் உலக ஆசைகளையும் அடிப்படையாகக் கொண்ட சமூக ஒற்றுமைக்கு மூல காரணமாக அமைகிறது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒற்றுமையே, நகர வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகப் பண்பாட்டை உருவாக்கும் மாபெரும் சக்தியாகச் செயல்படுகிறது.[52] ஆரம்பகாலப் பண்பாடு முன்னேற்றமான நிலைத்த வாழ்க்கை வாழும் பண்பாடாக மாறுவதற்கு வேண்டிய இந்த எல்லாப் பணிகளையும் இஸ்லாம் நிறைவேற்றியது. சமூக ஒற்றுமையை உருவாக்கும் இணக்கச் சக்தியாக அது செயல்பட்டதுடன், அதிகாரத்தையும் மற்றவர்களின் உரிமைகளையும் மதித்து நடக்கும் பண்பையும் புதிய விசுவாசத்தையும் உருவாக்கியது. அரசு அமைப்பு எதுவும் இல்லாதிருந்த அரேபியாவுக்குச் சட்டத்தின் ஆட்சியை அது ஏற்படுத்திக் கொடுத்ததுதான் மிக முக்கியமானது. இதில் முகமதுவின் மதிநுட்பம் பெரும்பங்கு வகித்தது. அந்தச் சமூகத்துக்கு அவர் (சிவில்) உரிமைச் சட்டமும் குற்றச்சட்டமும் அமைத்துக் கொடுத்தார். இந்தச் சட்டங்கள் சமூக வழக்கங்களையும் இனக்குழு நடைமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை

52. Muhsim Mahdī– *Ibn Khaldūn Philosophy of History* (London– 1957), chapter IV.

www.padippakam.com



அவர் முறைப்படுத்திக் கொடுத்தார். பல்வேறு குற்றங்களுக்கான தண்டனைகளை அவர் குறிப்பிட்டு விதி செய்தார். குற்றச்சட்டம் பெருமளவுக்கு இனக்குழு வழக்கங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனவே அது பழிவாங்கும் தன்மை கொண்டதாக - மூக்குக்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்குப் பல் என்பதாக - அமைந்திருந்தது. குரான் இவ்வாறு கூறுகிறது: "உயிருக்கு உயிரையும், கண்ணுக்குக் கண்ணையும், மூக்குக்கு மூக்கையும், காதுக்குக் காதையும், பல்லுக்குப் பல்லையும் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றும், காயங்களுக்குப் பழிக்குப் பழி உண்டு என்றும் நாம் விதித்திருந்தோம். ஆனால், எவரேனும் இவ்வாறு பழிவாங்காமல் மன்னித்து தர்மமாக விட்டுவிட்டால் அது அவருடைய பாவத்துக்குப் பரிகாரமாகும்." (குரான், 5:45) போரில் பிடிபட்ட கைதிகளைச் சிறையில் அடைப்பதைத் தவிர குரானில் எந்தக் குற்றத்துக்கும் தண்டனையாக சிறைவாசம் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புதிதாக உருவாகியிருந்த இஸ்லாமிய அரசில் சிறைச்சாலையைப் பற்றிய கருத்தோ அல்லது சிறைச்சாலையோ உருவாகியிருக்கவில்லை என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இவ்வாறாக, மக்காவில் தோன்றிய இஸ்லாம் மதீனாவில் இறுதி வடிவம் பெற்றது.

# 5

# கலீஃபா ஆட்சி — புறமார்ந்த விரிவாக்கமும் உள்நாட்டுப் போரும்

முகமது காலமான போது மிகப்பெரிய வெற்றிடம் ஏற்பட்டது. அதை நிரப்புவது அநேகமாக இயலாத காரியமாயிருந்தது. அவர் ஒரு அரசுத் தலைவராக மட்டுமின்றி (அவருக்குப் பின் அரசுத் தலைவராக ஒருவரைக் காண முடியும் — காணமுடிந்தது) தீர்க்கதரிசியாகவும், சட்டம் அளிப்பவராகவும், ஆன்மீக வழி காட்டியாகவும், மிக உயர்ந்த தொலைநோக்குக் கொண்ட மனித ராகவும் இருந்தார். எல்லா வகைகளிலும் அவருக்குப்பின் அவர் இடத்துக்குப் பொருத்தமான ஒருவரைக் காண்பது கடினமா யிருந்தது. தாம் மரணமற்றவர் என்ற நம்பிக்கையை அவர் தமது தோழர்களிடம் ஏற்படுத்தியிருக்கவில்லை என்றாலும் அவரது மரணம் அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது. இருப் பினும் அவரது சீடர்களின் உடனடியான பிரச்சினை, அவர் நிறு விய இஸ்லாமிய அரசுக்குத் தலைவராயிருக்க அவரது இடத்துக்கு ஒருவரைக் கண்டுபிடிப்பதேயாகும். தீர்க்கதரிசியின் உடல் அடக்கத் துக்கு முன்பே அவரது தோழர்கள் இதில் கவனம் செலுத்தினார் கள் (இது தவிர்க்கமுடியாததே). அடுத்து யார் தலைவராக வர வேண்டும், அதற்கு என்ன நடைமுறையைப் பின்பற்றவேண்டும் என்பதே முஸ்லிம்களுக்கு உடனடி பிரச்சினையாயிருந்தது. இதற்கு முன்னுதாரணம் எதுவும் இல்லை; ஏனென்றால் இதற்கு முன் அரசு எதுவும் இல்லை. ஒரு ஆட்சித் தலைவருக்குப்பின் அவரது மகன் அல்லது வேறொரு நெருங்கிய உறவினர் தலைவராவதும், அதன் மூலம் பரம்பரை ஆட்சி தொடரச் செய்வதும் வழக்கம் என்பது அவர்களுக்கு (அல்லது அவர்களில் ரோமானிய, ஸஸா னிட் பேரரசுகளுடன் வர்த்தகத் தொடர்பு இருந்தவர்களுக்காவது) தெரிந்திருக்க வேண்டும்.

முகமதுவுக்குப் பின் இந்த முறையில் அடுத்த தலைவர் வருவ தற்கு வழி இல்லை. அவருக்கு மகன் இல்லை என்பது ஒரு காரணம். இன்னொன்று, பரம்பரை ஆட்சிமுறைக்கு வேறு விதமான சமூக அமைப்பு இருக்க வேண்டும். அரேபிய தீபகற்பத்தில் அந்த முறையைப் பின்பற்றுவதற்கு சரித்திர ரீதியாக தகுந்த சூழ்நிலை உருவாகவில்லை.

www.padippakam.com



ஒரே இடத்தில் நிலைத்துவாழும் நகர வாழ்க்கை முறையின் தேவைகள் வேறு விதமாக இருந்தபோதிலும், நகரங்களில் வசித்த அரேபியர்கள் இன்னமும் பழைய நாடோடிவாழ்க்கையின் நெறிகள், மரபுகள் ஆகியவற்றின் நிழலிலேயே இருந்தார்கள். (இந்த இரண்டு வாழ்க்கை முறைகளுக்கிடையிலான முரண்பாடுகள்தான் அரேபிய சமூகத்தின் அடிப்படைச் சீர்கேடுகளுக்குக் காரணமாயிருந்தன; அவற்றைத் தீர்ப்பதற்குத்தான் முகமது இஸ்லாமின் மூலம் வழி கண்டார்). அரேபியர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டம் பெரும் அளவில் இனக்குழுமுறையாகவே நீடித்தது. இஸ்லாமுக்கு முந்திய காலத்தில் மக்காவில் பல்வேறு குலக்குழு, இனக்குழுத் தலைவர் களைக் கொண்ட "மலா" என்ற சபை இருந்ததை நாம் அறிவோம். முகமது தமது தனிச்சிறப்பு வாய்ந்த தகுதிகள், நிறைவேற்றிய காரியங்கள் மூலம் போட்டி இல்லாத தலைவராக இருந்ததால் இப்படிப்பட்ட சபை எதுவும் அவருக்குத் தேவைப்படவில்லை; ஆயினும் முக்கியமான விஷயங்களில் அவர் தமது சகாக்களைக் கலந்தாலோசித்தே செயல்பட்டார். தோழர்களுடன் கலந்தா லோசனை செய்ய வேண்டும் என்பது குரானின் கட்டளை. இது சம்பந்தமாகக் குரானில் உள்ள வசனம் குறிப்பிடத்தக்கது: அது கூறுகிறது. "அல்லாஹ்வின் கருணையினால் நீர் அவர்களிடம் மிருதுவாக நடந்து கொண்டீர். நீர் கடுகடுப்பாக, கடின சித்தம் உள்ளவராக நடந்திருந்தால் அவர்கள் உம்மிடமிருந்து பிரிந்து போயிருப்பார்கள். எனவே அவர்களை மன்னித்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கோருவீராக. அவர்களை (முக்கிய) விஷயங்களில் கலந்தாலோசிப்பீராக." *(3:158)* அரேபியாவில் அப்போதிருந்த நிலைமை பற்றி இந்த வசனத்திலிருந்து பல முக்கிய தகவல்கள் தெரியவருகின்றன. தீர்க்கதரிசி மிகஉயர்ந்த அந்தஸ்து பெற்றவ ராயிருந்தாலும் கூட, தாம் நினைத்தபடியெல்லாம் நடந்து கொண்டிருக்க முடியாது. சர்வாதிகார முறையில் அவர் செயல் பட முடியாது; ஏனென்றால் அரேபியர்கள், சுயேச்சையும் சுய அதிகாரமும் பெற்றிருப்பதில் பெருமை கொண்டார்கள். அதனால் தான் தீர்க்கதரிசி தமது மக்களிடம் கடுமையின்றி நடந்து கொள்ள வேண்டும் என்றும் முக்கியமான விஷயங்களில் அவர் களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் அவர்கள் அவரைவிட்டு விலகிவிடுவார்கள் என்றும் அல்லாஹ் அவருக்கு அறிவுரை கூறுகிறார். இப்படிப்பட்ட நிலைமையில் அதிகாரம் செலுத்தவல்ல அடக்குமுறைத் தன்மைகொண்ட அரசு அமைப்பு ஒன்றை உருவாக்குவது அறவே இயலாது எனக்கூற முடியாது என்றாலும், மிகக்கடினமான காரியம். முகமதுவுக்குப் பின் யாரும் தங்குதடையின்றி அவரது இடத்தை எடுத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு உயர்ந்தவர்களாக இல்லை. அவர்களுக்கு முன்னுதாரணமாக

www.padippakam.com



அல்லது முன்மாதிரியாக இருந்ததெல்லாம் இனக்குழு மரபுகள் தாம். பரம்பரை ஆட்சிமுறை அமைவதற்கு வாய்ப்பான நிலப் பிரபுத்துவ அமைப்புகள் இன்னும் அந்தச் சமூகத்தில் உருவாக வில்லை. அப்போதுள்ள சமூகமுறையை நீடித்து வைத்துக்கொள்வதே அவர்களுக்கு விரும்பத்தக்கதாயிருந்தது. எனவே இனக்குழு மரபுப் படி அவர்கள் முகமதுவின் மரணத்துக்குப் பின் ஸக்கீஃபா பனூ ஸாயிதா (Saqīfa Banū Sā'ida) என்ற இடத்தில் கூடினார்கள். அவர்கள் அனைவரும் இனக்குழு அல்லது குலக்குழுத் தலைவர்கள் அல்லது முகமதுவின் முக்கிய தோழர்கள். அந்தக் கூட்டத்தை யார் கூட்டி யது என்று கூறுவது கடினம். "முஸ்னத் .அபூ யாலீ" (Musnad Abū Y 'alī)யில் இவ்வாறு கூறப்படுகிறது: உமர் பின் கத்தாப் ('Umar b. Khattāb) இவ்வாறு தெரிவிக்கிறார்: "நாங்கள் இறைத்தூதரின் இல்லத்தில் உட்கார்ந்திருந்தோம். அப்போது சுவருக்குப் பின்னாலிருந்து யாரோ ஒருவர் 'ஓ இபின் கத்தாப், வெளியே வாரும்,' என்று கத்தினார் அதற்கு 'நீர்போம், நாங்கள் இறைத்தூதரின் (அடக்க) ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்,' என்று பதில் கூறினேன். மீண்டும் அவர், 'அன்ஸார்கள் (உதவியளிப்போர்) ஸக்கீஃபா பனூ ஸாயிதா வில் கூடியிருக்கிறார்கள். அங்கே நீர் செல்வீர்; இல்லையென்றால் அவர்கள் ஏதாவது செய்து, அதனால் போர் ஏற்பட்டுவிடப் போகிறது,' என்றார். நான் (அதாவது, உமர்) அங்கே போகு மாறு அபூ பக்கருக்குக் கூறினேன்."[1]

மேலே எடுத்துக்காட்டப்பட்ட செய்தியிலிருந்து, தீர்க்கதரிசி யின் உடல் அடக்கத்துக்கு முன்பே, சிலபேர், முஸ்லிம் சமுதாயத் துக்கும், அரசுக்கும் தலைவராக வர ஆசைகொண்டு செயல்பட் டார்கள் என்று தெரிகிறது, முகமது மரணப்படுக்கையில் இருந்த போதே அதிகாரப் போராட்டம் தொடங்கிவிட்டது என்பதைச் சில சான்றுகள் காட்டுகின்றன. வம்ச பரம்பரைக் கொள்கை யாளர்கள் (அதாவது ஷீயாக்கள்) தமக்குப் பின் சமயத் தலைவ ராகவும் அரசுத் தலைவராகவும் வருவதற்குத் தமது மருமகன் அலீயை தீர்க்கதரிசி நியமித்திருந்தார் என்று நம்புகிறார்கள். ஆயினும் இதற்கு ஆதாரமாகக் கூறப்படும் மரபுச்செய்திக்கு வெவ்வேறு விதமாகப் பொருள்கொள்ள முடியும் ஆதலால் இதன் உண்மையைத் தீர்மானிப்பது கடினம். மேலும், ஒரு தலைவர் தமக் குப் பின் யார் தலைவராக வேண்டும் என்பதை இனக்குழு, குலக் குழுத் தலைவர்களையும் மற்ற முக்கியமான நபர்களையும் கலந் தாலோசிக்காமல் தாமே நியமித்துவிடுவது அரேபியர்களின் மரபு வழக்கத்துக்குப் பொருத்தமாக இல்லை. ஒருவேளை என்ன நடந்திருக்கக்கூடும் என்றால், தீரமும் வீரமும் மிகுந்த, உயர்ந்த

1. பார்க்க: Fath al-Bāri, Vol. VIII, பக்கம் 13.

www.padippakam.com



பண்பும் அறிவுத்திறனும் கொண்ட அலீ தமக்குப் பின் தலைவராக வேண்டும் என்று தீர்க்கதரிசி விரும்பியிருக்கக்கூடும். ஆனால், சக்தி வாய்ந்த பல்வேறு குழுக்களிடையே இருந்த போட்டியைக் கருத்தில்கொண்டு அவர் அதை உறுதியாகத் தெரிவிக்க வேண்டாமென எண்ணியிருக்கலாம். முஸ்லிம்கள் தவறான வழியில் இட்டுச் செல்லப்படாமல் தடுப்பதற்காக தீர்க்கதரிசி எதையோ எழுத விரும்பி பேனாவும் மைப்புட்டியும் கொண்டுவரச் சொன்னதாக ஒரு மரபுச்செய்தி இருக்கிறது. ஆயினும் உமர், "இறைத்தூதர் மிகுந்த உடல் வேதனையில் இருக்கிறார்; எங்களைப் பொறுத்த மட்டில் குரானே போதுமானது," என்று பதிலளித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. அவர் ஜன்னியில் பிதற்றுவதாக யாரோ ஒருவர் கூறினார். ஸஹீஹ் முஸ்லிமில் (Sahīh Muslim) இந்த வார்த்தைகள் கூறப்படுகின்றன: "உண்மையிலேயே, இறைத்தூதர் பிதற்றுகிறார்."

இவற்றிலிருந்து, வெவ்வேறு தரப்பினர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியிட்டார்கள் என்றும், இவர்களில் யாருக்காவது பாதகமாக தீர்க்கதரிசி முடிவாக எதையும் சொல்லி விடுவதை அவர்கள் விரும்பவில்லை என்றும் தெரிகிறது. முகமதுவுக்குப் பின் யார் தலைவராவது என்ற பிரச்சினை அப்போது முதல் முஸ்லிம்களிடையே பிளவை ஏற்படுத்தி வைத்துள்ளது. பிரபல வரலாற்றாசிரியர் அல்-ஷஹ்ரெஸ்தானி (Al-Shahrestani) கூறுகிறார்: "கலீஃபா பதவிப் பிரச்சினையைவிட அதிகமாக ரத்தம் சிந்தக் காரணமாக இருந்த இஸ்லாமியப் பிரச்சினை வேறு எதுவும் இல்லை."[2] இனக்குழு விருப்பு வெறுப்புகளும் தலை தூக்கி நின்றன. பனூ ஹாஷிம் (Banū Hāshim) குழு அலீயை ஆதரித்தது. மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த குரைஷிகள் அபூ பக்கரை (Abū Bakr)யும், மதீனாவாசிகளான அன்ஸார்கள், தங்கள் தலைவரான ஸாத் பின் அபதா (Sa'd b. 'Abada)வையும் ஆதரித்தார்கள். பனூ ஹாஷிம் சிறுபான்மையாக இருந்ததால் அலீக்கு வெற்றி வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. இடம் பெயர்ந்தவர்களும், உதவிசெய்வோரும் (அன்ஸார்கள்) ஸக்கீஃபா பனூ ஸாயிதாவில் கூடினார்கள். இருதரப்பினரும் கலீஃபா பதவிக்குத் தங்கள் உரிமையை வலியுறுத்தினார்கள். ஒரு கட்டத்தில் அன்ஸார்கள் ஒரு சமரச யோசனை தெரிவித்தார்கள்: இருதரப்பிலும் இருந்து ஒருவர் கலீஃபா பதவியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இதன் மூலம் குழப்பமும் சச்சரவுகளும் ஏற்படும் என்பதால் இந்த யோசனை ஏற்கப்படவில்லை. இருதரப்பினரும் தங்கள் தங்கள் வாதங்களைத் தொடர்ந்து வலியுறுத்தியதால் கோபதாபங்கள் தீவிரமாயின. ஒரு கட்டத்தில்

2. al-Shahrestānī, பக்கம் 12.

www.padippakam.com



போரிடும் அளவுக்குப் போயிற்று. சூழ்நிலையைக் கணிப்பதில் நுட்ப அறிவு கொண்டவரான உமர், நிலைமையைப் புரிந்துகொண்டு, அரேபிய வழக்கப்படி அபூ பக்கரின் கையை தமது கையில் எடுத்துக்கொண்டு, கலீஃபா பதவிக்கு அவரைத் தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்தார். மற்றும் சில முக்கிய குரைஷ் தலைவர்களான உத்மான், அப்த் அல்-ரெஹ்மான் போன்றவர்களும் அவருக்கு ஆதரவு தெரிவித்தார்கள். விரைவில் அவர் பக்கம் ஆதரவு பெருகியது. இவ்வாறாக அபூ பக்கர் இஸ்லாமிய அரசின் முதலாவது கலீஃபாவாகத் "தேர்ந்தெடுக்கப்பட்டார்." குரைஷ் இனக்குழுவைச் சேர்ந்தவரே கலீஃபாவாக வர வேண்டும் என்று முகமது கூறியதாகச் சொல்லப்படும் மரபுச்செய்தியின் அடிப்படையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறாக நகரவாசி அரேபியர் இந்த மரபுச் செய்தியின் அடிப்படையில் பாலைவன நாடோடி அரேபியர் மீது ஆதிக்கம் கொள்ள முயன்றார்கள். ஆனால் இவர்கள் குரைஷிகளின் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து கிளர்ச்சி செய்ததை பின்னர் காணவிருக்கிறோம்.

தீர்க்கதரிசியின் மரணத்துக்குப் பின் நடந்த இந்த நிகழ்ச்சிகளின் சில அம்சங்களை இப்போது பரிசீலிப்போம். அபூ பக்கர் இஸ்லாமிய அரசின் முதலாவது கலீஃபாவாகப் பதவியில் அமர்த்தப்பட்டது குறைந்த அளவிலேயே ஜனநாயகத்தன்மை கொண்டது — அதாவது, அதை ஜனநாயகம் என்று கூறமுடியுமானால். இப்போதைய ஜனநாயக அமைப்புகளில் இருப்பதைப் போன்ற ஜனநாயகம் என்று அதைக் கூறுவது வரலாற்றுக்குப் பொருந்தாததாகும். அப்போதைய அரேபிய மரபுகளுக்கே அது அதிகப் பொருத்தமுள்ளதாகும். தேர்தலில் "ஒரு நபர்-ஒரு வாக்கு" என்ற பிரச்சினையே கிடையாது. இனக்குழுத் தலைவர்களும் மற்ற முக்கிய நபர்களுமே ஒருவருக்கு விசுவாசத்தை வாக்களிப்பதில் பங்கு பெறமுடியும். (ஆதரவை வாக்களிப்பது என்பதற்கு "பய்ஆ" - bay'ah - என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. வாங்க, விற்க என்று பொருள்படுவது இந்தச் சொல். இதிலிருந்து பெறப்படும் பொருளாக அல்-முன்ஜித் கூறுவது, "ஒரு நகரத்தின் தலைவர்கள் தங்களது ஆட்சியாளராக நியமிக்க விரும்பும் நபருக்கு தங்கள் சம்மதத்தையும் அவரது ஆட்சிக்கு உட்பட்டு நடக்க வாக்குறுதியையும் தெரிவிப்பதற்கு அடையாளமாக அவரது கையை எடுத்துக் கொள்ளுதல்"[3] என்பதாகும். வர்த்தக சமூகத்தின் சொல்லாட்சிகளும் வர்த்தக ரீதியில் அமைகின்றன). தேர்தலில் பெண்களுக்கும் சாதாரண மக்களுக்கும் பங்கு கிடையாது. கலீஃபாவைத் தேர்ந்தெடுப்பது

3. *al-Munjid* (Matba'a al-Kathulika, Beirut) பக்கம் 57, *'bay'ah'* என்ற வார்த்தையின் கீழ் பார்க்க.

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் வேலை அல்ல. முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல, அரேபியாவின் இந்தப் பகுதியில் விவசாயமோ, நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையோ இல்லாததால் மன்னர் ஆட்சிமுறை அங்கு உருவாகவில்லை. இஸ்லாமிய அரசு புதிதாக அமைந்திருந்த தால், எழுதப்பட்ட அரசியல் சாசனமோ, நிலைபெற்ற மரபு முறைகளோ இல்லை. புதிதாகப் பதவி ஏற்ற கலீஃபாவுக்கு வழி காட்டுவதற்கு சில குரான் கட்டளைகளும் முகமதுவின் “சுன்னா” (Sunna)வுமே இருந்தன. அவரது அதிகாரங்கள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை. கொள்கையளவில் அவருக்கு எல்லா அதிகாரங்களும் இருந்தன; ஆனால், நடைமுறையில் அவருக்குப் பல கட்டுப்பாடுகள் இருந்தன. அரசு அமைப்பு மக்களுக்கு புதியது. அவர்கள் பெருமளவுக்கு சுதந்திரமாக வாழப் பழகியவர்கள். திடீ ரென்று, ஒரு அதிகார அமைப்புக்குக் கீழ்ப்படிந்து நடக்க அவர்கள் இணங்கமாட்டார்கள். முகமது அரேபியா முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தபோதிலும், அடங்கி வாழ்ந்து அறியாத நாடோடி மக்களை முற்றிலுமாகக் கட்டுப்படுத்த முடிய வில்லை. எனவே, அபூ பக்கர் மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியிருந்தது.

பதவி ஏற்ற போது அவர் தமது மக்களிடம் பேசுகையில் இவ் வாறு கூறினார்: “மக்களே! அரசாங்கத்தின் கவலைகள் என்மேல் ஏற்றப்பட்டிருப்பதைப் பாருங்கள். நான் உங்களில் மிகச் சிறந்தவன் அல்ல; உங்கள் உதவி அனைத்தும் எனக்கு வேண்டும். நான் நன் றாகச் செயல்பட்டால் என்னை ஆதரியுங்கள்; நான் தவறு செய்தால் எனக்கு ஆலோசனை கூறுங்கள். ஆட்சிப் பொறுப்பு அளிக்கப் பட்டுள்ளவரிடம் உண்மையைச் சொல்வது உண்மையான விசுவாசமாகும்; அதை மறைப்பது துரோகம். என்னுடைய பார்வை யில் பலசாலியும் பலவீனரும் சமமே; இருவருக்கும் நான் நியாயம் செய்ய விரும்புகிறேன். நான் கடவுளுக்கும் அவரது தீர்க்க தரிசிக்கும் கீழ்ப்படிந்து நடந்தால், எனக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடவுங்கள்; நான் கடவுளின் சட்டங்களையும் தீர்க்கதரிசியையும் கருத்தில் வைக்கவில்லையென்றால் உங்களை கீழ்ப்படியச் சொல் வதற்கு எனக்கு உரிமை கிடையாது.”[4] இவ்வாறாக, அவரது அதி காரத்துக்கு மூலஊற்றாக இருப்பது கடவுளும் அவரது தீர்க்கதரிசி யுமே. தாம் தவறுசெய்தால் தம்மை எச்சரிப்பதற்கு மக்களுக்கு உள்ள உரிமையை அவர் ஒப்புக்கொண்டார். எனவே, அரசு மக் கள்மீது தனது கட்டுப்பாட்டு அதிகாரத்தை இன்னமும் முழுமை யாக உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் அதற்கு அடக்கு முறைத்தன்மை அறவே இல்லை என்பது இதன் பொருள் அல்ல. எதிர்த்துப் பேசுபவர்கள் மீதும் புதிய ஆட்சியைச் சட்டபூர்வமானது

4. Sayid Athar Husain, *The Glorious Caliphate*, (Lucknow, 1974), பக்கம் 19.

www.padippakam.com



என்று ஏற்காதவர்கள் மீதும் அது வன்முறையைப் பயன்படுத்தவே செய்தது. அலீயின் தலைமையில் இருந்த பனூ ஹாஷிம் குழு மக்கள் சிலகாலம் வரை புதிய கலீஃபாவுக்குத் தங்கள் ஆதரவை அளிக்காமலிருந்தார்கள். அவர்கள் அலீயின் இல்லத்தில் கூடி தங்கள் திட்டங்களை விவாதிப்பது வழக்கம். உமர், ஃபாத்திமாவின் (இவர் தீர்க்கதரிசியின் மகளும் அலீயின் மனைவியும் ஆவார்) வீட்டுவாசல் அருகே நின்றுகொண்டு இவ்வாறு உரக்கக் கூறினார்: "இறைத்தூதரின் மகளே! கடவுள் பெயரால், உமக்கு நாங்கள் மரியாதை அளிக்கிறோம், நீர் எமக்குப் பிரியமானவர். ஆனால் நீர் உமது வீட்டில் தொடர்ந்து மக்களைக் கூட்டினால் நான் அதற்குத் தீ வைத்துவிடுவேன்."[5] உமர் கதவை எட்டி உதைத்ததாகவும், கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த ஃபாத்திமாவின் மேல் அது விழுந்து அவர் காயமடைந்ததாகவும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். இறுதியாக பனூ ஹாஷிம் பணிந்துவிட்டார். அலீ பணிந்த பிறகு நகரவாசிகள் அனைவரும் அரசின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார்கள். அலீயும் அவரது ஆதரவாளர்களும் அரசு தேவை என்பதை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் அபூ பக்கரை ஏற்க மறுத்து அலீயின் உரிமையை வலியுறுத்தினார்கள். ஆயினும் பதூயின்கள், அரசு என்ற ஒன்று இருப்பதையே விரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் தலைமுறை தலைமுறையாக எல்லையற்ற சுதந்திரத்துடன் வாழப் பழகியிருந்தார்கள்; அந்தச் சுதந்திரத்தில் அரசு குறுக்கிட்டது. அதனால்தான் குரான் கூட அவர்களது இஸ்லாம் பற்றிச் சந்தேகம் கொண்டிருந்தது. குரான் கூறுகிறது: "பாலைவன அரேபியர்கள் நம்பாமையிலும் வெளிவேஷத்திலும் நகரத்தில் வசிப்பவர்களை மிஞ்சுகிறார்கள். அல்லாஹ் தனது தூதருக்கு வெளிப்படுத்திய சட்டங்களை அவர்கள் அறியாமலிருப்பதற்குக் காரணங்கள் அதிகம் உள்ளன. அல்லாஹ் முற்றும் அறிந்தவன், ஞானமுள்ளவன். பாலைவன அரேபியர் சிலர் அல்லாஹ்வுக்காகக் கொடுப்பதை அபராதமாகக் கருதுகிறார்கள். உங்களுக்குக் கேடு வருமென்று காத்திருக்கிறார்கள். கேடு அவர்களுக்கே. அல்லாஹ் எல்லாவற்றையும் செவியேற்கிறான்; முற்றும் அறிந்தவன்." (குரான் 9:97—89) இவ்வாறாக முஸ்லிம்களுக்குக் 'கேடு' வந்த போது (அதாவது, தீர்க்கதரிசி இறந்த போது) பல நாடோடி இனக்குழுக்கள் நகரவாசிகளின் அதிகாரத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். அது "ரித்தா" (Ridda)போர், அதாவது மதத்தைவிட்டோருக்கெதிரான போர் என்று அழைக்கப்படுகிறது. அரேபியா முழுவதிலும் பொதுவாக நடந்த கிளர்ச்சி அது. பதூயின்கள் ஒருபோதும் எந்த அதிகார அமைப்புக்கும்

5. Maulana Shibli N'omānī, *Al-Farouq*, பக்கம் 99.

www.padippakam.com



பணிந்து நடக்க விரும்பவில்லை. அவர்களுடைய பொருளாதாரத்தின் நிலைமை இவ்வாறு எந்த அரசுக்கும் பணிந்து நடப்பதை அவசிய மாக்கவில்லை. மதீனாவில் பல்வேறு குழுக்களிடையே பதவிப் போட்டி நடந்துகொண்டிருந்த போது, தீர்க்கதரிசி இறந்த செய்தி யைக்கேட்டு ஒவ்வொரு இனக்குழுவாக இஸ்லாமைக் கைவிட்டு வந்தது. புதிய மதத்துக்கும் பதூயின்களுக்குமிடையே நடந்த போராட்டம் சமூக, அறநெறி அடிப்படையில் மட்டுமின்றி பொருளாதார ரீதியிலும் ஏற்பட்டது. முதலில் சமூக, அறநெறிப் போராட்டத்தைப் பார்ப்போம். கோல்ட்ஜிஹெர் (Goldziher) "முகமதிய ஆய்வுகள்" ('Muhammaden Studien') புத்தகத்தில் இதைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.[6] பேராசிரியர் நிக்கல்ஸன் அதை அழகாகச் சுருக்கித் தந்திருக்கிறார். அந்தச் சுருக்கத்திலிருந்து பின்வரும் மேற்கோள் தரப்படுகிறது. "முதலாவதாக, இஸ்லாமின் அடிப்படையான கருத்து பதூயின்களுக்கு அந்நியமாகவும் புரியாத தாகவும் இருந்தது. அவர்களுடைய விக்கிரகங்கள் அழிக்கப்பட்டதைக் கூட அவர்கள் அவ்வளவு அதிகமாக எதிர்க்கவில்லை. ஆனால் இஸ்லாம் அவர்களிடம் வலியுறுத்திய பக்தியுணர்வை அவர்கள் எதிர்த்தார்கள். தங்கள் வாழ்க்கை முழுவதும் கடவுளின் சிந்தனை மூலம் தீர்மானிக்கப்படுவது, கடவுளுக்கு மனிதர்களின் வாழ்வை முன்கூட்டியே தீர்மானிப்பதற்கும் தண்டனை அளிப்பதற்கும் இருக்கும் சர்வ வல்லமை, தொழுகைகள், உபவாச நோன்புகள், மிகவும் விரும்பப்படும் இன்பங்களைத் துறந்துவிடுதல், கடவுளின் பெயரால் கேட்கப்படும் பணத்தையும் சொத்துக்களையும் தியாகம் செய்தல், ஆகியவற்றை அவர்கள் எதிர்த்தார்கள்....." மேலும் பழைய மதத்தைப் பின்பற்றிய அரேபியர்களின் சமூக அமைப்பு, இனக்குழுவை அடிப்படையாகக் கொண்டிருந்தது; ஆனால் இஸ் லாமின் சமூக அமைப்பு, சமத்துவத்தையும், விசுவாசிகள் அனை வரும் சகோதரர்கள் என்ற கருத்தையும் அடிப்படையாகக் கொண்டது. மதத்தின் பிணைப்பு, அந்தஸ்து, குலப்பெருமை ஆகிய எல்லா வேறுபாடுகளையும் ஒழித்துவிடுகிறது. கொள்கை யளவிலாவது, குலக்குழுப் பகைமைகள், கௌரவத்தைக் காப்பாற்று வதற்கான போட்டிச் சண்டைகள், இனப்பெருமை போன்றவற்றை—அரேபியரின் வீரமரபுகளுக்கு வேராக உள்ள அம்சங்களை—இஸ்லாம் ஒழித்துவிடுகிறது..... இத்தகைய ஒரு கொள்கையை எதிர்த்து பாலைவன மக்களின் பழமைப்பிடிப்பும் பொருளியல் உணர்வு களும் கிளர்ந்தெழுந்தன; அவர்கள் அனைவரும் மொத்தமாக முஸ்லிம்களாக மாறியிருந்தாலும், பெரும்பாலானவர்களுக்கு இஸ்லாமில் நம்பிக்கையோ, அதன் பொருள் என்ன என்ற அறிவோ

6. பார்க்க: Goldziher's introductory chapter 'Murawwa and Dīn' in *Muhammaden Studien*, Part 1 பக்கம் 1-39.

www.padippakam.com



கிடையாது. பல சமயங்களில் அவர்களுடைய நோக்கங்கள் பொருளியல் பயன்களை அடிப்படையாக கொண்டிருந்தன. இஸ்லாம் தங்களுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்று எதிர்பார்த்தார்கள். அவர்கள் உடல்நலம் நன்றாக இருக்கும் வரை, குதிரைகளுக்கு நல்ல குட்டிகளும் மனைவிகளுக்கு நன்கு குறைகளற்ற மகன்களும் பிறந்து வரும்வரை, செல்வமும் மந்தைகளும் பெருகி வரும்வரை, 'இந்த மதத்தில் சேர்ந்ததன் மூலம் நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம்' என்று கூறி, திருப்தியுடன் இருந்தார்கள். ஆனால் நிகழ்ச்சிகள் தீயவையாக இருந்தால் அவர்கள் இஸ்லாமைப் பழிசொல்லி அதைவிட்டு விலகினார்கள். இந்த மக்கள் மத ஆவேசம் கொள்ளக்கூடியவர்கள்தான் என்பது, பின்பு சிறிது காலத்திலேயே இரண்டு பேரரசுகளின் கட்டுப்பாடான ராணுவங்களை எதிர்த்து வெற்றிபெற்றதிலிருந்து நிரூபணமாகிறது. ஆனால் அப்போது அவர்களுக்கு முக்கியமாக ஊக்கமளித்தது, கொள்ளைப்பொருள் கிடைக்கும் என்ற ஆசையுடன் கூட, அல்லாஹ் தங்கள் பக்கம் நின்று போராடுகிறார் என்று வெற்றிகள் மூலம் உறுதிப்பட்ட நம்பிக்கையேயாகும்."[7]

இவ்வாறாக, பாலைவன அரேபியரின் கிளர்ச்சி பரவலாக நடந்தது. அது மதீனாவில் இருந்தவர்களைக் கலங்கச் செய்ததுடன், புதிய அரசையும் உலுக்கிவிட்டது. * (உண்மையில், நாம் பின்பு காணவிருப்பது போல, நாடோடி அரேபியர்கள், உமய்யத், அப்பாஸித் ஆகிய இரண்டு மாபெரும் பேரரசுகளின் காலத்திலும் கூட கிளர்ச்சி செய்துகொண்டுதான் இருந்தார்கள்). பலாதுரீ அப்த் அல்லாஹ் பின் மஹூதை (Abd Allah b. Masūd) மேற்கோள்காட்டி இவ்வாறு கூறுகிறார்: "இறைத்தூதர் இறந்த பின் நாம் ஒரு சாலைச் சந்திப்பில் நிற்பதுபோன்ற நிலையில் இருந்தோம். அல்லாஹ்வின் அருளால் நமக்கு அபூ பக்கர் கிடைத்திருக்கவில்லை என்றால், நாம் அழிந்தே போயிருப்போம். நாம் ஒரு "பின்ட் மக்காத்" (bint makhād) (ஒருவயது நிரம்பிய ஒட்டகக்குட்டி) பற்றியும் "இபின் லப்பூன்" (ibn labbūn) (மூன்று வயது தொடங்கியுள்ள ஒட்டகக்குட்டி) பற்றியும் நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாதென்றும் நாம் ஒரு அரேபிய கிராமத்தின் வருமானத்தைக் கொண்டு உயிர் வாழ்வது என்றும் ஒருமனமாக முடிவு செய்தோம் (இதன் பொருள், நாம் பாலைவன அரேபியர்களுக்கெதிராகப் போரிடக்கூடாது, மதீனாவைச் சுற்றியுள்ள கிராமங்களின் வருமானத்தைக் கொண்டு

7. R.A. Nicholson, *A Literary History of the Arabs*, பக்கம் 178-9

* மதீனாவில் அரசு ஒன்று அமைக்கப்பட்ட பிறகும், கொள்ளைத் தாக்குதல்களை இஸ்லாம் தடைசெய்திருந்த போதிலும், பதூயின்களுக்கு அதுதான் முக்கிய வாழ்க்கை ஆதாரமாக இருந்தது. சொந்த உபயோகப் பொருள்கள் தவிர, சொத்துடைமை கிடையாது. அரசும், அதன் சட்டங்களும் அதைச் செயல்படுத்த அடக்குமுறை அதிகார அமைப்பும், தெளிவான பொருளாதார, சொத்துடைமை உறவுநிலைகளைக் கொண்ட நிலைத்து வாழும் பண்பாட்டு முறைக்கே தேவையானவை. எனவே இத்தகைய வாழ்க்கைமுறை இல்லாத பதூயின்களுக்கு அரசு என்ற அமைப்பு பொருளற்றதாக இருந்தது. அதனுடைய அடக்குமுறைத் தன்மையை அவர்கள் வெறுத்தார்கள்.

www.padippakam.com



நாம் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டும், என்பதாகும்)."[8] இந்தப் பாலைவன இனக்குழுக்களில் பல முஸ்லிம்களாக இருக்க இணங்கிய போதிலும் "ஜகாத்" (Zakāt) வரியைச் செலுத்த மறுத்துவிட்டன.

அதுவரையிலும் பதூயின்கள், நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் கொள்ளையடித்துப் பொருள் திரட்டினார்கள் என்பதும், இப்போது நகரத்தில் அமைந்த அரசு அவர்களிடம் வரி கேட்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. இது அவர்களுக்கு முற்றிலும் பிடிக்கவில்லை; ஏனெனில் அவர்களின் நாடோடி வாழ்வின் பொருளாதார அடிப்படையில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை.

பின்னாட்களில் வெளிநாடுகளின் மேல் படையெடுப்புகள் நடந்த போது இவர்களுக்குப் புதிதாக வேறு நிதி ஆதாரங்கள் கிடைத்தன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆனால், தீர்க்கதரிசி காலமானதும் இவர்கள் எதிர்க் கிளர்ச்சி நடத்த ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கருதினார்கள். தங்கள்மீது சுமத்தப்பட்ட அரசிடமிருந்து விடுதலையும் "ஜகாத்" கொடுக்க வேண்டிய கடமையும் நீங்கிவிடும் என்று கருதினார்கள். மேலும் அரசின் அதிகாரக் கட்டமைப்பில் பதூயின்களுக்குப் பங்கு எதுவும் இருக்கவில்லை. பொதுவாக நகர மக்களும், குறிப்பாக மக்காவின் பெரும்புள்ளிகளும் அதைத் தங்கள் ஏகபோகமாக்கி வைத்திருந்தார்கள். அரசியல் மாற்றங்களின்போது, பொருளாதாரச் சுரண்டலின் அளவு அதிகரிக்கிறது அல்லது குறைகிறது என்பதால், பொருளாதார விளைவுகளும் ஏற்படுகின்றன. இதைத் தொடர்ந்து வர்த்தக அமைப்பு முறைகளில் மேம்பாடு, பாசனவசதி, பொருளாதார உபரியை விநியோகிக்கும் முறையில் மாற்றம் போன்ற விளைவுகளும் ஏற்படலாம். பதூயின்கள் விஷயத்தில், அரசியல் மாற்றத்தால் பல பொருளாதார விளைவுகள் ஏற்பட்டன. அவர்களது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பெற மற்ற இனக்குழுக்களைக் கொள்ளையடிக்க வேண்டும். அதற்கு இப்போது வழியில்லை. (இஸ்லாம் இதைத் தடைசெய்தது; புதிய அரசு அந்தத் தடையை அமல் செய்தது). இது போதாதென்று, "ஜகாத்" வரிவேறு கொடுக்க வேண்டியிருந்தது. வர்த்தகம், பாசனம் ஆகியவை சீரமைக்கப்படுவதனால் பதூயின்களுக்கு எந்த ஆதாயமும் இல்லை; ஏனெனில் அவர்கள் நகர்ப்புற அல்லது விவசாயப் பொருளாதாரத்தில் இணைந்திருக்கவில்லை. எனவே பதூயின்கள் அரேபியா முழுவதும் கிளர்ச்சி செய்தார்கள். அபூபக்கர் இந்தக் கிளர்ச்சியை ஒடுக்க உறுதியான நடவடிக்கை எடுத்து இறுதியில் வெற்றிபெற்றார். பலாதுரீ மதத்தை விட்டவர்களுக் கெதிரான இந்தப் போர்பற்றி தமது புகழ்பெற்ற புத்தகத்தின் முதல் தொகுதியில் முழுவிவரங்கள் கொடுத்திருக்கிறார். நாடோடி இனக்

8. Baladhuri Futūl al-Buldān மொழிபெயர்ப்பு. Syed Abulkhair Maududi, (ஹைதராபாத், nd),தொ.1, பக்கம் 150-151.

www.padippakam.com



குழுக்கள் மட்டுமின்றி, அண்டைப் பகுதிகளான பஹ்ரைன், ஓமன், யேமன் முதலானவற்றின் ஆட்சியாளர்களும் மதீனாவின் மேலதிகாரத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சிகளும் மதீனாவிலிருந்து அனுப்பப்பட்ட ராணுவங்களால் ஒடுக்கப்பட்டன.

இப்போது வெளிநாடுகள் மீது படையெடுத்து வென்ற நிகழ்ச்சிகளையும், அவற்றுக்கான காரணங்களையும் கவனிப்போம். முகமது தமது வாழ்நாளிலேயே, தமது புதிய மதத்தில் சேருமாறு அழைப்புவிடுத்து சில வெளிநாட்டு ஆட்சியாளர்களுக்குக் கடிதங்கள் எழுதியிருந்தார். ரோம் நகரின் ஹெராக்ளிட்டஸ் (Heraclitus), பாரசீகத்தின் கிஸ்ரா (Kisra) ஆகியோருக்கும் அவர் எழுதியிருந்தார். ஹெராக்ளிட்டஸுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறியிருந்தார்: "இறைத்தூதர் முகமதுவிடமிருந்து, ரோமின் பேரரசர் ஹெராக்ளிட்டஹுக்கு (கடிதத்தில் பயன்படுத்தியிருந்த சொல் 'அஜீம்', 'azim', "மகா" என்ற பொருள் கொண்டது). சரியான பாதையைப் பின்பற்றுபவருக்கு அமைதி உண்டாகட்டும். இஸ்லாமை ஏற்கும்படி நான் உங்களை அழைக்கிறேன்; ஏற்றுக்கொண்டால், நீங்கள் பத்திரமாயிருப்பீர்கள், கடவுள் உமக்கு இரண்டுமடங்கு பரிசளிப்பார், ஏற்க மறுத்தால், அது பாவமாகும். உங்கள் மக்களுக்காக நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும்."[9] இதே போன்ற ஒரு கடிதம் கிஸ்ராவுக்கும் எழுதப்பட்டது. முகமது, ஹெராக்ளிட்டஸின் படைகளுடன் மோதக்கூடிய ஒரு படையெடுப்பையும் நடத்தினார். மதீனாவுக்கும், வடக்கே ஸிரியாவுக்கும் இடையே தபூக் (Tabūk) என்ற இடத்தில் இது நடந்தது. இதன் விளைவுகள் என்ன ஆகும் என்பதை முகமது உணர்ந்திருந்தார். அதனால் அவர் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம்வரை துருப்புக்களைக் கூட்டிச்சென்றதாகச் சில ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. இந்த படையெடுப்பின் நோக்கம் என்ன என்பதைத் தீர்மானிப்பது கடினம். ஹெராக்ளிட்டஸுக்குச் சவால்விடுவதற்கா? இதை நம்புவது கடினம். நுட்ப அறிவுள்ள ராஜீயவாதி முகமது நிறைவேற முடியாத ஆசையின் அடிப்படையில் செயல்பட்டிருக்கமாட்டார். அதிலும், சமீபகாலத்தில் ஹெராக்ளிட்டஸ் பாரசீகர்களைத் தோற்கடித்தார் என்பதையும், அதற்காகச் சில ஆட்சியாளர்கள் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்ததனால் அவ்வாறு செய்திருக்கமாட்டார். படையெடுப்புக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட நேரமும் சாதகமானதல்ல. மிகக் கடுமையான வெப்பம் நிலவியது; உணவு, மிருகங்களுக்கு தீனி, தண்ணீர் ஆகியவை மிகவும் தட்டுப்பாடாக இருந்தன. ஒரு யூதரின் வீட்டில் ரகசியக்கூட்டம் நடைபெற்றது. முகமது அந்த வீட்டைத் தீயிட்டு எரித்திருந்தார். முகமதுவும் அவரது

9. Hakīm, Abul Barakāt, *Asah al-Siyār*, பக்கம் 433.

www.padippakam.com



ராணுவமும் தபூக் போய்ச் சேர்ந்தார்கள். மதீனாவிலிருந்து 250 மைல் தூரத்தில் பைஜாண்டியப் பேரரசின் எல்லையில் அந்த இடம் இருந்தது. அங்கே அவர்கள் பத்து அல்லது இருபது நாட்கள் தங்கியிருந்தார்கள். சண்டை ஏதும் நடக்கவில்லை. ஆனால் அவ்வளவு பெரும் எண்ணிக்கையில் வந்த படையைக் கண்டு அந்தப் பகுதியில் இருந்த சிறிய தலைவர்கள் கலக்கமடைந்து மதீனாவின் தலைவருடன் சமாதானம் செய்துகொண்டார்கள். அக்காபா வளைகுடாவின் கோடியில் இருந்த அய்லா (Ayla) என்ற சிறிய நகரத்தின் மன்னர் யுஹன்னா (ஜான்)வுடன் அவர் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆண்டுக்கு முந்நூறு தினார் கப்பம் செலுத்த அந்த மன்னர் இணங்கினார். அந்தப் பகுதியில் இருந்த மூன்று யூத குடியிருப்புப் பகுதிகளுடனும் இதுபோன்ற ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. முகமதுவின் ஆட்கள் சிலர் தூமத் அல் ஜண்டல் (Dūmat al-Jandal) என்ற பாலைவனச்சோலைக்குச் சென்று அதன் கிறிஸ்தவ மன்னரை தபூக்குக்குச் சென்று தீர்க்கதரிசியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தினார்கள். எனவே இந்தப் படையெடுப்பின் மூலம் அரேபியாவைத் தமது ஆட்சியின்கீழ் ஒன்றுபடுத்துவதும், சிறிய ஆட்சியாளர்களிடமிருந்து கப்பம் பெறுவதும் முகமதுவின் நோக்கமாயிருந்திருக்கலாம். தூமத் அல் ஜண்டலின் மன்னருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி உரிமைப்படுத்தப்படாத எல்லா நிலங்களும், தரிசு நிலங்கள், காடு, ஆயுதங்கள், கவசங்கள், பொதிசுமக்கும் மிருகங்கள் ஆகியவையும் முஸ்லிம்களுக்குச் சொந்தமாகும். கோட்டைக்குள் உள்ள பேரீச்சை மரங்களும், ஓடும் நீரும் தூமத் மக்களுக்குச் சொந்தமாகும்.[10]

இவ்வாறாக முகமது வெளிநாடுகளை வென்றுபிடிப்பதைத் தொடங்கி வைத்தார். பின்னர் அவரது கலீஃபாக்கள் இதைத் தொடர்ந்தார்கள். முஸ்லிம் அரசை ஒன்றிணைத்து உறுதிப்படுத்த இது உதவியதுடன், முஸ்லிம்களுக்கு மிகவும் தேவையான நிதி ஆதாரங்களைப் பெறவும் உதவியது. புதிய அரசு இவ்வாறு வெளிப்புறமாக விரிவடைய என்ன அவசர அவசியம் இருந்தது என்பதை ஆராய்வோம். மக்காவிலிருந்த அரேபியர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் நல்ல லாபம் பெற்றுவந்தார்கள். விரிவடைந்து வரும் வர்த்தகத்துக்கு, வர்த்தக அபிவிருத்தியை உறுதிசெய்து, அடங்காத நாடோடிகளை (பதூயின்களை) தடுத்துநிறுத்துவதற்குப் பலம் வாய்ந்த அரசு ஒன்று இருக்க வேண்டும். (பதூயின்கள் வர்த்தக அணிகளைக் கொள்ளையடிப்பதும், அல்லது அவை தங்கள் பகுதிவழியே பத்திரமாகப் பயணம் செய்ய உதவுவதற்குப் பணம் வசூலிப்பதும் வழக்கம். இதனால் வர்த்தகர்களுக்கு

10. Bulādhuri, Vol.1, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 97-8.

www.padippakam.com



மிகுந்த பொருள் இழப்பு ஏற்பட்டது). வர்த்தக மார்க்கங்கள் பத்திரமானவையாயிருப்பது முக்கியம். மேலும், பலமான அரசு இருந்தால் அதற்குத் தனி மரியாதை கிடைக்கும்; வர்த்தக உடன்பாடுகளும் மேலும் சாதகமாக அமைய முடியும். ஆனால், வர்த்தக வர்க்கத்தினருக்கு புதிய முஸ்லிம் அரசின்மீது முழுமையான கட்டுப்பாடு இருந்தது என்று கருதிவிடக்கூடாது. இஸ்லாம் ஒரு வர்த்தக சமூகத்தில் உருவானது என்பதும், வர்த்தகத்தையும் லாபத்தையும் அங்கீகரித்து ஊக்கமளித்தது என்பதும் உண்மைதான். கலீஃபா இதைப் புறக்கணிக்கவில்லை என்றாலும், இது மட்டும் அவர்களின் செயல்களுக்குக் காரணமாயிருக்கவில்லை. (இங்கே நாம் முதல் நான்கு கலீஃபாக்களை மட்டுமே குறிப்பிடுகிறோம்; இவர்கள் சரியாக வழிப்படுத்தப்பட்ட கலீஃபாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்) அரசு ஓரளவுக்கு மதத்தன்மை கொண்டதாகவும் ஓரளவுக்கு வர்த்தக வர்க்கத்தினரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகவும் இருந்தது. பிற்காலத்தில், அரசின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டதை நாம் காணவிருக்கிறோம்.

இஸ்லாம் நிலைபெற்று உறுதிப்பட்ட பின் பதூயின்களுக்கு உண்மையான பிரச்சினை ஒன்று ஏற்பட்டது. அவர்களைப் பொறுத்தமட்டிலுமாவது அரசியல் மாற்றத்தின் காரணமாக பொருளாதார நிலையிலும் மாற்றம் ஏற்பட்டது. முன்னதாக அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதற்கு மற்ற இனக்குழுக்களைக் கொள்ளையடித்து வந்தார்கள். இப்போது எல்லா அரேபியர்களும், புதிய சமூக, பொருளாதார சட்டங்களையும் அமல்செய்வதற்குப் புதிய அரசியல் அமைப்பு ஒன்றும் ஏற்பட்ட பிறகு, மற்ற இனக்குழுக்களைக் கொள்ளையடிப்பது அறவே முடியாமல் போகவில்லை என்றாலும் மிகவும் கடினமாயிற்று. எனவே வேறுவழி காணாமல் அவர்கள் எப்படி உயிர்வாழ முடியும்? அரேபிய தீபகற்பத்துக்குள்ளேயே மாற்றுவழி ஏதும் காண முடியாது என்பதையும் கவனிக்க வேண்டும். அங்கு வளமான நிலங்கள் அரிது; நிலத்தின்மேல் சுமை அதிகரித்தால் பொருளாதாரச் சமநிலை சீர்குலையும். எனவே வெளிப்புறத்தில் விரிந்து பரவுவதுதான் ஒரே மாற்றுவழியாக இருந்தது. இதில் சம்பந்தப்பட்டுள்ள பொருளாதார அம்சங்களை சிட்டனி (Caetani),[11] பெக்கர் (Becker)[12] முதலான தற்கால அறிஞர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆயினும் ஆரம்பகால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும் இதை முற்றிலுமாகக் கவனிக்காமலில்லை. இஸ்லாமிய படையெடுப்பு வெற்றிகளின் வரலாற்றை எழுதிய பலாதுரீ, பல முக்கிய நிகழ்ச்சிகளைப் பாரபட்சமின்றிப் பதிவு செய்திருக்கிறார். ஸிரியா படையெடுப்புக்கு ஆள்சேர்த்த போது, அபூபக்கர்,

11. *Annali* Vol. ii, PP. 831-61, quoted by Philip K. Hitti in *History of the Arabs*, பக்கம் 144.
12. *In Cambridge Medieval History* (New York, 1913), Vol. ii Chapter xi.

www.padippakam.com



"மக்கா, அல்-தாயிஃப், அல்-யாமன் ஆகியவற்றின் மக்களுக்கும், நஜ்திலும் அல்-ஹிஜாஸிலும் உள்ள எல்லா அரேபியர்களுக்கும் கடிதம் எழுதி ஒரு "புனிதப்போரில்" கலந்துகொள்ள வருமாறு அழைத்தார். போரில் கலந்துகொள்வதற்கும், கிரேக்கர்களிடமிருந்து கொள்ளையடிப்பதற்கும் அவர்களது ஆசையை அவர் தூண்டிவிட்டார்."[13] இந்த அழைப்புக்குச் செவிசாய்த்தவர்களை பலாதுரீ இரண்டு பிரிவாகப் பிரிக்கிறார்: (1) முஸ்தஸிப் (Muhtasib) (கடவுளின் மகிழ்ச்சியைத் தவிர வேறு எதையும் விரும்பாதவர்கள்); (2) தமீ (Tamī) (கொள்ளைப்பொருளில் நாட்டம் கொண்டவர்கள்). அரபு படைக்கு எதிராகப் பாரசீகத்தைக் காக்கப் போரிட்ட படையின் தலைவர் ருஸ்தம் (Rustam) முஸ்லிம் தூதரிடம் இவ்வாறு கூறியதாக பலாதுரீ தெரிவிக்கிறார்: "நீங்கள் செய்யும் காரியத்துக்கு உங்களைக் கட்டாயப்படுத்தியது, பொருள் பெறும் வழிகள் சுருங்கிப்போனதும் வறுமையும்தான் என்று நான் அறிகிறேன்." முஸ்லிம் தூதர் முகீரா (Mughīra) இதற்கு அளித்த பதிலிலும் இதே கருத்து தொனிக்கிறது: "கடவுள் தனது தூதரை எங்களிடையே அனுப்பி வைத்தார். அவரது போதனையை ஏற்று அவரைப் பின்பற்றுவதன் மூலம் எங்களைச் செழிப்புடன் வாழச் செய்தார்."[14]

இவ்வாறாக வெளிப்புறத்தில் விரிந்து செல்வது, அரேபிய தீபகற்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக அவசியமாயிற்று எனக் காண்கிறோம். எனவே அபூபக்கர், பதூயின் கிளர்ச்சியை ஒடுக்கியவுடனேயே தமது படைகளை ஸிரியாவை நோக்கி அனுப்பி வைத்தார். இந்தக் கிளர்ச்சியின் மூலம் அவருக்கு ஒன்று புலனாயிருக்க வேண்டும்: பதூயின்களைக் கட்டுப்படுத்தி வைக்கவேண்டுமானால் அவர்களை வெளிநாட்டு எதிரிகளுடன் போரில் ஈடுபடுத்தி வைக்க வேண்டும்; போரின் மூலம் அவர்களுக்குப் பொருளாதார ஆதாயமும் கிடைக்கும் என்று அவர் உணர்ந்திருக்க வேண்டும். போருக்குத் தூண்டுதலாக ஹெராக்ளிட்டஸோ, ஸிரியாவிலும் பாலஸ்தீனத்திலும் இருந்த அவரது ஆளுநர்களோ எதுவும் செய்யவில்லை. மேலும் இந்தப் போர்களை இஸ்லாமைப் பரப்பும் நோக்கத்துடன் தொடுப்பதாக அறிவிப்பு எதுவும் இல்லை என்றும் இந்த வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. (குறைந்தபட்சம் அது மட்டுமே காரணமாக இருக்கவில்லை). போரின் விளைவாகக் கையெழுத்தான பெரும்பாலான ஒப்பந்தங்களில் யாரும் இஸ்லாமைத் தழுவ வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதற்கு வேறு என்ன விளக்கம் இருக்கமுடியும்? இஸ்லாமில் சேருவதன் மூலம் கிடைக்கக்கூடிய பொருளியல் ஆதாயத்துக்காக யாரேனும் தாமே இஸ்லாமைத் தழுவியிருந்தால் அதுவேறு விஷயம்.

13. Balādhuri, Vo.1, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 173.
14. மேற்படி, பக்கம் 443.

www.padippakam.com



போரில் வெற்றிபெற்றவர்கள் "ஜிஸ்யா" (Jizya) என்ற தனிநபர் வரியில்தான் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். (அவர்களுடைய ஒரே நோக்கம் இதுதான் என்று பொருள் கொள்ளக்கூடாது; உயர்ந்த மதநோக்கத்துக்காகப் போரிட்டவர்களும் இருந்தார்கள்). "ஜிஸ்யா" வரி செலுத்த ஒப்புக்கொண்டு சரணடைந்தவர்களுக்கு வேறு எந்தத் தீங்கும் செய்யப்படாமல் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆர்மீனியா மீது நடத்தப்பட்ட படையெடுப்புப் பற்றி பலாதுரீ எழுதுகிறார்: "இதன்பிறகு அவர் (மன்வான்), ஸரீர் (Sarīr) பிராந்தியத்தில் புகுந்து திடீரென்று தாக்கினார்; பல கோட்டைகளை வென்றார். ஸரீரின் மன்னர் சரணடைந்து 500 ஆண் அடிமைகளையும் 500 பெண் அடிமைகளையும் (இவர்களுக்கு கருமையான தலைமுடியும் அடர்ந்த இமை ரோமங்களும் நீண்ட கண்ணிமைகளும் இருக்கவேண்டும்), அல்பாப் (Albāb) தானியக் கிடங்குக்கு ஒரு லட்சம் "முடி" (mudi) தானியங்களையும் கொடுக்கச் சம்மதித்தார். இதே போல துமான் (Tumān) மக்களுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்கள் 50 ஆண் அடிமைகளையும் 50 பெண் அடிமைகளையும் (இவர்கள் கருத்த முடியும், அடர்ந்த இமைரோமங்களும் நீண்ட கண்ணிமைகளும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்), 20,000 "முடி" தானியங்களை உணவுக் கிடங்குகளுக்கும் அளிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்... அதன்பின் அவர் ஹம்ஜீனுக்குள் (Hamzīn) நுழைந்தார். அங்கிருந்த மக்கள் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திட மறுத்தார்கள். அவர் நகரை முற்றுகையிட்டார். ஒரு மாதகாலம் இது நீடித்தது. கோட்டையைக் கைப்பற்றி எரித்தார். இதன்பின் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஹம்ஜீன் மக்கள் 500 ஆண் அடிமைகளையும் 500 பெண் அடிமைகளையும் (ஒரு முறையும்), அல்பாப் கிடங்குகளுக்கு ஆண்டுதோறும் 30,000 "முடி" தானியங்களையும் கொடுக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.[15] இவ்வாறாக, எங்குமே, இஸ்லாமுக்குக் கட்டாயமாக மதம்மாறும் ஷரத்தே இல்லை என்பதைக் காண்கிறோம். அரேபியர்களின் நாடுபிடிக்கும் போர்கள் பொதுவாக கருதப்படுவதைவிட அதிகமாக இவ்வுலக நோக்கங்களையே கொண்டிருந்தன.

மற்றொரு சுவாரஸ்யமான கேள்வியும் எழுகிறது. அரைகுறை நாடோடியான இந்த மக்கள் தங்களுடைய எளிமையான ஆயுதங்களை வைத்துக்கொண்டு, அவர்கள் காலத்தின் மிகப் பெரிய பேரரசுகளை, அதாவது பைஜாண்டிய, ஸஸானிட் பேரரசுகளை, எவ்வாறு தோற்கடித்தார்கள்? இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே இந்த அரேபியர்கள் இராக்கைக் கைப்பற்றிக்கொண்டு பாரசீகத்தினுள் நுழைந்தார்கள். மற்றொருபுறம் ஸிரியா, பாலஸ்தீன், எகிப்து

15. மேற்படி, பக்கம் 348-9

www.padippakam.com



ஆகியவற்றின்மீதும் ஆதிக்கம் பெற்றார்கள். இதற்குக் காரணங்கள் என்ன என்று பார்க்க வேண்டும். இந்த விரைவான வெற்றிகளெல் லாம் உண்மையில், வறண்ட பாலைவனத்திலிருந்து அருகிலுள்ள செழிப்பான பிறைவடிவப் பகுதிக்குள் ஊடுருவுவதற்கு நீண்ட காலமாக செயல்பட்டுவந்த நிகழ்ச்சிகளின் இறுதிகட்டமேயாகும். அந்தப் பகுதியில் ஸிமிடிக் மக்களின் கடைசியான பெரிய இடப் பெயர்ச்சியும் ஆகும். ஆரம்பகால முஸ்லிம் வரலாற்றாசிரியர் களும் இதற்குத் தங்கள் வழியில் விளக்கம் கூறியிருக்கிறார்கள். இந்தச் சிக்கலான விஷயத்தில் பல்வேறு அம்சங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே பார்ப்போம். நமது சௌகரியத்துக்காக இவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்: (1) அரேபியர்களின் உள் விஷயங்கள் சம்பந்தப்பட்டது (2) அவர்களுக்கு அப்பாற்பட்ட வெளிவிஷயங்கள் சம்பந்தப்பட்டது.

அரேபியர்கள், மக்கா, மதீனா போன்ற நகரங்களில் கூட, பல இனக்குழுக்களாகப் பிரிந்திருந்தார்கள் என்பது நமக்குத் தெரிந்ததே. ஆனால் முகமது மிகுந்த போராட்டத்துக்குப் பின், இனக்குழு அமைப்பில் சுயநல அக்கறைகொண்டவர்களை அகற்றிவிட்டு, அவர்களை இஸ்லாமின் கொடியின்கீழ் ஒற்றுமைப்படுத்தினார். இந்த ஒற்றுமைக்குப் பின் அரேபியர்கள் அரேபியாவுக்குள்ளேயே பல வெற்றிகளைப் பெற்றார்கள். சிறுசிறு பகுதிகளை வென்று அடக்கியதோடு, மதீனாவிலும் அதைச் சுற்றிலும் இருந்த யூதர் குடியிருப்புகளையும் பணிய வைத்தார்கள். இந்த வெற்றிகள் மூலம் அவர்களுக்குக் கப்பங்கள் வடிவில் மிகுந்த செல்வங்கள் கிடைத்தன; ஒற்றுமையின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்துகொண் டார்கள். வெளிநாடுகளின்மேல் தாக்குதல் நடத்திய போது அவர்களிடம் ஒற்றுமையுணர்வு ஊடுருவி நின்றது. மிகச் சக்திவாய்ந்த அரசை எதிர்த்து நிற்கும்போது தங்களிடம் உள்ள மிக வலுவான ஆயுதம் ஒற்றுமைதான் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார் கள். இதை அவர்கள் முழுமையாக உணர்ந்திருந்ததோடு, எதிரி களிடம் பேசும் போது இதை மிகவும் வலியுறுத்தினார்கள்: "நாங்கள் பிரிந்துநின்று எங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டிருந் தோம். கடவுள் தனது தூதரை எங்களிடையே அனுப்பிவைத்தார்; நாங்கள் ஒற்றுமையாகிவிட்டோம்." இந்த ஒற்றுமையுணர்வு, செல்வமும் அதிகாரமும் வரும் போது அதன் பின்னேயே வரு கின்ற பிணக்குகளால் இன்னமும் பாதிக்கப்படாமலிருந்தது. (விரைவிலேயே இது நடக்கவிருந்தது; செழிப்பான பிறைவடிவப் பகுதியில் அவர்கள் பெற்ற பெரிய வெற்றிக்குப் பின் இருபது ஆண்டுகளுக்குள்ளேயே பிணக்குகள் தலைதூக்கின). மேலும் அரேபியர்கள் ஏதேனும் ஒரு குறிக்கோளுக்காகப் போரிடுவதில்

www.padippakam.com



தீவிர ஆர்வம் காட்டுபவர்கள். அவர்கள் கடவுளுக்காகப் போரிடுவதாக நம்பினார்கள்; கடவுள் தங்களுக்கு உதவுவதாக நம்பினார்கள். (கொள்ளைப் பொருளுக்காகப் போரிடுபவர்கள்கூட போரின் தீவிரத்தில் இம்மாதிரி நம்பிக்கையைப் பெறுவதுண்டு). இந்த நம்பிக்கைக்கு அவர்களது வெற்றியில் பெரும்பங்கு உண்டு. நமது காலத்திலேயே, ஒருசில மனிதர்கள், சோஷலிசம் அல்லது ஜனநாயகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க சாதனங்கள் எதுவும் இல்லாமல், சக்திவாய்ந்த, ஆனால் நிலை தாழ்ந்து வருகின்ற பேரரசுகளைக் கவிழ்ப்பதில் வெற்றி பெற்றதைப் பார்த்திருக்கிறோம்.

மற்றொரு முக்கிய காரணம் இருந்தது. அரேபியர்கள் தங்கள் எதிரிகளைப் போலன்றி எளிமையான, லேசான ஆயுதங்களை வைத்துப் போரிட்டதால் அவர்கள் அங்குமிங்கும் இயங்குவது சுலபமாயிருந்தது. அவர்களின் எதிரிகள் கனமான கவசங்களையும், யானைகளையும் நம்பியிருந்ததால் அவர்களின் இயக்கத்துக்கு அவை இடையூறாயிருந்தன. அரேபியர்கள், ராணுவ விஞ்ஞானத்தில் தேர்ச்சியோ, கட்டுப்பாடான அணிகளாக அமைந்து போரிடுவதில் அனுபவமோ இல்லாதவர்களானாலும், போர்க்களத்தில் செயல்படும் விதங்களை உடனுக்குடன் தீர்மானித்துக்கொண்டு எதிரிகளை விரைவாகத் தாக்கினார்கள். அவர்களை எதிர்த்தவர்களோ, கனமான ஆயுதங்களைச் சுமந்திருந்ததோடு, அணிவகுப்பாக நின்று நேருக்கு நேர் மோதும் போர்களுக்காக வகுக்கப்பட்ட பழைமையான உத்திகளையே பின்பற்றினார்கள். ஸஸானிட் ராணுவத்திற்குத் தலைமைதாங்கிய ருஸ்தம், அரேபியர்களின் கரடு முரடான ஆயுதங்களையும் (அவை சரியாகக் கூர் தீட்டப்படக் கூடவில்லை), நாகரிகமற்ற தோற்றத்தையும் பார்த்து எள்ளி நகையாடினார்; ஓரிரண்டு மணி நேரத்தில் சண்டை முடிந்துவிடும் என்று நினைத்தார். இப்படிப்பட்ட எதிரிகளை எதிர்த்துப்போரிட சிரமப்பட வேண்டியதில்லை என்பது அவர் எண்ணம். ஆனால் இரு தரப்பினரும் களத்தில் இறங்கி போர் தொடங்கினதுமே எதிரியைப் பற்றித் தப்புக்கணக்குப் போட்டதை உணர்ந்து கொண்டார்.

இனி, அரேபியர்களின் விரைவான வெற்றிக்குக் காரணமான வெளிக் காரணங்களையும், அவர்கள் எப்படி தங்கள் காலத்தின் மிகப் பெரிய பேரரசுகளை வென்றார்கள் என்பதையும் பார்ப்போம். ரோமானிய, ஸஸானிட் பேரரசுகளில் உட்பூசல்கள் நிறைந்திருந்தன. அந்தப் பேரரசுகளின் ஆளும் வர்க்கத்தினர் சுகபோகங்களில் திளைக்கப் பழகிப்போயிருந்தார்கள். இது அவர்களின் மனஊக்கத்தையும் போரிடும் மனத்திட்பத்தையும் அரித்துவிட்டிருந்தது. மேலும்

www.padippakam.com



அவர்களின் சுகபோகங்களும் ஆடம்பரங்களும், ஒருபுறம் வறுமையில் ஆழ்ந்த விவசாய மக்களையும் மற்றொருபுறம் அடிமைகளையும் மற்ற கீழ்ப்பிரிவு மக்களையும் சுரண்டுவதை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், காதிஸிய்யா (Qādisiyya) சண்டை தொடங்குவதற்கு முன் முகீராவுக்கும் ருஸ்தமுக்கும் இடையே நடந்த உரையாடலின் ஒரு பகுதியைப் பார்ப்பது பொருத்தமாகும். இந்த உரையாடலைத் தபரி தமது புத்தகத்தில் கொடுத்திருக்கிறார். தபரி எழுதுகிறார்: முகீரா (ருஸ்தமிடம் அரபு தூதராகச் சென்றவர்) பாலத்தைக் கடந்து சென்றார். பாரசீகத் துருப்புகளின் அருகே அவர் சென்றதும் ருஸ்தமைச் சந்திப்பதற்கு முன் அனுமதி பெறுவதற்காக அவர் நிறுத்தப்பட்டார். முகீரா அங்கே (அதாவது, ருஸ்தமின் சபைக்கு) போய்ச் சேர்ந்த போது, பொன்இழைகளால் செய்யப்பட்ட அழகான உடைகளை அணிந்த பாரசீகர்களைக் கண்டார். அவர்கள் தலைகளில் கிரீடங்கள் அணிந்திருந்தார்கள். சிறிது தூரம்வரை கம்பளங்களை விரித்திருந்தார்கள். வருபவர் அந்த தூரத்தை நடந்து கடக்க வேண்டியிருந்தது. முகீரா பின் ஷோபா அங்கே சென்ற போது, ருஸ்தமின் சிம்மாசனத்தின்மீது இருந்த இருக்கை மெத்தையின் மேல் அமர்ந்தார். சிலபேர் ஓடிவந்து அவரைக் கீழே இழுத்து விட்டார்கள். முகீரா சொன்னார்: 'நாங்களெல்லோரும் உங்களுடைய விவேகம் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம்; ஆனால் உங்களைவிட அதிக முட்டாள்தனமான மக்கள் இல்லை என்பதை நான் இப்போது காண்கிறேன். அரேபியர்களான நாங்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். நாங்கள் போரில் தவிர யாரையும் அடிமையாக்குவதில்லை. எனவே நீங்களும் அதே போல அனுதாபம் கொண்டவர்களாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் இன்று நீங்கள் செய்த செயல்களிலிருந்து, உங்களில் சிலர், உங்களிலேயே மற்றவர்களுக்கு எஜமானர்கள் ஆகியிருப்பதைக் கண்டேன். இது சரியான வழி அல்ல. நாங்கள் இவ்வாறு செய்வதில்லை. இங்கே நான் என் விருப்பத்தின்படி வரவில்லை. நீங்கள் என்னை அழைத்திருந்தீர்கள். உங்களுடைய ஆட்சி பலவீனமடைந்துவிட்டதையும், நீங்கள் தோற்கடிக்கப்படுவீர்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.ஏனென்றால் இப்படிப்பட்ட முறைகளில் வாழும் எந்த நாடும் நீண்டகாலம் நிலைக்க முடியாது.' இதைக்கேட்டு பாரசீக மக்கள், 'கடவுள் பெயரால், இந்த அரேபியர் உண்மையைச் சொல்லுகிறார்,' என்று கூறினார்கள். நிலப்பிரபுத்துவ முறையின் பிரபுக்கள், கூறினார்கள்; 'கடவுளின் பெயரால், அவருடைய செயல்கள் நமது அடிமைகளை எப்போதும் அவர் பக்கம் இருக்கச் செய்யும்; அரேபியர்களை முக்கியமில்லாதவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் எண்ணியிருந்த நமது முன்னோர்கள் சபிக்கப்படட்டும்.'[16]

16. Tabari, Vol.II மொழிபெயர்ப்பு, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 402-403.

www.padippakam.com



அங்கே நிலவிய சமூக நிலைமைகளை எடுத்துக்காட்டுவதால் மேலே கூறப்பட்ட செய்தி மிகவும் முக்கியமானது. இஸ்லாமில் நிலப்பிரபுத்துவ முறையும், அதனுடன் இணைந்த ஏற்றத்தாழ்வுகளும் இல்லாததால் இஸ்லாம் சமூகத்தில் சமப்படுத்தும் சக்தியாக இருந்தது. மேலும் கொள்கை அளவிலாவது இஸ்லாம் இனம், நிறம் என்ற அடிப்படையில் வேறுபாடு காட்டாமல், விசுவாசிகள் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. பாரசீக சமூகத்துடன், அல்லது அரேபியாவுக்கு வடக்கே ரோமானியப் பேரரசரால் ஆளப்பட்ட பகுதிகளில் உள்ள சமூகங்களுடனும் ஒப்பிடும் போது, இஸ்லாமிய சமூகம் அதிக சமத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அதனால் மற்ற சமூகங்களில் உள்ள ஒடுக்கப்பட்டவர்களின் மனத்தை அது பெரிதும் கவர்ந்தது. தபரியின் புத்தகத்திலிருந்து மேலே எடுத்துக்காட்டப்பட்ட பகுதியில் பாரசீகத்தின் நிலவுடைமை வர்க்கத்தினர் இந்த அச்சத்தைத் தெரிவித்தார்கள். இந்த நாடுகளின் சாதாரணமக்கள் அரேபியர்களைத் தங்களுக்கு விடுதலை அளிப்போராகக்கருதி வரவேற்றதுடன், அவர்கள் வெற்றிபெற உதவியும் செய்தார்கள். இந்தக் கருத்துக்கு இணக்கமாக பலாதுரீயின் புத்தகத்திலிருந்து சில மேற்கோள்களைக் காண்போம். அவர் கூறுகிறார்: "ஹெராக்ளிட்டஸ் படை திரட்டியிருப்பதையும் அது யர்மூக் (Yarmūk) சண்டைக் களத்தை நோக்கி முன்னேறி வருவதையும் தெரிந்துகொண்ட முஸ்லிம்கள், ஹம்ஸ் (Hams) மக்களிடமிருந்து வசூல் செய்திருந்த வரிகளையெல்லாம் அவர்களிடம் திருப்பிக்கொடுத்தார்கள். 'எங்களுக்கு வேறு வேலைகள் இருப்பதனால் நாங்கள் உங்களைப் பாதுகாக்க முடியாது, எனவே நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்,' என்று அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்கள் 'ஜிஸ்யா' வரி வாங்கினால் அதற்கு பதிலாக தங்கள் பிரஜைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கடமைப்பட்டவர்கள். இந்தக் கட்மையிலிருந்து தங்களை விடுவிப்பதற்காக அவர்கள் 'ஜிஸ்யா' வரியைத் திருப்பிக்கொடுத்தார்கள்). அப்போது ஹம்ஸ் மக்கள் இவ்வாறு கூறினார்கள்: 'முன்பு இருந்த கொடுங்கோல், அடக்குமுறை ஆட்சியைவிட உங்களுடைய நியாயமான ஆட்சியை நாங்கள் மிகவும் விரும்புகிறோம். நாங்கள் ஹெராக்ளிட்டஸின் படைகளை எதிர்ப்போம். உங்கள் ஆளுநருடன் சேர்ந்து நாங்களும் நகரத்தைப் பாதுகாக்கப் போரிடுவோம்.' யூதர்கள் சொன்னார்கள்: 'தோரா (Torah) வின் பெயரால், ஹெராக்ளிட்டஸின் ஆளுநர் எங்களைத் தோற்கடிக்காமல் இந்த நகருக்குள் நுழைய முடியாது.' அதன் பின் அவர்கள் நகரின் கதவுகளை மூடிவிட்டு, பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டார்கள். முஸ்லிம்கள் வெற்றிபெற்று உடன்பாடு செய்துகொண்ட மற்ற நகரங்களின் யூதர்களும் கிறிஸ்தவர்களும்

www.padippakam.com



கூட இதே போலச் செய்தார்கள். அவர்கள் கூறினார்கள்: 'ரோமானியர்களும் அவரது கூட்டாளிகளும் நம்மை மீண்டும் வென்றார்களானால், நமது நிலைமை முன் இருந்தது போலவே ஆகிவிடும்'... கடவுள், நம்பிக்கையற்றவர்களை (அதாவது ரோமானியர்களை) தோற்கடித்து, முஸ்லிம்களை வெற்றிபெறச் செய்த போது, அவர்கள் நகரின் கதவுகளைத் திறந்துவிட்டு, ஆடிப்பாடி வெற்றியைக் கொண்டாடி வரிகளைச் செலுத்தினார்கள்."[17]

முஸ்லிம்கள், தங்களுக்கு முன் இருந்த ஆட்சியாளர்களைவிட எந்த வகையில் நல்ல ஆட்சியாளர்களாக இருந்தார்கள் என்பதை இப்போது பார்ப்போம். அரேபியர்கள் நாடோடிகளாக அல்லது நகரங்களில் வசிக்கும் வர்த்தகர்களாக இருந்தார்கள் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களிடையே விவசாய முறைகளும், நிலப்பிரபுத்துவ அமைப்பும் உருவாகவில்லை. அவர்கள் வென்று கைப்பற்றிய மாகாணங்களில், ரோமானிய, ஸஸானிய பேரரசுகள் இரண்டிலுமே விவசாயமே முக்கிய தொழிலாகவும், நிலவரியே அரசின் முக்கிய வருமானமாகவும் இருந்தது. எனவே விளைச்சலில் ஒரு பெரும்பகுதியை பேரரசரின் ஆட்கள் அல்லது நிலப்பிரபுக்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அரேபியர்களின் ஆட்சியில், ஆரம்பகாலத்திலாவது, வெல்லப்பட்ட மக்கள் 'ஜிஸ்யா' வரி மட்டுமே செலுத்த வேண்டியிருந்தது. இது முன்பு அவர்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்குச் செலுத்தியதைவிட மிகக் குறைவாக இருந்தது. (பின்னர் நிலவரியும் விதிக்கப்பட்டது). அரேபியர்கள், விவசாயிகளின் நிலங்களை எடுத்துக் கொள்ளாததால் அவர்கள் மீண்டும் தங்கள் நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆனார்கள். ஒரு பகுதியை வென்ற பிறகு, நிலத்தை நிலம் வைத்திருப்பவரிடமே விட்டுவிடும்படி உமர், அபூ உபைதா (Abū ūbayda) வுக்குக் கட்டளையிட்டிருந்தார்.[18] வெல்லப்பட்ட மக்கள் 'ஜிஸ்யா' வரி செலுத்த இணங்கினால் அவர்கள் மதம் மாறும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. இந்த வரியின் சுமை அதிகமாக இல்லாததால் மக்கள் அதைச் செலுத்தத் தயங்காமல் இணங்கினார்கள். ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் அவர்களின் உயிர்களும் உடைமைகளும் வழிபாட்டுத் தலங்களும் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டன. அதன் பின் ஒவ்வொரு படையெடுப்பிலும் இத்தகைய ஷரத்துக்கள், மக்களின் உள்ளங்களை அரேபியர்களுக்குச் சாதகமாக மாற்றப் பெரிதும் உதவின. அரேபியர்களின் எளிமையும், ஊழலுக்கு உடன்படாத குணமும், சமத்துவ முறையும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. ரோமானிய, ஸஸானிட் ஆளும் வர்க்கத்தினரின் படாடோப வாழ்க்கை, ஊழல், வறுமையான விவசாயிகளைக் கண்மூடித்தனமாகச் சுரண்டுவது, கடுமையான ஏற்றத்

17. Balādhuri, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 221-2.
18. Shibli N'omānī, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 164.

www.padippakam.com



தாழ்வுகள் ஆகியவற்றுக்கு இந்தப் பண்புகள் முற்றிலும் மாறுபட்டவையாக இருந்தன.

இங்கே இபின் கல்தூனின் (Ibn Khaldūn) 'அஸபீயா' ('asabīyah) என்ற குழு ஒற்றுமை கோட்பாட்டைப் பரிசீலிப்பது பொருத்தமாகும். நகரங்களில் வசிக்கும் நாகரிக மக்களுக்குமுன் வாழ்ந்த நாடோடி மக்களிடையே குழு ஒற்றுமையுணர்வு அதிக வலுவாக இருந்தது என்று அவர் கூறுகிறார். அவர்களிடையே பிரிவினை ஏற்படுத்தக்கூடிய சுயநலங்கள் (அதிகாரம், செல்வம் முதலானவை) இல்லாததால் அவர்கள், சுகபோக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட, முரண்பாடான சுயநலங்களால் பிரிவினைகள் நிறைந்த நகரவாசிகளை எதிர்த்துநிற்பதில் திறனுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று அவர் கூறுகிறார். ஆனால் பாலைவன இனக்குழுவிடம் அதிகாரமும் செல்வமும் சேர்ந்துவிட்டால் அது தைரியம் இழந்து, செல்வத்தாலும் அதிகாரத்தாலும் ஊழலுக்கு இலக்காகி, அதன் எதிரிகளுக்கு ஏற்பட்ட அதே கதிக்குத் தானும் உள்ளாகிவிடுகிறது என்கிறார். அவர் கூறுகிறார்: "இதன் (அதிகாரமும் செல்வமும் சேர்வதன்) விளைவாக பாலைவன வாழ்க்கையின் உரம்மிக்க தன்மை மாறிவிடுகிறது. குழு உணர்வும் தைரியமும் குறைகின்றன. இனக்குழு உறுப்பினர்கள் கடவுள் தங்களுக்கு அளித்துள்ள நல் வாழ்வில் ஆழ்ந்துபோகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் கர்வம் மிக்கவர்களாக வளர்ந்து தங்களை கவனித்துக்கொள்ளவும், குழு உணர்வுக்குத் தேவையான மற்றக் காரியங்களைச் செய்வதற்கும் மனமில்லாமல் போகிறார்கள். இது கடைசியாக அவர்களின் இயல்பான குணம் ஆகிவிடுகிறது. அடுத்தடுத்த தலைமுறைகளில் அவர்களுடைய குழு உணர்வும் தைரியமும் குறைந்துபோகின்றன. இறுதியாக குழு உணர்வு முற்றிலுமாக மறைந்துபோகிறது. இவ்வாறாக அவர்கள் தங்கள் அழிவுக்குத் தாங்களே அழைப்பு விடுக்கிறார்கள். அவர்களிடம் சுகபோகமும் உழைப்பில்லாத வாழ்க்கையும் எந்த அளவுக்கு அதிகமாகிறதோ, அந்த அளவுக்கு அவர்கள் அழிவை நெருங்குகிறார்கள். அரசாட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு அவர்கள் இழந்துவிட்ட வாய்ப்பைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. சுகபோகமாக வாழ்வதற்கும், உழைப்பற்ற வாழ்வில் அமிழ்ந்திருப்பதற்கும் உதவும் பொருள்கள், மேலான நிலையை அடைய உதவும் ஒரே பண்பான குழு உணர்வின் சக்தியை உடைத்துவிடுகின்றன. குழு உணர்வு அழிந்துபோனால் இனக்குழு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியை இழந்துவிடுகிறது. தன் சார்பில் உரிமைகள் எதையும் அது வலியுறுத்த முடியாது. மற்ற மக்கள் அதை விழுங்கி விடுகிறார்கள்."[19]

19. Ibn Khaldūn, *Muqaddimah*, பக்கம் 109.

படிப்பகம்

www.padippakam.com



முஸ்லிம்களுக்கும் இதுதான் நடந்தது. நாம் ஏற்கெனவே பார்த்தபடி முஸ்லிம்கள் குழு உணர்வு கொண்டவர்களாக, (இவர்களது படைகளில் பதூயின் அரேபியர்கள் பெரும் எண் ணிக்கையில் இருந்தார்கள்), உலகின் மிகச் சக்திவாய்ந்த பேரரசுகளைத் தங்களுடைய எளிமையான ஆயுதங்களைகொண்டு தாக்கிப் பணியவைத்தார்கள். இபின் கல்தூனின் கோட்பாட்டின்படி சுக போக வாழ்க்கை இன்மையும் ஊழலுக்கு உட்படாத தன்மையும் அவர்களின் மிகப் பெரிய ஆயுதங்களாயிருந்தன. ஆனால் ரோமானியர்களும், ஸஸானிடுகளும் நீண்டகாலம் அதிகாரத்திலும் சுகவாழ்க்கையிலும் இருந்துவிட்டதனால், சுயநல முரண் பாடுகள் காரணமாகப் பிரிவினைகள் பெருகியும் ஊழலுக்கு உட் பட்டும் இருந்ததனால் அவர்களின் ஒற்றுமை பலவீனமடைந்து விட்டது. மேலும் சுகபோக வாழ்க்கைக்கு அதிக நிதி ஆதாரங்கள் தேவைப்படும். மக்கள் மீது மேலும் கடுமையாக வரிச்சுமை ஏற்று வதன் மூலமே இதைப் பெற முடியும். இதனால் அவர்களுக்கு மக்க ளிடையே மேலும் கெட்டபெயர் ஏற்படுகிறது. அதனால்தான் அவர்களின் மக்கள் அரேபியர்களுடன் ஒத்துழைத்து அவர்கள் வெற்றிபெற்ற போது மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஆனால் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் 1258-இல் முஸ்லிம்கள் தார்த் தரியர்கள் (Tartars) முன் இதேகதிக்கு உள்ளானார்கள். மங்கோலிய (Mongol) படையெடுப்பாளர்கள் அப்பாஸிட் பேரரசை நொறுக்கித்தள்ளித் தோற்கடித்தார்கள். இதற்கான காரணங்களில் அதிக வித்தியாசம் இல்லை. முஸ்லிம்கள் பல ஆண்டுக்காலம் சுக போகத்திலும் சிரமமின்றியும் வாழ்ந்த பின் தங்களிடம் முன்பிருந்த வீரியத்தையும் ‘அஸபீயா’ என்ற ஒற்றுமை உணர்வையும் இழந்து, தங்களுக்குள்ளேயே பிளவுபட்டிருந்தார்கள். அவர்களுடைய உட்சண்டைகள் அவர்களை முற்றிலுமாக பலவீனப்படுத்தி, எதிராளிகளின் தாக்குதலை எதிர்த்துநிற்க முடியாமல் செய்துவிட்டன. படையெடுத்துவந்த மங்கோலியர்களுடன் ஒப்பிடும் போது அவர்களிடம் நன்கு பயிற்சிபெற்ற ராணுவமும் மேலான ஆயுதங் களும் இருந்தபோதிலும், போர்க்களத்தில் அவர்கள் சிதறடிக்கப் பட்டார்கள். அவர்களால் முன்பு தோற்கடிக்கப்பட்ட ஸஸானிடு களைப்போலவே முஸ்லிம்கள் இப்போது பல்வேறு வர்க்கங் களாகப் பிரிந்து சமத்துவத்தின் அடையாளமே இல்லாதவர்களாகி விட்டனர். இருந்தால், அது கோட்பாட்டளவில்தான் இருந்தது. அரேபியர்கள் இந்தத் தீய வழக்கங்கள் பற்றி முன்பு ஸஸானிடுகளை எச்சரித்தார்கள். இப்போது அவர்களே அவற்றுக்குப் பலியாகி விட்டார்கள். மத்திய ஆசியப் புல்வெளிகளிலிருந்து வந்த மங்கோலி யர்கள் குழு ஒற்றுமை உணர்வோடு அதிகாரம் மற்றும் செல்வத்தால் கறைபடாது இருந்தார்கள். அவர்களுடைய போர் அணிகளில்

www.padippakam.com



பிளவுகள் இல்லை. எனவே மங்கோலியர்கள் ஆயுதங்களோடு தைரியத்துடனும் உறுதியுடனும் போரிட்டு, அரேபியர்கள் முன்பு ரோமானியர்களையும் ஸஸானியர்களையும் தோற்கடித்தது போலவே, அரேபியர்களைத் தோற்கடித்தார்கள். முஸ்லிம்கள், உலகின் மிகப் பெரிய பேரரசுகளைத் தோற்கடிக்க உயர்ந்த மத நம்பிக்கை மட்டும் காரணமல்ல என்பதை சரித்திரம் கற்பவர் எளிதாகப் புரிந்துகொள்வர். சில சரித்திரச் சூழ்நிலைகளும் சமூகப் பொருளாதார காரணிகளும் அதற்கு உதவின. மதம் போருக்குத் தூண்டியிருக்கலாம்; ஆனால் இந்த மற்ற காரணிகளே அவர்களின் வெற்றிக்குத் துணைபுரிந்தன.

இஸ்லாம் அரேபியர்களுக்கு பெருமித உணர்வளித்து ஒன்றுபட்டுச் சேர மையமாக அமைந்தது. வெளிநாட்டு படையெடுப்புகள் தொடங்கியதும் அரேபியர்கள் அனைவரும் அதன் முக்கியத்துவம் உணர்ந்து அதில் இணைந்துகொண்டார்கள். கிறிஸ்தவ அரேபியர்கள் கூட, அரபு தேசீய உணர்வினால் உந்தப்பட்டு, ஸஸானிடுகளுக்கும் ரோமானியர்களுக்கும் எதிராக முஸ்லிம்களுடன் சேர்ந்து போரிட்டனர். இராக்கில் முஸ்லிம்களுக்கு முதலில் தோல்வி ஏற்பட்ட போது அரேபியர்கள் அனைவரும் அதைத் தங்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பாகக் கருதினார்கள். அரபு இனக்குழுக்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் கலீஃபா உமரிடம் வந்து அதற்குப் பழிவாங்க தங்கள் சேவையை அளிக்க முன்வந்தார்கள். கிறிஸ்தவர்களான தக்லப் (Taghlab) இனக்குழுவினர் கூட முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அந்த இனக்குழுவினர் தலைவர் உமரிடம் வந்து, "இன்று அரேபியர்கள் அரேபியரல்லாதவர்களை எதிர்த்து நின்றார்கள். இந்த தேசீயப் படையெடுப்பில் நாங்களும் உங்கள்பக்கம் இருக்கிறோம்," என்று கூறியதாக ஷிப்லி நோமானி (Shibli N'omānī) தெரிவிக்கிறார்.[20] ரோமானியர்களுக்கும், ஸஸானியர்களுக்கும் அடங்கிய எல்லைப்புற சிற்றரசுகளான கஸ்ஸனிடுகளும் (Ghassanids) லக்மிடுகளும் (Lakhmids) இஸ்லாமைத்தழுவி, முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு தங்களுடைய முன்னாள் எஜமானர்களுக்கெதிராகப் போரிட்டனர். இந்தச் சிற்றரசுகள், இஸ்லாமிய கொடியின்கீழ் பழிதீர்த்துக்கொள்ள வாய்ப்புப் பெற்றன. இவ்வாறாக அரேபியர்களுக்கு இஸ்லாம் அளித்தது வேறெதையும்விட ஒரு தேசீயப் புரட்சியே என்பதைக் காண்கிறோம். பாலைவனத்தில் அல்லது சிறிய நகரங்களில் வசித்துவந்த முக்கியமில்லாத மக்களாகக் கருதப்பட்ட அரேபியர்கள், ஒரு பரந்த பேரரசின் அதிபதிகள் ஆகிவிட்டனர். ஒருவேளை இதனால்தான் இஸ்லாமைத் தழுவுவது அரேபியர்களுக்குக் கட்டாயமானதென்று உமர் கருதியிருக்கலாம். அரேபியரல்லாத மக்களுக்கு அந்தக் கட்டாயம் இல்லை என்பதை

20. Shibli N'omānī, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 166.

www.padippakam.com



நாம் ஏற்கெனவே பார்த்தோம். தபரி கூறுகிறார்: "பனூ தக்லப் (ஒரு கிறிஸ்தவ இனக்குழு), முஸ்லிமாக வேண்டும் என்று வலீத் பின் அத்பா (Walīd bin 'Atba) வற்புறுத்தினார். அவர் உமருக்கு இதைப் பற்றி எழுதினார். உமர் பின்வருமாறு பதிலளித்தார்: 'அரேபியத் தீபகற்பத்தின் மக்கள் இஸ்லாமைத் தழுவுவது மிகவும் அவசியம். அரேபியர்கள் முஸ்லிம்களாகத்தான் வேண்டும். இருந்தாலும் அவர்கள் ஒரு நிபந்தனையின் பேரில் தங்கள் மதத்தைப் பின்பற்ற அனுமதிக்கலாம். அவர்களுடைய குழந்தைகள் தொடர்ந்து கிறிஸ்தவ மதத்தில் இருக்கக் கூடாது. யாரும் (பனூ தக்லபிலிருந்து) முஸ்லிம் ஆக விரும்பினால் அவரது இஸ்லாமை ஏற்றுக்கொள்ள வேண்டும்."[21] இவ்வாறாக அரேபியர்களுக்கு இஸ்லாம் தேசிய மதமாக இருந்தது.

அரேபியர்கள் வெளிநாடுகளின்மேல் தாக்குதல் தொடுத்த போது முற்றிலுமாக ஒற்றுமைப்பட்டிருந்தார்கள் என்பதையும், அதுவே அவர்களுக்குப் பெரிய ஆயுதமாக இருந்தது என்பதையும் நாம் மேலே பார்த்தோம். இஸ்லாம் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறதே, அவர்கள் நீண்டகாலம் ஒன்றுபட்டிருக்க முடிந்ததா? முடியவில்லை. செல்வமும் அதிகாரமும் சேராதவரை அவர்கள் ஒன்றுபட்டிருந்தார்கள். ஆனால், ரோமானிய, ஸஸானிட் மாகாணங்களை வென்ற பின் செல்வமும் அதிகாரமும் வெள்ளமாகப் பெருகிவருவதை நீண்ட காலத்துக்குக் கட்டுப்படுத்த முடியவில்லை. விரைவிலேயே போர் வெற்றிகளுடன் செல்வங்கள் குவிந்தன. மரபு வழக்கப்படி, கொள்ளைப் பொருளாக் கொண்டுவரப்பட்ட செல்வங்களெல்லாம், சண்டையில் பங்கெடுத்துக்கொண்டவர்களுக்கும், தகுதியான மற்றவர்களுக்கும் உடனடியாகப் பிரித்துக்கொடுக்கப்பட்டன. அரசுக் கருவூலத்துக்கு அதிகமாக எதுவும் மிச்சமிருப்பதில்லை; சில சமயங்களில் ஒன்று கூட மிச்சமில்லாமல் போகும். வரி வருமானங்களாகவும், மாகாணங்களிலிருந்து பெருமளவில் செல்வம் வந்து கொண்டிருந்தது. ஜார்டனிலிருந்து வந்த வரித்தொகை ஒருலட்சத்து எண்பதாயிரம் தினார்கள் என்று பலாதுரீ கூறுகிறார். பாலஸ்தீனத்திலிருந்து மூன்றரை லட்சம் தினார், டமாஸ்கஸிலிருந்து நான்கு லட்சம் தினார், ஹம்ஸ், கினிஸரீன், அல்-அவாஸிம் பகுதிகளிலிருந்து ஏழுமுதல் எட்டுலட்சம் தினார்வரை வரிப்பணம் வந்ததாக அவர் தெரிவிக்கிறார்.[22] . இவைதவிர மேலும் பல மாகாணங்களிலிருந்து இதைவிட அதிகமாகவே வரித்தொகை கிடைத்து வந்தது. அபுல் ஃபர்ஜ் (Abul Farj) தாம் எழுதிய "கிதாப் அல்-கராஜ் (Kitab al-Kharāj) புத்தகத்தில் பல்வேறு மாகாணங்களின் வரித்தொகைகள் பற்றி விவரங்கள் கொடுத்திருக்கிறார். ஹுல்வானிலிருந்து (Hualwān) மட்டும் சுமார்

21. Tabari, Vol.III, உருது மொழிபெயர்ப்பு: ரஷீத் அகமது அர்ஷத், பக்கம் 70.
22. Balādhurī, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 324.

www.padippakam.com



தொண்ணூறு கோடி திர்ஹாம் வருவாய் வந்ததாக அவர் குறிப்பிடுகிறார்கள்.[23]

ஆரம்பத்தில் உமர், முஸ்லிம்கள் செல்வங்களோ நில உடைமைகளோ சேர்க்காமல் தடுக்க முயன்றார். தம்முடைய மாகாண ஆளுநர்கள் அனைவருக்கும் கண்டிப்பான உத்தரவுகள் அனுப்பினார்; அவர்களுக்கென நடத்தை நெறிமுறை ஒன்றையும் வகுத்தார். ஆனால் சரித்திரத்தின் வெள்ளம் அவருக்கெதிராகச் சென்றது. எதுவும் அதைத் தடுக்க முடியவில்லை. அல்-ஹிஜாஸில் இருந்தது போன்ற எளிமையைப் பின்பற்ற வேண்டும் என்று உமர் வலியுறுத்தியதைப் பொருட்படுத்தாமல் ஸாத்(Sa'd), கடஸஃபானின் (ctesiphon) அரண்மனையைப்போன்ற மாளிகை ஒன்றைக் கட்டினார். ஆடம்பரச்செலவுகள் செய்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்க உமர் விரும்பினார். புகழ்பெற்ற படைத்தலைவர் காலித் பின் அல்-வலீத் (Khālid b. al-Walīd) ஒரு கவிஞருடைய கவிதையைப் பாராட்டி அவருக்கு 10,000 திர்ஹாம் பரிசளித்தார். செயலர் இதைப் பற்றி உடனடியாக உமருக்குக் கடிதம் எழுதினார். இதற்கு உமர் பதிலளித்து அபூ உபைதா (Abū 'Ubayad)வுக்கு எழுதிய பதிலில், காலித் அந்தப் பரிசுத்தொகையை தமது கைப்பணத்திலிருந்து கொடுத்திருந்தால் அது ஆடம்பரச்செலவு என்றும், அரசுப் பணத்திலிருந்து கொடுத்திருந்தால் அது கையாடல் என்றும், எப்படியானாலும் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டியவர் என்றும் குறிப்பிட்டிருந்தார். உமரிடமிருந்து இந்தக் கடிதத்தைக் கொண்டுவந்தவர், பரிசுத்தொகையை எதிலிருந்து அவர் கொடுத்தார் என்று அவரிடம் பகிரங்கமாகவே கேட்டார். காலித் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு அடையாளமாக அவரது தொப்பி அகற்றப்பட்டு, அவரது தலைப் பாகையைக்கொண்டே அவரது கழுத்தில் கட்டுப்போடப்பட்டது. இஸ்லாமின் அப்போதைய மிக உயர்ந்த படைத்தலைவர்களில் ஒருவருக்கு இவ்வாறு பகிரங்கமாக அவமானப்படுத்தும் தண்டனை அளிக்கப்பட்டது.* இப்படிப்பட்ட கடுமையான தண்டனைகள்

23. Abul Farj, Kitab al-Kharaj ed. de Goeje, உருது மொழிபெயர்ப்பு: ஸையத் அபுல் கைர் மவுதூதி (ஹைதராபாத் nd) பக்கம் 250.

* உமர் இஸ்லாமிய லட்சியத்தைப் பின்பற்ற விரும்பியதனால் கடுமையான தண்டனை அளித்தார். ஆனால் இஸ்லாமே முற்றிலுமாக நிலப்பிரபுத்துவத் தன்மை பெற்று ஆட்சி அதிகாரத்தின் சக்திமிக்க ஒரு பகுதியாக மாறியபோது நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. இதை எடுத்துக்காட்டுவதற்கு தாரிக் அல்-ஃபக்தீ (Tarikh al-Fakhti) யிலிருந்து ஒரு நிகழ்ச்சியை மேற்கோள் காட்டலாம். அப்பாஸிட் காலத்தில் யாஹ்யா அல்-பரமகி (Yahjā al-Baramaki) என்ற ஒரு அமைச்சர் (வஸீர்) மிகுந்த அதிகாரம் பெற்றவராக விளங்கினார். ஒருமுறை அவர் பல வீடுகளைக் கொண்ட ஒரு அழகான பழத்தோட்டத்தையும் 10,000 தினார் பணத்தையும் ஒருவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். அந்த நபர் ஏழையாயிருந்தாலும் அமைச்சரைத் தம் இல்லத்தில் விருந்துக்கு அழைத்தார் என்பதே இந்த தாராள அன்பளிப்புக்குக் காரணம். (பார்க்க: முகமது பின் அலி பின் தபா தபாவின் தாரிக் அல்-ஃபக்ரி, உருது மொழிபெயர்ப்பு: மவுலவி அலிகான் (தில்லி, 1969), பக்கம் 296-97).

www.padippakam.com



வழங்கினாலும் கூட மக்கள் செல்வம் சேர்ப்பதை நிறுத்த முடிய வில்லை. இந்தத் தண்டனைகள் பிரச்சினையின் அடிவேரை வெட்ட வில்லை. இஸ்லாமின் தனியார் சொத்துடைமை அனுமதிக்கப் படுகிறது என்றும், செல்வம் சேர்ப்பதற்கு வரம்பு எதுவும் விதிக்கப் படவில்லை என்றும் கருதப்பட்டதே பிரச்சினையின் மூலகாரணம்.[1]

இபின் கல்தூன், சேர்த்துவைக்கப்பட்ட செல்வங்கள் பற்றி மாஸூதி (Mās'udi) யை மேற்கோள்காட்டி சில புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார். அவர் கூறுகிறார்: "உத்மானின் காலத்தில், முகமதுவைச் சுற்றியிருந்தவர்கள் நிலங்களும் பணமும் சேர்த்தார்கள். உத்மான் கொல்லப்பட்ட நாளில் அவரது பொருளாளரிடம் 150,000 தினாரும், 1,000,000 திர்ஹாமும் இருந்தன. அவருக்குச் சொந்தமாக வதி அல்-குராவிலும், ஹுனைனிலும் மற்ற இடங்களிலும் இருந்த நில உடைமைகளின் மதிப்பு 200,000 தினார். இவைதவிர, 1,000 குதிரைகளையும் 1,000 வேலைக்காரிகளையும் அவர் விட்டுச் சென்றார். தல்ஹா (Talhah) வுக்கு இராக்கிலிருந்து நாள் ஒன்றுக்கு 1,000 தினார் வருமானம் கிடைத்தது. அஷ்-ஷ்ரா (ash-Shrah) பகுதியிலிருந்து கிடைத்த வருமானம் இதைவிட அதிகம். அப்த்-அர்-ரஹ்மான் பின் அவ்ஃபிடம் 1,000 குதிரைகளும் 1,000 ஒட்டகங்களும் 10,000 ஆடுகளும் இருந்தன. அவர் இறந்த பின்அவரது சொத்துக் களின் நான்கில் ஒரு பங்கின் மதிப்பு 84,000. ஜைத் பின் தாபித் (Zayd b. Thābit) விட்டுச்சென்ற தங்கமும் வெள்ளியும் கோடரியால் வெட்டித் துண்டுகளாக்க வேண்டிய அளவுக்கு இருந்தன. இவை தவிர அவர் விட்டுச்சென்ற மற்ற சொத்துக்கள் நிலங்கள் ஆகிய வற்றின் மதிப்பு 100,000 தினார். அஸ் - ஸுபைர் (Az-Zubayr) தமக்கு அல்-பஸ்ராவில் ஒரு இல்லமும், எகிப்து, அல்-கூஃபா, அலெக் ஸாண்டரியா ஆகிய இடங்களில் வேறு இல்லங்களும் கட்டினார். தல்ஹா அல்-கூஃபாவில் ஒரு இல்லம் கட்டினார்; மதீனாவில் உள்ள தமது இல்லத்தையும் மேம்படுத்தினார். சுண்ணாம்புச்சாந்து, செங்கல், தேக்குமரம் ஆகியவற்றைப் பயன்படுத்தினார். ஸத் பின் அபி வக்காஸ் (Sa'd b.Abi Waqās) மதீனாவில் தமக்கு ஒரு இல்லம் அமைத்து அதை உள்ளும் புறமும் சாந்தினால் பூசச்செய்தார்.

யாலா பின் முன்யா (Ya'lā b. Munyah) 50,000 தினாரும் 300,000 திர்ஹாம் மதிப்புள்ள நிலங்களும் மற்ற பொருள்களும் விட்டுச் சென்றார். "இவ்வாறு மேற்கோள் காட்டியபின் இபின் கல்தூன் ஒரு கருத்தைக் கூறுகிறார்: "மக்கள் இம்மாதிரியான லாபங்களைப் பெற்றார்கள். அவர்களது மதம் இதற்காக அவர்களைக் குற்றம் சொல்லவில்லை; ஏனென்றால் கொள்ளைப்பொருளாகக் கிடைத்த இந்தச் செல்வங்கள் சட்ட பூர்வமான சொத்தாகும்." பெரும் செல்வம் சேர்ப்பதை நியாயப்படுத்த முயலும்வகையில் இபின்

[1] ஆயினும், செல்வத்தைச் சேர்த்துக் குவிப்பதற்குக் குரான் ஊக்கமளிக்கவில்லை. அது கூறுகிறது: "தாங்கள் எதைச் செலவிட வேண்டும் என்று அவர்கள் கேட் கிறார்கள். நீர் சொல்லும்: 'உங்களிடம் உபரியாக (தேவைக்குமேல் அதிகமாக) இருப்பதை என்று" (2:219).

www.padippakam.com



கல்தூன் இவ்வாறு கூறுகிறார்: "அவர்கள் தங்கள் சொத்துக்களை வீணான வழிகளில் ஈடுபடுத்தாமல், நாம் குறிப்பிட்டபடி தங்களுடைய நிலைமைகளுக்குத் தகுந்தபடி திட்டமிட்டுச் செலவுசெய்தார்கள். உலகச் சொத்துக்களைச் சேர்ப்பது கண்டனத்துக்குரியது என்றாலும் அவர்களுக்கு இது பொருந்தவில்லை. ஏனென்றால் நாம் குறிப்பிட்டது போல வீணடிப்பதும், திட்டமின்றிச் செலவிடுவதுமே குற்றம் கூறத்தக்கதாகும். இவர்கள் ஒரு திட்டத்தின்படி செலவுசெய்து, உண்மையின் சேவைக்கும் பயன்படச் செய்ததால் இவ்வளவு பெருஞ் செல்வம் சேர்ப்பது இவர்களுக்கு உண்மையின் வழியில் செல்ல உதவியதுடன், மறு உலகத்தை அடையும் நோக்கத்துக்கும் உதவியது."[24]

இபின் கல்தூன் என்ன சொன்னாலும், பெருமளவில் செல்வம் சேர்ப்பதும், சிலரிடம் அது குவிக்கப்படுவதும், ஆரம்பகால இஸ்லாமியச் சமூகத்துக்கு ஒரு சாபக்கேடாக ஆயிற்று என்பதைச் சற்றுப் பின்னே காணவிருக்கிறோம். அதன் மூலம் சமூகத்தில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், அதனுடன் அதிகாரப்போட்டியும் சேர்ந்து கொள்ளும் போது உள்நாட்டுப்போர் உருவாகிறது. ஆழ்ந்து நோக்கும் நுண்ணறிவுகொண்ட வரலாற்றாசிரியரான இபின் கல்தூன், மேலே எடுத்துக்காட்டியபடி, தீர்க்கதரிசியின் தோழர்கள் செல்வம் சேர்த்ததை நியாயப்படுத்த முயல்வது ஆச்சரியமளிக்கிறது. ஏனென்றால் அவரே பெருமளவில் செல்வங்கள் சேர்ப்பதும் உழைப்பில்லாத சுகவாழ்க்கை வாழ்வதும் ஆளும் வம்சத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன என்று கோட்பாட்டு ரீதியாகக் கூறுகிறார். இரண்டாவது கலீஃபாவான உமர், ஏற்கெனவே குறிப்பிட்டது போல, இந்த அபாயத்தை உணர்ந்திருந்தார். செல்வம் குவிவதைத் தடுக்க அவர் உண்மையாக முயன்றார். தமது ஆட்சியின் கடைசி கட்டத்தில் இதற்காக அவர் சில நடவடிக்கைகள் எடுத்தார். மேலும் அவர், "நான் பிற்காலத்தில் செய்ததை முதலிலேயே செய்திருந்தால், பணக்காரர்களிடமிருந்து உபரிசெல்வத்தை எடுத்து, ஏழை எளியவர்களுக்குக் கொடுத்திருப்பேன்," என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது.[25] சாகுபடி செய்யத்தக்க நிலங்கள் தனியுடைமையாக இருப்பதை அவர் தடைசெய்து அரசுடைமையாக்கினார். சாகுபடியின் நன்மையை முழு உத்தரவாதத்துடன் சாகுபடியாளர்களுக்கே, அவர்கள் இஸ்லாமை ஏற்றாலும் சரி இல்லையென்றாலும் சரி, கொடுத்தார்.[26] உண்மையில் உமர், அலீயுடன் சேர்ந்து, குரானில் கூறியுள்ளபடி இஸ்லாமின் லட்சியங்களைச் செயல்படுத்தத் தீவிரமாக முயன்றார்; ஆனால் தோல்வியடைந்தார். ஏனென்றால், மூன்றாவது கலீஃபாவான உத்மான், புதிதாக உருவான சக்திமிக்க பணக்கார வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் அவரது கொள்கைகளையெல்லாம் மாற்றி சுயநலசக்திகள்

24. இபின் கல்தூன், முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 163.
25. பார்க்க: Ahmad 'Abbās Sahlih, *Al-Yamīn wa al-Yasar fi'l Islam* (Beirut, 1973), பக்கம் 64.
26. மேற்படி, பக்கம் 91.

www.padippakam.com



விரும்பிய சலுகைகளையெல்லாம் அளித்தார்.[27] உமர் செய்தது எதிர் நீச்சல்போடும் முயற்சி. அரேபியர் நுட்ப அறிவு படைத்த எதார்த்த நோக்குடைய மக்கள். நீண்ட காலமாக அவர்கள் ரோமானிய, ஸஸானிட் பேரரசுகளின் செல்வச் சிறப்புகளைப் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இஸ்லாம் இப்போது வாய்ப்பை அளித்திருக்கிறது. விரைவிலேயே முஸ்லிம்கள், முகமதுவின் மரியாதைக்குரிய தோழர்கள் உட்பட, ரோமானிய, ஸஸானிட் பேரரசர்களின் வழியைப் பின்பற்றத் தொடங்கினார்கள். முஆவியா (Mu'āwiya) தமது தலைநகரை, முன்னாள் ரோமானிய மாகாணமான ஸிரியாவுக்கு மாற்றியது இதற்கு ஒரு அடையாளம் போல அமைந்தது. முன்னாள் ஆட்சியாளர்களின் பாணியில் ஒரு அழகான அரண்மனை கட்டினார். இவ்வாறாக ஹிட்டி (Hitti) கூறுகிறார்: "டமாஸ்கஸில் இளம் முகமது நுழையத் தயங்கியதாக மரபுச் செய்தி கூறுகிறது. சுவர்க்கத்தில் ஒரு முறையே நுழைய விரும்புவதாக அவர் கூறினாராம். அப்படிப்பட்ட டமாஸ்கஸ் இந்த மாபெரும் அரசின் தலைநகராயிற்று. நகரின் நடுவில், மரகதத்தில் பதித்த முத்துப் போல, பசுமையான பூங்காக்கள் சுற்றிலும் அமைந்திருக்க மையத்தில் உமய்யத்களின் அரண்மனை பிரகாசித்தது. அங்கிருந்து தெற்கே பார்த்தால் செழிப்பான சமவெளி, பனி எப்போதுமே உருகாமல் மூடியிருக்கும் சிகரத்தைக்கொண்ட ஹெர்மான் மலைவரை பரவியிருப்பதைக் காணலாம். அல்-கத்ரா (Al-Khadrā) (பசுமையானது) என்பது அதன் பெயர். வம்ச பரம்பரையை நிறுவியவரான முஆவியா அதைக் காட்டினார். உமய்யத் பள்ளிவாசலுக்கருகே அது அமைந்திருந்தது. அல்-வலீத் (al-Walīd) அந்தப் பள்ளிவாசலை சமீபத்தில் அழகுபடுத்தி, இப்போதும் அழகை விரும்புவோரைக் கவர்ந்திழுக்கும் சிற்பக்கலை ரத்தினமாக மாற்றியிருந்தார். சபா மண்டபத்தில் சிறப்பான பூவேலைகள் செய்யப்பட்ட மெத்தைகள் பொருத்தப்பட்ட சதுரமான இருக்கை சிம்மாசனமாக அமைந்திருந்தது. அந்த ஆசனத்தின் மீது, அரசு முறையில் சபை கூடும் போது கலீஃபா பளபளக்கும் ஆடைகள் அணிந்த கால்களை மடக்கி அமர்ந்திருப்பார். அவருக்கு இடப்பக்கம் உறவினர்கள் நின்றிருப்பார்கள்.[28] அரசவை உறுப்பினர்கள், கவிஞர்கள், மனுக்கள் கொடுக்க வருவோர் பின்னே நிற்பார்கள்."[29] இவ்வாறாக,

27. மேற்படி, பக்கம் 66. இந்தப் புத்தகம் முழுவதிலும் அடிப்படைக் கருத்தாக அமைந்திருப்பது, முதல் கலீஃபா அபூ பக்கர் பொருளாதாரக் கொள்கைகளில் வலதுசாரியாகவோ, இடதுசாரியாகவோ இல்லாமல் நடுவழியைப் பின்பற்றியவர் என்பதும், உமரும் அலீயும் இடதுசாரிகளாகவும் உத்மான் வலதுசாரியாகவும் இருந்தார் என்பதும் ஆகும். உத்மானின் காலம் வரை நிலத்தில் தனி உடைமை முறை நிலையாக உருவாகவில்லை என்று ஸாலிஹ் கூறுகிறார். அவருடைய காலத்தில்தான் அப்படிப்பட்ட உடைமை முறை நிலைபெற்று, தனியார் நிலங்களில் ஆயிரக்கணக்கான அடிமைகள் வேலை செய்யத் தொடங்கினார்கள்.

28. பார்க்க: Aghāni, Vol.iv, பக்கம் 80.

29. Philip K. Hitti, *History of the Arabs*, பக்கம் 215.

www.padippakam.com



சரித்திரச் சக்கரம் எந்தத்திசையில் உருள்கிறது என்பதைக் காண்கிறோம். அரேபியர்கள் நேற்றுவரை ரோமானியர்களையும் ஸஸானிடுகளையும், மனிதர்களுக்கிடையே, எஜமானர் என்றும், அடிமை என்றும், ஆளுவோர் என்றும் ஆளப்படுவோர் என்றும், ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியதற்காக எள்ளி நகையாடிவந்தனர். இன்று அவர்களே தங்களுடைய இனக்குழு எளிமையைக் கைவிட்டு, ஜனநாயக முறையிலான செயல்பாட்டை உடைத்து, முன்பு ரோமானியர்களும் பாரசீகர்களும் பின்பற்றிய அதே வழிகளைப் பின்பற்றத் தொடங்கினார்கள். அவர்கள் இஸ்லாமிய வழிகளைக் கைவிட்டு, வெளிநாட்டு சித்தாந்தங்களின் வழிகளைப் பின்பற்றினார்கள் என்றும், அவர்கள் இஸ்லாமிய சித்தாந்தத்தைத் தொடர்ந்து பின்பற்றியிருந்தால், உட் சண்டைகளையும் பிரச்சினைகளையும் தவிர்த்திருக்க முடியும் என்றும் கூறிவிடுவதும் சரியாகாது. ஏனென்றால் அது லட்சியவாதமான, வரலாற்றுக்குப் பொருந்தாத கூற்றாகும். பிரச்சினை முழுவதையும் சரியான பின்னணியில் வைத்துப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களின் வெளிநாட்டு வெற்றிகளுக்கு முன்னால் அவர்களிடம் காணப்பட்ட எளிமையும், சமத்துவமும் ஒருவகையான ஜனநாயக் செயல்பாடும் அப்போதிருந்த நிலைமைகள் காரணமாக அவசியமாகியிருந்தன; இஸ்லாமிய சித்தாந்தங்களும் தத்துவங்களும் ஓரளவுதான் காரணமாயிருந்தன. பொருட்செல்வங்கள் வந்து குவியத் தொடங்கியதும், நிலைமை முற்றிலுமாக மாறி விட்டது. இஸ்லாமிய சித்தாந்தங்களும் தத்துவங்களும் இருந்த போதிலும் அவர்களுடைய நடத்தை முறைகள் முழுமையாக மாறிப் போயின. இங்கும் அங்குமாக ஒருசிலரே அந்த சித்தாந்தங்களை விடாப்பிடியாகப் பின்பற்றினர். ஆனால் அது அந்த அளவோடு நின்றுவிட்டது. அலீயைப் போன்ற ஒரு கலீஃபா கூட பழைய எளிமையையும் இஸ்லாமிய சித்தாந்தங்களைப் பின்பற்றி நடக்கும் வழக்கத்தையும் மீண்டும் கொண்டுவர முடியவில்லை. கொள்கைப் பிடிப்பு இல்லாத எதார்த்த நோக்கம் கொண்ட முஆவியா போன்ற நபர்கள் அவரது முயற்சிகளை முறியடித்துவிட்டார்கள்.

இப்போது, முகமதுவின் முக்கியமான தோழர்களில் ஒருவரான அபூ தர் கிஃபாரி (Abū Dharr Ghifārī) யின் பங்குப்பணியைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும். ஒரு சிலரது கைகளில் செல்வம் குவிவதனால் ஏற்படும் சமூகப் பதற்றநிலைகளை அவர் நன்றாக உணர்ந்திருந்தார். முஸ்லிம் நாடுகளில் மிஞ்சியிருக்கும் சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் அவரை சோஷலிசத்தின் முன்னோடியாகக் கருதுகிறார்கள். சோஷலிச லட்சியங்கள் இஸ்லாமுக்கு அந்நியமானவை அல்ல என்று நிரூபிப்பதற்கேனும் அவரது கருத்துக்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. வெளிநாட்டு வெற்றிகள் மூலம் கிடைத்த செல்வங்களைப் பெருமளவில் குவித்துவைத்து, சுகபோக வாழ்க்கை நடத்தியவர்களை அவர் கடுமையாகக் கண்டனம் செய்ததாகக்

www.padippakam.com



கூறப்படுகிறது. மாக்ஸிம் ராடின்ஸன் (Maxime Rodinson) கூறுகிறார்: "ஒவ்வொருவரும் தமது உயிர்வாழ்க்கைக்குத் தேவையான குறைந்த பட்ச அளவுக்குமேல் அதிகமாக உள்ள செல்வம், வருமானம் முழு வதையும் கடவுளின் சேவைக்கு அல்லது தர்மகாரியத்துக்குச் செல விட வேண்டும் என்று அவர் கூறியதாகப் பல கூற்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. தீர்க்கதரிசி இறந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு அவர் கூறிய ஒரு கருத்து மக்களுக்குப் பெரும் அதிர்ச்சி யாயிருந்ததாகக் கூறப்படுகிறது. தர்மம்செய்ய மனம்வராத பணக்காரர்களை எச்சரித்து குரானில் உள்ள வசனங்கள் (அதா வது குரான் 9:34 முதலாக உள்ளவை), அதற்கு முன் உள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்ட யூத, கிறிஸ்தவ மத போதகர்களுக்கு மட்டு மின்றி முஸ்லிம் சமுதாயத்தின் முக்கிய நபர்களுக்கும் பொருந்தும் என்று அவர் கூறினார்."[30] ராடின்ஸன் மேலும் கூறுகிறார்: "மனத் தில் கொள்ளவேண்டியது இதுதான்: சுன்னாவிலும் மத்தியகால வரலாற்றுப் புத்தகங்களிலும் குறிப்பிடப்படும் புராண கதாபாத் திரம் போன்ற அபூ தர், மதக்கொள்கைகளை மட்டுமின்றி, வாழ்க்கை வசதிகள் பறிக்கப்பட்டு ஏமாற்றமும் கோபமும் அடைந்த மக்கள் அதற்குக் காரணமாக உள்ள பணக்காரர்களும் அதிகாரம் படைத் தவர்களும் கொண்டுள்ள சுகபோகங்களையும் அடக்குமுறை களையும் எதிர்த்துத் தெரிவிக்கும் கண்டனத்தையும் பிரதிபலித் தார். இந்த எதிர்ப்பு, சமூக அமைப்புக்குத் தீங்கு ஏதும் இல்லாத முறைப்படுத்தப்பட்ட வழிகளிலும், தீவிரமான புரட்சிகர வடி வங்களிலும் காணப்பட்டது. ஆனால் அதன்மூலம் தெளிவான பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை."[31] அபூ தர் இவ்வாறு தீவிரக் கருத்துக்கள் கொண்டிருந்ததற்காக முன்பே வரையறுக்கப்பட்ட சட்டங்களால் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக வரலாற்றா சிரியர்கள் கூறுகிறார்கள். அவர் தொடர்ந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு வெளியேற்றப்பட்டு வந்தார். அவரைப் போன்ற வர்கள் இஸ்லாமின் சில போதனைகளையும் லட்சியங்களையும் முஸ்லிம்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டுவந்தாலும், யாரும் அதற்குச் செவி சாய்க்கவில்லை என்பதைக் காண்கிறோம். லட்சி யங்களைவிட, பிரத்தியட்ச நிலைமையே (உற்பத்தி உறவு நிலைகளின் சக்திகளும் இதில் அடங்கியவை) செயல்களைத் தீர்மானிக்கிறது, என்பது இதிலிருந்து தெரிகிறது.

இனி, தீர்க்கதரிசி காலமாகி முப்பதாண்டுகளுக்குள் முஸ்லிம்கள் உள்நாட்டுப் போர் நிலையை அடைய காரணங்கள் என்ன என்ப தைப் பார்ப்போம். வெளிநாட்டு வெற்றிகள் மூலம் வெள்ளமாகப் பெருகிவந்த செல்வத்தினால் ஏற்பட்ட புதிய பதற்றமே இதற்கு

30. Maxime Rodinson, *Islam and Capitalism*, ஆங்கில மொழிபெயர்ப்பு: Brian Pearce (London, 1974), பக்கம் 25.
31. மேற்படி, பக்கம் 25.

www.padippakam.com



அடிப்படை காரணம். உமர், கடுமையான தண்டனைகள் மூலம் நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைக்க முயன்றார். ஆனால் அவருக்கு அடுத்த கலீஃபாவாக வந்த உத்மான் அவரது கொள்கையை மாற்றி பலவிதமான சலுகைகளையும் வழங்கினார். மேலும், பல முக்கிய ஆளுநர் பதவிகளுக்குத் தமது குலக்குழுவைச் சேர்ந்தவர்களையே நியமித்து, அதிகத் தகுதியுள்ள பலருக்கு வாய்ப்புகளை மறுத்தார். முன்பு அனுமதிக்கப்படாத வழிகளில் அரசுக் கருவூலத்திலிருந்து அவர் பணம் செலவிட்டதாகவும் கூறப் படுகிறது. தமது சொந்த உறவினர்களுக்கு அவர் அதிலிருந்து தாராளமாகப் பொருள் வழங்கினார். இதைப் பற்றி அவரிடம் கேட்டபோது, "உமர் இறை பயத்தினால் உறவினர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை; நான் இறை பயத்தினாலேயே உறவினர்களுக்குக் கொடுக்கிறேன்" என்று பதிலளித்தார். (குரான், உறவினர் களைப் பேணிப்பாதுகாக்கும் 'ஸிலா-ஏ-ரஹ்மீ' என்ற பண்பைப் போதிக்கிறது).[32] இவ்வாறாக, தமக்கு முந்திய கலீஃபா கவனமாகத் தவிர்த்துவந்த ஒரு வழக்கத்துக்கு உத்மான் நியாயம் கூற முயன்றார். இதனுடன் உத்மான் பல செயல்களைச் செய்ததாலும், செய்யவேண்டிய செயல்களை செய்யாமையாலும் அவர் மீது மக்களின் கோபமும் வெறுப்பும் பெருகி, கடுமையான எதிர்ப்பாக உருவெடுத்தது.

அப்போதைய இஸ்லாமியப் பேரரசில் இருந்த பல்வேறு குழுக்களில் சிலவற்றைப் பற்றி எகிப்திய அறிஞர் டாக்டர் தாஹா ஹுஸைன் (Dr. Tāha Husayn) விரிவாக எழுதியிருக்கிறார்.[33] அவருடைய புத்தகத்திலிருந்து சில விவரங்களை இங்கே சுருக்கமாகத் தரு கிறோம். நான்கு குழுக்கள் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். அவை: (1) மக்காவின் "குரைஷ்" இனக்குழு மக்கள் (2) மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்களுக்கு உதவிபுரிந்தவர்களான "அன்ஸார்"கள் (3) நாடோடிகளான அரேபியர்கள் (4) வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளின் பிரஜைகளான மக்கள். குரைஷ் இனக் குழு அரேபியா முழுவதிலும் மிக பலம் வாய்ந்த இனக்குழுவாக விளங்கியது. அதற்குக் காரணம் அதனுடைய போர்த்திறன் அல்ல; அதற்கு வேறு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, அரேபியர் அனைவரும் புனிதத்தலமாகக் கருதிய காபா (Ka'ba) அவர்களின் பொறுப்பில் இருந்தது. இரண்டாவதாக, அதன் மக்கள் செல்வம் மிகுந்த வர்த்தகர்களாக இருந்தார்கள்; சர்வதேச வர்த்தகம் அவர் கள் கட்டுப்பாட்டில் இருந்தது. மேற்கே ரோமானியர்களுக்கும், கிழக்கே இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே அவர்கள் முக்கியமான இணைப்பாக அமைந்து செயல்பட்டார்கள். மற்றப் பிராந்தியங்களில் உள்ள அரேபியர்கள் ஏதாவது ஒருவகையில் அவர்களைச் சார்ந்து இருந்தார்கள். மூன்றாவதாக குரைஷியர்கள் பல்வேறு மக்களுடனும் தொடர்புகொண்டு பழகிவந்ததனால்

32. Dr. Tāha Husayn, *Al-Fitnat al-Kubrā*, உருது மொழிபெயர்ப்பு: 'Abdal Hamīd N'omānī, Vol.1, பக்கம் 56.

33. மேற்படி, பக்கம் 113-125.

www.padippakam.com



ராஜீய உறவு நடைமுறைகளில் அவர்கள் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந் தார்கள். இந்தக் காரணங்களினால் மற்ற அரேபியர்கள் அவர்களுக்கு முதன்மை இடம் தந்து அவர்களின் தலைமையை ஏற்றுக்கொண்டிருந் தார்கள். முதல் நான்கு கலீஃபாக்களும் அந்த இனக்குழுவிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அரேபிய அரசு அமைந்த பின், அரேபியர்கள்மீது ஆட்சி செலுத்துவது தங்கள் உரிமை என்று அந்த மக்கள் கருதினார்கள். இது, இயல்பாக பிற மக்களிடையே மனக் கசப்பை ஏற்படுத்தியது. உமர் இதை நன்கு உணர்ந்திருந்தார் என்றும், ஆளுநர்களையும் மற்ற முக்கிய அதிகாரிகளையும் நியமிப்பதில் குரைஷியர் அல்லாதவர்களின் உரிமைகளையும் அவர் புறக்கணிக்க வில்லை என்றும் தாஹா ஹுஸைன் கூறுகிறார். தமது முன்னுதாரணத்தைப் பின்பற்றி நடக்குமாறு அவர் உத்மானுக்கு ஆலோசனை கூறியிருந் தார். ஆனால் உத்மான் அதைப் புறக்கணித்து குரைஷியரில் தமது உறவினர்களையே முக்கிய பதவிகளுக்கு நியமனம் செய்தார். இதனால் மற்ற மக்களிடையே அவர்மீது பகைமை ஏற்பட்டது.

இரண்டாவது குழு உதவிபுரிவோரான அன்ஸார்கள். அவர்கள் முகமதுவுடன் சேர்ந்து குரைஷியரை "பத்ர்" சண்டையில் தோற்கடித்தவர்கள். எனவே, அவர்களுக்கு ஒரு மதிப்பு இருந்தது. தீர்க்கதரிசி காலமான பின் கலீஃபாவாக வருவதற்கு அவர்கள் தங்கள் உரிமையை வலியுறுத்தினார்கள். ஆனால் இடம்பெயர்ந்து வந்தவர்களான குரைஷியர் அவர்களின் முயற்சியை முறியடித் தார்கள். ஆயினும் அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக, "ஆளுபவர் குரைஷியராகவும், அமைச்சர்கள் அன்ஸார்களாகவும் இருப்பார்கள்" என்று ஒரு ஏற்பாடு கூறப்பட்டது. அவர்கள் முக்கிய விஷயங்களில் கலந்தாலோசிக்கப்பட்டனர். எல்லா கலீஃபாக்களும் இந்தக் கொள்கையைப் பின்பற்றினார்கள். ஆயினும் தீர்க்கதரிசியின் முக்கியமான தோழர்களுடன் மட்டுமே இவ்வாறு ஆலோசனைகள் நடத்தப்பட்டன. ஆனால் உத்மான் கலீஃபா ஆன சமயத்தில் பெரியவர்களான புதிய தலைமுறையினரின் மனத்தில் அன்ஸார்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், நிர்வாகத்தில் அவர் களுக்கு முக்கிய பங்கு எதுவும் இல்லை என்றும் அதிருப்தி வளர்ந்து வந்தது. குரைஷியரின் தலைமை பற்றியும், அதை அவர்கள் மற்ற வர்கள் மீது சுமத்தி வரும் முறை பற்றியும் ஆழ்ந்த அதிருப்தி உருவாகியது. இந்த அதிருப்தி குறிப்பாக இளைய தலைமுறை யினரிடம் அதிகமாகக் காணப்பட்டது. மேலும் இவ்வாறு ஒரு குழுவினருக்கு முக்கியத்துவம் கொடுப்பது இஸ்லாமியக் கோட்பாடு களுக்குப் பொருத்தமானது அல்ல ஆதலால் குரைஷிகளுக்கு மற்ற முஸ்லிம்களைவிட முக்கியத்துவம் கொடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. உத்மானின் ஆட்சிக் காலத்தில் அவர் முக்கியமான பதவிகளையெல்லாம் குரைஷியர்களுக்கே கொடுத்து மற்ற மக்களைப் புறக்கணித்ததால் இந்த அதிருப்தி உணர்வுகள் மேலும் வலுப்

www.padippakam.com



பெற்றன. அன்ஸார்களின் பகைமை உணர்வு தீவிரமடைந்தது. உள்நாட்டுப் போருக்கான காரணங்களில் இதுவும் ஒன்று.

மூன்றாவது குழு, சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தினால் இஸ்லாமை ஏற்றவர்களான நாடோடி அரேபியர்கள். (இஸ்லாம், நகர அரேபியர்களின் மதமாக, கலாசார, ஆன்மீக, பொருளியல் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுவதாகக் கருதப்பட்டது). தீர்க்கதரிசி இறந்தவுடனேயே அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுடைய கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு, அவர்களின் கோபத்தைத் திசை திருப்ப பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுப் போர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். முஸ்லிம்களின் படைகளில் அவர்கள் வலுவான மையப்பகுதியாக அமைந்து முக்கிய வெற்றிகள் பலவற்றுக்குக் காரணமாக இருந்தார்கள். இஸ்லாமில் அவர்கள் அனைவருடனும் சமமாக நடத்தப்படுவார்கள் என்று வாக்களிக்கப்பட்டது. இஸ்லாமில் அனைவரும் சமமானவர்கள் என்றும், அதிக இறையச்சம் கொண்டவர்களே மற்றவர்களைவிட மேலானவர்கள் என்றும் கூறப்பட்டது. ஆயினும் அவர்கள் பண்பாட்டில் குறைந்தவர்களாகவும், இஸ்லாமிய போதனைகளை உள்வாங்கிக் கொண்டு நடக்க இயலாதவர்களாகவும், இஸ்லாமின் உலகளாவிய பார்வையை வளர்த்துக் கொள்ளாதவர்களாகவும் இருந்ததனால் நகர அரேபியர்கள் அவர்களைத் தாழ்வானவர்களாகவே கருதினார்கள். எனவே, வாக்களித்தப்படி சமமாக நடத்தப்படாதது பற்றி இவர்களுக்குப் பெரிய மனக்குறை இருந்தது. இஸ்லாமிய உலகின் தலைமையை குரைஷியர் தங்கள் ஏகபோக உரிமையாக்கிக் கொள்வதை அவர்கள் எதிர்த்தார்கள். (பின்னர் இந்த எதிர்ப்பு மிகத் தீவிரமடைந்ததனால், சுதந்திரமான அரேபியர் ஒவ்வொருவரும் கலீஃபாவாக வர முடியும் என்று கொள்கையைக் கொண்ட 'கரிஜைட்' இயக்கத்துக்கு பதூயின் போர் வீரர்களே முக்கிய ஆதாரமாக இருந்தார்கள்). இந்த மூன்றாவது குழுவினரும் அப்போதைய அதிகார அமைப்புக்கு எதிராக குமுறிக்கொண்டிருந்தார்கள்.

நான்காவது குழு, முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளைச் சேர்ந்த அரேபியரல்லாத மக்கள். எல்லாக் குழுவினரிலும் வசதியும் வாய்ப்பும் மிகவும் குறைந்தவர்கள் இந்தக் குழுவினர். அரசாங்க நிர்வாகத்தில் இவர்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது. உண்மையில் இவர்கள் முற்றிலும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவும் எதுவும் செய்ய முடியாதவர்களாகவும் இருந்தனர். வென்று கைப்பற்றப்பட்ட மாகாணங்களில் இந்த மக்கள் மீது அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டதனாலேயே உத்மானின் காலத்தில் அரசுக் கருவூலத்தின் வருவாய் உயர்ந்தது. முஸ்லிம்கள் வந்த போது இந்த மக்கள் அவர்களைத் தங்களுக்குக் கொடுங்கோல் ஆட்சியிடமிருந்து விடுதலை தருவோராக எண்ணி வரவேற்றார்கள். அந்த

www.padippakam.com



முஸ்லிம்கள் விரைவில் இவர்களின் எஜமானர்கள் ஆகிவிட்டதுடன், இவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாததால் மனக் கசப்புக்கு ஆளானார்கள். இந்தக் காரணத்தால்தான் இராக்கில் உள்ள முக்கிய ராணுவ முகாமான கூஃபா (Kūfa) அதிருப்தியாளர் களின் கிளர்ச்சிக்கு மையமாக அமைந்தது. கூஃபாவின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதிப்பேர் கைவினைத் தொழில்களி லும் வர்த்தகத்திலும் ஏகபோகம் பெற்றிருந்த "மவாலீ" (Māwalī) என்ற பணிசெய்யும் பிரிவினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள். கூஃபாவுக்குப் போர்க் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டு அங்கே இஸ்லாமுக்கு மாற்றப்பட்டவர்கள். ஆயினும் இவர்கள் அரேபியர்களைச் சார்ந்தே வாழ்ந்து வந்தார்கள். பணியாளர் என்ற நிலையிலிருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். எனவே இவர்களுடையிலே யும் கொந்தளிப்பு உருவாயிற்று. கூஃபா மக்கள் தங்களின் கோபத்தை வெளிப்படுத்த ஆட்சியாளர்களான 'சுன்னி' பிரிவினருக்கு எதி ரான மதப்புரட்சி இயக்கமான ஷீயா (Shī'a) இயக்கத்தை ஆதரித் தார்கள். இஸ்லாமுக்கு முந்திய காலத்தில் பைஜாண்டியப் பேரரசின் கீழ் சிற்றரசாயிருந்த "கஸ்ஸான்"களும் (Ghassāns) இதே வழியைப் பின்பற்றியதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். பைஜாண்டிய ஆட்சியாளர்கள் "ஆர்த்தடாக்ஸ்" (Orthodox) கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்ததால் "கஸ்ஸான்கள்" அதற்கு மாறான "மனாஃபிஸைட்" (Monophysite) பிரிவைப் பின்பற்றினார்கள்.

இவ்வாறாக உத்மானின் ஆட்சிக்காலத்தில் குரைஷ் இனக் குழுவின் ஒரு பிரிவினர் பதவிகளைத் தங்கள் ஏகபோக உரிமை யாக்கிக்கொண்டு, மற்ற மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தினார்கள். அதிருப்திக்குக் காரணமான நிலைமைகளை மாற்றும்படி பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் பலன் இல்லாமற் போனதால் கடுமையான உள்நாட்டுப் போர் மூண்டது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்காக பாலைவன அரேபியர்களான பதூயின் கள் பெரும் எண்ணிக்கையில் ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருந் தார்கள். அவர்களில் பலர் அப்போது பெரிய ராணுவ முகாமாக இருந்த கூஃபாவில் குடியமர்ந்தார்கள். இந்த பதூயின்கள் நாகரிக மில்லாத அமைதியற்ற மக்களாக, எந்த அதிகாரத்துக்கும் கட்டுப் பட்டு வாழ விரும்பாதவர்களாகத் தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் கருத்துள்ளவர்களாக இருந்தார்கள். பதூயின்கள் பெரும் எண்ணிக்கையில் தொடர்ந்து கூஃபாவுக்கு வந்து கொண்டேயிருந்தார்கள். இதுதவிர, வெளிநாட்டுப் போர் களில் பிடிக்கப்பட்ட ஆண், பெண் அடிமைகளும் பெரும் எண் ணிக்கையில் கூஃபாவில் குடியமர்த்தப்பட்டிருந்தார்கள். இந்தப் பெண் அடிமைகளுக்குப் பிறந்த குழந்தைகளும் அரபியரல்லாதவர்களின்

www.padippakam.com



குழந்தைகளும் பெருகி, உத்மான் ஆட்சிக்கு வருவதற்கு முன் கூஃபா வின் மக்கள்தொகை அமைப்பே பெரிதும் மாறிப்போயிருந்தது. பதூயின்கள் பெரும் எண்ணிக்கையில் கூஃபாவில் வந்து குடியமர்ந்து, அவர்களின் மக்கள் தொகை பெருகிக்கொண்டிருந்ததனால், பண்பாடு பெற்ற மற்ற அரேபியர்களுக்கும் பதற்றநிலை ஏற்பட்டது. சமூகத்தின் கீழ்நிலையில் இருந்தவர்கள் பலவகைப் பட்டபிரிவுகளைச் சேர்ந்தவர்களாயிருந்ததனால் ஆட்சியாளர் களுக்கு நிலைமையின் மீது கட்டுப்பாடு விரைவாகத் தளர்ந்து வந்தது. இந்த ஏழை மக்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் எஜமானர்களிடம் வெறுப்புக் கொண்டு அவர்களுக்கு எதிராகத் தந்திரமாகவும் துரோக எண்ணத்துடனும் செயல்பட்டார்கள். கூஃபாவின் ஆளுநரான ஸயீத் (Sa'id), கலீஃபா உத்மானுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எல்லா விவரங்களையும் எடுத்துக்கூறி ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும் குறிப்பிட்டிருந்தார். கூஃபாவில் வசித்த இந்தப் பல்வேறு பிரிவினரால் ஏற்பட்ட பிரச்சினைகள் கட்டு மீறிப் போய்க்கொண்டிருந்தன.

உத்மான் எடுத்த ஒரு முடிவு இஸ்லாமிய உலகில் மிக விரிவான பொருளாதார விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது என்று டாக்டர் தாஹா ஹுஸைன் கூறுகிறார்.[34] கூஃபா போன்ற சில நகரங்களில் மக்கள் தொகை மிக அதிகமாகப் பெருகிவருவதனால் ஏற்படும் நெருக்கடியைக் குறைக்கும் நோக்கத்துடன் அவர் ஒரு துணிச்சலான நடவடிக்கை எடுத்தார். ஹிஜாஸ் (Hijāz) பகுதியில் வசிக்கும் அரேபியர்களுக்கு வெளிமாகாணங்களில் சொந்தமாக உள்ள நிலங்களை, ஹிஜாஸிலேயே உள்ள நிலங்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்றும் அதே போல ஹிஜாஸில் உள்ள நிலங்களை வெளிமாகாணங்களில் உள்ள நிலங்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்றும் அவர் அனுமதி அளித்தார். வேறுவிதமாகச் சொன்னால் நிலங்களை வாங்குவதும் விற்பதும் தாராளமாக அனுமதிக்கப்பட்டது. (ஒரு சிலருடைய கைகளில் செல்வம் குவிவதைத் தடுப்பதற்காக உமர் நிலங்களை வாங்குதல், விற்றல் மீது சில கட்டுப்பாடுகள் விதித்திருந்தார்; அவரது செயல் சரியானதே). ஹிஜாஸில் உள்ள அரேபியர்கள் இவ்வாறு நிலங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ள அனுமதித்தால் அவர்கள் வெளி மாகாணங்களில் உள்ள நிலங்களுக்கு மாற்றாக ஹிஜாஸிலேயே நிலங்களைப் பெற்றுக்கொண்டு அங்கேயே தங்கிவிட விரும்பு வார்கள் என்று உத்மான நினைத்தார். அப்போது அவர்களுடைய அடிமைகளும் வேலையாட்களும் அவர்களுடன் கூட ஹிஜாஸிலேயே தங்கியிருக்க முடியும் என்றும், அதன் மூலம், வென்று கைப்பற்றப் பட்ட வெளிமாகாணங்களில் ஆட்சியாளர்களுக்குப் பெரும்

34. இங்கு தரப்படுவது Al-Fitnat al-Kubrā (Bombay nd) என்ற புத்தகத்திலிருந்து எடுத்துச் சுருக்கியது (பக்கம் 146-150).

www.padippakam.com



பிரச்சினையாயிருந்து வரும் மக்கள்தொகை நெருக்கடியைப் பெரிதும் குறைத்துவிடலாம் என்றும் அவர் எண்ணினார். ஆனால் உத்மானும் அவரது ஆலோசகர்களும் இத்தகைய நடவடிக்கையினால் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளை உணரவில்லை. உண்மையில் அந்த நடவடிக்கை ஒரு புதிய பொருளாதாரப் புரட்சிக்கே வித்திட்டது. அந்தப் புரட்சி, சமூகத்தின் வர்க்க அமைப்பையே முற்றிலுமாக மாற்றிவிட்டது. நிலங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ள அனுமதி பெற்ற பின் தல்ஹா (Talhah) போன்ற சில சாமர்த்தியசாலிகள் அதைப் பயன்படுத்தி முழு அளவில் ஆதாயம் பெற்றார்கள். தல்ஹா ஹிஜாஸில் தமக்குச் சொந்தமாயிருந்த வளமற்ற நிலங்களையெல்லாம் விற்றுவிட்டு இராக்கில் வளமான நிலங்களை வாங்கிக்கொண்டார். விரைவிலேயே அவர் மிகுந்த வருமானம்தரும் பெரும் நில உடைமைக்கு அதிபதியாகிவிட்டார். அவருடைய நிலங்களில் ஏராளமான அடிமைகளும் வேலையாட்களும் வேலை செய்தார்கள். அவரைப்போலவே மற்றும் பலர் இவ்வாறுபெரிய நில உடைமையாளர்கள் ஆனார்கள். இவ்வாறாக ஒரு புதிய வர்க்கமே உருவாயிற்று. சிறிய நிலங்களுக்குச் சொந்தமானவர்கள் இந்தத் திட்டத்தால் நன்மை பெற முடியவில்லை. கிடைக்கின்ற நல்ல நிலங்களையெல்லாம் ஒரு சிலரே வாங்கிப் போட்டுக் கொண்டார்கள். பெரிய நில உடைமைகள் இராக்கில் மட்டும் உருவாகவில்லை. வென்று கைப்பற்றப்பட்ட எல்லா மாகாணங்களிலும் அது பரவியது. ஹிஜாஸில் அல்லது மாகாணங்களில் நிலங்கள் வைத்திருந்த தீர்க்கதரிசியின் தோழர்களில் பெரும்பாலானவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் உயர்ந்தபட்ச நன்மை அடைந்தார்கள். இவ்வாறாக இஸ்லாமில் ஒரு புதிய "பணக்கார அதிகார" வர்க்கம் உருவாயிற்று.

இதேபோல மாகாணங்களில் நிலங்கள் வைத்திருந்த பலர் அவற்றுக்குப் பரிவர்த்தனையாக ஹிஜாஸில் நிலங்கள் வாங்கிக் கொண்டார்கள். அதன் மூலம் ஹிஜாஸிலும் பெரிய நில உடைமைகள் உருவாயின. அந்தப் பெரிய நிலச்சுவான்தார்கள் அந்த நிலங்களில் சாகுபடி செய்ய விரும்பி விவசாய வேலைகளைச் செய்வதற்கு வெளியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் அடிமைகளையும் வேலையாட்களையும் இறக்குமதி செய்தார்கள். மிக விரைவிலேயே, முன்பு வெற்று நிலமாயிருந்த ஹிஜாஸ், மிகவும் வளம் கொழிக்கும் பகுதியாக மாறிற்று. இப்போது, அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட ஒரு அரசும் அமைந்துவிட்டதால், அதனுடைய நிதி ஆதாரங்களை வைத்துப் பெரிய பாசனத்திட்டங்களை செயல்படுத்துவதும் சாத்தியமாயிற்று. (பரந்த பாலைவனப் பரப்புகளைக் கொண்ட பல ஆசியப் பிராந்தியங்களில் மத்திய அதிகார அமைப்பைக் கொண்ட எதேச்சதிகார அரசுகள் அமைந்தன என்று மார்க்ஸும் சுட்டிக்

www.padippakam.com



காட்டியிருக்கிறார். இத்தகைய அரசுகள்தான் பெரிய பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்பதே காரணம்). இரண்டாவது கலீஃபாவான உமர் பல பாசனக் கால்வாய்களையும் கிணறுகளையும் அமைக்கும் பணியைத் தொடங்கியிருந்தார். எகிப்தில் மட்டுமே பாசனத் திட்டங்களில் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் ஆண்டு முழுவதும் வேலையில் வைக்கப்பட்டார்கள் என்று மக்ரீஜீ (Maqrīzī) கூறுகிறார்.[35] உமரின் ஆட்சிக்காலத்தில் தனியான பாசனத்துறை ஒன்று அமைக்கப்பட்டது.[36] இவ்வாறாக, ஹிஜாஸிலும் பொருளாதார உபரி உற்பத்தியாயிற்று; மேல் வர்க்கத்து மக்கள் பணக்காரர்களானார்கள். மக்கா, தாயிஃப், மதீனா ஆகிய இடங்களில் பணக்கார நிலச்சுவான்தார் வர்க்கம் ஒன்று உருவாயிற்று. இவர்கள், தாங்கள் ஒரு வேலையும் செய்யாமல், அடிமைகளும் வேலையாட்களும் உழைத்த உழைப்பின் மூலம் வருமானம் பெற்று வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நிறைய ஓய்வுநேரம் இருந்தது. எல்லா விதமான உலக இன்பங்களிலும் அந்த நேரம் செலவிடப்பட்டது. தீர்க்கதரிசியின் வாழ்நாளில் இவ்வளவு பொருளாதார உபரி இல்லை; எனவே ஆடம்பரமாகவும் கண்ணைக்கவரும் வகையிலும் செலவிடுவது வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இப்போது செல்வம் மிகுந்து பெருகியதனால் அதன் மூலமும் சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு இஸ்லாமிய அறநெறி வாழ்க்கையின் அடிப்படையே உருமாறிப் போயிற்று. இஸ்லாமால் தடை செய்யப்பட்ட நாட்டியம், இசை, கவிதை போன்ற கலைகள் இஸ்லாம் தோன்றிய இடத்திலேயே தாராளமாக வழங்களாயின. கவிதையின் தன்மை கூட மாற்றம் பெற்றது. போர் வீரர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவும், வாழ்க்கையின் கடினங்களை மனத்திண்மையுடன் சந்திக்க உதவுவதற்காகவும் கவிதைகள் எழுதப்பட்ட நிலை மாறிப்போயிற்று; மனிதனின் சுகானுபவ உணர்வுகளுக்குத் துணை புரிவதாகக் கவிதையின் தன்மை அமைந்தது.

உத்மான் என்ன நோக்கத்துக்காக இந்த நடவடிக்கைகளைத் தொடங்கினாரோ அந்த நோக்கம், அதாவது, மாகாணங்களில் மக்கள்தொகை நெருக்கடியைக் குறைக்கும் நோக்கம், நிறைவேறவில்லை. வெளிநாட்டுப் படையெடுப்பு மூலம் நாடுகள் கைப்பற்றப்படுவது நீடித்தது; அடிமைகள் தொடர்ந்து நகரங்களுக்குள் வந்து சேர்ந்த மக்கள்தொகை பெருகுவதும் நீடித்தது. உத்மானின் நடவடிக்கை மூலம் மாகாணங்களில் உருவான நில உடைமைகள் காரணமாக அவற்றில் வேலை செய்வதற்கு அடிமைகளுக்குத் தேவையும் அதிகமாயிற்று. இவ்வாறாக, உத்மான் எடுத்த நடவடிக்கை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாறாக, அதை மேலும்

35. Maqrīzī, Vol.i, *Khitat*, பக்கம் 76.
36. Shibli N'omānī, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 304.

படிப்பகம்

www.padippakam.com



கடுமையாக்கியது. உண்மையில் இஸ்லாமில் நிலப்பிரபுத்துவம் தோன்றுவதற்கு அதுவே தொடக்கமாயிற்று. (நிலப்பிரபுத்துவம் என்ற சொல் இங்கு ஒரு தளர்த்தியான பொருளில் பயன்படுத்தப் படுகிறது). வெளிநாட்டு வெற்றிகளால் உண்மையில் பல பிரச்சி னைகளே உருவாயின. முதலாவதாக, போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களில் ஐந்தில் நான்கு பங்கு, போர் நடவடிக்கைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டிருந்தவர்களுக்கு நேரடியாக வினியோகிக்கப்பட்டது. நகரங்களில் வசித்தவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லைப் பகுதிகளுக்குச் சென்று, ஆறு மாதங்கள் தங்கி, வெளிநாட்டு அடிமைகள் உள்ளிட்ட போரில் கொள்ளையிடப்பட்டப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு திரும்பிவருவார்கள். தனியார் சொத்துடைமைகளைச் சேர்ப்பதற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாததால், ஒவ்வொரு புதிய வெற்றியுடனும், செல்வம் சிலரிடம் மேலும் மேலும் குவிந்து கொண்டிருந்தது. அரேபியர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு புதிதுபுதிதாக வெளிநாடுகளை வென்று கைப் பற்றினார்கள். அவர்களுக்கு இதன் மூலம் மிகுந்த கொள்ளைப் பொருள்களும், இஸ்லாமிய உலகில் பெரும் கௌரவமும் கிடைத்தன. இரண்டாவதாக, இஸ்லாமியப் பேரரசில் மேலும்மேலும் புதிய மாகாணங்களைச் சேர்த்ததன் மூலம் அதன் மக்கள்தொகை அமைப்பே மாறிப்போனதுடன் அடிமைகளின் எண்ணிக்கையும் பெருகியது. மக்கள்தொகையிலேயே அடிமைகள்தான் மிகவும் அதிருப்தி கொண்டவர்கள் என்று கூறத் தேவையில்லை. எனவே எந்த வொரு அதிருப்தியாளர் இயக்கத்திலும் கிளர்ச்சி இயக்கத்திலும் கலந்துகொள்ள எப்போதும் தயாராயிருந்தார்கள். உத்மான் இந்த நடவடிக்கைகளை ஹிஜ்ரி 30ஆம் ஆண்டில் தொடங்கி னார் என்பதும் ஹிஜ்ரி 35-இல் அவர் கொலை செய்யப்பட்டார் என்பதும் கவனிக்கத்தக்கது. அந்த இடைக்காலத்தில், குறிப்பாக, அவரது வாழ்வின் கடைசி இரண்டு ஆண்டுகளில், நிலைமை மிக வும் மோசமடைந்து, மாபெரும் கிளர்ச்சி இயக்கம் உண்மையி லேயே தொடங்கிவிட்டது. இந்தக் கிளர்ச்சி இயக்கத்திலும், உத் மானின் கொலையிலும் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பாலான வர்கள், வென்று கைப்பற்றப்பட்ட கூஃபா, பஸ்ரா மாகாணங் களைச் சேர்ந்தவர்கள். வெளிநாட்டுப் போர் வெற்றிகள் மூலம் பல்வேறு மாகாணங்கள் இஸ்லாமியப் பேரரசின் கட்டுப்பாட்டுக் குள் வந்தன. அதனால் சர்வதேச வர்த்தக வாய்ப்புகள் அதிகரித்தன. உண்மையில் அந்தப் பிராந்தியத்தில் வர்த்தகம் இப்போது முஸ்லிம்களின் ஏகபோக உரிமையாகிவிட்டது. அவர்கள் இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு பெருமளவில் லாபங்கள் அடைந்தனர். இதுவும் செல்வம் பெருகுவதற்கு ஒரு

www.padippakam.com



காரணமாயிற்று. இவ்வாறாக, மிகுந்த அதிகாரம் பெற்ற சிறு குழு ஒன்று உருவாகி கலீஃபாவின் மீது பெருமளவு நிர்ப்பந்தங்களைக் கொண்டுவரும் நிலை ஏற்பட்டது. நிலப் பரிவர்த்தனைகளைத் தாராளமாக அனுமதிக்க உத்மான் தீர்மானித்தது கூட, அதன் மூலம் மிகவும் லாபம் பெற வாய்ப்புள்ள இந்தச் சிறுகுழுவினரின் நிர்ப் பந்தத்தின் விளைவாக இருக்கக்கூடும்.

உத்மான், படுகொலைக்கு ஆளான இரண்டாவது கலீஃபா ஆவார். அவரது கொலையுடன் விஷயம் முடிந்துபோகவில்லை. பணம் படைத்த நிலச்சுவான்தார்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அரசாங்கம் யார் கையில் போகிறது என்பதில் மிகுந்த அக்கறை இருந்தது. தீர்க்கதரிசியின் மருமகன் (மகளின் கணவர்) அலீ கலீஃபாவாகப் பதவிக்கு வந்தார். உத்மானுக்கு எதிரான கிளர்ச்சி யில் பங்கெடுத்தவர்கள் மதீனாவிலேயே தங்கிவிட்டார்கள். அலீ பதவிக்கு வருவதற்கு அவர்களே காரணமாயிருந்தார்கள். உத்மானின் ஆதரவாளர்கள் தங்களைப் பழிவாங்கக்கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. மேலும், ஸிரியாவின் சக்திமிக்க ஆளுந ரான முஆவியா (Mu'āwiya) மதீனாவைக் கைப்பற்றிக் கொண்டால், உத்மானைக் கொலைசெய்தவர்களைப் பிடித்துத் தண்டிக்கக்கூடும் என்றும் அவர்கள் அஞ்சினார்கள். உத்மான் கொலை செய்யப்பட்டு பல நாட்கள்வரை புதிய கலீஃபா பதவிக்கு வரவில்லை. அதற்கு நிர்ணயமான நடைமுறையும் இல்லை. முந்திய மூன்று கலீஃபாக்களைத் தெரிந்தெடுப்பதற்கு வெவ்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. இஸ்லாமியப் பேரரசின் தலைநகரான மதீனா, உத்மானின் கொலைக்குப் பின் கிளர்ச்சியாளர் களின் கட்டுப்பாட்டில் இருந்தது. கலீஃபா ஆவதற்கு விருப்பமில்லாத அலீயை அவர்கள் கட்டாயப்படுத்திப் பதவியில் அமர்த்தினார்கள். சக்தி வாய்ந்த சிறுகுழுவைச் சேர்ந்த தல்ஹா, ஜுபைர் போன்ற வர்கள் கிளர்ச்சியாளர்களைத் தூண்டிவிட்டார்கள், அல்லது ஒதுங்கி யிருந்துகொண்டு உத்மானைக் காப்பாற்ற எதுவும் செய்யாமலிருந் தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. அடுத்து வரும் கலீஃபா மீது அதிக அதிகாரம் செலுத்துவது அல்லது வாய்ப்பு ஏற்பட்டால் தாமே கலீஃபாவாக வருவது இதன் நோக்கமாக இருக்கலாம். ஆனால் கிளர்ச்சியாளர்கள் அலீக்குத் தங்கள் ஆதரவை அளித்ததால் அவர்களது திட்டம் நிறைவேறாமல் போயிற்று.

கலீஃபா பதவிக்கு அலீயைத் தெரிந்தெடுப்பதைத்தவிர கிளர்ச்சியாளர்களுக்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை. எல் லோரிலும் அவரே விவேகத்தில் மிகவும் சிறந்தவர்; அப்பழுக்கற்ற நேர்மையும், சிந்தனைப்போக்கும் உடையவர். அரசியல் தந்திரங்கள் அவருக்குக் கைவந்த கலை அல்ல; எனவே அதில்

www.padippakam.com



தேர்ச்சி பெற்றவரான அவரது போட்டியாளர் முஆவியா விரைவிலேயே அவரை அரசியல் சதுரங்கத்தில் தோற்கடித்தார். முஆவியா, முக்கியமான ஸிரியா மாகாணத்தின் ஆளுநராயிருந்தார். தாமே கலீஃபா ஆக வேண்டும் என்பது அவரது ஆசை; தேர்ந்த அரசியல் வாதியான அவர் தமது நோக்கம் நிறைவேற உதவும் எந்த வழியும் தவறானதல்ல என்று கருதியவர். ஸிரியாவில் தம்முடைய ஆளுநராக இருப்பவர் பதவிப் பேராசையும், எதையும் செய்யத் தயங்காத தன்மையும் கொண்டவர் என்பது அலீக்குத் தெரியும். மேலும் அவர் முந்திய கலீஃபாவால் நியமிக்கப்பட்டவர்; அந்தக் கலீஃபாவின் கொள்கைகளில் அலீக்குச் சம்மதம் இல்லை. கலீஃபா என்ற முறையில் அவர் தமது சொந்தக்கொள்கையை உருவாக்கிக் கொள்ளவும், தமது கொள்கையில் முழுமையான நம்பிக்கை உடையவர்களையே ஆளுநர்களாக நியமித்துக்கொள்ளவும் எல்லா உரிமையும் பெற்றவர். அலீ தமக்கு உள்ள இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த விரும்பினார். ஆனால் அவரது நண்பர்கள் அவ்வாறு செய்ய வேண்டாமென்று ஆலோசனை கூறினார்கள். ஏனென்றால் முஆவியா தாமே ஒரு தனி அதிகாரக் கேந்தரமாக வளர்ந்து தமக்கு விசுவாசமான படை ஒன்றையும் வைத்திருந்தார். அலீ இந்த அரசியல் காரணங்களையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், முஆவியாவை ஸிரியாவின் ஆளுநர் பதவியிலிருந்து விலக்கும் உத்தரவை அனுப்பிவிட்டார். முஆவியா அந்த உத்தரவை ஏளனத்துடன் தூக்கியெறிந்துவிட்டு, அவருக்கெதிராக கிளர்ச்சிக் கொடி உயர்த்தினார். உத்மானின் கொலைக்குப் பழி வாங்குவது என்பது ஒரு நல்ல சாக்காகக் கிடைத்தது. அலீ குற்றமற்றவர் என்பதும், கொலைகாரர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது மிக எளிதான காரியமல்ல என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால், உத்மானின் கொலைக்குப் பழிவாங்குவதைவிட அதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி அலீக்குச் சங்கடம் ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர் நோக்கம். அலீயை எதிர்த்துப் போரிடுவதற்கு அவருக்கு ஒரு காரணம் வேண்டியிருந்தது. உத்மானின் கொலைக்குப் பழி வாங்குவது என்ற காரணம் மிகச் சிறந்ததாக அமைந்துவிட்டது.

தீர்க்கதரிசியின் தோழர்களில் தல்ஹா, ஜுபைர் போன்ற சிலர் நிலையான சொத்துக்களும் அசையும் சொத்துக்களும் நிறையவே சேர்த்திருந்தார்கள். அவர்கள் அரசுக் கொள்கையில் அதிகச் செல்வாக்குப் பெற்று தங்களுடைய சுயநலங்களைக் காத்துக் கொள்ள ஆசைப்பட்டார்கள். ஆனால் உத்மானுக்கு அடுத்து அலீ கலீஃபாவாக வந்ததும், தங்களுடைய நலன்களுக்கு ஆபத்து வந்துவிட்டதை உணர்ந்துகொண்டார்கள். ஏனென்றால் உமரைப் போலவே அவரும் சரியான நடத்தை நெறிமுறைகளை அமல் செய்வார். எனவே, உத்மானுக்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டி

www.padippakam.com



விட்டதில் பங்குகொண்ட தல்ஹாவும் ஜுபைருர் முஆவியாவுடன் சேர்ந்துகொண்டு உத்மானின் கொலைக்குப் பழிவாங்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினார்கள். இவர்களது நோக்கமும் அலீயைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்பதே. ஜுபைர், தீர்க்க தரிசியின் மனைவி ஆயிஷாவின் உதவியுடன் தாமே கலீஃபா ஆக ஆசைப்பட்டார். ஆயிஷாவுக்கு அலீயைப் பிடிக்காது. அதற்குக் காரணங்களை இங்கே விவாதிக்க வேண்டியதில்லை. உத்மானுக் கெதிரான கிளர்ச்சியைத் தூண்டிவிட்டதிலும் ஆயிஷாவுக்குப் பங்கு இருந்தது. உத்மானையும் அவரது ஆளுநர்களையும் தயங்காது குறைகூறியவர்களில் அவரும் ஒருவர். ஆனால் அவரும் இப்போது, அலீ, உத்மானின் கொலைக்குப் பழிவாங்கவில்லை என்று கூறி அவரை எதிர்க்கத்தொடங்கினார். மதீனா மக்கள் அலீக்குத் தங்கள் ஆதரவைத் தருவதாக உறுதிகூறியதைக் கேட்டு ஆயிஷா மிகவும் சினங்கொண்டு மக்காவுக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாக டாக்டர் தாஹா ஹுஸைன் கூறுகிறார். காபாவின் முற்றத்தில் சென்று அவர் அமர்ந்துகொண்டு சுற்றிலும் ஒரு திரையைத் தொங்கவிட்டார். திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு, அங்கு வந்து கூடிய மக்களிடம் அவர் பேசினார். அவர் கூறுவார்; "உத்மானின் நாக்கும் சவுக்கும் நம்மிடையே அவர் மீது கோபத்தை உண்டாக்கின. அவர் அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். முஸ்லிம்கள் மன்னிப்பு அளித் தார்கள். அதற்குப் பின் பதூயின்களும் கிளர்ச்சியாளர்களும் அவருக்கு எதிராக எழுந்து, துவைத்த துணியைப் பிழிவது போல அவரைப் பிழிந்து கொன்றுவிட்டார்கள்."[37]

இவ்வாறாக பலபேர் அலீக்கு எதிராக இருந்தார்கள் என்று காண்கிறோம். ஆயிஷா போன்ற சிலர் சொந்தக் காரணங்களுக் காகவும், தல்ஹா, ஜுபைர் முதலானவர்கள் அரசியல், வர்க்க நலன் காரணங்களுக்காகவும் அவரை எதிர்த்தார்கள். அவர்கள் அனைவரும் பலம் வாய்ந்த ஒரு எதிர்ப்பு அணியாகச் சேர்ந்து கொண்டு அலீயை அகற்றி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார்கள். அலீ இஸ்லாமிய சட்டங்களைக் கண்டிப்பாக அமல் நடத்த விரும்பினார். இந்தச் சட்டங்கள் செல்வமும் தனியார் சொத்துக்களும் சேர்ப்பதை அனுமதிக்காமல் இல்லை. அனுமதி இருந்தது. ஆயினும் அதற்குச் சில விதிமுறைகள் குறிப்பிடப்பட்டன; இவை முஸ்லிம்கள் அனைவருக்கும் மொத்தத்தில் நன்மை அளிப்பவை. ஆனால் முடிந்த அளவு அதிகமாகச் செல்வங்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பியவர்களுக்கு இந்த விதிமுறைகள் இடையூறாக இருந்தன. மேலும் போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை

37. Al-Fitnat al-Kubrā, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், தொகுதி ii, பக்கம் 47.

www.padippakam.com



வினியோகிப்பதில் அலீ கண்டிப்பாக முறைப்படி நடந்துகொண்டார். உரியவர்கள் அனைவருக்கும், அவர்களின் அந்தஸ்து, இனம், பிராந்தியம் எதையும் கருதாமல், சமமாகப் பகிர்ந்து கொடுத்தார். இது அரேபியர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் இப்போது தங்களை ஆளும் இனமாகக் கருதினார்கள். ஆனால் அரேபியரல்லாதவர்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த அடிமைகள், சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த மற்ற மக்கள் ஆகியோருக்கு அலீயின் செயல் மகிழ்ச்சியளித்தது. அதனால்தான் இத்தகைய மக்கள் நிறைந்திருந்த கூஃபா, மதத்தில் மாற்றுக் கொள்கைப் பிரிவான ஷீயா பிரிவுக்கு முக்கிய கேந்திரமாயிற்று. சுரண்டப்பட்ட இந்த மக்களின் கோபமும், வெறுப்பும் அந்த வழியில் வெளிப்படுத்தப்பட்டன. நீதியிலும், நியாய நடத்தையிலும் பற்றுகொண்டவரான அலீ இந்தப் பிரிவு மக்களின் மனத்தைக் கவர்ந்த லட்சியத் தலைவரானார். அலீயைச் சார்ந்தவர்கள் உமய்யத் ஆட்சியாளர்களால் மேலும் கொடுமைகளுக்கு ஆளான போது அவர்களின் பெருமை மேலும் சிறப்படைந்தது.

அலீயின் ஆட்சிக்காலம் குறுகியதாக இருந்தாலும் கொந்தளிப்புகள் நிறைந்ததாக இருந்தது. அவருக்கு எதிராக ஒருபுறம் முஆவியாவும் அவரது சார்பாளர்களும் கலீஃபா பதவியைப் பறிக்கத் துடித்துக்கொண்டிருந்தார்கள்; மற்றொருபுறம் ஆயிஷா, தல்ஹா, ஜுபைர் போன்றவர்கள் எதிர்த்து நின்றார்கள். அவர்கள் அனைவருமே தங்களுடைய உண்மையான நோக்கத்தை மறைப்பதற்காக உத்மானின் கொலைக்குப் பழிவாங்க வேண்டும் என்பதைத் தங்கள் கோஷமாக்கிக் கொண்டார்கள். ஆனால் அலீ கடுமையான நிர்ப்பந்தங்களுக்கெல்லாம் பணியாமல், தமது கொள்கையை விட்டுக் கொடுக்காமல், தாம் கொலை செய்யப்படும்வரை தனியாகப் போராடி நின்றார். உமரைப் போல அவரும் மிக எளிமையான, பகட்டும் ஆடம்பரமும் இல்லாத வாழ்க்கை நடத்தினார். அவருக்கெனச் சொந்த ஆசைகள் கிடையாது. ஆனால் வெளிநாட்டுப் போர் வெற்றிகளால் வந்து குவிந்த செல்வங்கள் காரணமாக சமூகத்தில் பலம் வாய்ந்த சக்திகள் உருவாகியிருந்தன. இஸ்லாமிய சமூகத்தின் ஆரம்பகாலக் கோட்பாடுகளை அலீ செயல்படுத்த முயன்ற போது அவரைச் சுற்றிலும் பலர் பகைவர்களானார்கள். இதில் மிகப் பெரிய சோகம் என்னவென்றால், பஸ்ராவின் ஆளுநராக அலீயால் நியமிக்கப்பட்ட அப்த்-அல்லாஹ் பின் அப்பாஸ் ('Abd-Allah b. 'Abbās) போன்ற அவரது விசுவாசமான சீடர்கள் கூட, பணத்தாசைக்குப் பலியாகி, நடத்தை நெறிகள் பற்றிய அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். இவையனைத்தும் முகம்மது இறந்து முப்பதாண்டுகளுக்குள் நடைபெற்றன. அரசின் கொள்கைகள் இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில்

www.padippakam.com



அமைந்துவிட்டால் எல்லாம் சரியாக இருக்கும் என்றும், வழக்கமான தீமைகள் இல்லாத நீதியான சமூகம் உருவாகிவிடும் என்றும் சிலர் கூறும் வாதம் தவறானது என்பதை இது சரியாக நிரூபிக்கிறது. இவர்கள் சமூகத்தில் செயல்படும் சரித்திர ரீதியான சக்திகளையும் பொருளியல் சக்திகளையும் கருத்தில் கொள்ளாமல் லட்சியவாத நோக்கில் பேசுகிறார்கள். முகமதுவைச் சுற்றி இருந்தவர்களே, மாறிவிட்ட சூழ்நிலைகளில், இஸ்லாமியக் கோட்பாடுகளை நீண்டகாலத்துக்குப் பின்பற்ற முடியாமல் போயிற்று என்றால், அவற்றை இன்று ஒரு தொழிலியல் சமூகத்தில் யார்தான் பின்பற்ற முடியும்? இஸ்லாமிய அரசு என்ற கருத்தை முன்வைத்துப் பேசுவோர் யாரும் இதற்குத் திருப்தியான விடை கூற முடியவில்லை. அலீ கலீஃபாவாக வந்த காலத்துக்குள் நிலைமைகள் மிகத் தீவிரமாக மாறிப்போய்விட்டதனால், இஸ்லாமின் ஆரம்பகால எளிமையை மீண்டும் கொண்டுவந்து, நீதியான சமூகம் ஒன்றை அமைக்க அவர் எவ்வளவோ முயன்றாலும் கூட அதிகமாக எதுவும் செய்ய முடியவில்லை. இறுதியாக அவரும் அவருக்கு முன் இருந்த இரண்டு கலீஃபாக்களைப் போல கொலை செய்யப்பட்டார். டாக்டர் தாஹா ஹுஸைன் கூறுகிறார்: “கைப்பற்றப்பட்ட எல்லாப் பிராந்தியங்களிலும் தமது ஆட்சியை நிலைநிறுத்த அலீ தவறிவிட்டார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இதில் அவர் சொந்த முறையில் மட்டுமே தோல்வியடைந்ததாகக் கூற முடியாது. கலீஃபா முறை முழுவதுமே தோல்வியடைந்தது. இந்தப் புதிய வடிவிலான அரசாங்கம் (அதாவது, இஸ்லாமிய வடிவிலான அரசாங்கம்) ஒரு புதிய முறை ஆட்சிக்கு முன் மாதிரியாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடைசியில் இதுவும் ஒருவகையிலும் வித்தியாசமாக இல்லாமல், முன்பு மற்ற அரசாங்கங்கள் பின்பற்றிய அதே வழியிலேயே சென்றது. முந்திய அரசாங்கங்களைப் போலவே இதுவும் வர்க்க நலன்களையும், அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டங்களையுமே அடிப்படையாகக்கொண்டு, பல்வேறு தேசிய இனங்களும், (வர்க்கங்களும்), ஆதிக்க பலம் பெற்ற ஒரு தேசிய இனத்தின் ஒரு சிறிய பிரிவினால் சுரண்டப்படும் அரசாங்கமாகவே ஆயிற்று. மேலும், அலீயும், கலீஃபா முறையும் தோல்வியடைந்தோடு, கிளர்ச்சியும் தோல்வியடைந்தது. இஸ்லாமியக் கலீஃபா முறையின் தூய்மையையும், சகிப்புத்தன்மையையும் நீதியான தன்மையையும் பாதுகாத்து, சுயநலம், மனம்போன போக்கு போன்ற தீமைகளை ஒழிப்பதற்காக உத்மானின் ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்டது என்று கூறப்பட்ட இந்தக் கிளர்ச்சி தோல்வி கண்டது.”[38]

38. மேற்படி, பக்கம் 311-12.

www.padippakam.com



முஆவியா, நேர்மையானதும் நேர்மையற்றதுமான எல்லா வழிகளிலும் முயற்சி செய்து கடைசியாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டார். அலீ கொலை செய்யப்பட்ட பின் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது மூத்த மகன் ஹஸன் (Hasan) முஆவியா விடம் அதிகாரத்தைச் சரணடைவித்தார். அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டது. அவரது மரணத்துக்குப் பின் அடுத்த கலீஃபா முஸ்லிம்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது அந்த நிபந்தனை. முஆவியா, அப்போதைக்குத் தேவைப்பட்ட ஒரு செயலாகவே அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டார். விரைவிலேயே அதை மீறி, பைஜாண்டிய, ஸஸானிட் பேரரசர்கள் செய்தது போலவே, தமது மகன் யஸீதை (Yazid) தமக்குப் பின் பட்டத்துக்கு வரும் தடையற்ற வழி அமைப்பதற்காகத் தம்மிடம் அதிகாரத்தை ஒப்படைத்த ஹஸனுக்கு அவர் விஷமிட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக இஸ்லாமிய கலீஃபா முறை குறுகிய காலத்திலேயே தோல்வியடைந்து, உமய்யதுகளின் பரம்பரை ஆட்சி தொடங்கியது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது பல்வேறு வகையான மக்களையும் கொண்ட இஸ்லாமியப் பேரர சுக்கும், அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சிக்கும் இதுவே அதிகப் பொருத்தமாக இருந்தது. இஸ்லாமிய கலீஃபா முறை, எளிமையான மரபு அமைப்புகளைக்கொண்ட, சக்திவாய்ந்த நிலச்சுவான்தார் வர்க்கம் இல்லாத, ஓரளவுக்குச் சமத்துவம் நிலவுகின்ற அரேபியாவின் நிலைமைகளுக்குப் பொருத்தமானது. ரோமானிய, ஸஸானிட் பேரரசுகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பரந்த நிலப்பகுதிகள், அவற்றில் உள்ளார்ந்து அமைந்துள்ள மரபு அமைப்புகளுடன் ராணுவ பலம் பெற்ற நிலப்பிரபுக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமியப் பேரரசில் இணைக்கப்பட்ட பின், இஸ்லாமிய முறையிலான அரசாங்கம் என்ற கருத்து வெற்றி பெறுவது சந்தேக மாகிவிட்டது. நில உடைமைப் பரிவர்த்தனைகளைத் தாராளமாக அனுமதிக்க உத்மான் முடிவு செய்தது, அவருடைய சொந்தமான விபரீத யோசனையோ தற்செயலான நிகழ்ச்சியோ அல்ல. அந்தத் திசையில் அவர் செல்வதற்கு நிர்ப்பந்தங்கள் பெருகிக் கொண்டிருந் தன. உறுதியான கருத்துக்களும் உயர்ந்தோங்கிய ஆளுமையும் கொண்ட உமர் அவற்றை எதிர்த்து நிற்க முயன்றார். ஆனால் ஒவ்வொரு வெளிநாட்டு வெற்றியுடனும் இந்த நிர்ப்பந்தங்கள் வலுவடைந்து வந்ததால் உத்மான் அவற்றை அதற்கு மேலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. வரலாற்றில் ஒரு தனி மனிதரின் பங்குபணி முக்கியமானதே. ஆயினும் மனிதனுக்கும் அவனது சூழ்நிலைகளுக்கும் இடையே தர்க்க ரீதியான ஒரு உறவுநிலை எப்போதும் இருக்கிறது. சுயேச்சையாகத் தெரிந்தெடுத்து செயல் படும் வாய்ப்புகள் அவனைச் சுற்றிலும் இயங்கும் பொருளியல்

www.padippakam.com



சக்திகளுக்கு உட்பட்டவையாகவே உள்ளன. அலீ, முன்பு இருந்த எளிமையையும் அரேபியர்களுக்கு வழக்கமான சமத்துவத்தையும் மீண்டும் கொண்டுவர அரும்பாடுபட்டும், தோல்வியடைந்து தமது எண்ணம் நிறைவேற முடியாமலே மரணமடைந்தார். அவர் செய்ய முயன்றது, வரலாற்று சக்திகளுடன் பொருத்தம் அற்றதாகப் போயிருந்தது. பணக்கார நிலச்சுவான்தார் வர்க்கம் ஒன்று உருவாகி, எல்லா முஸ்லிம்களையும் சமமாக நடத்துவதை எதிர்த்தது; அவர்கள் கீழ்நிலையில் உள்ள முஸ்லிம்களுடன் தாங்கள் சமமாக நடத்தப்படுவதை எதிர்த்து தங்களுக்குத் தனிப்பட்ட உரிமைகள் வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தார்கள். மற்றொரு புறம், பதூயின்கள், அல்லது இஸ்லாமின் சமத்துவக் கோட்பாட்டால் கவரப்பட்டுஅதை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டினர், இஸ்லாமின் போதனைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றச் செய்யுமாறு கலீஃபா மீது நிர்ப்பந்தம் கொண்டு வந்தார்கள். இஸ்லாமிய சமூகம் இந்தப் போராட்டத்தால் அலைக்கழிக்கப்பட்டது.

இந்தச் செயல்பாடுகளின் இறுதிக் கட்டமாகத்தான் முஆவியா தமது மகன் யஸீதைத் தமக்கு வாரிசாக அறிவித்த நிகழ்ச்சி அமைந்தது. அதன் மூலம் புதிய நிலைமைகளுக்கு அதிகப்பொருத்தமாக இருக்கக்கூடிய பரம்பரை ஆட்சிக்குத் தொடக்கம் செய்யப்பட்டது. மேலும் உமய்யதுகள் மத அடிப்படையிலான ஆட்சி நடத்துவதாகப் பாசாங்கு செய்வதை விட்டுவிட்டார்தள். அவர்களின் ஆட்சியை அரேபியர்களின் மதச்சார்பற்ற தேசிய ஆட்சி என்று கூறுலாம். உமய்யத் ஆட்சிக்காலத்தில், அரசுச் சம்பளம் பெறுகின்ற ராணுவமும், நிர்வாக அதிகாரிகள் அமைப்பும் விரிவடைந்தன. இஸ்லாமின் ஆரம்பகாலத்தில் இருந்ததைப் போல விருப்பம் உள்ளவர்கள் போர்த்தொழிலை மேற்கொள்வது என்ற நிலை இல்லாமல் போயிற்று. போருக்கெனத் திரட்டப்படும் போர்வீரர் அணிகளுக்கு பதிலாக முறையான ராணுவம் அமைக்கப்பட்டது. அதே போல சுயவிருப்பத்தின் பேரில் வரி வசூலிக்கும் பணியையும் மற்ற வேலைகளையும் செய்ய முன்வருவோருக்கு பதிலாக முறையான அதிகாரிகள் அமைப்பு உருவாக்கப்பட்டது. வரி வசூலித்தல், அரசியல் நிர்வாகம், மதத்தலைமை ஆகிய மூன்று பணிகள் மூன்று அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டன. ஒவ்வொரு அதிகாரியும் “அமீர்” என்றோ “ஸாஹிப்” என்றோ அழைக்கப்பட்டார். ஸாஹிப் அல்-கராஜ் என்ற அதிகாரி அநேகமாக நேரடியாகவே கலீஃபாவுக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருந்தார். இப்படி ஒரு அதிகாரியை முஆவியாதான் முதல் முதலாக நியமித்து, அவரை கூஃபாவுக்கு அனுப்பி வைத்தார்.[39]

39. Ibn Khaldūn, Vol.III, பக்கம் 4, 1.24; quoted by Philip K.Hitti in *History of the Arabs*.

www.padippakam.com



அரசியல் நிர்வாகத்தை அரசப் பிரதிநிதி(அதாவது அமீர் அல்லது ஸாஹிப்) கவனித்துக் கொண்டார். அவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமது முகவராக "ஆமில்" என்ற அதிகாரிகளை நியமித்தார். சில சமயங்களில் இந்த அரசப் பிரதிநிதிகள் தலைநகரில் இருந்துகொண்டு தங்கள் துணை அதிகாரிகளை மாகாணங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அரசப் பிரதிநிதி தமது மாகாணத்தில் அரசியல், ராணுவ நிர்வாகத்துக்கு முழுப்பொறுப்பு வகித்தார். அரசின் வருமானம் முக்கியமான பேரரசின் பிரஜைகளாக வாழும் மக்கள் செலுத்தும் கப்பங்கள் மூலமாகவே கிடைத்தது. முஸ்லிம்கள் "ஜகாத்"தும் முஸ்லிம் அல்லாதவர்கள் "ஜிஸ்யா" வரியும் செலுத்த வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்கள் இதைத்தவிர "கராஜ்" என்ற நிலவரியும் கட்ட வேண்டியிருந்தது. அரசு அதிகாரிகள் இஸ்லாமைவிட வருவாயிலேயே அதிக அக்கறை காட்டினார்கள் என்பதற்கு உதாரணமாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம்: "…..மதத்துக்கும் அரசுக் கருவூலத்துக்கும் இடையே உரிமைப் போராட்டம் 728ஆம் ஆண்டில் கலீஃபா ஹிஷாமின் ஆட்சியின் போது நடைபெற்றது. குராஸான் மாகாணத்தின் ஆளுநர் அஷ்ரப் இபின் அப்தல்லாஹ் (Ashrab ibn 'Abdallah), ட்ரான்ஸ் ஆக்ஸானியா பகுதியின் மக்கள் அனைவரையும் இஸ்லாமுக்கு மாற்றத் திட்டமிட்டார். மதம் மாறுவதற்கு ஊக்குவிப்பாக அவர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது அவரது திட்டம். இவ்வாறு 'மதம் மாற்ற அனுப்பப்பட்ட முஸ்லிம் மதப் பிரசாரகர்களுக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. இதைக் கண்டு வருவாய்த் துறை அதிகாரிகள் எதிர்ப்புக்குரல் எழுப்பினார்கள். ஏனென்றால் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகை ஊதியங்கள் அவர்கள் வசூலிக்கும் வரித்தொகையைப் பொறுத்தே இருக்கும். உள்ளூர்த் தலைவர்களும் இதை எதிர்த்தார்கள். ஜனநாயகத்தன்மை கொண்ட இஸ்லாம், விவசாய மக்களிடையே பரவினால் தங்களுடைய கௌரவம் பாதிக்கப்படலாம் என்று அவர்கள் அஞ்சினார்கள். கருவூல அதிகாரிகளின் வாதத்தைக் கடைசியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. பாரசீகத்தில் உள்ள அரபு படைகள் அந்நாட்டிலேயே வசூலிக்கப்படும் வரிப்பணத்தையே சார்ந்திருந்ததால் முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டுவிட்டால் அந்தப் படைகள் பட்டினிதான் கிடக்க வேண்டியிருக்கும். எனவே அவர் மீண்டும் கராஜ் என்ற நிலவரியை விதித்தார். அந்த வரியை முன்பு செலுத்தி வந்தவர்கள் அனைவரும், அவர்கள் "ஸுன்னத்" பரிசோதனைக்கு உட்பட்டாலும் இல்லாவிட்டாலும் நிலவரி கட்டவேண்டும் என்று உத்தரவிட்டார். இவ்வாறு கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டதன் விளைவாகப் பெரும் அளவில் கிளர்ச்சி மூண்டது. இதனால் சிலகாலத்துக்கு அரேபியர்கள் ட்ரான்ஸ் ஆக்ஸானியா முழுவதையுமே

www.padippakam.com



இழந்திருந்தார்கள். இழக்கப்பட்ட இந்தப் பிராந்தியத்தின் சில பகுதிகள் இஸ்லாமுக்கு மீண்டும் 734ஆம் ஆண்டில் கிடைத்தன; ஆனால் அவை அப்போது டமாஸ்கஸிலிருந்து ஆட்சிபுரிந்த உமய்யத் கலீஃபா ஹிஷாமுக்குக் கிடைக்கவில்லை. தீர்க்கதரிசியின் வம்சத்தினரின் உரிமையை ஆதரிக்கும் "அலீத்"கள் ஹிஷாமுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தங்களுக்கு ஆதரவாளர்களைத் திரட்டினார்கள். அவர்கள் பாதுகாக்கப்பட்ட மதங்களை (இங்கே முக்கியமாக ஜொராஸ்ட்ரிய மதம்) பின்பற்றுவோருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைப் பின்பற்றுவதாகவும், முஸ்லிம்கள் கப்பம் செலுத்த வேண்டியிராது என்றும், யாரும் அடக்கி ஒடுக்கப்படமாட்டார்கள் என்றும் வாக்குறுதி அளித்தார்கள்."[40]

உமய்யத் கலீஃபாக்கள், விதிவிலக்கான ஓரிருவரைத் தவிர, இஸ்லாமின் கட்டளைகளைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. முஆவியாவின் மகன் யஸீத் பெரிய குடிகாரர் (இஸ்லாம் மதுவைக் கண்டிப்பாகத் தடை செய்கிறது). அவருக்குப் பெயரே யஸீத் அல்-குமூர் (Yazīd al-khumūr) "மதுபான யஸீத்" என்று ஆகிவிட்டது.[41] அவர் தம்முடன் மதுக்களியாட்டங்களில் பங்கு கொள்ள ஒரு குரங்கையும் பழக்கி வைத்திருந்தார். (மாஸீதி, தொகுதி 5, பக்கம் 157 பார்க்க). இரண்டாவது யஸீத் தமது சபையின் இரண்டு பாடகிகளிடம் அளவற்ற பிரியம் வைத்திருந்தார். அவர்களில் ஒருத்தியின் வாயினுள் அவர் விளையாட்டாக ஒரு திராட்சைப் பழத்தைத் தூக்கி வீச அவள் மூச்சுத்திணறி இறந்தாள். இதைக் கண்டு இளம் கலீஃபா பதறி உயிர்விட்டார். அவரது மகன் அல்-வலீத் (al-walīd) குடியில் எல்லோரையும் மிஞ்சிவிட்டார். அவர் மதுவால் நிரப்பப்பட்ட நீச்சல் குளத்தில் நீந்தும் வழக்கமுடையவர் என்றும், அதில் அவர் குடித்துக் குடித்தே அதன் மேல்மட்டம் இறங்கிவிடும் என்றும் கூறப்படுகிறது.[42]அகனியில் (Aghānī, தொகுதி 6, பக்கம் 125) ஒரு நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. அல்-வலீத் ஒரு நாள் குரானைத் திறந்த போது "அகம்பாவம் கொண்ட ஒவ்வொரு மன்னனும் அழிவை அடைந்தான்" என்ற வசனம் அவரது பார்வையில் பட்டது. அவர் கோபமடைந்து புனிதநூலை தமது வில், அம்பால் தூளாக நொறுக்கினார். அப்போது அந்த வசனத்துக்கு மறுப்பாகத் தமது சொந்த வசனங்கள் இரண்டைத் திரும்பத் திரும்பக் கூறினார்.[43] இவ்வாறாக உமய்யத் கலீஃபாக்களின்

40. Reuben Levy, *Social Structure of Islam*, பக்கம் 23-4.

41. 'Iqd al-Farid, Vol.III (Cairo, 1302), பக்கம் 403; also Nawazri *Nihayat al-Arab (Cario, 1923-33) Vol.iv*, பக்கம் 91.

42. *Al-Nawāji, Halbat al-Kumayt* (Cairo, 1299 A.H.), பக்கம் 98; quoted by Philip K. Hitti in *History of the Arabs*.

43. *Quoted by Hitti in History of the Arabs*, பக்கம் 227.

www.padippakam.com



ஆட்சி சாராம்சத்தில் மதச்சார்பற்றதாக இருந்தது எனக் காண்கிறோம். உண்மையில், முதல் நான்கு கலீஃபாக்களுக்குப் பின் இஸ்லாமிய மத அடிப்படை அரசு முடிவுக்கு வந்துவிட்டது.

உமய்யதுகளின் ராணுவ அமைப்புப் பற்றி பேராசிரியர் ஹிட்டி இவ்வாறு கூறுகிறார்: "ராணுவம் பைஜாண்டிய ராணுவத்தின் முறையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. ஐந்து அணிகளாக அது பிரிக்கப்பட்டது: மத்திய அணி, இரண்டு பக்க அணிகள், ஒரு முகப்பு அணி, ஒரு கடைசி அணி. அணிவகுப்பு பழைய காலத்தின் மாதிரியிலேயே வரிசைகளாக அமைந்தது..... ஆயுதங்கள், கவசங்கள் ஆகியவற்றிலும் அரபு போர்வீரருக்கும் கிரேக்கப் போர்வீரருக்கும் இடையே வேறுபாடு அதிகம் இல்லை. குதிரைகளின் சேணங்களும் பைஜாண்டிய சேணங்களைப்போலவே இருந்தன. சமீப கிழக்கு நாடுகளில் இப்போதும் வழக்கத்தில் இருக்கும் சேணங்களைப் போன்றவை அவை. தற்காலத்திய கனரக பீரங்கிகளைப் போல அந்த ராணுவத்தில் எதிரிகள் மீது பாறைகளையும் கற்களையும் வீசி எறியும் பாலிஸ்டா (ballista), - மாங்கனல் (mangonel), கோட்டைகளை இடித்து உடைக்கும் உத்தரங்கள் (battering ram) போன்ற சாதனங்கள் இருந்தன. கனமான இந்தச் சாதனங்களும், முற்றுகை யந்திரங்களும் ராணுவத்தின் பின்னால் ஒட்டகங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன."[44]

அரேபியர்கள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்கென சொந்தமான நாணயங்கள் கிடையாது. இஸ்லாமுக்கு முந்திய காலத்தில் அவர்களுக்கென அரசு எதுவும் இல்லாததே இதற்குக் காரணம். கலீஃபாக்கள் ஆட்சியின் ஆரம்ப காலத்திலும், அதற்குப் பின் சிலகாலம் வரையும் பெரும்பாலும் பைஜாண்டிய நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. செம்பு நாணயங்களைக் குறிக்கும் ஃபல்ஸ் (fals) என்ற சொல்லும், பொன், வெள்ளி நாணயங்களைக் குறிக்கும் தினார் (dinar), திர்ஹம் (dirham) என்ற சொற்களும் கிரேக்க மொழியிலிருந்து வந்தவை. அப்த் அல்-மலிக்கின் (ஹஜ்ரி 77/கி.பி. 696) நாணயச் சீர்திருத்தங்களுக்கு முன் வழக்கில் இருந்த செப்பு நாணயங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்: அரேபிய-பைஜாண்டிய, அரேபிய-ஸஸானிய, பைஜாண்டிய - பஹ்லவி. அரேபியர்கள் படையெடுத்து வெற்றிபெற்ற நாடுகளில் ஏற்கெனவே இருந்து வந்த நாணயங்களைப் போலவே அவர்களும் நாணயங்கள் அச்சிட்டார்கள்: அவற்றில் இருந்த மதவாசகங்கள், காலங்கடந்த தேதிகள் எல்லாம் அப்படியே அவர்களது நாணயங்களிலும் இருந்தன. இவ்வாறு நகல் செய்யப்பட்ட நாணயங்கள் தான் இப்போது கிடைக்கும் மிகப் பழமையான இஸ்லாமிய நாணயங்கள்.

44. மேற்படி, பக்கம் 226.

படிப்பகம்

www.padippakam.com



அப்த் அல்-மலிக்கின் சீர்திருத்தங்கள்வரை அடிப்படையான பைஜாண்டிய மாதிரி அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் அதற்கு முன்பே கூட அரபுமயமாக்கும் சில மாற்றங்களும் செய்யப்பட்டன. அரேபிய-ஸஸானிய மாதிரியிலான செப்பு நாணயங்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. இவற்றின் முகப் பக்கத்தில் ஸஸானிய மார்பளவு உருவமும், புறப்பக்கத்தில் நெருப்பு வேதியில் சிறிது மாற்றம் செய்யப்பட்டிருந்தன. மூன்றாவது வகையான பைஜாண்டிய-பஹ்லவி நாணயங்கள் செம்பில் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றில் பைஜாண்டிய, ஸஸானிய அம்சங்கள் இரண்டும் இடம்பெற்றுள்ளன. முகப்பக்கம் வழக்கமான பைஜாண்டிய மாதிரியிலும், புறப்பக்கம் ஸஸானிய மாதிரியிலும் அமைந்திருந்தன.[45]

இவ்வாறாக, ஒரு அரசு யந்திரத்தை நடத்துவதற்கு வேண்டிய பல அமைப்புகள் அரேபியரிடம் இல்லாதிருந்தபோதிலும் அவர்கள் பழைய பேரரசுகளிடமிருந்து பலவற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டார்கள். உமய்யதுகள் பெரும்பாலும் பைஜாண்டியத்திலிருந்தும் அப்பாஸிதுகள் பாரசீகத்திலிருந்தும் இரவல் பெற்றார்கள். பல்வேறு மாகாணங்கள் வெற்றி கொள்ளப் பட்டு இஸ்லாமிய பேரரசில் இணைக்கப்பட்ட பின், அதன் முக்கிய கேந்திரம் மாறிக்கொண்டு வந்தது கவனிக்கத்தக்கது. இது மதீனாவிலிருந்து முதலில் கூஃபாவுக்கும் பின்பு ஸிரியாவுக்கும், கடைசியாக பக்தாதுக்கும் மாறியது. நான்காவது கலீஃபா அலி முதலில் தமது தலைநகரை மதீனாவிலிருந்து கூஃபாவுக்கு மாற்றினார். பரந்த பேரரசை மதீனாவிலிருந்து நிர்வகிப்பது இயலாமல் போயிற்று என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். இரண்டாவதாக, உத்மானுக்கு எதிரான கிளர்ச்சியை ஏற்பாடு செய்த எதிர்ப்பாளர்களை சமாதானம் செய்யும் நோக்கத்துடனும் தலைநகரை இராக்குக்கு மாற்றியிருக்கலாம். அவர்களில் பலர் கூஃபாவையும் பஸ்ராவையும் சேர்ந்தவர்கள். இவை இரண்டும் முக்கியமான ராணுவ முகாம்கள்; இவற்றில் வசித்த மக்கள் பெரும் பாலும் அரேபியரல்லாதவர்கள். தமது விவேகமான, பாரபட்சமற்ற கொள்கைகள் காரணமாக இந்த மக்களின் விசுவாசத்தைத் தாம் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அலீக்கு இருந்தது; ஆனால் அரேபியர்களிடையே உருவாகியிருந்த பலமான சுயநல சக்திகள் அவருக்கு எதிராக இருந்தன. இது வெற்றி பெற்றிருக்க முடியும்; ஆனால், முஆவியாவின் சூழ்ச்சிகள் ஒருபுறமும், மறுபுறம், பதூயின் அரேபியரின் எதிர்ப்பு இயக்கமான

45. இந்த விவரங்கள் John Walker's *A Catalogue of Mohammedan Coins in the British Museum (London, 1956)* என்ற புத்தகத்தில் காணப்படுகின்றன. பக்கம் xxviii–xxxii, 22-23; மற்றும் Catalogue ii, பக்கம் li-liii, 821-3.

www.padippakam.com



"கரிஜைட்" (Kharijite) இயக்கமும் இதற்கு இடையூறாயின. அலீயின் போட்டியாளரான முஆவியா ஸிரியாவை தமது வலுவான கோட்டையாக்கிக் கொண்டார். பைஜாண்டியத்தின் வர்த்தகம் ஸிரியா வழியாகத்தான் நடைபெற்றதால் அது ஒரு கேந்திர முக்கியத்துவம் பெற்றிருந்தது. பைஜாண்டிய ஆதிக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் அது முக்கியமானது. இவ்வாறாக இஸ்லாமியப் பேரரசின் மிக முக்கியமான ஒரு மாகாணம் முஆவியாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரசியல் அதிகாரம் தமது கையில் வந்தவுடன் அவர் அதைத் தமது தலைமையிடமாக ஆக்கிக் கொண்டார். மேலும் இந்த அதிகாரத்தை அவர் பெறுவதற்கும் ஸிரியா ராணுவம்தான் உதவியாயிருந்தது. மக்காவும், மதீனாவும் இவ்வாறாக அரசியல் முக்கியத்துவத்தை இழந்த பிறகு, இஸ்லாமிய வரலாறு முழுவதிலும் மத முக்கியத்துவம் உள்ள இடங்களாக மட்டுமே இருந்து வந்தன. நிகழ்ச்சிகளின் நிர்ப்பந்தங்களால், இஸ்லாம் தோன்றிய நகரமும், முதலாவது இஸ்லாமிய அரசு அமைந்த நகரமும் தங்களுடைய முக்கியத்துவத்தை நிரந்தரமாக இழந்துவிட்டன. இறுதியாகப் பார்க்கும் போது மதம்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் காரணி என்று இன்னமும் கூற முடியுமா?

www.padippakam.com

# 6

# மதத்தில் மாற்றுக்கோட்பாடுகள் அரசியல்-பொருளாதார காரணங்களால் தோற்றம்

"ஒரு மத இயக்கம் விரிந்து பரந்ததாக இருக்குமானால் அதில் சேருபவர்கள் வெவ்வேறு காரணங்களுக்காகச் சேருகிறார்கள்," என்று மாண்ட்காமரி வாட் "இஸ்லாமும் சமூக ஒருங்கிணைப்பும்" (Islam and the Integration of Society) புத்தகத்தில் கூறுகிறார். "பெரிய மதங்களைப் பின்பற்றுவோர் பல்வேறு வகையினராக இருப்பதிலிருந்தே ஒரு பெரிய மதம் பரவுவதற்கு ஒரே தன்மையான பொருளாதார மாற்றம் காரணமாக இருக்க முடியாது என்பதை அறியலாம்" என்று அவர் குறிப்பிடுகிறார்.[1] படையெடுப்புகள் மூலம் பல்வேறு மாகாணங்கள் இஸ்லாமிய அரசில் சேர்க்கப்பட்ட பின் மக்கள் பல்வேறு வகையினராக இருப்பது மேலும் அதிகரித்தது. அதன் மூலம் திகைப்பூட்டும் பல பிரச்சினைகளும் உருவாயின. வாட் மிகச் சரியாகக் குறிப்பிடுவதைப் போல, பல்வேறு பிராந்தியங்களையும், வர்க்கங்களையும் சேர்ந்த மக்கள் ஒரே மாதிரியான அல்லது ஒரே வகையான காரணங்களுக்காக இஸ்லாமில் சேரவில்லை. அவர்களுக்கு வெவ்வேறு காரணங்கள் இருந்தன. முந்திய அத்தியாயங்களில் நாம் பார்த்தது போல இஸ்லாம் மக்காவில் நிலவிய சமூகப் பதற்றநிலைய்யைத் தீர்க்க முயன்றது. இந்த நோக்கத்துடன் அது பணக்காரர்களுக்கு ஏழைகளைக் கவனித்துக் கொள்ளும்படியும், அநாதைகளுக்கு உணவு அளிக்கும்படியும், இன்னும் இது போன்ற அறிவுரைகளையும் அளித்தது. மக்காவின் பிரச்சினை எளிமையானது, சுலபமாகத் தீர்வு காணக்கூடியது. ஆனால், இஸ்லாமிய அரசு வெளியில் விரிவடைந்தபின் ஏற்பட்ட சமூகக்கேடுகள் மிகத் தீவிரமானவை. வெவ்வேறு வர்க்கங்களையும் நாடுகளையும் சேர்ந்த மக்களின் ஒன்றுக்கொன்று முரண்பாடான ஆவல்களை நிறைவேற்றுவது அநேகமாக சாத்தியமில்லாததாயிருந்தது. இந்த அத்தியாயத்தில் நாம் இஸ்லாமில் தோன்றிய பல்வேறு புற

1. W.Montgomery Watt, *Islam and the Intergration of Society* (London, 1966), பக்கம் 33.

www.padippakam.com



வீச்சுச் சக்திகளை - உள்ளேயும் வெளியேயும் தோன்றிய சக்திகளை - ஆராயவிருக்கிறோம். இவை தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சமூக, பொருளாதார காரணிகள் என்ன என்பதையும் காணவிருக்கிறோம்.

சவால் எழக் காரணமாயிருந்தது பேராசிரியர் டாயின்பீ கூறுகிற "உள்ளேயும், வெளியேயும் அமைந்த தொழிலாளர் வர்க்கம்" ஆகும். முதலில் உள்ளே அமைந்த தொழிலாளர்களால் எழுந்த சவாலைப் பார்ப்போம். பதூயின்கள் என்று அழைக்கப்பட்ட நாடோடி அரேபியர் களே இஸ்லாமியப் பேரரசின் உள்ளே அமைந்த தொழிலாளர்கள். நகரங் களில் குடியமர்ந்து நிலைத்த வாழ்க்கை நடத்திய அரேபியர்கள் தாங்கள் பதூயின்களைவிட உயர்ந்தவர்கள் என்று கருதினார்கள். குரான் கூட அவர்கள் இஸ்லாமைத் தழுவியதைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளவில்லை. குரான் கூறுகிறது: "பாலைவன அரேபி யர்கள் வெளிவேஷத்தில் நகரங்களில் வசிப்பவர்களை மிஞ்சிவிடு கிறார்கள். அல்லாஹ் தனது தூதருக்கு வெளிப்படுத்திய சட்டங்களை அவர்கள் அறியாமலிருக்க அதிகக் காரணங்கள் உள்ளன. அல்லாஹ் ஞானமுள்ளவன், எல்லாம் அறிபவன். சில பாலைவன அரேபி யர்கள் அல்லாஹ்வுக்காகக் கொடுப்பதைக் கட்டாய அபராதமாகக் கருது கிறார்கள். உங்களுக்குக் கேடு வரவேண்டும்மென்று அவர்கள் காத்திருக் கிறார்கள். கேடு அவர்களுக்கே வரட்டும்! அல்லாஹ் எல்லாவற்றையும் செவியேற்கிறான், எல்லாவற்றையும் அறிவான்." (குரான் 9:97-98)

பாலைவன அரேபியர்களின் உலகநோக்குத் தத்துவம் வேறாக இருந்தது. குரானே குறிப்பிடுவது போல, நகரங்களில் வசிக்கும் அரேபியர்களின் நலன்களுக்கு உகந்த சட்டங்களை அவர்கள் பொருட்படுத்தவில்லை. பதூயின்கள் நினைவுக்கெட்டாத காலம் தொட்டே சுதந்திரமாக வாழ்ந்து பழகியவர்கள், அவர்கள் ஒரு போதும் ஒரே இடத்தில் நிரந்தரமாகத் தங்குவதில்லை. எனவே, அவர்களுக்கு அரசாங்கம், வரிவசூல் அமைப்பு போன்றவை பொருளற்றவையாகத் தோன்றின. இந்த அமைப்புகள் தங்கள் மீது சுமத்தப்படுவதை அவர்கள் வெறுத்தார்கள். அவர்கள் முத லில் தீர்க்கதரிசியின் மரணத்துக்குப் பிறகு ஜகாத் செலுத்தும் பிரச் சினையில் கிளர்ச்சி செய்தார்கள். மிகுந்த சிரமத்துடன் அந்தக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. ஆயினும் அவர்கள் பெரும் எண்ணிக்கை யில் படையில் சேர்க்கப்பட்டுப் போர்களுக்கு அனுப்பட்ட தாலும், போரில் நிறையக் கொள்ளைப் பொருள்கள் கிடைத்த தாலும், மத்திய கட்டுப்பாட்டு அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள ஒருவகையாக இணங்கினார்கள். இவ்வாறாக வாட் கூறிய கருத்தின் படி பார்த்தால் இந்த மதம் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை அளித்ததால் அவர்கள் இந்த மதத்தில் சேர்ந்தார்கள். வாட் இரண்டாவதாகக் கூறும் கருத்து மார்க்ஸின் கருத்துக்கு

www.padippakam.com



மிக அருகே வருவது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்: "பொருளாதார மாறுதல்கள் எப்போதுமே மதத்தில் மாறுதல் ஏற்படக் காரணமாகின்றனவா என்று கேட்டால், சுருக்கமான ஒரு ஆய்வு மூலம் பின்வரும் விடை கிடைக்கிறது: பொருளாதார மாறுதல் உற்பத்திச் சாதனங்களில் ஏற்பட்ட மாறுதலாயிருந்தால் அதன் மூலம் சமூக விளைவுகள் ஏற்பட்டு அதைத் தொடர்ந்து மதமும் மாறுகிறது... இஸ்லாம், தானே இதுபோன்ற மாபெரும் பொருளாதார மாறுதல்களின் விளைவாகத் தோன்றியதுதான் என்பதை நாம் பார்த்தோம். இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, பதூயின்களிடையே இனக்குழு கொள்ளைத் தாக்குதல்கள் நின்றுபோனதால் அவர்களின் பொருளாதார நிலையில் அடிப்படையான மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்பதே. எனவே, அவர்கள் பெரும் எண்ணிக்கையில் இஸ்லாமில் சேர்ந்தார்கள்." [2]

இப்போது, மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. பதூயின்களைப் பொறுத்தமட்டில் வெளிநாட்டு வெற்றிகளும் அவற்றின் விளைவாக அரசு விரிவடைந்ததும் காரணமாக, இஸ்லாமிய அரசின் அடிப்படைத்தன்மையே மாறிப் போய்விட்டது. முன்பு இருந்த எளிமையும், ஜனநாயக, சமத்துவப் பண்புகளும் மறைந்து போய், அரசு குரைஷ் இனக்குழுவைச் சேர்ந்த ஒரு சில பணக்கார ஆட்சியாளர்களின் ஏகபோகமாகிவிட்டது. உத்மானின் காலத்தில் உறவினர்களுக்குச் சலுகையளிப்பதும் அரசியல் லஞ்ச ஊழலும் புதிய உச்சநிலையை அடைந்தன. அரசின் எல்லாப் பதவிகளிலும் குரைஷ் இனக்குழுவின் ஒரு பிரிவான உமய்யதுகளே அமர்த்தப்பட்டிருந்தார்கள். இஸ்லாம், கொள்கையளவிலேனும், எந்த இனக்குழுவுக்கும் சலுகை காட்டவில்லை. ஆனால் நடைமுறையில் நகரவாசிகளான குரைஷியர் அதிகாரம் முழுவதையும் தங்கள் ஏகபோகமாக வைத்துக்கொண்டு பதூயின்களுக்கு ஒன்றும் இல்லாமல் செய்துவிட்டார்கள். வெளிநாடுகள் மீது படையெடுத்து வென்ற ராணுவங்களிலும் பதூயின்கள் சாதாரணப் போர்வீரர்களாக மட்டுமே இருந்தார்கள். தலைமைப் பொறுப்புகள் எல்லாம் குரைஷியர் கையில் அல்லது மதீனாவின் அன்ஸார்கள் கையில் இருந்தன. மேலும் ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஒரே இனக்குழுவின் இரண்டு பிரிவினரிடையே நடந்த ரத்தம் சிந்தும் ஆதிக்கச் சண்டைகள் பதூயின்களுக்கு அர்த்தமற்றவையாகத் தோன்றின. எனவே, அவர்கள் அலீயின் படைகளுக்கும் முஆவியாவின் படைகளுக்குமிடையே ஸிஃபீனில் (Siffin) நடந்த சண்டைக்குப் பின் கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் அலீயின் ராணுவத்திலிருந்து விலகிச் சென்றதால் 'விலகியவர்கள்' என்று பொருள்படும்

2. மேற்படி, பக்கம் 33.

www.padippakam.com



"கரிஜைட்"கள் (Kharijtes) என்ற பெயரில் அழைக்கப்பட்டார்கள். "லா இமாரா" (la imāra), "அரசு வேண்டாம்" என்பது அவர்களது கோஷம். இதற்கு அலி "நல்லதோ, கெட்டதோ, அரசு என்று ஒன்று இருக்கத்தானே வேண்டும்," என்று பதில் கூறியதாக அல்-ஷஹ்ரெஸ்தானி (al - Shahrestani) குறிப்பிடுகிறார். நகரவாசி அரேபியருக்கும் பாலைவன அரேபியருக்குமிடையில் மனப் போக்கில் இருந்த வேறுபாட்டை இது தெளிவாகக் காட்டுகிறது. பாலைவன அரேபியரிடையே தனிநபர் சொத்துக்கள் இல்லாததால் அவர்களுக்கு அடக்குமுறை அரசு யந்திரம் அவசியமாகத் தோன்ற வில்லை. ஆனால், நகரவாசி அரேபியர்களுக்கு அது மிகவும் அவசியமாயிருந்தது. பாலைவன அரேபியர்களுக்கு இஸ்லாம் முதலில் இருந்தபடி சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்தும் "தூய்மைகெடாத" வடிவிலேயே ஏற்கத்தக்கதாக இருந்தது. கரிஜைட் தலைவரான முஸ்தவரித் பின் உல்லிஃபா (Mustawarid b. 'Ullifa), கடஸிஃபான் (Ctesiphon) ஆளுநருக்குப் பின்வரு மாறு கடிதம் எழுதியதாக தபரி தெரிவிக்கிறார்: "நாம் உங்களை சர்வ வல்லமைக்கும் அனைத்துப் புகழுக்கும் உரிய இறைவனின் புத்தகத்தையும், தீர்க்கதரிசியின் - அவர் மீது அமைதி நிலவுவ தாக - ஸுன்னாவை (வழக்கத்தை)யும், அபூ பக்கர், உமர் - இறைவன் அவர்கள் மீது மகிழ்ச்சி கொள்வானாக - ஆகியோரின் நிர்வாகத்தை யும் பின்பற்றுமாறு அழைக்கிறோம். உத்மானையும் அலீயையும் கைவிட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர்கள் உண்மையான மதத் தின் தூய்மையைக் கெடுத்து புத்தகத்தின் அதிகாரத்தை ஏற்காமல் விலகிவிட்டார்கள்." [3] இவ்வாறாக உத்மானின் காலம் தொடங்கும் இடத்தில் உண்மையான, தூய்மைகெடாத மதத்தின் எல்லை முடிவடைவதாக கரிஜைட்கள் கருதுகிறார்கள். படையெடுப்பு களால் வெளிநாடுகள் பிடிக்கப்பட்ட பிறகு இஸ்லாமின் உருவமே மாறிவிட்டது என்பதையும் முன்பு இருந்த எளிமை மீண்டும் வரவே இல்லை என்பதையும் நாம் பார்த்தோம். அவ்வப்போது சில சீர் திருத்தவாதிகள் பழைய எளிமையை மீண்டும் கொண்டு வர முயன்ற போதிலும் சரித்திர ரீதியாக அது இயலாத காரியமாயிருந்தது. கடிகாரத்தின் முள்ளைப் பின்னே திருப்பி வைப்பது வரலாற்றில் இய லாத செயல். அலீ இஸ்லாமிய நெறிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற மிக உண்மையாக முயற்சி செய்தார். ஆனால், அது சக்திவாய்ந்த சுயநலவாதி களை நேரடியாக பாதித்ததால் அவர் வெற்றிபெற முடியவில்லை.

இப்போது ஒரு கேள்வி எழுகிறது. கரிஜைட்டுகள் உத்மானை எதிர்த்தது போலவே அலீயை எதிர்த்ததற்குக் காரணம் என்ன?

3. Tabari, ii, 40,13 முதல். R.A. Nicholson, *A Literary History of the Arabs* (Cambridge, 1930) புத்தகத்தில் மேற்கோள், (பக்கம் 210).

www.padippakam.com



மாண்ட்காமரி வாட் இதற்கு ஒரு விடையைக் குறிப்பிடுகிறார்: "கரிஜைட் கிளர்ச்சிகளில் இரண்டு அம்சங்கள் கவனிக்கத்தக்கவை. முதலாவது, கரிஜைட்டுகள், உத்மானையும் உமய்யதுகளையும் எதிர்த்த அளவுக்கு அலீயையும் எதிர்த்தார்கள். அவர்கள் சமூக அமைப்பு முழுவதன்மீதும் அதிருப்தி கொண்டிருந்தார்கள், ஒரு தனிமனிதர்மீது அல்லது குடும்பத்தின்மீது மட்டும் அவர்கள் அதிருப்தி கொள்ளவில்லை என்ற கருத்துக்கு இது ஆதரவாக உள்ளது. அலீயும் மக்காவின் அதிகாரக்குழுவின் மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்தான் என்பதால், முன்னாள் நாடோடி மக்களைப் பொறுத்தவரை உத்மானைவிட அவர் சிறந்தவராகத் தோன்ற வில்லை... இரண்டாவது, கரிஜைட்டுகள் சிறுசிறு குழுக்களாகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். இதன் மூலம் அவர்கள் தங்களுடைய நாடோடி வாழ்க்கையில் பழக்கமாகியிருந்த இனக்குழு அல்லது குலக்குழு போன்ற குழு அமைப்பை மீண்டும் ஏற்படுத்திக்கொண் டார்கள்."[4] அலீயின் பதவிக் காலத்தில் மீதியிருந்த ஓரிரண்டு ஆண்டு களில் ஐந்து கரிஜைட் கிளர்ச்சிகள் நடந்தன என்று காமில் பின் ஆதிர், தபரி முதலானவர்கள் தெரிவிக்கிறார்கள். இவற்றில் சுமார் 200 பேர் கலந்துகொண்டார்கள். முஆவியா கலீஃபா வாக இருந்த காலத்தில் (661-680) 30 முதல் 500 பேர்வரை பங் கேற்ற பதினைந்து கிளர்ச்சிகள் நடைபெற்றன.[5] இவ்வாறாக கரிஜைட்டு கள் இஸ்லாமின் ஆரம்பகால எளிமையை மீண்டும் கொண்டு வருவதற்கு வெறியுணர்வுடன் போராடிய மிகத் தீவிரப் பிரிவாகச் செயல்பட்டார்கள்.

கரிஜைட்டுகளிலேயே அதிதீவிரவாதிகளைக்கொண்ட சில உட்பிரிவுகள், தங்கள் கருத்தை ஏற்காத மற்ற முஸ்லிம்கள் அனை வரையும் கொன்றுவிட வேண்டும் என்று கருதினார்கள். அவ்வப் போது இந்தக் கரிஜைட்டுகள் அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து மிகவும் தொல்லை கொடுத்தார்கள். அவர்கள் தலைமையில் நடந்த பல கிளர்ச்சிகள் அரசாங்கத்தை உலுக்கிவிட்டன. அவர்களை விரட்டியடித்தாலும் மீண்டும் அணி சேர்ந்துகொண்டு கிளர்ச்சி யைத் தொடர்ந்து நடத்தினார்கள். அவர்கள் மிக எளிமையான வாழ்க்கை நடத்தி, குரானின் கட்டளைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றினார்கள். அவர்கள் லட்சியவாதிகளாக இருந்தார்கள். சரித்திர ரீதியாகப் பார்த்தால் இஸ்லாமைப் பற்றிய அவர்களின் கருத்து "உட்டோப்பிய" லட்சியக் கற்பனையாக இருந்தது. சில கரிஜைட்டுகள் கலீஃபாவே தேவையில்லை என்றும் குரானே

4. Watt, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 99.
5. Tabari, I 3310, 3339, 3380, II 10, 15 முதல், 20 முதல் 27, 29, 35 முதல், 40-59, 61, 64, 67, 76, 83, 90 முதல். Ibn al-Athīr, III 205-7, 209-17, 225 முதல், 229, 244, 254-6. *Islam and the Intergration of Society* புத்தகத்தில் Watt மேற்கோள்.

www.padippakam.com



தெய்வீக வழிகாட்டியாக இருப்பது போதும் என்றும் கருதினார்கள். அல்-ஷஹ்ரெஸ்தானி, பக்தாதி, இபின் ஹஜம் ஆகியோர் தங்கள் புத்தகங்களில் கரிஜைட்டுகளின் வாழ்க்கை பற்றியும் அவர்கள் நடத்திய கிளர்ச்சிகள் பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார்கள்.[6]

கரிஜைட் பிரசாரம், அதிருப்தி கொண்டிருந்த அரேபியரல்லாத முஸ்லிம்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. கரிஜைட்களின் 'இபாதியா' (Ibādiyah) என்ற உட்பிரிவு (அப்த் அல்லாஹ்பின் இபாத் என்பவர் இதன் தலைவர்) உம்மானில் நிறுவப்பட்டு அங்கிருந்து ஸான்ஸிபாருக்குப் பரவியது. ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் அது வடஆப்பிரிக்காவுக்கு, குறிப்பாக, பெர்பெர் மக்களிடையே பரவியது. கொந்தளிப்பான இயல்பு கொண்ட இந்த மக்கள் எந்த அதிகாரத்துக்கும் எளிதில் தலைவணங்கமாட்டார்கள். அரசை எதிர்க்கும் எந்தக் கிளர்ச்சி இயக்கத்துக்கும் இந்த மக்களிடையே ஆதரவு கிடைக்கும். கரிஜைட்டுகளுக்கு எதிரான சில ஷீயா பிரிவுகளுக்கும் பெர்பெர்கள் ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வடஆப்பிரிக்காவில் தங்கள் பரம்பரையின் ஆட்சியை அமைக்க முடிந்தது. பெர்பெர் மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டிருந்த அதிருப்தியை கரிஜைட்டுகளும் ஷீயாக்களும் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். இபாதியா பிரிவினர் உம்மானைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு பல ஆண்டுகள் அங்கிருந்து செயல்பட்டார்கள். உமய்யதுகளும் அப்பாஸிடுகளும் அவர்களுடைய கிளர்ச்சிகள் பலவற்றைச் சந்திக்க வேண்டியிருந்தது. பெர்பெர் மக்கள் பற்றி வரலாற்றுமேதை இபின் கல்தூன் (Ibn Khaldūn) இவ்வாறு எழுதுகிறார்: "தொடக்க காலத்திலிருந்து இதுவரையும் என்ன நடந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்த நாடுகளில் வசிக்கும் மக்கள் பெர்பெர் இனக்குழுக்களும் கூட்டங்களும் ஆவார்கள். அவர்கள் மீதும், (மக்ரிபில்) ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் மீதும் முதலாவது (முஸ்லிம்) வெற்றிகளால் பலன் ஏதும் ஏற்படவில்லை. அவர்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்தார்கள். ஒவ்வொரு முறையாகத் தொடர்ந்து மதத்தைக் கைவிட்டு வந்தார்கள். முஸ்லிம்கள் அவர்களில் பலரைக் கொலை செய்தார்கள். அவர்களிடையே முஸ்லிம் மதம் நிலைகொண்ட பிறகும் அவர்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்துகொண்டும் அரசிலிருந்து தொடர்ந்து பிரிந்து சென்றுகொண்டுமிருந்தார்கள். பலமுறை அவர்கள் மாறுபட்ட மதக்கோட்பாடுகளைப் பின்பற்றினார்கள்.

6. பார்க்க: *Hādir al-'Alamal Islami:* அரபியில் மொழிபெயர்ப்பு: 'Ijāl Nuwayhis Vol.II (Cairo, 1343 A.H.) பக்கம் 351-66. அமீர் ஷகேப் அர்ஸ்லான் தந்துள்ள பின் இணைப்பில் கரிஜைட்டுகள் பற்றிய விரிவான குறிப்பு காணப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகவும் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவும் இருந்தார்கள். மேற்கில் உள்ள பெர்பெர் இனக்குழுக்கள் எண்ணற்றவை. அந்த மக்கள் அனைவரும் பல்வேறு குழுக்களையும் குடும்பங்களையும் சேர்ந்த பதூயின்கள். ஒரு இனக்குழு அழிக்கப்பட்டால் அதன் இடத்தில் வேறொன்று வந்துவிடுகிறது. முந்திய இனக்குழுவைப் போலவே இதுவும் அடங்காததாகவும் கிளர்ச்சி செய்வதாகவும் உள்ளது. எனவே, இஃப்ரிக்கியாவிலும் மக்ரிபிலும் தங்கள் வம்ச பரம்பரையை நிறுவுவதற்கு அரேபியர்களுக்கு நீண்டகாலம் பிடித்தது."[7]

இஸ்லாமில் மற்றொரு முரண் இயக்கமான ஷீயா இயக்கத்தைப் பற்றி இப்போது பார்ப்போம். ஷீயாக்கள் அலீயின் தரப்பை ஆதரிப்பவர்கள். முகமதுவுக்குப் பின் அவருடைய இடத்துக்கு அலீதான் வந்திருக்க வேண்டும் என்பது இவர்கள் கருத்து. எனவே அவருக்கு முந்திய மூன்று கலீஃபாக்களும் அந்தப் பதவியைச் சட்ட விரோதமாகக் கைப்பற்றிக்கொண்டவர்கள் என்று இவர்கள் கண்டிக்கிறார்கள். இவர்களுடைய வலுவான கேந்திரமாக இருந்தது கூஃபா. "மவாலீ" (mawālī) என்று அழைக்கப்பட்ட அரேபியரல்லாத கைவினைஞர்களும் தாழ்வாகக் கருதப்பட்ட மற்ற பிரிவுகளைச் சேர்ந்த மக்களுமே இந்த இயக்கத்தின் முக்கிய ஆதரவாளர்கள். ஆனால் இதன் தலைமை வழக்கம் போல ஹாஷிமைட் (Hāshimite) அரேபியர்களின் கையில் இருந்தது. டாயின்பீ வார்த்தைகளின்படி கரிஜைட்டுகள் இஸ்லாமில் உள்ளே அமைந்த தொழிலாளர்கள் என்றால் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வெளியே அமைந்த தொழிலாளர்கள் என்று கூறலாம். கரிஜைட் இயக்கத்தின் முக்கிய ஆதரவாளர்களான நாடோடி அரேபியர்கள் ஆரம்பகால நிலையைச் சேர்ந்த ஜனநாயக சமூக அமைப்பில் வாழ்ந்தவர்கள் ஆதலால் அவர்கள் அரசு அதிகாரத்தை விரும்பவில்லை. எனவே 'லா இமாரா', 'அரசு வேண்டாம்' என்பது இந்த இயக்கத்தின் முழக்கமாயிருந்தது. ஷீயா இயக்கத்தின் ஆதரவாளர்கள் பாரசீகத்திலிருந்து வந்து கூஃபாவிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் குடியமர்ந்தவர்கள். வம்ச பரம்பரையான "இமாமா" (imāma), அதாவது மதத்துக்கும் நாட்டின் ஆட்சிக்கும் தலைமை என்பது இந்த இயக்கத்தின் மையக்கருத்தாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பாரசீகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்தே பரம்பரை ஆட்சி இருந்தது என்பதை நாம் அறிவோம். அதன் மக்கள் பல நூற்றாண்டுக் காலமாக அதற்குப் பழகிப்போயிருந்தார்கள். எனவே அவர்களிடையே வெற்றிபெற விரும்பும் எந்த இயக்கமும் அவர்களுடைய தேசிய மரபுகளை ஏற்றுக்கொள்வதாக இருக்க வேண்டும். ஷீயா இயக்கத்தின்

7. Ibn Khaldūn, *Muqaddimah*, பக்கம் 130-31.

www.padippakam.com



தலைவர்கள் அதைத்தான் செய்தார்கள். கூஃபாவிலும் அதைச் சுற்றிலுமுள்ள மற்ற இடங்களிலும் இருந்த அரேபியரல்லாத அதிருப்தியாளர்களை மக்களின் மனத்தைக் கவரும் சக்தி கொண்ட அலீயின் பெயரால் ஓரணியில் திரட்டி, அவருடைய சந்ததியினருக்கு பரம்பரையாக ஆட்சி உரிமை அளிக்க வேண்டும் என்ற கொள்கையை உருவாக்கினார்கள்.

அலீயும் அவரது குடும்பத்தினரும் ஷீயா இயக்கத்தின் மைய அச்சாக ஆனதற்குக் காரணம் என்ன? சரியாகப் புரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான கேள்வி இது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. உத்மான், முஆவியா போன்ற ·உமய்யதுகளுடன் ஒப்பிடும் போது அலீ அரேபியர்களுக்கு ஆதரவாக அதிகப் பாரபட்சம் காட்டவில்லை. விசுவாசிகள் அனைவரும் இனம், நாடு என்ற வேறுபாடுகள் இல்லாமல் சரிசமமானவர்கள் என்ற இஸ்லாமியக் கொள்கையை அவர் கண்டிப்பாகப் பின்பற்றினார். அவர் எந்த வகையிலும்—அரசாங்க நியமனங்கள், போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை வினியோகித்தல், அரசுக் கருவூலத்திலிருந்து பணம் கொடுத்தல் போன்ற எதிலும்—அரேபியர்களுக்கு ஆதரவாகப் பாரபட்சம் காட்டவில்லை. அடிமைகளிடம் கூட அவர் நடந்து கொண்டமுறை எல்லோருக்கும் உதாரணமாக விளங்கத்தக்கதாக இருந்தது. ஆனால் உமய்யதுகள், குறிப்பாக தங்கள் குலக்குழுவின் அதிகாரத்தையும், பொதுவாக அரேபியர்களின் அதிகாரத்தையும் நிலைநிறுத்த விரும்பினார்கள். மேலும், உமய்யத் குலக்குழுவின் தலைவரான முஆவியா, அலீக்கு எல்லாவகையிலும் தொல்லை கொடுத்தார். அலீயின் சமத்துவக் கொள்கையை விரும்பாதவர்களான குரைஷ் இனக்குழுவைச் சேர்ந்த தல்ஹா, ஜுபைர் போன்ற பணக்காரர்கள் இதில் முஆவியாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள். இதற்கு ஒரு உதாரணத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். ஒரு நாள் இரண்டு பெண்கள் அலீயிடம் வந்து பொருளுதவி கோரினார்கள். அவர் தமது பணியாளரிடம் அவர்களுக்கு உணவு தானியங்களும் உடைகளும் வாங்கிக்கொடுத்து சிறிது பணமும் கொடுக்கச் சொன்னார். ஆனால் அந்த இருவரில் ஒரு பெண் தான் ஒரு அரேபியராகவும் மற்றப்பெண் அரேபியரல்லாதவராகவும் இருப்பதால் தனக்குச் சிறிது அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அலீ தமது கையில் சிறிது மண்ணை எடுத்து அதைப் பார்த்துக்கொண்டு இவ்வாறு கூறினார்: “கடவுள், பயபக்தியையும் தமக்குக் கீழ்ப்படிதலையும் தவிர வேறு எந்தக் காரணத்துக்காகவும் யாருக்கும் சலுகை கொடுக்கிறாரா என்று நான் அறியேன்.”[8] மேலும் அலீ தம்முடைய மாகாண ஆளுநர்களிடம்

8. Dr. Tāha Husayn, Al-Fitnat at-Kubrā, Vol.II, பக்கம் 288.

www.padippakam.com



மிகவும் கண்டிப்பாக நடந்துகொண்டார். யாரேனும் நடத்தையில் சற்றுத் தளர்வு காட்டினாலும் அவர் உடனடியாகத் தண்டிக்கப் பட்டார். ஆளுநர்கள் மீது புகார்கள் கூறப்பட்டால் அவர் அவற்றைப் பற்றித் தனிப்பட்ட விசாரணை நடத்துவார். குற்றம் நிரூபிக்கப் பட்டால் அவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதோடு சிறைக்குக் கூட அனுப்புவார். கடிதங்கள் மூலம் அவர்களது தவறு களைக் கண்டிப்பதுடன், பயபக்தியுள்ள முஸ்லிம் என்று கூறப் படுவதற்குத் தகுந்தபடி நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். பஸ்ராவின் துணை ஆளுநர் ஜியாதுக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்திலிருந்து ஒரு மேற்கோள் தருகிறேன். ஜியாத் வசூலித்திருந்த வரிப்பணத்தை வாங்கி வருவ தற்கு அலீ ஒரு அடிமையை அனுப்பியிருந்தார். அவரிடம் ஜியாத் தவறான முறையில் நடந்துகொண்டதைக் கண்டித்து எழுதிய கடிதத்தில் அலீ இவ்வாறு கூறுகிறார்: "நீர் தம்மிடம் தவறான முறையில் நடந்துகொண்டதாக ஸாத் (அலீ அனுப்பியிருந்த அடிமை) என் னிடம் கூறினார். அவரைத் திட்டியதாகவும் ஆணவத்துடன் அவரது நெற்றியில் அடித்ததாகவும் கூறினார். இறைவனுக்கே எல்லாப் பெருமையும் என்று இறைத்தூதர் கூறியிருக்கிறார். மனிதன் ஆணவத்துடன் நடப்பது அவருக்குச் சினமளிக்கிறது. உமது உணவு மேஜையில் பலவகையான சுவைமிக்க உணவுப் பொருள்கள் வைக்கப்படுவதாகவும நீர் தினமும் எண்ணெய் பயன்படுத்துவதாக வும் கூறினார். சில நாட்கள் நீர் பட்டினி இருந்து உமது பொருள் களில் சிலவற்றை தர்மத்துக்காகச் செலவிட்டால் உமக்கு என்ன கெட்டுப்போகும்?...... ஏழையான உமது அண்டை அயலாரும், பிச்சைக்காரர்களும், அநாதைகளும், விதவைகளும் கவனிப்பாரின்றி யிருக்க நீர் மட்டும் சுகபோகங்களில் புரள விரும்புகிறீரா?"[9]

சமூகத்தின் பலவீனப் பிரிவு மக்கள், குறிப்பாக, அரேபியரல்லா தவர்கள் இதையெல்லாம் கவனிக்காமல் இருந்திருக்கமாட்டார்கள். மேலும், முஆவியா இராக்கில் இறுதியாகத் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திய போது உமய்யத் பிரபு வர்க்கத்தினர் அடக்கு முறைச் செயல்களில் ஈடுபட்டு இந்தப் பிரிவு மக்களைக் கொடுமை யாக நடத்தினார்கள். அலீக்கும் உமய்யதுகளுக்குமிடையில் இருந்த இந்தப் பெரிய வேறுபாட்டை இந்த மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருப்பார்கள். மேலும் அலீ அரசியல் படுகொலைக்கு உள்ளாகி இறந்தார். உமய்யதுகள் தங்கள் போட்டியாளரை ஒழித் துக்கட்டுவதற்குச் செய்த சதிதான் இந்தக் கொலை என்று மக்களின் சில பிரிவினராவது கருதினார்கள். இவையெல்லாம் அலீயின் பெருமையை மேலும் உயர்த்தின. இஸ்லாமின் வெளியிலமைந்த

9. மேற்படி, பக்கம் 296-7.

www.padippakam.com



தொழிலாளர்கள் அநியாயமான அடக்குமுறை ஆட்சியை எதிர்ப்பதற்கு அலீயின் கொடியின் கீழ் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்த முனைந்தார்கள். எனவே, உமய்யதுகளுக்கு எதிராகவும், பின்னர் அப்பாஸிட்களுக்கு எதிராகவும் நடந்த பெரும்பாலான கிளர்ச்சிகள் கரிஜைட்டுகளால் அல்லது ஷீயாக்களால் தலைமையேற்று நடத்தப்பட்டன எனக் காண்கிறோம். கர்பலாவில், அலீயின் முதல் மனைவி ஃபாத்திமாவின் இரண்டாவது புதல்வர் ஹுஸைன் உயிர்த்தியாகம் செய்த துயர நிகழ்ச்சி ஷீயா இயக்கத்துக்கு மைய நிகழ்ச்சியாக அமைந்தது. கர்பலாவில் நடந்த துயர நிகழ்ச்சி பற்றி இங்கே சிறிது விளக்குவது பொருத்தமாகும். ஹஸன் தமது கலீஃபா பதவியை முஆவியாவிடம் விட்டுக்கொடுத்த போது ஏற்பட்ட உடன்பாட்டின் ஒரு நிபந்தனை, முஆவியா தமது மரணத்துக்குப் பின் அடுத்த கலீஃபாவைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையை முஸ்லிம்களிடம் விட்டுவிட வேண்டும், அவர் தமக்கு வாரிசாக யாரையும் நியமிக்கக்கூடாது என்பதாகும். முஆவியா இந்த நிபந்தனையை மீறி, தமது மரணத்துக்கு முன், நியாயமானவையும் நியாயமற்றவையுமான எல்லா வழிகளையும் பின்பற்றி, தமக்குப் பின் தமது மகன் யஸீதை வாரிசாக நியமிக்க வழிசெய்துவிட்டார். தீர்க்கதரிசியின் தோழர்கள் சிலர் உள்ளிட்ட முக்கிய முஸ்லிம் பிரமுகர்கள் பலர் இதனால் மனக்கொதிப்பு அடைந்தார்கள். ஆயினும் முஆவியா பணத்தையும் பலத்தையும் பயன்படுத்தி இவர்களின் எதிர்ப்பை விலக்கினார். சிலருக்கு லஞ்சம் கொடுத்து தமது செயலுக்கு சம்மதம் பெற்றார். மற்றும் சிலரை அடக்குமுறையால் மிரட்டி அவர்கள் மௌனமாயிருக்கச் செய்தார். ஹஸனுக்கு முஆவியா விஷமிட்டதாகக் கூறப்படுகிறது. ஹுஸைனையும், அப்த் அல்லாஹ் பின் ஜுபைரையும் சமாளிப்பதில் சாதுரியத்துடன் யஸீதுக்கு அவர் யோசனை கூறினார். (இரண்டாமவர் தாமே கலீஃபா ஆக ஆசைகொண்டிருந்தார்). யஸீத் தமது தந்தையின் யோசனையை ஏற்று நடக்கவில்லை என்று தோன்றுகிறது.

யஸீத் கலீஃபா ஆன போது இளைஞராகவும் விரிந்து பரந்த பேரரசின் நிர்வாகத்தை நடத்துவதில் அனுபவம் இல்லாதவராகவும் இருந்தார். முஆவியா தேர்ந்த அரசியல்வாதியாக இருந்ததால் அவசியமான போது மட்டும் அடக்குமுறையைப் பின்பற்றினார். பணத்தைக் கொடுத்தோ, சூழ்ச்சிகள் மூலமாகவோ தமது எதிரியை வெல்ல முடியாத போது மட்டுமே அடக்குமுறையைக் கைக்கொண்டார். முஆவியா தமது பேரரசை உருவாக்குவதற்கு இடையறாது முயற்சிசெய்ய வேண்டியிருந்தது. யஸீதுக்கு அது தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கையில் கொடுக்கப்பட்டது. மேலும் அவர் இளமையிலிருந்தே தம்மைச் சுற்றிலும் செல்வங்களையே பார்த்துப் பழகி, சுகபோகத்தில் புரண்டவர். அவர்

www.padippakam.com



பெரும்பாலான நேரத்தை மது, மாதர் என்ற சூழ்நிலையில் செல விட்டு பெரிய குடிகாரர் என்று பெயரெடுத்தவர். இயல்பாகவே மன முதிர்ச்சியும் தமது எதிரிகளைச் சமாளிப்பதில் விவேகமும் இல்லாதவ ராக இருந்ததால் எல்லோரும் தமக்கு உடனே கீழ்ப்படிய வேண்டும் என்றார். அவர் மதீனாவின் ஆளுநர் வலீத் பின் உத்பாவுக்குக் கடிதம் எழுதி, ஹுஸைனிடமிருந்தும், அப்த் அல்லாஹ் பின் ஜுபைர், இன்னும் மற்றவர்களிடமிருந்தும் விசுவாசப் பிரமாணம் (பயா-bay'ah) பெறும்படிக் கூறினார். அவர்கள் இதற்கு மறுத்து மதீனா விலிருந்து மக்காவுக்குச் சென்றுவிட்டார்கள். ஹுஸைன் மதீனா வுக்குப் பிரியாவிடை கூறிவிட்டுத் தமது குடும்பத்துடன் மக்காவுக் குச் சென்றுவிட்டார். மதீனாவில் தொடர்ந்து தங்கியிருப்பதன் விளைவை அவர் நன்றாக அறிந்திருந்தார். இதனிடையே கூஃபாவில் உள்ள அவரது ஆதரவாளர்கள் பலரிடமிருந்து அவரை அங்கே வந்து யஸீதுக்கு எதிராகத் தங்களுக்குத் தலைமை ஏற்கும்படி அழைப்புவிடுத்துக் கடிதங்கள் வந்தன. உமய்யது கொடுங்கோல் ஆட்சியும் சுரண்டலும் அதிகரித்து வந்தன. உமய்யத் அரசின் அரசியல் தன்மையில் தலைகீழான மாற்றம் ஏற்பட்டிருந்தது. யஸீத், அரேபிய தீபகற்பத்தில் புயலாக வீசிய இஸ்லாமியப் புரட்சி யில் பங்கு பெறாத பிந்திய தலைமுறையைச் சேர்ந்தவர் என்பது மட்டுமின்றி அதைப் பற்றித் தெரிந்துகொள்வதில் கூட அக்கறை இல்லாதவர். அவர் அந்நிய நாட்டில் (ஸிரியாவில்) வளர்ந்தவர். அங்கே ரோமானிய ஸீஸர்களின் மரபுகள் வேரூன்றியிருந்தன. இவ்வாறாக சுகபோகத்தில் நாட்டங்கொண்ட சிறுபிள்ளை நாடாளும் தலைவராகிவிட்டார். அலீயின் கண்டிப்பான நெறி முறை வழுவாத நடத்தை கூஃபா மக்களின் மனத்தில் இன்னமும் பசுமையாக இருந்தது. இப்போது அவர்கள் அவருடைய ஆட்சி வர வேண்டும் என்று அடங்காத ஆவல் கொண்டிருந்தார்கள். ஹஸன் காலமாகிவிட்டதால் ஹுஸைன் இப்போது அலீயின் குடும்பத்துக்குத் தலைவராகியிருந்தார். மேலும் அவர் யஸீதை முஸ்லிம்களின் சட்டபூர்வமான கலீஃபாவாக ஏற்க உறுதியாக மறுத்து வந்தார். எனவே கூஃபா மக்கள், யஸீதுக்கெதிரான தங்கள் போராட்டத்துக்கு அவர் வந்து தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். அப்த் அல்லாஹ் பின் ஜுபைரும் கூட யஸீதை கலீஃபாவாக ஏற்க மறுத்து மதீனாவிலிருந்து மக்கா வுக்குச் சென்றுவிட்டாலும், கூஃபாவிலிருந்து யாரும் அவரைத் தலைமை ஏறகுமாறு அழைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவர் பெரிய ஆசைகள் கொண்டவர் என்பதும், அவர் ஆட்சி பீடத்தில் அமர்ந்தால் இரக்கமற்றவராகச் செயல்படுவார் என்ப தும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் ஹுஸைன், தமது தந்தையைப் போலவே கொள்கை வழிநிற்பவர் என்பதும், அவர்

படிப்பகம்

www.padippakam.com



கலீஃபா ஆனால் இஸ்லாமிய ஆட்சி மீண்டும் மலரும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

கூஃபா மக்கள் ஹுஸைனுக்கு எண்ணற்ற கடிதங்கள் அனுப்பினார்கள். ஆனால் அவர் நிலைமையை நன்கு உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பி தமது சொந்த தூதராக முஸ்லிம் பின் அக்கீல் என்பவரை அங்கே அனுப்பி வைத்தார். கூஃபா மக்கள் முஸ்லிமைப் பேரன்புடன் வரவேற்று ஹுஸைனுக்குத் தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்து அவருடைய ஆதரவாளர்களானார்கள். முஸ்லிம் இதை ஹுஸைனுக்குத் தெரிவித்தார். ஹுஸைன் மக்காவில் தங்கியிருப்பதும் பத்திரமானதாயில்லை. யஸீதின் ஆட்கள் அவரைச் சுற்றிலும் நடமாடி வந்தார்கள். எனவே முஸ்லிமிடமிருந்து கடிதம் வந்ததும் ஹுஸைன் மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவரது நன்மையை விரும்பிய பலர் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று ஆலோசனை கூறினார்கள். ஆனால் ஹுஸைன் ஒரே முடிவாகத் தமது குடும்பத்தையும் உடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றார். ஒருவேளை தாம் மக்காவிலேயே இருந்தால் தம்மையும் தமது குடும்பத்தையும் யஸீத் உயிருடன் விட்டுவைக்க மாட்டார் என்பதை ஹுஸைன் உணர்ந்திருக்கக்கூடும். கூஃபா மக்கள் தம்மை ஆதரித்து நின்றால் தமக்குப் பத்திரமான இடம் கிடைத்து விடும் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆனால் நடந்தது வேறாயிருந்தது. கூஃபாவில் கிளர்ச்சிச் சப்தங்கள் கேட்பதை அறிந்த யஸீத் தமது நம்பிக்கைக்குரிய ஆளுநர் உபைத் அல்லாஹ் பின் ஜியாதை அங்கு நிலைமையைக் கட்டுப்படுத்துமாறு அனுப்பி வைத்தார். உபைத் அல்லாஹ் பழிபாவத்துக்கு அஞ்சாத கொடுமையான ஆட்சியாளர். அவர் கூஃபா மக்களை அடக்குமுறையால் அஞ்சவைத்துப் பணியச் செய்தார். ஹுஸைனின் தூதராக வந்திருந்த முஸ்லிம் பின் அக்கீலைக் கொன்றுவிட்டார். ஹுஸைன் கூஃபாவுக்குச் சென்றுகொண்டிருந்த போது அவருக்கு இந்தச் செய்தி கிடைத்தது. ஆனால் அவர் திருப்பிச் செல்ல முடியாமல் காலம் கடந்துவிட்டது. அவர் கூஃபாவுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக உபைத் அல்லாஹ் ஒரு படை அணியையும் அனுப்பி வைத்திருந்தார். கூஃபா மக்கள் அழைத்ததால்தான் தாம் வந்ததாக ஹுஸைன் கூறியது யாருடைய செவியிலும் ஏறவில்லை. அடுத்த இரண்டு நாட்களில் மேலும் துருப்புகள் வந்து சேர்ந்து அவரையும் அவருடன் இருந்தவர்களையும் சுற்றி முற்றுகை போடப்பட்டது. ஹுஸைனுடன், அவரிடம் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட ஒரு சிறு குழுவினர்—மொத்தம் எழுபத்திரண்டுபேர்—இருந்தார்கள். அவர்களில் பலர் அவரது உறவினர்கள். ஆயினும் ஹுஸைன், தமது ஆட்கள் மிகக் குறைவாகவும் எதிரியின் ஆட்கள் மிகப் பெரும் எண்ணிக்கையிலும் இருந்த போதிலும், அடங்கிச் சரணடைந்து

www.padippakam.com



விடுவதைவிடப் போரிட்டு உயிர் துறப்பதையே விரும்பினார். அவர் யஸீதுடன் பேச்சு நடத்தத் தயாராயிருந்தார். ஆனால் அவருடைய கையாளான உபைத் அல்லாஹ் பின் ஜியாதிடம் தமது விசுவாசத்தை உறுதியளிக்க மறுத்தார். ஹுஸைனும் அவரது ஆதரவாளர்கள் ஒருபுறமும், இபின் ஜியாதின் படைகள் மற்றொரு புறமுமாக இருதரப்புக்குமிடையே சண்டை நடந்தது. ஹிஜிரி 61-ஆம் ஆண்டு முஹரம் மாதம் 10-ஆம் தேதி (கி.பி. 680 அக்டோபர் 10-ஆம் தேதி) அது நடந்தது. அந்தச் சண்டையில் ஹுஸைனும் அவரது ஆதரவாளர்களும் உயிரிழந்தார்கள்.

சாதாரணமாகப் பார்த்தால் இது ஒரு முக்கியமில்லாத நிகழ்ச்சியாகவே — பலம்மிக்க ஒரு ராணுவத்துக்கும் ஒரு சிறிய கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையே நடந்த மோதல் என்றே— தோன்றும். ஆனால் இதில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மிகவும் ஆழமானவை. இந்த நிகழ்ச்சி இஸ்லாமின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இதை ஆராய்ந்து பார்ப்பது பின்னாட்களில் நடந்த நிகழ்ச்சிகளின் பின்னணியில் முக்கியமாகிறது. பேராசிரியர் நிக்கல்ஸன் குறிப்பிடுகிறார்: "கர்பலா நிகழ்ச்சி நடந்த நாளை நினைத்து வருந்துவதற்கு உமய்யதுகளுக்கு நிறையக் காரணம் இருந்தது. ஷீயா பிரிவுக்கு ஒரு ஒற்றுமை கோஷத்தை அது உண்டாக்கிக் கொடுத்தது. 'ஹுஸைனுக்குப் பழிவாங்குவோம்' என்ற அந்த கோஷத்தை எல்லாப் பக்கங்களிலும் உள்ள மக்கள், எடுத்துக்கொண்டார்கள். குறிப்பாக, அரேபியரின் தளையிலிருந்து விடுதலைபெற ஏங்கிக் கொண்டிருந்த பாரசீகத்தைச் சேர்ந்த 'மவாலீ' என்ற கைவினைஞர்கள் அதை எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் ஷீயா பிரிவுடன் இணைந்தது — அடுத்த சில ஆண்டுகளில் இவர்கள் ஆயிரக்கணக்கில் முக்தாரின் (Mukhtār) கொடியின் கீழ் சென்று திரண்டார்கள் — மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்..."[10] உமய்யதுகள், ஏற்கெனவே குறிப்பிட்டது போல சட்டபூர்வமான கலீஃபாவிடமிருந்து ஆட்சியை முறைகேடாகக் கைப்பற்றிக் கொண்டார்கள். ('சட்டபூர்வமான' என்று இங்கே குறிப்பிடுவது வரலாற்று ரீதியான அர்த்தத்தில் அல்ல; முகமதுவுக்குப் பிந்திய காலத்தில் ஒருவரைக் கலீஃபாவாகப் பதவியில் அமர்த்துவதற்கு முன் சில முக்கிய முஸ்லிம் பிரமுகர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், அதை பரம்பரைப் பதவியாகக் கருதக்கூடாது என்றும் இருந்த மரபே இங்கு குறிப்பிடப்படுகிறது). மேலும் உமய்யதுகள் கலீஃபா பதவியை மத ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் முக்கியத்துவம் உள்ளதாகக் கருதவில்லை. அதை முற்றிலும் அரசியல் கோணத்திலேயே அவர்கள் நோக்கினார்கள். இதனால்

10. R.A. Nicholson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 198.

படிப்பகம்

www.padippakam.com



அவர்களுக்கு, இஸ்லாம் தங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த சில கடமைப் பொறுப்புகளிலிருந்து விடுதலை கிடைத்தது. விசுவாசிகள் அனைவரும், இனம், நாடு என்ற வேறுபாடுகள் இல்லாமல் சரிசமமானவர்கள் என்பது போன்ற கருத்துக்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லை. ஹுஸைன், யஸீதுக்குச் சவால் விட்டதற்குக் காரணம் தாம் கலீஃபா ஆக வேண்டும் என்பதல்ல. சில கொள்கைகளை நிலை நிறுத்துவதே காரணமாயிருந்தது. (பதவியில் உள்ள ஆட்சியாளரை எதிர்த்துப் போராடச் செல்லும் கிளர்ச்சியாளர், தமது குடும்பத்துடனும் சிறு குழந்தைகளுடனும் எதிரியின் கைப்பிடிக்குள் தாமே போய் விழமாட்டார்). பதவி நோக்கம் முற்றிலுமாக இல்லாமல் போயிராது என்றாலும் கொள்கையே முக்கிய காரணமாயிருந்தது. மிகவும் நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்த போதும் கூட உபைத் அல்லாஹ் பின் ஜியாத் போன்ற கொடிய ஆளுநருக்கு முன் பணிய மறுத்து எதிர்த்து நின்றதால் ஹுஸைனின் புகழுக்கு மேலும் சிறப்புச் சேர்ந்தது. இதனால் இயல்பாகவே அவர் உமய்யத் வம்சத்தின் எதிரிகள் ஒன்றுசேரும் கேந்திரமாக உருவானார்.

ஹுஸைன் தமது எதிரியின் கையில் தாமே போய் விழுந்தார் என்றும், போர்த்தந்திரத்தில் தேர்ச்சி இல்லாதவராகச் செயல்பட்டார் என்றும் நியாயமாக வாதிக்க முடியும். இந்த வாதத்தில் பெருமளவு உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. தமது எதிரி என்ன நடவடிக்கை எடுக்கக்கூடும் என்பதை முன்னதாகவே அவர் எதிர்பார்க்கத் தவறியிருக்கலாம். அதனால் அவர் எதிரி விரித்த வலையில் சென்று சிக்கிக்கொண்டார். ஆனால் அவர் தமது தந்தை அலீயைப் போலவே கொள்கையற்ற அரசியலில் அக்கறை கொள்ளவில்லை என்றும் எனவே போர்த்தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் திட்டமிடுவதில் கவனம் செலுத்தவில்லை என்றும் கூட வாதிக்க முடியும். அவர் கொள்கைகளைப் பெரிதாக மதித்தார். இங்கே அவரது குணத்துக்கும் அப்த் அல்லாஹ் பின் ஜுபைரின் குணத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடலாம். இபின் ஜுபைர் கலீஃபா பதவியை அடைய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்ததால் அவர் அவசரப்பட்டுச் செயல்படாமல் தமது நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, எதிரியைச் சந்திப்பதற்குத் தமக்குச் சாதகமான காலத்துக்குக் காத்திருந்தார். ஆயினும் அவர் இறுதியில் தோல்வியே அடைந்தார் என்பது வேறு விஷயம். அவர் அதிககாலம் தாக்குப்பிடிக்க முடிந்தது என்றாலும், சில முக்கியமான இடங்களை பிடிக்க முடிந்தது என்றாலும், இஸ்லாமிய உலகில் அவரால் நீடித்த விளைவு எதையும் ஏற்படுத்த முடியவில்லை. அவர் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே போராடியதுதான் இதற்குக் காரணம். ஆனால்

www.padippakam.com



ஹுஸைன் போர்த்தந்திரத்தில் தேர்ச்சி இல்லாதவராகவும் ஒரு நாள் கூட எதிரியைத் தாக்குப்பிடிக்க இயலாதவராகவும் இருந்த போதிலும், அவரது உயிர்த் தியாகம் உமய்யத் பேரரசையே உலுக்கி விட்டது. மேலும் ஷீயாக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற உறுதி கொண்டு முனைந்த போது மிகக் கவனமாக ரகசிய இயக்கங்களை உருவாக்கினார்கள். மாண்ட்காமரி வாட் எழுதுகிறார்: "ஷீயாக்களின் கிளர்ச்சிகள் பெரும்பாலும் கலீஃபாவின் ஆட்சிப் பகுதி முழுவதையும் அல்லது அதில் ஒரு கணிசமான பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான தீவிர முயற்சிகளேயாகும். இம்மாதிரியான முயற்சிகளைக் கவனமாகத் திட்டமிட்டுத்தான் செய்ய முடியும். எனவே ஷீயா இயக்கத்தில் 'தலைமறைவு' திட்டமிடுதல் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. இதற்குக் கூஃபா முக்கிய கேந்திரமாக இருந்தது. அங்கு 671-இல் உமய்யதுகளுக்கெதிராக ஒரு கிளர்ச்சி நடந்தது. 680-இல் அல்-ஹுஸைன் கலீஃபா பதவியைக் கைப்பற்ற முயற்சித்தார். இந்த முயற்சிக்குக் கூஃபா மக்கள் முதலில் ஊக்கமளித்தார்கள், ஆனால் இறுதியில் விலகிக்கொண்டார்கள். 684-இல் 'பாவத்துக்கு மனம் வருந்துவோர்' என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவினர் கிளர்ச்சி செய்து தோல்வியடைந்தார்கள். (இந்தக் குழுவில் நான்காயிரம் பேர் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது). இந்தக் கிளர்ச்சியில் மிஞ்சியிருந்தவர்களையும் மற்றும் பலரையும் சேர்த்து அல்-முக்தார் (al-Mukhtār) 685-ல் ஒரு ராணுவத்தை அமைத்து அதன் உதவியுடன் கூஃபாவையும் அதைச் சுற்றியுள்ள பகுதியையும் ஓராண்டுக்காலம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்."[11]

உமய்யத் பேரரசுக்கு முதன்முதலாகப் பெரிய சவாலாக வந்தது முக்தாரின் கிளர்ச்சியே. அது ஹுஸைனின் உயிர்த் தியாகத்தை அரசியல் நோக்கங்களுக்குத் திட்டமிட்டுப் பயன்படுத்தியது. அரேபியரல்லாத கைவினைஞர்களுக்கு ஹுஸைனிடம் இருந்த அனுதாபத்தை முக்தார் நன்கு பயன்படுத்திக்கொண்டார். அரேபியர்கள் அவர்களைத் தாழ்வாகக் கருதினார்கள். இதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி ஒன்றை காமில் பின் ஆதிர் குறிப்பிடுகிறார். முக்தாரின் எதிரிகள் அப்த் அர் ரெஹ்மான் அஜ்தீயிடம் சென்று அவரது உதவியைக் கோரினார். அப்போது அவர் முக்தாரை எதிர்த்து அவர்கள் போரிட வேண்டாம் என்று கூறினார். அதற்கு அவர் இவ்வாறு காரணம் கூறினார்: "அது உங்களிடையே பிளவை ஏற்படுத்தும். அவருடன் வீரமும் அஞ்சாநெஞ்சமும் கொண்ட உங்கள் குதிரைவீரர்களில் பலர் இருக்கிறார்கள். மேலும் உங்கள்

11. Watt, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 106.

www.padippakam.com



அடிமைகளும், உங்களைச் சார்ந்த கைவினைஞர்களும் அவர் பக்கம் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக இருக் கிறார்கள். உங்களைச் சார்ந்த கைவினைஞர்கள் உங்கள் எதிரியை விட உங்களை அதிகமாக வெறுக்கிறார்கள். அரேபியரும் அரேபிய ரல்லாதவர்களுமான இவர்களெல்லாம் உங்களை எதிர்த்து அரேபி யரின் வீரத்துடனும் அரேபியரல்லாதவர்களின் பகைமை வெறி யுடனும் போரிடுவார்கள்."[12] இவ்வாறாக அரேபியரல்லாதவர்கள், குறிப்பாக அடிமைகளும் கைவினைஞர்களும் முக்தாரின் ஆதர வாளர்களாக இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. முக்தார், இந்தக் கைவினைஞர்களுக்கு ஆதரவாக இருந்ததற்கான காரண மும் குறிப்பிடத்தக்கது. உமய்யத் அரசில் இருந்த வர்க்க அமைப் பில் அரேபியர்கள், குறிப்பாக, குரைஷ் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஆளும் வர்க்கமாக அமைந்திருந்தார்கள். எனவே அவர்கள் மொத்தத் தில் அரசுக்கெதிராகக் கிளர்ச்சியில் இறங்கமாட்டார்கள். (அரசின் நன்மைகள் கிடைக்கப்பெறாத ஒரு சில பிரிவினர், அப்த் அல்லாஹ் பின் ஜுபைர் போன்றவர்கள் இதற்கு விதிவிலக்கானவர்கள்). எனவே அரசுக்கெதிராகப் புரட்சியோ கிளர்ச்சியோ நடத்தும் இயக்கங்கள் அடிமைகளையும் கைவினைஞர்களையுமே நம்பி நடைபெற வேண்டும். இதை எடுத்துக்காட்டுவதற்கும் இபின் அதீர் கூறும் நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிடலாம். "... அரபு பிரபுக் கள் தங்கள் தலைவரான ஷபத் பின் ரபீயையிடம் கூறினார்கள்: 'முக்தார் நம்முடைய சம்மதம் இல்லாமல் நம்மீது ஆட்சிபுரிந்து வருகிறார். கைவினைஞர்களுக்காக அவர் கஷ்டங்களை ஏற்றதுடன் நம்முடைய பணத்தை அவர்களுக்கு வினியோகித்தார்.' ஷபத் இதைக் கேட்டுத் தாம் முக்தாரிடம் சென்று பேசுவதாகக் கூறி அவரிடம் சென்று எல்லாவற்றையும் விவரமாக எடுத்துக்கூறினார். அவர் கூறிய ஒவ்வொன்றையும் முக்தார் ஏற்றுக்கொண்டு அவர் களுடைய எல்லாக் கோரிக்கைகளுக்கும் சம்மதம் தெரிவித்தார். பின்னர் கைவினைஞர்கள் பற்றியும் அவர்களுக்குப் பணம் கொடுக்கப் பட்டது பற்றியும் கூறினார். அதற்கு பதிலளித்து முக்தார் கூறினார்: 'நான் உங்கள் கைவினைஞர்களை விட்டு விலகி கருவூலப் பணத்தை உங்களுக்கு மட்டுமே ஒதுக்கிவைத்தால், நீங்கள் என்னுடன் சேர்ந்து உமய்யதுகளுக்கும் இபின் ஜுபைருக்கும் எதிராகப் போரிடுவீர்களா? அதை நான் நம்பும் வகையில் கடவுள் பெயரால் சத்தியம் செய் வீர்களா?' அதற்கு ஷபத் தமது சகாக்களைக் கலந்தாலோசித்து அவர்கள் கருத்தைத் தெரிவிப்பதாகக் கூறிவிட்டுச் சென்றார். பின்பு அவர் திரும்பி வரவேயில்லை."[13] எனவே சமூகத்தில்

12. Kāmil b.Athir, *Tārikh*, *Vols. III&IV*. *உருது மொழிபெயர்ப்பு: மவுல்வி முகமது ஜமீலுர் ரஹ்மான் (ஜாமியா உத்மானியா, 1922), பக்கம் 381.*

13. *மேற்படி, பக்கம் 397.*

படிப்பகம்

www.padippakam.com



"இல்லாதவர்"களாயிருந்த அடிமைகளையும் கைவினைஞர்களையும் முக்தார் நம்பியிருக்க வேண்டிய காரணத்தை நாம் புரிந்து கொள்ளலாம். இவர்களின் பங்கு எவ்வளவு அதிகமாயிருந்தது என்பதை ஒரு உதாரணத்திலிருந்து ஊகிக்கலாம். முக்தார் தமது எதிரிக்கெதிராகப் போரிட அனுப்பிவைத்த ஒரு படையில் கைவினை ஞர்கள் இரண்டாயிரத்து முந்நூறு பேரும், அரேபியர்கள் முந் நூறு பேருமே இருந்தார்கள். ஆயினும் முக்தார் இறுதியாகத் தோல்வியடைந்து கொல்லப்பட்டார். ஷீயாக்கள் மிகவும் கொடுமை களுக்கு ஆளானார்கள். பலரது கைகளும் கால்களும் வெட்டப் பட்டதாகவும் குருடாக்கப்பட்டதாகவும் மரங்களில் தூக்கிலிடப் பட்டதாகவும் அதீர் கூறுகிறார். முக்தாரின் படையிலிருந்து பிடி பட்டவர்களிலும் கூட அரேபியர்களைக் கொல்லாமல், கைவினை ஞர்கள் மட்டும் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள்.[14]

முக்தாரின் தோல்வி கிளர்ச்சி இயக்கத்துக்குத் தாற்காலிக பின்னடைவாக இருந்தது. மதக்கொள்கைகளின் அடிப்படையில் அமைந்ததாகக் கருதப்பட்ட ஒரு அரசு, ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கும் ஒரு வர்க்கத்தினரின் அதிகாரத்துக்கும் கருவியாகி விட்டதைக் காண்கிறோம். இந்தக் காலத்துக்குள்ளாக அது பெரிய அதிகாரவர்க்க யந்திரமாகவும் தனது எதிர்ப்பாளர்களை வேட்டை யாடும் கட்டுக்காவல் அரசாகவும் உருமாறிவிட்டது. முகமதுவின் ஆயுட்காலத்தில் ராணுவம் கூட தாமாக முன்வந்து சேர்ந்தவர் களைக் கொண்டே அமைந்திருந்தது. அந்த ஆரம்பகட்டத்தில் எதிரிகளைத் திட்டமிட்டு அடக்கி ஒடுக்கும் செயல் காணப்பட வில்லை. ஆனால் முஆவியா அரசியல் அதிகாரத்தைக் கைப்பற் றும் நோக்கத்துடன் ஒரு அரசுக்குத் தேவையான அடக்குமுறை ஏற்பாடுகளை உருவாக்கத் தொடங்கினார். மேலும் அவர் ஸிரியா வின் ஆளுநராக இருந்ததால் பைஜாண்டியப் பேரரசின் முன்மாதிரியை பின்பற்றினார். வெளிநாடுகள் மீது படையெடுத்து வென்று அந்த நாடுகளும் மக்களும் இஸ்லாமிய அரசுடன் சேர்க்கப்பட்ட போது அரேபியர்கள் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு அடக்குமுறை வழிகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. மேலும் அப்போதைய வரலாற்று நிலைமையில், அரேபிய சமூகத்தில் மிச்சம் மீதியிருந்து இஸ்லாமிய முறையில் இணைத்துக்கொள்ளப் பட்ட ஜனநாயக அம்சங்கள் கூட பல்வேறு வகைப்பட்ட மக்களை உள்ளடக்கிய இஸ்லாமிய அரசில் வெற்றிகரமாகச் செயல்பட் டிருக்க முடியாது. வெவ்வேறு மக்களிடையே இஸ்லாமிய முறை வெற்றிகரமாகச் செயல்படுமென்று எதிர்பார்ப்பது லட்சிய நாட்டைக் கனவு காண்பதாகவே இருக்க முடியும். வாழ்க்கையின் கடுமையான

14. மேற்படி, பக்கம் 369.

www.padippakam.com



எதார்த்தங்களுக்கு முன் லட்சியங்கள் பலியிடப்பட்டன. இதிலிருந்து உருவாகி வெளிவந்தது, இஸ்லாம் பிரகடனம் செய்த தத்துவங்களுக்கெல்லாம் நேர் எதிரான அடக்குமுறை அரசுயந்திரம். உமய்யதுகள் தங்களுடைய அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மேலும் மேலும் அடக்குமுறைகளைக் கைக்கொண்டு மக்களிடையே மேலும் மேலும் கெட்டபெயர் பெற்றார்கள். இதன் விளைவாக தலைமறைவான எதிர்ப்புகள் தோன்றத் தொடங்கின.

உமய்யதுகளுக்கெதிரான கிளர்ச்சி இயக்கங்களுக்குத் தலைமை ஏற்று நடத்திய அரேபியர்கள், தங்களை ஆதரித்த அரேபியரல்லாதவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் சட்டப்படியான பங்கு தருவதாகவும், முஸ்லிம்கள் என்ற முறையில் அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதாகவும் வாக்களிக்க வேண்டியிருந்தது. அதாவது இஸ்லாம் கொள்கையளவில் அறிவித்தபடி எல்லோருக்கும் சம அந்தஸ்து கொடுப்பதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டியிருந்தது. அப்பாஸிட்கள் (தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரரான அப்பாஸின் வம்சத்தினர்) ஷீயாக்களுடன் சேர்ந்துகொண்டு உமய்யதுகளின் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் ஒத்துழைத்தார்கள். தலைமறைவு பிரசார இயக்கத்தைப் பரப்புவதற்கு, குறிப்பாக பாரசீகத்தில் அதை வளர்ப்பதற்கு அவர்கள் துணை செய்தார்கள். இவர்களின் தலைமைப் பிரசாரகர் அபூ முஸ்லிம் குராஸானி (Abū Muslim Khurāsāni) என்பவர். அவர் பாரசீகத்தைச் சேர்ந்த அரேபியரல்லாதவர். ஆதலால் தமது மக்களின் நம்பிக்கையை அவர் எளிதாகப் பெறமுடிந்தது. அப்பாஸிட்கள் நுண்மதியும், எச்சரிக்கை, ஏமாற்றுத்தந்திரம், உலக அனுபவ அறிவு போன்ற அரசியல் சதுரங்க களத்தில் வெற்றி பெறுவதற்குத் தேவையான குணங்களையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பிரசாரகர்கள் ஷீயாக்களுடன் இணைந்துகொண்டு, அப்பாஸ், அலீ ஆகிய இருவருக்கும் பொதுவான முதாதையரான ஹாஷிமின் பெயரை முன்வைத்துப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள். இருப்பினும் அலீயின் சார்பாளர்களை வீழ்த்திவிட்டு அதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக்கொள்வதே அவர்களுடைய ரகசிய நோக்கம். அப்பாஸ், அலீ ஆகிய இருவரின் வம்சத்தினரும் "டெட்ஸீ" (Dead Sea) என்ற உள்நாட்டுக் கடலுக்குத் தெற்கேயுள்ள தொலைதூரமான ஹுமய்மா என்ற ஊரில் ஓய்வாக வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் வசித்த இடம் ஸிரியாவிலிருந்து யாத்திரிகர்கள் மக்காவுக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்ததால் இஸ்லாமிய நாடுகளின் மூலை முடுக்குகள் வரை தகவல் தொடர்பு கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன. இதைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் மிகவும் திறமையாகத் தங்கள் பிரசாரத்தை நடத்தி வந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



உமய்யதுகளுக்கெதிரான தங்கள் பிரசாரத்துக்கு மிகச் சரியான இடம் பழைய பாரசீகப் பேரரசின் விசால வடகிழக்கு மாகாண மான குராஸான்தான் என்பது அவர்களுக்கு தெரியும். பேராசிரியர் நிக்கல்ஸன் கூறுகிறார்: "அங்கு வசிக்கும் மக்கள் வீரமும் நல்ல ஊக்கமும் உடையவர்கள். உமய்யதுகளின் கொடுங்கோல் ஆட்சி யின் கீழ் தாங்க முடியாத துன்பங்களுக்கு ஆளாகியிருந்ததனாலும், வீடுகள் நாசமாக்கப்பட்டதனாலும், மிகவும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருந்ததனாலும், இந்த நிலைமைகளிலிருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்க வாய்ப்பளிக்கும் எந்த முயற்சியிலும் கலந்து கொள்ள ஆர்வமாயிருந்தார்கள். மேலும் குராஸானிலிருந்த அரேபியர்கள் ஏற்கெனவே பெருமளவுக்கு பாரசீகர்களைப் போலவே மாறியிருந்தார்கள். அவர்கள் பாரசீகப் பெண்களை மணந்து கொண்டார்கள். பாரசீகர்களைப் போலவே கால்சராய்கள் அணிந்தார்கள். மது அருந்தினார்கள். பாரசீகர்களின் நவ்ரூஜ் (Nawrūz), மிஹிர்கான் (Mihrgān) பண்டிகைகளைக் கொண்டாடி னார்கள். பாரசீகமொழியை பொதுவாகப் புரிந்துகொண்டது மட்டு மின்றி அதைப் பேசவும் செய்தார்கள்."[15] அவர்கள் செயல்பட்ட விதம் குறித்து அவர் கூறுவது: "தங்கள் உயர் தலைவர் வசிக்கும் கூஃபாவிலிருந்து அவருடைய கட்டளைகளின்படி பல இடங் களுக்கும் வியாபாரிகளைப் போலவும் யாத்திரிகர்களைப் போலவும் நடித்து, தாங்கள் சந்திக்கும் மக்களின் அறிவுநிலைக்குத் தகுந்த படி தங்கள் கொள்கைகளைத் தந்திரமாக உருவமைத்து எடுத்து கூறினார்கள். ஷீயாக்களைப் போலவே அவர்களும் 'தீர்க்கதரிசி யின் குடும்பம்' என்ற கருத்தை முன்வைத்து அதற்காகவே மக்களின் ஆதரவைக் கோரினார்கள். இந்தக் கருத்து அலீ, அப்பாஸ் ஆகிய இருவரின் வம்சத்தினருக்கும் பொருந்தும்படியாகப் பொதுவான தாக இருந்தது... ஷீயா அமைப்பின் ஆதரவு தங்களுக்கு இருக்கு மாறு உறுதிப்படுத்திக்கொள்வது அப்பாஸிடுகளுக்கு மிகவும் அவசியமாயிருந்தது. முக்தாரின் தலைமையில் நடந்து தோல்வி யடைந்த கிளர்ச்சிக்குப் பின் பாரசீகத்தைச் சேர்ந்த கைவினைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் அந்த அணியில் சேர்ந்திருந்தார்கள்."[16]

இவ்வாறாக பிரசாரத்தின் மூலமும் இடைவிடாத முயற்சியுடன் நடத்திய அமைப்பு வேலைகளின் மூலமாகவும் தலைமறைவு அமைப்புகள் உமய்யதுகளுக்கெதிராக உருவாகியிருந்த கொந் தளிப்பான சூழ்நிலையை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டன. இந்த எதிர்ப்பு இயக்கங்களின் முன்னேற்றத்தைக் கண்டு அந்த மாகாணத்தின் ஆளுநர் நஸர் பின் ஸய்யார் (Nasr bin Sayyār) கலக்க

15. Nicholson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 250.
16. மேற்படி, பக்கம் 307.

www.padippakam.com



மடைந்தார். உடனடியாகக் கூடுதல் ராணுவத்தை அனுப்பி வைக்கும்படி அவர் கலீஃபா மர்வானுக்குக் கடிதம் எழுதினார். அப்பாஸிடுகளின் தலைமை தாயி (பிரசாரகர்) ஆன அபூ முஸ்லிமுக்கு இரண்டு லட்சம் பேர் விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். கடிதத்தில் அடிக்குறிப்பாகப் பின்வரும் வரிகளை அவர் எழுதியிருந்தார்:

மேலே நீறுபூத்து உள்ளே செந்தழல் இருப்பதை நான் காண்கிறேன்,
தழல் பெரும் நெருப்பாகப் பொங்கி எரியப்போகிறது!
கட்டைகள் உராய்ந்து நெருப்பை மூட்டுகின்றன,
சொற்கள் உராய்ந்து கலகத்தைத் தூண்டுகின்றன.
'ஓ, உமய்யதின் குலமே, உறக்கமா, விழிப்பா?'
வியப்பும் வேதனையுமாக வினவுகிறேன் நான்.[17]

நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் குராஸானில் இருந்த அரபு துருப்புகளிடையே இனக்குழு அடிப்படையில் பிளவுகள் ஏற்பட்டன. உமய்யதுகளின் நிலை சரிந்து வருவதைக் காட்டும் மற்றொரு அடையாளமாக இது இருந்தது. குராஸானிகளை இந்தக் கவிஞர் "மதமோ, உயர்பண்போ இல்லாத கலப்படக்கூட்டம், 'அரேபியரைக் கொல்' என்ற ஒன்றையே கொள்கையாகக் கொண்ட கும்பல்" என்று வர்ணிக்கிறார். இது மிகைபடக் கூறிய கூற்று அல்ல என்பது நிரூபணமாயிற்று. கிளர்ச்சி மூண்ட போது அரேபியர்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள். அரேபியர்களின் பாரசீக மனைவியர் கூட தங்கள் நாட்டினருடன் சேர்ந்துகொண்டு தங்கள் கணவர்களைக் கொன்றார்கள். இதிலிருந்து பாரசீகர்களுக்கு அரேபிய ஆதிக்கக்காரர்கள் மீது இருந்த வெறுப்பின் ஆழத்தைப் புரிந்துகொள்ளலாம். கி.பி. 747 ஜூன் 9-ஆம் தேதி, கெர்வ் நகருக்கருகே சிக்கதஞ்ஜ் என்ற இடத்தில் அபூ முஸ்லிம் அப்பாஸிடுகளின் கருப்புக்கொடியை ஏற்றியதைத் தொடக்கமாகக் கொண்டு இந்தக் கிளர்ச்சி எழுந்தது. (அடுத்த சில மாதங்களில் அபூ முஸ்லிம், கெர்வ் நகரைக் கைப்பற்றினார்). அரேபியர்கள், முன்னே குறிப்பிட்டது போல, தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள். முதாருக்கும் (Mudār) யேமனுக்கும் (Yaman) இடையில் இருந்த பழைய பகைமைகள் மீண்டும் தலைதூக்கின. வடபகுதியைச் சேர்ந்தவர்கள் உமய்யதுகளுக்கு விசுவாசமாக இருந்தார்கள். ஆனால் யேமனைச் சேர்ந்தவர்கள் அநேகமாக கிளர்ச்சிக்காரர்களுடன் பகிரங்கமாகச் சேர்ந்துகொண்டார்கள். உமய்யதுகள் ஒருவர் விடாமல் கொல்லப்பட்டார்கள். ஓடிப் போக முடிந்தவர்கள் மட்டுமே உயிர் பிழைத்தார்கள். அவர்கள்

17. Nicholson, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம். அவர் இந்த வரிகளை Dīnawarī, ed. Guirgass புத்தகத்திலிருந்து (பக்கம் 356) மேற்கோள் காட்டுகிறார்.

www.padippakam.com



ஒரு சிலரே. இவ்வாறாக நடந்த இந்தக் கிளர்ச்சியின் விளைவாக கி.பி.749-இல் அப்பாஸிட் வம்சம் ஆட்சிக்கு வந்தது. அபுல் அப்பாஸ் அல்-ஸஃபா (Abul 'Abbās al-Saffah) கலீஃபாவாகப் பதவி ஏற்றார். உமய்யதுகள் இறுதியாகத் தங்களுடைய கொடுமைகளுக்குத் தண்டனை பெற்றார்கள்.

அப்பாஸிடுகள், புரட்சியின் காரணமாகப் பாரசீகர்களிடையே ஏற்பட்டிருந்த புதிய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றபடி தங்கள் தலைநகரை டமாஸ்கஸிலிருந்து பக்தாதுக்கு மாற்றினார்கள். முன்பு ஸஸானிடுகளின் தலைநகராக இருந்த கடஸிஃபான் (Ctesiphon) நகருக்கு அருகில் பக்தாத் அமைந்திருந்தது. அரசு அதிகாரிகள் பதவிகளில் பாரசீகர்களுக்கு முன்பு மறுக்கப்பட்டிருந்த பங்கு இப்போது அவர்களுக்கு கிடைத்தது. அமைச்சர் பொறுப்பு இப்போது பாரசீகத்தைச் சேர்ந்தவர்களான பார்மிஸைடுகளின் (Barmecides) கையில் இருந்தது. (பார்மிஸைடுகள் தொடக்கத்தில் ஆப்கானிஸ்தானின் இப்போதைய தலைநகரான காபுலுக்கு அருகே இருந்த ஒரு பௌத்த விஹாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது). ஆனால் இந்தச் சலுகைகள் இதற்கு மேல் அதிகமாகப் போகவில்லை. அரேபியரும் பாரசீகரும் சுமூகமாக இணைந்திருந்த ஒற்றுமை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. ஏற்கெனவே குறிப்பிட்டது போல அப்பாஸிடுகள், உமய்யதுகளை வீழ்த்துவதற்காகவே ஷீயாக்களுடன் சேர்ந்திருந்தார்கள். அது வெறும் அரசியல் தந்திரமே. விரைவிலேயே அவர்கள் தங்களுடைய முன்னாள் கூட்டாளிகளுக்கு எதிரிகளாக மாறி அவர்களைக் கொடுமைக்கு ஆளாக்கத் தொடங்கினார்கள். ஆயினும், ஷியாக்களில் ஒரு பிரிவான இஸ்மாயிலிகள் நிர்வாகத்தைத் திறமையாக நடத்தியதன் மூலம் மேற்கு ஆப்பிரிக்காவில் தங்கள் ஆட்சியை அமைத்துக்கொண்டார்கள். ஃபிலிப் கே. ஹிட்டி (Philip K. Hitti) கூறுகிறார்: "இஸ்லாமிய உலகிலேயே மிகவும் நுட்பமாகவும் பலனுள்ளதாகவும் நடந்த மத-அரசியல் பிரசார இயக்கங்களில் ஒன்றாக இஸ்மாயிலிகளின் இயக்கம் செயல்பட்டது. அவர்கள் முஸ்லிம் உலகம் முழுவதிலும் தங்கள் பிரசாரகர்களை அனுப்பி 'பாதின்' (bātin), அதாவது உள்ளே அமைந்தது, ரகசியமானது, என்ற ஒரு தத்துவத்தைப் போதித்தார்கள். குரானில் கூறப்படுவதை உருவகமாகக் கொண்டு பொருள் காண வேண்டும் என்பது இவர்கள் கொள்கை. அதன் வாசகங்களில் உள்ளே அமைந்துள்ள பொருளைக் கண்டறிவதன் மூலம்தான் மதத்தின் உண்மைத் தத்துவங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்றும், அதை அறியும் வழியை அறிந்தோருக்கு அன்றி மற்றவர்களுக்கு உண்மையை மறைத்து வைக்கும் திரையாகவே

படிப்பகம்

www.padippakam.com



'ஜஹிர்' (Zahir) என்ற புறவடிவம் அமைந்துள்ளது என்றும் இவர்கள் கூறுகிறார்கள்."[18]

இஸ்லாமில் இது ஒரு தனிச்சிறப்புக் கொண்ட பிரிவு என்பதில் சந்தேகம் இல்லை. இதன் கொள்கைகளை உருவாக்குவதில் கிரேக்க தத்துவங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றாலும் அவற்றை அப்படியே நகல் செய்யாமல் ஆக்க ரீதியான சிந்தனை மூலம் ஒரு புதிய தத்துவப் படைப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளது. அப்பாஸிட் பேரரசு மிகவும் சிறப்புற்று விளங்கிய காலத்தில் கல்வி, அறிவுத்துறைகளின் வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்குப் பெருமளவில் செல்வம் உபரியாயிருந்தது. அப்பாஸிட் ஆட்சியாளர்களும் அதைப் பயன்படுத்தி இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்கமளித்தார்கள். அரேபியர்கள் ஓரளவு நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததாலும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாலும் தங்களுக்கென ஒரு தத்துவ முறைமையையோ, சிந்தனை மரபையோ உருவாக்கிக்கொள்ளவில்லை. அவர்களுடைய மிக உயர்ந்த சாதனையாக இருந்தது இஸ்லாமிய மதமே. அவர்கள் தங்களது என்று பெருமையாகக் கூறிக்கொள்ளக்கூடிய ஒரே புத்தகம் குரான். அது மதநெறியில் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்ததாலும், எழுத்தறிவு அதிகம் இல்லாத, பண்பாட்டில் உயர்ந்திராத சாதாரண மக்களை நோக்கிக் கூறப்பட்டதாக இருந்ததாலும், எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய எளிய மொழியில் அமைந்து, நுட்பமான தத்துவ விசாரங்களைத் தவிர்த்திருந்தது. மிகவும் எதார்த்த நோக்கு கொண்ட அரபு மக்களை நோக்கிக் கூறப்பட்டதாக இருந்ததால் அதன் நோக்குமுறை அகநோக்காக இன்றி புறநோக்காக இருந்தது. இப்போது நிலைமைகள் முற்றிலுமாக மாறிவிட்டன. இஸ்லாமின் அதிகார கேந்திரம் இப்போது மக்கா,மதீனா அல்ல. அது டமாஸ்கஸுக்கு மாறி இப்போது பக்தாதுக்கு சென்றிருந்தது. முஸ்லிம்களிடம் இப்போது பல்வேறு வழிகளிலும் செலவிடுவதற்கு நிறைய செல்வம் இருந்தது. மக்காவிலும் மதீனாவிலும் அவற்றைச் சுற்றிய பாலைவனப் பகுதியிலும் முஸ்லிம்களுக்கு எப்படி உணவளிப்பது என்பதே பெரிய பிரச்சினையாயிருந்தது. வேறு எதிலும் சிந்தனையைச் செலுத்த முடியவில்லை. தத்துவம், கலைகள், மனித மனத்தின் உள்ளே புகுந்து ஆராய்வது என்பனவெல்லாம் முஸ்லிம்கள் அப்போது நினைத்துப் பார்க்க முடியாதவையாக இருந்தன. கவிதை ஒரு "பயனற்ற" கலை என்றும், கவனத்தை வேண்டாத வழியில் சிதறச்செய்வது என்றும் குரான் குறிப்பிடுகிறது. இத்தகைய மனமகிழ்ச்சிக் காரியங்களெல்லாம் விரும்பத்தகாதவையாகக் கருதப்பட்டன. முஸ்லிம்களின் சக்தியெல்லாம் இஸ்லாமை

18. Philip K. Hitti, *History of the Arabs*, பக்கம் 443.

www.padippakam.com



உறுதியாக நிலைப்படுத்துவதற்கும் அதைப் பரப்புவதற்கும் மக்காவிலும் மதீனாவிலும் இருந்த அதன் எதிரிகளிடமிருந்து அதைப் பாதுகாப்பதற்கும் தேவைப்பட்டன. ஆனால் இப்போது வெளி நாடுகளை வென்று கைப்பற்றிய பின் கனவிலும் நினைக்காத செல்வங்கள் வந்து சேர்ந்ததால் முன்பு இருந்த தட்டுப்பாடுகள் நீங்கி விட்டன. உமய்யதுகள் ஆட்சிக்கு வந்த காலத்துக்குள் முஸ்லிம்களிடம் மிகுந்த செல்வம் சேர்ந்து, அதன் பின்பும் தொடர்ந்த வெளிநாட்டு வெற்றிகள் மூலம் மேலும் பெருகி வந்தது. அவர்களுடைய அதிகார மையமாக டமாஸ்கஸ் அமைந்திருந்தது. அந்த நகரம் அதுவரை கிரேக்கப் பண்பாட்டின் கேந்திரமாக விளங்கியது. ஆனால் அங்கு வசித்த உள்ளூர் மக்கள் பைஜாண்டிய ஆட்சியாளர்களை வெறுத்ததனால் அந்தப் பண்பாட்டை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்று இணைத்துக்கொள்ளவில்லை. எனவே அரேபியர் அதை ஏற்றுக்கொள்ளும் பிரச்சினை இல்லை. ஆதலால், உமய்யதுகள், இஸ்லாமுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்த தங்களுடைய சொந்த தேசிய பண்பாட்டுக்குப் புத்துயிர் கொடுத்தார்கள். அந்தப் பண்பாட்டை இஸ்லாம் கண்டித்தது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அதை இழந்திருப்பதை அவர்கள் பெரிய குறைபாடாக உணர்ந்தார்கள். இஸ்லாமுக்கு முந்திய ஜாஹிலிய்யா காலத்தின் கவிதைக்குப் பெருமளவில் மறுமலர்ச்சி கொடுத்தார்கள். உண்மையில் அது ஆளும் வர்க்கத்தினரின் விருப்பமான பொழுதுபோக்கு ஆயிற்று. அரேபியர்கள் சொந்தமாக தத்துவ சிந்தனைகளில் கருத்துச் செலுத்தவில்லை. குரானில் கிரேக்கப் பண்பாட்டின் சாயல் படியவில்லை.

ஆனால் அப்பாஸிட் கலீஃபா அரசு தோன்றிய விதம் முற்றிலும் வித்தியாசமானது. அந்நிய நாடுகளின் மீது படையெடுத்துக் கைப்பற்றியதன் மூலம் அந்த அரசு அமைக்கப்படவில்லை. மாறாக அரேபியரில் ஒரு பிரிவினர், அதிருப்தியடைந்திருந்த பாரசீகர்களின் உதவியுடன், மற்றொரு பிரிவினரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி அமைக்கப்பட்ட டமாஸ்கஸிலிருந்து (இஸ்லாமுக்கு அந்நியமான ஸிரியா சமூகச் சூழ்நிலையிலிருந்து) பக்தாதுக்கு (இதுவும் இஸ்லாமுக்கு அந்நியமான இரானிய சமூகச் சூழ்நிலையைக் கொண்டதே) மாறியது. இந்த மாற்றம் இஸ்லாமிய நாகரிகத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இப்போது இஸ்லாம் ஒரு "இரானிய வண்ணம்" பெறத் தொடங்கியது. பண்பாட்டு ரீதியாகக் கூறினால் இஸ்லாம் தன்னுடைய இயல்பான எல்லைகளுக்குள் கட்டுப்பட்டு நிற்கவில்லை. அது ஒது உலகத் தன்மையைப் பெறத் தொடங்கியிருந்தது. இந்தக் காரணத்தினால் அப்பாஸிட் கலீஃபா அரசை டாயின்பீ இஸ்லாமின் உலக அரசு என்று வர்ணிக்கிறார். அரேபியர்களுக்குக் கல்விப்புலமை பெறுவதில் நாட்டம் இல்லை;

www.padippakam.com



அந்தத் துறையில் பாரசீகர்களே ஈடுபட்டார்கள். இவர்கள் இஸ்லாமுக்கு அந்நியமான பல அம்சங்களை அதில் புகுத்தினார்கள். கிரேக்க, இந்திய தத்துவ சாத்திர நூல்கள் பல, அரபியில் மொழி பெயர்க்கப்பட்டன. இஸ்லாம் இப்போது கிரேக்க, இந்திய தத்துவங்களின் செல்வாக்கின் கீழ் வந்தது. சுயேச்சையான தாராளக் கருத்துக்கள் கொண்ட இந்த அறிஞர்கள் இஸ்லாமையும் அதன் கொள்கைகளையும், பகுத்தறிவையும் காரணகாரிய தர்க்க ரீதியையும் கொண்டு மதிப்பிடத் தொடங்கினார்கள். நீதிபதி அமீர் அலி எழுதுகிறார்: "மமூன் (Ma'mūn) தம்மைச் சுற்றிலும் பல சிறந்த கல்விமான்களையும் கலைஞர்களையும் கூட்டிவைத்திருந்தார். அவர் அலெக்ஸாண்டிரியாவில் இருந்த அறிஞர்களின் புத்தகங்களையெல்லாம் மீண்டும் சேர்த்துத் தொகுக்கத் தொடங்கினார். கான்ஸ்டாண்டிநோபில் பேரரசருடன் தமக்கு இருந்த தொடர்பின் மூலம் ஏதென்ஸிலிருந்து பண்டைய கிரீஸின் மிகச் சிறந்த தத்துவ நூல்களையெல்லாம் வரவழைத்தார். அவற்றைச் சிறந்த புலமையாளர்களைக் கொண்டு மொழிபெயர்த்து மக்களுக்கு வழங்கச் செய்தார். கிரேக்கம், ஸிரியாக், சால்டேயிக் மொழிகளில் உள்ள நூல்கள் லூக்கின் மகன் காஸ்டாவின் மேற்பார்வையில் மொழிபெயர்க்கப்பட்டன. புராதன பாரசீக மொழி நூல்கள் யாஹ்யா பின் ஹரூனின் மேற்பார்வையிலும் சம்ஸ்கிருத நூல்கள் தூபான் (Dūbān) என்ற பிராமணரின் மேற்பார்வையிலும் மொழிபெயர்க்கப்பட்டன. புதிய ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் புதிதாகப் புத்தகங்கள் எழுதுவதற்கும் ஊக்கமளிக்கப்பட்டது. இதற்கெனத் தகுதி வாய்ந்த பேராசிரியர்களின் கீழ் சிறப்புத் துறைகள் அமைக்கப்பட்டுத் தாராளமாக மானியங்கள் வழங்கப்பட்டன."[19] இவ்வாறாக உயர்ந்த அறிவுத் துறைகளில் அப்போது இருந்த சிறப்பான அம்சங்களையெல்லாம் இஸ்லாமில் கொண்டுவந்து இணைத்துக்கொள்வதற்குப் பெரும்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கிரேக்க தத்துவஞானத்தில் அறிவாளிகளிடையே ஒரு புதிய மோகம் ஏற்பட்டது. இந்தத் தத்துவங்களைப் பல்வேறு அளவுகளில் ஏற்றுக்கொண்டு இஸ்லாமில் பல புதிய உட்பிரிவுகள் உருவாயின. புதிய தத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் குரானுக்கே கூட பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டன. அது எளிமையான, எதார்த்த ரீதியான, நடைமுறைக்குரிய வெளிப்படையான புத்தகமாக, புலன்களால் உணர்வதன் மூலம் அறிவைப் பெறுவதை வலியுறுத்துவதாக இருந்த நிலை மாறிவிட்டது. (இஸ்லாமுக்கு முன் இருந்த நாடோடி அரபு கலாசாரம் போன்ற ஆரம்ப நிலைக் கலாசாரத்தில் புலன் உணர்வு அறிவுதான் எப்போதும் வலியுறுத்

19. Ameer Ali, *A short History of the Saracens* (லண்டன், 1951) பக்கம் 278-9.

படிப்பகம்

www.padippakam.com



தப்படும்). சிந்தித்து ஆய்ந்து அறிவைப் பெறுவதை வலியுறுத்தும் கிரேக்க அறிஞர்களின் நூல்களின் செல்வாக்கினால் குரானுக்குப் புதிய விளக்கங்கள் கூறப்பட்டு, அது நுட்பமான உட்பொருள்கள் கொண்ட ஒரு நூலாக மாற்றப்பட்டுவிட்டது. முத்தஜிலா (Mu'tazila) என்ற ஒரு புதிய பிரிவு ஏற்பட்டது. இஸ்லாமின் போதனைகள், நம்பிக்கைகள் ஆகிய அனைத்தையும் காரணகாரிய பகுத்தறிவைப் பயன்படுத்திச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்பது இந்தப் பிரிவின் கொள்கை. இதன் காரணமாக இந்தப் பிரிவினர் பகுத் தறிவுவாதிகள் என்று கூறப்படுகிறார்கள். இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு எச்.ஏ.ஆர்.கிப் (H.A.R.Gibb) இவ்வாறு கூறுகிறார்: "இந்தச் சிந்தனையாளர்கள் கிரேக்க தர்க்கவாதத்தின் உதவியுடன் தங்கள் கோட்பாட்டுக்கு ஆதரவாகப் புதிய இறையியல் கொள்கை முறை ஒன்றை உருவாக்கினார்கள். காலம் செல்லச் செல்ல இவர்கள் துணிச்சலுடன் புதிய தத்துவக் கோட்பாடுகளை உருவாக்கினார் கள். ஆனால், இவர்களில் அதிதீவிரவாதிகள் சிலர் தங்களுடைய கடவுட் கொள்கையையே குரானிலிருந்து பெறுவதைவிட்டு கிரேக்க தத்துவக் கோட்பாடுகளிலிருந்து ஊகித்துப் பெறவும், முஸ்லிம் கோட்பாடுகளை கிரேக்கக் கருத்துக்களின் வார்ப்பட மாக உருவாக்கவும் முயன்ற போது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது."[20] சில சமயங்களில் கிரேக்க தர்க்கவாதத்தைப் பயன்படுத்தும் இந்தப் போக்கு மிதமிஞ்சிப்போய், "ஜெர்மன் தத்துவவாதிகளுக்கும் ஒருபடி மேலே போய், சாதாரண வாழ்க்கையுடன் தொடர்பற்றதாக, தர்க்கவாத முறைகளின் அடிப்படையில் இறுதி யான உண்மையைக் காணப்போவதாகக் கூறும் வறட்டுத் தேடல் ஆகிவிட்டது."[21]

இவ்வாறு எல்லாவற்றிலும் கிரேக்க தத்துவஞானத்தையும் தர்க்கவாதத்தையும் புகுத்தும் போக்குக்கு இஸ்லாமிய உலகில் எதிர்விளைவு தோன்றியது. கிரேக்க தர்க்கவாதத்தையே பயன் படுத்தி இஸ்லாமியக் கோட்பாடுகளை ஆதரித்துப் பேசும் 'முத்த கல்லிமூன்' (mutakallimun) என்ற பிரிவு ஒன்று தோன்றியது. இவ் வாறாக கிரேக்க தத்துவஞானத்தைப் பயன்படுத்துவதை ஆதரிப் போர், எதிர்ப்போர் ஆகிய இரு சாராருக்குமே, குரானுக்கு விளக் கங்கள் அளிப்பதில் அந்தத் தத்துவஞானத்தைப் பயன்படுத்து வது அவசியமாகிவிடடது. இனி, கிரேக்க தத்துவஞானத்தின் துணை இல்லாமல் குரானைப் புரிந்துகொள்ள முடியாது என்று ஆகிவிட்டது. மௌலானா அபுல் கலாம் ஆஸாத் கூறுகிறார்:

20. H.A.R. Gibb, *Muhammedanism* (லண்டன், 1969) பக்கம் 78.
21. D.B. Macdonald, *Development of Muslim Theology*, பக்கம் 140. Gibb முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகத்தில் மேற்கோள்.

www.padippakam.com



"தீர்க்கதரிசி தமது வாதங்களை எடுத்துக்கூறிய முறை தர்க்கசாஸ்திர வழிகளைப் பின்பற்றி, கேட்பவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவ தாக இல்லாமல் இயற்கையான முறையில் நேரடியாகப் பேசி, ஒவ் வொருவரின் அறிவையும் உள்ளத்து உணர்வையும் தொடுவதாக இருந்தது. ஆனால், குரானுக்கு உரை எழுத வந்தவர்கள் கிரேக்க தத்துவ ஞானத்தையும் தர்க்கசாஸ்திரத்தையும் மனத்தில் நிறைத்துக் கொண்டு, உண்மையை அதன் இயல்பான உருவத்தில் காணவும் புரிந்துகொள்ளவும் இயலாதவர்களாக இருந்தார்கள். தர்க்க நூலறிஞர் களாக நின்று எழுதுவதன் மூலம் தாங்கள் தீர்க்கதரிசிக்கு கௌரவம் செய்வதாக அவர்கள் நினைத்தார்கள். குரானை அரிஸ்டாட்டிலின் தர்க்க முறை வார்ப்பட அச்சுக்குள் பொருத்திக்காட்டுவதன் மூலம் குரானின் பெருமையை நிலைநிறுத்த அவர்கள் முயன்றார்கள். குரானின் அடிப்படை நோக்கம் அதுவல்ல என்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். இவர்கள் பின்பற்றிய இந்த முறை யினால் குரான் தனது வாதங்களை எடுத்துக்கூறுவதிலும் உண்மையை நிரூபிக்கும் வழிகளிலும் இருந்த அழகும் கவர்ச்சியும் இவர்களது தர்க்கவாதச் சொற்சிலம்பத்தில் அடிபட்டு மறைந்துபோயின"[22]

எப்படியானாலும் இந்த மாறுபட்ட சூழ்நிலையில் குரானின் எளிமையும் நேரடித்தன்மையும் நிலைத்து நின்றிருக்க முடியாது. அதை இப்போது கையாண்டவர்கள் எதார்த்த மனோபாவம் கொண்ட எழுத்தறிவற்ற அல்லது அறைகுறைப் படிப்புள்ள சாதாரண மக்கள் அல்ல. மக்காவிலும் மதீனாவிலும் இருந்த வர்த்தகர்கள், கைத்தொழில் செய்வோர் ஆகிய மக்களிடையே குரான் வெளிப்படுத்தப்பட்டது. அந்த மக்கள் எதார்த்த நோக்கும் பகுத்தறிவு அணுகுமுறையும் கொண்டவர்கள். எனவே குரான் எளிமையான, நேரடியான நடையில் அமைந்திருந்தது. இப் போது செல்வங்கள் நிறைந்த செழிப்புமிக்க சூழ்நிலைகொண்ட புதிய சமூகத்தில் மதவியலையே சிறப்புத் துறையாகக் கொண்டு முழுக்க முழுக்க அதையே கற்றுப் புலமை பெற்ற மதவியல் அறிஞர்கள் உருவானார்கள். இவர்களது பகுத்தறிவு நூலறிவை அடிப்படை யாகக் கொண்டது. உயர்ந்த அறிவுக்கெல்லாம் முழுமுதல் மூல மாக இவர்கள் கிரேக்க தத்துவஞானத்தையே கருதினார்கள். எனவே அதிலிருந்து கருத்துக்களையும் தத்துவங்களையும் இஸ்லாமில் புகுத்தி குரானையும் அந்த அறிவின் வழியிலேயே அணுகினார்கள். சரித்திரத்தின் முன்னேற்றத்தில் மக்கள் மாறிவிட்டார்கள். குரான் உபதேசிக்கப்பட்ட போது இருந்த மக்கள் இப்போது இல்லை. அவர்கள் காலத்தில் இருந்த எளிமையும் நேரடித்தன்மையும் இப்போதும்

22. மவுலானா அபுல் கலாம் ஆஸாத்: The Tarjuman al-Qūr'ān, Vol.I. ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு: ஸையத் அப்துல் லத்தீஃப், (Asia Publishing House, 1965), பக்கம் xxxvi.

www.padippakam.com



நீடிப்பது இயலாது. எனவே கிரேக்க சிந்தனைகளின் செல்வாக்கு மேலோங்கியதால்தான் இஸ்லாம் தனது முந்தைய வீரியத்தை இழந்துவிட்டது என்று டாக்டர் இக்பால் போன்ற சிலர் கூறுவது சரியாகாது. மாறிவிட்ட சூழ்நிலையில் இது தவிர்க்க முடியாதது. குரான் முன்பு எப்படி இருந்தது என்பதற்கும், பின்பு எப்படி ஆயிற்று என்பதற்கும் அந்தந்தக் காலங்களில் இருந்த சூழ்நிலைகளே காரணம். அரேபிய பாலைவனத்தில் சரித்திரம் அசைவற்று நின்றிருக்க முடியாது. வெளிநாடுகள் வென்று கைப்பற்றப்பட்டதன் மூலம் இயக்கம் கொடுக்கப்பட்ட சில சக்திகள் இஸ்லாமை பண்பாட்டில் முன்னேறிய பாரசீகர்கள் போன்ற மக்களுக்கு ஏற்புடையதாகும் வகையில் மாற்றியமைப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது. இஸ்லாமின் மீது கிரேக்க சிந்தனையின் செல்வாக்கை இக்பால் குறைகூறுவது வரலாற்று உண்மைகளைக் காண மறுப்பதாக உள்ளது. குரான், வெளி உலகை உற்றுநோக்கி புலன்களால் உணர்வதைக் கொண்டு உண்மையை அறிவதற்கு ஊக்கமளிக்கிறது என்பதை அவர் குறிப்பிட்டு, முஸ்லிம்கள், கிரேக்கர்களின் தத்துவ சித்தனை களால் கவரப்பட்டு, குரானின் உண்மையான பொருளைக் காணத் தவறிவிட்டார்கள் என்று கூறுகிறார். மக்காவும், மதீனாவும் அப்போது தான் ஒரு நகரக் கலாசாரத்தை வளர்த்துக் கொண்டிருந்தன என்ற நிலையில் அவற்றின் மக்கள் இயற்கையை அறிவதற்கு சுற்றுப்புறத்தை உற்றுநோக்குவதையும் புலன் உணர்வையும் நம்பினார்கள். ஊகச் சிந்தனை கள், ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்கள், மன உலகில் ஆழ்ந்து காணும் தேடல்கள் என்பவையெல்லாம், கைக்கும் வாய்க்குமாக வாழும் நிலைக்கு மேலே மிகவும் உயர்ந்துள்ள முன்னேற்றமான கலாசாரத்தின் அடையாளங்கள். பாரசீகம் அத்தகைய முன்னேறிய கலாசாரத்தைக் கொண்டிருந்தது; அதன் சிந்தனையாளர்களும், கவிஞர்களும் அக உலகில் ஆழ்ந்து தேடும் முயற்சிகளை நடத்தியிருந்தார்கள். அந்த நாட்டின் அறிவாளிகள் இஸ்லாமில் மதச் சிந்தனைத் தலை வர்கள் ஆகிய போது உள்முகமாக நோக்கும் அவர்களது அணுகு முறை அதில் இடம் பெறாமலிருக்க முடியாது. புலன் உணர்வு களையும் சுற்றுப்புறத்தை நோக்குவதையும் மட்டும் வலியுறுத்துவ தாக அவர்களது அணுகுமுறை இராது. ஆழ்ந்த அகத்தேடல்களி லும் உண்மையை அறிவதற்கான தத்துவஞான விசாரணைகளி லும் அந்நாட்டின் அறிஞர்கள் ஆர்வம் கொண்டார்கள். இந்தப் போக்கை நிறுத்த வேண்டுமானால் அதற்கு ஒரே வழி இஸ்லாமை மீண்டும் அரேபியப் பாலைவனத்துக்கே கொண்டு செல்வதேயாகும். ஆனால், அது வரலாற்று ரீதியாக இயலாத செயல். எனவே, இக்பால் இஸ்லாமைக் காணும் நோக்கு வரலாற்றுக்குப் பொருந்தாததாகும். கிரேக்க தத்துவச் செல்வாக்கினால்தான் இஸ்லாம் தனது வீரியத்தை இழந்தது என்று அவர் கூறுவதும் கூட எதார்த்த நிலைமைக்குத் தொடர்பில்லாத லட்சியவாதக் கூற்றாகும். எந்தவொரு இயக்கமும்

www.padippakam.com



பொருளாதாரத் தட்டுப்பாட்டு நிலையைக் கடந்த பின் (சவால் களும் அவற்றை எதிர்கொள்வதும் ஆகிய நிலைமாறிய பின்) ஓரளவுக்குச் செல்வச்செழிப்பு நிலையை அடையும் போது தனது முழுவேகத்தை இழந்துவிடுகிறது என்பதே உண்மை. (இந்த நிலை வந்தபின் மக்கள் வாழ்க்கையின் வசதிகளுக்குப் பழக்கப் பட்டுப் போவதுடன், பௌதிகமான போராட்டங்களிலேயே ஈடுபட்டு நின்றுவிடாமல் மனமும் மனோதத்துவமும் தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துகிறார்கள். ஓய்வுநேரம் மிகுதி யாக உள்ள மேல்வர்க்கத்தினர் விஷயத்தில் இது மேலும் உண்மை யாகிறது. இவர்களைத்தான் டாயின்பீ "ஆக்கத்திறன் கொண்ட சிறுபான்மையினர்" என்று குறிப்பிட்டு சமூகத்துக்கு அறிவுத் தலைமை அளிக்கிறார்கள் என்று கூறுகிறார்).

இஸ்லாமை கிரேக்க தத்துவஞானத்துடன் இணைத்து, குறிப்பாக பிளேட்டோவின் கருத்துக்களைப் பெரும் அளவில் எடுத்துக் கொண்டு இஸ்லாமுக்குப் புதிய முறையில் பொருள் கூற முயன்ற முதலாவது பிரிவு இஸ்மாயிலி பிரிவுதான் என்பதை மனத்தில் கொள்வது முக்கியம். பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பதை விளக்குவதற்கும் கூட அவர்கள் அந்தக் கருத்துக்களையே பயன் படுத்தினார்கள். இந்தப் பிரிவின் தலைவர்களாக வந்தவர்கள் முன்னணி பாரசீக அறிஞர்கள் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்.

கிரேக்க தத்துவக் கருத்துக்களை இவர்கள் திட்டமிட்ட முறை யில் பயன்படுத்தினார்கள். ஹமீதுத்-தீன் கிர்மானி, ஹாதிம், ராஸி, முவய்யத் ஷீராஸி, நாஸிர் குஸ்ரவ் முதலானவர்கள் இந்தப் பிரிவின் தூண்களாக இருந்தனர். இவர்கள் அனைவரும் அரேபிய பரம்பரை யைச் சேர்ந்தவர்கள். இதை நிறுவியவர்களான மைமூன் அல்-குதாஹ்வும் அவரது புதல்வர் அப்த் அல்லாஹ் பின் மைமூனும் பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கிரேக்கக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ரகசியக் கோட்பாடுகளைப் போதித் தார்கள். ஆயினும், மதவேதத்தின் உட்பொருளை அலீயிடமிருந்து தெய்வீக ஞானத்தைப் பரம்பரைச் செல்வமாகப் பெற்ற இமாம்களே அறிவார்கள் என்று இவர்கள் நம்பினார்கள். மேலும், குரானுக்கு உருவகமாகப் பொருள் காண்பது இறைவனைப் பற்றிய மத அறிவு (மாரிஃபா - 'Mārifa) என்பதும், ஆன்ம மீட்சிக்கு அது அவ சியம் என்பதும் இவர்கள் கருத்து. வழிபாடு இருவகையானது; ஒன்று செயலையும், மற்றொன்று ஞானத்தையும் சார்ந்தது என்பது இஸ்மாயிலிகளின் கொள்கை. தீர்க்கதரிசி வெளிப்படையான புறமுக வழிபாட்டைப் போதித்தார் என்றும், ரகசிய அகமுக வழிபாடு (இல்மல் மாரிஃபா - 'ilmal - m'ārifa) அலீ, மற்றும் அவரது வம்சத்தினரான இமாம்களின் பொறுப்பாக விடப்பட்டது என்றும் ஹமீதுத் தீன் கிர்மானி கூறுகிறார். இருவகையான வழிபாடுகளும்

www.padippakam.com



ஒன்றையொன்று சார்ந்தவையாக உள்ளன. [23] "எனவே, மதம் புலன் உணர்வு மூலம் கிடைத்த அறிவு அல்ல ஆதலால் தலீம் (Ta'līm) அவசியம் என்பது இஸ்மாயிலிகளின் கருத்து. ஒரு குருவின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய 'ஆன்மஞானம்' அது. தீர்க்க தரிசியும் அவரது வம்சத்தினரும் மட்டுமே ரகசியமானதும், வெளிப்படையானதுமான மத விஞ்ஞானங்களில் சிறப்பு அறிவைப் பெற்றிருக்கிறார்கள். இமாம்கள் 'துவாத்' (du'āt) என்ற 'அழைப் போரு'க்கு இதைக் கற்பிக்கிறார்கள். 'துவாத்'கள் 'முஸ்தஜிபின்' எனும் சாதகர்களுக்குக் கற்பிக்கிறார்கள்."[24] (உண்மையில், டாக்டர் காமில் ஹுஸைன் தமது 'மஜாலிஸ் அல்-முஸ்தன்ஸிரியா' என்ற புத்தகத்தின் முன்னுரையில், ரகஸ்ய கோட்பாடுகளை 'துவாத்'களே உருவாக்கி இமாம்களின் பெயரில் பரப்பினார்கள் என்று குறிப் பிடுகிறார்).

இஸ்மாயிலி இயக்கத்தின் தலைவர்கள் அப்பாஸிட் ஆட்சி யாளர்களுக்குகெதிராக கிளர்ச்சியை உருவாக்க விரும்பியதால் சில காலம்வரை அந்த இயக்கம் தலைமறைவாகவே இருந்தது. அதற்குத் தகுந்த முறையில் அந்த இயக்கத்தின் அமைப்புமுறை இருந்தது. கண்டிப்பாக ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருந்ததால் இயக்கத்தில் சேர விரும்பியவ்ர்கள் ரகசியத்தைக் காப்பாற்ற உறுதிசெய்யும் ஒரு சடங்குக்குப் பிறகே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். புதிதாகச் சேரவிரும்புபவரை தாயியும் அவரது உதவியாளர்களும் சோதனை செய்து, பின்பு அவருக்கு 'மீட்டாக்' (mīthāq) எனப்படும் ரகசியப் பிரமாணம் செய்விக்கப் பட்டது. அப்பாஸிட் வம்சத்துக்கெதிரான எதிர்ப்பு இயக்கங்களை ஒடுக்குவதற்காக அரசின் கையாட்கள் எங்கும் சுற்றிக்கொண்டிருந் தால் அப்படிப்பட்ட ஆட்கள் இயக்கத்தினுள் வந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த முறை பின்பற்றப்பட்டது. மேலே குறிப்பிட்ட 'துவாத்'கள் இஸ்லாமிய உலகம் முழுவதிலும் தங்கள் அமைப்புகளைப் பரப்பி, இஸ்லாமைப் பற்றிய தங்களுடைய விரிவான புதிய விளக்கங்கள் மூலம் அறிவாளிகள் பலரையும் தங்கள் பக்கம் கவர்ந்தார்கள். இவர்களின் ஷீயா கோட்பாடுகள் பொதுவாக அரேபியரல்லாத மக்களுக்கும் குறிப்பாக பாரசீகர் களுக்கும் பிடித்தவையாக இருந்ததால் சாதாரண மக்களும் பெரும் எண்ணிக்கையில் இந்த இயக்கத்தால் கவரப்பட்டார்கள். இந்த இயக்கம் தலைமறைவாகச் செயல்பட்ட காரணத்தால் இஸ்லாமில் முதல் முதலாகக் கட்டுக்கோப்பான தலைமை இடவரிசை ஒன்றை உருவாக்கியது இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இட

23. Hamīdud Dīn Kirmānī, *Rāhat al-'Aql*, பக்கம் 27, 30-32.
24. Panayiotis J. Vatikiotis, *The Fatimid Theory of State*, (Oriental Publishers, Lahore), பக்கம் 37.

படிப்பகம்

www.padippakam.com



வரிசை கிறிஸ்தவ மதத்தில் அமைக்கப்பட்டிருந்த இடவரிசையைப் போல இருந்தது. உயர் தலைவராக இமாம் இருந்தார். அவருக்குக் கீழே ஹீஜ்ஜாக்களும், அடுத்து பல்வேறு வகையான தாயீ (அழைப்போர்) என்பவர்களும் இருந்தார்கள். இவர்களுக்கு உதவியாக மாதுன்கள் (அனுமதிக்கப்பட்டவர்கள்), முகாதிர்கள் (எதிரிகளை உடைப்பவர்கள்) என்பவர்கள் இருந்தார்கள். இஸ்மாயிலி என்றும் போரா (Bohra) என்றும் அழைக்கப்படும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் இந்தியாவிலேயே இருக்கிறார்கள். இந்தப் பிரிவுகளை நிறுவியவர்கள் தங்கள் கொள்கைகளில் அரேபிய அம்சங்களையும், பாரசீக-கிரேக்க அம்சங்களையும் முழுமையாக ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டார்கள். இஸ்மாயிலிகள் - இவர்கள் ஃபாத்திமிடுகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள் - இறுதியாக மேற்கு ஆப்பிரிக்காவில் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள். பின்பு எகிப்திலும் ஆட்சியை நிறுவினார்கள். அங்கே இவர்கள் மிகச் சிறந்த புகழும் பெருமையும் பெற்றவர்களாக உயர்ந்தார்கள்.

இஸ்மாயிலிகளின் உட்பிரிவுகளில் ஒன்று கராமித்தா (Qarāmita) அல்லது கரமேத்தியன் (Qaramatians) என்பது. கி.பி.874-இல் ஹமதான் கர்மத்(Hamdān Qarmat) என்பவரால் நிறுவப்பட்ட இந்தப் பிரிவு இஸ்லாமிலேயே மிகவும் புரட்சிகரமான பிரிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 'கர்மத்' என்ற சொல் அரமேயிக் மொழியைச் சேர்ந்தது என்றும் 'ரகசிய குரு' அல்லது ரகசிய ஞானத்தை போதிப்பவர் என்று பொருள்படுவதாகவும் தபரி கூறுகிறார். ஹம்தான், இராக்கைச் சேர்ந்த விவசாயி. அப்த் அல்லாஹ் பின் மைமூன் அவரை இஸ்மாயிலி ரகசியக் கோட்பாட்டுக்கு மாற்றினார். இந்தப் பிரிவின் பல்வேறு தீட்சை நிலைகளையும் அவர் கடந்து சென்ற போது, இதன் மேல்நிலைகளில் உள்ளவர்களுக்கு மிகுந்த அதிகாரத்துக்கு வாய்ப்பு இருப்பதை உணர்ந்தார். உயர்ந்த பதவிகளை அடைவதற்கு மிகவும் ஆசை கொண்டிருந்த அவர் நபாட்டிய விவசாயிகளிடையே கடுமையான வரிவிதிப்பினால் ஏற்பட்டிருந்த அதிருப்தியையும், உள்ளூர் விவசாயிகளுக்கும் பாலைவனப் புதல்வர்களுக்கும் இடையே இருந்த பழைய பகைமையையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார். அவர் உள்நாட்டு மக்களிடையே, குறிப்பாக நபாட்டிய விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரிடையிலும், அரேபியர்களிடையிலும் தீவிரப் பிரசாரம் நடத்தினார். கரமேத்திய சமூகத்தினர் கம்யூனிசத் தத்துவங்களின் அடிப்படையில் செயல்பட்டார்கள். இந்தக் காரணத்தினால் தற்கால எழுத்தாளர்கள் சிலர் இவர்களை இஸ்லாமின் போல்ஷவிக்குகள் என்று அழைக்கிறார்கள். பேராசிரியர் ஹிட்டி எழுதுகிறார்: "அவர்கள் சகிப்புத்தன்மையையும் சமத்துவத்தையும் வலியுறுத்தினார்கள். தொழிலாளர்களையும் கைவினைஞர்களையும் தொழில் அடிப்படையில் அமைப்புகளாக உருவாக்கினார்கள்.

www.padippakam.com



அவர்களுடைய மதச் சடங்குகளிலும் சங்கத்தின் சடங்குகள் இடம் பெற்றன. முஸ்லிம்களின் இந்தத் தொழில்முறைச் சங்கங்களைப் பற்றிய வர்ணனை இக்வான் அல்-ஸஃபா என்ற குழுவினரின் எட்டாவது கடிதத்தில் முதல் முதலாகக் காணப்படுகிறது. இந்தக் குழுவினரும் கரமேத் தியர்களாக இருந்திருக்கலாம் [ஆனால், இது உண்மையல்ல - ஆசிரியர்]. இந்தத் தொழில் அடிப்படைச் சங்க அமைப்பு ஐரோப்பாவுக்குப் பரவி அங்கு 'கில்டு' என்ற தொழில்முறைச் சங்கங்களும் ஃப்ரீமேஸன் (Freemason) என்ற அமைப்பும் தோன்றுவதற்கு முன்மாதிரியாக இருந்தன என்று மஸிக்னா (Massignon) கூறுகிறார்." [25]

அப்பாஸிட் பேரரசு மிகவும் பரந்து விரிந்ததாகவும் மிகவும் வித்தியாசமான பல்வேறு வகை மக்களை உள்ளடக்கியதாகவும் இருந்தது. கலீஃபாவுக்குக் கப்பம் செலுத்துவதும் மத ரீதியாக அவருக்கு விசுவாசமாக இருப்பதும் ஆகிய அம்சங்களே இவர்களிடையே பொதுவான இணைப்பாக இருந்தன. ஆனால், கடுமையான வசூல் முறைகளும் அளவுக்கதிமான சுரண்டல்களும் காரணமாக மக்களின் பல பிரிவினர் அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பல சமயங்களில் இந்தக் கிளர்ச்சிகள் மத உட்பிரிவுகளாக வடிவம் பெற்றன. நபாட்டிய விவசாயிகள் மிகவும் அமைதியற்றவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, கர்மத் கம்யூனிசக் கொள்கைகளைப் போதித்த போது அவர்களிடையே அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இஸ்லாமியல் அறிஞர்கள் பெரும்பாலானவர்கள் கராமிதா பிரிவின் தீவிரக் கொள்கைகள் காரணமாக அதன் மீது விரோத பாவம் காட்டியுள்ளார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை மிக இளப்பமாகக் குறிப்பிடுகிறார்கள். அமீர் அலி 'ஸாரஸன்களின் வரலாறு' (History of the Saracens) என்ற தமது புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்: "ஆப்பிரிக்காவில் ஃபாத்திமிடுகளின் ஆதிக்கமும், கம்யூனிச கரமேத்தியர்கள் தோன்றியதும் இந்த ஆட்சியில் தான் நடந்தன. கரமேத்தியர்கள் விரைவிலேயே அரேபியா, ஸிரியா, இராக் ஆகியவற்றில் எங்கும் கொள்ளையும் கொலையும் நடத்தி இறுதியாக முஸ்லிம் உலகத்துக்கே பெரும் நாசத்தை ஏற்படுத்தினார்கள். ...இவர்கள் தொடர்ந்து இவ்வாறே செயல்பட்டு, ஒவ்வொரு படையாகத் தோற்கடித்துக் கொண்டே வந்து இறுதியில் ஹிஜ்ரி 317-ஆம் ஆண்டில் (முக்தாதிர் ஆட்சியில்) திடீரென்று மக்கா மீது ஹஜ் யாத்திரையின் மிக முக்கியமான நாளன்று தாக்குதல் நடத்தி யாத்திரிகர்களைக் கொன்று காபாவின் புனிதத்தைக் கெடுத்து, காபா கருப்புக்கல்லைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள்." [26] கராமிதா

25. Hitti, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 445.
26. Ameer Ali, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 298.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவினர் செயல்பட்ட பகுதி இராக்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. அந்தப் பகுதியின் மக்கள் சமூக அமைப்பில் கீழ்ப்படியில் இருந்ததால், கருத்து வேறுபாடு கொண்ட பிரிவுகளுக்கும் புரட்சிக் கொள்கைகளுக்கும் அது எப்போதும் வாய்ப்பான இடமாக இருந்தது. கராமிதா சமுதாயம், உறுப்பினர்கள் அனைவரும் சமமானவர்கள், எல்லாச் சொத்துக்களும் எல்லோருக்கும் (சில காலம் வரை பெண்களுக்கும்) உடைமையானவை என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. தொழில்முறைக் குழுக்களாக அமைந்திருந்த தொழிலாளர்கள் போர்வீரர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் கிடைக்க உதவினார்கள். பொதுநிதி முதலில் மக்கள் தாமாகக் கொடுப்பதைக் கொண்டு அமைந்தது. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல வரிவிதிப்பை அதிகமாகச் சார்ந்திருக்கத் தொடங்கியது. இறுதியில் இவை மிகக் கடுமையாக விதிக்கப்பட்டன. குரானை ஓரளவுக்குப் பகுத்தறிவு முறையிலும் ஓரளவுக்கு உருவக முறையிலும் விளக்குவது சாதாரண விவசாயியின் அறிவுக்குப் புரியும் வகையில் எடுத்துக் கூறப்பட்டது. இஸ்மாயிலி பிரிவைச் சேர்ந்த பிரபல நூலாசிரியரும், பல இடங்களுக்கும் பயணம் செய்தவரும், நுட்பமாகக் கூர்ந்து கவனிப்பவருமான நாஸிர் குஸ்ரவ் (11-ஆம் நூற்றாண்டு) கரமேத்திய அரசு அமைப்பு முறை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: "அபூ ஸயீதின் ஆறு புதல்வர்களும் ஆட்சியைத் தங்களுக்குள் பொதுவாக வைத்து நடத்துகிறார்கள். அவர்களுடைய அரண்மனையில் அவர்கள் அமருவதற்கு ஒரு மேடை இருந்தது. அதில் அவர்கள் ஒரு சபையாக அமர்ந்து, தங்களுக்குள் உடன்பட்டு உத்தரவுகளை வெளியிடுகிறார்கள். இந்த இளவரசர்களுக்கு விலைக்கு வாங்கப்பட்ட 30,000 நீக்ரோ அடிமைகள் இருந்தார்கள். இவர்கள் விவசாயத்திலும் தோட்டவேலையிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள். மக்கள் வரிகளோ, பங்குப்பணங்களோ செலுத்த வேண்டியிருக்கவில்லை. யாரேனும் ஏழையாகிவிட்டால் அல்லது கடனாளியாகிவிட்டால், அவருடைய நிலைமை சீர்படும்வரை பொதுநிதியிலிருந்து முன்பணம் கொடுத்து உதவப்பட்டது. இந்த முன்பணத்தின் அசல் தொகையை மட்டுமே அவர் திருப்பிச் செலுத்த வேண்டும். வட்டி எதுவும் கிடையாது..."[27]

இவ்வாறாக கராமிதா இயக்கத்தினர் கொள்ளைக்காரர்களோ கொலைகாரர்களோ அல்ல என்பது தெரிகிறது. ஆனால் வரலாற்றாசிரியர்கள் அவர்களை அவ்வாறு கூறியதற்குக் காரணம் அவர்களது தீவிரக் கொள்கைகளும் சோஷலிசத் தத்துவங்களும்

27. Stephen and Nandy Ronart, *Concise Encyclopaedia of Arabic Civilization*, (Amsterdam, 1966), பக்கம் 433-34.

www.padippakam.com



காரணமாக அவர்கள் மேல் ஏற்பட்ட துவேஷமேயாகும். நாஸிர் குஸ்ரவ் கூறுவதை இலேசாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால் அவர் இஸ்மாயிலிகளின் மற்றொரு உட்பிரிவைச் சேர்ந்தவர். அவரது உட்பிரிவுக்கும் கராமிதாவுக்கும் இடையில் உறவுகள் சுமுகமானவை அல்ல. மேலும் அவர் துவேஷ மனப் பான்மை இல்லாமல் விஷயங்களை நுணுக்கமாக கவனிக்கும் இயல்பு உடையவர். குஸ்ரவ் தெரிவிக்கும் விவரங்களிலிருந்து கராமிதா இயக்கத்தினர் உருவாக்கிய "கம்யூனிஸத்தன்மை" கொண்ட அமைப்பிலும் கூட அடிமைகள் சமமாக நடத்தப்படவில்லை என்பதைக் காண்கிறோம். அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டு விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். அடிமை களைக் கருணையோடு நடத்த வேண்டும் என்று இஸ்லாம் கூறி யுள்ள போதிலும் இவ்வாறு நடந்திருக்கிறது. (நாம் ஏற்கெனவே பார்த்தபடி, இஸ்லாம், மக்கா காலத்தின் போது அடிமைகளை வைத்திருப்பதைத் தவிர்க்குமாறு கூறியதேயன்றி அடிமை முறையை முற்றிலுமாக ஒழித்துவிடவில்லை). ஆனால், கராமிதாவினர் அடிமைகளை எவ்வாறு நடத்தினார்கள் என்பது வரலாற்றாசிரி யர்களின் எழுத்துக்களிலிருந்து சரியாகத் தெரியவில்லை. டாக்டர் ஜாஹித் அலி (இவர் இஸ்மாயிலி ஆதரவாளர் என்று கூற முடியாது) கராமிதா அமைப்புப் பற்றிச் சில விவரங்கள் தெரிவிக்கிறார்: "இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தங்களுடைய அசையும் சொத்துக்கள் அசையாச் சொத்துக்கள் அனைத்தையும் தலைவரான தாயியின் கருவூலத்துக்கு அளித்துவிட வேண்டு மென்று கட்டளையிடப்பட்டது. யாரும் எந்த உடைமையும் வைத் துக் கொள்ளக்கூடாது. இதன் மூலம் நிதிவிஷயத்தில் யாருக்கும் மற்றவரைவிட எந்த அனுகூலமும் இராது. ஒவ்வொருவரும் தமது தேவைக்குத் தகுந்தபடி தாயியின் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு ஆதாரமாகக் குரானிலிருந்து ஒரு மேற்கோள் காட்டப்படுகிறது: 'இறைவன் உங்களுக்கு அளித் துள்ள கொடைகளை நினையுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாயிருந்தீர்கள். இறைவன் உங்கள் இதயங்களை சமரசப் படுத்தினான். அவனது கருணையால் நீங்கள் சகோதரர் ஆனீர்கள்.'

"மக்கள் தங்கள் உடைமைகளை வைத்துக்கொள்ள வேண்டிய தில்லை என்றும், ஏனென்றால் விரைவிலேயே அவர்கள் இந்த உலகத்துக்கே உடைமையாளர்கள் ஆகப் போகிறார்கள் என்றும் போதனை கூறப்பட்டது. இப்போதைய காலம் அவர்களுடைய மனப்பூர்வமான ஈடுபாட்டையும் உண்மையையும் சோதிக்கும் காலமாகும்... கிராமமக்கள் சம்பாதிக்கும் பொருள்களைச் சேகரித்து வருவதற்கு தாயி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் தாம் சேர்க்கும் நிதியிலிருந்து, பசித்தவர்களுக்கு உணவும், உடையில்லாதவர்

www.padippakam.com



களுக்கு உடையும், பலவீனர்களுக்கு உதவியும் அளிக்கும்படிக் கட்டளையிடப்பட்டது. இந்த ஏற்பாடு முழுவதும் மிக கவனமாகச் செயல்படுத்தப்பட்டதனால் இல்லாதவர்களாகவும் இரப்பவர் களாகவும் யாரும் இருக்கவில்லை. மக்கள் அனைவரும் தங்கள் கடமைகளை உடனுக்குடன் உறுதியாக நிறைவேற்றினார்கள்; திருப்தியாக வாழ்ந்தார்கள். ஏழைப் பெண்கள் கூட நூல் நூற்பதன் மூலம் கிடைத்த பணத்தை தாயியின் கருவூலத்தில் கொடுத்தார்கள். சிறுகுழந்தைகள் கூட பறவைகளைக் கவனித்துக் கொள்வதன் மூலம் பெற்ற ஊதியத்தை அவ்வாறே கருவூலத்தில் கொடுத்தார்கள்."[28]

இவ்வாறாக கராமிதா இயக்கம், சரித்திர ரீதியாக அப்போது சாத்தியமான அளவில் கம்யூனிசத்தன்மை கொண்ட சமூகம் ஒன்றை அமைத்திருந்ததைக் காண்கிறோம். கராமிதா இயக்கம் தனது செயல் களைக் குரானின் அடிப்படையிலும் நியாயப்படுத்தியது என்ப தில் சந்தேகம் இல்லை. இஸ்லாமில் நியாயம் என்ற தத்துவத்தை அவர்கள் வலியுறுத்தி அதற்கு ஆதரவான குரான் வாசகங்களை எடுத்துக்காட்டினார்கள். இபின் அதீர் ஒரு நிகழ்ச்சியைக் குறிப் பிடுகிறார்: கலீஃபா முக்ததிர் அப்பாஸியின் அமைச்சரான அலி பின் இஸாவுக்கு உடைமையாக ஏராளமான நிலம் இருந்தன. அவர் ஒருமுறை கரமேத்தியன் ஒருவரைப் பிடித்து அவர் அந்த இயக்கத்தில் சேர்ந்ததற்கு என்ன காரணம் என்று கேட்டார். அதற்கு அவர் தாம் பின்பற்றுவதுதான் உண்மையான மதம் என்றும், அமைச்சரும் அவரது தலைவரும் (அதாவது, கலீஃபாவும்) விசு வாசிகளல்ல (காஃபிர்கள்) என்றும் கூறினார். அதற்குக் காரணம் அவர்கள் தங்களுடையது அல்லாததை (மக்களிடமிருந்து) எடுத் துக் கொள்கிறார்கள் என்றும் பதில் கூறினார். இதிலிருந்து கர மேத்தியாவினர் இஸ்லாம் கூறும் நியாயதத்துவத்தைச் செயல் படுத்தினார்கள் என்றும், அவர்களது எதிரிகள் கூறியது போல ஷரீயாவுக்கு எதிராகச் செயல்படவில்லை என்றும் தெரிகிறது.[29] சிறு விவசாயிகளும், தொழிலாளர்களும் இத்தகைய முயற்சியில் ஈடுபடுவதைக் கண்டு அப்பாஸிட் ஆட்சியாளர்கள் பீதியடைந் திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சுரண்டலில் வாழும் ஆட்சியாளர்கள் வழக்கமாகச் செய்வது போல அந்த இயக்கத்தை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று முயன்றிருப்பார்கள். கராமிதா இதை எதிர்த்துப் பதிலடி கொடுத்திருக்கும். வரலாற் றாசிரியர்கள் தங்களுடைய வர்க்கதுவேஷத்துக்கு இரையாகி, கராமிதா மீது இழைக்கப்பட்ட வன்முறைகளை விட்டுவிட்டு அவர்கள் பதிலடியாகச் செய்த வன்முறைகளை மட்டும் கடுமையாகக்

28. Dr. Zāhid Husayn, *Tārikh Fatimiyeen–e–Misr,* (Karachi, 1963) பக்கம் 436—7.
29. பார்க்க: Mahmoud Ismāil, *Al-Harakāt al-Sirriyah fi'Islam (Cairo, 1973)* பக்கம் 192.

www.padippakam.com



கண்டித்திருக்கிறார்கள். ஆனால் இது ஒன்றும் புதியதல்ல, எப்போதும் நடப்பதுதான். சக்திமிக்க ஒரு பேரரசை எதிர்த்து அவ்வளவு காலம் நிற்க முடிந்தது என்பதும், மக்கா போன்ற முக்கிய நகரங்களைக் கைப்பற்ற முடிந்தது என்பதும் அவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவு இருந்ததையே காட்டுகின்றன. கராமிதா இயக்கத்தினர் கட்டுப்பாடற்ற பாலுறவு முறையைப் பின்பற்றியதாகவும் பொதுவான மனைவிகளை வைத்திருந்ததாகவும் வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால், இதற்கு ஆதரவாக எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை. இது வரலாற்றாசிரியர்களின் கற்பனையைத் தவிர வேறொன்றுமில்லை. அதே சமயம் இதை நிச்சயமாக மறுப்பதற்கும் ஆதாரங்கள் இல்லை. கரமேத்தியர்கள் பொதுவான சமுதாயக் குடியிருப்பில் வசித்ததனால், பொதுவான மனைவிகள் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் நினைத்திருக்கலாம். ஆனால் இது உண்மையாயிருக்க முடியாது. சில வரலாற்றாசிரியர்கள் வேண்டுமென்றே பழிகூறும் எண்ணம் காரணமாகவோ, உண்மையை அறியாத காரணத்தினாலோ பொதுவாகவே இஸ்மாயிலிகள் பெண்களைப் பொதுவுடைமையாக வைத்திருந்ததாகவும் சோஷலிச மாதிரியிலான சமூக அமைப்பைக் கொண்டிருந்ததாகவும் குறை கூறுகிறார்கள். இவ்வாறாக ஜோயல் கார்மிக்கேல் எழுதுகிறார்: "பத்தாவது நூற்றாண்டின் தொடக்கத்துக்குள் (அப்பாஸிட்) பேரரசு கடுமையான சமூக நெருக்கடியை எதிர்கொண்டது. விவசாயிகளும் அடிமைகளும் தோற்கடிக்கப்பட்டு அரசின் மேல் சினம் கொண்டிருந்தார்கள். உழைப்பும் மூலதனமும் மேலும் மேலும் ஒரு சில இடங்களில் குவிந்து வந்ததனால் நகரங்களில் பெரும் எண்ணிக்கையில் வசித்த தொழிலாளர்களும் மனக்கொதிப்பு அடைந்திருந்தார்கள். இவ்வாறாக சமூகத்தில் இருந்த அதிருப்தியில் பெரும்பகுதியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இஸ்மாயிலி பிரிவின் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் காலத்தின் சமூகச் சீர்கேட்டினால் பாதிக்கப்பட்டுத் துன்பத்துக்குள்ளாகியிருந்த சாதாரண மக்கள் இதனால் கவரப்பட்டார்கள். விவசாயிகளிடையே கணிசமான ஆதரவுடன் தொடங்கிய இஸ்மாயிலி இயக்கம் படிப்படியாக நகர்ப்புறத் தொழிலாளர்களிடையே, குறிப்பாக கைவினைஞர்களிடையே தனது புரட்சிகர கருத்துக்களைப் பரப்பி ஊடுருவியது. இஸ்லாமிய தொழில்முறைச் சங்கங்கள் சிலவற்றை இஸ்மாயிலிகளே உருவாக்கியதாகத் தோன்றுகிறது; எப்படியானாலும் தங்கள் மதப் பிரிவில் அவர்கள் அதை இணைத்துக் கொண்டார்கள். இந்தப் பிரிவினர் கம்யூனிசத்தைக் கடைப்பிடித்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அதைவிட ஆச்சரியமாக, அவர்கள் பெண்களைப் பொது உடைமையாக வைத்திருந்ததாக, அதாவது கட்டுப்பாடற்ற

www.padippakam.com



பாலுறவு முறையைப் பின்பற்றியதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இவையெல்லாம், கீழ்மட்டத்து மக்களின் கஷ்டங்களைத் தணிக்க ஏதேனும் ஒருவகை சமூக நலத்திட்டங்களை அவர்கள் செயல்படுத் தினார்கள் என்பதையும், இஸ்லாமில் அப்போது பெண்களுக்கு இருந்ததைவிட உயர்வான அந்தஸ்தை அளிக்க முயன்றார்கள் என்பதையுமே காட்டுவதாகலாம்."[30] இந்தத் தீவிர இயக்கம் தோன்றி வளர்ந்த விதம் பற்றி இவர் கூறுவது முற்றிலும் சரியாக உள்ள போதிலும், இஸ்மாயிலிகளையும் கராமிதாவினரையும் ஒன்றாகக் கருதிக் குழப்பிக்கொள்வதாகத் தோன்றுகிறது. கராமிதா இயக்கம் இஸ்மாயிலி பிரிவின் ஒரு உட்பிரிவாகும். சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கூட இரண்டையும் ஒன்றாகக் கருதிக் குழப்பி யிருக்கிறார்கள்.

அப்பாஸிட் பேரரசை உலுக்கிய மற்றொரு கிளர்ச்சி நீக்ரோ அடிமைகளின் கிளர்ச்சியாகும். இது ஸஞ்ச் (Zanj) கிளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இது கி.பி. 869 முதல் 883 வரை பதினான்காண்டு காலம் நீடித்தது. இஸ்லாமிய சமூகத்தில் எப்போதுமே அடிமைகள் இருந்தார்கள் என்றாலும் ரோமானிய சமூகத்தில் இருந்தது போல அவர்கள் முக்கியமான உற்பத்திக் காரணியாக இருக்கவில்லை. இஸ்லாமியப் பேரரசில் பொருளாதார உபரியின் கணிசமான பகுதி வர்த்தகத்தின் மூலம் கிடைத்தது. அதனால்தான் விவசாயி களைச் சுரண்டுவதன் மூலம் உபரி பெறுகின்ற நிலப்பிரபுத்துவ சமூகங்களைவிட அதிகமாக இஸ்லாமிய சமூகம் செயல்திறன் கொண்டிருந்தது. ஆயினும், இஸ்லாமிய சமூகத்திலும் கூட உபரியின் ஒரு பகுதி உணவுதானியங்களையும் வேறு பணப்பயிர்களையும் உற்பத்தி செய்த விவசாயிகளிடமிருந்து கிடைத்தது. இவர்கள் சுதந்திரமானவர்களாக அல்லது ஓரளவு சுதந்திரமானவர்களாக இருந்தனர். அடிமைகள் பொதுவாக வீட்டு வேலைகளுக்கு அல்லது ராணுவ காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். ராணுவ காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டவர்கள் மம்லூக்குகள் (Mamlūks) எனப்பட்டார்கள். இவர்கள் உண்மையில் பல்வேறு சலுகைகளைப் பெற்ற ராணுவ சாதியாகவே இருந்தார்கள். இஸ்லாமிய அரசு தன்னுடைய ஆரம்பகாலத்தில் வர்த்தக வர்க்கத்தினரின் நலன்களை நல்ல முறையில் கவனித்துக்கொண்டது. ஏனென்றால் அரேபிய சமூகத்தில் அப்போது இவர்களைத் தவிர தனிப்பட்ட நலன்கள் கொண்டதாகக் குறிப்பிடத்தக்க வேறு வர்க்கங்கள் எது வும் இல்லை. ஆனால், காலம் செல்லச் செல்ல இஸ்லாமிய அரசில் புதிய நாடுகள் சேர்க்கப்பட்டு வர்த்தகம் விரிவடைந்த போதிலும், வர்த்தக வர்க்கத்துக்கு அரசில் இருந்த செல்வாக்கு கொஞ்சம்

30. Joel Carmichael, *The Shaping of the Arabs*, பக்கம் 239-40.

www.padippakam.com



கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. இதற்கு ஒரு முக்கிய காரணம் வெளிநாட்டு வெற்றிகளுக்குக் காரணமான ராணுவத்தின் செல் வாக்கு உயர்ந்து வந்ததாகும். போர் மூலம் கைப்பற்றப்பட்ட புதிய நாடுகளை அடக்கிஆள்வதற்கு அங்கே பெருமளவில் ராணுவங்களை நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. ராணுவம் போரைத் தொழிலாக எடுத்துக்கொண்ட வீரர்களைக்கொண்டு அமைக்கப்பட்டதாக மாறிவிட்டதால், அதில் சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய ஆசியாவையும் மற்ற இடங்களையும் சேர்ந்த அடிமைகளாக இருந்தார்கள். அப்பாஸிட் பேரரசின் பிற் காலத்தில் 'மம்லூக்' என்ற இந்த அடிமைகள் மிகவும் சக்தி பெற்ற வர்களாகி உண்மையான ஆட்சி அதிகாரம் அவர்கள் கையில் இருந்தது. கலீஃபா முன்பு இருந்தது போல அதிகாரம் பெற்றவ ராக அன்றி வெறும் நிழலாக மாறிவிட்டார். கலீஃபாவின் மெய் காவல் படையினராக இருந்த இந்த அடிமைகள் இவ்வாறு அதிகாரம் படைத்தவர்கள் ஆனதற்கு மற்றொரு காரணம் கலீஃபா பதவி யின் அதிகாரம் அவரது மதத்தலைமை காரணமாகக் கிடைத்த தாகும். அதிகார சமநிலை ஏற்படுத்தும் வகையில் நிலப்பிரபுத்துவ நில உடைமை வர்க்கம் இல்லை. எனவே, கலீஃபா பலவீனமான வராக இருந்தால் உண்மையான அதிகாரம் அவரது மெய்காவல் படையினரிடம் சேர்ந்தது. இவர்கள் பிற்காலத்தில் கலீஃபாக் களையும் ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றவர்களானார்கள்.

இனி ஸஞ்ச் கிளர்ச்சியைத் தொடர்ந்து கவனிப்போம். அப் பாஸிட் பேரரசில் அடிமைகளின் வாழ்க்கையில் இருந்த மற்றொரு பக்கத்தைக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட விவசாயத் தொழில் களில் பெரும் எண்ணிக்கையில் அடிமைகள் ஓரிடத்தில் கூடி வேலை செய்ய வேண்டியிருந்தது. பெருமளவில் நடந்த வர்த்தகங்கள் மூலம் கிடைத்த செல்வங்கள் விவசாயத் தொழிலில் முதலீடு செய் யப்பட்டன. விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்ட அடிமைகள் ஆயிரக் கணக்கானவர்கள் ஒரு குடியிருப்பாகச் சேர்ந்து வசித்துக் கொண்டு ஒரு நிலச்சொந்தக்காரருக்கு வேலை செய்தார்கள். இந்த அடிமைகள் கிழக்கு ஆப்பிரிக்காவில் பிடிக்கப்பட்டவர்கள், அல்லது அப்பாஸிட் பேரரசுக்கு உட்பட்ட வெளிநாடுகளிலிருந்து கப்பமாகப் பெறப் பட்டவர்கள். பஸ்ரா நகருக்குக் கிழக்கே பெரும்பரப்பு உப்புநீர்ச் சதுப்பு நிலமாக இருந்தது. இந்த நிலங்களிலிருந்து தண்ணீரை வடித்து அதை விவசாயத்துக்குத் தகுதியாக்கும் வேலையிலும்,. உப்பைப் பிரித்தெடுத்து விற்பனைக்கு அனுப்பும் வேலையிலும் லட்சக்கணக்கான அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இவர் களுடைய நிலைமை மிக மோசமாக இருந்தது. மேலும் இவர்கள் புதிதாக வந்தவர்களாதலால் அங்கு பேசப்படும் மொழி கூடத் தெரியாதவர்களாகவும் அங்குள்ள சமூகத்துக்கும் மதத்துக்கும்

www.padippakam.com



அந்நியமானவர்களாகவும் இருந்தார்கள். அலீ பின் முகமது என்பவர் (இவர் அரேபியரா, பாரசீகரா என்று தெரியவில்லை; சில வரலாற்றாசிரியர்கள் இவர் கலப்பு இனத்தவர் என்று கூறுகிறார்கள்), இவர்களைத் தங்களுடைய எஜமானர்களுக்கெதிராக ஒன்று திரட்டினார். இவர் ஸாஹிப் அல்-ஸஞ்ஜ், அதாவது, ஸஞ்ஜ் தலைவர் என்று அழைக்கப்பட்டார். அவர் சீர்திருத்தக் கொள்கை எதையும் போதிக்கவில்லை. அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்றும் கூறவில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி நடத்தினால் அவர்களின் நிலை மேம்படும் என்று வாக்களித்தார். தபரி அவரை ஏமாற்றுக்காரர் என்றும் அல்லாஹ்வின் எதிரி என்றும் கண்டனம் செய்தார்.[31] ஆனால், அடிமைகள் அவரைத் தங்களுக்கு விடுதலையளிக்கக் கடவுள் அளித்த தலைவராகக் கருதி அவருடைய கொடியின் கீழ் ஒன்றுபட்டார்கள். அவர், தீர்க்கதரிசியின் மருமகனான அலீயைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்ட போதிலும் ஷீயாக்களுடன் சேரவில்லை. அடிமைகளின் பிரச்சினை முற்றிலும் வேறாக இருந்ததே இதற்குக் காரணம். சமத்துவக் கொள்கையை வலியுறுத்தி ஆட்சி முறை அமைப்பை எதிர்ப்பவர்களும் ஷீயாக்களை ஆதரிப்பதற்கு பதிலாக எதிர்ப்பவர்களுமான கரிஜைட்டுகளுடன் அவர் சேர்ந்துகொண்டார். ஷீயாக்கள் பிறப்பின் மூலம் தலைமைப் பதவி பெறுவதை ஆதரித்தார்கள் என்பதும் கரிஜைட்டுகள் ஒரு நபரின் தகுதியைத்தான் கருத வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தார்கள் என்பதும் இதற்குக் காரணமாயிருக்கலாம். கரிஜைட்டுகள் மற்ற எல்லா முஸ்லிம்களையும், முஸ்லிமல்லாதவர்களைப் போலவே கருதினார்கள். ஸஞ்ஜ் இயக்கம் அவர்களைப் பின்பற்றியது. இதன்படி, பிடிக்கப்படும் எல்லா முஸ்லிம்களும் அடிமையாவதற்கோ கொல்லப்படுவதற்கோ உரியவர்களே.

இந்த இயக்கம் பெரும் வெற்றியுடன் விரைவாகப் பரவியது. இதை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட கறுப்பின மக்களைக் கொண்ட ராணுவம் இவர்களுடன் சேர்ந்து கொண்ட நிகழ்ச்சி, இதன் புரட்சிக் கருத்துக்களின் வெற்றியை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. சுதந்திரமான சில விவசாயிகள் கூட இதில் சேர்ந்தார்கள். நில உடைமை வர்க்கத்தின் மேல் அவர்களுக்கு இருந்த கோபம் இதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். கி.பி.870-க்குள் ஸஞ்ஜ் இயக்கம் உபுல்லா என்ற முக்கிய துறைமுகத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தென்மேற்கு பாரசீகத்திற்குள் பரவி, இஸ்லாமியப் பேரரசுக்கே ஒரு பெரிய அபாயமாக வளர்ந்துவிட்டது. அடுத்த ஆண்டில் அவர்கள் பஸ்ரா நகரைக் கைப்பற்றினார்கள். அந்நகரைக் கொள்ளையடித்துவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். கி.பி.879 ஆம் ஆண்டுக்குள்

31. Tabari, Vol.iii பக்கம் 1785-6.

www.padippakam.com



அவர்கள், பேரரசின் தலைநகரான பக்தாதுக்கு அருகே பதினேழு மைல் தூரம்வரை சென்று கொள்ளையடித்துச் சென்றார்கள்.[32] இந்த ஆபத்தான கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு கலீஃபாவின் சகோதரர் அல்-முவுஃபக், நடவடிக்கைகளைத் தம் பொறுப்பில் எடுத்து நடத்த வேண்டியிருந்தது. கடைசியாக, கி.பி.883-இல் கிளர்ச்சி இயக்கத்தின் தலைவர் கட்டியிருந்த அல்-முக்தராஹ் என்ற கோட்டை கைப்பற்றப்பட்டு அவரும் கொல்லப்பட்டார். இவ்வாறாக, முஸ்லிம் வரலாற்றிலேயே மிகவும் புரட்சிகரமான, மிகக் கடுமையான எதிர்ப்பு இயக்கங்களில் ஒன்றாகக் குறிப்பிடப் படும் இந்த இயக்கம் முடிவுபெற்றது. சக்திவாய்ந்த பேரரசின் ராணுவ பலத்தை எதிர்த்து பதினைந்து ஆண்டுகள் இந்த இயக்கம் நீடிக்க முடிந்தது என்பதே அதன் புரட்சித்தன்மைக்கு இருந்த பேராதரவைக் காட்டுகிறது.

மேலும் சில சிறிய, பெரிய கிளர்ச்சிகளும் நடைபெற்றன. அநேகமாக இவை எல்லாமே இராக் அல்லது பாரசீகத்தை மைய மாகக் கொண்டே நடைபெற்றன. இஸ்லாம் தோன்றிய அரேபியா வில் அநேகமாக கிளர்ச்சி எதுவும் நடக்கவில்லை. பேரரசின் அரேபியரல்லாத மக்கள் அரேபிய ஆதிக்கத்தின் மேல் வெறுப்புக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். ஃபரூக் உமர், 'அப்பாஸிடு களின் ஆரம்பகாலத்தில் நடந்த இரானிய கிளர்ச்சிகளின் இயல்பு' என்பது பற்றி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இவ்வாறு கூறு கிறார்: "அப்பாஸிடுகள் ஆட்சிக்கு வந்ததும், அரேபியர், அரேபிய ரல்லாதோர் ஆகிய எல்லா மக்களும், சமத்துவமும் செழிப்பும் கொண்ட புதிய சகாப்தம் தொடங்கும் என்று எதிர்பார்த்தார்கள். இந்த எதிர்பார்ப்பு உணர்வை அடக்கிவிட இயலாது. இரானில் மத்திய அரசுக்கு இரண்டுவிதமான பிரச்சினைகள் இருந்தன. (1) மக்களின் கிளர்ச்சி. அப்பாஸிட் கிளர்ச்சியின் மூலம் மக்களிடையே தங்கள் வாழ்க்கை நிலை உயரும் என்று ஏற்பட்டிருந்த நம்பிக்கை யின் காரணமாக அப்பாஸிட் கிளர்ச்சியின் தொடர்ச்சியாகவும், அதன் விளைவாகவும் இது ஏற்பட்டது. (2) மத்திய அரசுக்கும் காஸ்பியன் கடல் பகுதியில் உள்ள தகரிஸ்தான், டைலாம், ட்ரான்ஸ் ஆக்ஸானியா பிராந்தியங்களின் உள்ளூர் அரசர்களுக்குமிடையே நடந்த போராட்டங்கள். அரேபியர்களின் ஆட்சியை ஏற்படுத்து வது என்றால் இஸ்லாமைப் புகுத்துவதும் அதன் ஒரு அம்சமே. ஆனால், அந்தப் பகுதி மக்கள் அந்நிய ஆட்சியாளர்களின் அடக்கு முறையுடன் தொடர்புள்ள அந்த மதத்தையும் எதிர்த்தார்கள். முஸ்லிம்கள் அந்தப் பிராந்தியங்களைக் கைப்பற்றிய பின்பும் அங்கிருந்த சமூக அமைப்பு தொடர்ந்து நீடித்தது. இரானிய

32 Carmichael, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 237-8.

www.padippakam.com



கிராம நிலப்பிரபுக்கள் இஸ்லாமைத் தழுவிக்கொண்டு அரபு ஆட்சியாளர்களுடன் ஒத்துழைத்தார்கள்."[33] கட்டுரையின் அடிக் குறிப்பில் ஆசிரியர் இபின் குத்தைபாவை (Ibn Qutaybah) மேற் கோள்காட்டி, அரேபிய ஆளும் வர்க்கத்தை மக்கள்தான் வெறுத் தார்களேயன்றி பிரபுவர்க்கத்தினர் வெறுக்கவில்லை என்று சுட் டிக்காட்டுகிறார்.[34] இந்தக் காரணத்தினால்தான் அப்பாஸிடுகளுக்கு எதிரான பெரும்பாலான இயக்கங்களில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப் பட்ட மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டார்கள்.

உமர் ஃபரூக் மேலும் எழுதுகிறார்: "ஸோன்பாத், உஸ்தாத் ஸீஸ், அல்-முகன்னா போன்ற இயக்கங்களை ஆராய்ந்து பார்த்தால் அவையெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கு மிடையில் நடந்த போராட்டங்களாக இருப்பதைக் காணலாம். மக்கள் அல்லது ஆட்சியாளர்கள் அரேபியர்களா, அல்லது அரே பியரல்லாதவரா என்பதைப் பொறுத்தவை அல்ல அவை. பொது வாக அவை இன அடிப்படையில் அல்லாமல், சமூக, பொருளா தார காரணங்களால் நடைபெற்றன. மக்கள், உள்ளூர் கிளர்ச்சி யாளர்களான, பிஹாஃபாரித், உஸ்தாத் ஸீஸ், ஸோன்பாத், இஸ்ஹாக் அல் துர்க், அல்-முகன்னா போன்றவர்கள் நடத்திய கிளர்ச்சிகளில் கலந்துகொண்டார்கள், அல்லது ஸீஸ்தானிலும் குராஸானிலும் கரிஜைட்களுடனும், குராஸானிலும் டைலாமிலும் அலீதுகளுட னும் சேர்ந்துகொண்டார்கள். மற்றொருபுறம் அவர்கள், ஜவ்ஹர் அல்-இஜ்லீ, அப்துல் ஜப்பார் அல்-அஜ்தீ, ரஃபிபின் அல்-லைத் போன்ற அரபு கிளர்ச்சிக்காரர்களுக்கும் ஆதரவளித்தார்கள். ஆளுநர் மத்திய ஆட்சிக்கு விசுவாசமாக இருந்தால் அவர்கள் அவரை எதிர்த்தார்கள்; மத்திய அரசை அவர் எதிர்த்தால் அவர்கள் அவரை ஆதரித்தார்கள்." இந்தக் கிளர்ச்சிகள், பல மேற்கத்தி இஸ்லாமியல் அறிஞர்கள் கூறுவது போல, முற்றிலும் இன அடிப் படையில் மட்டும் நடந்தவை என்பதை உமர் ஃபரூக் மறுத்து, முக்கியமாக அவை, ஸஞ்ஜ் கிளர்ச்சியைப் போல, சமூக, பொருளாதார காரணங்களால் நடந்தவை என்று கூறுவது மிகவும் சரியானது.

மற்ற கிளர்ச்சிகளில் ஹுருஃபியா (Hurufiyah) கிளர்ச்சியும், பஸிகனியான் (Pasikhaniyan) கிளர்ச்சியும் குறிப்பிடத்தக்கவை. ஆனால், இவற்றைப் பற்றி அதிகமாக எழுதப்படவில்லை. ஹுருஃபியா இயக்கத்தை நிறுவியவர் ஃபத்லுல்லாஹ் நயீமீ (Fadlullah Naimi) என்பவர். தொப்பி தைப்பது அவர் தொழில்.

33. Faroukh Omar, "The Nature of the Iranian Revolts in the Early Abbasid Period," article in *Islamic Culture*, Vol.XL VIII, No.1, January 1974.

34. மேற்படி பக்கம் 344-5.

படிப்பகம்

www.padippakam.com



அவர் இரானின் ஒரு மாகாணமான அஸ்த்ராபாதில் பிறந்தவர். ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் நடந்த அவரது இயக்கத்தில் பெரும்பாலும் நகர்ப்புற கைவினைஞர்கள் கலந்து கொண்டார்கள். நயீமீ ஒரு கவிஞருமாவார். அவர் கீழ்த்திசை நகரங்கள் பலவற்றுக்கும் சென்று முற்போக்கான மனப்பாங்கை வளர்த்துக்கொண்டவர். மனிதன் எல்லாவற்றுக்கும் ஒரு அளவுகோல் என்றும் மதத்துக்கும் தத்துவஞானத்துக்கும் அடிப்படை முக்கியத்துவம் உள்ளவன் என்றும் அவர் கூறினார். ஒருவகையில் பார்த்தால் அவரது கொள்கை ஹல்லஜின் (Hallaj) வாக்கியமான 'அனல் ஹக்' (ana'l haq) அதாவது, 'நானே உண்மை' என்பதை ஆதரிப்பதாக இருந்தது. அவருடைய பல கவிதைகள் இந்தக் கருத்தை மிக உணர்ச்சியுடனும் வன்மையாகவும் வெளியிடுகின்றன.[35] 'நன்று', 'தீது' என்பவை புறத்தேயிருந்து பிறர்தர வருவன அல்ல என்றும் அவை நம்மில் அகத்தேயே உள்ளன என்றும் ஃபத்லுல்லாஹ் கூறுகிறார். அவர் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கெதிராகக் கிளர்ச்சி செய்கிறார். அவரது கவிதை ஒன்றில் 'கைஸரின் மகுடத்தின் மீது நான் உமிழ்கிறேன்' என்று அவர் கூறுகிறார்.[36]

ஹுருஃபியாவின் மற்றொரு முக்கிய தலைவர் இமாதுத் தீன் நஸீமீ ('Imadud Din Nasīmi). அவர் ஒரு பொருள்முதல்வாதி. பொருள் என்றும் உள்ளது என்றும் அதன் வடிவம் மட்டுமே மாறுகிறது என்றும் அவர் கூறினார். அதனால் அந்த இயக்கத்தின் தலைவர்களும் அதைப் பின்பற்றியவர்களும் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டன. அவர்களது இயக்கம் தலைமறைவாகச் செயல்பட்டது என்று அப்துர் ரஜாக் ஸாமர்கண்டி கூறுகிறார்.[37]

முன் ஒரு அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல அப்பாஸிடுகள் தங்களுக்காக குராஸானில் ஆதரவு திரட்டிய தங்களுடைய தலைமை பிரசாரகர் அபூ முஸ்லிம் குராஸானியை, தாங்கள் பதவிக்கு வந்த பின் சிரச்சேதம் செய்துவிட்டார்கள். ஆனால், விரைவிலேயே பாரசீக மக்கள் அப்பாஸிட் ஆட்சியின் சுரண்டல் தன்மையை உணர்ந்தார்கள். அவர்கள் இப்போது அபூ முஸ்லிமை ஒரு வீரத் தலைவராகக் கருதினார்கள். அவரைச்சுற்றி பற்பல கதைகள் உருவாயின. இரானியர்களின் இலட்சியங்களுக்கு அவர் ஒரு அடையாளச்சின்னம் ஆனார். அவர்களில் சிலர் அவர் கொல்லப்பட்டார் என்பதைக் கூட நம்ப மறுத்தார்கள். அப்பாஸிடுகளுக்கெதிரான பல கிளர்ச்சிகளில், அவர்கள் அபூ முஸ்லிமைக் கொல்ல முடிய

35. பார்க்க: 'Ali Mir Fitros *Jumbish-e-Hurufiyah wa* Nahdat-e-Pasikhaniyan Intisharat-i-Kar n.d., பக்கம் 51.

36. மேற்படி, பக்கம் 56.

37. மேற்படி, பக்கம் 59

www.padippakam.com



வில்லை என்றும் அவருக்கு பதிலாக வேறொருவர் கொல்லப்பட்டார் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது. ஒரு நாள் அவர் மீண்டும் வருவார் என்று அவர்கள் நம்பினார்கள். அரசியல் நிலைமை மேலும் மேலும் மோசமடைய இந்த நம்பிக்கை மேலும் உறுதியாக வேரூன்றியது. சிலர் அவரை ஒரு தெய்வமாக மாற்றி, தங்களுடைய மீட்பரான ஜொராஸ்டருக்கு அடுத்தபடியாக வந்திருக்கும் மீட்பராகக் கருதினார்கள். பாரசீகத்தில் ஜொராஸ்ட்ரிய மதத்தைப் பின் தள்ளி இஸ்லாம் நிலை நிறுத்தப்பட்டிருந்தபோதிலும், பாரசீக மக்கள் பலர் ஜொராஸ்டர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையை விடாமலிருந்தது குறிப்பிடத்தக்கது. ட்ரான்ஸ் ஆக்ஸானியாவில் இஸ்ஹாக் அல்-துர்க் தலைமையில் நடந்த கிளர்ச்சியின் முக்கிய அம்சம், அபூ முஸ்லிம் இன்னமும் உயிருடன் இருக்கிறார், திரும்பி வந்து தமது மதத்தை மீண்டும் நிலைநிறுத்துவார் என்றும் பரப்பப்பட்ட நம்பிக்கையாகும்.[38]

பாரசீகம் இஸ்லாமை ஏற்றுக்கொள்ளச் செய்த காரணங்கள் என்ன? பொருளாதார மாறுதல் காரணமா? அப்படியானால் என்ன பொருளாதார மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன? மாண்ட்காமரி வாட் ஒரு கருத்தைக் கூறுகிறார். அதை முன் ஒரு அத்தியாயத்தில் விவாதித்தோம். அவர் கூறுவது: "பொருளாதார மாற்றங்கள் எப்போதுமே மத மாற்றங்களுக்குக் காரணமாகின்றனவா என்று கேட்டால், சுருக்கமாக ஒரு ஆய்வு செய்யும் போது பின்வரும் விடை கிடைக்கிறது: பொருளாதார மாற்றம், உற்பத்தி சாதனங்களில் மாற்றமாக அமைந்தால், அதன் மூலம் சமூக விளைவுகள் ஏற்படுகின்றன; இந்த மாறுதல்கள் காரணமாக மதமும் மாறுகிறது. இவ்வாறில்லாமல், பொருளாதார மாற்றம் ஆட்சியாளர் மாறுவதாக அமைந்தால், அதன் விளைவு புதிய ஆட்சியாளர் பழைய ஆட்சியாளரைப் போன்றவரா அல்லது வேறு மாதிரியானவரா என்பதைப் பொறுத்ததாகத் தோன்றுகிறது. இந்த வகையில், மத்தியகால ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ முறையின் பிரபுக்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களே. ஆனால் பாரசீகத்தை வெற்றிகண்ட முஸ்லிம்கள், பாரசீகத்தின் பழைய ஆட்சியாளர்களைப் போலன்றி வேறுபட்ட சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள். எனவே நாளடைவில் இவர்களின் வெற்றியின் காரணமாக மதமும் மாறியது."[39] பாரசீகத்தைப் பொறுத்தமட்டில் பேராசிரியர் வாட்டின் கருத்துச் சரியாக இருக்கிறது. ஆனால் ஸ்பெயினில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு அதைப் பொருத்திப் பார்த்தால் அது பொருந்தவில்லை. ஸ்பெயினிலும்

38. Ibn al-Nadīm, *Fihrist*, Vol.1, பக்கம் 344 முதல்; Tabari III பக்கம் 147.
39. Watt, முன்பு குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 33.

படிப்பகம்

www.padippakam.com



அரபு ஆட்சியாளர்கள், அதன் பழைய ஆட்சியாளர்களிலிருந்தும் அந்நாட்டின் மக்களிலிருந்தும் மாறுபட்ட கலாசார முறைமையைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். ஆயினும் ஸ்பெயினில் அரபு செல்வாக்கு நகர எல்லைகளுக்கு வெளியே பரவவில்லை; ஸ்பெயினில் விவசாய மக்கள் இஸ்லாமுக்கு மாறிவிடவில்லை. இந்தக் காரணத்தினால்தான் ஸ்பெயினில் அரேபியர்களின் ஆட்சி தூக்கியெறியப் பட்டவுடன் இஸ்லாமும் தனது பிடியை இழந்துவிட்டது. எனவே இந்தப் பிரச்சினை பேராசிரியர் வாட் கூறுவதை விட மிகச் சிக்கலானது. அவர் கூறும் கருத்துடன் மேலும் ஒரு அம்சத்தைச் சேர்த்தால் நமது பிரச்சினைக்கு விடை கிடைக்கும் என்று நினைக்கிறேன்: ஆட்சியாளர் மாறும் போது புதிய ஆட்சியாளர் பழைய ஆட்சியாளரிலிருந்து மாறுபட்ட சமூக அமைப்பைச் சேர்ந்தவராயிருந்து, பழைய ஆட்சியாளரின் மதம், அரசின் அடக்குமுறை அமைப்புடன் ஒன்றிணைந்ததாக மக்கள் மனத்தில் பதிந்திருந்தால், ஆட்சியாளர் மாற்றத்துடன் மதமாற்றமும் ஏற்படும். பாரசீகத்தில் இஸ்லாம் தோன்றுவதற்கு முன் ஜொராஸ்ட்ரிய மதம் அந்நாட்டின் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக்கு ஒரு கருவியாகப் பயன்பட்டது. ஆனால் ஸ்பெயினில் கிறிஸ்தவம் அவ்வாறு இல்லை. பாரசீகத்தில் இஸ்லாம் அடக்குமுறைக் கருவியாக, அதுவும் அந்நிய ஆட்சியாளர்களின் கருவியாக மாறிவிட்டது. எனவே அதன் எதிர் விளைவாக பாரசீகத்தில் ஜொராஸ்ட்ரிய மதம், மஜ்டக் மதம் போன்ற பழைய உள்நாட்டு மதங்கள் மீண்டும் மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கின. அபூ முஸ்லிம், ஜொராஸ்டரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்று பல எதிர்ப்பு இயக்கங்கள் பிரசாரம் செய்தன என்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

இதுவரை, உமய்யத் மற்றும் அப்பாஸிட் ஆட்சியாளர்களுக்கெதிராக, சுரண்டப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் பங்கெடுத்த புரட்சி இயக்கங்கள், வெற்றி பெறாமல் போன கிளர்ச்சிகள் ஆகியவற்றைச் சுருக்கமாக விவரித்தோம். அரேபியரல்லாத மேல் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் அப்பாஸிட் ஆட்சியின் போது தங்களுடைய வர்க்கத்தின் இயல்புப்படி, இந்தக் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளாமல், கடுமையில்லாத முறையில் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த வகையில் "ஷுபிய்யா" (Shu'ūbiyya) என்ற இயக்கம் தொடங்கப்பட்டது. இது ஒரு இலக்கிய இயக்கமாக, அரபு ஆதிக்கத்தினால் காயப்படுத்தப்பட்ட பாரசீக தேசிய உணர்வுகளின் வெளிப்பாடாக உருவாயிற்று. இது நாடு முழுவதும் பரவி அரேபியரல்லாத மக்களின் கலாசார வாழ்க்கை முழுவதிலும் ஊடுருவியது. அரேபியரல்லாத அரபு ஆதிக்கத்துக்கெதிரான இந்தக் கலாசார எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றி கோல்ட்ஜிஹர் (Goldziher) தம்முடைய "முஸ்லிம் ஆய்வுகள்" (Muslim Studies) என்ற புத்தகத்தில் மிகச் சிறப்பான ஆய்வுரை

www.padippakam.com



ஒன்றை அளித்திருக்கிறார். அப்பாஸிட் ஆட்சியில் ஒரு படைத் தலைவராக இருந்த அஃப்ஷினின் (Afshin) உதாரணம் இந்த வகையில் மிகவும் பிரபலமானது. அதைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் கூறுகிறார்: “கல்வியறிவு பெற்ற அரேபியரல்லாத மக்களின் வட்டத்தில் இஸ்லாமின் தாக்கம் மேற்பரப்பை மட்டுமே தொட்டதாக இருந்தது என்பதை மிகத் தெளிவாகக் காட்டுவது அஃப்ஷின் — அவர் கைதர் பின் கவுஸ் (Khaydar bin Kawus) என்றும் அழைக்கப்பட்டார் — என்ற படைத்தலைவரின் உதாரணம். அல்-முத்தஸிமின் (Al-Mu'tasim) படைத்தலைவரான அவர் ஸாக்டியானா (Sogdiana)வைச் சேர்ந்தவர். இஸ்லாமுக்குப் பெரும் அபாயமாயிருந்த பாபக் (Bābak) புரட்சியை அடக்கியவர். கிறிஸ்தவர்களுக்கெதிரான போரில் கலீஃபாவின் துருப்புகளுக்குத் தலைமை தாங்கியவர். இஸ்லாமின் மதப்போர்கள் பலவற்றின் மிக முக்கிய பங்கு பெற்றவர். ஆனால் அவர் முஸ்லிம் என்ற மதத்தன்மையில் மிகக் குறைந்தவராக இருந்தார். முஸ்லிமல்லாதவர்களின் ஆலயம் ஒன்றை மசூதியாக மாற்ற முயன்ற இரண்டு மதப் பிரசாரகர்களை அவர் மிகக் கொடுமையாக நடத்தினார். இஸ்லாமிய சட்டங்களை அவர் எள்ளி நகையாடினார். கழுத்தை நெறித்துக் கொல்லப்பட்ட மிருகங்களின் இறைச்சியை அவர் உட்கொண்டார். (முஸ்லிம்கள் பயங்கரப் பாவமாகக் கருதும் செயல் இது). அவர் இவ்வாறு செய்ததாக முஸ்லிமாக மாறிய பாரசீகர் ஒருவர் சாட்சியம் கூறினார். இஸ்லாமிய நெறிப்படி கொல்லப்பட்ட மிருகத்தின் இறைச்சியைவிட இந்த இறைச்சி புதுமை மாறாமல் இருப்பதாகக் கூறி மற்றவர்களையும் அதை உண்ணச்செய்தார்... சுன்னத்துச் செய்தல் போன்ற முஸ்லிம் வழக்கங்களையும் அவர் கேலி செய்து அவற்றை அலட்சியம் செய்தார். முஸ்லிமாக இருந்த போது தமது நாட்டின் மதப் புத்தகங்களைப் படிப்பதை அவர் விட்டுவிடவில்லை. அந்தப் புத்தகங்களுக்குப் பொன்னும் மணியும் இழைத்து அலங்காரம் செய்து வைத்திருந்தார். முஸ்லிம் அரசின் எதிரிகளை ஒடுக்கும் ராணுவ நடவடிக்கைகளில் அவர் கலீஃபாவுக்கு உதவிசெய்த போதிலும் அதே சமயத்தில் பாரசீகப் பேரரசும் “வெள்ளைப் பிராந்திய”மும் மீண்டும் நிலைநிறுத்தப்படுவது அவரது கனவாக இருந்தது. அரேபியர்கள், மாக்ரிபியர், முஸ்லிம் துருக்கர்கள் ஆகியோரை அவர் இளப்பமாகப் பேசினார். அரேபியரை அவர், எலும்புத்துண்டை வீசியெறிந்து, பின் தலையில் அடித்து நொறுக்கப்படும் நாய்கள் என்று குறிப்பிட்டார்.[40] ஷுஉபைட்டுகள், குரானின் போதனைக்கு (49:13) இணங்க, முஸ்லிம்கள் அனைவரும், அரேபிய இனக்குழுக்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களானாலும்,

40. Ignaz Goldziher, *Muslim Studies* (London, 1967) பக்கம் 139-40.

www.padippakam.com



மற்ற இனங்களைச் சேர்ந்தவர்களானாலும், சமஅந்தஸ்து உடையவர்கள் என்று வலியுறுத்தினார்கள். இந்தச் சமத்துவத் தத்துவத்தை மிகத் தீவிரமாக ஆதரித்தவர்கள் தங்கள் நாட்டின் புராதன நாகரிகத்தையும் கல்விச்சிறப்பையும் குறித்து மிகுந்த பெருமை கொண்ட பாரசீக அறிவாளிகளே. குரானின் வார்த்தையை வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் அடிப்படை முக்கியத்துவம் உள்ளதாகக் கருதிய பயபக்தியுள்ள அரபு முஸ்லிம்களும் இவர்களை ஆதரித்தார்கள். ஷுஒபிய்யாக்களில் மிதவாதிகள் அரேபிய மேல் தட்டுப் பிரபுக்களின் விசேஷ சலுகைகளைக் கண்டிப்பதோடு திருப்தியடைந்தார்கள். ஆனால் அவர்களில் தீவிரவாதிகள் அதோடு நிற்கவில்லை. அவர்கள் நாகரிகத்தில் தங்கள் மக்களின் உயர்ந்த சாதனைகளைச் சுட்டிக்காட்டி பாலைவன இனக்குழுவினரை விட தாங்களே உயர்ந்தவர்கள் என்று கூறினார்கள். அரேபியர்கள் கல்வியில்லாத, நாகரிகமற்ற, அகங்காரம் பிடித்த கூட்டத்தினர் என்றும், நாகரிகமற்ற பதூயின் முன்னோர்களை விட எந்த வகையிலும் மேலானவர்கள் அல்ல என்றும் அவர்கள் கூறினார்கள். இந்தப் பகைமையுணர்வு சிலரிடம் மிக அதிகமாக ஊறிப்போயிருந்தது. அத்தகையவர்களில் ஒருவரான 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாசிரியர் ஒருவர் இஸ்லாமுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்த அரேபியக் கவிஞர்கள் தங்கள் தங்கள் இனக்குழுக்களுக்குப் பகையான இனக்குழுக்களை இழித்தும் பழித்தும் பாடிய கவிதைகளிலிருந்து வசைமொழிகளைத் தொகுத்து, அரேபியர்கள் தங்களைத் தாங்களே எவ்வாறு வர்ணித்திருக்கிறார்கள் என்பதற்கு உதாரணங்களாக எடுத்துக் காட்டினார். ஷுஒபிய்யா சர்ச்சை, சாராம்சத்தில் ஒரு இலக்கிய விவாதமே என்றாலும் அதில் இருதரப்பினரும் மிகுந்த தீவிரத்துடன் ஈடுபட்டார்கள். அவ்வப்போது மதம், கடவுள் பற்றிய வாதங்களும் எதிர்வாதங்களும் இடம்பெற்றன. அரசியல் அதிருப்தியாளர்களான பல்வேறு தலைவர்களின் கருத்துப் பிரசாரங்களும் அரசு விரோதச் செயல்களும் கூட அதன் அம்சங்களாயிருந்தன.[41]

ஷுஒபிய்யா கருத்துக்கள் மிக வன்மையாக வெளியிடப்பட்டது இராக்கில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சக்திவாய்ந்த செயலர் வர்க்கம் இதில் ஈடுபட்டிருந்ததே இதற்குக் காரணம். இவர்கள் தங்கள் கருத்தைத் தயங்காமல் வெளியிடுவோராகவும், தங்களுடைய கலாசாரத்தின் உயர்பண்புகளை வலியுறுத்துவோராகவும், அரசியல் நடவடிக்கைகளில் அதிகத் திறமை உள்ளவர்களாகவும் இருந்தார்கள்... ஷுஒபிய்யா இயக்கம் தோன்றிய போது அரேபியரல்லாதோர் என்பது முக்கிய பிரச்சினையாக இருக்கவில்லை. அரேபியர்களின் பாலைவன வாழ்க்கையில் போற்றப்பட்ட கருத்துக்கள் இஸ்லாமில்

41. பார்க்க: Stephen and Nandy Ronart, முன்பு குறிப்பிடப்பட்ட புத்தகம், பக்கம் 493-4.

www.padippakam.com



இணைக்கப்பட்டிருந்தது ஏற்கத்தக்கதா என்பதே பிரச்சினையா யிருந்தது. ஷூபிய்யாக்கள், குறிப்பாக செயலர் வர்க்கத்தினர் அவை காலத்துக்குப் பொருந்தாதவை என்று கருதினார்கள்.[42]

இவ்வாறாக, ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு கிளர்ச்சி அல்லது புரட்சி நடவடிக்கைகளில் மேல்வர்க்கத்தினர் கலந்துகொள்ள வில்லை என்பதையும், நாகரிகமற்ற அரேபியர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு அதிலேயே திருப்தி கண் டார்கள் என்பதையும் காண்கிறோம். ஆனால் விவசாயிகள், கைவினைஞர்கள், தொழிலாளர்கள், அடிமைகள் போன்ற சாதாரண மக்கள் தாங்கள் கொடுமையாகச் சுரண்டப்படுவதை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடினார்கள். இத்தகைய போராட்டங்கள் சிலவற்றை மேலே விவரித்தோம். இந்த வகையில் குறிப்பிடத்தக்க மற்றொன்று பாபகி (Bābaki) இயக்கம் எனப்படுவது. பாபக்; (Bābak) என்பவர் நடத்திய இந்த இயக்கம் (816-37) விவசாயிகளை அடிப் படையாகக் கொண்டிருந்தது. மிக விரிவான முறையிலும் மிகுந்த செயல்வேகத்துடனும் நடத்தப்பட்டது இதன் சிறப்பு அம்சம். பாபக்கின் கோரிக்கைகள், இன்று ஆசிய அல்லது ஆப்பிரிக்க நாடுகளில் எந்த விவசாயி இயக்கமும் எழுப்பக்கூடிய கோரிக்கை களுடன் ஒப்பிடக்கூடியனவாக இருந்தன. பெரிய நில உடைமைகளைப் பிரித்து விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் என்று அவர் கோரினார். பாரசீக பிரபு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட இப் போது சாதாரண விவசாயிகள் நிலைக்குத் தாழ்ந்து போனதால் அவர்களும் பாபக்கை ஆதரித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இந்த ஆதரவு அரைகுறை மனத்துடன் தாங்கள் பிரபு வர்க்கத்தினர் என்ற பாவனையை விட்டுவிடாத முறையிலும் அளிக்கப்பட்டது. இந்த இயக்கம் அதர்பய்ஜானை (Adharbāyjān) மையமாகக்கொண்டு தென்கிழக்கு பாரசீகத்துக்குப் பரவியது. அங்கு மலைப்பகுதிகளில் வசித்த 'குர்த்'* மக்களின் ஆதரவைப் பெற்றது. அங்கிருந்து வடக்கேயுள்ள காஸ்பியன் பகுதிகளுக்கும் மேற்கே ஆர்மீனியாவுக்கும் பரவியது. பாபக் வெளிப்படையாக மத எதிர்ப்புக் கருத்தைப் பேசினார். அமைப்பை உருவாக்கி நடத்துவ தில் மிகுந்த திறமை கொண்டிருந்தார். தமது குறிக்கோளை அடைவதற்காக அவர் அப்பாஸிட் பேரரசின் எதிரியான

42. பார்க்க: Zohurul Bari, "Iran and Iraq under Islam: Aspects of the Impact of Geo-Historical Factor: on Ideation" in *Islam and Modern Age*, Delhi, Vol.XVI, No.3, August 1985, பக்கம் 157.

* குர்துகள் இன்றும் கூட கட்டுக்கு அடங்காத மக்களாகவே இருக்கிறார்கள்; அவர்களுடைய தேசீயவாதக் கோரிக்கைகள் இரான், இராக் அரசுகளுக்கு ஏற்புடையவனாக இல்லை; அவர்கள் கொமெய்னியின் புரட்சி அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பைஜாண்டிய பேரரசருடன் கூட்டுச் சேர்ந்துகொண்டார். பாபக் ஏழாண்டு காலம் மாமூனின் (Māmūn) நான்கு படைத்தலைவர்களை எதிர்த்து நின்று தாக்குபிடித்தார். முத்தஸிம் ஆட்சிக்கு வந்த பின்பு தான் இந்த இயக்கம் அதர்பய்ஜானில் மட்டும் செயல்பட்டு, இறுதியாக ஒடுக்கப்பட்டது.

இஸ்லாமிய வரலாற்றை இவ்வாறு நாம் சுருக்கமாகப் பார்த்த பின் சில அம்சங்கள் கவனிக்கத்தக்கவையாக உள்ளன. சில இஸ்லாமிய சிந்தனையாளர்களும் மத ஆதரவாளர்களும், இஸ்லாமின் சமத்துவக்கொள்கை (செல்வத்திலும், சாதி, இனம், கோட்பாடு போன்றவற்றிலும் உயர்வுதாழ்வு கருதாமை) காரணமாக தற்காலத்திய சமூக-பொருளாதார, அரசியல் சவால்களுக்கு பதிலளிக்கும் திறனுள்ள ஒரே மதம் இஸ்லாம்தான் என்று கூறியுள்ளனர். சித்தாந்த அளவில் இது உண்மை (குரானின் மதத்தத்துவம் செல்வத்திலும், இனம், நிறம் என்பனவற்றிலும் சமத்துவத்தை வலியுறுத்துகிறது) என்றபோதிலும், சரித்திர ரீதியாக இது உண்மை அல்ல. இஸ்லாமிய சமூகங்கள் மற்ற எந்த சமூகத்தையும் போலவே சமத்துவம் அற்றவையாகவே இருந்துள்ளன. நிலப்பிரபுத்துவ முறையும் நிலப்பிரபுத்துவத் தலைமை வரிசை முறையும் பல இஸ்லாமிய சமூகங்களில் விரைவிலேயே வேரூன்றிவிட்டன. அரேபியருக்கும் 'அஜம்' (Ajam) எனப்படும் அரேபியரல்லாதவருக்கும் இடையே கருதப்படும் வேறுபாடும் ஒதுக்கித்தள்ள முடியாதது. ஏற்கெனவே குறிப்பிட்டது போல, கிளர்ச்சிகள் அரேபியரின் ஆதிக்கத்தை எதிர்த்த மனக்குமுறல்களின் வெளிப்பாடாகவே தோற்றம் கொண்டன.

சித்தாந்தம்தான் வரலாற்றை உருவாக்க வேண்டும் என்று சித்தாந்தவாதிகள் விரும்பினாலும் உண்மையில் வரலாற்றை உருவாக்குவது சித்தாந்தம் அல்ல. பிரத்தியட்ச உண்மைகள்தான் அதை உருவாக்குகின்றன. உற்றுநோக்கி உண்மைகாணும் வரலாற்றாசிரியர் யாரும், தமது சித்தாந்தம் எதுவாக இருந்தாலும், நிதர்சன உண்மைகளைப் புறக்கணிக்க முடியாது. ஒரு சித்தாந்தத்தை திரிபுபடாமல் ஏற்கெனவே உள்ள ஒரு நிலைமையின் மீது அதை திணிக்க முடியாது. உற்பத்தி சக்திகளையும் உறவு நிலைகளையும் மாற்றுவதன் மூலம் நிதர்சன உண்மையில் அடிப்படையான மாற்றம் செய்ய முயன்றாலும் கூட, அவ்வாறு மாறும்போதே எதார்த்தத்தின் செல்வாக்கு சித்தாந்தத்தின் மீதும் படிகின்றன. இஸ்லாமின் சமத்துவக் கோட்பாடு சரித்திர ரீதியான உண்மையாக (ஒரு குறுகியகாலம் தவிர) செயல்படவில்லை. ஏனென்றால் இந்த சித்தாந்தக் கருத்துக்கு ஏற்ப அடித்தளத்தில் உள்ள சமூக-பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றுவதற்கு தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமுக்கு முன்பே கூட மஜ்டக் போன்ற இயக்கங்கள் இதே காரணத்தினால் தோல்வியடைந்தன. இஸ்லாம் நிலைத்து நீடிக்க முடிந்தது என்றாலும் ஒரு மதம் என்ற அளவிலேயே நீடிக்க முடிந்தது. அதனுடைய சமூக-பொருளாதார தீவிர மாறுதல் நோக்கம் மறைந்து விட்டது. இஸ்லாம் போதித்த சமத்துவத்தை மிகக் குறுகியகாலத் துக்கே (அதுவும் கூட சில முக்கியமான நிபந்தனைகளுடன்) செயல் படுத்த முடிந்தது. புதிய மதத்தைப் பின்பற்றியவர்கள் ஒருபுறம் மக்காநகர மக்களுடனும், மற்றொருபுறம் மதீனாவின் யூதர்களுட னும் வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலம் அது. வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மிகக் குறைவாகவும், பெறுவதற்குக் கடினமாகவும் இருந்த சமயம் அது. எனவே கிடைக் கின்ற பொருள்களை நியாயமாக வினியோகிப்பது அவசிய மாயிருந்தது. ஆயினும், முகமதுவின் கடைசி நாட்களின் போது ஓரளவுக்கு உபரி கிடைத்தது. கொள்ளைப் பொருள்களை வினி யோகம் செய்வதில் முகமது அரசியல் முக்கியஸ்தர்களுக்கு ஓரளவு சலுகைகாட்டி, அரசியல் காரணங்களுக்காக அவர்களுக்கு மற்றவர்களைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியிருந்தது. வெளிநாட்டுப் படையெடுப்பு வெற்றிகள் அபூ பக்கர் காலம் முதல் தொடங்கின. அப்போதிருந்த புதிய இஸ்லாமிய அரசின் கருவூலத் துக்குப் பெருமளவில் செல்வங்கள் வந்து குவியத்தொடங்கின.

உமர் எளிய வாழ்க்கையையும் சமத்துவத்தையும் செயலில் கொண்டுவர முயன்றார். ஆனால் அவர் சமூகத்தில் உருவாகி வந்த பலம்மிக்க சக்திகளை எதிர்த்து போராட வேண்டியிருந்தது. மூன்றாவது கலீஃபாவான உத்மான் பலவீனமானவராயிருந்ததால் புதிய சரித்திர ரீதியான சக்திகளை அவர் எதிர்த்து நிற்க முடியாமல் உள்நாட்டுப் போர் தொடங்கிவிட்டது. நான்காவது கலீஃபா வான அலீதான் அரேபியர்களின் மரபுப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி கலீஃபா. அவர் "இஸ்லாமின் கோட்பாடுகள்" படி ஆட்சி நடத்த உண்மையாக முயன்றார்; ஆனால் தோல்வியடைந்தார். வெளி நாட்டுப் போர் வெற்றிகளால் சக்திகளின் சமன்பாடு முற்றிலுமாக மாறிப்போயிருந்ததே இதற்குக் காரணம். முதலாவது இஸ்லாமியக் குடியரசு, முடியாட்சியாக மாற்றப்பட்டது. அதன் பிறகு "பழைய நல்ல நாட்கள்" திரும்பி வரவேயில்லை. சில லட்சியவாதிகள், இஸ்லாமின் முதல் முப்பது ஆண்டுகளில் இருந்தது போன்ற இஸ்லாமிய சமூகத்தை அமைக்க முடியும் என்று ஆவலுடன் நம்புகிறார்கள். இந்த லட்சியவாதிகள் சரித்திர சக்திகளை முற்றிலுமாக கருத்தில் கொள்ளாமல் விடுகிறார்கள். அப்போதிருந்தது போன்ற அரசையோ சமூகத்தையோ ஏற்படுத்துவது அப்போது இருந்தது போன்ற சரித் திர ரீதியான நிலைமையை உருவாக்காமல் சாத்தியமாகாது என்பதை யும் இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவ்வாறான நிலைமையை

www.padippakam.com



உருவாக்குவதும் சாத்தியமில்லை. மேலும் அந்தச் சமூகத்தை "லட்சிய" சமூகம் என்றோ "பொற்கால" சமூகம் என்றோ சித்தரித்துக் காட்டுவது தவறாகும். ஏனென்றால், நாம் முந்தைய அத்தியாயங்களில் பார்த்தது போல அந்தச் சமூகத்தில் போராட்டங்களும் பதற்ற நிலைகளும் இல்லாமல் போகவில்லை.

இந்த லட்சியவாதிகள் பிரசாரம் செய்யும் மற்றொரு மாயை இஸ்லாமிய சகோதரத்துவம் என்பது. இஸ்லாமிய சமூகம், அதன் தொடக்க காலத்திலிருந்தே பல்வேறு வர்க்கங்களாகவும் வகைகளாகவும் பிரிவுபட்டிருந்தது. எஜமானர்கள், அடிமைகள், சொத்துள்ளவர்கள், சொத்தில்லாத வர்க்கம், அரேபியர்கள், அரேபியரல்லாதவர்கள் என்று ஒன்றுக்கொன்று நேரெதிரான முரண்பாடுகள் கொண்ட பிரிவுகள் இருந்தன. நமது காலத்தில் இஸ்லாமிய சகோதரத்துவம் பற்றிப் பேசுகிறவர்கள் பிரத்தியட்சமான சமூக உண்மைகளையும், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளையும் உணரத் தவறுகிறார்கள். எனவே மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முழுமையான சகோதரத்துவம் ஏற்பட முடியும் என்று கூறுவது வெறும் லட்சியவாதப் பேச்சேயாகும். மதம் இத்தகைய சகோதரத்துவம் நிலைத்துச் செயல்படுத்துவதற்கு அவசியமாயிருக்கலாம், ஆனால் போதுமானதாகாது. பொதுவாகவே மதங்களின் வரலாறும், குறிப்பாக இஸ்லாமின் வரலாறும் இதை நிரூபிக்கின்றன. ஆயினும் இஸ்லாம் மத ஆதரவாளர்கள், உண்மைகள் இவ்வாறு எதிர்மறையாக இருந்தபோதிலும், இஸ்லாமிய சகோதரத்துவம் என்ற மாயையை உண்மைத் தோற்றமாகக் காட்ட முயன்றிருக்கிறார்கள். இவர்கள் இஸ்லாமுக்கு நன்மை எதுவும் செய்வதாக நான் கருதவில்லை. இஸ்லாமை சரியான சரித்திரப் பின்னணியில் பார்த்து, பல்வேறு சமூகசக்திகளையும் கருத்தில் கொண்டு பார்ப்பவர்கள்தான் இன்று இஸ்லாமிய உலகம் எதிர்கொள்ளும் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். இஸ்லாம் போற்றும் பண்புமுறை, சோஷலிசம் போற்றும் பண்புமுறையுடன் பொதுவான அம்சங்கள் கொண்டிருக்கிறது. இந்த பண்புமுறைகள், இஸ்லாமையோ அல்லது சோஷலிசத்தையோ சார்ந்தவையாக இருந்தாலும், மற்ற மரபுமுறை அமைப்புகளைவிட நீடித்து நிற்கக்கூடியவை. மற்ற மரபு முறைகள் மாறிவரும் சரித்திரச் சூழ்நிலைக்கும், அதனுடன் இணைந்த சமூக-பொருளாதார அமைப்புகளுக்கும் தகுந்தபடி பொருத்தமில்லாதவையாகிவிடுகின்றன. பண்புமுறைகள்தான் ஒரு சித்தாந்தத்துக்கு அல்லது மதத்துக்கு எல்லாவற்றிலும் உயர்ந்த ஒரு பரிமாணத்தைத் தருகின்றன. இந்தப் பண்புமுறைகளை, லட்சியவாத முறையிலன்றி, தற்கால சரித்திர ரீதியான சக்திகளைக் கருத்தில்கொண்டு, வலியுறுத்துவதன் மூலம் இஸ்லாமுக்கும் சோஷலிசத்துக்கும்

www.padippakam.com



இடையே ஆக்கப்பூர்வமான கூட்டிணைப்பை உருவாக்க வழிகாண முடியும். பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் தொழில்துறையில் பின்தங்கி ஏகாதிபத்தியத்துக்கு இரையாகி உள்ளன. இப்படிப் பட்ட கூட்டிணைப்பை உருவாக்க முடிந்தால் அது இந்த நாடுகளின் சுரண்டப்பட்ட ஏழை மக்கள் ஏற்கத்தக்கதாக இருக்கும். அதை அடிப்படையாகக்கொண்டு அவர்களை முற்போக்கான சோஷலிச சக்திகளுடன் இணைந்து செயல்படவும், தங்களை ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளப் போராட்டம் தொடங்கவும் தூண்ட முடியும். முஸ்லிம்களின் மனத்தில் மதத்துக்கு இருக்கும் ஆழ்ந்த பிடிப்பை கருத்தில்கொண்டு இத்தகைய அணுகுமுறை தேவை என்று நான் வேண்டிக்கொள்கிறேன். முஸ்லிம் நாடுகளில் உள்ள பிற்போக்கு ஆட்சியாளர்கள் தங்களுடைய சுரண்டல் ஆட்சியை நிரந்தரப்படுத்துவதற்காக முஸ்லிம்களின் மத உணர்வுடன் விளையாடுகிறார்கள். இஸ்லாமின் "பொற்காலம்" என்று பழங்காலத்தை கூறி தங்கள் ஆட்சியில் உள்ள மக்களின் மனத்தில் ஒரு மாயையை ஏற்படுத்த முயலுகிறார்கள். சோஷலிசம் மட்டுமே, தன்னுடைய தகுதியின் அடிப்படையிலோ, இஸ்லாமின் மதக்கட்டளைகளை நிறைவேற்றும் வழி என்று ஏற்கப்படும் அடிப்படையிலோ (எனது சொந்தக்கருத்து, அதன் தகுதி அடிப்படையில் என்பது), முஸ்லிம் உலகம் தனது சொந்தக்கால்களில் நிற்க உதவ முடியும் என்பது எனது பணிவான கருத்து. ஆரம்பகால இஸ்லாமை நவீன சமூக விஞ்ஞானங்கள் தரும் விளக்கங்களின் துணையுடன் பகுத்தாய்ந்து பார்க்கும் கடினமான, ஆனால் அவசியமான பணியை, மேல்நாடுகளைச் சேர்ந்த கீழைநாட்டியல் அறிஞர்கள் செய்துள்ள போதிலும், உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லிம் அறிஞர்கள் அதைத் தவிர்த்தே வந்திருக்கிறார்கள். இந்தத் திசையில் முதல் அடி எடுத்து வைப்பதாக இந்தப் புத்தகம் கருதப்பட்டால் எனது உழைப்புக்கு மிகுந்தபலன் கிடைத்ததாகும்.

www.padippakam.com



* (பக்.91) சக்திமிக்க மக்காநகர வர்த்தகர்கள் தொடக்கத்தில் இஸ்லாமுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள். இதை டாக்டர் தாஹா ஹுஸைனும் குறிப்பிடுகிறார் (பக்கம் 42 பார்க்க). ஆனால் இதை வைத்து இஸ்லாம் அவர்களின் நலன்களுக்கு விரோதமாயிருந்தது என்று கூறிவிட முடியாது. பல சமயங்களில், கருத்துக்களும் சித்தாந்தங்களும் மனத்தின் குழப்பத்தை போல, சித்தாந்தங்களின் உறுப்பு அம்சங்களாக அமையும் மனச் சித்திரங்களில், தனிநபர்கள் தங்களுடைய நிஜங்களை மேல்கீழாகத் தொகுத்து விடுகிறார்கள். ஏழைகள், ஆதரவற்றவர்கள் ஆகியோரின் நல்வாழ்வுக்குப் பணம் செலவிடும்படி இஸ்லாம் மக்கா நகரின் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்துகிறது. அதற்குக் காரணம் சமூக அதிருப்திக் கொந்தளிப்பைத் தடுத்து நிறுத்தி, புதிய சமூக-பொருளாதார உறவுகள் உருவாகச் செய்வதற்கு அது ஒன்றுதான் வழி என்பதே யாகும். இந்த அத்தியாயத்திலும், அடுத்துவரும் அத்தியாயத்திலும் விளக்கப்படுவது போல, இஸ்லாம் வர்த்தக வர்க்கத்தின் நலன்களுக்கு ஒருபோதும் எதிராக இருக்கவில்லை; உண்மையில், ஒரு வகையில் பார்த்தால், இந்த வர்க்கத்தின் தேவைகளை நிறைவேற்றும் சாதனமாகவே அது உருவாயிற்று.

† (பக்.93) இந்த இயக்கத்துக்கு ஆன்மிகப் பரிமாணம் எதுவும் இருக்கவில்லை என்பது இதன் பொருளல்ல. மாறாக, அது முதன்மையாக ஒரு மத இயக்கமாகவே இருந்தது. ஆயினும், எந்தவொரு சிக்கலான சமூக நிகழ்வுக்கும் ஆன்மிகத் தூண்டுதல் மட்டுமே போதுமான விளக்கமாக இருக்க முடியாது என்பதால் அதன் சமூக இயக்க அடிப்படையைக் கண்டறியவே இங்கு முயலுகிறோம். ஆதிக்க வலிமை பெற்றுள்ள சமூகக் குழுக்களின் தேவைகள் சித்தாந்த இயக்கங்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. இஸ்லாம் இதற்கு விலக்கல்ல.

** (பக்.100) இரானில் உள்ள "முஜாஹிதீன்-ஏ-கல்க்-ஏ- இஸ்லாம்"என்ற தீவிரவாத இஸ்லாமிய அமைப்பு, "ஒரேகடவுள்" ("வஹ்தானிய்யா") என்ற கொள்கைக்கு "ஒரே மனிதகுலம்" என்றே பொருள் கொள்வது இங்கே குறிப்பிடத்தக்கது. இதை மேலும் விரிவுபடுத்தி "ஒரே கடவுள்" என்ற வானுலகக் கருதுகோளின் உண்மையான இவ்வுலகப் பிரதிபலிப்பாக வர்க்கபேதமற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்று அந்த இயக்கம் கூறுகிறது. உண்மையில் ஒரே கடவுள் என்பது ஒரே மனிதகுலம் என்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது அதன் கருத்து. அந்த இயக்கத்தின் அதிகாரபூர்வமான பத்திரிகை "முஜாஹித்" பிப்ரவரி-ஏப்ரல், 1980 இதழில் வெளியாகியுள்ள "குரானைக் கற்பது எப்படி" என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

†† (பக்.106) இரண்டாவது கலீஃபா உமர் கொலை செய்யப்பட்டதில் மிக ஆழமான சதி ஒன்று இருந்தது என்று 'அல்-யமின் வா அல்-யஸர் ஃபீ அல்-இஸ்லாம்' (பெய்ரூட், 1973) ஆசிரியரான அஹமத் ஸலிஹ் அப்பாஸ் கருதுகிறார். உமரின் இடதுசாரிப் போக்கை விரும்பாதவர்களின் கையில் ஒரு கருவியாகவே கலீஃபாவைக் கொலைசெய்த அடிமை செயல்பட்டான் என்று அவர் தமது ஆய்வில் எடுத்துக்காட்டுகிறார் (பக்கம் 53-62 பார்க்க).

*** (பக்.116) அபூ தாலிப், பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட, உண்மையில் இஸ்லாமைத் தழுவிக்கொண்டார் என்று பொதுவாக ஷீயா முஸ்லிம்களும், குறிப்பாக, இஸ்மாயிலி முஸ்லிம்களும் நம்புகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெயர்க்குறிப்பு அட்டவணை

அக்கபா, வளைகுடா 125, 192; உறுதிமொழி 128
அகனி, அல்-வலீத் பற்றி 227
அத்டர், தென் அரேபியர்கள் வழிபட்டனர் 30
அதர்பய்ஜான், பாபக் இயக்கத்தின் மையம் 276
அந்த்ரே, தோர், மக்கா தெய்வங்கள் பற்றி 48
அப்த் அர்-ரஹ்மான் இபின் அவுஃப், 132, 206; அபூ பக்கருக்கு ஆதரவு 185
அப்த் அர் ரெஹ்மான் அஜ்தீ, 245
அப்த் அல்-முத்தால் அல்-ஸயீதி, எகிப்திய எழுத்தாளர் 86
அப்த் அல்-முத்தலிப், தீர்க்கதரிசியின் பாட்டனார் 59, 78, 163
அப்த் அல்லா பின் ஹஜஷ், 143
அப்த் அல்லா பின் ரவாஹா, 150
அப்த் அல்லா பின் உபய் (கஸ்ரஜ்), நடுநிலைமை வகித்தவர் 128
அப்த் அல்லா பின் ஜுபைர், 85, 240, 244
அப்த் அல்லாஹ் பின் அப்பாஸ், அலீயின் விசுவாசமான சீடர், அவரது நடத்தை நெறிகளுக்குக் கீழ்ப்படியாதவர் 222
அப்த் அல்லாஹ் பின் மைமூன், இஸ்மாயிலி பிரிவின் நிறுவனர் 258, 260
அப்த் அல்லாஹ் பின் இபாக், இபாதியா உட்பிரிவின் தலைவர் 236
அப்தல் வஹாப், 77
அப்துல் ஜப்பார் அல்-அஜ்தீ, 270
அப்துல்லா இபின் ஜீதான், 68
அப்பாஸிட் கலீஃபா, தோற்றம் மற்றும் கலாசார வளர்ச்சி 253 முதல்
அப்பாஸிட் பேரரசு, ஸஞ்ச் கிளர்ச்சியால் உலுக்கப்பட்டது 266 முதல்
அப்பாஸிட்கள், ஷீயாக்களுடன் இணைந்து செயல்படுதல் 248, 251; பாரசீகத்திலிருந்து இரவல் பெற்றார்கள் 229; தலைநகரை பக்தாதுக்கு மாற்றுதல் 251; கீழ் இருந்த அடிமைகள் 152, 267
அப்ரஹா, நீகஸின் ஆட்சியாளர் 41, 58, 129; து-நுவாஸைத் துரத்தியடித்தார் 35
அபிஸீனியா, கிறிஸ்த்வ நாடு 119, 120; யேமன் மேல் படையெடுப்பு 32; தீர்க்கதரிசியின் சீடர்குழு பார்க்கப் போதல் 119 முதல்
அபுல் ஃபர்ஜ், 204-5
அபுல் அப்பாஸ் அல்-ஸஃபா, அப்பாஸிட்களால் கலீஃபா ஆனார் 251
அபூ உபைதா, 200
அபூ சுஃபியான் பின் ஹர்ப், ஒட்டகச் சாரைத் தலைவர் 145
அபூதர் இஃபாரி, தீர்க்கதரிசியின் முக்கிய தோழர், அவரின் பங்குப் பணி 209
அபூ தாலிப், தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரர் 79, 116; முகமதுவுக்கும், மக்காவாசிகளுக்கும் இடையில் சமரச முயற்சி 117
அபூ பக்கர், 83, 128, 129, 184 முதல், 234; அலீயிடமிருந்து ஆதரவின்மை 187; பதூயின்கள் கிளர்ச்சியை ஒடுக்கினார் 190, 194
அபூ முஸ்லிம் குராஸானி, 250, 273; கிளர்ச்சி 250 முதல்; சிரச்சேதம் செய்யப்பட்டார் 271
அபூ லஹப், தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரர் 71, 116, 121
அபூ ஜஹேல், தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரர் 79, 111, 117; மக்காவாசிகளோடு போர் 144
அபூ ஹனீஃபா, இமாம், கைபர் யூதர்களுடன் ஒப்பந்தம் 154

www.padippakam.com



அம், சந்திரக் கடவுள் 31, 33
அம் அல்-ஃபீல், 36, 129
அம்ரு இபின் லோஹயி, 47
அம்மார் பின் யாஸிர், 102, 106; மக்ஜூம் இனக்குழுவுடன் இணைந்தவர் 111
அமீர் அலி, நீதிபதி, அப்பாஸிட்களின் கலாசார வளர்ச்சி 254; கராமிதா 261
அரபு இனக்குழுக்கள், தந்தைவழிச் சமூகம் 162; இராக்கிற்கு எதிராக சேர்ந்து கொண்டார்கள் 203
அரபு உலகம், மூன்று மண்டலங்கள், 7; ராணுவம், பின்பற்றியவர்களைக் கொண்டே 84
அரபுச் சமூகம் புராணக் கதைகள் இல்லை 51 முதல், 106 முதல்; பெண்கள் அந்தஸ்து 162 முதல்
அரேபிய மணல்கள், 16
அரேபியா, 6, 7, 8, 17, 40, 59, 94; ஆழமான வேறுபாடு 26, 27; பருவ காலங்கள் 33, 34
அரேபியா, தெற்கு, கிறிஸ்தவம் 34; யூதமதம் 34
அரேபியர், முந்தைய ரோமானியர், பாரசீகர் வழியைப் பின்பற்றுதல் 209; ஸிமிடிக் மதங்களிடம் வெறுப்பு 68; கப்பல் இயக்கக் கலை 17, 18; பெரிய அரசுகளை வெற்றி கொள்ளல் 196; தாராளகுணம், விருந்தோம்பல் 25 முதல்; யூதர்களின் மேலாதிக்கம் 123 முதல்; நிர்வாக அமைப்புகள் இல்லாமை 229; மதீனா அரேபியருக்கு யூதர் ஆதிக்கம் பிடிக்கவில்லை 138; ஆண்டு கணக்குமுறை இல்லாமை 129; சொந்த நாணயங்கள் கிடையாது 228; ஒற்றுமை வேண்டும் என உணருதல் 128; மதம் 23; யூதர் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபாடு இல்லை 125; குணங்கள் 200
அரான், ரேமண்ட், மேற்கோள் 75
அல் அப்பாஸ், தீர்க்கதரிசியின் தந்தையின் சகோதரர் 79,156
அல்-அஹ்காஃப், 52
அல்-பித்னத் அல்-குப்ரா, 61
அல்-காமூஸ் அல்-அஸாீ, 80
அல்-நுமான் பின் அல்-முன்திர், லக்மிட் தலைவர் 64
அல்-முத்தனா பின் ஹரிதா, பக்ர் பின் வாயில் இனக்குழுத் தலைவர் 64
அல்-ரப் அல்-காலி (அரேபியப் பாலைவனம்), 16
அல்-ஜுபைர் பின் அல்-அவ்வாம், 105
அல்மக்கா, சந்திரக் கடவுள் 30, 33
அல்லாமா ஹஜர் அஸ்கலானி, ரிபா பற்றி 159
அலி, டாக்டர் ஜாஹித், கராமிதாவினர் பற்றி 263
அலீ, தீர்க்கதரிசியின் மருமகன் 85, 128, 133, 148, 209, 233 முதல், 278; அபூ பக்கருக்கு ஆதரவளிக்காமை 187; கொலை செய்யப்பட்டார் 222; பனூ ஹாஷிமின் ஆதரவு 184; தீர்க்கதரிசிக்கு அடுத்த தலைவர் 183; கொந்தளிப்பான ஆட்சிக் காலம் 222; உத்மானுக்கு அடுத்த கலீஃபா 219
அலீயும் குடும்பத்தாரும், ஷீயா இயக்கத்தின் மைய அச்சு 238
அலீ பின் முகமது, ஸஞ்ஜ் தலைவர் 268
அலெக்ஸாண்டர் 32, 92
அவ்வாம், அல்மக்காவின் கோவில் 31
அன்ஸார்கள் (உதவுவோர்) 131, 183, 212, 213; ஸாத் பின் அபதாவுக்கு ஆதரவு 184
அஷ்டாக், 85
அஷ்ரப் இபின் அப்தல்லாஹ், குராஸான் மாகாண ஆளுநர் 226
அஷுரா, பாவப் பரிகார நோன்பு 138
அஸபீயா, கல்தூனின் குழு ஒற்றுமை கோட்பாடு 201, 202
அஹ்மத் பின் ஹன்பல், 160
அஹலாஃப், 70; முத்தையபூனுடன் இருந்த வேறுபாடுகள் மக்காவில் சமரசம் செய்துகொள்ளப்பட்டது 127

ஆத், 52, 53, 122, 124
ஆயிஷா, தீர்க்கதரிசியின் மனைவி 131; அலீயைப் பிடிக்காது 221; உத்மானுக்கெதிரான கிளர்ச்சியைத் தூண்டினார் 221-2
ஆஸாத், மவுலானா அபுல் கலாம், குரான் மீது தர்க்கவாத பாதிப்புகள் 256

இஃப்ரிக்கியா, 237
இக்பால், இஸ்லாமிய சரித்திரத்தின் மாறுபட்ட கருத்துகள் 257

www.padippakam.com




இக்வான் அல்-ஸஃபா,261
இந்தியா, 32, 59, 77
இபாதியா கரிஜைட், 234
இபின் இஸ்ஹாக், 50-51, 65, 96
இமாமா, 237
இராக், 7, 64, 216
இல்மல் மாரிஃபா, 258
இஸ்ஃபஹானி, அல்-, வரலாறு 37
இஸ்மாயிலி இயக்கம், 259 முதல்
இஸ்மாயிலிகள், மேற்கு ஆப்பிரிக்காவில் ஆட்சியை அமைத்துக் கொண்டார்கள் 251
இஸ்மாயிலிகளின் பிரிவு, 252 முதல்; தலைமை இடவரிசை 259-60; கிரேக்க தத்துவஞானத்துடன் இஸ்லாமுக்கு புதிய பொருள் 258 முதல்; போதனைகள் 259
இஸ்லாம், பாரசீகம் ஏற்றுக்கொண்டது 272-3; அரேபியர்களின் தேசிய மதம் 203; கூடும் முனை 93; ஆசிரியரின் அணுகுமுறை 3,9 முதல்; அடிப்படை கொள்கை 100; பொதுவான தேதிக் கணக்குமுறை 129; தோற்றம் 72, 100; சரித்திர ரீதியான சூழல் 112; செயலில் இல்லாத சமத்துவம் 132; போதனையைப் பின்பற்றாதவர்களின் நிலை 112 முதல்; வெளிநாட்டுப் படையெடுப்பு 278; இனக் குழுப் பண்பாட்டின் வழக்கம் 101 முதல்; சித்தாந்த இயக்கம் 1; சக்தி மிக்க சித்தாந்தம் 93; கிரேக்க தத்துவ ஞானமும், தர்க்க வாதமும் 255; கர்பலா நிகழ்ச்சி 243; நில உரிமையின் ஒப்பந்தம் 200 முதல்; சட்டங்கள் 165 முதல்; திருமணம் 177; மக்கா வர்த்தகர்களின் ஆரம்ப எதிர்ப்பு 61, 90; புராணக் கதைகள் இல்லை 53; வர்த்தகர்களுடைய தனித்தன்மை 91; பணக்கார அதிகாரவர்க்கம் 216; தொழுகைமுறை 178; போதனைகள் 278-9; கடன்கள் மீதுள்ள வட்டிக்குத் தடை 154-5; மதச்சமூகம் 2; மாறுதல் 257
இஸ்லாமும் சமூக ஒருங்கிணைப்பும், 231
இஸ்லாமும் மதினா நிகழ்ச்சிகளும், அத்தியாயம் 4
இஸ்லாமிய ஆண்டுமானம், 33
இஸ்லாமிய இயக்கம், ஆரம்ப காலத்து ஆதரவாளர்கள் 86 முதல்
இஸ்லாமிய உலகம், புறவீச்சு சக்திகள் 231-232
இஸ்லாமிய கலீஃபா முறை, 223
இஸ்லாமிய சமூகம், நிஜவாழ்வில் ஏற்பட்ட வகுப்புப் பிரிவினை 116 முதல், செல்வத்தின் மேல் உள்ள கவனமும், அதனால் ஏற்பட்ட சாபமும் 207
இஸ்லாமிய சகோதரத்துவம், மாயை 279-80
இஸ்லாமியப் பேரரசு, வெளிநாட்டுப் படையெடுப்பினால் ஏற்பட்ட துன்பம் 217-218; தொழிலாளர் வர்க்கத்தின் சவால் 232
இஸ்லாமிய மாநிலம், பதூயின்களின் பிரச்சினைகள் 193 முதல்; தீர்க்க தரிசியின் காலத்தில் 84; ஆக்கிரமிப்புகள் உறுதிபடச் செய்தன 192; தீர்க்கதரிசிக்குப் பின் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் 183; வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் குணத்தை மாற்றியமைத்தல் 232; எழுதி அமைக்கப்பெறாத சட்டங்கள் 186
இஸ்லாமியர், கராமிதா பிரிவின் மேல் விரோதபாவம் 261
இஸ்லாமின் தோற்றம், மக்காவில், அத்தியாயம் 3
இஸ்லாமின் போதனைகள், முத்தஜிலா பகுத்தறிவைக் கொண்டு சோதித்தல் 255

ஈலியஸ் காலஸ், 32

உத்மான், மூன்றாவது கலீஃபா 106, 212 முதல், 217 முதல்; கொல்லப்பட்டார் 218; அபூ பக்கருக்கு ஆதரவு 186
உத்மான், ஆட்சியாளர், லஞ்சஊழல், சீர்குலைந்த நிலை 233
உத்மான் பின் அஃபஃபான், தீர்க்கதரிசியின் மருமகன் 119
உத்மான் பின் ஹுவைரித், அரேபியாவின் அரசராக முயலுதல் 60
உபுல்லா, துறைமுகம் 268
உபைத் அல்லாஹ் பின் ஜியாத், ஹுஸைன் ஆதரவாளர்களைக் கொன்றார் 243

www.padippakam.com



உம்-ஏ-கித்தல் பின் நவுக்பல், பனி ஆஸாத் பெண் 164
உம்ரு பின் ஜீபையர், காவல்துறைத் தலைவர் 85
உம்ரு பின் வயீத், மதீனா ஆளுநர் 85
உம்மா, 134
உம்மான், 236
உமய்யத்கள், 236 முதல், பைஜாண்டியத்திலிருந்து இரவல் 229
உமய்யத் ஆட்சியாளர்கள், கீழ் இருந்த அடிமைகள் 152
உம்மயத் ஆட்சிக் காலம், 225 முதல்
உமய்யத் கலீஃபாக்கள், இஸ்லாமிய கட்டளைகளைப் பொருட்படுத்தவில்லை 227
உமய்யத் வம்சம், வீழ்ச்சியடைந்தது 88
உமர், இரண்டாம் கலீஃபா, 83, 85, 105, 132-33, 151, 184-85, 187, 200, 203, 205-8, 211-12, 234, 278; நிலங்களை வாங்குதல், விற்றல் மீது கட்டுப்பாடு விதித்திருந்தார் 215; பாசனத்திட்டங்களைத் துவக்கினார் 216
உமர் பின் அபீ-ரபீயா, மக்கா கவிஞர் 105
உமர் பின் கத்தப், பார்க்க: உமர், இரண்டாம் கலீஃபா
உர்வா, 145
உஜ்ஜா, அல்-, மக்காவின் முக்கிய தெய்வம் 48,63
உஸ்தாத், ஸீஸ், உள்ளூர் கிளர்ச்சியாளர் 270

எகிப்து, 7, 39, 40, 206, நீர்ப்பாசனத் திட்டங்கள் 217
எங்கல்ஸ், மேற்கோள் 89, 90; பதூயின்கள் பற்றி 39; சித்தாந்தம்பற்றி 1; மார்க்ஸியம்பற்றி 10
எத்தியோப்பியா 41, 56
எஃப்ரிட், 52

ஓமன், அபூ பக்கருக்கு எதிரான சண்டையைக் கைவிடுதல் 191

க்ருனெபாம், ஜி.இ. வான், பதூயின்களின் தேசிய உணர்வுபற்றி 177-8
க்ளப் பாஷா, மேற்கோள் 23 முதல், 168
கடபான், 31
கடபானியன் நாகரிகம், 31
கடஸிஃபான், ஸஸானிட் தலைநகரம் 251
கதீஜா, 71, 79, 109, 117, 163
கப்பின் அல்-அஷ்ரஃப், 147
கபீலாஹ், 43
கமீல் அதிர், கரிஜைட் கிளர்ச்சிகள் 234 முதல்; முக்தாரின் கிளர்ச்சி 245 முதல்
கர்பலாவில் நடந்த துயர நிகழ்ச்சி, 240
கர்ரார், 143
கராமிதா சமுதாயம், 261-2
கராமிதா, இஸ்மாயிலிகளின் உட்பிரிவு 260 முதல்; கம்யூனிச சமூகம் 260; இஸ்லாமியல் அறிஞர்களின் விரோத பாவம் 261, அடிமைகளை நடத்தும் முறை 263
கராஜ் (வரிகள்) 154, 199, 204
கரிஜைட் இயக்கம் 56, 213, 235 முதல்
கல்தூன், இபின், 27, 28, 54; அஸபீயா 201; பதூயின்கள் 18-9; பெர்பெர்கள் 236-7; குழுவுணர்வு 55; ஆரம்ப கால மற்றும் நாகரிக கலாசாரம் 178-9, மதத்தின் முக்கியத்துவம் 179; உத்மானின் காலத்தில் சேர்க்கப்பட்ட செல்வங்கள் 206
கலீஃபா, அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை 186
கலீஃபா, புறமார்ந்த விரிவாக்கமும், உள்நாட்டுப் போரும், அத்தியாயம் 5
கவும் குலக்குழு, 42
கஸ்ஸனிட், 119, 164; கிறிஸ்தவ மதத்தை ஏற்றனர் 96; இஸ்லாமை ஏற்றனர் 99, 203
கஸ்ஸான், ஆற்றிய பணிகள் 94
காதிஸிய்யா சண்டை, 198
காபா, 36, 47, 51, 164, 211
கார்மிக்கேல், ஜோயல், மேற்கோள் 27, 54, 93-94, 265-66
கால்வின், 160
காலீத் பின் அல்-வலீத், ஆடம்பரச் செலவுக்காகத் தண்டிக்கப்பட்டார் 205
கான்ஸ்டாண்டைன், சக்ரவர்த்தி, கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார் 90, 93
காஸ்டா, லூக்கின் மகன், கிரேக்கம் போன்ற மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்பு, மேற்பார்வை 254
காஸா, 57, 145

www.padippakam.com



கித்தாப்-அல்-ஹியல், 161
கிதாப்-அல்-கராஜ், 204
கிதாப் அல்-புயூ, 103
கிப், எச்.ஏ.ஆர்., மக்காவாசிகளின் புற மத வழிபாடுகள் பற்றி 62; செல்வச் செழிப்பு 73; மக்காவின் வர்த்தக முக்கியத்துவம் 55; முத்தஜிலா வினர் 255; கோல்ட்ஜிஹெர், மேற்கோள், 158; அஃப்ஷின் பற்றி 274
கியோம், ஆல்ஃப்ரெட் 35; அரேபியர்களின் பூர்விக வழிபாடுகள் 50; அரேபியர்களைக் கொடுமைப்படுத்தினார்கள் 97
கிரேக்க தத்துவஞானம், அறிவாளிகளிடையே மோகம் 254
கிறிஸ்தவம், 51, 91, 93, 106, 110, 112; அபிஸீனியாவின் அரசு மதம் 120; கஸ்ஸான் வம்சம் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டது 96; தெற்கு அரேபியாவில் கொண்டு வரப்பட்டது 34; யேமனில் 33; அதன் தன்மைகள் 89 முதல்; அரபு மக்களிடையே வேரூன்ற முடியவில்லை 98
கிறிஸ்தவர்கள், ஹெராக்ளிட்டஸுக்கு எதிரான முஸ்லிம்களோடு இணைதல் 199
கிஸ்ரா, பாரசீக மன்னன் தீர்க்கதரிசி இஸ்லாமில் சேர அழைப்பு விடுத்தார் 191
குதைபா, இபின்-, 105, 270
குர்தத்பேஹ், இபின்-, முஸ்லிம் வரலாற்றாசிரியர் 59
குரான், 42, 53, 63, 107, 111, 115-116, 187, 264, தந்தை வழிச் சமூகத்தை ஏற்றது 49; அரேபியர் மற்றும் அரேபியரல்லாதவருக்குமிடையே உள்ள பாகுபாடுகள் ஒதுக்கல் 88; தனிநபர் சுயேச்சை வலியுறுத்தல் 71; வர்த்தக ஒப்பந்தங்கள் 101; செயல் ரீதியாக பகுத்தறிவுவாதம் 75 முதல்; மணங்கள் பற்றி 170 முதல்; செல்வங்களின் தீமை 74; மக்காவிலுள்ள குடும்ப அமைப்புகள் 44; வாரிசுரிமை 101; கடும் வட்டி 155-162; யூதர்கள் 139 முதல்; பாலுறவு விதிகள் 166-7; அடிமைகள் 102 முதல்; ஜகாத்தின் பயன்கள் 82 முதல்; பெண்களின் அந்தஸ்து 162-3, 175 முதல்; அப்ரஹாவின் மக்கா யாத்திரைகள் 35-6; மாரிப் திருப்பம் 36-7; வர்த்தகத் துறை மக்காவில் பெருமளவில் விரிவடைந்தது 6, 58; கப்பல் இயக்கக் கலை 17; ஸபீயன் நாகரிகம் 31 முதல்; தமூத் பரம்பரைக் கதைகள் 52-3; பேச்சில் வழங்கும் உவமைகளும் உருவகங்களும்; 57; அடிமைகளுக்கு விடுதலை, மதக்கடமை 103 முதல்; பல விளக்கங்களுக்கு உட்பட்டது 254; சிறந்த பண்புகள் 77-8
குரானில் வரும் புராணக்கதைகள், 51 முதல்
குரைஷ் இனக்குழு, 42, 47-8, 56, 88, 134, 143, 144
குரைஷ், பணக்கார ஆட்சியாளர்கள் 211, 233
குரைஷி, 120; இடம் பெயர்ந்து சென்றவர்கள் அபூபக்கருக்கு ஆதரவு 184
குரைஜா, யூதக் குலக்குழு 42
குஸ்ரவ், நாஸிர், இஸ்மாயிலி அறிவு ஜீவி 258; சுரமேத்திய அரசு அமைப்பு பற்றி 262
குஸா, 42
கூஃபா, அல்-,64, 88 முதல், 106, 206, 214-5, 245
கெல்லன். இ,76
கேப்ரியல், தேவதூதர் 109
கைபர் யூதர்கள், 150 முதல்
கைதர் பின் கவுஸ், 274
கோட்ஸி, அகமது. எல், அரபு மார்க்ஸியவாதி 6-7

டமாஸ்கஸ், 208, 251, 253; வரித்தொகை 204; உமய்யத்களின் அரண்மனை 208
டாயின்பீ, பேராசிரியர், 232, 237, 258; இஸ்லாமின் உலக அரசு பற்றி 253; பண்பாட்டுக்கு எதிரான உணர்வுகள் 92
டானே, ஆர்.எச், கைவினைஞர்களுக்கு மனக்குறை 160
டோபிரியண்டர்கள், 167
டைகி ஸோடேரியா, கிரேக்கத் தேவதை 48

தபரி, முஸ்லிம் வரலாற்றாசிரியர், மேற்கோள் 34, 47, 63, 82, 129, 198, 204; பனி மத்ஜத்தில் நடைபெறும் விவசாய வேலைகள் பற்றி 102; அலி பின் முகமது; 268; ஹோபல் வழிபாடு 47; கரிஜைட் 234, 235; காவல்

www.padippakam.com



துறை, 85; மக்காவில் தனியார் சொத்து 60,78; கஜரஜ் மற்றும் மதீனா குழுவுடன் இறைதூதர் சந்திப்பு 123-4; அபிஸீனியாவுக்கு சீடர் களின் குழு 119; கராமிதா பிரிவு 260
தபூக், தீர்க்கதரிசி படையெடுப்பு நடத்தினார் 191
தமீ, 194
தமூத், 53
தல்ஹா, வருமானம் 206; அலீயை எதிர்க்க மூஆவியாவுடன் கை கோர்த்தார் 219; நில மாற்றங்கள் 216
தலிம், இனக்குழு 69
தாத் அல்-அஷீர்ரா 102
தாமஸ் பெர்ட்ராண்ட், 16
தாயி, 25
தாயிஃப், 27, 44, 116, 192
தி கதா, இஸ்லாமிய மாதம் 143
தியோஃபிலஸ் இண்டஸ், தென் அரே பியாவுக்குச் சென்ற முதல் கிறிஸ் தவ தூதர் 34
தீர்க்கத்தரிசி, 29, 38, 51, 57, 68 முதல், 82 முதல், 92, 105, 129, 130; அப்த் அல்லா பின் ஹஜஷை ரகசியமான ஒரு பணிக்கு அனுப்பினார் 143; மக்கா பணக்காரர்களை எச்சரித் தார் 78, யூதர்களையும் எச்சரித் தார் 139 முதல், 149 முதல்; மக்கா மீது கவனம் செலுத்துதல் 142; எளிமையாக வாழ்தல் 131; பது யின்களின் வழக்கமான செயல்முறை 20; வெளிநாடுகளை வென்று பிடிப் பது துவங்கியது 192; ஹெர்குலைட்டு களுடன் மோதல் 191; அரசு யத் திரத்தை உருவாக்கினார் 60; வழி பாட்டு முறைகள் 137; அரசியலமைப் புச் சட்டம் 134-5; ஆன்மீக பக்கத்தை வலியுறுத்தினார் 74; மதீனா குழு வினரைச் சந்தித்தது பலனளித்தது 121 முதல்; சீடர்கள் சிலர் அபிஸினி யாவுக்கு அனுப்பப்பட்டனர் 119; மதீனாவை நிர்வகிக்க வழிமுறை கள் 133 முதல்; மக்காவாசிகள் கொல்ல சதி 128; ஹீரா குகையில் தியானம் 110; மதீனாவுக்கு இடம் பெயர்தல் 19, 67, 82, 119; அதற்கான காரணங்கள் 122 முதல்; மசூதி கட் டப்பட்டது 130; அரேபியர் பாரசீகரை வென்றது பற்றி 65; மரணப்படுக்கையில் 183-4; கொடுமைக்குள்ளாக்கினார்கள் 118; பணக்கார வர்த்தகர்களின் எதிர்ப்பு 115 முதல்; புதிய மதத்தை மக்காவில் போதித்தார் 54; அடுத்த தலைவர் பற்றிய கேள்வி 181, கொள்ளைப் பொருட்களில் பங்கு 144; அடிமைத்தனம் ஒழிப்பு, மதக் கடமை 103-4; முதல் சீடர்கள் இடம்பெயர்தல் 119; ராஜீய நிபுணர் 148; மக்காவின் பொருளாதாரத்தில் நெருக்கடி 142 முதல்; பெண்களின் நிலை 162 முதல்; கஜ்வாவின் அவ சியம் 94

துரயித் இபின் அல்-ஸிம்மா, போர் வீரர், கவிஞர் 24 முதல்
தூகர், போர், பாரசீகர்களின் மேல் வெற்றி 64
தூபான், பிராமணரின் மேற்பார்வை யில் சமஸ்கிருத நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன 254
தூமா, 50
தூமத் அல் ஜண்டல், பாலைவனச் சோலை, தீர்க்கத்தரிசியோடு கிறிஸ் தவ மன்னரின் ஒப்பந்தம் 192
தேயத் (இரத்தப்பணம்), 47, 48
நக்லா, 49, 143
நதிர், அல்-,யூதக் குலக்குழுவைச் சேர்ந் தவர்கள் 126
நபாட்டிய விவசாயிகள், கர்மத் கம்யூ னிசக் கொள்கைகளுக்கு நல்ல வர வேற்பு 261
நபிகா அல்-தோபியானி, கவிஞர் 25
நஜ்த், 194
நஜ்ஜர், 130
நஜாஷி, அபிஸீனிய ஆட்சியாளர் 120
நஸர் பின் ஸய்யார், குராஸான் ஆளுநர், கலீஃபா மர்வானுக்கு கூடுதல் ராணுவம் அனுப்பி வைக்க வேண் டுதல் 249-50
நிக்கல்ஸன், ஆர்.ஏ, மேற்கோள், 22 முதல், 38-9, 136, 163, 189; ஜியாதுடன் ஹுஸைன் மோதல் 243; குராஸான் அரேபியர்கள் 249; பெண்களின் நிலைமை 163
நீகஸீ, அபிஸீனிய மன்னர் 35

www.padippakam.com



நுவாஸ், து-, ஹிம்யரைட் மன்னர் அப்ரஹாவால் துரத்தப்பட்டவர் 34-5; யூத மதத்தின் ஆதரவாளர் 34

பக்தாதி, 236
பக்கா, மக்காவைப் பார்க்க
பக்ர் பின் வாயில், இனக்குழு 64
பதூ, இனக்குழு, பாலியல் நெறிகள் 40, 168
பல்மைரா, 39, 55-6
பலதார மணம், 165
பயீஆ 185
பலாதுரீ, மேற்கோள், 106, 110, 189, 192, 194, ஆர்மீனியப் படையெடுப்பு பற்றி 193; இஸ்லாமிய சமத்துவம் பற்றி 199,200; யூத இனக்குழுக்களிடம் தீர்க்கதரிசியின் அணுகுமுறை 49, 150
பனி காலித், 40
பனி மத்ஸஜ், 102
பனு அன்பர், தீர்க்கதரிசியின் அடிமை 104
பனூ அவுஃப், 134
பனூ கஸ்ரஜ், 123-4
பனூ தக்கீஃப், 44
பனூ தக்லப், கிறிஸ்தவ இனக்குழு, முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டார்கள் 203
பனூ ஹாஷிம், குலக்குழு, 70, 150; அலீயை ஆதரித்தது 184; கலீஃபாவுக்கும் பணிந்தது 187
பனூல்-முஸ்தலிக், தீர்க்கதரிசியின் அடிமை 104
பாபகி இயக்கம், 276 முதல்
பாமீக், உம்மாரின் தாயார் 111
பார்மிஸைடுகள், 251
பாரசீகம், 33,39,70,94, இஸ்லாமைத் தழுவியது 272
பாரசீகப் பேரரசு, 39-40,89
பாரசீகர், அரேபியர் தூகர் சண்டையில் தோற்கடித்தார்கள் 64
பாலஸ்தீனம்,41
பிலால், முகமதுவின் சொந்தப் பணியாளர் 102
பிஹாஃபாரித், உள்ளூர் கிளர்ச்சியாளர் 270
புஆத், போர் 127
புகாரி, 103
புறமதத்தினர் விக்கிரகங்கள் வழிபாட்டு முறை 61; தீர்க்கதரிசியின் செயல் 61
புருனோ பாயரும் ஆரம்பகால கிறிஸ்தவமும், 90
பெக்கர், 193
பெட்ரா, 39
பெல்கா, 47
பெர்பெர்கள், 236
பைஜாண்டியப் பேரரசு, 97, 121, 195; பாரசீகப் பேரரசோடு உரசல் 39
பைஸாண்டியம், 32, 35, 59; மக்கா வர்த்தகர்களை நம்பியிருந்தது 91
போரா பிரிவினர், பெரும்பாலும் இந்தியாவில் இருக்கிறார்கள் 260
ஃப்ராய்ட், ஸிக்மண்ட், 166, 167
ஃபதக், 149 முதல்
ஃபரூக், உமர், கிளர்ச்சிகளின் குணங்கள் 270
ஃபாத்திமா, தீர்க்கதரிசியின் மகள் 187
ஃபாத்திமிடுகள் (இஸ்மாயிலிகள்) மேற்கு ஆப்பிரிக்காவில் ஆட்சி நிறுவுதல் 260; எகிப்திலும் புகழ் பெற்றார்கள் 260
ஃபாஹ்மி, அலி மொகமத், மேற்கோள் 17, 18
ஃபிரோஸ், அடிமை, கலீஃபா உமரைக் கொன்றவன் 106
ஃபுகைம், இனக்குழு 36
ஃபுதூல், 87

மக்கா, 6, 16, 18, 27, 32, 35, 40 முதல், 54 முதல், 77, 86 முதல், 99, 113, 119, 124, 141 முதல், 165 முதல், 177, 192-3, 194, 230; முதன்மையான தெய்வம் 48; நிறுவப்படுதல் 40 முதல்; குடும்ப அமைப்பு 44 முதல்; குழுவுணர்வு 55; முக்கியத்துவம் 46 முதல்; சீர்கேடுகளை நீக்கி நீதியான சமூகம் ஒன்றை உருவாக்க தீர்க்கதரிசி செயல்பட்டார் 113 முதல்; தீர்க்கதரிசியின் மேல் வர்த்தகர்களுக்கு கடும் பகைமை 61; புறமதத்தினரின் வழிபாடு 61; புதிய மதத்தை தீர்க்கதரிசி போதிக்கத் துவங்கினார் 54;

www.padippakam.com



தீர்க்கதரிசியின் பொருளாதாரக் கொள்கைகள் 166 முதல்; குரைஷ் இனக்குழுவின் ஆதிக்கம் 56 முதல்; மதம் 45 முதல்; நிலைமை 125 முதல்; சமூகக் கட்டமைப்பு 42 முதல்
மக்கா நகர சமூகம், 59; 68 முதல், 100 முதல்; மக்கா நகர வர்த்தகர்கள் சுகபோகிகளாக வாழ ஆசைப்பட்டனர் 107 முதல்; பைஜாண்டிய மக்கள் சார்ந்திருத்தல் 91; இஸ்லாமுக்கு ஆரம்ப கால எதிர்ப்புகள் 60, 91;
மக்கோரபா, மக்காவைப் பார்க்கவும்
மக்ரிப், அல்-, 7, 236
மக்ரீஜீ, 217
மக்ஜீம், இனக்குழு, 111
மங்கோலியப் படையெடுப்பாளர்கள் அப்பாஸிட் பேரரசை நொறுக்கித் தள்ளித் தோற்கடித்தார்கள் 202
மத்திய தரைக்கடல், 39, 54
மதீனா, 27, 43, 61, 82, 83 முதல், 113, 119 முதல், 124 முதல், 137 முதல், 160, 164 முதல், 170, 177, 196; நிர்வாகம் 133; சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு 132-3; பாதுகாப்பு கோட்டைகள் 126 முதல்; சீர்குலைவுகள் 125 முதல்; இடம்பெயர்தல், தீர்க்கதரிசியால் ஊக்குவிக்கப்படுதல் 128; மதத்தின் முக்கியத்துவம் 230; நிலைமை 124 முதல்
மதீனா அரேபியர்கள், யூதர்களின் மேலாதிக்கம் 123-4
மதீனா காலத்திய ஸூராக்கள், 101, 108
மம்லூக்கள், அடிமைகள் ராணுவ வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர் 266-7
மமூன், கலீஃப்பா, கலாசார முன்னேற்றம் 254
மலா, என்ற சபை 59, 62, 66, 68, 71, 133, 182
மலிக், இமாம், 158
மலிநவ்ஸ்கி, 167
மவாலீ (பணி செய்யும் பிரிவினர்) 214, 237, 246
மவுலானா, மவுதீதி, நிலங்களின் உரிமைக்காக, 153
மனாத், புதூரயின்களின் குலக்கடவுள், 48-9; மக்காவில் அனைத்து தெய்வங்களும் மேலானது 48 முதல்; 63
மனாஃபிஸைட், கிறிஸ்தவம் 119
மனாஃபிஸைட் கொள்கைகள் 97
மனாஃப், அப்த், குஸையியின் மகன் 56
மஜ்டக் மதம், 273, 278
மஜாலிஸ் அல்-முஸ்தன்ஸிரியா, 259
மஷ்ராக், அல்-,7
மஸ்ஜிதா, மஸ்ஜித், 130
மஸிக்னா, கரமேத்தியன் வர்த்தக கில்டு, 261
மார்க்ஸ், கார்ல், 39, 216; சித்தாந்தங்கள் 1
மாரிப், அணை உடைந்த அபாயம் 37
மாரிஃபா, இறைவன் 258
மாரிப், ஸபீயன் நகரம் 31
மாயினி 30
மினா, தீர்க்கதரிசி அங்கு 121
மினீயன் நாகரிகம் 29
மீட்டாக், ரகசியப் பிரமாணம் 259
முஆவியா, உமய்யத் கலீஃபா 208, 219, 234-5, 238 முதல், 247; தலைநகரம் ஸிரியாவுக்கு மாற்றல் 208; பரம்பரை ஆட்சி 224; ஹஸனுக்கு விஷம் அளிக்கப்பட்டது 224; யஸீதைப் பட்டத்துக்கு வரும் தடையற்ற வழி 224
முக்தராஹ், அல்-, கோட்டை, கைப்பற்றல் 269
முக்தாதிர், அப்பாஸிட் கலீஃபா 261
முக்தார், உமய்யத் பேரரசுக்கு எதிராக 245
முகமது, தீர்க்கதரிசி, தீர்க்கதரிசியைப் பார்க்கவும்.
முகமது, தீர்க்கதரிசியும், ராஜீய நிபுணரும் 125
முகமதுவின் வாழ்வும், காலநிலையும் 23
முகமதிய ஆய்வுகள் 188
முகதிமா 20
முகன்னா, அல்-, உள்ளூர் கிளர்ச்சியாளர் 270
முகீரா, அரபுதூதர், 198; ருஸ்தமுடன் நடந்த உரையாடல் 198;
முகிரா பின் ஷோபா 198
முத்தகல்லிமூன் என்ற பிரிவு 255
முத்தலிப், இனக்குழு 69
முத்தஜிலா, ஒரு புதிய பிரிவு 255

www.padippakam.com



முத்தையபூன் அஹ்லாஃப் இனக்குழுவுடன் மக்காவில் சமாதானம் 127
முவஃபக், அல்-, ஸஞ்ஜ்க்கு எதிராக 269
முஸ்லிம் ஆய்வுகள் 273
முஸ்லிம் கடல் ஆதிக்கம் 17
முஸ்லிம் பின் அக்கில், ஹூஸைனுடைய தூதராக கூஃபாவிற்குச் சென்றார் 242
முஸ்லிம்கள், தார்த்தரியர்கள் 1258ல் கைப்பற்றினர் 202; தீர்க்கதரிசி காலமானபின் உள்நாட்டுப் போர் 210; முன்பு இருந்த ஆட்சியாளர்களை விடச் சிறந்தவர்கள் 200 முதல்
முஸ்னத், 57
முஸ்தவரித் பின் உல்லிஃபா, கரிஜைட் தலைவர் 234
முஸ்தசிப், 194
முஹ்றித், 135
மூஸப்பின் உமைர், 124-5
மூஸா பின் நூஸைர், 104
மெசா, மக்காவைப் பார்க்கவும்
மெலாங்க்தான், 160
மெஸபொடோமியா, 147

யகூட், 37
யர்மூக் சண்டை, 199
யஸீத், மூஆவியா தமக்குப் பின் பட்டத்துக்கு அமர்த்தினார் 224, 240; பெரிய குடிகாரர் 227; அப்த் அல்லாஹ் பின் ஜுபையரும், ஹுஸைனும் விசுவாசப் பிரமாணம் 241
யஸீத், இரண்டாவது, பாடகிகளிடம் அளவற்ற பிரியம், 227
யாத்திப்பா, பார்க்க, யாத்ரிப்
யாத்ரிப், பார்க்க, மதீனா
யாலா பின் முன்யா, மதிப்புள்ள நிலங்கள் 206
யாஹ்யா, புராதன பாரசீக மொழி நூல் மொழிபெயர்க்கப்பட்டது 254
யஹன்னா (ஜான்), அய்லா நகரின் மன்னர், தீர்க்கதரிசியுடன் ஒப்பந்தம் 192
யேமன், 33, 36 முதல், 56, 69, 194; அபிஸீனியக் குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது 35; கிறிஸ்தவம் கொண்டு வரப்பட்டது 34; யூத மதமும், 34; செல்வச் செழிப்பு சீர்குலைப்பு 37; அபூபக்கருக்கு எதிராகக் கிளர்ச்சி 190

ரப்பியானி, 155
ரப்வாஹ், 155
ரபத், 155
ரஃபி பின் அல்-லைத், அரபு கிளர்ச்சியாளர் 270
ரஸியா, 19
ராடின்ஸன், மாக்ஸிம், மேற்கோள், 43, 138; அபூதர் கிஃபாரியின் பங்கு பணி பற்றி 209; தெற்கு அரேபியா பற்றி 29-30
ராபர்ட்சன் ரோலண்ட், மேற்கோள் 75, 76
ராஸி ஹாகிம், இஸ்லாமிய பிரிவின் தூண்கள் 258
ரிச்சட்ஸ், டி.எஸ்., 91
ரித்தா, 187, 190
ரிபா, 153 முதல்
ருகையா, தீர்க்கதரிசியின் மகள், 119
ருஷ்த், இபின், 104
ருஸ்தம், ஸஸானிட் படையின் தலைவர் 194; முகீராவுடன் பேச்சு வார்த்தை 198; எதிரிகளைத் தப்புக் கண்கிடுதல் 197 முதல்
ரைக், வில்ஹெல்ம், பாலியல் அவலங்கள் பற்றி 167
ரோமன், 32, 202-203; பேரரசு, 197, 198; மாகாணங்கள் 204

லக்மிட், 64, 93, 203
லக்மிட் மன்னர்கள், கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார்கள் 98; இஸ்லாமைத் தழுவினார்கள் 99
லஃபேப்வர், ஹென்றி, மார்க்ஸினுடைய சித்தாந்தங்களை விளக்குகிறார் 1
லாட், அல்-, மக்காவின் தெய்வம் 48, 63
லாப்ரியோலா, ஏ, மேற்கோள் 9
லாமன்ஸ், பெரி, மேற்கோள் 60
லாரன்ஸ், இனக்குழு பாலியல் விதிகள் பற்றி 167
லிபியா, 7
லெபனான், 7

வதி அல்-குரா, 206

படிப்பகம்

www.padippakam.com



வலீத், இரண்டாவது யஸீதின் மகன், 105, 227; உமய்யத் பள்ளிவாசலை அழகு படுத்தினார் 208
வலீத் பின் அத்பா, 204
வாட், மாண்ட்காமரி, 9 முதல், 23, 45, 57, 68 முதல், 92, 163; பதூயின்கள் இஸ்லாமைத் தழுவுதல் பற்றி 232 முதல்; அரசியலமைப்புச் சட்டம் 136; மதத்தில் மாற்றுக் கோட்பாடுகள் 232-3, கரிஜைட்களின் எதிர்ப்பு 234-5; மதீனாவில் நடந்த சீர்குலைவுகள் 125 முதல்; விரைந்து சென்று உதவி 69; பாரசீகத்தினர் இஸ்லாமில் சேர்ந்து கொண்டனர் 272
வாத், சந்திரக் கடவுள் 30, 33
வெபர், மாக்ஸ், மனிதனின் பழக்கங்கள் பற்றி 75; மக்காவின் இஸ்லாமிய சமூகம் 75; செயல்ரீதியான பகுத்தறிவுவாதம் 76
வெல்ஸ், எச்.ஜி.,141

ஜகாத், 60, 81 முதல், 190
ஜரீர், இபின், 156
ஜவ்ஹர் அலீ-இஜ்லீ, அரபு கிளர்ச்சியாளர்கள் 270
ஜஸ்டின், முதல், ரோமானிய சக்கரவர்த்தி 35
ஜாபீர் பின் அப்த் அல்லா, 161
ஜார்டனிலிருந்து வந்த வரித்தொகை, 204
ஜாஹிலியா, கடும் வட்டி முறை 158
ஜாஹில்லியன் கவிதைகள், 23; கவிஞர்கள் 129
ஜாஹிஸ், மக்காவில் 57
ஜித்தா, 40, 54
ஜியாத், 239
ஜியுஸ், 48
ஜிஸ்யா, 195, 199
ஜீஹ்ரா, 69
ஜுபையர், 219-20; 238
ஜைத் பின் ஹாரிதா, 116; மக்காவாசிகளின் வர்த்தக அணிமேல் தாக்குதல் 147 முதல்
ஜைத் பின் தாபித், சொத்துக்கள் 206
ஜொராஸ்ட்ரிய மதம், 273

ஷபத் பின் ரபீயை, 246
ஷம்மர் யரஷ், ஹிம்யரைட் மன்னர் 33
ஷம்ஸ், பெண்பால் சூரியக் கடவுள் 31
ஷரீயா, 85, 165
ஷஹ்ரெஸ்தானி, அல்-, முஸ்லிம் வரலாற்றாசிரியர் 47; கரிஜைட் கிளர்ச்சி, வெற்றி பற்றி 235-6
ஷியா இஸ்மாயிலி இயக்கம், 236
ஷீபிய்யா இயக்கம், 88, 273 முதல்
ஷீயா, 183
ஷீயா இயக்கம், 214, 237
ஷீயா பிரிவினர், 236
ஷீயாவினர், "ஹுஸைனுக்குப் பழி வாங்குவோம்" என்ற கோஷம், 243
ஷீராஸி, முவய்யத், இஸ்மாயிலி தூண்கள் 258
ஷேக், நஸீர் அஹமத், பாகிஸ்தானின் தத்துவ அறிஞர் 153
ஷேய்க், இனக்குழு தலைவர் 43

ஸக்கீஃபா பனூ ஸாயிதா, இனக்குழு பொதுக் கூட்டம் 183
ஸகரா, 17
ஸத் பின் அபி-வக்காஸ், 143, 206
ஸபா, 30
ஸபீயன் நாகரிகம் 29-30
ஸயீத் கலீஃபா, ஆளுநர் 215
ஸரீர், மன்னர், அபூபக்கரிடம் சரணடைந்தார் 195
ஸல்மா அந்-நாஜ்ஜரியா 163
ஸல்ஸபீல் என்ற ஊற்று, 107
ஸஸானிட், 33, 64, 65, 98, 204
ஸஸானிட் பேரரசு, 121
ஸஹீஹ் முஸ்லிம், 153, 184
ஸாமர்க்கண்ட், 33
ஸார்த்ரே, 13-4
ஸாலமன் மன்னன், 31-32
ஸாஹிப் அல்-கராஜ், உமய்யத் அதிகாரி 225
ஸிமிடிக் தீர்க்கதரிசிகள், 73
ஸிமிடிக் மதங்கள், அரேபியர்கள் வெறுப்பு 89
ஸிரியா, 7, 34, 40, 47, 53, 56, 69, 163, 194, 230
ஸிரிய சமூகம், கிரேக்கப் பண்பாடு ஊடுருவல், 91-2
ஸிஜில், 36
ஸீன், சந்திரக் கடவுள், 31, 33

www.padippakam.com



ஸுராக்கள், மக்கா காலத்தியவை, 71, 72, 78, 79 முதல்; மதீனா காலத்தியவை, 78, 101
ஸைனேயிடிக் தீபகற்பம், 17
ஸோன்பாத், உள்ளூர் கிளர்ச்சியாளர், 270

ஹக்கீம் அப்துல் பரகத், மேற்கோள், 139, 143, 145, 146, 148, 149, 191
ஹத்ரமாத், 31, 33, 52
ஹதீத், 153
ஹபீப், பேராசிரியர் முகமது, அரேபியர்களுக்குப் பாதுகாப்பளிக்க தீர்க்கதரிசி விருப்பம், 65
ஹம்ஜா பின் அம்த் அல் முத்தலிப், 143
ஹமதான் கர்மத், கராமித்தா பிரிவை நிறுவியவர் 260
ஹமீதுல்லா, முகமது, 68, 132, 163; வீரர் குழாம் பற்றி 69; தீர்க்கதரிசியின் சீடர்கள் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டது பற்றி 111-2; தீர்க்கதரிசி மதீனாவுக்கு இடம் பெயர்தல் பற்றி 121
ஹய், கூடாரத் தொகுதி 42
ஹவாஜின், 104
ஹன்பல், இமாம், 57
ஹனீஃப், 80, 100
ஹஜம், இபின், 236
ஹஸன், அலீயின் புதல்வர், முஆவியா அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள் 85; விஷமிட்டார் 240
ஹஸன், ரியாஜ், தொழுகை முறை பற்றி 178
ஹாஃபிஸ் பின் கதீர், மேற்கோள் 26
ஹாதிம் இபின் அப்துல்லா, தாராள குணம் 25-6, 74
ஹாரிஸ், நிகல், மேற்கோள் 11-2
ஹாஷிம், முகமதுவின் முப்பாட்டனார் 42
ஹிட்டி, ஃபிலிப்.கே., மேற்கோள், 16-17, 32, 38, 105, 208, இஸ்மாயிலிகளின் பிரசார இயக்கம் பற்றி 251-52; அடிமை முறை பற்றி 103; கரமேத்தியன்கள் பற்றி 260-61
ஹிம்யரைட், மன்னர்கள் 33
ஹில்ஃப் அல்-, ஃபுதூலீ, வீரக்குழாம், 55, 68 முதல்
ஹிஜால், அல்-, 24, 38, 39, 53, 151, 194, 205, 215
ஹிஷாம், இபின், முஸ்லிம் வரலாற்றாசிரியர், மேற்கோள், 34, 38, 42, 47, 70, 88, 104; தீர்க்கதரிசி - கஸ்ரஜ் இனக்குழுவினர் சந்திப்பு பற்றி 121; தீர்க்கதரிசி இடம்பெயர்தல் பற்றி 121 முதல்; பெண்களின் நிலைமைபற்றி 163
ஹிஷாம், உமய்யத் கலீஃபா, டமாஸ்கஸிலிருந்து ஆட்சி புரிந்தார் 227
ஹீரா, குகை 50; தீர்க்கதரிசி தியானம் செய்தார் 109, 110
ஹீஜ்ஜாக்கள், 260
ஹுதமா, 80
ஹுதைபியா, ஒப்பந்தம் 148
ஹுதைல், 48
ஹுமய்மா, 248
ஹுல்வான், 204
ஹுஸைன், 240; ஜீபைரின் குணங்களோடு உள்ள வேறுபாடு 244; உமய்யத்களுக்கு எதிராக போர் செய்ய கூஃபா மக்களின் தூண்டல் 242 முதல்; ஆதரவாளர்களோடு கொல்லப்பட்டார் 243; இவரது உயிர்த் தியாகம் உமய்யத் பேரரசுக்கு பெரிய சவால் 245
ஹுஸைன், டாக்டர் காமில், எகிப்திய அறிஞர், 259
ஹுஸைன், டாக்டர் தாஹா, அலீயை எதிர்த்து ஆயிஷா செய்தது பற்றி 221; அலீயின் ஆட்சி பற்றி 221; 234-5; இஸ்லாமிய அரசில் பல குழுக்கள் 216 முதல்; நில மாற்றங்கள் 217 முதல்; மக்காவின் புற மதத்தினரின் விக்கிரகங்கள் 61
ஹெராக்ளிட்டஸ், சக்கரவர்த்தி, 92, 194, 199; தீர்க்கதரிசி இஸ்லாமில் சேர அழைப்பு விடுத்தார் 191
ஹெரோடோடஸ், 48, 50
ஹோபல், மழை தெய்வம், 47-48

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இஸ்லாம் என்ற மதம் தோன்றுவதற்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாவதற்குக் காரணமாக மக்காவிலும் மதீனாவிலும் செயல்பட்ட சமூக. பொருளாதாரச் சக்திகளை இந்தப் புத்தகம் ஆய்வு செய்கிறது. மத ரீதியான சர்ச்சைகளில் இறங்காமல். இந்த முக்கிய உலக மதத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்குச் சிறப்பான முறையில் ஆதாரங்கள் தந்து இந்திய முஸ்லிம் ஒருவர் எழுதியிருக்கும் முதலாவது புத்தகம் இது.

ஓரியன்ட் லாங்மன்

THE ORIGIN AND DEVELOPMENT OF ISLAM (TAMIL)
ISBN 0 86311 462 8

Rs 80.00

படிப்பகம்